இலங்கை மின்சார சபை







50 සංවත්සරය
ஆண்டுவிழா
ANNIVERSARY
1969 - 2019

# வருடாந்த அறிக்கை
# 2019

# பொருளடக்கம்


எமது நோக்கு, எமது செயற்பணி, எமது அடிப்படை விழுமியங்கள் 1
எமது சுற்றுச்சூழல் கொள்கை 2
ஆண்டின் முக்கிய நிகழ்வுகள் 3
50வது ஆண்டு முக்கிய நிகழ்வுகள் 4
கடந்தகால செயலாற்றுகைகள் 6
நிறுவனத் தகவல்கள் 7
ஒழுங்கமைப்புக் கட்டமைப்பு 8
துணைக் கம்பனிகளுடன்
இ.மி.ச. இன் ஒழுங்மைப்புக் கட்டமைப்பு 10
தலைவரின் மீளாய்வு 12
பொது முகாமையாளரின் மீளாய்வு 16
இலங்கையின் மின்வலு முறைமை 19
 செயற்பாட்டு மீளாய்வு 20
 மின் பிறப்பாக்கல் பிரிவு 21
 மின் பரிமாற்றப் பிரிவு 31
 விநியோகப் பிரிவுகள் 43
 செயற்றிட்டங்கள் பிரிவு 53
 சொத்து முகாமைத்துவப் பிரிவு 64
 நிறுவன உபாயப் பிரிவு 71
 ஆளணிக் கிளை, உள்ளகக் கணக்காய்வுக் கிளை,
 சட்ட அலகு, விசேட புலனாய்வு அலகு, பிற நிகழ்வுகள் 77
 நிதிப் பிரிவு மற்றும் நிதித் தகவல்கள் 89
பணிப்பாளரின் அறிக்கை 98
இலாபம் அல்லது நட்டக் கூற்று 101
முற்றுமடங்கிய வருமானக் கூற்று 102
நிதி நிலைமைக் கூற்று 103
உரிமைத்துவ மாற்றங்கள் கூற்று - குழுமம் 104
உரிமைத்துவ மாற்றங்கள் கூற்று - சபை 106
காசுப் பாய்ச்சல் கூற்று 107
நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் 108
ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர்
தலைமை அதிபதியின் அறிக்கை 163
கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் 170
கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 178
கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் 185
சுருக்கக் குறியீடுகள் 197




# எமது நோக்கு

வளமான வாழ்விற்கு மின்சாரம்

# எமது செயற்பணி

எமது அடிப்படை விழுமியங்களைக் கடைப்பிடிக்கின்ற அதே வேளை முழு இலங்கைக்கும் மின்சார வழங்கலில் செயற்றிறனானதும் ஒருங்கிணைக்கப்பட்டதும் சிக்கனமானதுமான முறைமை ஒன்றினை விருத்தி செய்தலும் பேணுதலும்.

# எமது அடிப்படை விழுமியங்கள்

தரம் | தேசத்திற்கான சேவை | வினைத்திறனும் விளைதிறனும்
அர்ப்பணிப்பு | பாதுகாப்பு | தொழில்வாண்மை
நிலைத்திருக்கும்தன்மை

# எமது சுற்றுச்சூழல் கொள்கை



இ.மி.ச. ஆனது இயற்கையானதும் மனிதனால் உருவாக்கப்பட்டதுமான சுற்றுச்சூழலைப் பேணுவதற்காகவும் நிலைபேறான அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்வதற்காகவும் அதன் சகல வணிக நடவடிக்கைகளையும் முகாமை செய்கிறது. சுற்றுச்சூழல் பிரச்சினைகளைக் கையாள்வதில் வெளிப்படைத்தன்மையுடன் இருப்பதன் மூலம், பொதுமக்கள், வாடிக்கையாளர்கள், அதிகாரசபைகள், ஊழியர்கள் மற்றும் உரிமையாளர்களின் வகிபாகம் மீதான எமது செயற்பாடுகளில் நம்பகத்தன்மையை உருவாக்குவதற்கு நாங்கள் உத்தேசித்துள்ளோம். எமது செயற்பாடுகளில் சுற்றுச்சூழல் கருத்தாய்வுகளைக் கூட்டிணைத்து ஒருங்கிணைக்கின்ற கொள்கையை நாங்கள் தீவிரமாகப் பின்பற்றுவோம்.



விற்பனை வருமானம் - 2019
ரூபா 242,950 மில்.
மின்னூட்டம் வழங்கப்பட்ட வீடுகள்
2019
108,315
நிகரப் பிறப்பாக்கம் - 2019
15,922 GWh
ரூபா
விற்பனை விலை
16.63
ரூபா/KWh
செலவு
23.29
ரூபா/KWh
விற்பனை செய்யப்பட்ட மொத்த சக்தி
14,611 GWh
மேற்கூரை சூரிய கலம்
182 GWh
ஊழியர்கள்
26,114
நுகர்வோர் கணக்குகள்
6,500,641





இ.மி.ச. இன் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட 50,000 மரக்கன்றுகளை நடும் நிகழ்ச்சித் திட்டத்தை நிறைவு செய்யுமுகமாக விஹாரமகாதேவி பூங்காவில் மரக்கன்றுகள் நடுதல்





இ.மி.ச. இன் 50 ஆவது ஆண்டு நிறைவை நினைவுகூரும் முகமாக 2019 நவெம்பர் 01 ஆந் திகதி மின்சார சபைத் தலைமையகத்திலுள்ள இ.மி.ச. இன் சேமநல அலகினால் ஒழுங்கு செய்யப்பட்ட பிரித் பாராயண நிகழ்வு



இ.மி.ச. இன் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, நவெம்பர் 01 ஆந் திகதி மாலபேயில் உள்ள DD3 இல் புதிதாகத் திறந்து வைக்கப்பட்ட மின்மானிச் சோதனை ஆய்வகத்தில் ஒழுங்குசெய்யப்பட்ட பிரித் பாராயண நிகழ்வு

# முக்கிய நிகழ்வுகள்

50 සංවත්සරය
ஆண்டுவிழா
ANNIVERSARY
1969 - 2019



இ.மி.ச. இன் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு CS பிரிவினால் ஒழுங்கு செய்யப்பட்டு, 2019 நவெம்பர் 01 ஆந் திகதி நடத்தப்பட்ட 2017, 2018, 2019 ஆம் ஆண்டுகளுக்கான புத்தாக்கத்திறன் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான விருது வழங்கும் விழா





இ.மி.ச. இன் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு 2019 அக்டோபரில் நடைபெற்ற சிங்கள மற்றும் தமிழ் மொழி மூலமான பாடசாலைகளுக்கு இடையிலான இறுதி வினாவிடைப் போட்டியும் விருது வழங்கல் விழாவும்



நவெம்பர் 01 ஆந் திகதி மின்சார சபைத் தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற 50 ஆவது ஆண்டு நிறைவுக் கொண்டாட்டம்






நவெம்பர் 01 ஆந் திகதி மின்சார சபைத் தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற 50 ஆவது ஆண்டு நிறைவுக் கொண்டாட்டம்





இ.மி.ச. இன் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஆரம்பிக்கப்பட்ட 50,000 மரக் கன்றுகளை நடும் நிகழ்ச்சித் திட்டத்தை நிறைவு செய்யுமுகமாக மாவிலாறு நீர்த்தேக்கப் பகுதியில் மரக்கன்றுகள் நடுதல்



இ.மி.ச. இன் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஆரம்பிக்கப்பட்ட 50,000 மரக்கன்றுகளை நடும் நிகழ்ச்சித் திட்டத்தை நிறைவு செய்யுமுகமாக மவுசாகலை நீரேந்து பகுதிகளில் மரக்கன்றுகள் நடுதல்



இ.மி.ச. இன் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஆரம்பிக்கப்பட்ட 50,000 மரக்கன்றுகளை நடும் நிகழ்ச்சித் திட்டத்தை நிறைவு செய்யுமுகமாக நில்லம்பே நீரேந்து பகுதிகளில் மரக்கன்றுகள் நடுதல்



இ.மி.ச. இன் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, கொழும்பு நகர DGM அலுவலகத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட மர நடுகை நிகழ்ச்சித் திட்டம்



இ.மி.ச. இன் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, CEB-CARE என்ற பயனர் நேய கைத்தொலைபேசிச் செயலியை அறிமுகப்படுத்தல்



இ.மி.ச. இன் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இ.மி.ச. இன் வட மாகாண அலுவலக ஊழியர் சேமநலன் மற்றும் விளையாட்டுச் சங்கமும் கொழும்பு நகர பிரதம பொறியியலாளர் (பராமரிப்பு) அலகும் இணைந்து ஒழுங்கு செய்த இரத்த தான முகாம்



இ.மி.ச. இன் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு 2019 நவெம்பர் 01 ஆந் திகதி இ.மி.ச. தலைமையகக் கட்டடத்தில் இ.மி.ச. இன் சேமநல அலகினால் ஒழுங்கு செய்யப்பட்ட இரத்த தான முகாம்



# கடந்தகால செயலாற்றுகைகள்

| | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மொத்த சக்திப் பிறப்பாக்கம் (GWh) | 9,882 | 10,714 | 11,528 | 11,801 | 11,962 | 12,423 | 13,154 | 14,249 | 14,773 | 15,985 | 16,556 |
| NCRE பிறப்பாக்கம்* (GWh) | 552 | 731 | 725 | 736 | 1,179 | 1,217 | 1,467 | 1,160 | 1,464 | 1,832 | 1,761 |
| உயர்ந்தபட்சக் கேள்வி (MW) | 1,868 | 1,955 | 2,163 | 2,146 | 2,164 | 2,152 | 2,283 | 2,453 | 2,523 | 2,616 | 2,669 |
| மின்சார விற்பனை (GWh) | 8,441 | 9,268 | 10,023 | 10,474 | 10,621 | 11,063 | 11,786 | 12,785 | 13,431 | 14,091 | 14,611 |
| நுகர்வோர் கணக்குகள் (எ/கை) | 4,280,168 | 4,480,423 | 4,717448 | 4,979,862 | 5,210,761 | 5,417,532 | 5,648,132 | 5,964,194 | 6,193,131 | 6,354,281 | 6,500,641 |
| முறைமைச் சக்தி இழப்புகள (%) | 14.59 | 12.97 | 11.72 | 11.24 | 11.14 | 10.91 | 10.40 | 10.28 | 8.45 | 8.34 | 8.23 |
| வருமானம் (MLKR) | 110,518 | 121,862 | 132,460 | 163,513 | 194,147 | 202,645 | 188,684 | 206,892 | 218,450 | 229,571 | 242,950 |
| சராசரி விற்பனை விலை (Rs/kWh) – (a) | 13.10 | 13.03 | 13.21 | 15.56 | 17.93 | 18.50 | 16.00 | 16.18 | 16.26 | 16.29 | 16.63 |
| விற்பனைப் புள்ளியில் சராசரிச் செலவு (Rs/kWh) – (a) | - | - | 16.21 | 23.66 | 16.94 | 20.00 | 15.07 | 18.08 | 20.34 | 19.12 | 23.29 |
| காலப்பகுதியில் மின்னூட்டம் வழங்கப்பட்ட வீடுகள் (எ/கை) | 173,327 | 177,155 | 206,909 | 225,707 | 198,484 | 178,300 | 198,166 | 277,038 | 181,627 | 118,077 | 108,315 |

* - NCRE (சிறியளவு நீர்மின், காற்றாலை, சூரிய கலம், தாவர மூலம், உயிர்த் திணிவு)
2018 இலிருந்து மேற்கூரை சூரிய கலம் உள்ளடக்கப்பட்டது

(a) - தற்காலிக

# நிறுவனத் தகவல்கள்

**சட்ட அமைப்பு**

இலங்கை மின்சார சபை (இ.மி.ச.) ஆனது 1969 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்கச் சட்டம், 1979 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்கச் சட்டம், 1988 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டம் மற்றும் 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க (திருத்தப்பட்ட) மின்சார சபைச் சட்டம் ஆகியவற்றால் திருத்தம் செய்யப்பட்ட 1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட ஒரு கூட்டு நிறுவனமாகும்.

**சபை அங்கத்தவர்கள்**

**தலைவர்**
திரு. ரஹித்த ஜயவர்த்தன *21.11.2019 வரை*
பொறியியலாளர் விஜித ஹேரத் *23.12.2019 இலிருந்து*

**துணைத் தலைவர்**
திரு. ரஜிவ் செல்வராஜா *22.11.2019 வரை*

**அங்கத்தவர் / தொழிற்படு பணிப்பாளர்**
திரு. கே.கே. திஸ்ஸ ஜினதாச *25.11.2019 வரை*

**பொதுத் திறைசேரியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அங்கத்தவர்**

திரு. ஆர். சேமசிங்க *30.04.2019 வரை*
திருமதி. ஜே.எம். திலகா ஜயசுந்தர *08.05.2019 இலிருந்து*

**அங்கத்தவர்கள்**
திரு. கே.டி.என். ரஞ்ஜித் அசோகா *22.07.2019 வரை*
திரு. எம். தேவசுரேந்திரா *09.09.2019 இலிருந்து*
திரு. எஸ்.கே. கன்னங்கர
திரு. ரூபன் விக்கிரமாராச்சி

**சபைக்கான செயலாளர்**
திருமதி. எச்.ஆர்.பி. பத்வேரிய (பதில் கடமை)

**பொது முகாமையாளர்**
பொறியியலாளர் ஏ.கே. சமரசிங்க *14.01.2019 வரை*
பொறியியலாளர் எஸ்.டி.டபிள்யு. குணவர்த்தன *15.01.2019 இலிருந்து*

**கணக்காய்வாளர்கள்**
கணக்காய்வாளர் தலைமை அதிபதி
தேசிய கணக்காய்வு அலுவலகம்
இல. 306/72, பொல்துவ வீதி
பத்தரமுல்ல.

**வங்கியாளர்கள்**
மக்கள் வங்கி
இல. 75, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை,
கொழும்பு 2

**தலைமை அலுவலகம்**
இல. 50, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு 2
தொலைபேசி (011) 2324471 (8 இணைப்புகள்)
தொலைநகல் (011) 2449572
இணையத்தளம்: www.ceb.lk

**நிறுவன முகாமை**

**மேலதிகப் பொது முகாமையாளர் (மின் பிறப்பாக்கம்)**
பொறியியலாளர் (திருமதி.) டி. திலகசேன *18.04.2019 வரை*
பொறியியலாளர் பி.எல்.ஜி. காரியவசம் *19.04.2019 இலிருந்து*

**மேலதிகப் பொது முகாமையாளர் (மின் பரிமாற்றம்)**
பொறியியலாளர் பி.எல்.ஜி. காரியவசம் *18.04.2019 வரை*
பொறியியலாளர் (கலாநிதி) எம்.என்.எஸ். பெரேரா *19.04.2019 இலிருந்து*

**மேலதிகப் பொது முகாமையாளர் (DD 01)**
பொறியியலாளர் பி.சி.சி. பெரேரா *08.01.2019 வரை*
பொறியியலாளர் டி.டி.கே. கருணாரத்ன *09.01.2019 இலிருந்து*

**மேலதிகப் பொது முகாமையாளர் (DD 02)**
பொறியியலாளர் எம்.ஏ.டி.என். கிறாடியன்

**மேலதிகப் பொது முகாமையாளர் (DD 03)**
பொறியியலாளர் (திருமதி.) ஏ.டி. திலகரத்ன *30.04.2019 வரை*
பொறியியலாளர் ஆர்.கே. பியதாச *01.05.2019 இலிருந்து*

**மேலதிகப் பொது முகாமையாளர் (DD 04)**
பொறியியலாளர் டி.டி.கே. கருணாரத்ன *08.01.2019 வரை*
பொறியியலாளர் எம்.ஆர். ரணதுங்க *09.01.2019 இலிருந்து*

**மேலதிகப் பொது முகாமையாளர் (சொத்து முகாமைத்துவம்)**
பொறியியலாளர் ஜி.ஏ. ஜயந்த *19.02.2019 வரை*
பொறியியலாளர் எச்.எம்.ஏ. ஹேரத் *20.02.2019 இலிருந்து*

**மேலதிகப் பொது முகாமையாளர் (நிறுவன உபாயம்)**
பொறியியலாளர் (திருமதி.) என்.டபிள்யு.கே. ஹேரத்

**மேலதிகப் பொது முகாமையாளர் (செயற்றிட்டங்கள்)**
பொறியியலாளர் எஸ்.டி.டபிள்யு. குணவர்த்தன *14.01.2019 வரை*
பொறியியலாளர் (திருமதி.) எம்.கே.சி.என்.கே. அமரசிறி *15.01.2019 இலிருந்து*

**நிதி முகாமையாளர்**
திரு. ரி.கே. லியனகே

# ஒழுங்கமைப்புக் கட்டமைப்பு - 2019

**தலைவர் மற்றும் சபை அங்கத்தவர்கள்**

**பொது முகாமையாளர்**

- மேலதிகப் பொது முகாமையாளர் (நிறுவன உபாயம்)
- மேலதிகப் பொது முகாமையாளர் (பிறப்பாக்கம்)
- மேலதிகப் பொது முகாமையாளர் (பரிமாற்றம்)
- மேலதிகப் பொது முகாமையாளர் (விநியோகப் பிரிவு 1)
- மேலதிகப் பொது முகாமையாளர் (விநியோகப் பிரிவு 2)
- மேலதிகப் பொது முகாமையாளர் (விநியோகப் பிரிவு 3)
- மேலதிகப் பொது முகாமையாளர் (விநியோகப் பிரிவு 4)
- மேலதிகப் பொது முகாமையாளர் (சொத்து முகாமைத்துவம்)
- மேலதிகப் பொது முகாமையாளர் (செயற்றிட்டங்கள்)
- நிதி முகாமையாளர்

பிரதிப் பொது முகாமையாளர் (நிறுவன உபாயம் மற்றும் ஒழுங்குபடுத்தல் அலுவல்கள்)
பிரதிப் பொது முகாமையாளர்(வணிகம் மற்றும் செயற்பாட்டு உபாயம்)
பிரதிப் பொது முகாமையாளர் (தொழிற்பாட்டு உபாயம் மற்றும் செயன்முறை அபிவிருத்தி)
பிரதிப் பொது முகாமையாளர் (ஆய்வு மற்றும் அபிவிருத்தி)
பிரதிப் பொது முகாமையாளர் (தகவல் தொழினுட்பம்)
பிரதிப் பொது முகாமையாளர் (நிறுவன வளத் திட்டமிடல்)

பிரதிப் பொது முகாமையாளர் (சக்தி விற்பனை)
பிரதிப் பொது முகாமையாளர் (நிறுவன அலுவல்கள்)
பிரதிப் பொது முகாமையாளர் (அனல் தொகுதி)
பிரதிப் பொது முகாமையாளர் (சொத்து முகாமைத்துவ அனல் மின்)
பிரதிப் பொது முகாமையாளர் (மகாவலி தொகுதி)
பிரதிப் பொது முகாமையாளர் (சொத்து முகாமைத்துவ நீர் மின்)
பிரதிப் பொது முகாமையாளர் (லக்ஷபான தொகுதி)
பிரதிப் பொது முகாமையாளர் (சொத்து முகாமைத்துவ அனல எந்திரவியல்)
பிரதிப் பொது முகாமையாளர் (சொத்து முகாமைத்துவ நீர் எந்திரவியல்)
பிரதிப் பொது முகாமையாளர் (மின் பிறப்பாக்கல் செயற்றிட்டங்கள்)
பிரதிப் பொது முகாமையாளர் (சமனல தொகுதி)
மின்வலு ஆலை முகாமையாளர் (லக்விஜய மின்வலு ஆலை)
பிரதிப் பொது முகாமையாளர் (அணைக்கட்டு பாதுகாப்பு, சுற்றுச்சூழல் மற்றும் குடியியல் கட்டமைப்புப் பராமரிப்பு)
பிரதிப் பொது முகாமையாளர் (மின் பிறப்பாக்கப் பாதுகாப்பு)
மேலதிக நிதி முகாமையாளர் (மின் பிறப்பாக்கம்)

பிரதிப் பொது முகாமையாளர் (சக்திக் கொள்வனவு)
பிரதிப் பொது முகாமையாளர் (மின் பரிமாற்றம் மற்றும் மின் பிறப்பாக்கல் திட்டமிடல்)
பிரதிப் பொது முகாமையாளர் (நிறுவனம் மற்றும் ஒழுங்குபடுத்தல் தொடர்புகள்)
பிரதிப் பொது முகாமையாளர் (மின் பரிமாற்றச் செயற்பாடு மற்றும் பராமரிப்பு - தெற்கு)
பிரதிப் பொது முகாமையாளர் (மின் பரிமாற்றச் செயற்பாடு மற்றும் பராமரிப்பு - வடக்கு)
பிரதிப் பொது முகாமையாளர் (சொத்து முகாமைத்துவம்)
பிரதிப் பொது முகாமையாளர் (முறைமைக் கட்டுப்பாடு)
பிரதிப் பொது முகாமையாளர் (தொடர்பாடல்)
பிரதிப் பொது முகாமையாளர் (சக்தி சந்தைப்படுத்தல்)
பிரதிப் பொது முகாமையாளர் (கட்டுப்பாடு மற்றும் பாதுகாப்பு)
பிரதிப் பொது முகாமையாளர் (மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி அபிவிருத்தியும் செயலாற்றுகைக் கண்காணிப்பும்)
செயற்றிட்டப் பணிப்பாளர் (நீண்ட கால தனியார் மின்வலுப் பெறுகை)
செயற்றிட்டப் பணிப்பாளர் (கொழும்புத் துறைமுக நகர் அபிவிருத்திச் செயற்றிட்டம்)
மேலதிக நிதி முகாமையாளர் (மின் பரிமாற்றம்)

பிரதிப் பொது முகாமையாளர் (வர்த்தகம் மற்றும் நிறுவனம்)
பிரதிப் பொது முகாமையாளர் (செயற்றிட்டங்கள் மற்றும் கனரக பராமரிப்பு)
பிரதிப் பொது முகாமையாளர் (திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி)
பிரதிப் பொது முகாமையாளர் (கொழும்பு நகர்)
பிரதிப் பொது முகாமையாளர் (வட மேல் மாகாணம்)
பிரதிப் பொது முகாமையாளர் (வட மத்திய மாகாணம்)
பிரதிப் பொது முகாமையாளர் (வட மாகாணம்)
பிரதிப் பொது முகாமையாளர் (மின் விநியோக ஒருங்கிணைப்பு)
செயற்றிட்டப் பணிப்பாளர் (மின்சார வழங்கலின் நம்பகத்தன்மையை மேம்படுத்த உதவியளிக்கும் செயற்றிட்டம்)
மேலதிக நிதி முகாமையாளர் (விநியோகப் பிரிவு 1)

பிரதிப் பொது முகாமையாளர் (வர்த்தகம் மற்றும் நிறுவனம்)
பிரதிப் பொது முகாமையாளர் (செயற்றிட்டங்கள் மற்றும் கனரக பராமரிப்பு)
பிரதிப் பொது முகாமையாளர் (திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி)
பிரதிப் பொது முகாமையாளர் (மத்திய மாகாணம்)
பிரதிப் பொது முகாமையாளர் (மேல் மாகாணம் வடக்கு)
பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு மாகாணம்)
மேலதிக நிதி முகாமையாளர் (விநியோகப் பிரிவு 2)

பிரதிப் பொது முகாமையாளர் (வர்த்தகம் மற்றும் நிறுவனம்)
பிரதிப் பொது முகாமையாளர் (செயற்றிட்டங்கள் மற்றும் கனரக பராமரிப்பு)
பிரதிப் பொது முகாமையாளர் (திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி)
பிரதிப் பொது முகாமையாளர் (மேல் மாகாணம் தெற்கு II)
பிரதிப் பொது முகாமையாளர் (சப்ரகமுவ மாகாணம்)
பிரதிப் பொது முகாமையாளர் (ஊவா மாகாணம்)
மேலதிக நிதி முகாமையாளர் (விநியோகப் பிரிவு 3)

பிரதிப் பொது முகாமையாளர் (வர்த்தகம் மற்றும் நிறுவனம்)
பிரதிப் பொது முகாமையாளர் (செயற்றிட்டங்கள் மற்றும் கனரக பராமரிப்பு)
பிரதிப் பொது முகாமையாளர் (திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி)
பிரதிப் பொது முகாமையாளர் (மேல் மாகாணம் தெற்கு I)
பிரதிப் பொது முகாமையாளர் (தென் மாகாணம்)
மேலதிக நிதி முகாமையாளர் (விநியோகப் பிரிவு 4)

பிரதிப் பொது முகாமையாளர் (சொத்து முகாமைத்துவம் மற்றும் நிறுவனம்)
பிரதிப் பொது முகாமையாளர் (பயிற்சி)
பிரதிப் பொது முகாமையாளர் (குடியியல் வேலைகள் மற்றும் கட்டடம்)
பிரதிப் பொது முகாமையாளர் (வேலைப் பட்டறை மற்றும் துணைச் சேவைகள்)
பிரதிப் பொது முகாமையாளர் (தொழில்சார் சுகாதாரமும் பாதுகாப்பும்)
செயற்றிட்டப் பணிப்பாளர் (விதுலக்பய)
மேலதிக நிதி முகாமையாளர் (சொத்து முகாமைத்துவம்)

பிரதிப் பொது முகாமையாளர் (மின் பரிமாற்ற வடிவமைப்பும் சுற்றுச்சூழலும்)
பிரதிப் பொது முகாமையாளர் (மின் பரிமாற்றச் செயற்றிட்டங்கள்)
பிரதிப் பொது முகாமையாளர் (மின் பரிமாற்ற நிருமாணச் செயற்றிட்டங்கள்)
பிரதிப் பொது முகாமையாளர் (பொறியியல் ஆலோசனைச் சேவைகள்)
பிரதிப் பொது முகாமையாளர் (நிறுவனம் மற்றும் செயற்றிட்டங்களின்ஒருங்கிணைப்பு)
செயற்றிட்டப் பணிப்பாளர் (மேல் கொத்மலை நீர் மின்வலுச் செயற்றிட்டம்)
செயற்றிட்டப் பணிப்பாளர் (நிலக்கரி மின்வலுச் செயற்றிட்டம்)
செயற்றிட்டப் பணிப்பாளர் (விரிநில நீர் மின்வலுச் செயற்றிட்டம்)
செயற்றிட்டப் பணிப்பாளர் (உமா ஓயா நீர் மின்வலுச் செயற்றிட்டம்)
செயற்றிட்டப் பணிப்பாளர் (பாரிய கொழும்பு மின் பரிமாற்ற மற்றும் மின் விநியோக இழப்பைக் குறைக்கும் செயற்றிட்டம்)
செயற்றிட்டப் பணிப்பாளர் (மொரகொல்ல நீர் மின்வலுச் செயற்றிட்டம்)
செயற்றிட்டப் பணிப்பாளர் (தேசிய மின் பரிமாற்றம் மற்றும் DND & EI செயற்றிட்டம்)
செயற்றிட்டப் பணிப்பாளர் (பசுமைச் சக்தி அபிவிருத்தி மற்றும் EEII செயற்றிட்டம் - கட்டம் II)
செயற்றிட்டப் பணிப்பாளர் (மன்னார் காற்றாலை மின்வலுச் செயற்றிட்டம்)
செயற்றிட்டப் பணிப்பாளர் (LNG)
செயற்றிட்டப் பணிப்பாளர் (மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி உறிஞ்சல் மின் பரிமாற்ற அபிவிருத்திச் செயற்றிட்டம்)
செயற்றிட்டப் பணிப்பாளர் (மின்வலு முறைமையின் நம்பகத் தன்மையை வலுப்படுத்தும் செயற்றிட்டம்)
மேலதிக நிதி முகாமையாளர் (செயற்றிட்டங்கள்)

மேலதிக நிதி முகாமையாளர் (தலைமையகம்)
மேலதிக நிதி முகாமையாளர் (நிறுவனம்)
மேலதிக நிதி முகாமையாளர் (திறைசேரி முகாமைத்துவம்)

பிரதிப் பொது முகாமையாளர் (ஒருங்கிணைப்பு)
பிரதிப் பொது முகாமையாளர் (ஆளணி)
பிரதம உள்ளகக் கணக்காய்வாளர்

புலனாய்வுகள் முகாமையாளர்

பிரதம சட்ட அதிகாரி

சபைச் செயலாளர்

# துணைக் கம்பனிகளுடன் இ.மி.ச. இன் ஒழுங்மைப்புக் கட்டமைப்பு 2019





# முகாமைத்துவ மீளாய்வு

# தலைவரின் மீளாய்வு

ஆண்டின் காலப்பகுதியில், மகத்தான பாரிய கொழும்பு மின் பரிமாற்ற, விநியோக மற்றும் இழப்பைக் குறைக்கும் செயற்றிட்டத்தை இ.மி.ச. இனால் வெற்றிகரமாகப் பூர்த்திசெய்ய முடிந்திருந்தது. கொழும்பு நகரம் மற்றும் துறைமுக நகரத்தின் அபிவிருத்தித் தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய நிலையில் இருப்பதற்கு கம்பனிக்கு முடிந்திருக்கிறது.



மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டானது இலங்கை மின்சார சபைக்கு (இ.மி.ச.) வரலாற்றுச் சிறப்புமிக்க அடையாளத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. இதற்குக் காரணம், இலங்கை மின்சார சபை தேசத்திற்காக மின்சாரத்தை உற்பத்தி செய்து விநியோகித்த 50 ஆவது ஆண்டு பொன் விழாவை 2019 நவெம்பர் மாதத்தில் கொண்டாடியிருப்பதாகும்.

பணிவான தொடக்கத்திலிருந்து, இன்று இ.மி.ச. ஆனது மிகவும் மெச்சும்படியான, குறிப்பிடத்தக்க சாதனையொன்றான 99.6% மக்களுக்கு மின்சாரத்தைக் கிடைக்கச் செய்வதில் தனித்துவமான கௌரவத்தைப் பெறுகிறது. அரை நூற்றாண்டு கால இடைவிடாத முன்னேற்றம் இலங்கை மின்சார சபையை நம் நாட்டிற்கு சேவை செய்ய அர்ப்பணிக்கப்பட்ட ஒரு முக்கிய தேசிய நிறுவனமாக அடையாளப்படுத்துகிறது.

ஆரம்பத்தில் இதில் ஈடுபட்ட எமது முன்னோடி சகாக்களுக்கு நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். அதேபோல், பின்னர் சிறந்த பணியினை தொடர்வதற்கான தண்டத்தைக் கையிலெடுத்தவர்களுக்கும் எங்கள் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். நாடு பூராகவும் மேற்கொள்ளப்படும் மின்சார வழங்கலில் வினைத்திறனான, பாதுகாப்பான, நம்பகத்தன்மையான முறைமை ஒன்றைப் பேணுகின்ற இ.மி.ச. இன் செயற்பணியை பெருமையுடன் நிறைவேற்றுவதற்கு இன்று எங்களை அனுமதிக்கின்ற வலுவான அடித்தளத்தை அவர்கள் கூட்டாக அமைத்திருந்தனர்.

இ.மி.ச. ஆனது 1969 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்கச் சட்டம், 1979 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்கச் சட்டம், 1988 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டம் ஆகிய சட்டங்களால் திருத்தம் செய்யப்பட்ட 1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கச் சட்டத்தினால் 1969 நவெம்பர் 01 ஆந் திகதி தாபிக்கப்பட்ட அரசாங்கத்திற்குச் சொந்தமான ஒரு நிறுவனமாகும். 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டம் (திருத்தப்பட்ட) ஆனது இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் (PUCSL) ஒழுங்குபடுத்தல் நோக்கெல்லையுள் இ.மி.ச. இனைக் கொண்டு வந்துள்ளது.

நாடு முழுவதும் மின்சாரப் பிறப்பாக்கம், பரிமாற்றம் மற்றும் அதன் விநியோகம் ஆகியவற்றுக்குப் இ.மி.ச. பொறுப்பானதாகும். இந்தப் பணியில், நான்கு துணைக் கம்பனிகள் அதற்கு ஆதரவாக இருக்கின்றன. அவையான, வரையறுக்கப்பட்ட லங்கா மின்சாரக் கம்பனி (தனி.) நிறுவனம் (LECO), வரையறுக்கப்பட்ட எல்.ரி.எல். ஹோல்டிங்ஸ் நிறுவனம் (LTL), வரையறுக்கப்பட்ட லங்கா நிலக்கரி (தனி.) கம்பனி மற்றும் வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கா எனேஜிஸ் (தனி.) நிறுவனம். இவை தவிர கூட்டு முயற்சியான வரையறுக்கப்பட்ட திருகோணமலை மின்வலுக் கம்பனியும் ஒரு சில சுயாதீன மின்வலு உற்பத்தியாளர்களும் (IPP's) காணப்படுகின்றனர்.

மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் காலப்பகுதியில், 108,315 வீடுகள் புதிய மின்சார இணைப்புகளைப் பெற்றிருப்பதுடன் 146,360 மேலதிக நுகர்வோர் கணக்குகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஆண்டின் காலப்பகுதியில் மின்சார விற்பனை 14,611 GWh இனை அடைந்திருந்ததுடன், இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 3.7% அதிகரிப்பாகும். எவ்வாறாயினும், உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதிபலிப்பாக ஹோட்டல் துறையின் மின்சாரப் பாவனை 5.4% இனால் வீழ்ச்சி கண்டிருந்தது. அதே நேரம், நிகர மின் பிறப்பாக்கம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 3.6% வளர்ச்சியடைந்து 15,922 GWh இனை எட்டியது.

# தலைவரின் மீளாய்வு (தொடர்ச்சி)

நாடு முழுவதும் 100% மின்சக்திப் பரிமாற்றத்திற்கு இ.மி.ச. பொறுப்புடையதாக இருப்பதுடன் அரசாங்கத்திற்குச் சொந்தமான LECO விநியோகக் கம்பனியுடன் சேர்ந்து பாரியதொரு பங்கு விநியோகத்தினை (88.5%) இ.மி.ச. மேற்கொள்கிறது. 2019 ஆம் ஆண்டில் இலங்கையின் மின்வலுப் பிறப்பாக்கத்தில் 71% இற்கு இ.மி.ச. பொறுப்புடையதாக இருந்தது. மீதிப் பகுதியானது சுயாதீன மின்வலு உற்பத்தியாளர்களுக்குச் சொந்தமானதும் அவர்களால் இயக்கப்படுவதுமான அனல், நீர், சூரிய ஒளி, காற்றாலை அடிப்படையிலான ஆலைகளினால் கூட்டாக உற்பத்தி செய்யப்பட்டது.

2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மேற்கூரை சூரிய ஒளி மூல மின் பிறப்பாக்கல் இணைப்புகளின் கொள்ளளவு அதிகரித்திருக்கிறது என்பதையும் முன்னிலைப்படுத்துவது ஊக்கமளிக்கிறது. 2019 ஆம் ஆண்டின் இறுதியில் மொத்தக் கொள்ளளவு 217,263 kW ஆக இருந்தது, இது மீள்புதுப்பிக்கத்தக்க சக்தியை அறுவடை செய்வதில் இ.மி.ச. இன் வலுவான உறுதிப்பாட்டைக் குறிக்கிறது.

2019 ஆம் ஆண்டின் காலப்பகுதியில் மின்சார விற்பனை மூலமான பட்டியலிடப்பட்ட மொத்த வருவாய் 5.8% இனால் அல்லது ரூபா 13,379 மில்லியனால் அதிகரித்து ரூபா 242,950 மில்லியனாகக் காணப்பட்டது. இது கம்பனியில் இதுவரை பதிவு செய்யப்பட்ட மிகவுயர்ந்த விற்பனை வருவாய் ஆகும்.

இந்த 5.8% உயர்ச்சியானது முற்றுமுழுதாக மின்சாரத்திற்கான கேள்வியில் ஏற்பட்ட அதிகரிப்பு காரணமாக ஏற்பட்டதொன்றாகும். ஏனெனில் 2014 ஆம் ஆண்டிலிருந்து எவ்வித விதிப்பனவுத் திருத்தங்களும் மேற்கொள்ளப்படவில்லை. நிறுவனங்களில் இடம்பெறும் சாதாரண வர்த்தக நடவடிக்கைகளில் விற்பனை அதிகரிப்பானது இலாப அதிகரிப்புக்கு பங்களிப்புச் செய்வது போலன்றி இ.மி.ச. இல் இதற்கு நேர்மாறாகவே நிகழ்கிறது. இது நடைமுறையிலுள்ள பிறப்பாக்கல் கலவையின் காரணமாக ஏற்படும் ஒன்றாகும். இதனால் மானியம் அதிகரிக்கிறது, அதன் விளைவாக ஏற்படுகின்ற இழப்புகள் அதிகமானதாகும். இந்த முரண்பாட்டை உணர்ந்து, மின்சாரம் மற்றும் மின்வலுவின் பொறுப்பான பயன்பாடு குறித்து நுகர்வோருக்கு அறிவூட்டுவதற்காக கம்பனியானது தீவிர தொடர்பாடல் பிரச்சாரத்தில் கவனஞ் செலுத்தியது.

1990 ஆம் ஆண்டிலிருந்து ஆண்டின் முதல் பாதியில் இரண்டாவது மிகக் குறைந்த மழைப் பொழிவு பதிவு செய்யப்பட்ட இந்த 2019 ஆம் ஆண்டு கடுமையான வறட்சியைக் கொண்டு வந்ததால் இந்தப் பிரச்சாரம் முக்கியமானதாக இருந்தது. அது பிரதான நீர்த்தேக்கங்களுக்கு விதிவிலக்கான வகையில் குறைந்தளவு நீர் உட்பாய்வினைத் தூண்டியது. இதன் விளைவாக, பிரதான நீர் மின்வலு ஆலைகள் மற்றும் சிறியளவான நீர் மின்வலு ஆலைகளிலிருந்தான பிறப்பாக்கம் 4,794.5 GWh ஆகக் குறைவடைந்தது. இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் சரியாக 24.9% வீழ்ச்சியாகும். நீர்மின் பிறப்பாக்கத்தின் வீழ்ச்சியினால் அனல் மின் பிறப்பாக்கத்தை நம்பியிருக்க வேண்டிய நிலை இ.மி.ச. இற்கு ஏற்பட்டது. ஆண்டின் இறுதியில் மொத்த அனல் மின்வலுப் பிறப்பாக்கம் 65% ஆக இருந்ததுடன், இது 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 10.6% அதிகரிப்பாகும்.

இ.மி.ச. இன் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட மிகவும் விலையுயர்ந்த அனல் மின்வலுவை நோக்கிய இந்தப் பிறப்பாக்கல் கலவையின் மாற்றமானது உற்பத்திச் செலவிற்கும் விற்பனை விலைக்கும் இடையிலான இடைவெளியை பெரிதாக்குவதற்கு வழிவகுத்தது. அது, விற்பனை செய்யப்பட்ட ஒவ்வொரு அலகிற்கும் கிட்டத்தட்ட ரூபா 5.85 நட்டத்தை இ.மி.ச. இற்கு ஏற்படுத்தியது. இவ்வாறு பெருகி வருகின்ற நட்டங்கள் இ.மி.ச. இன் நிதி நிலையில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தன.

இ.மி.ச. இற்கு கிரயத்தைப் பிரதிபலிக்கின்ற மின்சார விதிப்பனவொன்றை அங்கீகரிப்பதற்கு PUCSL சட்டபூர்வமாகத் தேவைப்படுத்தப்பட்ட போதிலும், 2014 ஆம் ஆண்டிலிருந்து அது அவ்வாறிருக்கவில்லை. அத்துடன் பல்வேறு வகைகளின் கீழுள்ள நுகர்வோருக்கும் தொடர்ச்சியாக மானிய விலையில் மின்சாரத்தை வழங்க வேண்டும் என்று அரசாங்கம் கோரியிருந்தது. இதன் விளைவாக, இ.மி.ச. சராசரி உற்பத்திச் செலவையும் விடக் குறைந்த விலையில் நுகர்வோருக்கு மின்சாரத்தை விற்பனை செய்ய வேண்டியுள்ளது. இதற்கு மேலதிகமாக, அரசாங்கத்தால் கட்டளையிடப்பட்ட மானியத் தொகை மீளளிக்கப்படாததால் அடுத்து வருகின்ற ஆண்டில் இ.மி.ச. மேலும் கடன் வாங்குவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளதுடன் 2019 ஆம் ஆண்டில் கம்பனியின் கிரயமானது நிதிக் கிரயங்களில் ரூபா 22.5 பில்லியன் தடுமாற்றமொன்றைக் கொண்டிருந்தது.

உற்பத்திக் கிரயத்திற்கும் விற்பனை விலைக்குமிடையே ஒரு நியாயமான சமநிலையை ஏற்படுத்த பல முயற்சிகள் எடுக்கப்பட்ட போதிலும், உற்பத்திக் கிரயத்தையும் விட மிகக் குறைந்த விலையில் மின்சாரத்தை விற்பனை செய்வதற்கு இ.மி.ச. நிர்ப்பந்திக்கப்பட்டது என்பதை வலியுறுத்துவது முக்கியமானதாகும். குறைந்தபட்சம் ஒரு ரூபாய் கட்டண அதிகரிப்பொன்றைக் கருத்திற் கொள்வதற்கு முகாமையால் பல முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டன, இதன் மூலம் ஆண்டொன்றிற்கு அண்ணளவாக ரூபா 14 பில்லியன் வருமான அதிகரிப்பு ஏற்பட்டிருக்கும் - இதனால் சிறிய அளவிலான அரசாங்க மானியம் விடுவிக்கப்படுகிறது.

இந்தச் சூழமைவில், நடைமுறையிலுள்ள விதிப்பனவுக் கட்டமைப்பு மற்றும் அரசாங்க வளங்கள் மீது அது தொடர்ந்து ஏற்படுத்துகின்ற எதிர்மறையான தாக்கங்கள் பற்றிய நுண்ணறிவைப் பகிர்ந்து கொள்வது விவேகமானதாக இருக்கலாம் என நான் நம்புகிறேன்.

முதல் 30 அலகுகள் பாவனைக்காக அலகொன்று ரூபா 2.50 இன்படி ஆரம்பமாகின்ற தற்போதைய வீட்டு மின் பாவனைக்கான விதிப்பனவுக் கட்டமைப்புக் கணக்குகள் மொத்த வாடிக்கையாளர்களில் 19% ஆகும். நுகரப்படும் அலகொன்றிற்கு ரூபா 16.29 வீதம் இந்தத் துண்டத்திற்கு மானியம் வழங்கப்படுகிறது. இது 1,257,262 வாடிக்கையாளர்களுக்கு வருடாந்தம் வழங்கப்படுகின்ற ரூபா 3.312 பில்லியன் பெறுமதியைக் கொண்ட மின்சார மானியமாகும். 181 அலகுகள் நுகர்வுக்குப் பின்னர் சமச்சீராகும் வரை ஒவ்வொரு மேலதிக 30 அலகுகள் தொகுதிக்கும் இதே கோட்பாடு தொடர்ந்து சென்று, இறுதியாக எமது வாடிக்கையாளர் தளத்தில் 87% ஆக இருக்கின்ற 5,651,452 வீட்டு மின் பாவனையாளர்களுக்காக ரூபா 48.623 பில்லியன் மானியம் பதிவாகிறது. பல வகைகளையும் சேர்ந்த மீதமாக உள்ளவர்களில் (எமது நுகர்வோரில் 13% ஆனோர்) மிகப் பெரியளவிலான மானியம் கைத்தொழில் துறையைச் சேர்ந்தோருக்கு வழங்கப்படுகிறது. 2019 ஆம் ஆண்டில் இவ்வாறு வழங்கப்பட்ட மொத்த மானியத் தொகை ரூபா 37.635 பில்லியன் ஆகும்.

மிகக் குறைந்த விலையில் மின்வலுவைப் பிறப்பாக்கம் செய்வதற்காக முன்னர் அங்கீகரிக்கப்பட்ட திட்டங்கள் எவ்வித தடங்கல்களோ, தாமதமோ இன்றி நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால்- குறிப்பாக திட்டமிடப்பட்ட பல்வேறு 300 MW LNG ஆலைகள் முதலில் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால் உற்பத்திக் கிரயத்திற்கும் விற்பனை விலைக்கும் இடையிலான இந்தச் சோகமான இடைவெளிக்கு 2019 ஆம் ஆண்டில் ஓரளவுக்கு தீர்வு காணப்பட்டிருக்கும். 300 MW ஆலையானது இ.மி.ச. இன் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணங்களால் செயல்படுத்தப் படவில்லை என்பது வருத்தத்துடன் குறிப்பிடத்தக்கதாகும்.

மேற்கூறப்பட்ட விடயங்கள் இருந்தபோதிலும், 2019 ஆம் ஆண்டில் இ.மி.ச. மிகவும் தாமதமான மற்றும் தடம்புரண்ட மின் பிறப்பாக்கல் ஆலைகளை அகற்றுவதற்கான திட்டத்தை மிகவும் தீவிரமாகத் தொடர்ந்தது. கெரவலப்பிட்டியவில் இரண்டு LNG மின்வலு ஆலைகளைத் தாபிப்பதற்கும் தற்போது எங்களிடம் உள்ள இடத்தில் நுரைச்சோலை நிலக்கரி மின்வலு ஆலையை விரிவாக்குவதற்கும் அடித்தளம் இடப்பட்டது. அத்துடன் களனிதிஸ்ஸயில் உள்ள எங்களது இடத்தில் மிகவும் நவீனமானதும் வினைத்திறனானதுமான இயந்திரங்களுடன் எரிவாயு விசையாழி ஆலைகளை மேம்படுத்துவதற்கும் சூரிய ஒளி மற்றும் காற்றாலைகளின் விரைவான விரிவாக்கத்திற்கு வசதியளிப்பதற்காகவும் அடித்தளம் இடப்பட்டது. விரைவில் மிகவும் வினைத்திறனான மின்வலு ஆலைகள் செயற்பாட்டிற்கு

# தலைவரின் மீளாய்வு (தொடர்ச்சி)

வந்ததும், இலங்கை மின்சார சபையை மிகவும் இலாபகரமான அரச நிறுவனமாக மாற்றுவதற்கான பாதை உருவாவதுடன் விரைவில் அரசாங்கத்திற்கு குறைக்கப்பட்ட மானியத்தைக் கொண்ட வெகுமதி வழங்கப்படும். இது குறைந்த செயற்பாட்டுக் கிரயங்களையும் இலாபத்தன்மையையும் கொண்ட பொருண்மையான பாதை ஒன்றாக இருப்பதால் திட்டமிடப்பட்ட பிறப்பாக்கல் ஆலைகளை மேலும் எவ்வித தாமதமுமின்றி நடைமுறைப்படுத்துவதற்கு முக்கியத்துவம் அளித்து தீவிர கவனம் செலுத்துமாறு சம்பந்தப்பட்ட அனைவரிடமும் நான் மனதாரக் கேட்டுக் கொள்கின்றேன்.

இ.மி.ச. ஆனது மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் காலப்பகுதியில் ரூபா 36 பில்லியன் பெறுமதியான செயற்றிட்டங்களைக் கையாண்டிருந்தது. மீள்புதுப்பிக்கத்தக்க மற்றும் தூய சக்திக்கான நிறுவனத்தின் கவனம், நிகழ்ச்சி நிரலில் அதிகமாக இருந்ததுடன் இந்த இடத்திலுள்ள சகல செயற்றிட்டங்களும் தீவிரமாகத் தொடரப்பட்டன. 100 MW மன்னார் காற்றாலை மின்வலுச் செயற்றிட்டத்தின் செயற்பாடுகளை திட்டமிட்டபடி 2020 ஆம் ஆண்டில் ஆரம்பிக்க வழிகாட்டப்பட்டது. இதுவே நாட்டிலுள்ள மிகப் பெரிய காற்றாலைச் செயற்றிட்டம் என்பதுடன் இந்த வசதியின் உரிமையாளராகவும் இயக்குநராகவும் இருப்பதையிட்டு இ.மி.ச. பெருமிதம் கொள்கிறது.

விரிநில 35 MW நீர் மின்வலுச் செயற்றிட்டத்திற்கான சுரங்கம் அமைக்கும் பணியின் இறுதிக் கட்டம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், இது 2021 சனவரி மாதத்திற்குள் வர்த்தகச் செயற்பாட்டை நோக்கி நகரும். மொரகொல்ல 30.5 MW நீர்மின் செயற்றிட்டம் மற்றும் 120 MW உமா ஓயா நீர்மின் செயற்றிட்டம் என்பவற்றை திட்டமிடப்பட்ட காலப்பகுதியினுள் பூர்த்தி செய்வதற்கான சகல வளங்களும் வழங்கப்பட்டுள்ளன. இத்தகைய மீள்புதுப்பிக்கத்தக்க சக்திச் செயற்றிட்டங்கள் மின்தொகுப்பிற்கு 285.5 MW அதிகரித்த கொள்ளளவை சேர்க்கும் என்பதுடன் எதிர்காலத்தில் பிறப்பாக்கல் கிரயத்திற்கு ஒரு குறிப்பிடத்தக்க நேர்மறையான பங்களிப்பையும் நல்கும்.

மேலும், இ.மி.ச. சிறிய அளவிலான மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி உற்பத்தியாளர்களின் வலையமைப்பை விரிவாக்கும் செயற்பாட்டைத் தொடர்ந்தும் முன்னெடுப்பதுடன் 06 சூரிய ஒளி, 01 உயிர்த் திணிவு மற்றும் 11 சிறியளவு நீர்மின் உற்பத்தியாளர்கள் ஆகியோருக்கு 18 PPAs இனையும் வழங்கியுள்ளது. இத்தகைய முயற்சிகளிலிருந்து கிடைக்கும் பங்களிப்பு 25 MW என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த நிலைபேறான மற்றும் கவனம் குவிக்கப்பட்ட முயற்சிகள், நிலுவையிலுள்ள மின்வலுக் கொள்வனவு உடன்படிக்கைகளுடன் (PPA) வழங்குவதற்கான இணைப்பிலுள்ள சூரிய மற்றும் நீர் மின்வலுவுக்கான 70 இற்கும் மேற்பட்ட சிறிய மீள்புதுப்பிக்கத்தக்க ஆலைகளுடன் சேர்த்து மின்தொகுப்பிற்கு மேலும் 90 MW தூய சக்தியை சேர்க்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதனால் மீள்புதுப்பிக்கத்தக்க சக்தியின் உயர்ந்தபட்ட அளவை உள்ளீர்ப்பதற்கான எமது தொடர் முயற்சிகள் உறுதிப்படுத்தப்படும்.

மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில், இ.மி.ச. இற்குச் சொந்தமானதும் அதனால் இயக்கப்படுவதுமான 5 புதிய மின்சார வாகன மின்னேற்றல் நிலையங்களை (EVCS) உபாய ரீதியாக நாடு பூராகவும் அமைத்ததன் மூலம் காபண் உமிழ்வைக் குறைப்பதற்கான தேசிய முயற்சிகளை ஆதரிப்பதற்கான தனது தடத்தையும் இ.மி.ச. விரிவுபடுத்தியுள்ளது.

பசுமை மின்வலு அபிவிருத்தி, சக்தி வினைத்திறன் மேம்பாட்டு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் (கட்டம் 2), தேசிய மின் பரிமாற்ற, விநியோக வலையமைப்பு அபிவிருத்தி மற்றும் வினைத்திறன் மேம்பாட்டுச் செயற்றிட்டம், தூய சக்தி மற்றும் வலையமைப்பு வினைத்திறன் மேம்பாட்டுச் செயற்றிட்டம் என்பன மீள்புதுப்பிக்கத்தக்க சக்தியின் அதிகரித்த அளவினை உள்ளீர்ப்பதை நோக்காகக் கொண்ட சில முக்கிய மின் பரிமாற்ற மேம்பாட்டுச் செயற்றிட்டங்கள் ஆகும். இத்தகைய செயற்றிட்டங்கள் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் குறைந்தபட்ச குறுக்கீடுகளுடன் பூர்த்தியை நோக்கி முன்னேறியுள்ளன.

ஆண்டின் காலப்பகுதியில், மகத்தான பாரிய கொழும்பு மின் பரிமாற்ற, விநியோக மற்றும் இழப்பைக் குறைக்கும் செயற்றிட்டத்தை இ.மி.ச. இனால் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்ய முடிந்திருந்தது. முறைமைக்கான 220 kV நிலத்தடி மின் பரிமாற்றக் கம்பிவட வலையமைப்பின் அறிமுகப்படுத்தலுடன், பாரிய கொழும்பு மின்வலு வலையமைப்பு இரட்டிப்பாக்கப்பட்டுள்ளது.

இதன் விளைவாக, கொழும்பு நகரம் மற்றும் துறைமுக நகரத்தின் அபிவிருத்தித் தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய நிலையில் இருப்பதற்கு கம்பனிக்கு முடிந்திருக்கிறது. இந்த முக்கிய மின் பரிமாற்றச் செயற்றிட்டத்தின் பூர்த்தியானது கொழும்புக்கு மேம்பட்ட தரம் மற்றும் நம்பகத்தன்மையான மின்சார வழங்கலின் ஒரு புதிய சகாப்தத்தைக் கட்டியம் கூறுகிறது.

திறன் மானியிடல் முன்னோடிச் செயற்றிட்டக் (கட்டம் 1) காலப்பகுதியின் வெற்றிகரமான பூர்த்தியானது உற்பத்தித்திறனை உயர்த்தக்கூடிய மிகவும் கிரய விளைதிறனும் வினைத்திறனும் கொண்ட நுகர்வோர் சேவையைக் கையாளும் இ.மி.ச. இன் மற்றுமொரு மிகப்பெரிய புத்தாக்க நடவடிக்கையைக் குறிக்கிறது.

எங்களுக்கு நிதியுதவி அளிக்கும் முகவராண்மைகளான ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB), யப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மை (JICA), சீன கைத்தொழில் மற்றும் வர்த்தக வங்கி (ICBC) ஆகியவற்றுக்கு அவர்களின் தொடர்ச்சியான நிதியுதவிக்காக எங்களது நன்றிகளை இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இலங்கை மின்சார சபையை வாடிக்கையாளர்பால் உந்தப்பட்ட நிறுவனமாக மாற்றுவது என்ற மாண்புமிகு அமைச்சரின் தொலைநோக்கைப் புரிந்து கொள்ளுதல் மற்றும் ஏகபோக நிலையின் எந்தவொரு பண்புகளையும் விலக்குதல் ஆகியவற்றின் பொருட்டு ஒரு புத்தாக்கமான செயற்றிட்டம் விருத்தி செய்யப்பட்டு 2019 யூன் மாதம் வெற்றிகரமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. பொதுமக்களுக்கான நிறுவனப் பயன்பாட்டு மென்பொருள் தீர்வான 'CEB Assists' இன் சுய சேவை வழிமுறைகளில் ஒன்றான 'CEBCare' கையடக்கத் தொலைபேசிச் செயலியைத் தொடங்கியதன் மூலம் மேலும் சிறப்பான முறையில் வாடிக்கையாளர்களுக்கு சேவையை வழங்குகின்ற ஒரு புதிய பரிணாமத்தை கம்பனி வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்தது.

இ.மி.ச. பொறியியலாளர்களால் இவ்வாண்டினுள் இந்த அதிநவீன கையடக்கத் தொலைபேசிச் செயலியை வடிவமைத்து, விருத்தி செய்து அறிமுகப்படுத்த முடிந்திருந்தமையை இட்டு நாங்கள் மிகவும் பெருமிதம் அடைகின்றோம். இந்தச் செயலி சகல மூன்று மொழிகளிலும் கிடைக்கக்கூடியதாக இருப்பதுடன் இதனை Google Play மற்றும் Apple's App Store ஆகிய இரு தளங்கள் ஊடாகவும் கையடக்கத் தொலைபேசியில் பதிவிறக்கம் செய்ய முடியும். இந்தச் செயலியின் அறிமுகப்படுத்தலானது எங்கள் வாடிக்கையாளர் தளத்திலுள்ள 6.5 மில்லியன் வாடிக்கையாளர்களுக்கு ஒரு சிறந்த சேவையை வழங்குவதற்கும், அதிகமான விழிப்புணர்வை அளிப்பதற்கும், வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்துவதற்குமான இ.மி.ச. இன் பயணத்தில் ஒரு முக்கிய மைல் கல்லாகும். CEBCare செயலியினால் இ.மி.ச. இன் சேவை வழங்கலில் ஒரு புரட்சியை ஏற்படுத்த முடிந்திருந்ததுடன் சேவைகளைப் பெறுவதில் நுகர்வோருக்கு முறைப்பாடுகளைப் பதிவு செய்வதற்கான பொறிமுறை, மின்சாரத் தடங்கல் பற்றிய அறிவிப்பு, ஒன்லைன் கட்டணப் பட்டியல் கொடுப்பனவு வசதி மற்றும் பயன்பாட்டுத் தகவல்களை மீளாய்வு செய்தல் போன்றவை உள்ளிட்ட டிஜிடல் அனுபவத்தையும் வழங்கியுள்ளது. CEBCare செயலியானது நாடு பூராகவும் உள்ள இ.மி.ச. அழைப்பு நிலையங்களை நிகழ் நேரத்தில் இணைப்பதன் மூலம் செயல்படுகின்ற இ.மி.ச. இற்கான ஒருங்கிணைந்த தொடர்பு மையத்தையும் வாடிக்கையாளர்களுக்கு வழங்குகிறது.

உங்களுடைய நிறுவனம் எப்போதும் அதன் நிறுவன சமூகப் பொறுப்புகளில் விழிப்புடன் இருந்து வருகிறது என்பதுடன் இவ்வாண்டின் காலப்பகுதியில் மருத்துவம், கிராமப்புற வேலைவாய்ப்பு உருவாக்கம், கழிவுகளை சக்தியாக மாற்றுதல்,

# தலைவரின் மீளாய்வு (தொடர்ச்சி)

தூய்மையான சுற்றாடலுக்கான மர நடுகை, சிறுவர்களின் அறிவை மேம்படுத்தல் போன்ற பல்வேறு துறைகளில் பல செயற்றிட்டங்களைப் பூர்த்தி செய்துள்ளது.

மருத்துவத் துறையில், அண்ணளவாக 850 ஊழியர்கள் கொழும்பு இரத்த வங்கிக்கு 850 பைண்ட் இரத்தத்தை தானமாக வழங்கியுள்ளனர். இரத்த வங்கி இந்த குறிப்பிடத்தக்களவு பங்களிப்புக்காக நன்றியுடன் இ.மி.ச. ஐப் பாராட்டியுள்ளதுடன் 2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மிகப்பெரிய இரத்த தான வழங்குநர்களில் ஒருவராக இலங்கை மின்சார சபையை அங்கீகரித்துள்ளது. இந்த உயிர் காப்பு செயற்றிட்டத்தில் பங்குபற்றிய சகல ஊழியர்களுக்கும் எமது வாழ்த்துக்கள்.

கிராமப்புற வேலை வாய்ப்பில், தெஹியத்தகண்டியில் 3 MW தாவர மூல மின்வலு ஆலை ஒன்றுக்கான அதிகாரம் வழங்கலானது குறிப்பிடத்தக்களவு வேலை வாய்ப்புகளை உருவாக்கியுள்ளது. 1 MW தாவரமூல ஆலையானது அதன் இயக்கத்திற்குத் தேவையான மூலப் பொருட்களை வளர்த்து அறுவடை செய்வதில் ஈடுபட்டுள்ள அண்ணளவாக 1000 வேலை வாய்ப்புகளை வழங்குகிறது என மதிப்பிடப்பட்டுள்ளது.

கழிவுகளை சக்தியாக மாற்றுவதில் பிரதேச இ.மி.ச. ஆனது, திறைசேரி, சம்பந்தப்பட்ட மாநகர சபை, ஒரு சுயாதீன மின்வலு உற்பத்தியாளர் ஆகியோருடன் இணைந்து சக்தி ஆலைக்கான இரண்டாவது கழிவு தொடர்பான மின்வலுக் கொள்வனவு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளது. இது இரத்மலானையில் அமையவுள்ளதுடன் இது ஆண்டொன்றுக்கு 147,000 மெற்றிக் தொன் கழிவுகளை 70 GWh சக்தியாக மாற்றுவதற்கு பயன்படுத்தப்படும்.

தூய்மையான சுற்றாடலுக்கான பயணத்தில், ஆண்டின் காலப்பகுதியில் நாடு பூராகவும் 8000 இற்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் உங்களது ஊழியர்களால் நடப்பட்டுள்ளன. இறுதியாக, எங்களுடைய பிள்ளைகளுக்காக, மின் பாதுகாப்பு மற்றும் சக்தி முகாமைத்துவம் பற்றி நாட்டிலுள்ள இளம் பராயத்தினருக்கு அறிவூட்டும் நோக்கில் SLBC உடன் இணைந்து நாடு பூராகவும் பாடசாலைகளுக்கு இடையிலான வினாவிடைப் போட்டியை நாங்கள் நடத்தியுள்ளோம்.

பிறப்பாக்கல் திட்டத்தில் அமைக்கப்பட்டவாறு மின்வலு ஆலைகள் இல்லாமை, மானிய உதவியின் பற்றாக்குறையால் ஏற்படும் நிதிக் கட்டுப்பாடுகள் (அதிகரித்த படுகடன் கிரயத்தின் விளைவாக), கடுமையான வறட்சியான காலநிலை நிலைமைகளால் அதிக விலையான அனல் மின்வலுவைப் பயன்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டமை, இந்த ஆண்டில் எவ்வித விதிப்பனவு அதிகரிப்பும் மேற்கொள்ளப்படாமை ஆகியவை காணப்பட்ட போதிலும் விவேகமான நிதி மற்றும் நிருவாக நடவடிக்கைகளை மேற்கொண்டதன் மூலம் பாதீடு செய்யப்பட்ட மட்டங்களுள் செயற்பாடுகளை முகாமை செய்ய இ.மி.ச. இனால் முடிந்திருந்தது. இது தற்போதிருக்கின்ற மற்றும் புதிய செயற்றிட்டங்கள் அனைத்தினதும் தொடர்ச்சித்தன்மையை உறுதி செய்யும்போது நடைபெற்றிருந்தது. 2019 ஆம் ஆண்டு இ.மி.ச. இற்கு வெற்றிகரமான ஓர் ஆண்டு என்பதற்கு இந்தச் சாதனை ஒரு சமிக்ஞையாக இருக்கிறது என நாங்கள் நம்புகின்றோம்.

தற்போதைய பிறப்பாக்கல் கலவையுடன் நிறுவனத்தின் சிறந்த ஆரோக்கியம் போதுமானளவு மழைப் பொழிவு கிடைப்பதில் தங்கியுள்ளது என்பது வருந்தத்தக்கதாகும். இது ஒரு கடுமையான ஒழுங்கின்மையாக இருப்பதுடன் நிறுவனம் மற்றும் அதன் மேம்பட்ட செயலாற்றுகையின் நிலைபேறான எதிர்காலச் செயற்பாட்டின் பொருட்டு, மழைப் பொழிவு மீதான நம்பகத்தன்மையைத் தவிர்ப்பதற்காக, முன்னமே குறிப்பிட்டது போல, இ.மி.ச. இன் தடம்புரண்ட மின் பிறப்பாக்கல் திட்டங்களை விரைவாக தடையின்றிக் கொண்டு செல்வதற்கு அரசாங்கம் அர்ப்பணிப்புடன் முன்னுரிமை வழங்கி கவனிக்க வேண்டும்.

மிகவும் துடிப்பும் ஊக்கமும் கொண்ட மின்வலு, சக்தி மற்றும் வணிக அபிவிருத்தி அமைச்சர் கௌரவ ரவி கருணாநாயக்க, இராஜாங்க அமைச்சர் கௌரவ சம்பிக்க பிரேமதாச, அமைச்சின் ஊழியர்கள் ஆகியோர் பெறுமதிமிக்க வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப அத்தியாவசிய அரச சேவை ஒன்றை முகாமை செய்து வழங்குவதற்கு இ.மி.ச. இற்கு உதவிய அதே வேளை மிகவும் தாமதமடைந்திருந்த மின் பிறப்பாக்கல் திட்டங்களுக்கான அடித்தளங்களை முன்னோக்கிக் கொண்டு செல்லும் முயற்சிகளுக்கும் உதவியிருந்தனர்.

2019 ஆம் ஆண்டில் நிறுவனத்தின் ஒவ்வொரு பிரிவுடனும் இணைந்து இ.மி.ச. இன் செயற்பாடுகள் நம்பகமானவையாகவும் நேர்மறையானதாகவும் அமைந்திருந்தன. இது இணக்கத்தன்மை மற்றும் நல்ல நிறுவன ஆளுகையின் சகல அம்சங்களிலும் ஒரே சமயத்தில் உறுதியாக நின்ற தரமான மற்றும் பல்துறை விற்பன்னர்களைக் கொண்ட பணிப்பாளர்கள் சபையினால் செய்யப்பட்ட துடிப்புமிக்க பங்குபற்றல் மற்றும் பங்களிப்பு இன்றி இதனை அடைந்துகொள்ள முடிந்திருக்காது. ஒரு சவாலான ஆண்டின் ஊடாக நிறுவனத்தை வழிநடத்துவதற்கு ஒரு முனைப்பான பொது முகாமையாளரை / பிரதம நிறைவேற்று அதிகாரியைக் கொண்டிருந்தது சபையின் அதிஸ்டமாகும். அவரும் அவருடைய பணித்தொகுதியினரும் தங்களுடைய நிறுவனத்திற்கான அவர்களுடைய அர்ப்பணிப்பையும் நாட்டிற்கு தரமான அத்தியாவசிய சேவையையும் வழங்குவதில் முன்மாதிரியாகத் திகழ்ந்தனர்.

ஆண்டின் காலப்பகுதியில் எவ்வித தொழில்துறை அமைதியின்மையும் இல்லாமல் ஒரு வருட நல்லிணக்கத்தை அனுபவிப்பதற்கு வேலைப் படையின் மிகப் பெரும்பாலானவர்களைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற பொறியியலாளர்கள் சங்கம் மற்றும் ஏனைய ஒவ்வொரு தொழிற்சங்கத்துடனும் நிறுவனம் நல்லுறவைப் பேணியிருந்தது என்பதை நான் இங்கு குறிப்பிட்டேயாக வேண்டும். பணியின் ஒரு சிறந்த ஆண்டிற்காக ஒன்றிணைந்து பணியாற்றிய அனைத்துத் தொழிற்சங்கங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

எங்கள் துணைக்கம்பனிகளிடமிருந்து கிடைத்த ஆதரவையும் பங்களிப்பையும் அங்கீகரித்துப் பாராட்டாவிடின் நான் எனது கடமையிலிருந்து தவறியவனாவேன். பெரியதோ, சிறியதோ அவை ஒவ்வொன்றும் ஒரு அர்த்தமுள்ள நேர்மறையான வித்தியாசத்தை ஏற்படுத்தியிருந்தன. இறுதியாக, எங்கள் பெரிய சுயாதீன மின்வலு உற்பத்தியாளர்கள் தளத்திலிருந்து கிடைத்த விரிவாக்கப்பட்ட தொடர்ச்சியான தரமான சக்தி வழங்கலை நன்றியுடன் ஏற்றுக் கொள்கின்றேன். இலங்கை மின்சார சபையில் எனது பதவிக் காலத்தை நான் பிரதிபலிக்கையில், 2019 ஆம் ஆண்டான புகழ்பெற்ற பொன் விழா ஆண்டில் இலங்கை மின்சார சபையை வெற்றிகரமாக வழிநடத்துவதில் எனக்கு உதவுவதற்காக பதவி நிலை மற்றும் தராதரம் பாராது தங்களை அர்ப்பணிக்கத் தவறாத எனது பணிப்பாளர்கள் சபை மற்றும் பொது முகாமையாளருக்கு, அவர்கள் என்னிடமும் பணித்தொகுதியின் ஒவ்வொரு அங்கத்தினரிடமும் வைத்த நம்பிக்கைக்கும் பற்றுறுதிக்கும் நான் உண்மையிலேயே நன்றியுள்ளவனாக இருக்கிறேன். இ.மி.ச. இல் உங்களில் பலரை தனிப்பட்ட முறையில் தெரிந்து கொண்டது எனது பாக்கியமாகும். உங்களுடைய நட்புக்கும் உங்களிடமிருந்தும் உங்கள் வேலையிலிருந்தும் நான் கற்றுக் கொள்ளக் கிடைத்த வாய்ப்புகளுக்கும் எனது நன்றிகள். நீங்கள் ஒவ்வொருவரும் தொடர்ந்தும் வெற்றிகளையும் நல்வாழ்வையும் பெற நான் வாழ்த்துகிறேன்.



**திரு. ரஹித ஜயவர்த்தன**
தலைவர்

# பொது முகாமையாளரின் மீளாய்வு

2019 ஆம் ஆண்டிற்கான இ.மி.ச. இன் விற்பனை வருமானம் ரூபா 242.95 பில்லியனாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இது முன்னைய ஆண்டில் விற்பனை வருமானமாகப் பதிவு செய்யப்பட்ட ரூபா 229.57 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூபா 13.38 பில்லியன் அதிகரித்த தொகையாகும்.



இலங்கை மின்சார சபையின் (இ.மி.ச.) பொது முகாமையாளர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி என்ற வகையில் இ.மி.ச. தேசத்திற்கான தனது 50 ஆண்டு கால சேவையைக் கொண்டாடிய ஆண்டான 2019 ஆம் ஆண்டிற்கான இ.மி.ச. இன் செயலாற்றுகை பற்றிய மதிப்பீடு ஒன்றை எழுதுவது எனக்குக் கிடைத்த தனிச் சிறப்புமிக்க பாக்கியமொன்றாகும்.

### செயற்பாடுகள் தொடர்பான செயலாற்றுகை

இ.மி.ச. இன் நோக்கு மற்றும் செயற்பணிக்கு இணங்க, மலிவான விலை ஒன்றில் தரமானதும் நம்பகத்தன்மை வாய்ந்ததுமான மின்சாரம் வழங்கப்பட வேண்டுமென்ற மக்களின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்வது எங்களது பிரதான கடமையாகும். நாட்டில் ஏற்பட்ட வறட்சியான காலநிலை நிலைமைகள் காரணமாக நீர் மின்வலுப் பிறப்பாக்கத்திற்குப் பயன்படுத்தப்படும் நீர்த் தேக்கங்களின் சேமிப்பு குறைவடைந்த போது 2019 ஆம் ஆண்டிற்கான மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்வது இ.மி.ச. இற்கு மிகப்பெரிய சவாலாக இருந்ததுடன் நாளாந்த மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு அனல் அடிப்படையிலான மின்வலுப் பிறப்பாக்கத்தை நாட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

வரலாற்று ரீதியாக, இ.மி.ச. நீர் மின்வலு அடிப்படையிலான மின்சார உற்பத்தியில் அதிகமாகத் தங்கியிருந்தது, ஆயினும் பல ஆண்டுகளாக அதிகரித்து வருகின்ற மின்சாரத்திற்கான கேள்வி மற்றும் நாட்டிலுள்ள நீரியல் வளங்கள் களைந்து போதல் என்பன பொருளாதார ரீதியில் அபிவிருத்தி செய்யக்கூடிய அடுத்த மலிவான வளமான நிலக்கரி மின்வலுப் பிறப்பாக்கத்தின் நடைமுறைப்படுத்தலில் ஏற்படும் தாமதத்துடன் இணைந்தவாறு எரிபொருள் எண்ணெய் அடிப்படையிலான மின்வலுப் பிறப்பாக்கல் தெரிவுகள் பிறப்பாக்கல் கலவையில் குறிப்பிடத்தக்களவு பங்கினை ஆற்றுவதற்கு ஆரம்பித்தன. நாட்டில் கிடைக்கக்கூடிய மீதமுள்ள நீரியல் ஆற்றல்களில், உமா ஓயா நீர் மின்வலு ஆலை (122 MW) மற்றும் விரிநில நீர் மின்வலு ஆலை (35 MW) ஆகியவற்றில் வர்த்தக ரீதியான செயற்பாட்டைத் தொடங்குவதற்கான இ.மி.ச. இன் எதிர்பார்ப்புகள் மேலும் தாமதமடைந்துள்ளதுடன் இந்த ஆலைகள் 2020 ஆம் ஆண்டு வரை வர்த்தக ரீதியான செயற்பாட்டிற்குக் கிடைக்கப்பெற மாட்டாது. மேலும், 2015 ஆம் ஆண்டில் திடீரென இரத்துச் செய்யப்பட்ட சம்பூர் நிலக்கரி மின்வலு ஆலைக்கு மாற்றாக, 2019 ஆம் ஆண்டில் இயக்குவதற்கான அதிகாரம் வழங்கத் திட்டமிடப்பட்ட கெரவலப்பிட்டியில் முன்மொழியப்பட்ட 300 MW இயற்கை எரிவாயு எரிப்பு இணைந்த சுற்று மின்வலு ஆலையையும்கூட 2019 ஆம் ஆண்டின் இறுதிக்குள் ஆரம்பிக்க முடியாதிருந்தது. அது பூர்த்தி செய்யப்பட்டிருப்பின், இந்த ஆலை இலங்கையில் இயற்கை எரிவாயு கிடைக்கும்போது டீசல் எரிப்பு அனல் மின்வலு ஆலைகளுடன் ஒப்பிடுகையில் அடிப்படை சுமை மற்றும் நடுத்தரத் தகுதிப் பிறப்பாக்கத்தை கணிசமானளவு குறைந்த செலவில் வழங்கியிருக்கும். இதனை 2021 இல் செயற்படுத்த முடியும் என்பதைப் பிந்தைய திட்டங்கள் காட்டி நிற்கின்றன.

1990 ஆம் ஆண்டிலிருந்து ஆண்டின் முதல் பாதியில் நீரேந்து பகுதிகளுக்கு இரண்டாவது மிகக் குறைந்த உட்பாய்வுகள் பதிவு செய்யப்பட்ட ஆண்டாக 2019 ஆம் ஆண்டு விளங்குகிறது. ஆண்டின் பிற்பகுதியில் கணிசமான அளவு மழைவீழ்ச்சி பெறப்பட்டிருந்த போதிலும் 2019 ஆம் ஆண்டில் மொத்த நீர் மின்வலுப் பிறப்பாக்கமாக 4,794.5 GWh மாத்திரமே இருந்தது. இது ஆண்டின் காலப்பகுதியில் செய்யப்பட்ட மொத்தப் பிறப்பாக்கத்தில் 30% ஆகும். இந்தக் குறைந்த நீர்மின் பிறப்பாக்கத்திற்கு ஆண்டின் முதல் பாதி காலப்பகுதியில் மிகக் குறைந்தளவான நீர் உட்பாய்வுகள் காணப்பட்டமையே பிரதான காரணமாக இருந்தது. இது பலவீனமான பருவ மழை

# பொது முகாமையாளரின் மீளாய்வு (தொடர்ச்சி)

காரணமாக 900 GWh இற்கும் குறைவானதாக இருந்தது. அதே காரணத்திற்காக, தனியாருக்குச் சொந்தமான சிறிய நீர்மின் ஆலைகளிலிருந்தான பிறப்பாக்கமும்கூட முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2019 ஆம் ஆண்டில் 17.9% குறைவு ஒன்றினைக் காட்டியது.

இந்தச் சூழ்நிலைகளின் கீழ், நாட்டில் தொடர்ச்சியான மின் வழங்கலைப் பேணுவது இ.மி.ச. இற்கு விதிவிலக்கான கடினமான பணியாக மாறியதுடன் நாட்டின் மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு விலையுயர்ந்த டீசல் எரிப்பு மின்வலுவை உற்பத்தி செய்வதைத் தவிர வேறு வழி இருக்கவில்லை. இதன் விளைவாக, இ.மி.ச. இற்குச் சொந்தமான ஆலைகள் (எண்ணெய் மற்றும் நிலக்கரி ஆகிய இரண்டும்) மற்றும் சுயாதீன மின்வலு உற்பத்தியாளர்களின் (IPP) ஆலைகள் ஆகியவற்றிடமிருந்தான அனல் மின்வலுப் பிறப்பாக்கம் 2019 ஆம் ஆண்டில் முறையே 7,498 GWh மற்றும் 2,875 GWh ஆகக் காணப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2019 ஆம் ஆண்டில் IPP மூலமான அனல் மின்வலுப் பிறப்பாக்கம் 65.2% அதிகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். நிலக்கரி மின்வலு ஆலை 2019 ஆம் ஆண்டிற்கு 5,361 GWh இனைப் பங்களிப்புச் செய்ததன் மூலம் பிறப்பாக்கல் செலவுகளைக் குறைக்கத் தனது சிறந்த முயற்சியை மேற்கொண்டிருந்தது. இது 2018 ஆம் ஆண்டைவிட 12.5% உயர்வானதாகும். இது நிலக்கரி மின்வலு நிலையம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து அதனால் ஆண்டொன்றிற்கு அதிகபட்சமாக பதிவு செய்யப்பட்ட மின்வலு உற்பத்தியாகும்.

எங்களது சிறந்த முயற்சிகள் இருந்தபோதும், 2019 மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் கிடைக்கக் கூடியதாக இருந்த பிறப்பாக்கல் கொள்ளளவிற்கும் நுகர்வோர் கேள்விக்கும் இடையிலான இடைவெளியை நிரப்புவதற்கு எங்களால் முடியாமற் போயிருந்ததுடன் 2019 மார்ச் 18 ஆந் திகதி முதல் 2019 ஏப்ரல் 10 ஆந் திகதி வரையான (ஞாயிற்றுக் கிழமைகள் மற்றும் பொது விடுமுறை தினங்கள் தவிர்ந்த) காலப்பகுதியில் சுழற்சி முறையிலான சுமைத் தடங்கல்களை ஏற்படுத்துவதற்கும் நிர்ப்பந்திக்கப்பட்டிருந்தோம். எவ்வாறாயினும், உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலுக்குப் பின்னர், நாட்டின் மின்சாரத் தேவையானது தேசிய மின்தொகுப்பு மீதான அழுத்தத்தைக் குறைத்தது.

2019 ஆம் ஆண்டின் மின்சாரப் பிறப்பாக்கல் கலவையானது நிலக்கரியிலிருந்து 34% ஐயும் நீர் மின்வலுவிலிருந்து (சிறிய நீர்மின் உள்ளிட்ட) 30% ஐயும் எண்ணெய் மின்வலு ஆலைகளிலிருந்து (இ.மி.ச. இற்குச் சொந்தமானதும் IPP யும்) 31% ஐயும் உள்ளடக்கியிருந்ததுடன் மீதி 5% உம் காற்றாலை மற்றும் ஏனைய மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்களால் பங்களிப்புச் செய்யப்பட்டது. முன்னைய ஆண்டில் 15,374 GWh ஆகக் காணப்பட்ட மொத்த சக்திப் பிறப்பாக்கமானது 2019 ஆம் ஆண்டில் 15,922 GWh ஆக இருந்தது. இது 2019 ஆம் ஆண்டில் மின்வலுப் பிறப்பாக்கத்தில் 3.6% அதிகரிப்பைக் காட்டுகிறது. மேலும், 2018 ஆம் ஆண்டில் காணப்பட்ட மொத்த மின்சார நுகர்வான 14,091 GWh உடன் ஒப்பிடுகையில் 2019 ஆம் ஆண்டிற்கான நுகர்வானது 3.7% அதிகரித்து 14,611 GWh இற்கு உயர்ந்திருந்தது.

2019 ஆம் ஆண்டில் மின்சாரப் பிறப்பாக்கத்தின் அலகொன்றிற்கான சராசரிச் செலவு ரூபா 23.29/kWh ஆகப் பதிவு செய்யப்பட்டது. 2018 ஆம் ஆண்டின் சராசரிச் செலவான ரூபா 19.12/kWh ஒப்பிடுகையில் இது 21.8% அதிகரிப்பாகும். இத்தகைய உயர் பிறப்பாக்கல் செலவு இருந்த போதிலும், இ.மி.ச. ஆனது தேசத்திற்காக 2019 ஆம் ஆண்டில் ரூபா 16.63/kWh என்ற சராசரி அலகு விலையில் மின்சாரத்தை வழங்கியிருந்தது. இதுவே இந்த ஆண்டில் மிக உயர்ந்தளவான செயற்பாட்டு நட்டம் பதிவு செய்யப்பட்டமைக்கான பிரதான காரணமாக அமைந்தது.

### நிதிசார்ந்த செயலாற்றுகை

2019 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த நிதி ஆண்டிற்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றின்படி, 2019 ஆம் ஆண்டிற்கான இ.மி.ச. இன் விற்பனை வருமானம் ரூபா 242.95 பில்லியனாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இது முன்னைய ஆண்டில் விற்பனை வருமானமாகப் பதிவு செய்யப்பட்ட ரூபா 229.57 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூபா 13.38 பில்லியன் அதிகரித்த தொகையாகும். இந்த 5.83% வளர்ச்சியானது பிரதானமாக விற்பனை அதிகரிப்பின் விளைவாக ஏற்பட்ட ஒன்றாகும். ஏனெனில் 2014 ஆம் ஆண்டிலிருந்து விதிப்பனவில் எவ்வித திருத்தங்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

மேலும், 2018 இல் 251.96 பில்லியனாகப் பதிவு செய்யப்பட்டிருந்த விற்பனைக் கிரயமானது ரூபா 58.55 பில்லியனால் அதிகரித்து 2019 ஆம் ஆண்டில் ரூபா 310.51 பில்லியனாக அமைந்திருந்தது. விற்பனைக் கிரயத்தின் இந்த 23.24% அதிகரிப்பானது பிரதானமாக நீர் மின்வலுப் பிறப்பாக்கத்தில் காணப்பட்ட வீழ்ச்சி காரணமாக அனல்மின் பிறப்பாக்கத்தில் மேற்கொள்ளப்பட்ட 23.6% அதிகரிப்பின் விளைவாக ஏற்பட்ட ஒன்றாகும். மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் பதிவு செய்யப்பட்ட ரூபா 67.56 பில்லியன் மொத்தப் பற்றாக்குறை ஆனது 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 45.17 பில்லியன் அதிகரிப்பைக் குறிக்கிறது. இந்த அதிகரிப்பு பிரதானமாக 2018 ஆம் ஆண்டில் மொத்தப் பிறப்பாக்கத்தில் 41.5% ஆக இருந்த நீர் மின் பங்களிப்பானது 2019 ஆம் ஆண்டில் 30% ஆக மாத்திரம் காணப்பட்டமை காரணமாக ஏற்பட்ட ஒன்றாகும். ஆண்டின் காலப்பகுதியில் நிலக்கரி மின்வலு ஆலைகள் மேலதிகமாக 12.5% பங்களிப்பினை நல்கியிருந்த போதிலும் மீதித் தேவையானது எரிபொருள் எண்ணெய் ஆலைகளைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட வேண்டியிருந்தது. இது 2018 ஆம் ஆண்டைவிட 38.2% உயர்வானதாகும். எனவே, ஆண்டின் இறுதியில் மொத்தப் படுகடன் ரூபா 334.67 பில்லியனாக அமைந்திருந்தது.

கொள்ளளவுப் பற்றாக்குறை காரணமாக சேமிக்கப்படாத சக்தியின் அளவு 95 GWh என்ற ஓர் உயர் பெறுமானத்தைக் கொண்டிருந்த போதிலும், நுகர்வோர் கணக்குகளின் அதிகரிப்புடன் ஆண்டின் காலப்பகுதியில் இ.மி.ச. ஆனது ஒட்டுமொத்த விற்பனை மற்றும் வருமான வளர்ச்சியினைப் பதிவு செய்திருந்தது. அத்துடன் இ.மி.ச. ஆனது பரிமாற்ற மற்றும் விநியோக இழப்புகளை மேலும் 1.3% இனால் குறைத்து 8.23% இல் பேணியிருந்தது. எவ்வாறாயினும், திரவ எரிபொருள் அடிப்படையிலான அனல்மின் பிறப்பாக்கத்தின் அதிகரித்த பாவனை, நீரேந்து பிரதேசங்களில் கிடைக்கப்பெற்ற குறைந்தளவான மழை வீழ்ச்சி மற்றும் பல வருடங்களாக சீராக்கம் செய்யப்படாத விதிப்பனவுக் கட்டமைப்பு காரணமாக விற்பனை மூலம் போதுமானளவுக்கு வருமானம் ஈட்டப்படாமை போன்ற காரணங்களால் 2019 ஆம் நிதியாண்டின் இறுதியில் ரூபா 85.412 பில்லியன் நிகர நட்டம் ஏற்பட்டிருந்தது.

ஆண்டின் காலப்பகுதியில், ரூபா 26.911 பில்லியன் பெறுமதியான ஆதனம், பொறி மற்றும் உபகரணம் மூலதனச் சொத்துக்களுக்குச் சேர்க்கப்பட்டுள்ள அதே வேளை 2018 இல் மூலதனச் சொத்துக்களுக்கான சேர்ப்பனவாக ரூபா 66.730 பில்லியன் பதிவு செய்யப்பட்டிருந்தது. இந்தச் சேர்ப்பனவுகள் பிரதானமாக பரிமாற்ற மற்றும் விநியோகப் பிரிவுகளின் சொத்துக்களைப் பிரதிபலிக்கின்றன.

மின்சாரப் பிறப்பாக்கம், பரிமாற்றம் மற்றும் விநியோகத்திற்காக இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் (PUCSL) இ.மி.ச. இற்கு ஆறு உரிமங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. நடைமுறையிலுள்ள விதிப்பனவு முறையியல் மற்றும் விதிகளின்படி, பரிமாற்ற உரிமதாரர் ஒவ்வொரு ஆறு மாதத்திற்குமென தொகையளவு வழங்கல் விதிப்பனவையும் (BST) மாதந்தோறும் தொகையளவு வழங்கல் பரிமாற்றக் கணக்கையும் (BSTA) தயாரிப்பதுடன் அது பற்றி PUCSL இற்குத் தெரிவிக்கிறார். 2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பரிமாற்ற உரிமதாரருக்கு ஏற்பட்ட மாதாந்த BSTA நட்டங்கள், 2019 ஆம் ஆண்டின் இறுதியில் இ.மி.ச. இன் நிகர நட்டத்தில் (ரூபா 85.412 பில்லியன்) கணிசமான பங்கைக் கொண்டிருந்தன. விதிப்பனவு முறையியல் மற்றும் விதிகளுக்கு இணங்க, அறிக்கையிடப்பட்ட நட்டங்களைச் சமாளிப்பதற்காக இ.மி.ச. இற்குப் பொருத்தமான விதிப்பனவுச் சீராக்கங்கள் அல்லது மானியங்களை வழங்குவதற்கான பரிந்துரைகளுடன் இந்தத் தகவல்கள் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு உரிய வேளையில் தெரிவிக்கப்பட வேண்டும். 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டம் மற்றும் 2013 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க இலங்கை மின்சார (திருத்தச்) சட்டம் ஆகியவற்றின் கீழ் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட கடமைகளை நிறைவேற்றுவதற்காக இ.மி.ச. இன் உரிமதாரர்களை நிதிசார் ரீதியில் வலுவுள்ளவர்களாக ஆக்குவதற்கு அடுத்த விதிப்பனவுத் திருத்தம் அமுல்படுத்தப்படும் வரை வெளியிடப்பட்டுள்ள இந்த விதிகளைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சரியான நேரத்தில் கடைப்பிடிப்பது முக்கியமானதாகும்.

### தொழில்நுட்பச் செயலாற்றுகை

நாட்டில் வினைத்திறனான, ஒருங்கிணைந்த மற்றும் சிக்கனமான மின்சார வழங்கல் முறைமை ஒன்றை விருத்தி செய்து, பராமரிக்கின்ற தனது செயற்பணியால் உந்தப்பட்ட இ.மி.ச. தனது வாடிக்கையாளர் தளத்தை 146,360 (புதிய வாடிக்கையாளர்கள்) இனால் அதிகரித்திருக்கிறது. இது 2019 ஆம் ஆண்டில் நுகர்வோர்

# பொது முகாமையாளரின் மீளாய்வு (தொடர்ச்சி)

மொத்த எண்ணிக்கையை 6,500,641 ஆக உயர்த்தியுள்ளது. இ.மி.ச. தனது வாடிக்கையாளர்களுக்கு ஆண்டு முழுவதும் நாள் ஒன்றின் 24 மணித்தியாலமும் மின்சாரம் கிடைக்கச் செய்வதற்குச் சகல முயற்சிகளையும் எடுத்திருந்த போதிலும், அதன் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட துரதிஸ்டவசமான சூழ்நிலைகள் 2019 மார்ச் / ஏப்ரல் மாதங்களில் சுழற்சி முறையிலான மின் தடங்கல்களை ஏற்படுத்துவதற்கு இலங்கை மின்சார சபையை நிர்ப்பந்தப்படுத்தின.

இந்தப் பின்னடைவு இருந்த போதிலும், இ.மி.ச. அதன் பரிமாற்ற மற்றும் விநியோக வலையமைப்புகளைத் தொடர்ச்சியாக மேம்படுத்தியது. இதன் விளைவாக தாழ் மின்னழுத்த மார்க்கங்களின் நீளம் 2,294 km இனாலும் புதிய விநியோக உபமின் நிலையங்களின் எண்ணிக்கை 1,660 இனாலும் அதிகரித்திருந்தது. புதிய அநுராதபுரம் - மன்னார் மின் பரிமாற்ற மார்க்கத்தின் அதிகாரம் வழங்கலுடன், 220 kV மேந்தலை பரிமாற்ற மார்க்கங்களின் கம்பி நீளம் 125 km இனால் அதிகரித்தது. 2019 ஆம் ஆண்டில் பரிமாற்றச் சொத்துக்களுக்கான மற்றுமொரு பிரதான சேர்ப்பனவாக இருப்பது கெரவலப்பிட்டிய மின்வலு நிலையம், களனிதிஸ்ஸ மின்வலு நிலையம் மற்றும் கொழும்புத் துறைமுக புதிய உபமின் நிலையம் (L உபமின் நிலையம்) ஆகியவற்றை இணைக்கின்ற 220 kV நிலத்தடி கம்பிவட முறைமையின் பூரணப்படுத்தலாகும். இந்த அபிவிருத்தியானது இ.மி.ச. இன் பரிமாற்ற வலையமைப்புக்கு மொத்தமாக 22 km நீளமான 220 kV நிலத்தடி வடங்களைச் சேர்த்துள்ளது. மன்னார் 220/132 kV மின்தொகுப்பு உபமின் நிலையம், கொழும்பு L 220/132/33 kV மின்தொகுப்பு உபமின் நிலையம் மற்றும் கொழும்பில் இரண்டு வேறு 132/11 kV உள்ளக மின்தொகுப்பு உபமின் நிலையங்கள் என்பவனவும் 2019 ஆம் ஆண்டில் பூரணப்படுத்தப்பட்டன.

இத்தகைய மிகவும் தேவையாகவிருந்த மின் பரிமாற்றச் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு நிதியுதவிகளைத் தொடர்ச்சியாக வழங்கி வருகின்ற ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB), பிரெஞ்சு அபிவிருத்தி முகவராண்மை (AFD) மற்றும் யப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மை (JICA) ஆகியவை உள்ளிட்ட எமக்கு நிதியுதவியளிக்கும் முகவராண்மைகளுக்கு நாங்கள் நன்றியுடையவர்களாக இருக்கின்றோம்.

ஆண்டின் காலப்பகுதியில், மன்னார் காற்றாலை மின்வலுச் செயற்றிட்டம், விரிநில நீர் மின்வலுச் செயற்றிட்டம், உமா ஓயா மற்றும் மொரகொல்ல நீர் மின்வலுச் செயற்றிட்டங்கள் போன்ற பிறப்பாக்கல் கொள்ளளவை விரிவாக்கும் செயற்றிட்டங்கள் தொடர்பான நிருமாண வேலைகள் தொடர்ந்தும் திருப்திகரமான முன்னேற்றத்தைக் காட்டுகின்றன. பசுமை மின்வலு அபிவிருத்தி மற்றும் சக்தி வினைத்திறன் மேம்பாட்டு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் (GDP&EEIIP), தேசிய மின் பரிமாற்ற, விநியோக வலையமைப்பு அபிவிருத்தி மற்றும் சக்தி வினைத்திறன் செயற்றிட்டம் (NTDND&EEP), மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி உறிஞ்சல் பரிமாற்ற அபிவிருத்திச் செயற்றிட்டம் (REATDP), மின்வலு முறைமையின் நம்பகத்தன்மையை வலுப்படுத்தும் செயற்றிட்டம் (PSRSP), தூய சக்தி மற்றும் வலையமைப்பு வினைத்திறன் மேம்பாட்டுச் செயற்றிட்டம் (CE&NEIP) ஆகியவை உள்ளிட்ட பரிமாற்றச் செயற்றிட்டங்களும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டதுடன் அவற்றில் சில செயற்றிட்டங்கள் முடிவுறும் தறுவாயில் உள்ளன.

மரபுசாரா மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி (NCRE) மூலங்களை தேசிய மின்தொகுப்பிற்குச் சேர்ப்பதற்காக அமைக்கப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்ளும் நோக்கிலான வேலைகளை இ.மி.ச. தொடர்ந்தும் முன்னெடுக்கின்ற அதே வேளை அவற்றின் செயலாற்றுகைகளையும் மின்வலு முறைமையின் தரம் மற்றும் நம்பகத்தன்மை மீதான அதன் தாக்கங்களையும் கண்காணித்து, மின்தொகுப்பு விதிக்கோவை மற்றும் விநியோக விதிக்கோவை ஆகியவற்றுக்கு ஏற்ப வினைத்திறனான மற்றும் பயனுறுதிமிக்க வகையில் அத்தகைய தாக்கங்களைத் தணிப்பதற்குப் பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்கிறது.

ஆண்டின் காலப்பகுதியில், கொத்மலை நீர்த்தேக்கம் கையகப்படுத்தப்பட்டு எட்டு ஆண்டுகளுக்குப் பின்னர் அதில் பரிசீலனை வேலைகள் முன்னெடுக்கப்பட்டன. நீர் மின்வலுப் பிறப்பாக்கத்தின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துவதற்காக குக்குளே கங்கை மின்வலு நிலையத்தின் மின்காப்பு அவத்தை மின்னேகி பகுதிகளின் மாற்றீடும்கூட முன்னெடுக்கப்பட்டது.

வாடிக்கையாளர் சேவையில் சிறந்த விளங்குவதற்கான தனது தொடர்ச்சியான முயற்சிகளில், இ.மி.ச. ஆனது 2019 ஆம் ஆண்டு யூன் மாதம் CEB Assist Solutions என்ற இ.மி.ச. இன் மென்பொருள் செயலியின் ஒரு பகுதியாக CEB Care என்ற கையடக்கத் தொலைபேசிச் செயலியை வெற்றிகரமாக அறிமுகப்படுத்தியது. இது வாடிக்கையாளர்களது ஏராளமான முறைப்பாடுகளைத் தீர்ப்பதற்கு வாடிக்கையாளர்களுக்கும் இ.மி.ச. ஊழியர்களுக்கும் வசதியாக அமைந்துள்ளது. 2019 ஆம் ஆண்டின் இறுதியில், iOS மற்றும் அன்ராயிட் இயங்குதளங்களில் CEB Care செயலியானது 80,000 பதிவிறக்கங்களையும் CEB Assist ஆனது 3,200 செயல்நிலை உள்ளக பயனர்களையும் கொண்டிருந்தது.

### மனித வளங்கள்

மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில், இ.மி.ச. அதன் ஊழியர்களின் வேலைச் சூழலை மேம்படுத்துவதற்கும் ஒழுக்கமான, பெருமைமிக்க மற்றும் மனநிறைவான வேலைப்படை ஒன்றைத் தாபிப்பதற்குமென பல நடவடிக்கைகளை எடுத்திருந்தது.

இ.மி.ச. 2019 ஆம் ஆண்டில் மொத்தமாக 718 புதிய ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்திருந்தது. இதனுடன் சேர்த்து 2019 ஆம் ஆண்டின் இறுதியில் இருந்த மொத்த நிரந்தர ஊழியர்களின் எண்ணிக்கை 20,512 ஆகும். 2019 ஆம் ஆண்டில் 100 இற்கும் மேற்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தியதன் மூலம் 3,489 களச் சேவை ஊழியர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக, 87 தொடர் தொழில்சார் அபிவிருத்தி (CPD) நிகழ்ச்சித் திட்டங்களில் 2,656 ஊழியர்கள் பங்குபற்றியிருந்தனர்.

நிறுவனத்தின் பொன்விழாவை முன்னிட்டு அமைச்சின் அலுவலர்கள் மற்றும் இ.மி.ச. இன் ஊழியர்களின் பங்குபற்றலுடன் பல்வேறு சமய, சமூகச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. ஆய்வு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஊழியர்களின் சாதனைகளை ஊக்குவிப்பதற்கும் அங்கீகரிப்பதற்குமென 2017, 2018, 2019 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற புத்தாக்கத்திறன் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான விருது வழங்கும் விழாவும் இந்த ஆண்டு நடத்தப்பட்டது.

### எனது நன்றிகள்

மேலே விபரிக்கப்பட்ட பல தடைகளுக்கும் முகங்கொடுத்து 2019 ஆம் ஆண்டில் இ.மி.ச அதன் செயற்பாடு தொழினுட்ப மற்றும் நிதிசார் செயலாற்றுகைகளை அடைந்தமைக்கு சகல மட்டங்களிலுமுள்ள ஊழியர்களின் அர்ப்பணிப்புக்கு நன்றிகளைத் தெரிவிக்கின்றேன். குறிப்பாக, இ.மி.ச. இன் வரலாற்றில் விதிவிலக்காக அமைந்த கடினமான ஆண்டில் பயணம் செய்த தலைவர் மற்றும் சபை அங்கத்தவர்களால் வழங்கப்பட்ட ஒத்துழைப்பு மற்றும் உதவிகளுக்கு நான் நன்றியுள்ளவனாக இருக்கின்றேன். எனது முன்னோடிகளின் அர்ப்பணிப்பு இல்லாமல் இ.மி.ச. அதன் தற்போதைய நிலையில் இருப்பது மிகவும் கடினமானதாக இருந்திருக்கும், எனவே அவர்களுக்கும் எனது நன்றிகளைப் பதிவு செய்கின்றேன். நிறுவன முகாமைத்துவ அணி தலைமையிலான சகல ஊழியர்களும் இந்த ஆண்டில் இ.மி.ச. இன் சாதனைகளுக்கு பங்களிப்புச் செய்திருந்தனர். அவர்கள் அனைவரும் நன்றியுடன் அங்கீகரிக்கப்படுவதற்குத் தகுதியானவர்கள்.

நாட்டின் ஒவ்வொரு குடிமகனுக்கும் மின்சாரத்தைக் கிடைக்கச் செய்வது என்ற கொள்கையை பேணும் பொருட்டு, இ.மி.ச. நீண்ட கால பிறப்பாக்கல் மற்றும் பரிமாற்றத் திட்டங்களை உரிய நேரத்தில் நடைமுறைப்படுத்த வேண்டும். செயற்றிட்டத் திட்டங்களுக்கு அங்கீகாரம் வழங்குதல், நிதியினை ஒழுங்குபடுத்தல், செயற்றிட்டங்களுக்கு அங்கீகாரம் வழங்குதல், உரிய நேரத்தில் இ.மி.ச. இற்கு அவசியமான விதிப்பனவுச் சீராக்கங்கள் / மானியங்களைப் பரிந்துரைத்தலும் வழங்குதலும் போன்றவற்றிற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் தொடர்ச்சியான ஆதரவு இ.மி.ச. இன் செயற்பாடு, தொழில்நுட்ப மற்றும் நிதிச் செயலாற்றுகைகளை பெரிதும் மேம்படுத்தும். ஆகையால் நிறுவனம் தற்போது எதிர்கொள்கின்ற மிகப்பெரிய சவாலான சூழ்நிலையைச் சமாளிக்க இ.மி.ச. இற்கு உதவுமாறு அனைத்து அதிகாரிகளிடமும் ஒரு தாழ்மையான வேண்டுகோளை விடுத்து நான் நிறைவு செய்கிறேன்.



**பொறியியலாளர் எஸ்.டி.டபிள்யு. குணவர்த்தன**
பொது முகாமையாளர்

# 2019 ஆம் ஆண்டில் இலங்கையின் மின்வலு முறைமை





உத்துறு ஜனனி மின்வலு நிலையம்

செயற்பாட்டு மீளாய்வு

# மின் பிறப்பாக்கல் பிரிவு

# மின் பிறப்பாக்கல் பிரிவு

இலங்கை மின்சார சபைக்குச் சொந்தமான சகல மின்வலு ஆலைகளையும் இயக்கிப் பராமரிப்பது மின் பிறப்பாக்கல் பிரிவாகும். மேலும், தேவையான நேரங்களில் தற்போதிருக்கின்ற மின்வலு ஆலைகளின் புனரமைப்புகளையும் இது மேற்கொள்கின்றது. இப்பிரிவு மொத்தமாக 1,398.9 MW கொள்ளளவைக் கொண்டு நிறுவப்பட்ட நீர் மின்வலு ஆலைகளையும், மொத்தமாக 654 MW கொள்ளளவைக் கொண்டு நிறுவப்பட்ட எண்ணெய் எரிப்பு அனல் மின்வலு ஆலைகளையும், 900 MW கொள்ளளவுடன் நிறுவப்பட்டுள்ள ஒரு நிலக்கரி எரிப்பு மின்வலு ஆலையையும் கொண்டிருக்கிறது. 2019 ஆம் ஆண்டின் இறுதியில் இ.மி.ச. இற்குச் சொந்தமான மின்வலு ஆலைகளில் நிறுவப்பட்டுள்ள மொத்தக் கொள்ளளவு 2,953 MW ஆகும்.

### மின்வலு ஆலைகளின் செயலாற்றுகை

2019 ஆம் ஆண்டானது இரு பருவ மழைகளும் பொய்த்துப் போனதன் காரணமாக மின்சாரப் பிறப்பாக்கத்தின் அடிப்படையில் மகாவலித் தொகுதிக்கு மகிழ்ச்சியான ஓர் ஆண்டாக அமையவில்லை. இத்தகைய விரும்பத்தகாத நிலைமை இருந்த போதிலும், மகாவலித் தொகுதியிலுள்ள மின்வலு ஆலைகள் 1,803.48 GWh மின்சாரத்தைப் பிறப்பிக்கின்ற நிலையில் காணப்பட்டன. இது இ.மி.ச. இன் மொத்த நீர் மின் பிறப்பாக்கத்தில் ஏறத்தாழ 48% ஆகும்.

போவத்தென்ன மின்வலு ஆலை அதன் வருடாந்த திட்டமிடப்பட்ட மின் பிறப்பாக்க இலக்கிற்கும் அதிகமாக மின் பிறப்பாக்கத்தை மேற்கொண்டிருந்த அதே வேளை உக்குவளை மற்றும் மேல் கொத்மலை மின்வலு ஆலைகள் அவற்றின் திட்டமிடப்பட்ட மின் பிறப்பாக்கல் இலக்குகளில் 90% இனை நெருங்கியிருந்தன.

2019 ஆம் ஆண்டின் முதல் பாதியில் குக்குளே கங்கை மிகவும் வறட்சியடைந்த நிலையில் காணப்பட்டதுடன் இதன் விளைவாக ஆலைகளிலிருந்து பிறப்பிக்கப்படும் சக்தியும் கடுமையாக வீழ்ச்சியடைந்தது. எவ்வாறாயினும், ஆண்டின் இரண்டாம் பாதியில் அனுபவிக்கப்பட்ட தொடர் மழைப் பொழிவானது முதல் பாதியில் ஏற்பட்ட பற்றாக்குறையை நிவர்த்தி செய்ததுடன் இறுதியில் வருடாந்த இலக்கான 317 GWh இனையும் தாண்டி இவ்வாண்டில் மொத்தமாக 322 GWh மின்சாரப் பிறப்பாக்கத்தைப் பதிவு செய்ய உதவியது.

2018 – 2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இங்கினியாகலைக்கு வட – கிழக்கு பருவ மழை கணிசமான அளவுக்கு போதுமானதாக இருக்கவில்லை. நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் முன்னைய ஆண்டைப் போலவே தொடர்ந்தும் குறைந்த மட்டத்திலேயே காணப்பட்டது. நீரானது ஆண்டு முழுவதும் மாற்றியமைக்கப்பட்ட கட்டுப்பாடான முறையிலேயே விடுவிக்கப்பட்டது. கடந்த வருடங்களுடன் ஒப்பிடும்போது 2019 ஆம் ஆண்டில் மின்வலுப் பிறப்பாக்கம் ஒப்பீட்டளவில் குறைவானதாகும்.

லக்ஷபான தொகுதியின் எதிர்பார்க்கப்பட்ட வருடாந்தப் பிறப்பாக்கம் 1550 GWh ஆகும். எவ்வாறாயினும், சனவரி தொடக்கம் யூலை வரையிலான காலப்பகுதி வறட்சியாகக் காணப்பட்டது. எனவே, 2019 ஆம் ஆண்டில் லக்ஷபான தொகுதி மூலமான மின்சாரப் பிறப்பாக்கம் எதிர்பார்க்கப்பட்டதைப் போன்று அமையவில்லை.

மின்வலு ஆலைகளின் கிடைப்பனவுக் காரணிகள், ஆலைக் காரணிகள் மற்றும் தவறுகைக் காரணிகள் என்பன கீழே தரப்பட்டுள்ளன.

### நீர் மின்வலு ஆலைகள்

| மின்வலு ஆலை | நிறுவப்பட்ட கொள்ளளவு (MW) | 2019 இல் நிகரப் பிறப்பாக்கம் (GWh) | கிடைப்பனவுக் காரணி (%) | ஆலைக் காரணி (%) | தவறுகைக் காரணி (%) |
|---|---|---|---|---|---|
| **மகாவலித் தொகுதி** | **816.8** | **1,803.48** | | | |
| விக்டோரியா | 210 | 463.23 | 99.80 | 25.26 | 0.49 |
| கொத்மலை | 201 | 376.46 | 99.20 | 19.68 | 1.70 |
| மேல் கொத்மலை | 150 | 378.88 | 99.99 | 28.95 | 0.03 |
| ரந்தெனிகல | 122.6 | 235.48 | 99.53 | 22.16 | 1.53 |
| ரண்தம்பே | 49.5 | 123.79 | 99.67 | 29.25 | 0.80 |
| உக்குவளை | 40 | 161.34 | 99.92 | 46.10 | 0.15 |
| போவத்தென்ன | 40 | 56.94 | 99.65 | 15.68 | 1.54 |
| நில்லம்பே | 3.2 | 7.36 | 99.07 | 25.59 | 3.17 |
| **சமனலத் தொகுதி** | **212.25** | **652.34** | | | |
| சமனலவெவ | 120 | 309.34 | 89.99 | 29.74 | 3.72 |
| குக்குளேகங்கை | 75 | 321.62 | 94.79 | 52.77 | 0.43 |
| உடவளவை | 6 | 9.14 | 42.50 | 26.79 | 23.99 |
| இங்கினியாகல | 11.25 | 12.24 | 97.60 | 12.60 | 9.20 |
| **லக்ஷபான தொகுதி** | **369.8** | **1327.69** | | | |
| பழைய லக்ஷபான கட்டம் I | 28.8 | 259.66 | 99.90 | 52.85 | 0.17 |
| பழைய லக்ஷபான கட்டம் II | 25 | | 99.53 | 57.89 | 0.54 |
| புதிய லக்ஷபான | 116 | 447.64 | 98.58 | 44.09 | 1.58 |
| சமனல | 90 | 374.86 | 97.42 | 47.27 | 1.47 |
| விமலசுரேந்திர | 50 | 113.83 | 95.12 | 26.05 | 2.55 |
| கன்யோன் | 60 | 131.70 | 90.09 | 25.15 | 2.14 |
| **மொத்த நீர்மின்** | **1398.8** | **3783.51** | | | |

அட்டவணை 01 - நீர்மின் பிறப்பாக்கம்

# மின் பிறப்பாக்கல் பிரிவு (தொடர்ச்சி)

### அனல் (எண்ணெய்) மின்வலு ஆலைகள்

| மின்வலு ஆலை | நிறுவப்பட்ட கொள்ளளவு (MW) | உயர்ந்தபட்சமாக கிடைக்கக்கூடிய மொத்தக் கொள்ளளவு (MW) | 2019 இல் பிறப்பாக்கம் செய்யப்பட்ட சக்தி (GWh) | 2019 இல் கிடைப்பனவுக் காரணி (%) | 2019 இல் ஆலைக் காரணி (%) |
|---|---|---|---|---|---|
| சபுகஸ்கந்த - A | 80 | 70 | 248.22 | 89.34 | 42.34 |
| சபுகஸ்கந்த - B | 80 | 72 | 378.05 | 86.81 | 62.52 |
| களனிதிஸ்ஸ CCPP – GT | 110 | 110 | 677.23 | 73.02 | 52.52 |
| களனிதிஸ்ஸ CCPP – ST | 55 | 55 | | 44.81 | 39.01 |
| களனிதிஸ்ஸ GT - 07 | 115 | 115 | 281.31 | 74.63 | 28.32 |
| களனிதிஸ்ஸ Frame V GTT | 80 | 40 | 43.28 | 67.48 | 15.60 |
| உத்துறு ஜனனி | 24 | 22 | 100.92 | 81.00 | 50.00 |
| மிதக்கும் மின்வலு ஆலை | 60 | 62.4 | 357.15 | 84.52 | 67.51 |
| அவசரகால மின்வலு - | | | | | |
| துல்கிரிய | 1x10 | 10 | 16.27 | N/A | 18.79 |
| கொலன்னாவை | 1x20 | 20 | 21.69 | N/A | 12.56 |
| மத்துகம | 1x20 | 20 | 13 | N/A | 7.67 |
| **அனல் (எண்ணெய்) மொத்தம்** | **654** | **596.4** | **2,137.12** | | |

**அட்டவணை 02 – அனல் (எண்ணெய்) பிறப்பாக்கம்**

### அனல் (நிலக்கரி) – லக்விஜய மின்வலு ஆலை

இலங்கையிலுள்ள ஒரேயொரு நிலக்கரி மின்வலு ஆலையான லக்விஜய மின்வலு ஆலையானது (LVPP) 2019 ஆம் ஆண்டில் 5361 GWh மின்சாரத்தை தேசிய மின்தொகுப்பிற்கு வழங்கியுள்ளதுடன் இதுவே இதுவரையான அதன் உயர்ந்தபட்சப் பங்களிப்பாகவும் இருக்கிறது. 2019 ஆம் ஆண்டிற்கான LVPP இன் வருடாந்தக் கிடைப்பனவு 91% ஆகும்.

| | | அலகு 01 | அலகு 02 | அலகு 03 | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| மொத்த சக்தி | GWh | 1,533 | 2,367 | 2,017 | 5,917 |
| அனுப்பப்பட்ட நிகர சக்தி | GWh | 1,381 | 2,150 | 1,830 | 5,361 |
| துணை நுகர்வு | GWh | 152 | 217 | 187 | 556 |
| கிடைப்பனவுக் காரணி | % | 77 | 98 | 96 | 91 |
| கொள்ளளவுக் காரணி | % | 58 | 90 | 77 | 75 |
| நிலக்கரி நுகர்வு | தொன் | 590,238 | 874,217 | 744,411 | 2,208,866 |
| டீசல் நுகர்வு | லீற்றர் | 512,029 | 719,980 | 2,216,168 | 3,448,177 |

அட்டவணை 03 – அனல் (நிலக்கரி) பிறப்பாக்கம்

**2019 ஆம் ஆண்டிற்கான இ.மி.ச. இற்குச் சொந்தமான நீர் மற்றும் அனல் மின்வலு ஆலைகள் ஊடான மொத்த நிகர மின்சாரப் பிறப்பாக்கம் 11,286.1 GWh ஆகும்.**

# மின் பிறப்பாக்கல் பிரிவு (தொடர்ச்சி)

### 2019 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்ட விசேட பராமரிப்பு வேலைகள்

மின் பிறப்பாக்கல் அலகுகள் மற்றும் மின் பிறப்பாக்கல் அலகுகளின் ஏனைய துணை முறைமைகள் ஆகியவற்றின் வழக்கமான பராமரிப்புக்கு மேலதிகமாக, மின் பிறப்பாக்கல் பிரிவில் உள்ள சொத்து முகாமைத்துவ நீர் மின்னியல்/இயந்திரவியல் கிளை, சொத்து முகாமைத்துவ அனல் மின்னியல் / இயந்திரவியல் கிளை, அணைக்கட்டுப் பாதுகாப்பு, சுற்றுச்சூழல் மற்றும் குடியியல் கட்டமைப்புப் பராமரிப்புக கிளை, பாதுகாப்புப் பிறப்பாக்கல் கிளை ஆகிய கிளைகளில் உள்ள ஊழியர்களின் உதவியுடன் தொகுதி வாரியாக பின்வரும் விசேட பராமரிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

### லக்ஷபான தொகுதி

#### லக்ஷபான மின்வலு ஆலை

பழைய லக்ஷபான (OLPS) கட்டம் I இன் மூன்று தனி முனை 11/132 kV மின்மாற்றிகள் மாற்றீடு செய்யப்பட்டன. OLPS இன் மின்மாற்றிப் பாதுகாப்பு அஞ்சல் சுருள்கள் புதிய எண்ணிமையான நுண்மதி இலத்திரனியற் சாதனங்களால் மாற்றீடு செய்யப்பட்டு, பரீட்சிக்கப்பட்டதுடன் அதிகாரமும் அளிக்கப்பட்டது.

#### விமலசுரேந்திர மின்வலு ஆலை

அலகு 01 இயந்திரத்தின் வருடாந்தப் பராமரிப்பு வேலைகள் 2019 இல் பூர்த்தி செய்யப்பட்டன.

#### வால்வு கூட சமிக்ஞை இடைமுகப்படுத்தல்

புனரமைப்பின்போது வால்வு கூட கருவிகள் SCADA முறைமையுடன் இடைமுகப்படுத்தப்படவில்லை. எனவே, தேவையான கருவிகளுடன் வால்வு இடைமுகத்தை இடைமுகப்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. புதிய கருவிகள் மற்றும் UPS முறைமைகள் என்பன 2019 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டதுடன் அலகு 2 இன் வருடாந்தப் பராமரிப்பின்போது ஒருங்கிணைக்கவும் திட்டமிடப்பட்டது.

#### கன்யோன் மின்வலு ஆலை

*கன்யோன் அலகு 2 மின்பிறப்பாக்கி மற்றும் மின்மாற்றி பாதுகாப்பு முறைமையின் மாற்றீடு*

கன்யோன் அலகு 2 இயந்திரத்தின் மின்பிறப்பாக்கி மற்றும் மின்மாற்றிப் பாதுகாப்பு அஞ்சல் சுருள்கள் என்பன புதிய எண்ணிமையான IED களால் மாற்றீடு செய்யப்பட்டன. நிறுவல், IED உள்ளமைவு மற்றும் பரிசோதனைகள் என்பன பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இறுதியான அதிகாரம் வழங்கலானது செயலிழப்பின் கிடைப்பனவைப் பொறுத்து 2020 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.

*மவுசாகலை அணைக்கட்டின் பரிசீலனை*

மவுசாகலை அணைக்கட்டு மற்றும் வெளிப்படையான கட்டமைப்புகள் என்பன லக்ஷபான தொகுதி மற்றும் AMHM கிளை ஊழியர்களின் ஒத்துழைப்புடன் DSE&CSM கிளையின் “காலாந்தர அணைக்கப்பட்டுப் பரிசீலனை நிகழ்ச்சித் திட்டத்தின்” மட்டம் - 3 பரிசீலனையின் கீழ் 2019 அக்டோபர் 18 ஆந் திகதி பரிசீலனை செய்யப்பட்டன.

### மகாவலித் தொகுதி

#### விக்டோரியா மின்வலு ஆலை

*அலகு 02 இயந்திரத்தின் MIV தாங்குருளை தாங்கியின் மாற்றீடு*

முத்திரை அடைப்பு (சீல்) இடப்படுகின்ற மேற்பரப்புகளில் ஏதாவதொரு இடத்தில் ஏற்படும் மிகையான தேய்மானம் மற்றும் விரிசல் காரணமாக 2006 ஆம் ஆண்டில் அலகு 01 மற்றும் அலகு 02 இயந்திரங்களில் உள்ள பிரதான நுழைவாயில் வால்வுகளின் தாங்குருளைத் தாங்கிகள் ஊடாக நீர்க் கசிவு ஏற்படத் தொடங்கியது. அதன் பின்னர் இதனைப் பழுதுபார்ப்பதற்காக பல முயற்சிகள் எடுக்கப்பட்டதுடன் இறுதியாக OEM இன் பின்னுரிமையாளரிடமிருந்து அவற்றைப் பழுதுபார்ப்பதற்குத் தேவையான பாகங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. உள்ளக வசதிகளைப் பயன்படுத்தி இ.மி.ச. இனால் 2019 ஆம் ஆண்டில் அலகு 02 MIV இலுள்ள குறைபாட்டைப் பழுதுபார்ப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

பழுதுபார்ப்பு வேலைகள் 12 வாரங்களுக்கும் மேலாக இடம்பெற்றதுடன் அதில் சில சேவைகள் வெளியாருக்கு வழங்கப்பட்டன. இந்தப் பழுதுபார்ப்பு பூரணமாக வெற்றியளித்ததுடன் வெளியாருக்கான கொடுப்பனவுகள் உட்பட ஏற்பட்ட மொத்தச் செலவு ஏறத்தாழ 3 மில்லியன் ரூபாயாகும்.



பின்னூட்ட மின்னோடியின் தொடுப்பகற்றல்



தாங்குருளைத் தாங்கியைச் செருகுதல்

*விக்டோரியா மின்வலு ஆலையில் அலகு 02 இயந்திரத்தின் MIV விளிம்பு முத்திரை அடைப்பின் (சீல்) மாற்றீடு*

அலகு 02 இயந்திரத்தின் MIV தாங்குருளைத் தாங்கியின் மாற்றீட்டுப் பழுதுபார்ப்புடன் சமாந்தரமாக MIV விளிம்பின் முத்திரை அடைப்பு மற்றும் MIV கழற்றும் மூட்டிலுள்ள முத்திரை அடைப்புகள் என்பனவும் மாற்றப்பட்டன. அலகு 02 இயந்திரத்தின் MIV தற்போது முற்றுமுழுதாகப் புதுப்பிக்கப்பட்ட நிலையில் இருக்கிறது.



பழுதுபார்ப்புக்கு முன்னர் மூடிய நிலையிலுள்ள MIV விளிம்பு



பழுதுபார்ப்புக்கு முன்னர் MIV விளிம்பின் முத்திரை அடைப்பு



விளிம்பு முத்திரை அடைப்பு



முத்திரை அடைப்பைக் கழற்றிய பின்னர் விசையாழிப் பக்கம் இருந்தான பார்வைக் காட்சி

*விக்டோரியா நீர்த்தேக்கத்தின் உள்ளெடுப்புப் பகுதியில் நீர்த்தேக்க மட்டத்தை அளவிடும் முறைமையின் மாற்றீடு*

ஒரு புதிய நீர்த்தேக்க மட்டத்தை அளவிடும் முறைமையானது விக்டோரியா நீர்த்தேக்க மின்வலு உள்ளெடுப்புப் பகுதியில் நிறுவப்பட்டது. இந்த முறைமையில் இருந்து கிடைக்கும் சமிக்ஞைகள் மற்றும் ஏனைய உள்ளெடுப்புக் கட்டுப்பாட்டுச் சமிக்ஞைகள் என்பன தற்போது PLC அடிப்படையிலான நுண்ணலைப் பின்புல மார்க்கம் ஒன்றின் ஊடாக மின்வலு ஆலைக்குத் தெரிவிக்கப்படுகிறது. இ.மி.ச. இன் முறைமைக் கட்டுப்பாட்டு நிலையத்தில் காட்சிப்படுத்துவதற்கான இடைமுகப்படுத்தலுக்கு மின்வலு இல்ல கட்டுப்பாட்டு அறையில் நீர்த்தேக்க நீர் மட்டச் சமிக்ஞை கிடைக்கிறது.

# மின் பிறப்பாக்கல் பிரிவு (தொடர்ச்சி)



நிறுவலுக்கு முன்னரான புதிய CT



நிறுவல் நடைபெறுதல்



நிறுவலின் பின்னர்

### *விக்டோரியா ஆளி முற்றத்தில் மின்னோட்ட மின்மாற்றியின் (CT) மாற்றீடு*

முன்கணிப்புப் பராமரிப்பு முறையின் மூலம் வெளிப்பட்ட மோசமான நிலைமை காரணமாக விக்டோரியா ஆளி முற்றத்தில் இருபத்தி நான்கு (24) மின்னோட்ட மின்மாற்றிகள் மாற்றீடு செய்யப்பட்டன. மாற்றீடு செய்யப்படும்போது, புதிய மின்னோட்ட மின்மாற்றிகளுக்கு தற்போதிருக்கின்ற ஒழுங்கமைப்புகள் பொருந்தக்கூடியவாறு மேற்பொருத்தல் கட்டமைப்புகள், மின்னேகிச் சட்ட இணைப்புகள், ஜம்பர் கம்பிவடங்கள் மற்றும் கம்பிவட இணைப்புகள் என்பனவற்றுக்கும் சில மாற்றங்கள் செய்யப்பட்டன

### *அதிகாரிகம கட்டடத் தளத்தில் ஒரு நீர் பரிகரிப்பு ஆலையின் நிறுவல்*

அதிகாரிகம கட்டடத் தளத்தில் கிடைக்கும் குடிநீரில் கல்சியம் மிக அதிகளவில் காணப்படுவதுடன் அது குடிப்பதற்குப் பொருத்தமற்றதாக இருக்கிறது. இதனால், கட்டடத் தளத்தில் இருப்பவர்கள் குடிநீரைப் பெறுவதில் பல கஷ்டங்களை எதிர்கொண்டிருந்தனர்.

விபரமான ஆய்வு ஒன்றை முன்னெடுத்ததன் பின்னர் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக கட்டடத் தளத்தில் ROR வகை நீர் பரிகரிப்பு ஆலை ஒன்றை அமைக்க முன்மொழியப்பட்டது. நிறுவப்பட்டுள்ள வடிகட்டல் ஆலையானது தற்போது கட்டடத் தளத்திற்கும் அதேபோன்று மின்வலு ஆலைக்கும் குடிநீரை வழங்குகிறது.

## கொத்மலை மின்வலு ஆலை

### கொத்மலை ஆளி முற்றத்தில் புதிய துணை மின்மாற்றியின் நிறுவல்

ஆளிமுற்றத்திற்கு அவசியமற்ற 11/0.4 kV, 500 kVA மின்மாற்றி 1984 இல் நிறுவப்பட்டது. தற்போதுள்ள துணை மின்மாற்றிகளுக்கான உதிரிப்பாகங்கள் இல்லாததாலும் மின்மாற்றியில் சிறியளவான எண்ணெய்க் கசிவு இருந்ததாலும் அதனை மாற்ற முடிவு செய்யப்பட்டது. அதற்கிணங்க, ரூபா 1.5 மில்லியன் செலவில் HV/LV இணைப்புள்ள 11/0.4 kV, 500 kVA, 3 Kid, ONAN மின்மாற்றி கொள்வனவு செய்யப்பட்டு நிறுவப்பட்டது.



கொத்மலை ஆளி முற்றத்தில் புதிய துணை மின்மாற்றியின் நிறுவல்

### *கொத்மலை மின்வலு ஆலையின் உள்ளெடுப்பு வாயில், இழுவை சுரங்க வாயில்கள், எழுச்சி கூடவாயில் மற்றும் கட்டமைப்புகளில் மணல் பதிப்பும் தீந்தை பூசுதலும்*

இந்த வாயில்கள் முப்பது ஆண்டுகளுக்கும் மேற்பட்ட பழமையானவையாக இருப்பதுடன் பழைய தீந்தை பூச்சு முறைமை காரணமாக அரிப்புக்குள்ளாகியும் இருந்தன. இதனால் தீந்தை பூச்சு முறைமையின் ஆயுட்காலம் காலாவதியாகியிருந்ததுடன் உருக்கு மேற்பரப்புகளிலிருந்து தீந்தை எளிதில் கழரக்கூடியதாக இருந்தது. எனவே வாயில்களின் மொத்தப் பரப்பான ஏறத்தாழ 1,350 சதுர மீற்றருக்கும் Sa 2.5 மற்றும் ISO12944-1 என்ற நியமங்களின்படி, மணல் பதிப்பும் தீந்தை பூசுதலும் இடம்பெற்றன.





கொத்மலை மின்வலு ஆலையின் உள்ளெடுப்பு வாயில், இழுவை சுரங்க வாயில்கள், எழுச்சி கூட வாயில் ஆகியவற்றில் மணல் பதிப்பும் தீந்தை பூசுதலும்

# மின் பிறப்பாக்கல் பிரிவு (தொடர்ச்சி)

## சமனல தொகுதி

### சமனலவெவ மின்வலு ஆலை

***சமனலவெவ கட்டுப்பாடு / SCADA புனரமைப்புச் செயற்றிட்டம்***

நீர்மப் போலி கட்டுப்பாட்டு நிரற்படுத்தத்தக்க தர்க்கக் கட்டுப்பாட்டுக் கருவியின் மாற்றீடு 2019 இல் பூர்த்தி செய்யப்பட்டது.

***அலகு 02 மின்பிறப்பாக்கியின் நிலையான தூண்டல் அமைப்பின் மாற்றீடு***

அலகு 02 இன் நிலையான தூண்டல் அமைப்பு 2019 ஆம் ஆண்டில் வெற்றிகரமாக நிறுவப்பட்டு அதிகாரம் வழங்கப்பட்டது.

***தாழ் அமுக்க எண்ணெய் குளிராக்கியின் புதுப்பிப்பு***

தாழ் அமுக்க எண்ணெய் குளிராக்கிகள் இரண்டு இவ்வாண்டில் புதுப்பிக்கப்பட்டு மீள நிறுவப்பட்டன.

### குக்குளே கங்கை மின்வலு ஆலை

***இயந்திரங்களின் வருடாந்தப் பராமரிப்பு***

அலகுகள் மற்றும் அதனோடு இணைந்த முறைமைகளின் வருடாந்தப் பராமரிப்பானது ஆண்டின் முதல் காலாண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டது.



அலகு – 2 இயந்திரத்தின் வருடாந்த பராமரிப்பு வேலை – குக்குளே கங்கை மின்வலு ஆலை

### உடவளவை மின்வலு ஆலை

***மாற்று வழி வாயில்கள் மூலமான ஆதரவுக் கட்டமைப்பின் புனரமைப்பு***

கடந்த காலங்களில் நீர்த்தேக்கத்தில் காணப்பட்ட உயர்ந்த அளவான நீர் மட்டம் காரணமாக அரிப்புக்குள்ளான பகுதிகள் நீருக்கு அடியில் சென்றிருந்ததால் அதிகமாக அரிப்புக்குள்ளான மாற்று வழி வாயிலின் ஆதரவுக் கட்டமைப்புக்கு இணைக்கப்பட்டிருந்த உருக்குக் குழாயைச் சரிசெய்ய முடியவில்லை. எவ்வாறாயினும், இந்த ஆண்டில், இணைப்புச் செய்யப்பட்டிருந்த அந்த உருக்குக் கட்டமைப்பை மாற்றீடு செய்து, பழுதுபார்ப்புகள் உள்ளிட்ட தீந்தை பூசும் நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடிந்திருந்தது



அரிப்புக்குள்ளான உருக்குக் குழாய



உருக்குக் குழாயின் பழுதுபார்ப்பு



மாற்றீடு செய்த புதிய குழாய்



குப்பைகூளத் தட்டின் பழுதுபார்ப்பு

### இங்கினியாகல மின்வலு ஆலை

***சுரங்க நீரை வெளியேற்றிய பின்னரான பரிசீலனையும் பழுதுபார்ப்பும்***



சுரங்க உட்பகுதி

இலங்கை நீர்பாசனத் திணைக்களம் மற்றும் இ.மி.ச. இன் அணைக்கட்டுப் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் அலகு ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் 2019 ஆம் ஆண்டில் சுரங்கத்திலிருந்த நீர் வெளியேற்றப்பட்டு பரிசீலனை முன்னெடுக்கப்பட்டது. சுரங்கத்தின் நிலைமை கண்காணிக்கப்பட்டு சுரங்கத்தின் உட்பகுதியில் உள்வரி உருக்குக் காப்புறையில் புடைப்பாகக் காணப்பட்ட பகுதி பழுதுபார்க்கப்பட்டது



சுரங்க நுழைவு வழி

***வருடாந்தப் பரிசீலனையும் பராமரிப்பும்***

பராமரிப்பின்போது சகல நான்கு பிறப்பாக்கல் அலகுகளும் பரிசீலனை செய்யப்பட்டு துப்புரவு செய்யப்பட்டன. சகல நான்கு பிறப்பாக்கிகளும் 50 வருடங்களுக்கும் மேற்பட்ட பழமையானதாக இருப்பதால், உருக்கி ஒட்டிய இடங்கள் கவனமாகப் பரிசீலிக்கப்பட்டு, துப்புரவு செய்யப்பட்டதுடன் பராமரிப்பு வேலைகளுக்கு முன்னும் பின்னும் மின்காப்புத் தடைத்திறனின் வாசிப்புகளும் பெறப்பட்டன.

# மின் பிறப்பாக்கல் பிரிவு (தொடர்ச்சி)

### அனல்மின் தொகுதி

#### சபுகஸ்கந்த மின்வலு ஆலை

சபுகஸ்கந்த மின்வலு ஆலையானது (SPS) நிலையம் A மற்றும் நிலையம் B என அழைக்கப்படுகின்ற இரண்டு நிலையங்களைக் கொண்டுள்ளது. நிலையம் A ஆனது நான்கு 20 MW டீசல் என்ஜினில் இயங்கும் பிறப்பாக்கல் தொகுதிகளையும் நிலையம் B ஆனது எட்டு 10 MW டீசல் என்ஜினில் இயங்கும் பிறப்பாக்கல் தொகுதிகளையும் கொண்டுள்ளன. இந்த என்ஜின்கள் பராமரிப்புக் காலப்பகுதி தவிர்ந்த ஆண்டு முழுவதும் முறைமைக் கட்டுப்பாட்டு நிலையத்தின் தேவைகளைப் பொறுத்து அடிப்படைச் சுமை அல்லது சுற்றோட்டச் சுமை ஆகியவற்றில் இயங்குகின்றன.

#### *ஆளி முற்றத்தில் 132 kV மின்னோட்ட மின்மாற்றிகளின் மாற்றீடு*



ஆளி முற்றத்தில் CT மாற்றீடு

#### *சுழலூட்டிகளின் மாற்றீடு*

என்ஜின்களின் வினைத்திறனை அதிகரிப்பதற்காக என்ஜின் இல. 06, 08, 09 மற்றும் 10 ஆகியவற்றின் சுழலூட்டிகள் புதிய TCA 66 மாதிரியுடன் மாற்றப்பட்டன.



புதிய TCA 66 சுழலூட்டியின் நிறுவல்

#### *நிலைக்கூறு மற்றும் சுழலியைத் துப்புரவாக்கல்*

உயர் முறுக்கு வெப்பநிலையைக் குறைப்பதற்காக சுழலி வெளியே எடுக்கப்பட்டதன் பின்னர் மின்பிறப்பாக்கி இல. 04 இன் நிலைக்கூறு மற்றும் சுழலி ஆகியவற்றைத் துப்புரவாக்கும் வேலைகள் செய்யப்பட்டன.



மின்பிறப்பாக்கி இல. 04 இன் நிலைக்கூறு முறுக்கு துப்புரவாக்கல்

#### *களனிதிஸ்ஸ மின்வலு ஆலை*

#### *GT 07 மற்றும் Frame V GTs ஆகியவற்றின் பழுதுபார்ப்புகளும் பரிசீலனைகளும்*

KPS இலுள்ள இயந்திரங்கள் நியாயமானளவு பழமையானதாக இருந்த போதிலும், தேவைகளைப் பூர்த்தி செய்யும் நேரத்தில் முறைமைக்கான அவற்றின் பங்களிப்பு மிகவும் குறிப்பிடத்தக்கதாக இருந்தது. இ.மி.ச. இன் முகாமையினது தீர்மானத்தின் மீது, Frame V GTs புனரமைப்புக்காக எடுக்கப்பட்டதுடன் அதில் இரண்டு GTs இன் வேலைகள் பூரணப்படுத்தப்பட்டு 17 MW மற்றும் 18 MW உடன் அவை இயங்குகின்றன. GT இல. 4 ஆனது 2020 மார்ச் முதல் வாரத்தில் அதிகாரமளிப்பட உள்ளதுடன் அதன் பின்னர் GT இல. 5 ஆனது புனரமைப்புக்காக எடுக்கப்படும். Frame V இயந்திரங்களின் முறைமைக்கான உயிர்ப்பு மின்வலுப் பங்களிப்புக்குப் புறம்பாக, வழங்கப்படுகின்ற தொடர்ச்சியான எதிர்வினை மின்வலுப் பங்களிப்பானது முறைமை வோல்ற்றளவு மற்றும் நிலைப்புத்தன்மையைப் பேணுவதில் மிகவும் குறிப்பிடத்தக்க ஒன்றாக இருக்கிறது. கடந்த சில வருடங்களில் GT 07 ஆனது முறைமைத் தேவைகளின் மீது 0.65 தொடக்கம் 0.80 என்ற ஆலைக் காரணியுடன் இயங்கியது. GT 07 இன் SEPA கட்டுப்பாட்டு முறைமையின் மாற்றீடானது 2019 நவெம்பரில் ஆரம்பிக்கப்பட்டதுடன் விரைவில் HGPI முடிவடைந்து அநேகமாக 2020 சனவரியில் அதிகாரம் அளிக்கப்படும்.

KPS Frame V GT1 & GT2 இன் மின்பிறப்பாக்கிப் பாதுகாப்பு அஞ்சல் சுருள்கள் புதிய எண்ணிமையான IED களால் மாற்றீடு செய்யப்பட்டன. நிறுவல், IED உள்ளமைவு, பரிசோதனை, CT பகுப்பாய்வு மற்றும் IED வலுவூட்டல் என்பன பூரணப்படுத்தப்பட்டுள்ளன.

# மின் பிறப்பாக்கல் பிரிவு (தொடர்ச்சி)

**லக்விஜய மின்வலு ஆலை**

***அலகு 01 இன் மட்டம் B முழுமைத் திருத்தம்***

LVPP அலகு 01 மட்டம் B இன் முழுமைத் திருத்த வேலைகள் 2019 நவெம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டன.



அலகு 01 முழுமைத் திருத்தம் - லக்விஜய மின்வலு ஆலை

# மின் பிறப்பாக்கல் பிரிவு (தொடர்ச்சி)

## விசேட புனரமைப்பு மற்றும் செயற்றிட்ட வேலைகள்

### சமனல மின்வலு ஆலையின் புனரமைப்பு

புதிய மின்பிறப்பாக்கிகள் மின்வலு ஆலையின் பிறப்பாக்கல் கொள்ளளவை அண்ணளவாக 15% இனால் அதிகரித்துள்ளன. அதிகரிக்கப்பட்ட வினைத்திறன் மற்றும் குறைக்கப்பட்ட பராமரிப்பு செயலிழப்பு ஆகியவற்றுடன், புதிய அலகுகள் குறைந்தளவான இயக்கம் மற்றும் பராமரிப்புச் செலவில் தேசிய மின்தொகுப்பிற்கு அதிகளவான மின்வலுவை வழங்கும்.

செயற்றிட்டத்தின் பிரதான உதிரிப்பாகங்களுக்கான குறைபாடு அறிவிப்பு காலப்பகுதி 2019 டிசெம்பரில் முடிவடைந்த அதே வேளை பல உதிரிப்பாகங்களுக்குமான குறைபாடு அறிவிப்பு 2020 இற்கு விரிவாக்கம் செய்யப்பட்டது. விரிவாக்கம் செய்யப்பட்ட அரிப்புப் பாதுகாப்பு 2024 இல் காலாவதியாகும். தற்போது செயற்றிட்ட அணியானது ஆவணப்படுத்தலை நிறைவு செய்வதில் ஈடுபட்டுள்ளது.

### விக்டோரியா மின்வலு ஆலை அலகு - 03 நிலைக்கூறினை மாற்றீடு செய்யும் செயற்றிட்டம்

2018 இல் மாற்றீடு செய்யப்பட்ட புதிய நிலைக்கூறுடனும் 2018 மே இல் முன்னெடுக்கப்பட்ட வினைத்திறனான நடவடிக்கைகளாலும் விக்டோரியா அலகு 03 ஆனது 2019 நடுப்பகுதி வரை அதன் குறைபாட்டு அறிவிப்பு காலப்பகுதியில் இயங்கியது. குறைபாட்டு அறிவிப்புக் காலப்பகுதியில், மேல் தாங்குசட்டம் மீதான நுண்தகடுகள் இ.மி.ச இன் கோரிக்கையின்பேரில் மீள ஒழுங்கமைக்கப்பட்டன. இறுதி வரைவுகள், செயற்பாடு மற்றும் பராமரிப்புக் கையேடுகள் என்பன கையளிக்கப்பட்டதுடன் செயற்றிட்டம் 2019 இல் பூர்த்தியடையும் எனக் கருதப்பட்டது.

### லக்விஜய மின்வலு ஆலை நிலக்கரி முற்றத்தின் கையாளும் கொள்ளளவை அதிகரித்தல்

நிலக்கரி இருப்பின் அளவை அதிகரிக்க முடியுமாயின் ஆலையின் நம்பகத்தன்மையை மேலும் மேம்படுத்த முடியுமென நிலக்கரி மின்வலு ஆலை ஒன்றை இயக்குவதில் கடந்த சில வருடங்களில் பெற்றுக் கொள்ளப்பட்ட அனுபவத்தின் வாயிலாகக் கண்டறியப்பட்டது. எனவே, மோசமான காலநிலை, நிலக்கரியைப் பெறுவதிலுள்ள தாமதங்கள் மற்றும் நிலக்கரியைக் கையாளும் முறையில் காணப்படும் பிரச்சினைகள் ஆகியவற்றைத் தவிர்க்கும் பொருட்டு, தற்போதிருக்கின்ற நிலக்கரி முற்றத்தின் நிலக்கரியைக் களஞ்சியப்படுத்தும் மற்றும் கையாளும் திறனை 1.21 MMT ஐப் வழங்கக்கூடியவாறு அதிகரிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

இதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டதுடன் சீன இயந்திரப் பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு 2019 அக்டோபரில் ஒப்பந்தமும் வழங்கப்பட்டது.

### களனிதிஸ்ஸ மின்வலு ஆலையில் Frame V எரிவாயு விசையாழிகளின் புனரமைப்பு

களனிதிஸ்ஸ மின்வலு ஆலையில் உள்ள ஒவ்வொன்றும் 25 MVA கொள்ளளவுகளைக் கொண்ட 35 வருடங்களுக்கும் மேற்பட்ட பழைமையான நான்கு எரிவாயு விசையாழிகள் அலகுகளின் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. மின்னழுத்த (வோல்ற்றளவு) ஒழுங்குபடுத்தல், முறைமையின் நிலைப்புத்தன்மையை அதிகரித்தல் மற்றும் மின்சாரம் தடைப்படும் வேளைகளில் கொழும்பு நகருக்கு மின்சாரத்தை மீளளித்தல் என்பன இச்செயற்றிட்டத்தின் பிரதான அனுகூலங்களாக இனங்காணப்பட்டன. GT01 மற்றும் GT02 என்பன முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் சகல தொடர்புடைய பணிகளும் இ.மி.ச. இன் தொழினுட்பவியலாளர்கள் மற்றும் பொறியியலாளர்களால் கையாளப்பட்டன. விசையாழிகளின் பழுதுபார்ப்பும் மாற்றீடும், பிரதான நுழைவுவழி வளி வடிகட்டிகள் மற்றும் குளிராக்கிகளின் கட்டுருவாக்கங்கள், பாதுகாப்பு மற்றும் AVR இன் கட்டமைவு, நிறுவல் மற்றும் அதிகாரம் வழங்கல், புதிய GIS இற்கான கட்டுப்பாடு மற்றும் இணைப்புக்கான மீள்கம்பியிடல், பழுதுபார்ப்பு, அளவுதிருத்தல் என்பன இந்தச் செயற்றிட்டத்தில் இடம்பெறும் பிரதான விடயங்களாக இனங்காணப்பட்டுள்ளன. இந்தச் செயற்றிட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர், GE மற்றும் MJB போன்ற புகழ்பெற்ற எரிவாயு விசையாழி தயாரிப்பாளர்கள் மற்றும் சேவை வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்பட்டன. எவ்வாறாயினும், அவர்களுடைய விலைமனுக்கள் கிட்டத்தட்ட 7 பில்லியன் ரூபாவாக இருந்தன. இ.மி.ச. இற்கு ரூபா 6 பில்லியனைச் சேமித்து, ரூபா 1 பில்லியனுக்கு இதன் செலவை மட்டுப்படுத்தி இச்செயற்றிட்டத்தை முன்னெடுக்கப் போதுமான இயலுமை இ.மி.ச. இடம் இருந்தது. 4 ஆம் இலக்க இயந்திரத்தின் 90% இற்கும் அதிகமான வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் 5 ஆம் இலக்க இயந்திரத்தின் 25% வேலைகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. 2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் புனரமைக்கப்பட்ட GT 01 மற்றும் 02 ஆகியன நெருக்கடி மிகுந்த வறட்சியான காலப்பகுதியில் முறைமைக்கு 80 GWh இற்கும் அதிகமான மின்சக்தியை வழங்கியிருந்தன.

### உடவளவை மின்வலு ஆலையின் புனரமைப்பு

3 x 2 MW நிறுவப்பட்ட கொள்ளளவைக் கொண்ட உடவளவை மின்வலு ஆலை, உடவளவை நீர்த்தேக்கத்திலிருந்து நீர்பாசன நோக்கங்களுக்காக விடுவிக்கப்படும் நீரிலிருந்து மின்சாரத்தைப் பிறப்பிப்பதற்காக 1968 ஆம் ஆண்டில் கட்டப்பட்டு அதிகாரம் அளிக்கப்பட்டிருந்தது.

அலகு 01 மற்றும் அலகு 02 இன் இயந்திரங்கள் ஆற்றின் இடது கரையிலும் அலகு 03 இன் இயந்திரம் ஆற்றின் வலது கரையிலும் அமைக்கப்பட்டுள்ளன. இடது கரையில் அமைக்கப்பட்டுள்ள அலகு 01 ஆனது 1985 இலிருந்து செயற்பாட்டில் இல்லை. இந்த ஆலையின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட வருடாந்த சக்திப் பிறப்பாக்கம் 8 GWh ஆகும். தொடக்கத்தில் அதிகாரம் அளிக்கப்பட்டதிலிருந்து எவ்வித பெரியளவிலான பழுதுபார்ப்போ அல்லது மாற்றீடோ அல்லது முழுமைத் திருத்தமோ மேற்கொள்ளப்படவில்லை. இதனால், 2019 ஆம் ஆண்டிற்கான பிறப்பாக்கல் செயற்றிட்டங்கள் கிளையின் புனரமைப்புத் திட்டத்தின் கீழ் இந்த ஆலையின் புனரமைப்புக்கு அதியுயர் முன்னுரிமையை அளிக்கத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. உடவளவை மின்வலு ஆலையின் புதுப்பித்தல் மற்றும் நவீனப்படுத்தலுக்கான தொழினுட்ப சாத்தியவள ஆய்வு ஒன்றினை முன்னெடுப்பதற்காகவும் புனரமைப்பு வேலைகளின் நோக்கெல்லையைத் தீர்மானிப்பதற்காகவும் என ஒரு தொழினுட்பக் குழு அமைக்கப்பட்டுள்ளது. தொழினுட்பக் குழுவினால் தயாரிக்கப்பட்ட ஒரு இடைக்கால அறிக்கை இ.மி.ச. இன் முகாமையிடம் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

### இங்கினியாகல மின்வலு ஆலையின் புனரமைப்பு

11.25 MW நிறுவப்பட்ட கொள்ளளவைக் கொண்ட இங்கினியாகல மின்வலு ஆலையானது சேனாநாயக்க சமுத்திரத்திலிருந்து நீர்பாசன நோக்கங்களுக்காக விடுவிக்கப்படும் நீரிலிருந்து மின்சாரத்தைப் பிறப்பாக்கம் செய்வதற்காக இரண்டு கட்டங்களில் 1952 மற்றும் 1962 ஆம் ஆண்டுகளில் கட்டப்பட்டு அதிகாரமளிக்கப்பட்ட ஓர் மின்வலு ஆலையாகும். அன்றிலிருந்து இன்றுவரை இதில் எவ்வித பெரியளவான முழுமைத் திருத்தங்களோ அல்லது புதுப்பித்தல் வேலைகளோ முன்னெடுக்கப்படவில்லை. இது பிறப்பாக்கல் செயற்றிட்டக் கிளையின் புனரமைப்புத் திட்டத்தின் முன்னுரிமைப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இங்கினியாகலை மின்வலு ஆலையின் புதுப்பித்தல் மற்றும் நவீனப்படுத்தலுக்கான தொழினுட்ப சாத்தியவள ஆய்வு ஒன்றினை முன்னெடுப்பதற்காகவும் புனரமைப்பு வேலைகளின் நோக்கெல்லையைத் தீர்மானிப்பதற்காகவும் ஒரு தொழினுட்பக் குழு ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ளது.

# மின் பிறப்பாக்கல் பிரிவு (தொடர்ச்சி)

## முக்கிய நிகழ்வுகள் - 2019 ஆம் ஆண்டு

### பயனுறுதிமிக்க களஞ்சியக் கொள்ளளவை உறுதிப்படுத்துவதற்காக மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தை ஆய்வு செய்தல்

மேல் கொத்மலை நீர்த்தேக்கம் 2011 டிசெம்பர் மாதம் சட்டரீதியாக உடமையாக்கப்பட்டது. அதன் பின்னரான ஏழு வருடச் செயற்பாட்டில் நீர்த்தேக்கம் மற்றும் உள்ளெடுப்பு அணையைப் பரிசோதிக்கும் முதலாவது ஆய்வு இவ்வருடத்தில் முன்னெடுக்கப்பட்டது. நீர்த்தேக்கம் பலவீனமாக இருந்ததுடன், சாத்தியமானவு குறைபாடுகளைக் கண்டறிவதற்காக உள்ளெடுப்பு அணையின் கொங்கிறீற்று மேற்பரப்பும் ஆய்வு செய்யப்பட்டது. எதிர்காலத் தேவைகளுக்காக ஒரு புகைப்பட ஆவணப்படுத்தலும் செய்யப்பட்டது. வண்டல் படிவுகளை மதிப்பிடுவதற்காக ட்ரோன் கமெராவைப் பயன்படுத்தி வான்வழி ஆய்வொன்றும் முன்னெடுக்கப்பட்டது. உள்ளெடுப்பு மற்றும் குப்பைகூளத் தட்டு என்பன பூரணமாகத் துப்புரவு செய்யப்பட்டதுடன் செயற்பாட்டின்போது பல வருடங்களாகச் சேர்ந்திருந்த குப்பைகளும் அகற்றப்பட்டன. இந்த ஆய்வின்போது, உள்ளெடுப்பில் உட்செல்லுகின்ற குப்பைகளின் அளவைக் குறைப்பதற்காக உள்ளெடுப்புப் பகுதியில் குப்பைகளைக் கட்டுப்படுத்தும் முறைமை ஒன்றும் நிறுவப்பட்டது. மேலும், நீர்த்தேக்கக் கரைகளில் நிலச்சரிவு ஏற்படுகின்ற அச்சுறுத்தல்கள் உள்ள இடங்களில் அணைவுப் பலகைகளை நிறுவுவதற்கான சாத்தியத்தை மதிப்பிடுவதற்காக மண் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.


குப்பைகளுக்கு ஊன்று மரையாணிகளின் நிறுவல்


உள்ளெடுப்பு கட்டுப்பாட்டு முறைமையை துப்புரவாக்கல


உள்ளெடுப்பு அணையின் கொங்கிறீற்று மேற்பரப்பு ஆய்வு


நீரோட்டத்திற்கு எதிரான வண்டல் படிவுகள்

### குக்குளே கங்கை மின்வலு ஆலையில் உள்ள மின்பிறப்பாக்கிகளின் மின்காப்பு முனை மின்னேகி (IPB) பகுதிகளின் மாற்றீடு

இந்த மின்வலு ஆலையில், மின்பிறப்பாக்கிகளால் உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் IPB பகுதிகள் ஊடாக மின்பிறப்பாக்கி மின்மாற்றிகள் வரை பரிமாற்றப்படுகிறது. இந்த மின்வலு ஆலையிலுள்ள மின்வலு ஆலைகள் 2003 ஆம் ஆண்டில் அதிகாரமளிக்கப்பட்டன. செயற்படத் தொடங்கி இரண்டு வருடங்களின் பின்னர் அலகு 2 ஆலையின் IPB பகுதியானது மின்பிறப்பாக்கி முனையத்தில் ஏற்பட்ட ஒரு மோசமான தீ காரணமாக செயலிழந்தது. இந்தச் சம்பவத்தின் பின்னர், பன்னிரெண்டு சந்தர்ப்பங்களில் இரு IPB பகுதிகளினதும் பல IPB துண்டங்கள் செயலிழந்தமையானது இயந்திரங்களைச் செயலிழக்கச் செய்திருந்தது. IPB துண்டங்களின் முடிவுப் பகுதிகளில் மின்காப்பு செயலிழக்கின்ற போதெல்லாம் அவை தளத்திலேயே பழுதுபார்க்கப்பட்டு மீளவும் பயன்படுத்தப்பட்டன. சக்தி இழப்பு, இயந்திர செயலிழப்புகள், தீ அபாயங்கள் போன்றவற்றின் தாக்கங்களைக் கருத்திற் கொண்டு, இரண்டு IPB பகுதிகளும் 38.5 மில்லியன் ரூபா செலவில் சிறந்த தரமான பொருளான மோசர் கல்சர் [Moser Galsser (MGC)], சுவிச்சர்லாந்து இனால் மாற்றீடு செய்யப்பட்டது.

வழங்குநரின் ஒரு சோடிப் பொறியியலாளர்களால் ஒரு சுருக்கமான பயிற்சி அளிக்கப்பட்டதன் பின்னர், மின்வலு ஆலையின் ஊழியர்களால் மொத்த நிறுவலும் முற்றிலுமாகச் செய்யப்பட்டமை இ.மி.ச. இன் குறிப்பிடத்தக்க ஒரு சாதனையாகும். இரண்டு IPB பகுதிகளையும் மாற்றீடு செய்ததன் விளைவாக, உயர்ந்தபட்சக் கொள்ளளவு வரை இயந்திரங்களில் சுமையை ஏற்றுவதற்கு இருந்த தடைகள் தளர்த்தப்பட்டன. புதிய IPB களுடன், மின்பிறப்பாக்கிகள் தற்போது அவற்றின் உயர்ந்தபட்ச கொள்ளளவுகள் (37.5 MW) வரை சுமையை ஏற்ற முடியும். புதிய IPB களை நிறுவிய நாளில் இருந்து, சுமையேற்றல் தடைகள் காரணமாக ஏற்பட்ட மேலதிக சக்தி இழப்புகளைத் தற்போது பிடிக்கக்கூடியதாக இருக்கிறது. புதிய IPB களின் நிறுவல் காரணமாக இந்த ஆண்டில் பிடிக்கப்பட்ட சக்தி 3 GWh ஆக இருப்பதுடன் புதிய IPB களை நிறுவுவதற்கு முதலீடு செய்த தொகையானது குறிப்பிடத்தக்களவான அதிக தொகையுடன் ஏற்கனவே வசூலிக்கப்பட்டுள்ளது.


குக்குளேகங்கை மின்வலு ஆலையில் IPB முறைமையின் நிறுவல்

### லக்விஜய மின்வலு ஆலைச் (LVPP) சுற்றுச்சூழலை பாதுகாப்பதில் அடையப்பெற்ற சாதனைகள்

LVPP இன் சுற்றுச்சூழல் சார்ந்த விடயங்களை வினைத்திறனாகவும் பயனுறுதிமிக்க வகையிலும் கையாளும் பொருட்டு LVPP இல் சுற்றுச்சூழல் கண்காணிப்பு அலகு (EMU) 2017 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டது. கடந்த இரண்டு ஆண்டுகளில் EMU இனால் பல தணிப்பு நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் 2019 ஆம் ஆண்டில் அடையப்பெற்ற சாதனைகள் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில் குறிப்பிடத்தக்கவையாக உள்ளன.

# மின் பிறப்பாக்கல் பிரிவு (தொடர்ச்சி)




நிலக்கரி முற்றம் மற்றும் சாம்பல் முற்றம் ஆகியவற்றில் ஈரமான நிலையைப் பேணுதல்

நிலக்கரி / சாம்பல் தூசி என்பது தென் - மேற்கு பருவ மழை காலப்பகுதியில் எழுகின்ற ஒரு பாரிய சுற்றுச்சூழல் பிரச்சினை ஆகும். நீரைத் தெளிப்பதன் மூலம் தூசினை அடக்குதல் மற்றும் காற்றோட்டத்தைக் கட்டுப்படுத்துதல் என்பன சாத்தியமான தீர்வுகளாக அடையாளம் காணப்பட்டிருந்தன. தூசி உருவாவதைத் தணிப்பதற்காக நிலக்கரி முற்றம் மற்றும் சாம்பல் முற்றம் ஆகியவற்றில் தெளிப்பான் முறைமைகள், மூடுபனி ஊதுகுழல்கள், மூடுபனி ஓடங்கள் போன்ற நீர் தெளிப்பு முறைமைகள் நிறுவப்பட்டன. 2019 ஆம் ஆண்டு பருவ காலப்பகுதியில் சகல செயற்பாட்டுப் பகுதிகளிலும் ஈரமான நிலையைப் பேணுவது வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது.




காற்றுத் தடை

நிலக்கரி முற்றத்தின் மேற்குப் புற எல்லை வழியே 450 மீற்றர் தூரத்திற்கு விரிவாக்கப்படும் தற்போதைய காற்றுத் தடுப்புக்கு மேலதிகமாக, நிலக்கரி முற்றத்தின் தெற்கு மற்றும் கிழக்கு எல்லைகளை முன்னிலைப்படுத்தி இன்னுமொரு 1183 மீற்றர் விரிவாக்கச் செயற்றிட்டமானது பூர்த்தி செய்யப்பட்டது. அத்துடன் சாம்பல் முற்றத்தின் மேற்கு எல்லை வழியே ஒரு 460 மீற்றர் நீள காற்றுத் தடையும் தாபிக்கப்பட்டது.



செயற்பாட்டு மீளாய்வு

# மின் பரிமாற்றப் பிரிவு

# மின் பரிமாற்றப் பிரிவு

மின் பரிமாற்றப் பிரிவானது சகல மின்வலு நிலையங்களையும் தழுவியவாறு மின் பரிமாற்ற வலையமைப்பைத் திட்டமிட்டு, செயற்படுத்திப் பராமரிப்பதுடன் தேசிய மின்தொகுப்பிற்கு வழங்கல் செய்யப்பட்ட சகல மின்சாரத்தையும் அதன் முறைமைக் கட்டுப்பாட்டு நிலையத்தின் ஊடாக அனுப்புகிறது. இதற்கு மேலதிகமாக இப்பிரிவானது சகல பிறப்பாக்கல் மற்றும் பரிமாற்றத் தரவுகளையும் காப்பகப்படுத்துவதுடன் வழக்கமான முகாமைத் தகவல்களையும் தயாரிக்கிறது.

2019 ஆம் ஆண்டின் இறுதியில் தற்போதுள்ள மின் பரிமாற்ற முறைமையானது 726 km நீளமான 220 kV மேந்தலை மின் பரிமாற்ற மார்க்கங்களையும், 22 km நீளமான 220 kV நிலத்தடி கம்பி வடங்களையும் 2287 km நீளமான 132 kV மேந்தலை மின் பரிமாற்ற மார்க்கங்களையும் 55 km நீளமான 132 kV நிலத்தடி கம்பி வடங்களையும் அத்துடன் 75 மின்தொகுப்பு உபமின் நிலையங்களையும் கொண்டிருந்தது.

### மின் பரிமாற்றம் மற்றும் பிறப்பாக்கல் திட்டமிடல் கிளை

மின் பரிமாற்றம் மற்றும் பிறப்பாக்கல் திட்டமிடல் கிளையானது நுகர்வோருக்கு நம்பகத்தன்மை வாய்ந்த மற்றும் தரமான மின்சார வழங்கலை உறுதிப்படுத்துவதற்காக நீர்மின், அனல்மின் மற்றும் ஏனைய மீள்புதுப்பிக்கத்தக்க மூலங்களை (காற்று, சூரிய ஒளி, சிறிய நீர்மின் மற்றும் உயிர்த்திணிவு) உள்ளடக்கிய எதிர்கால மின் பரிமாற்ற மற்றும் பிறப்பாக்கல் முறைமை உட்கட்டமைப்பு அபிவிருத்தியை ஆய்வு செய்து திட்டமிடுவதற்குப் பொறுப்பானதாகும்.

### பிறப்பாக்கல் திட்டமிடல் அலகு

குறைந்த செலவிலான நீண்ட காலப் பிறப்பாக்கல் விரிவாக்கத் திட்டம் (LCLTGEP) என்பது முழுத் தேசத்திற்கும் ஒரு மலிவான விலையில் நம்பகத்தன்மை வாய்ந்ததும் தரமானதுமான மின்சார வழங்கலை வழங்குவதற்கு மின்வலுப் பிறப்பாக்கல் உட்கட்டமைப்பு அபிவிருத்தியையும் அதனோடிணைந்த முதலீடுகளையும் முறைப்படி அடையாளங் காண்பதற்காக 20 ஆண்டுகள் என்ற திட்டமிடல் காலப்பகுதியை உள்ளடக்கியதாக ஒவ்வொரு இரண்டு ஆண்டுகளுக்கும் ஒருமுறை பிறப்பாக்கல் திட்டமிடல் அலகினால் தயாரிக்கப்படுகின்ற ஒரு சுழற்சிமுறைத் திட்டமாகும்.

LCLTEGP இனைத் தயாரிக்கும்போது, அரசாங்கக் கொள்கைகள் மற்றும் மின் பரிமாற்ற உரிமதாரருக்கான மின்தொகுப்புக் கோவை ஆகியவற்றைப் பிரதிபலிக்கின்ற இலங்கை தேசிய சக்திக் கொள்கை மற்றும் மூலோபாயங்கள், மின்சாரத் தொழில்துறை பற்றிய இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிற்கான (PUCSL) பொதுக் கொள்கை வழிகாட்டல்கள் போன்ற கொள்கை ஆவணங்கள் பிரதானமாகக் கவனத்திற் கொள்ளப்படுகின்றன.

திட்டமிடல் காலப்பகுதி 2020 - 2039 இற்காகத் தயாரிக்கப்பட்ட வரைவு LCLTGEP இல், நீர்மின், அனல்மின் மற்றும் ஏனைய மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்களின் கலவையுடன் அடுத்த 20 ஆண்டு காலப்பகுதியில் முறைமைக்கு 9675 MW பிறப்பாக்கல் கொள்ளளவை முறைமைக்குச் சேர்க்க எதிர்பார்க்கப்படுகிறது.

நீண்ட காலப் பிறப்பாக்கல் விரிவாக்கத் திட்டத்திற்கு மேலதிகமாக, மின் பரிமாற்ற மற்றும் பிறப்பாக்கல் திட்டமிடல் கிளையானது மின்வலு முறைமையின் பாதுகாப்பான மற்றும் நம்பகத்தன்மை வாய்ந்த செயற்பாட்டினைப் பேணுகின்ற அதே வேளை பிரதானமாக, மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்களை மின்தொகுப்புடன் ஒருங்கிணைப்பதில் காணப்படுகின்ற பிரதான சவால்களை ஆராய்வதற்காக 'மீள்புதுப்பிக்கத்தக்க அடிப்படையிலான மின் பிறப்பாக்கத்தை இலங்கை மின்தொகுப்பினுள் ஒருங்கிணைத்தல் 2020 - 2030' என்ற தலைப்பிலான ஆய்வினை நிறைவு செய்துள்ளது.

இ.மி.ச. இனைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒத்த நிலையினர்/ நாட்டதாரர் நிறுவனம் ஒன்றாக பிறப்பாக்கல் திட்டமிடல் அலகினால் முன்னெடுக்கப்படும் ஏனைய நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் ஆய்வுகள் கீழே தரப்பட்டுள்ளன

- சர்வதேச அணு சக்தி முகவராண்மையின் (IAEA) உதவியுடன் மின்வலு மற்றும் சக்தி அமைச்சு, இ.மி.ச., இலங்கை அணு சக்தி சபை (SLAEB) மற்றும் இலங்கை அணு சக்தி ஒழுங்குபடுத்தல் பேரவை (SLAERC) ஆகியன கூட்டாகச் சேர்ந்து 'இலங்கை கரு மின்வலு நிகழ்ச்சித்திட்டத்திற்கான ஒரு வரைபடத்தைத் தாபித்தல்' என்ற நிகழ்ச்சித்திட்டத்தை ஆரம்பித்தன.
- மகாவலி, விவசாயம், நீர்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சின் கீழான மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம்.
- பாரிஸ் உடன்படிக்கைக்கான (COP21) மின்சாரத் துறை மீது தேசிய ரீதியில் தீர்மானிக்கப்பட்ட பங்களிப்புகள் (NDCs).
- மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி அபிவிருத்தியைக் கருத்திற்கொண்டு உமிழ்வைக் (புகை) குறைப்பதற்கான இ.மி.ச. மற்றும் உலக வங்கி குழுமத்தின் IBRD (மீள்கட்டுமானம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கி) ஆகியவற்றுக்கு இடையிலான காபண் பங்குடமை வசதி (CPF) நிகழ்ச்சித் திட்டம்.
- இலங்கை நிலைபேறான சக்தி அதிகாரசபை மற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் ஆகியவற்றால் நடத்தப்பட்ட தேசிய அளவிலான பொருத்தமான தணிப்பு நடவடிக்கை (NAMA) நிகழ்ச்சித் திட்டம்.
- சுற்றாடல் மற்றும் வன வளங்கள் அமைச்சின் கீழ் காலநிலை மாற்றத் தணிப்பு பற்றிய தேசிய நிபுணத்துவக் குழு .
- சுற்றாடல் மற்றும் வன வளங்கள் அமைச்சின், காலநிலை மாற்றச் செயலகத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட சந்தை ஆயத்தநிலை (PMR) நிகழ்ச்சித் திட்டத்திற்கான பங்குடமை

### மின் பரிமாற்றத் திட்டமிடல் அலகு

மின் பரிமாற்றத் திட்டமிடல் அலகானது பிரதானமாக அங்கீகரிக்கப்பட்ட குறைந்த செலவிலான நீண்ட பிறப்பாக்கல் விரிவாக்கத் திட்டத்தின் அடிப்படையில், நீண்ட கால மின் பரிமாற்ற அபிவிருத்தித் திட்டத்தைத் (LTTDP) தயாரிக்கிறது. திட்டமானது 10 ஆண்டு காலப்பகுதிக்காக ஒவ்வொரு இரண்டு ஆண்டுகளுக்கும் ஒரு முறை மீளாய்வு செய்யப்படுகின்ற சுழற்சி முறைத் திட்டம் ஒன்றாகும்.

LTTDP 2018-2027 ஆனது அங்கீகரிக்கப்பட்ட நீண்ட காலப் பிறப்பாக்கல் விரிவாக்கத் திட்டம் 2018 - 2037 இன் அடிப்படையில் தயாரிக்கப்பட்டு, சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

LTTDP 2018-2027 இல் அடையாளங் காணப்பட்ட மின் பரிமாற்றச் செயற்றிட்ட முன்மொழிவுகள் நிதியளிக்கும் முகவராண்மைகளிடம் சமர்ப்பிக்கப்பட்டன.

பின்வரும் நிருமாணங்கள் "மின்வலு முறைமையின் நம்பகத்தன்மையை வலுப்படுத்தும் செயற்றிட்டம்" (PSRSP) இன் கீழ் 2021 ஆம் ஆண்டு ADB கடன் பொதிக்காக செயல்முறைக்குள்ளாக்கப்பட்டுள்ளது. செயற்றிட்டத்தின் மொத்த மதிப்பீட்டு அடிப்படைக் கிரயம் 196 மில்லியன் அமெரிக்க டொலர் ஆகும்

- ஹம்பாந்தோட்டை - மாத்தறை 85 km, 132 kV மின் பரிமாற்ற மார்க்கம்
- ஹோமாகம 132/ 33 kV மின்தொகுப்பு உபமின் நிலையம்
- கொட்டுகொட 220/ 33 kV மின்தொகுப்பு உபமின் நிலையம்
- திஸ்ஸமகாராம 132/ 33 kV மின்தொகுப்பு உபமின் நிலையம்
- கலவான 132/ 33 kV மின்தொகுப்பு உபமின் நிலையம்
- புதிய ஹபரணை - புதிய அநுராதபுரம் 50 km, 220 kV மின் பரிமாற்ற மார்க்கத்தின் மீள்நிருமாணம்
- நீர்கொழும்பு 132/ 33 kV மின்தொகுப்பு உபமின் நிலையம்
- ஜா-எல 132/ 11 kV மின்தொகுப்பு உபமின் நிலையம்
- பத்தேகம 132/ 33 kV மின்தொகுப்பு உபமின் நிலையம்
- மீரிகம 220 kV ஆளியிடல் நிலையம் மற்றும் கொட்டதெனியாவ 220/ 33 kV மின்தொகுப்பு உபமின் நிலையம்
- எம்பிலிப்பிட்டிய 132/ 33 kV மின்தொகுப்பு உபமின் நிலையத்தின் மேம்படுத்தல்
- கண்டி நகர் 132/ 11 kV மின்தொகுப்பு உபமின் நிலையம்
- வாரியப்பொல 132/ 33 மஏ மின்தொகுப்பு உபமின் நிலையம் மற்றும் வாரியப்பொல - தெற்கு 220/ 132 kV ஆளியிடல் நிலையம்

# மின் பரிமாற்றப் பிரிவு (தொடர்ச்சி)

மேலும், இன்னுமொரு 220 kV நிலத்தடி கம்பிவடச் செயற்றிட்டமானது கெரவலப்பிட்டியில் முன்மொழியப்பட்டுள்ள திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு (LNG) மின்வலு ஆலையிலிருந்து மின்வலுவைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு, 61 மில்லியன் அமெரிக்க டொலர் என்ற மதிப்பிடப்பட்ட அடிப்படைக் கிரயத்துடன் யப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையின் (JICA) நிதியுதவி ஊடாக நடைமுறைப்படுத்தப்படும்.

இந்தியா - இலங்கை HVDC இடையிணைப்பு பற்றிய தொழினுட்ப ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டதுடன் இடையிணைப்பின் நிலைப்புத்தன்மையை மதிப்பிடுவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) உதவியுடன் ஒரு பூரண தொழினுட்ப - பொருளாதார ஆய்வினைச் செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

### பிறப்பாக்கல் அபிவிருத்தி ஆய்வுகள் அலகு

பல்வேறு கட்டங்களிலும் நாட்டின் மேற்குப் பிராந்தியத்திலுள்ள LNG மின்வலு ஆலைகளின் நடைமுறைப்படுத்தலானது அங்கீகரிக்கப்பட்ட நீண்ட கால பிறப்பாக்கல் விரிவாக்கத் திட்டம் 2018 - 2037 இல் அடையாளங் காணப்பட்டுள்ளது. ஏனைய தொடர்புபட்ட அரசாங்க நிறுவனங்களுடன் சேர்ந்து பிறப்பாக்கல் அபிவிருத்தி ஆய்வுகள் அலகானது மேற்படி திட்டமிடப்பட்ட மின்வலு ஆலைகளை நடைமுறைப்படுத்துவதற்கு முத்துராஜவெல பகுதியில் பொருத்தமான காணி ஒன்றை அடையாளம் கண்டுள்ளது. இந்தக் காணியைத் தெரிவு செய்வதில், பல்வேறுபட்ட தொழினுட்பத் தேவைப்பாடுகள் கவனத்திற் கொள்ளப்பட்டன. சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடொன்று முன்னெடுக்கப்பட்டதன் பின்னர் இக்காணி அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. ஏனெனில், இந்தக் காணி சுற்றுச்சூழல் உணர்திறன் மிக்க பிரதேசத்தில் அமைந்துள்ளது. சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆய்வுகள் இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்துடன் இணைந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக, மேற்படி காணியை குத்தகைக்கு எடுப்பதற்கான அங்கீகாரச் செயன்முறை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

“இலங்கையில் கரு மின்வலு நிகழ்ச்சித் திட்டத்திற்கான வரைபடம் ஒன்றைத் தாபித்தல்“ என்ற நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், பிறப்பாக்கல் திட்டமிடல் அலகுடன் இணைந்து பிறப்பாக்கல் அபிவிருத்தி ஆய்வுகள் அலகானது IAEA இன் உதவியுடன் உள்ளூர் அதிகாரிகளின் அறிவை மேம்படுத்துவதற்காக நாட்டதாரர் நிறுவனங்களுக்கு 2019 ஆம் ஆண்டில் நான்கு வேலைப் பட்டறைகளை ஒழுங்கு செய்திருந்தது. இறுதி வெளியீட்டைக் (விளைவு) கொண்ட முற்றுக்கமான அறிக்கை நாட்டதாரர்களின் ஒன்பது உப குழுக்களால் தயாரிக்கப்படுகிறது.

மேலும், பிறப்பாக்கல் அபிவிருத்தி ஆய்வுகள் அலகானது பவுல் முனை நிலக்கரி மின்வலு ஆலை மற்றும் உந்தப்பட்ட சேமிப்பு மின்வலு ஆலைகள் போன்ற ஏனைய எதிர்கால மின்வலு ஆலைகளுக்கான இடங்களை அடையாளங் காண்பதற்குப் பங்களிப்புச் செய்கிறது.

### சக்தி கொள்வனவுகள் கிளை

சக்திக் கொள்வனவுகள் கிளையானது சம்பந்தப்பட்ட மின்வலுக் கொள்வனவு உடன்படிக்கைக்கு (PPA) இணங்க அனல் மற்றும் மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி தனியார் மின்வலு உற்பத்தியாளர்களிடமிருந்து மின்சாரத்தைக் கொள்வனவு செய்கிறது. அனல் அடிப்படையிலான ஆலைகளுக்கான PPAs ஆனது திட்டவட்டமான கால வரையறை ஒன்றுடன் குறித்த செயற்றிட்டத்திற்கு தனித்துவமானதாக இருக்கின்ற அதே வேளை மீள்புதுப்பிக்கத்தக்க அடிப்படையிலான ஆலைகளுக்கான PPAs என்பது 20 ஆண்டுகள் கால வரையறை ஒன்றிற்கான நியமப்படுத்தப்பட்ட மின்வலுக் கொள்வனவு உடன்படிக்கை (SPPA) என அழைக்கப்படுகின்ற நியமப்படுத்தப்பட்ட ஒன்றாகும்.

PPAs இனை நிருவகிப்பது, அதற்கிணங்க சம்பந்தப்பட்ட கொடுப்பனவுகளைச் செய்வது, நிருவாக மற்றும் செயற்பாட்டு ரீதியான சிக்கல்களைக் கையாள்வது என்பன இக்கிளையின் சில பொறுப்புக்கள் ஆகும்.

**2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட மொத்த தனியார் மின்வலுக் கொள்வனவுகளின் ஒப்பீட்டு ரீதியான பொழிப்பு கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.**

(Table Tr-1).

| வகை | 2018 | | | 2019 | | |
|---|---|---|---|---|---|---|
| | ஆலைகளின் எண்ணிக்கை | கொள்ளளவு (MW) | வருடாந்த சக்தி (GWh | ஆலைகளின் எண்ணிக்கை | கொள்ளளவு (MW) | வருடாந்த சக்தி (GWh) |
| சுயாதீன தனியார் மின்வலு உற்பத்தியாளர்கள் (அனல்மின்) | 03 | 533 | 1740 | 06 | 628 | 2875 |
| மரபு சாரா மீள் புதுப்பிக்கத்தக்க சக்தி மின்வலு ஆலைகள் | 230 | 610 | 1830 | 248 | 636 | 1761 |

### அதிகாரமளிக்கப்பட்ட NCRE செயற்றிட்டங்களின் தற்போதைய நிலை

மீள்புதுப்பிக்கத்தக்க சக்தித் துறையை அபிவிருத்தி செய்வதற்காக NCRE கொள்வனவுத் திட்டமானது 1996 இல் ஆரம்பிக்கப்பட்டு தனியார் துறையினர் அனுமதிக்கப்பட்டனர். ஆரம்பத்தில், தவிர்க்கப்பட்ட கிரய அடிப்படையிலான விதிப்பனவு (கட்டணம்) வழங்கப்பட்டதுடன் அது பொருத்தமானவாறு குழு ஒன்றினால் காலத்திற்குக் காலம் திருத்தியமைக்கப்பட்டது. 2008 ஆம் ஆண்டில், கிரய அடிப்படையிலான குறித்த தொழில்நுட்ப மூன்றடுக்கு விதிப்பனவு அறிமுகப்படுத்தப்பட்டதுடன் அதுவும்கூட குழு ஒன்றினால் காலத்திற்குக் காலம் திருத்தி அமைக்கப்பட்டது. NCRE துறையின் அபிவிருத்தியை வரைபட ரீதியில் பின்வருமாறு காட்டலாம். (Figure Tr-1).




Figure Tr.1: NCRE துறையின் அபிவிருத்தி

# மின் பரிமாற்றுப் பிரிவு (தொடர்ச்சி)

NCRE துறை அபிவிருத்தியின் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்கிடையிலான ஓர் ஒப்பீடு கீழ்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது. (Table 2).

| வகை | 2018 இல் அதிகாரம் அளிக்கப்பட்டது | | 2019 இல் அதிகாரம் அளிக்கப்பட்டது | | 2019 ஆம் ஆண்டின் இறுதியில் அதிகாரம் அளிக்கப்பட்ட மொத்தத் தொகை | |
|---|---|---|---|---|---|---|
| | ஆலைகளின் எண்ணிக்கை | கொள்ளளவு (MW) | ஆலைகளின் எண்ணிக்கை | கொள்ளளவு (MW) | ஆலைகளின் எண்ணிக்கை | கொள்ளளவு (MW) |
| சிறிய நீர்மின் | 13 | 40 | 11 | 16 | 206 | 410 |
| உயிர்த் திணிவு | 02 | 11 | 01 | 03 | 13 | 40 |
| காற்றாலை | 0 | 0 | 0 | 0 | 15 | 128 |
| சூரிய ஒளி | 0 | 0 | 06 | 06 | 14 | 57 |
| மொத்தம் | 15 | 51 | 18 | 25 | 248 | 635 |

Table Tr.2: NCRE துறை அபிவிருத்தியின் ஒப்பீடு

### NCRE துறையிலிருந்து தேசிய சக்தித் தேவைக்கான பங்களிப்பு

NCRE செயற்றிட்டங்கள் இலங்கையின் தேசிய சக்தித் தேவைக்கு குறிப்பிடத்தக்களவு பங்களிப்பை வழங்குகின்றன. அரசாங்கமானது NCRE யின் பங்களிப்புக்காக 2015, 2020 மற்றும் 2025 ஆம் ஆண்டுகளுக்குள் அடையப்பட வேண்டியதென சில மைல்கற்களை அமைத்திருக்கிறது. தேசிய சக்திக்கான தேவையில் 10% இனை NCRE துறையின் மூலம் பெறுவது 2015 ஆம் ஆண்டிற்கான மைல்கல்லாக அமைந்திருந்ததுடன் அது ஏற்கனவே அடையப்பட்டும் உள்ளது. இ.மி.ச. 2020 ஆம் ஆண்டிற்கான மைல்கல்லை அடைவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது.

NCRE துறையிலிருந்து கிடைக்கும் வருடாந்த சக்திப் பங்களிப்பு வீதங்கள் பின்வரும் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது. (Figure Tச-2).

### மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி அபிவிருத்தி மற்றும் செயலாற்றுகைக் கண்காணிப்புக் கிளை

RED&PM ஆனது மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி அடிப்படையிலான மின்வலுப் பிறப்பாக்கல் ஆலைகளைத் திட்டமிட்டு, ஆய்வு செய்து, நடைமுறைப்படுத்தி விருத்தி செய்து, அவற்றின் செயற்பாடுகளைக் கண்காணிப்பதுடன் மின்வலு முறைமையின் தரம் மற்றும் நம்பகத்தன்மை மீதான தாக்கங்கள் பற்றி ஆராய்ந்து, மின்தொகுப்புக் கோவை மற்றும் விநியோகக் கோவைக்கு இணங்க, அத்தகைய தாக்கங்களை வினைத்திறனாகவும் பயனுறுதிமிக்க வகையிலும் தணிப்பதற்குப் பொருத்தமான நடவடிக்கைகளையும் பரிந்துரைக்கிறது.

மேலும், இந்தக் கிளையானது விருத்தியாளர்களையும் இலங்கை நிலைபேறான சக்தி அதிகாரசபை, வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கா எனேஜீஸ் (தனி.) நிறுவனம் போன்ற ஏனைய நாட்டதாரர்களையும் ஒருங்கிணைப்புச் செய்கிறது. இந்தக் கிளையின் தொழிற்பாடுகளுக்கான உள்ளீடுகள் மின் பரிமாற்றுப் பரிவிலுள்ள மின் பரிமாற்றம் மற்றும் பிறப்பாக்கல் திட்டமிடல் கிளை, சக்திக் கொள்வனவு மற்றும் முறைமைக் கட்டுப்பாட்டுக் கிளை ஆகியவற்றிலிருந்தும் விநியோகப் பிரிவுகளிலுள்ள திட்டமிடல் மற்றும் அபிவிருத்திக் கிளைகளிலிருந்தும் பெற்றுக் கொள்ளப்படுகின்றன.




Figure Tr-2: NCRE துறையிலிருந்து தேசிய சக்திக்கான பங்களிப்பு

# மின் பரிமாற்றப் பிரிவு (தொடர்ச்சி)

2019 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்றிட்டங்களின் தற்போதைய நிலை கீழே தரப்படுகின்றது.

| மின்வலுவின் மூலம் | அமைவிடம் | கொள்ளளவு | தற்போதைய நிலை |
|---|---|---|---|
| சூரிய ஒளி | வவுணதீவு, மஹியங்கணை, மாகோ, திருகோணமலை, ஹபரணை, எம்பிலிப்பிட்டி மற்றும் அம்பாறை GSS | 7x 1MWp ஒவ்வொன்றும் 49 MWp மொத்தம் | 70 மின்தொகுப்பு உபமின் நிலையங்களில் உள்ள 70 ஆலைகளுக்கான LOI விநியோகிக்கப் பட்டுள்ளதுடன் PPA கைச்சாத்திடுதல் நிலுவையில் உள்ளது. |
| | பல்லேகல, வவுனியா, பன்னல, வாழைச்சேனை, மற்றும் மொணராகலை GSS | 5x 1MWp ஒவ்வொன்றும் 25MWp மொத்தம் | |
| | அநுராதபுரம் | 4x 1MWp ஒவ்வொன்றும் 4MWp மொத்தம் | |
| | காலி, மாத்தறை, மத்துகம மற்றும் பெலியத்த | 3x 1MWp ஒவ்வொன்றும் 12 MWp மொத்தம் | |
| சூரிய ஒளி | வவுணதீவு | 10 MWp | PPA கைச்சாத்திடுதல் நிலுவையில் உள்ளது. |
| சூரிய ஒளி | பொலநறுவை | 10 MWp | PPA கைச்சாத்திடுதல் நிலுவையில் உள்ளது. |
| காற்றாலை/சூரிய ஒளி | பூநகரி | காற்றாலை - 130MW<br>சூரிய ஒளி - 240MW | சுற்றுச்சூழல் சமூகத் தாக்க மதிப்பீடு (ESIA) மற்றும் காணிக் கொள்வனவு என்பன செய்யப்பட்டுள்ளன. |
| சூரிய ஒளி | சியம்பலாந்துவ | 100MW | அடையாளங் காணப்பட்ட காணிக்கான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டை (EIA), SLSEA நடத்தி வருகிறது. |
| சூரிய ஒளி | வெலிகந்த | 30MW | சாத்தியவள ஆய்வு நிறைவு பெற்றுள்ளதுடன் இ.மி.ச. இன் செயற்றிட்டமாக ஆரம்பிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரத்திற்கு காத்திருக்கப்படுகிறது. |
| தனிச்சிறப்பான சக்தித் தொழில்நுட்ப மின்வலு ஆலைகள் | - | - | விலைமனு கோரல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 10 MW சூரிய PV மாத்திரம் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளதுடன் வழங்குவதற்கான அமைச்சரவை அங்கீகாரம் நிலுவையில் உள்ளது. |
| காற்றாலை | மன்னார் - 15MW<br>போலவத்த - 10MW<br>மாதம்பே -10MW<br>கப்பல்துறை - 15MW<br>திருகோணமலை - 10MW | 60MW | 2019 நவெம்பர் 28 இல் விலைமனு கோரி விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. |
| சூரிய ஒளி | - | 150 MW | வரைவு RFP உம் விளம்பரமும் அமைச்சரவை நியமித்த பேச்சுவார்த்தைக் குழுவிடம் (CANC) சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. விலைமனு கோரலை விளம்பரப்படுத்துவதற்கான அங்கீகாரத்திற்கு காத்திருக்கப்படுகிறது. |

### சக்தி சந்தைப்படுத்தல் கிளை

சக்தி சந்தைப்படுத்தல் கிளையானது பிறப்பாக்கல் உரிமதாரர்களிடமிருந்து (GLs) மின்சாரத்தைக் கொள்வனவு செய்து மின் பரிமாற்ற உரிமதாரரின் (TL) சார்பாக LECO உள்ளிட்ட ஐந்து விநியோக உரிமதாரர்களுக்கு (DLs) மின்சாரத்தை விற்பனை செய்வதில் பயனுறுதிமிக்க வகையில் ஈடுபடுகிறது. இது அங்கீகரிக்கப்பட்ட விதிப்பனவு முறையியல் 2015 இற்கு இணங்க, ஒவ்வொரு 6 மாதங்களுக்கும் தொகையளவு வழங்கல் விதிப்பனவின் (BST) சமர்ப்பிப்பு உள்ளிட்ட ஒழுங்குபடுத்தலுடன் தொடர்புடைய வேலை தொடர்பில் இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுடன் (PUCSL) ஒத்துழைத்துச் செயற்படுகிறது.

சக்தி சந்தைப்படுத்தல் கிளையானது ஒவ்வொரு விநியோக உரிமதாரருக்கும் விநியோகிக்கப்பட்ட சக்தியின் அடிப்படையில் விநியோக உரிமதாரர்களுக்கு மாதாந்த விலைப்பட்டியல்களைத் தயாரித்து வழங்குவதற்குப் பொறுப்புடையதாக இருக்கிறது. மின் பரிமாற்ற உரிமதாரர் மற்றும் விநியோக உரிமதாரர் ஆகியோருக்கிடையில் சக்திப் பரிமாற்றங்களை அளவிடும் பொருட்டு, 0.2 என்ற துல்லியத்தன்மையுடன்கூடிய சக்தி மானிகள் எல்லைகளுக்குக் குறுக்கே நிறுவப்பட்டுள்ளன. சகல சக்தி மானிகளும் தொடர்புடைய தேவைப்பாடுகளின் அடிப்படையில் போதுமானளவுக்கு நிரற்படுத்தப் பட்டுள்ளன. சக்தி வாசிப்புகள் தொலைவியக்கத்தின் மூலம் பதிவிறக்கம் செய்யப்படுகின்றன.

GSM அடிப்படையிலான தொடர்பாடலை அடிப்படையாகக் கொண்ட தொலைவியக்க மானித் தொடர்பாடலின் வழமையான வழிமுறைக்கு அப்பால் சென்று, 2018 ஆம் ஆண்டில் சக்தி சந்தைப்படுத்தல் கிளையானது தொடர்பாடல் கிளையுடன் சேர்ந்து இழை வலையமைப்பு வழியாக சகல தொலைவியக்க சக்தி மானிகளையும் இணைப்பதற்கான ஒரு செயற்றிட்டத்தை ஆரம்பித்தது. இச்செயற்றிட்டத்தின் முதல் இரண்டு கட்டங்களும் 2018 ஆம் ஆண்டினுள் பூர்த்தி செய்யப்பட்டதுடன் 40 மின்தொகுப்பு உபமின் நிலையங்களில் உள்ள இணைப்புகள் பூரணப்படுத்தப்பட்டு, கட்டம் 3 ஆனது 2019 இல் பூர்த்தி செய்யப்பட்டது. இணைக்கப்பட்ட மின்தொகுப்புகளின் மானிக் கோப்புகளின் பதிவிறக்கமானது ஆனியகந்த மானி ஆய்வகத்தில் முன்னெடுக்கப்பட்டது.

சக்தி அளவீடுகளின் துல்லியத்தன்மையைப் பேணும் பொருட்டு, வருடாந்த மானிச் சோதனை நடத்தப்படுகிறது. சக்தி அளவீட்டிற்கான CT களின் துல்லியத்தன்மை பற்றிய அக்கறையினால், ஒவ்வொரு விநியோகப் பிரிவிலுமுள்ள PHM அலகுகளுடன் இணைந்து CT களின் சோதனை மற்றும் மாற்றீடானது மேற்கொள்ளப்படுகிறது.

TL இன் சக்திப் பரிமாற்றங்களுக்கான கணக்கிற்காக தொகையளவு வழங்கல் பரிமாற்றக் கணக்கை (BSTA) தயாரிப்பது சக்தி சந்தைப்படுத்தல் கிளைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. GL இடமிருந்து TL இனுடைய சக்திக் கொள்வனவுக்கான கொடுப்பனவு சாட்டுதல் உறுதிச்சீட்டு ஒன்றின் ஊடாகச் செலுத்தப்படுகிறது.

# மின் பரிமாற்றப் பிரிவு (தொடர்ச்சி)

இ.மி.ச. இன் DL களும்கூட சாட்டுதல் உறுதிச்சீட்டின் ஊடாகவே தங்களுடைய சக்திக் கொள்வனவுகளுக்கான கொடுப்பனவைச் செய்கின்ற அதே வேளை LECO ஆனது பண அடிப்படையில் கொடுப்பனவு செய்கிறது.

### முறைமைக் கட்டுப்பாட்டுக் கிளை

தேசிய முறைமைக் கட்டுப்பாட்டு நிலையத்தின் பிரதான நோக்கம், இலங்கை மின்சார வலையமைப்பில் நிகழ் நேரத்திலும் எதிர்கால குறுகிய கால மற்றும் நடுத்தர கால செயற்பாட்டிலும் மின்சாரத்திற்கான வழங்கல் மற்றும் கேள்வியை சமநிலையில் வைத்திருக்கின்ற அதே வேளை குறித்துரைக்கப்பட்ட வலையமைப்பு அளவுருக்களினுள் கிடைக்கக்கூடிய சிறந்த சிக்கனமான பிறப்பாக்கல் திட்டத்துடன் தொடர்ச்சியான, நம்பகரமான மற்றும் தரமான மின்வலு வழங்கலைப் பேணுவதாகும். இந்தப் பிரதான நோக்கத்தை அடையும் பொருட்டு, உத்தம பிறப்பாக்கல் திட்டத்திற்காக பிறப்பாக்கல் தெரிவுகளைப் பகுப்பாய்வு செய்தல், எதிர்பாரா திட்டமிடலுக்காக மின்வலு வலையமைப்பைப் பகுப்பாய்வு செய்தல், பிறப்பாக்கல் நிலையங்கள் மற்றும் மின் பரிமாற்ற வலையமைப்பின் தரவுகளைச் சேகரித்தல், பல்வேறு வலையமைப்புச் செயற்பாட்டு பரமானங்களைப் பகுப்பாய்வு செய்தலும் அறிக்கையிடலும், SCADA / EMS முறைமையைப் பேணுதலும் மேம்படுத்தலும் போன்ற உதவியளித்தல் செயன்முறைகளும் முறைமைக் கட்டுப்பாட்டுக் கிளையினால் ஆற்றப்படுகின்றன. மேலும், உள்வாரியான மற்றும் வெளிவாரியான தரப்புகளால் முன்னெடுக்கப்படுகின்ற இலங்கை மின்வலு வலையமைப்புடன் தொடர்புடைய பல்வேறு கற்கைகளுக்கான உதவி மற்றும் தரவுகளை இக்கிளை வழங்குகிறது.

இக்கிளையானது DGM (முறைமைக் கட்டுப்பாடு) இன் கீழ் தொழிற்படுகின்ற செயற்பாடுகள் திட்டமிடல் அலகு, முறைமைச் செயற்பாடுகள் அலகு, செயற்பாடுகள் கணக்காய்வு அலகு மற்றும் முறைமை மாதிரியமைத்தல் அலகு ஆகியவற்றைக் கொண்டுள்ளது.



Figure Tr-3: முறைமைக் கட்டுப்பாட்டு நிலையம்

புதிய பொல்பிட்டிய GSS இல் SCADA ஒருங்கிணைப்பு, கொழும்பு L, M, N உபமின் நிலையங்கள், களனிதிஸ்ஸ 33 kV GIS (எரிவாயு காப்பிடப்பட்ட உபமின் நிலையம்) மற்றும் கெரவலப்பிட்டிய 33 kV GSS என்பன 2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் முறைமை மாதிரியமைத்தல் அலகினால் வெற்றிகரமாகப் பூரணப்படுத்தப்பட்டன

### மின்வலு முறைமையின் செயலாற்றுகை

2019 ஆம் ஆண்டிற்கான மொத்த மின்சாரப் பிறப்பாக்கம் (நிகர) 15,922.39 GWh ஆக இருந்ததுடன் 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மின்சாரத்திற்கான கேள்வியில் ஏற்பட்டிருந்த வளர்ச்சி 3.57 % ஆகும். 2019 ஆம் ஆண்டிற்கான IPP (சுயாதீன மின்வலு உற்பத்தியாளர்கள்) இடமிருந்தான NCRE (மரபுசாரா மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி) இன் பங்களிப்பு மொத்தப் பிறப்பாக்கத்தில் 10.03 % ஆக இருந்ததுடன் இது 2018 ஆம் ஆண்டின் NCRE பிறப்பாக்கத்தை விட 163.1 GWh குறைவானதாகும். 2019 ஆம் ஆண்டிற்கான வீட்டு மேற்கூரைகளில் பொருத்தப்பட்ட சூரியகலம் மூலம் பிறப்பாக்கம் செய்யப்பட்ட மின்சாரத்தின் பங்களிப்பு மொத்த மின்சாரப் பிறப்பாக்கத்தில் 1.1% ஆகக் காணப்பட்டது. 2019 ஆம் ஆண்டிற்கான மொத்த அனல்மின் பிறப்பாக்கம் 10,377.4 GWh ஆக இருந்ததுடன் அதில் நிலக்கரி மூலமான மின்சாரப் பிறப்பாக்கத்தின் (லக்விஜய மின்வலு ஆலை) பங்களிப்பு 51.66% ஆகக் காணப்பட்டது.

2019 ஆம் ஆண்டில் இ.மி.ச. இற்குச் சொந்தமான ஆலைகளிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட நீர் மின்வலுப் பிறப்பாக்கம் 3783.5 GWh ஆகக் காணப்பட்டது. இது 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 26.53 % குறைவானதாகும். இது பிரதானமாக 2019 ஆம் ஆண்டில் வட - கிழக்கு பருவகால பிற்பகுதி (சனவரி தொடக்கம் பெப்ரவரி) மற்றும் தென் - மேற்கு பருவகாலம் ஆகியவற்றில் மழைப்பொழிவு பொய்த்துப்போனதன் காரணமாக ஏற்பட்ட ஒன்றாகும். இந்த ஆண்டில் NCRE சிறிய நீர்மின் பிறப்பாக்கத்தில் குறைவு ஏற்பட்டமைக்கான காரணமும் இதுவேயாகும்.

2019 ஆம் ஆண்டின் முதல் பாதியில், பிறப்பாக்கல் துறையானது மின்வலுப் பற்றாக்குறை நிலைமையினை எதிர்கொள்ள வேண்டியிருந்ததுடன் முறைமையின் நம்பகத்தன்மையைப் பேணும் பொருட்டு நாடளாவிய ரீதியில் திட்டமிடப்பட்ட மின்வெட்டினை அமுல்படுத்த வேண்டியிருந்தது. மின்வெட்டானது 2019 மார்ச் 18 ஆந் திகதியில் இருந்து ஏப்ரல் 10 ஆந் திகதி வரை அமுல்படுத்தப்பட்டதுடன் அந்தக் காலப்பகுதியில் வழங்கப்படாத சக்தி 95.0 GWh ஆகும்.

**2019 ஆம் ஆண்டிற்கான நிகர சக்தி பிறப்பாக்கல் கலவை**




Figure Tr-4: 2019 ஆம் ஆண்டிற்கான நிகர சக்திப் பிறப்பாக்கல் கலவை

முறைமை இடையூறுகள் அல்லது பிறப்பாக்கல் பற்றாக்குறை காரணமாக 2019 ஆம் ஆண்டில் மொத்த முறைமையாலும் வழங்கப்படாத சக்தி 98.1 GWh ஆகும்.

2019 ஆம் ஆண்டின் உயர்ந்தபட்ச இரவு நேர உச்சளவு மின்சாரப் பாவனை 28-05-2019 ஆந் திகதி 19:15 மணிக்குப் பதிவாகியிருந்ததுடன் அந்த நேரத்திலான மின்சாரப் பிறப்பாக்கம் 2668.7 MW இனை அடைந்திருந்தது. அதே நாளில் காணப்பட்ட பகல் நேர உச்சளவு மின்சாரப் பாவனை 16:00 மணிக்கு 2316.2 MW ஆகப் பதிவாகியிருந்தது.

2019 ஆம் ஆண்டில் உயர்ந்தபட்ச பகல் நேர உச்சளவு மின்சாரப் பாவனை 30-05-2019 ஆந் திகதி 15:45 மணிக்குப் பதிவாகியிருந்ததுடன் அந்த நேரத்திலான மின்சாரப் பிறப்பாக்கம் 2327.3 MW இனை அடைந்திருந்தது.

மிகக் குறைந்த மின்சாரத்திற்கான கேள்வி 28-10-2019 ஆந் திகதி 03:00 மணிக்குப் பதிவாகி இருந்ததுடன் அதன் பெறுமதி 886.6 MW ஆக இருந்தது.

# மின் பரிமாற்றப் பிரிவு (தொடர்ச்சி)




Figure Tr-5: : ஆண்டில் உயர்ந்தபட்ச உச்சளவு மின்சாரப் பாவனை நடைபெற்ற தினத்தில் மணித்தியால ரீதியான மின்சாரப் பிறப்பாக்க அட்டவணை

உயர்ந்தபட்ச நாளாந்தப் பிறப்பாக்கமான 49.12 GWh ஆனது 29-05-2019 இல் பதிவு செய்யப்பட்டதுடன் ஆண்டிற்கான குறைந்தபட்ச நாளாந்தப் பிறப்பாக்கமான 28.06 GWh ஆனது 13-10-2019 இல் பதிவு செய்யப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறான சராசரி நாளாந்தப் பிறப்பாக்கமாக 43.62 GWh பதிவு செய்யப்பட்டிருந்தது.




Figure Tr-6: வருடாந்த உயர்ந்தபட்ச இரவு நேர உச்சபட்ச மின்சாரப் பாவனை நாளின் சுமை வளையிகள் (2016 - 2019)

**நீர்த்தேக்கச் செயலாற்றுகை**

2019 ஆம் ஆண்டு மொத்த நீர்மின் சேமிப்பு 887.6 GWh உடன் ஆரம்பித்தது. இது முறைமையின் முழுமையான சேமிப்பான 1,196.6 GWh இல் 74.2 % ஆகும். 2019 ஆம் ஆண்டின் காலப்பகுதியில் பெறப்பட்ட மொத்த உட்பாய்வு 3,984 GWh ஆக இருந்தது. இதனை சராசரி நிலைக்கு மிக நெருக்கமான ஒரு நிலையாகக் கருதலாம். பதிவு செய்யப்பட்ட குறைந்தபட்ச சேமிப்பு 251.7 GWh (18-07-2019) ஆக இருந்ததுடன் ஆண்டின் இறுதியில் காணப்பட்ட சேமிப்பு 1,077.1 GWh ஆக இருந்தது. இது, 2018 ஆம் ஆண்டின் இறுதியில் காணப்பட்ட சேமிப்புடன் ஒப்பிடுகையில் 21 % அதிகரிப்பாகும்.

1990 ஆம் ஆண்டிலிருந்து இற்றை வரையான காலத்தில் ஆண்டின் முதல் பாதியில் (சனவரி தொடக்கம் யூன் வரை) இரண்டாவது ஆகக்குறைந்த உட்பாய்வு பெறப்பட்ட ஆண்டாக இந்த 2019 ஆம் ஆண்டு காணப்பட்டது. ஆண்டின் இரண்டாவது பாதியில் (யூலை தொடக்கம் டிசெம்பர் வரை) பெறப்பட்ட உட்பாய்வு, சராசரி நிலையைவிட அதிகமாகும். எவ்வாறாயினும், ஆண்டின் இரண்டாவது பாதியில் காணப்பட்ட உட்பாய்வில் 42% ஆனது பருவகாலத்திற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் (அக்டோபர் - நவெம்பர்) பெறப்பட்டதாகும். உயர்ந்தபட்ச சராசரி நாளாந்த உட்பாய்வான 26.7 GWh அக்டோபர் மாத காலப்பகுதியில் பெறப்பட்டது.




Figure Tr-7: 2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மொத்த சேமிப்பு மாறுபாடு

# மின் பரிமாற்றப் பிரிவு (தொடர்ச்சி)

### மின் பரிமாற்றச் சொத்து முகாமைத்துவம் மற்றும் நிலைமைக் கண்காணிப்புக் கிளை

மின் பரிமாற்றப் பிரிவின் சொத்து முகாமைத்துவம் மற்றும் நிலைமைக் கண்காணிப்புக் (AM&CM) கிளையானது சொத்துக்களின் பொருளாதார ஆயுட்காலத்தை உச்சப்படுத்தி, முறைமையின் நம்பகத்தன்மையை அதிகரிக்கின்ற அதே வேளை பயனுறுதிமிக்க செயற்பாட்டினை உறுதிப்படுத்துவதற்காக இ.மி.ச. இன் மின் பரிமாற்ற வலையமைப்பில் உள்ள ஆலைகள் மற்றும் உபகரணத்திலிருந்து உயர்ந்தபட்ச வர்த்தக ரீதியான நன்மைகளை அடைந்து கொள்வதற்குப் பொறுப்பானதாகும். இக்கிளையானது பொருள் முகாமைத்துவ அலகு, பராமரிப்புப் பொறியியல் அலகு மற்றும் பராமரிப்புத் திட்டமிடல் அலகு என மூன்று அலகுகளைக் கொண்டுள்ளது.

AM&CM கிளையானது மின் பரிமாற்றப் பிரிவினுள் சொத்து முகாமைத்துவம் மற்றும் பராமரிப்பு முகாமைத்துவத் தொழிற்பாடுகளை வினைத்திறனான முறையிலும் பயனுறுதிமிக்க வகையிலும் கையாளும் பொருட்டு, கணினிமயப்படுத்தப்பட்ட பராமரிப்பு முகாமைத்துவ முறைமை (CMMS) ஒன்றை அறிமுகப்படுத்தியது. முறைமையானது சொத்துப் பிரிவு, தொக்கு முகாமைத்துவப் பிரிவு, பராமரிப்பு முகாமைத்துவப் பிரிவு மற்றும் சோதனை முகாமைத்துவப் பிரிவு என்ற பிரதான பிரிவுகளுடன் தொகுக்கப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அடையப்பெற்ற பிரதான சாதனைகள்

- 470 மில்லியன் ரூபாவுக்கும் மேற்பட்ட பெறுமதி வாய்ந்த உதிரிப்பாகங்களும் கருவிகளும் கொள்வனவு செய்யப்பட்டன. இதற்கு மேலதிகமாக, கிடைக்கக்கூடிய இருப்புகளிலிருந்து 320 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதியான உதிரிப்பாகங்களுக்கான கோரிக்கைகளை கிளை நேரடியாக வழங்கியுள்ளது. சகல மின்வலு மின்மாற்றிகளினதும் கரைந்த வாயுப் பகுப்பாய்வு (DGA) 100% பூரணப்படுத்தப்பட்டதுடன் ஸ்வீப் அதிர்வெண் துலங்கல் பகுப்பாய்வு (SFRA) மூலம் கைரேகையைப் பெறுவது 75% பூரணப்படுத்தப்பட்டது. மேலும், உபகரணத்திற்கான மேலதிகப் பகுப்பாய்வுக்காக கூடுதல் நிருணயச் சோதனைகள் 13% நிறைவு பெற்றுள்ளன. இதற்கு மேலதிகமாக, ஏனைய கிளைகள் / பிரிவுகளில் (லக்விஜய மின்வலு ஆலை, மிதக்கும் மின்வலு ஆலை, விநியோகப் பிரிவு - 3 மற்றும் மின் பரிமாற்றச் செயற்றிட்டங்கள்) இருந்து வந்த கோரிக்கைகளின் அடிப்படையில் நிலைமைக் கணக்காணிப்புச் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.
- மின் பரிமாற்றப் பிரிவுக்கான கணினிமயப்படுத்தப்பட்ட பராமரிப்பு முகாமைத்துவ முறைமையை (CMMS) நடைமுறைப்படுத்துவது ஆரம்பிக்கப்பட்டது. தற்போது, மரபு ரீதியாக தாள்களில் மேற்கொள்ளப்படுகின்ற பொருள் கோரிக்கையிடல் செயன்முறையானது கணினி அடிப்படையிலான ஒன்லைன் முறைமைக்கு மாற்றப்பட்டுள்ளது. புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட குறியீடல் முறைமைக்கு இணங்க, சகல களஞ்சியப் பொருட்களுக்கும் புதிய குறியீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன.
- மின் பரிமாற்ற வலையமைப்புச் சொத்துக்களின் நிலைமையை அளவிடுவதற்கான முறையியல் ஒன்றை உருவாக்கும் செயற்பாடு நடைபெற்றது. இதன் ஒரு பகுதியாக, மின்வலு மின்மாற்றிகளுக்கான சுகாதாரச் சுட்டெண் (HI) கணிப்பீட்டு முறை வடிவமைக்கப்பட்டதுடன் ஒரு மின்மாற்றி HI தரவுத்தளமும் நடைமுறைப்படுத்தப்பட்டது.
- நியமப்படுத்தல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட வேண்டிய 31.5 MVA, 132/ 33 kV மும்முனை மின்மாற்றிக்கான ஒரு விவரக்குறிப்பு தயாரிக்கப்பட்டதுடன் மின் பரிமாற்ற வலையமைப்பினுள் பயன்படுத்தப்பட வேண்டிய 220 kV மற்றும் 132 kV மின்னோட்ட மின்மாற்றிகளின் நியமப்படுத்தலும் இறுதிப்படுத்தப்பட்டது.

### தொடர்பாடல் கிளை

தொடர்பாடல் கிளையின் பிரதான தொழிற்பாடு, இ.மி.ச. இனுள் தேவையான குரல் மற்றும் தரவுத் தொடர்பாடலை நிறைவேற்றுவதாகும். குரல் மற்றும் தரவுகளை இயக்கி, பராமரித்து, நிருவகிப்பதற்காகவும் பாதுகாப்புச் சமிக்ஞைகளை இயக்கிப் பராமரிப்பதற்காகவும் இந்தக் கிளையின் கீழ் தொடர்பாடல் முறைமைகள் அலகு, தொடர்பாடல் சேவைகள் அலகு மற்றும் டிஜிடல் பொறுப்பு அலகு என்பன தாபிக்கப்பட்டுள்ளன.

தொடர்பாடல் தேவைகளின் ஒவ்வொரு குறிப்பிட்ட வகையையும் நிவர்த்தி செய்வதற்காக தொடர்பாடல் வலையமைப்புகளின் பல்வேறு வகைகளுக்கும் கிளைக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. கீழேயுள்ள தொடர்பாடல் தொழில்நுட்பங்கள் தற்போது செயற்பாட்டில் இருக்கின்றன.

- ஒளியிழை அடிப்படையிலான உடனடித் தொலைபேசி அழைப்பு, மேற்பார்வைக் கட்டுப்பாடு மற்றும் தரவு கையகப்படுத்தல் முறைமை (SCADA), ஜிகாபிற் ஈதர்நெற் வலையமைப்பு மற்றும் நிருவாகக் குரல் முறைமை.
- மின் கம்பி (PLC) மூலமான தொகுப்புத் தொடர் தொலைபேசி முறைமை (PLTS) மற்றும் SCADA
- VHF மற்றும் UHF வானொலித் தொடர்பாடல் முறைமை

இ.மி.ச. இன் ஏனைய பல்வேறு கிளைகளினதும் SCADA மற்றும் வேறு தொடர்பாடல் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு தொடர்பாடல் வலையமைப்பின் விரிவாக்கமானது மின் பரிமாற்ற வலையமைப்புடனான கட்டத்தில் வைத்திருக்கப்படுகிறது. மீளாய்வு செய்யப்படுகின்ற ஆண்டின் காலப்பகுதியில் ஒவ்வொரு அலகினாலும் முன்னெடுக்கப்பட்ட விசேட வேலைகள் கீழே விபரிக்கப்பட்டுள்ளன.

### தொடர்பாடல் முறைமைகள் அலகு

- இ.மி.ச. இன் பல்வேறு கிளைகளினதும் அதிவேக பாதுகாப்பான தரவுத் தொடர்பாடல் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு 1 Gbps பின்புல கொள்ளளவு ஒன்றுடன் இ.மி.ச. இல் தற்போதிருக்கின்ற ஒளியிழை வலையமைப்புக்கு மேலாக ஒரு ஜிகாபிற் ஈதர்நெற் வலையமைப்பின் தாபிப்பு.
- இ.மி.ச. தொடர்பாடல் வலையமைப்பிற்கு 2019 ஆம் ஆண்டின் காலப்பகுதியில் நிருமாணிக்கப்பட்ட GSS இன் தொடர்பாடல் உபகரணத்தின் ஒருங்கிணைப்பும் அதிகாரம் வழங்கலும்.
- தொலைவியக்கச் செயற்பாட்டு இடங்களுடன்கூடிய மின்வலு நிலையத்தின் கட்டுப்பாட்டு அறையின் தொடர்பாடல் தேவைகளை மேம்படுத்துவதற்காக விமலசுரேந்திர PS மற்றும் போவத்தென்ன PS ஆகியவற்றுக்கு ஒளியிழை தொலைத்தொடர்பு உட்கட்டமைப்பை வடிவமைத்தலும் திட்டமிடலும்.
- உபமின் நிலையம் M, உபமின் நிலையம் N மற்றும் உபமின் நிலையம் C மின்தொகுப்பு உபமின் நிலையங்களின் தொலைவியக்கச் செயற்பாட்டிற்கு வசதியளிப்பதற்காக உபமின் நிலையம் L இலிருந்து தரவுத் தொடுப்புகளை உள்ளமைவு செய்தலும் ஒழுங்குபடுத்துதலும்.

# மின் பரிமாற்றப் பிரிவு (தொடர்ச்சி)

**தொடர்பாடல் சேவைகள் அலகு**

- களனிதிஸ்ஸ 220 kV மற்றும் அத்துருகிரிய 132 kV மின்தொகுப்பு உபமின் நிலையங்களில் தொலைவியக்க முனைய அலகுகளின் மேம்படுத்தல்.

**டிஜிடல் பொறுப்பு அலகு**

- செயற்பாடுகள் மற்றும் பராமரிப்பு வேலைகள் அத்துடன் பாதுகாப்பு நோக்கங்கள் ஆகியவற்றுக்கான தொடர்பாடல் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு லக்விஜய மற்றும் குக்குளே கங்கை மின்வலு நிலையங்களில் VHF ஒப்புமை (அனலொக்) மற்றும் டிஜிடல் வானொலித் தொடர்பாடல் முறைமைகளின் நிறுவல்.

- வடக்கு மாகாணம் மற்றும் வட மேல் மாகாணம் ஆகியவற்றில் தொடர்பாடல் உள்ளடக்கப் பரப்பை மேம்படுத்துவதற்காக புதிய VHF நடுப் பட்டை மீட்டுருவாக்கி நிலையங்கள், நிலையான மற்றும் இடம்பெயர் செலுத்திவாங்கிகள் ஆகியவற்றின் நிறுவலும் அதிகாரம் வழங்கலும்.

- முன்மொழியப்பட்டுள்ள சீத்தாவாக்கை கங்கை நீர் மின்வலு நிலையத்தின் தொலைதூரத் தளங்களை உள்ளடக்குவதற்காக களப் பரிசோதனையை முன்னெடுத்தலும் தேவையான UHF தொடர்பாடல் மீட்டுருவாக்கி அமைவிடங்களை அடையாளங் காணலும்.

- பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்ட பொலிஸ் தகவல் மற்றும் தொடர்பாடல் முறைமைச் (PICS) செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு வழிவகுக்கும் பொருட்டு புதிய UHF ஒப்புமை / டிஜிடல் வானொலிகளின் கொள்வனவுக்காக கொழும்புப் பிரதேசத்தில் UHF களச் சோதனைகள் முன்னெடுப்பு.

- வானொலித் தொடர்பாடல் உள்ளடக்கப் பரப்பை விரிவாக்குவதற்காக மேல் கொத்மலை மற்றும் விக்டோரியா மின்வலு நிலையங்களில் புதிய கம்பியில்லா இடையறாத தொடர்பாடல் தொடுப்புகளின் நிறுவல்

**பரிமாற்றக் கட்டுப்பாடு மற்றும் பாதுகாப்புக் கிளை**

பரிமாற்றக் கட்டுப்பாடு மற்றும் பாதுகாப்புக் கிளையானது இ.மி.ச. இன் மின் பரிமாற்ற வலையமைப்பின் கட்டுப்பாடு மற்றும் பாதுகாப்பு முறைமைக்குப் பொறுப்புடையதாகும். இது மூன்று அலகுகளைக் கொண்டுள்ளது் பாதுகாப்பு அபிவிருத்தி (PD) அலகு, பாதுகாப்பு முறைமைகள் (PS) அலகு மற்றும் உபமின் நிலைய தன்னியக்க முறைமைகள் (SAS) அலகு. ஒவ்வொரு அலகினதும் பிரதான பொறுப்புகள் கீழே தரப்படுகின்றன்

PD அலகு - மின் பரிமாற்ற உபகரணத்தின் செயலிழப்புப் பகுப்பாய்வு, பாதுகாப்பு அமைப்புக் கணிப்பீடு, வடிவமைப்பு மீளாய்வு மற்றும் புதிய மின்தொகுப்பு உபமின் நிலையங்களின் பாதுகாப்புத் திட்டங்களுக்குச் சான்றளித்தல் மற்றும் அதிகாரம் வழங்கல் போன்றவை.

PS அலகு - C&P தொடர்பான சீர்குலைவுகளைக் கவனித்தல், C&P அஞ்சல் சுருள்களின் வழக்கமுறையான பராமரிப்பு, அஞ்சல் சுருள் அமைப்பை நடைமுறைப்படுத்தலும் இரண்டாம்நிலைச் சோதனையும், முதன்மை உட்செலுத்தல்கள், இ.மி.ச. செயற்றிட்டங்களிலுள்ள C&P திட்டங்களின் அதிகாரம் வழங்கல் போன்றவை.

SAS அலகு - மின்தொகுப்பு உபமின் நிலையங்களில் உள்ள உபமின் நிலைய தன்னியக்க முறைமைகளின் பராமரிப்பு, புதிய நுழைவு வழிகளை (bays) ஒருங்கிணைப்பதற்காக தற்போதிருக்கின்ற SAS இனை மாற்றியமைத்தல், புதிய மின்தொகுப்பு உபமின் நிலையங்களின் SAS முறைமையின் கம்பி இழுத்தல் மீளாய்வும் சான்றளித்தலும் போன்றவை.

2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மின் பரிமாற்றக் கட்டுப்பாடு மற்றும் பாதுகாப்புக் கிளையினால் நிறைவு செய்யப்பட்ட பிரதான பணிகள் கீழே தரப்பட்டுள்ளன:

- 220 kV மற்றும் 132 kV மின் பரிமாற்ற மார்க்கங்கள், மின்னேகிச் சட்டங்கள், மின்வலு மின்மாற்றிகள் மற்றும் 33 kV ஊட்டிகள் என்பவற்றுக்கான பாதுகாப்பு அமைப்பு நியமங்கள் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டன.

- நியம விலைமனு ஆவணத்தின் கட்டுப்பாடு மற்றும் பாதுகாப்பு உபகரணத்திற்கான விவரக்குறிப்பானது புதிய பாதுகாப்புத் தத்துவத்தின்படி முழுமையாக இற்றைப்படுத்தப்பட்டது.

- பாதுகாப்பு அமைப்புக் கணிப்பீடு மற்றும் தரவுத்தள முகாமையை முன்னெடுக்கும் பொருட்டு சொத்து முகாமைத்துவத்தை ஒருநிலைப்படுத்துவதற்காக DIgSILENT StationWare என்ற மென்பொருள் முறைமை நடைமுறைப்படுத்தப்பட்டது.

கிளையின் பிரதான தொழிற்பாடுகளில் ஒன்றாக இருப்பது மின் பரிமாற்ற விரிவாக்கம் மற்றும் புனரமைப்புச் செயற்றிட்டங்களுக்கான உதவி மற்றும் ஆலோசனைகளை வழங்குவதாகும். இது புதிய மற்றும் புனரமைப்புச் செயற்றிட்டங்களுக்கான கட்டுப்பாடு, பாதுகாப்பு முறைமை மற்றும் உபமின் நிலைய தன்னியக்க முறைமையின் (SAS) நோக்கம் ஆகியவற்றை அடையாளங் காணல், தொழினுட்ப விவரக்குறிப்புகளைத் தயாரித்தல், பாதுகாப்பு அமைப்புக் கணிப்பீடுகள் மற்றும் ஒப்பந்தகாரர்களால் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுப்பாடு, பாதுகாப்பு மற்றும் SAS திட்டங்களைச் சரிபார்த்து அங்கீகரித்தல் ஆகியவற்றை உள்ளடக்குகிறது. இதற்கு மேலதிகமாக, இந்தக் கிளை மின் பரிமாற்றம் மற்றும் பிறப்பாக்கல் செயற்றிட்டங்களிலுள்ள பாதுகாப்புத் திட்டங்களை பயனர் ஏற்றுக் கொள்வதற்கு சான்றளிப்பு அதிகாரம் வழங்குகிறது. 2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பின்வரும் அதிகாரம் வழங்கல் வேலைகள் கவனிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டன.

- பாரிய கொழும்பு மின் பரிமாற்றம் மற்றும் விநியோக இழப்பைக் குறைக்கும் செயற்றிட்டத்தின் கீழ், கொழும்பு L, கொழும்பு M மற்றும் கொழும்பு N ஆகியவற்றின் கட்டுப்பாடு, பாதுகாப்பு மற்றும் உபமின் நிலைய தன்னியக்க முறைமை (SAS) உபகரணம், மற்றும் கெரவலப்பிட்டிய 220 kV GIS, களனிதிஸ்ஸ 220 kV GIS, கொழும்பு E, கொழும்பு F, கொலன்னாவை 132 kV GIS ஆகியவற்றிலுள்ள அவற்றின் தொலைவியக்க முடிவு நுழைவுவழிகள் ஆகியவற்றின் அதிகாரம் வழங்கல்.

- களனிதிஸ்ஸயில் புதிதாக நிறுவப்பட்ட 33 kV GIS மற்றும் கொழும்பு A & I உபமின் நிலையத்தில் புதிதாக நிறுவப்பட்ட 132/ 11 kV மின்மாற்றிகள் ஆகியவற்றின் கட்டுப்பாடு மற்றும் பாதுகாப்பு முறைமைகளின் அதிகாரம் வழங்கல்.

- பசுமை மின்வலு அபிவிருத்தி மற்றும் சக்தி வினைத்திறன் மேம்பாட்டுச் செயற்றிட்டம் பொதி 2 இன் கீழ், புனரமைக்கப்பட்ட திருகோணமலை GSS, கட்டுநாயக்கா GSS இல் விரிவாக்கப்பட்ட 33 kV GIS மற்றும் கெரவலப்பிட்டியவில் புதிதாக நிருமாணிக்கப்பட்ட 33 kV GIS ஆகியவற்றின் கட்டுப்பாடு மற்றும் பாதுகாப்பு முறைமைகளின் அதிகாரம் வழங்கல்.

- புதிய அநுராதபுரம் GSS இலுள்ள SAS முறைமையின் மேம்படுத்தல் மற்றும் 220 kV மன்னார் மின் மார்க்கங்களை உள்ளடக்கும் வகையில் SAS இன் விரிவாக்கம்

**மின் பரிமாற்றச் செயற்பாடு மற்றும் பராமரிப்புக் கிளை**

மின் பரிமாற்ற மின்தொகுப்பு உபமின் நிலையங்களின் செயற்பாடு மற்றும் பராமரிப்பு, மின் பரிமாற்ற மார்க்கங்களின் வழித்தட அனுமதி ஆகியன மின் பரிமாற்றச் செயற்பாடு மற்றும் பராமரிப்புக் கிளையின் பொறுப்புகளாக உள்ளன. ஆண்டின் ஆரம்பத்தில், மின் பரிமாற்றச் செயற்பாடு மற்றும் பராமரிப்புக் கிளையானது மின் பரிமாற்றச் செயற்பாடு மற்றும் பராமரிப்பு - வடக்கு, மின் பரிமாற்றச் செயற்பாடு மற்றும் பராமரிப்பு தெற்கு என இரண்டு கிளைகளாக மீள்கட்டமைக்கப்பட்டது.

# மின் பரிமாற்றப் பிரிவு (தொடர்ச்சி)




Figure Tr. 8: மின்பரிமாற்றச் செயற்பாடு மற்றும் பராமரிப்புக் கிளையின் ஒழுங்கமைப்பு வரைபடம்

### மின் பரிமாற்றச் செயற்பாடு மற்றும் பராமரிப்பு - வடக்கு கிளை

#### மத்திய அலகு

மின் பரிமாற்றச் செயற்பாடு மற்றும் பராமரிப்பு - மத்திய அலகானது, பதினான்கு மின்தொகுப்பு உபமின் நிலையங்களில் இருந்த சகல உபகரணங்களினதும் வருடாந்த தடுப்புப் பராமரிப்பு வேலைகளை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருந்ததுடன் 220 kV மற்றும் 132 kV மின் பரிமாற்ற மார்க்கங்களின் 795 km வழித்தடப் பராமரிப்புச் சுற்றையும் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருந்தது.

அவற்றிற்கு புறம்பாக, கிரிபத்கும்புர, கேகாலை, துல்கிரிய, புதிய பொல்பிட்டிய, இராகலை, நாவலப்பிட்டிய மற்றும் மலிபோட GSS களில் பல்வேறு நிலைகளில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற சில செயற்றிட்டங்களுக்கு வடிவமைப்பு மீளாய்வு, சோதித்தல் மற்றும் அதிகாரம் வழங்கல், குறைபாடுகளை சரிசெய்யும் வேலைகளில் உதவி அளிக்கப்பட்டது.



Figure Tr.9: மலிபோட GS இல் 33 kV GIS இன் அதிகாரம் வழங்கல்

மேலும், பின்வரும் முக்கியமான பராமரிப்பு வேலைகளும் ஆண்டின் காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டன:

- கொள்ளளவி வங்கி அளவீடுகள் திட்டமிடப்பட்டு வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டன.
- சகல உபமின் நிலையங்களிலும் அனல் படங்கள் எடுக்கப்பட்டு, அடையாளங் காணப்பட்ட வெப்பம் வெளியேறும் பகுதிகள் பழுதுபார்க்கப்பட்டன.
- துல்கிரிய GSS இல் இருந்த இரண்டு 31.5 MVA, 132/3 kV மின்வலு மின்மாற்றிகளில் குறைந்த எண்ணெய் சீர்குலைவு வலுவாக இருந்த இடங்கள் அடையாளங் காணப்பட்டு, அவற்றிற்கு இரண்டு தடவைகள் எண்ணெய் வடிகட்டல் மேற்கொள்ளப்பட்டது.
- உக்குவளை GSS இல் பழுதடைந்த முதன்மை உபகரணம் மாற்றீடு செய்யப்பட்டதுடன் மொணராகலை GSS இல் மார்க்கம் 01 இன் B கட்ட 132 kV மின்னழுத்த மின்மாற்றியும் மாற்றீடு செய்யப்பட்டது.
- WPS – நுவரெலியா GSS மற்றும் பதுளை – மஹியங்கனை GSS ஆகியவற்றுக்கிடையில் தொடர்பாடல் தொடுப்பு வெற்றிகரமாகத் தாபிக்கப்பட்டதுடன் நுவரெலியா GS இலிருந்து WPS GS மற்றும் பதுளை GS இலிருந்து மஹியங்கனை GS ஆகியவற்றின் தொலைவியக்க செயற்பாடும் ஆரம்பிக்கப்பட்டது.
- மேலும், இயக்கவிசைத் தடை, அதிர்வு அளவீடுகள், சுருள் மின்னோட்ட அளவீடு, பிரதான தொடு மின்தடை அளவீடு போன்ற மேலதிக சோதனைகளைச் செய்வதற்காக இரண்டு புதிய சுற்று முறிப்பான் பகுப்பாய்வுக் கருவிகள் கொள்வனவு செய்யப்பட்டன.



Figure Tr.10: உக்குவளை GS இல் 132 kV CTs இன் மாற்றீடு

#### வட மத்திய அலகு

மின் பரிமாற்றச் செயற்பாடு மற்றும் பராமரிப்பு (வட மத்திய) அலகானது பதினாறு (16) மின்தொகுப்பு உபமின் நிலையங்களில் உள்ள சகல உபகரணங்களினதும் வருடாந்தத் தடுப்புப் பராமரிப்பினைப் பூர்த்தி செய்திருந்ததுடன் 220 kV மற்றும் 132 kV மின் பரிமாற்ற மார்க்கங்களின் 1232 km வழித்தடப் பராமரிப்புச் சுற்றையும் பூர்த்தி செய்திருந்தது.

# மின் பரிமாற்றப் பிரிவு (தொடர்ச்சி)

அவற்றுக்குப் புறம்பாக, புதிய அநுராதபுரம் GS, பன்னல GS, மாதம்பே GS, வரவிருக்கின்ற பழைய அநுராதபுர GS, கப்பல்துறை GS, திருகோணமலை GS மற்றும் மன்னார் GS ஆகியவற்றில் பல்வேறு கட்டங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற பூர்வாங்க வேலைகள், சோதித்தல் மற்றும் அதிகாரம் வழங்கல், குறைபாடுகளைச் சரிசெய்யும் வேலைகள் போன்ற பல செயற்றிட்டங்களுக்கு உதவி அளித்திருந்தது.

மேலும், பின்வரும் முக்கியமான பராமரிப்பு வேலைகளும் ஆண்டின் காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டன

- ஒரு 31.5 MVA மின்மாற்றியானது சீத்தாவாக்கை மின்தொகுப்பு உபமின் நிலையத்தில் இருந்து கழற்றப்பட்டு, அது பன்னல GS இற்குக் கொண்டு செல்லப்பட்டு, நிறுவப்பட்டது.
- வவுனியா GS இன் 33 kV மின்னேகி இணைப்பி அலகின் துண்டிப்பு அறை மற்றும் தடுப்பு அறையின் குழியுருளை இணைப்பிலிருந்து வரும் SF6 வாயுக் கசிவு வெற்றிகரமாகப் பழுது பார்க்கப்பட்டது.
- ஹபரணை GS இல் சகல இணைப்பிறுக்கிகளையும் மாற்றுதல் மற்றும் மின்மாற்றி 2 இன் சாத்தியமான பகுதியளவில் மின்னிறக்கம் ஏற்படும் பகுதிகளைப் பரிசோதித்தல் என்பன மேற்கொள்ளப்பட்டன.
- மின்மாற்றிகளில் மின்னோட்டம் பாயும் போது மாற்றப்படக்கூடிய மடை மாற்றி அலகுகள் ஹபரணை, பொலநறுவை மற்றும் புத்தளம் GS களில் வெற்றிகரமாக சுத்திகரிப்புச் செய்யப்பட்டன.
- இந்தப் பிரதேசத்தில் உள்ள சகல மின்மாற்றிகளினதும் காவலிடல் எண்ணெய் மீது கரைந்த வாயுப் பகுப்பாய்வுச் சோதனைகள் நடத்தப்பட்டன.
- 132 kV சுற்று முறிப்பான்களின் குறைபாடான காற்றழுத்த அலகு வெற்றிகரமாகப் பழுதுபார்க்கப்பட்டதுடன் ஹபரணை மற்றும் பழைய அநுராதபுர GSS களில் செயற்பாட்டிற்காக இடப்பட்டுள்ளது.
- மின்னோட்டம் பாயும் போது மாற்றப்படக்கூடிய மடை மாற்றியின் (OLTC) தன்னியக்க மின்னழுத்த சீராக்கிக்கு (AVR) மடை - நிலை உள்ளீட்டை வழங்குவதற்குப் பயன்படுத்தப்படும் புதிய இருமக் குறிமுறை பதின்ம எண்முறை (BCD) அட்டையானது வடிவமைக்கப்பட்டு திருகோணமலை GS இல் நிறுவப்பட்டது.



Figure Tr.11: மின்மாற்றி பராமரிப்பு வேலை

**மின் பரிமாற்றச் செயற்பாடு மற்றும் பராமரிப்பு – தெற்கு கிளை**

**மின் பரிமாற்ற மார்க்கப் பராமரிப்பு அலகு**

மின்பரிமாற்ற மார்க்கப் பராமரிப்பு அலகானது நாட்டிலுள்ள மின்பரிமாற்ற மார்க்கங்களில் ஏற்படுகின்ற சகல மின்சார சீர்குலைவுகளையும் திருத்துகின்ற வேலை மற்றும் 132 kV மற்றும் 220 kV மின்பரிமாற்ற மார்க்கங்களில் மின்னோட்டம் பாயும்போதான பராமரிப்பு வேலை போன்றவற்றை முன்னெடுக்கிறது. 2019 ஆம் ஆண்டின் காலப்பகுதியில், மின்பரிமாற்ற மார்க்கப் பராமரிப்பு அலகானது 10076 மின்பரிமாற்ற மார்க்கக் கோபுரங்களில் 4400 கோபுரங்களின் பரிசோதனையை நிறைவு செய்திருந்தது.

**மேல் மாகாண வடக்கு அலகு**

மேல் மாகாண வடக்கு அலகினால் 2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் உயர் மின்னழுத்த சொடுக்கி பல்லிணை (switchgear) இன் ஆரோக்கியமான செயற்பாட்டை உறுதிப்படுத்துவதற்காக, பின்வரும் தடுப்புப் பராமரிப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டன.

- கொட்டுகொட மற்றும் பியகம மின்தொகுப்பு உபமின் நிலையங்களின் 132 kV மின்மார்க்க நுழைவு வழிகளில் இருந்த வயதான, எணணெய் கசிவு ஏற்படுகின்ற 132 kV மின்னோட்ட மின்மாற்றிகள் மாற்றீடு செய்யப்பட்டன.
- பியகம மின்தொகுப்பு உபமின் நிலையத்தில் 220/ 132/ 33 kV மின்மாற்றி 01 இல் இருந்த, வயதான மற்றும் மோசமான செயலாற்றுகையைக் கொண்டிருந்த 220 kV சுற்று முறிப்பான் மாற்றீடு செய்யப்பட்டது.
- பியகம மின்தொகுப்பு உபமின் நிலையத்தில் 220/ 132/ 33 kV மின்மாற்றி 01 இல் இருந்த, வயதான மற்றும் மின்காப்பு மட்டம் குறைந்த கட்டுப்பாட்டு மற்றும் பாதுகாப்பு கம்பிவடம் மாற்றீடு செய்யப்பட்டது.
- பியகம மின்தொகுப்பு உபமின் நிலையத்தில் குறைபாடுடன் காணப்பட்ட மின்னோட்டத் தாழிறக்கி கடத்திகள் மாற்றீடு செய்யப்பட்டன.
- சபுகஸ்கந்தவில் GS இல் மின்னோட்டம் பாயும்போது மாற்றத்தக்க மடை மாற்றி (PLTC) சுத்திகரிப்புச் செய்யப்பட்டது.



Figure Tr.12: மின்னோட்டத் தாழிறக்கி மாற்றீட்டு வேலை

மேலுள்ள பராமரிப்பு வேலைகளுக்கு மேலதிகமாக, இந்த அலகு மின்தடைப் பராமரிப்பு வேலைகளிலும் ஈடுபட்டது. 2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வெயாங்கொடை GS இல் இரண்டு முக்கிய மின்தடைகள் எற்பட்டதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

மேலும், மின்தொகுப்பு உபமின் நிலையங்களின் பாதுகாப்பு மற்றும் தோற்றத்திற்காக கட்டுப்பாட்டுக் கட்டடத்தின் புதுப்பிப்பு, எல்லை வேலிகள், பாதைகள் மற்றும் தடுப்புச் சுவர்கள் அமைத்தல் போன்ற பல குடியியல் வேலைகளும் முன்னெடுக்கப்பட்டன.

# மின் பரிமாற்றப் பிரிவு (தொடர்ச்சி)

### மேல் மாகாணம் தெற்கு அலகு

மின் பரிமாற்றச் செயற்பாடு மற்றும் பராமரிப்பு (மேல் மாகாணம் தெற்கு) அலகானது பதினாறு (16) மின்தொகுப்பு உபமின் நிலையங்களில் இருந்த சகல உபகரணங்களினதும் வழக்கமான வருடாந்தப் பராமரிப்புப் பணிகளை நிறைவு செய்திருந்ததுடன், 220 kV மற்றும் 132 kV மின் பரிமாற்ற மார்க்கங்களின் 175 km வழித்தடப் பராமரிப்புச் சுற்றையும் நிறைவு செய்திருந்தது.

வழக்கமான பராமரிப்புப் பணிகளுக்கு மேலதிகமாக, பின்வரும் முக்கிய விசேட பராமரிப்பு நடவடிக்கைகளும் 2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்டன.

- களனிதிஸ்ஸ ABB ELK-0 145 kV GIS இல் கொலன்னாவ மின் மார்க்க நுழைவுவழி இல. 01 இல் குறைகளைத் திருத்தும் வேலைகள்
- செயற்றிட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட புதிய கம்பிவட முனையத்திற்கு ஏற்ப களனிதிஸ்ஸ ABB ELK-0 145 kV GIS இல் கொலன்னாவ மின் மார்க்க நுழைவுவழி இல. 01 இல் வார்ப்பு - பிசின் காவலிகளின் மாற்றீடு.
- ஜயவர்த்தனபுர GSS GIS இல் ஊட்டி 06 நுழைவுவழியின் சுற்று முறிப்பான் மாற்றீடு.
- கொலன்னாவ மின்தொகுப்பு உபமின் நிலையத்தில் 31.5 MVA 132/33 kV பூரண இணைப்பிறுக்கி தொகுதியின் மாற்றீடு.
- களனிதிஸ்ஸ 220 kV GIS இல் பியகம மின்மார்க்க நுழைவுவழி 1 இலுள்ள உள்ளூர் கட்டுப்பாட்டு பணியிடத்தின் (LCC) புனரமைப்பு.
- பன்னிப்பிட்டிய GSS இல் 132 kV இரத்மலானை மின் பரிமாற்ற மார்க்க இல. 02 நுழைவு வழிக்கு புதிய 145 kV SF6 சுற்று முறிப்பானின் மாற்றீடு.

மேலும், GSS களின் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தோற்றத்தை மேம்படுத்துவதற்காக புதுப்பித்தல் வேலைகளும் மேற்கொள்ளப்பட்டன.

### மேல்மாகாண மத்திய அலகு

மேல் மாகாண மத்திய அலகானது கொழும்பு நகர எல்லைக்குட்பட்ட மின்தொகுப்பு உபமின் நிலையங்கள் மற்றும் 132 kV, 220 kV நிலத்தடி கம்பிவடங்கள் ஆகியவற்றின் செயற்பாடு மற்றும் பராமரிப்பினை முன்னெடுக்கும் நோக்கில் தாபிக்கப்பட்டது. ஆரம்பத்தில் இந்த அலகின் பிரதான நோக்கமாக, கொழும்பு நகரக் கிளையிலிருந்து தற்போதுள்ள மின்தொகுப்பு உபமின் நிலையங்களைக் கையேற்பதும் செயற்றிட்டங்கள் பிரிவிலிருந்து புதிய மின்தொகுப்பு உபமின் நிலையங்களைக் கையேற்பதும் காணப்பட்டது.

ஆண்டின் காலப்பகுதியில், இந்த அலகானது கொழும்பு நகரக் கிளையில் இருந்து உபமின் நிலையங்கள் A, F, C, I மற்றும் E ஆகியவற்றையும் செயற்றிட்டங்கள் பிரிவில் இருந்து உபமின் நிலையங்கள் L, M மற்றும் N ஆகியவற்றையும் கையேற்றிருந்தது.

இந்த மின்தொகுப்பு உபமின் நிலையங்களின் பராமரிப்புத் தொழிற்பாடுகள் ஆண்டின் காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

### தெற்கு அலகு

ஆண்டின் காலப்பகுதியில், தெற்கு அலகானது 10 மின்தொகுப்பு உபமின் நிலையங்களின் வழக்கமான வருடாந்தப் பராமரிப்பு வேலைகளை வெற்றிகரமாக நிறைவு செய்திருந்தது. மேலும், சிங்கராஜ வனம் மற்றும் உடவளவை தேசிய பூங்கா ஆகியவற்றுக்கான மின் மார்க்கங்கள் உள்ளிட்ட மின் பரிமாற்ற மார்க்கங்களின் 471 km வழி நீள வழித்தடப் பராமரிப்பு வேலைகளையும் பூர்த்தி செய்திருந்தது.

இவற்றுக்குப் புறம்பாக, பின்வரும் விசேட பராமரிப்பு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டன:

- மாத்தறை, பெலியத்த மற்றும் காலி மின்தொகுப்பு உபமின் நிலையங்களில் மின்மாற்றி OLTC சுத்திகரிப்பு வேலைகள் முன்னெடுக்கப்பட்டன.
- காலி GS இல் 132 kV SVC நுழைவுவழியின் தற்போதைய கொள்ளளவை அதிகரிக்கும் பணி பூர்த்தி செய்யப்பட்டதுடன் இது, தற்போது ஏதாவது மின்வலு ஆலையுடன் இணைப்பதற்கான 132 kV மின்பிறப்பாக்கி நுழைவு வழியாகப் பயன்படுத்தத் தயாராக உள்ளது.
- பலாங்கொடை GSS இல் 33 kV ஊட்டி 07 இன் சுற்று முறிப்பான் துருவத்தின் மாற்றீடு
- இரத்தினபுரி GSS இல் 33 kV ஊட்டி 07 (GIS) இன் மின்னேற்றல் பொறிமுறையின் மாற்றீடு
- மத்துகம GSS இல் மின்மாற்றி 1 மற்றும் 2 இல் காணப்பட்ட சகல எண்ணெய்க் கசிவுகளும் சீர்செய்யப்பட்டன.
- தெனியாய GS இல் மின்னேற்றித் தொகுதியின் பழுதுபார்ப்பு

மேலும், காலி மற்றும் அம்பலாங்கொடை மின்தொகுப்பு உபமின் நிலையங்களில் மின்மாற்றி நிலைமைக் கண்காணிப்புச் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

### நிறுவனம் மற்றும் ஒழுங்குபடுத்தல் தொடர்புகள் கிளை

நிறுவனம் மற்றும் ஒழுங்குபடுத்தல் தொடர்புகள் கிளையின் பொறுப்பானது, பிரிவிலுள்ள மனித வளங்களின் உத்தமமான பயன்பாட்டின் மூலம் மின் பரிமாற்றப் பிரிவின் முறையான தொழிற்பாடுகளை உறுதி செய்வதாகும். மின் பரிமாற்றப் பிரிவுக்கான வருடாந்த ஆளணித் திட்டம் மற்றும் நிறுவனத் திட்டத்தின் தயாரிப்பானது நிறுவனம் மற்றும் ஒழுங்குபடுத்தல் தொடர்புகள் கிளையினால் மேற்கொள்ளப்படுகிறது. மின் பரிமாற்றப் பிரிவின் வருடாந்த அறிக்கையும்கூட இந்தக் கிளையினாலேயே தயாரிக்கப்படுகிறது.

மின் பரிமாற்றப் பிரிவு மொத்தமாக 1217 ஊழியர்களைக் கொண்டுள்ளது. இதில் 138 நிறைவேற்றுத்தர அதிகாரிகளும், 1079 நிறைவேற்றுத்தரம் அல்லாத உத்தியோகத்தர்களும் உள்ளடங்குகின்றனர். ஆண்டின் காலப்பகுதியில், 03 ஊழியர்கள் ஓய்வு பெற்றுள்ளதுடன் 26 ஊழியர்கள் இ.மி.ச. இன் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடைமுறைகளுக்கு ஏற்ப தமக்குரிய உயர் சம்பள அளவுத்திட்டத்தின் மீது உயர் தரங்களுக்கோ அல்லது இடங்களுக்கோ பதவி உயர்த்தப்பட்டுள்ளனர். ஆண்டின் காலப்பகுதியில் இக்கிளையானது இரண்டு ஒழுக்காற்று விசாரணைகளை நடத்தியுள்ளது.

ஊழியர்களின் திறன் விருத்தித் தேவைகளைப் பொறுத்து, உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ஊழியர்களுக்கான வெளிவாரிப் பயிற்சி வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன. மேலும், மின் பரிமாற்றப் பிரிவுக்கு இணைக்கப்பட்டுள்ள சகல ஊழியர்களுக்கும் முதலுதவிப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் நடத்தப்பட்டது.

கட்டடக்கலை வடிவமைப்பு மற்றும் நிருமாண மேற்பார்வைக்கான ஆலோசகராக அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் நியமிப்புடன் மின் பரிமாற்றத் தலைமையகத்திற்கான ஒரு புதிய கட்டடத்தை அமைக்கும் பணி நடைபெறுகிறது.



செயற்பாட்டு மீளாய்வு

# விநியோகப் பிரிவுகள்

# விநியோகப் பிரிவுகள்

நாட்டின் மின்சார விநியோகத்தில் ஒரு பாரிய பங்கு இ.மி.ச. இனால் கையாளப்படுகின்றது. அது மொத்த விற்பனை அளவில் 90% ஆகும். எஞ்சிய பங்கு, இ.மி.ச. இன் துணைக் கம்பனி ஒன்றான வரையறுக்கப்பட்ட லங்கா மின்சாரக் கம்பனியால் (LECO) பூர்த்தி செய்யப்படுகிறது.

ஒட்டுமொத்த இ.மி.ச. இன் விநியோக முறைமையானது புவியியல் ரீதியாக விநியோகப் பிரிவு 1 (DD1), விநியோகப் பிரிவு 2 (DD2), விநியோகப் பிரிவு 3 (DD3) மற்றும் விநியோகப் பிரிவு 4 (DD4) என நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரிப்பானது பிரதானமாக நிருவாகம் மற்றும் செயற்பாடுகளை இலகுபடுத்துவதையும் நுகர்வோருக்கான மின்சார வழங்கலில் வினைத்திறனையும் தரத்தினையும் மேம்படுத்துவதற்கான இலக்குப் போட்டி ஒன்றை ஏற்படுத்துவதையும் நோக்காகக் கொண்டிருந்தது.

விநியோக வலையமைப்பானது 33 kV மற்றும் 11 kV இடைநிலை மின்னழுத்த (MV) மின் மார்க்கங்களையும் 400 V தாழ்நிலை மின்னழுத்த (LV) மின் மார்க்கங்களையும் கொண்டிருப்பதுடன் நாடு பூராகவும் பரவியுள்ள மின்தொகுப்பு உபமின் நிலையங்கள் ஊடாக 220 kV மற்றும் 132 kV மின் பரிமாற்ற முறைமைகளில் இருந்து மின்வலுவை மாற்றுகின்ற விநியோக மின்மாற்றிகளையும் கொண்டிருக்கிறது.

### செயற்பாட்டுக் கட்டமைப்பு

ஒவ்வொரு பிரிவும் இ.மி.ச. இன் பொது முகாமையாளருக்கு நேரடியாக அறிக்கையிடும் மேலதிகப் பொது முகாமையாளர் ஒருவரால் தலைமைதாங்கப்படுகிறது. விநியோகப் பிரிவுகள் மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளதுடன் ஒவ்வொரு மாகாணமும் ஒரு பிரதிப் பொது முகாமையாளரால் தலைமைதாங்கப்படுகிறது. ஒவ்வொரு பிரிவின் கீழும் வருகின்ற மாகாணங்கள் கீழே தரப்படுகின்றன

| பிரிவின் பெயர் | மாகாணம் |
|---|---|
| **பிரிவு 1 (DD1)** | கொழும்பு நகர், வட மேல், வட மத்திய, மற்றும் வட மாகாணங்கள் |
| **பிரிவு 2 (DD2)** | மேல் மாகாணம் வடக்கு, மத்திய மற்றும் கிழக்கு மாகாணங்கள் |
| **பிரிவு 3 (DD3)** | மேல் மாகாணம் தெற்கு II, ஊவா மற்றும் சப்ரகமுவ மாகாணங்கள் |
| **பிரிவு 4 (DD4)** | மேல் மாகாணம் தெற்கு I மற்றும் தென் மாகாணம் |

ஒரு மாகாணம் பல பிரதேசங்களாக உப பிரிவிடப்பட்டுள்ளதுடன், ஒவ்வொரு பிரதேசத்தினாலும் சேவை வழங்கப்படுகின்ற நுகர்வோரின் எண்ணிக்கையைப் பொறுத்து அப்பிரதேசம் பிரதேச பிரதம பொறியியலாளர்களால் அல்லது பிரதேச மின் பொறியியலாளர்களால் முகாமை செய்யப்படுகிறது. ஒரு பிரதேசம் மேலும் பல நுகர்வோர் சேவை நிலையங்களாக (CSC) உப பிரிவிடப்பட்டுள்ளதுடன் அவ்வொவ்வொரு நுகர்வோர் சேவை நிலையமும் ஒரு மின் அத்தியட்சகரால் தலைமை தாங்கப்படுகிறது.

### செயற்பாட்டுப் பிரதேசம்

விநியோகப் பிரிவு 1 ஆனது வட மேல், வட மத்திய, வடக்கு மற்றும் கொழும்பு நகர் ஆகிய நான்கு நிருவாக மாவட்டங்களை உள்ளடக்கியுள்ளது. வட மத்திய மாகாணம் மற்றும் வட மாகாணம் ஆகியன தலா மும்மூன்று பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. வட மேல் மாகாணமானது ஏழு பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டுள்ள அதே வேளை கொழும்பு நகர் நான்கு பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

| பிரிவு | மாகாணம் | பிரதேசம் |
|---|---|---|
| **விநியோகப் பிரிவு 1** | வட மேல் | சிலாபம், குருநாகல், குளியாப்பிட்டி, வாரியப்பொல, வென்னப்புவ, புத்தளம் மற்றும் நாரம்மல. |
| | வட மத்திய | அநுராதபுரம், கெக்கிராவ, மற்றும் மின்னேரியா. |
| | வடக்கு | யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் வவுனியா. |
| | கொழும்பு நகர் | கொழும்பு வடக்கு, கொழும்பு தெற்கு, கொழும்பு மேற்கு மற்றும் கொழும்பு கிழக்கு. |

கிழக்கு மற்றும் மத்திய மாகாணங்களை முழுமையாகவும் மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களை பகுதியளவிலும் உள்ளடக்கிய விநியோகப் பிரிவு 2 இன் செயற்பாட்டுப் பிரதேசமானது 22 பிரதேச அலுவலகங்களைக் கொண்டிருக்கிறது. இந்த மூன்று மாகாணங்களில் கிழக்கு மாகாணமானது நான்கு பிரதேசங்களாக உப பிரிவிடப்பட்டுள்ளதுடன் மத்திய மாகாணம் பன்னிரெண்டு பிரதேசங்களாகவும் மேல் மாகாணம் வடக்கு ஆறு பிரதேசங்களாகவும் உப பிரிவிடப்பட்டுள்ளன.

# விநியோகப் பிரிவுகள் (தொடர்ச்சி)

| பிரிவு | மாகாணம் | பிரதேசம் |
|---|---|---|
| **விநியோகப் பிரிவு 2** | கிழக்கு மாகாணம் | அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் கல்முனை. |
| | மத்திய மாகாணம் | கேகாலை, மாவனெல்ல, கண்டி நகர், பேராதனை, குண்டசாலை, கட்டுகஸ்தோட்டை, கலகெதர, மாத்தளை, தம்புள்ள, நுவரெலியா, கினிகத்தென்ன, நாவலப்பிட்டிய. |
| | மேல் மாகாணம் வடக்கு | கம்பஹா, களனி, நீர்கொழும்பு, ஜா-எல, திவுலப்பிட்டிய மற்றும் வெயாங்கொடை. |

விநியோகப் பிரிவு 3 ஆனது மேல் மாகாணத்தின் ஒரு பகுதியான மேல் மாகாணம் தெற்கு II ஐயும் சப்ரகமுவ மாகாணம் மற்றும் ஊவா மாகாணம் ஆகியவற்றையும் உள்ளடக்கியுள்ளது. மேல் மாகாணம் தெற்கு II ஆனது ஐந்து பிரதேசங்களாக உப பிரிவிடப்பட்டுள்ளது. சப்ரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டத்தை முழுமையாகவும் கேகாலை மாவட்டத்தின் ஒரு பகுதியையும் உள்ளடக்கிய ஐந்து பிரதேசங்களாகப் உப பிரிவிடப்பட்டுள்ளது. ஊவா மாகாணம், பதுளை மற்றும் மொணராகலை நிருவாக மாவட்டங்களை உள்ளடக்கி நான்கு பிரதேசங்களாக உப பிரிவிடப்பட்டுள்ளது.

| பிரிவு | மாகாணம் | பிரதேசம் |
|---|---|---|
| **விநியோகப் பிரிவு 3** | மேல் மாகாணம் தெற்கு II | பண்டாரகம, ஹோமாகம, அவிசாவளை, ஸ்ரீ ஜயவர்த்தனபுர மற்றும் ஹொரணை. |
| | சப்ரகமுவ | இரத்தினபுரி, கஹவத்தை, ருவன்வெல்ல, எஹலியகொட மற்றும் எம்பிலிப்பிட்டிய. |
| | ஊவா | பதுளை, தியத்தலாவ, மொணராகலை, மஹியங்கணை. |

விநியோகப் பிரிவு 4 ஆனது மேல் மாகாணத்தின் ஒரு பகுதியையும் (மேல் மாகாணம் தெற்கு I), தென் மாகாணம் முழுவதையும் சப்ரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களின் சில பகுதிகளையும் உள்ளடக்கியுள்ளது. மேல் மாகாணம் தெற்கு I நான்கு பிரதேசங்களை உள்ளடக்கியுள்ளதுடன் தென் மாகாணம் ஏழு பிரதேசங்களை உள்ளடக்கியுள்ளது.

| பிரிவு | மாகாணம் | பிரதேசம் |
|---|---|---|
| **விநியோகப் பிரிவு 4** | தென் மாகாணம் | அம்பலாங்கொடை, காலி, ஹம்பாந்தோட்டை, மாத்தறை, தங்காலை, அக்குரஸ்ஸ மற்றும் பத்தேகம. |
| | மேல் மாகாணம் தெற்கு I | இரத்மலானை, களுத்துறை, தெஹிவளை மற்றும் மத்துகம. |

மாகாணங்களுக்கு புறம்பாக, ஒவ்வொரு பிரிவினதும் நிலைபேறான செயற்பாடுகளுக்குத் தேவையான ஆதரவுச் சேவைகளை முன்னெடுப்பதற்காக சகல விநியோகப் பிரிவுகளிலும் மூன்று தனியான கிளைகள் தாபிக்கப்பட்டுள்ளன. அவையாவன, செயற்றிட்டங்கள் மற்றும் கனரக பராமரிப்புக் கிளை, திட்டமிடல் மற்றும் அபிவிருத்திக் கிளை, வர்த்தகம் மற்றும் நிறுவனக் கிளை, விநியோகப் பிரிவு 1 ஆனது விநியோக ஒருங்கிணைப்புக் கிளையையும் கொண்டுள்ளது.

# விநியோகப் பிரிவுகள் (தொடர்ச்சி)



# விநியோகப் பிரிவுகள் (தொடர்ச்சி)

### பிரிவுகளின் பிரதான நோக்கங்கள்

- பிரிவினுள் உள்ள சகல நுகர்வோருக்கும் சட்டநியதி மட்டங்களில் நம்பகமான மின்சார வழங்கலை அளித்தல்.
- தற்போதைய தேவை மற்றும் எதிர்பார்க்கப்படும் எதிர்காலத் தேவைகளை நிறைவேற்றுகின்ற அதே வேளை செலவினங்களை ஈடுசெய்வதற்காக மின்சாரத்தை விற்பனை செய்தலும் திட்டமிடப்பட்ட வருவாய்களை அடைதலும்.
- நவீன தொழில்துறையின் மிகவும் கடுமையான நியமங்களைப் பூர்த்தி செய்கின்ற உயர் தரமான, பயனுறுதிமிக்க மற்றும் பாதுகாப்பான தொழில்நுட்பங்களுடன் அனைவருக்கும் அதிகபட்ச நுகர்வோர் திருப்தியை உறுதி செய்வதற்காக மின்சாரத்தை வழங்குதல்.
- முறைமை இழப்புகளைக் குறைக்கின்ற அதே வேளை சர்வதேச நியமங்களுக்கு இணையாக இருக்கும் வகையில் மின்சார வழங்கலின் நம்பகத்தன்மை, தரம் மற்றும் வினைத்திறனை மேம்படுத்துவதற்கு மின்சார விநியோக முறைமையின் அபிவிருத்தியை உறுதிப்படுத்தல்.
- பராமரிப்புச் சேவைகள் மற்றும் செயற்பாட்டு வினைத்திறனை ஒருங்கிணைத்து மேம்படுத்துதல்.
- ஆய்வு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து மேம்படுத்துதலும் மின்சார விநியோகத்திற்காக புதிய தொழில்நுட்பங்களை விருத்தி செய்தலும்.
- பாதுகாப்பான, பத்திரமான மற்றும் சுகாதாரமான பணிச் சூழலைப் பராமரிப்பதன் மூலம் ஆற்றல் மிகுந்த வேலைப்படையை உருவாக்குதலும் அவர்களுடைய வெற்றிக்கான வாய்ப்புகளை உச்சப்படுத்தலும்.
- செயற்பாட்டுச் சூழலைப் பாதுகாப்பதிலும் காப்பாற்றுவதிலும் அர்ப்பணிப்புடன் இருத்தல்.

### விநியோகப் பிரிவுகளின் எல்லை

| விபரம் | DD1 | DD2 | DD3 | DD4 |
|---|---|---|---|---|
| சேவைப் பிரதேசம் (சதுர கி.மீ.)* | 26,929 | 17,855 | 12,178 | 6,930 |
| பிரதேசங்கள் (எண்ணிக்கை) | 17 | 22 | 14 | 11 |
| நுகர்வோர் சேவை நிலையங்கள் (எண்ணிக்கை) | 57 | 85 | 49 | 40 |
| இ.மி.ச. இயக்கிய சேகரிப்பு நிலையங்கள் (POS) (எண்ணிக்கை) | 15 | 19 | 12 | 28 |
| கட்டுப்பாட்டு நிலையங்கள் (எண்ணிக்கை) | 4 | 3 | 3 | 0 |
| அழைப்பு நிலையங்கள் (எண்ணிக்கை) | 4 | 4 | 3 | 2 |
| தொகையளவு நுகர்வோர் (எண்ணிக்கை) | 4,223 | 3,540 | 2,058 | 1,794 |
| சில்லறை நுகர்வோர் (எண்ணிக்கை) | 1,871,629 | 2,226,234 | 1,318,768 | 1,072,393 |
| SAIDI (நிமிடங்கள் / ஆண்டு) | 5965 | 6957 | 6503 | 7098 |
| SAIFI (குறுக்கீடுகள் / வாடிக்கையாளர் / ஆண்டு) | 109 | 50 | 69 | 56 |

*மின்சார வலையமைப்பைக் கொண்டிராத காடுகள் மற்றும் தீவுகள் தவிர்ந்த.

### விநியோக உட்கட்டமைப்பு

| விபரம் | அலகு | DD1 | DD2 | DD3 | DD4 | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| **விநியோக மார்க்கங்கள்** | | | | | | |
| 33 kV | km | 11,048 | 9,757 | 7,232 | 4,595 | 32,633 |
| 11 kV | km | 671 | 439 | 40 | 284 | 1,434 |
| LV | km | 46,709 | 42,276 | 32,183 | 28,199 | 149,366 |
| **நிலத்தடி கம்பிவடங்கள்** | | | | | | |
| 33 kV | km | 22 | 11 | 8 | 9 | 49 |
| 11 kV | km | 703 | 141 | 5 | 29 | 878 |
| LV | km | 717 | 72 | 6 | 8 | 803 |
| **உபமின் நிலையங்கள்** | | | | | | |
| 33/11 kV முதன்மை உபமின் நிலையங்கள் | No. | 48 | 34 | 12 | 40 | 134 |
| LV விநியோக உபமின் நிலையங்கள் | No. | 11,734 | 10,240 | 6,339 | 5,163 | 33,476 |
| **ஏனையவை** | | | | | | |
| தாங்கு சட்டங்கள் | No. | 38 | 95 | 42 | 38 | 213 |
| A/R | No. | 190 | 407 | 59 | 44 | 700 |

# விநியோகப் பிரிவுகள் (தொடர்ச்சி)

### 2019 ஆம் ஆண்டின் பிரதான தரவுகள் - ஒரே பார்வையில்

| விபரம் | அலகு | DD1 | DD2 | DD3 | DD4 | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| பிரிவினால் கொள்வனவு செய்யப்பட்ட அலகுகள் | GWh | 4,371 | 4,936 | 2,671 | 2,084 | 14,062 |
| பிரிவினுள் விற்பனை செய்யப்பட்ட அலகுகள்* | GWh | 4,045 | 4,522 | 2,449 | 1,910 | 12,926 |
| விற்பனை செய்யப்பட்ட அலகுகளில் இருந்து ஈட்டப்பட்ட வருமானம் | MLKR | 73,704 | 70,861 | 39,143 | 31,522 | 215,230 |
| சராசரி விற்பனை விலை | LKR | 18.22 | 15.67 | 15.98 | 16.50 | 16.65 |
| விநியோக இழப்பு | % | 7.5 | 8.4 | 8.3 | 8.3 | 8.1 |
| புதிய இணைப்புகளின் எண்ணிக்கை | No | 43,023 | 51,692 | 29,126 | 22,519 | 146,360 |

### செயற்பாட்டுத் தரவுகள்

### 2019 இல் விதிப்பனவு வகை ரீதியான கணக்குகளின் எண்ணிக்கை

(எண்ணிக்கை)

| விதிப்பனவு வகை | DD1 | DD2 | DD3 | DD4 | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| வீட்டு நுகர்வு | 1,596,454 | 1,943,844 | 1,164,383 | 946,771 | 5,651,452 |
| சமயத்தலம் | 13,786 | 13,820 | 7,385 | 5,733 | 40,724 |
| தொழில்துறை | 34,266 | 14,869 | 8,616 | 6,490 | 64,241 |
| ஹோட்டல் | 117 | 144 | 60 | 149 | 470 |
| அரசாங்கம் | 149 | 2,863 | 54 | 1,508 | 4,574 |
| பொது நோக்கு | 231,080 | 254,178 | 140,328 | 113,536 | 739,122 |
| விவசாயம் | 0 | 56 | 0 | 0 | 56 |
| மொத்தம் | 1,875,852 | 2,229,774 | 1,320,826 | 1,074,187 | 6,500,639 |

**நுகர்வோர் கணக்குகளின் மொத்த எண்ணிக்கையின் ஐந்து வருட முன்னேற்றம்**




| | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 |
|---|---|---|---|---|---|
| DD1 | 1,586,805 | 1,701,790 | 1,782,105 | 1,832,829 | 1,875,852 |
| DD2 | 1,941,025 | 2,045,063 | 2,122,740 | 2,178,082 | 2,229,774 |
| DD3 | 1,156,923 | 1,214,109 | 1,260,090 | 1,291,700 | 1,320,826 |
| DD4 | 963,377 | 1,003,230 | 1,028,194 | 1,051,668 | 1,074,187 |

### 2019 ஆம் ஆண்டில் விதிப்பனவு வகை ரீதியான விற்பனை

(GWh)

| விதிப்பனவு வகை | DD1 | DD2 | DD3 | DD4 | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| வீட்டு நுகர்வு | 1,404 | 1,631 | 918 | 823 | 4,776 |
| சமயத்தலம் | 35 | 28 | 12 | 12 | 87 |
| தொழில்துறை | 956 | 1,910 | 987 | 540 | 4,393 |
| ஹோட்டல் | 114 | 72 | 7 | 78 | 271 |
| அரசாங்கம் | 82 | 67 | 21 | 31 | 201 |
| பொது நோக்கு | 1,413 | 778 | 492 | 407 | 3,090 |
| தெரு விளக்கு | 41 | 36 | 12 | 19 | 108 |
| விவசாயம் | 0 | 0.05 | 0 | 0 | 0.05 |
| மொத்தம் | 4,045 | 4,522 | 2,449 | 1,910 | 12,926 |

# விநியோகப் பிரிவுகள் (தொடர்ச்சி)

### 2019 ஆம் ஆண்டில் விதிப்பனவு வகை ரீதியான வருமானம்

(மில். இல.ரூபா)

| விதிப்பனவு வகை | DD1 | DD2 | DD3 | DD4 | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| வீட்டு நுகர்வு | 21,586 | 21,941 | 12,198 | 11,788 | **67,513** |
| சமயத்தலம் | 265 | 199 | 81 | 90 | **635** |
| தொழில்துறை | 14,272 | 27,785 | 14,581 | 8,017 | **64,654** |
| ஹோட்டல் | 1,950 | 1,348 | 144 | 1,386 | **4,828** |
| அரசாங்கம் | 1,488 | 1,220 | 386 | 565 | **3,658** |
| பொது நோக்கு | 34,144 | 18,367 | 11,753 | 9,677 | **73,941** |
| தெரு விளக்கு | - | 0.9 | - | - | **0.9** |
| விவசாயம் | 0 | 0.6 | 0 | 0 | **0.6** |
| மொத்தம் | **73,704** | **70,861** | **39,143** | **31,522** | **215,230** |




### முன்னேற்ற நடவடிக்கைகள்
#### மின்சாரத்திற்கான அனுகல்

தரப்பட்ட ஒரு மாகாணத்தில் உள்ள மக்களின் சதவீதம் ஒப்பீட்டளவில் எளிமையானதாக இருக்கின்றபோது நிலையான மின்சாரத்திற்கான அனுகலானது மாகாணத்தின் அபிவிருத்தி மட்டத்தைப் பொறுத்து மாறுபடும். பன்னிரெண்டு மாகாணங்களில் கொழும்பு நகர், மேல் மாகாணம் வடக்கு, மேல் மாகாணம் தெற்கு I மற்றும் தென் மாகாணம் ஆகிய நான்கு மாகாணங்களும் மின்சாரத்திற்கான 100% அனுகலை எட்டியுள்ளன.




2018, 2019 ஆம் ஆண்டுகளின் இறுதியில் மின்சாரத்திற்கான அனுகல்

# விநியோகப் பிரிவுகள் (தொடர்ச்சி)

மின்னூட்டத்தின் நன்மைகளைக் கருத்திற்கொண்டு, நன்கொடையாளர்கள், இலங்கை அரசாங்கம் (GOSL) மற்றும் இ.மி.ச. ஆகியவற்றினால் செய்யப்பட்ட நிதிசார் அர்ப்பணிப்பின் ஊடாக மின்சாரத்திற்கான அணுகலை 100% அடைந்து கொள்வதற்கு கிராமிய மின்னூட்டல் செயற்றிட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

ஆண்டின் இறுதியில் மின்னூட்டல் திட்டங்களும் விரிவாக்கங்களும்

| பிரிவு | மாகாணம் | திட்டங்கள் | | விரிவாக்கங்கள் | |
|---|---|---|---|---|---|
| | | நிறைவு பெற்ற வேலைகளின் எண்ணிக்கை | செலவு மில்லியன் ரூபாவில் | நிறைவு பெற்ற வேலைகளின் எண்ணிக்கை | செலவு மில்லியன் ரூபாவில் |
| DD1 | வடக்கு | 8 | 59.28 | 87 | 97.84 |
| | வட மேல் | 8 | 13.57 | 316 | 64.3 |
| | வட மத்திய | 2 | 7.77 | 36 | 24.59 |
| | கொழும்பு நகர் | - | - | - | - |
| DD2 | மேல் மாகாணம் வடக்கு | 0 | 0 | 21 | 2 |
| | மத்திய | 69 | 482 | 1085 | 570.6 |
| | கிழக்கு | 4 | 53.79 | 145 | 146.96 |
| DD3 | மேல் மாகாணம் தெற்கு II | 1 | 5.14 | 2 | 3.09 |
| | ஊவா | 2 | 11.41 | 72 | 110 |
| | சப்ரகமுவ | 0 | 0 | 38 | 30.52 |
| DD4 | மேல் மாகாணம் தெற்கு I | 0 | - | 20 | 7.55 |
| | தென் | 8 | 44.59 | 28 | 39.67 |

நிருமாண வேலைகளின் செயலாற்றுகை

| பிரிவு | மாகாணம் | HV (km) | LV (km) | விநியோக உபமின் நிலையங்கள் | LV மார்க்க மாற்றம் (km) | செலவு (மில். இல.ரூபா) |
|---|---|---|---|---|---|---|
| DDD1 | வடக்கு | 11.91 | 0.73 | 32 | 1.38 | 94.63 |
| | வட மேல் | 84 | 157 | 236 | 88 | 1137.6 |
| | வட மத்திய | 36.8 | 67.6 | 138 | 15.6 | 659.9 |
| | கொழும்பு நகர் | 28.82 | 16.19 | 29 | 0 | 822.73 |
| DD2 | மேல் மாகாணம் வடக்கு | 25.43 | 122.22 | 51 | 341.95 | 634.59 |
| | மத்திய | 841.41 | 2,941.78 | 698 | 1,481.34 | 7,126.95 |
| | கிழக்கு | 131.30 | 174.46 | 137 | 0.52 | 1,749.10 |
| DD3 | மேல் மாகாணம் தெற்கு II | 2.94 | 14.09 | 98.00 | 0.30 | 318.07 |
| | ஊவா | 17.90 | 70.08 | 63.00 | 163.50 | 383.30 |
| | சப்ரகமுவ | 28.29 | 60.91 | 72.00 | 18.29 | 294.77 |
| DD4 | மேல் மாகாணம் தெற்கு I | 7.6 | 64.4 | 58 | 116.4 | 550.6 |
| | தென் | 70.8 | 153.6 | 120 | 15.5 | 884.81 |

விநியோகப் பிரிவுகளில் உள்ள மேற்கூரை சூரிய ஒளிமின்னழுத்த (PV) பலகங்கள்

மின்சார நுகர்வோர் தங்களுடைய வளாகங்களில் உள்ள மேற்கூரைகளில் மின்சாரத்தைப் பிறப்பாக்கம் செய்வதற்கும் தங்களது மின்பிறப்பாக்கிகளை இ.மி.ச. இன் முறைமையுடன் ஒத்திசைவு செய்வதற்கும் அனுமதிக்கப்பட்டுள்ள அதே வேளை நிகர அளவீடு, நிகரக் கணக்கீடு மற்றும் நிகரக் கூட்டல் ஆகிய மூன்று திட்டங்களின் கீழான நுகர்வு மற்றும் இ.மி.ச. இற்கு சக்தியை வழங்குதல் ஆகியவற்றிற்கும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

| விதிப்பனவு வகை | DD1 | DD2 | DD3 | DD4 | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| **நுகர்வோர் (எண்ணிக்கை)** | | | | | |
| நிகர அளவீடு | 3,112 | 1,955 | 2,018 | 1,752 | **8,837** |
| நிகரக் கணக்கீடு | 2,146 | 1,674 | 1,220 | 1,555 | **6,595** |
| நிகரக் கூட்டல் | 274 | 147 | 158 | 147 | **726** |
| மொத்தம் | **5,532** | **3,776** | **3,396** | **3,454** | **16,158** |
| கொள்ளளவு (kW) | | | | | |
| நிகர அளவீடு | 23,262 | 13,188 | 10,884 | 12,940 | **60,274** |
| நிகரக் கணக்கீடு | 21,898 | 11,164 | 8,408 | 12,616 | **54,085** |
| நிகரக் கூட்டல் | 22,571 | 34,163 | 25,806 | 20,362 | **102,903** |
| மொத்தம் | **67,731** | **58,515** | **45,098** | **45,918** | **217,262** |

# விநியோகப் பிரிவுகள் (தொடர்ச்சி)

### வலையமைப்பு மேம்படுத்தல்கள்

மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் காலப்பகுதியில் விநியோக வலையமைப்பை அதிகரித்து மேம்படுத்துவதற்காக விநியோகப் பிரிவுகளின் செயற்றிட்டங்கள் மற்றும் கனரக பராமரிப்புக் கிளைகளால் பின்வரும் வேலைகள் செய்யப்பட்டன.

| விபரம் | அலகு | DD1 | DD2 | DD3 | DD4 |
|---|---|---|---|---|---|
| 33 kV மின்கோபுர மார்க்கங்களின் நிருமாணம் | km | 7.8 | 43.12 | 9.92 | 2.0 |
| தன்னியக்க மீள் மூடுகைகள் மற்றும் LBSs இன் நிறுவல் | No. | 34 | 35 | 15 | 6 |
| 33 kV தாங்கு சட்டங்களின் நிருமாணம் | No. | 3 | 7 | 33 | 2 |
| முதன்மை உபமின் நிலையங்களின் நிருமாணம் | No. | 6 | 0 | 0 | 2 |
| 33 kV நிலத்தடி கம்பிவடங்களைப் பதித்தல் | km | 0 | 5.5 | 0 | 0.45 |
| மானியிடல் மின்மாற்றிகளின் நிறுவல் | No. | 5 | 43.12 | 0 | 4 |

### விசேட செயற்றிட்டங்களும் நடவடிக்கைகளும்

#### இலகு தொடருந்துப் போக்குவரத்துச் செயற்றிட்டம் (LRT)

இலகு தொடருந்து முறைமையின் பெரும்பாலான வழித்தடங்கள் கொழும்பு நகரை ஊடறுத்துச் செல்கின்றன. எனவே, கொழும்பு நகரில் தற்போதிருக்கின்ற நிலத்தடி கம்பிவட வலையமைப்பை மாற்றம் செய்வது தேவையாக உள்ளது. தற்போது கொழும்பு நகரம் LRT வடிவமைப்புப் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது




முன்மொழியப்பட்டுள்ள இலகு தொடருந்து வழித்தடத்தின் படம்

#### கொழும்பு துறைமுக நகர் அபிவிருத்திச் செயற்றிட்டம்

கொழும்பு துறைமுக நகர் அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் வெற்றிகரமான பூரணப்படுத்தலுக்காக கொழும்பு நகரப் பொறியியலாளர்கள் MV மின் விநியோக வலையமைப்பின் வடிவமைப்பு / மின்னமைப்பு வரைபடங்களின் மீளாய்வு மற்றும் விற்பனையாளர் தகுதிகளின் மீளாய்வு ஆகியவற்றின் கீழான தங்களுடைய தொழில்நுட்ப உதவிகளை தற்போது வழங்கியுள்ளனர்.

#### கொழும்புப் பிரதேசத்தில் முதன்மை உபமின் நிலையங்களின் மேம்படுத்தல்கள்

வைத்தியசாலைகள் மற்றும் கல்வி நிறுவனங்களை உள்ளடக்கி கொழும்பு 07, 08 மற்றும் 09 இல் காணப்படுகின்ற மின்சாரத்திற்கான கேள்வியைப் பூர்த்தி செய்வதற்காக அரசாங்க மின் திணைக்களத்தினால் கிட்டத்தட்ட 60 ஆண்டுகளுக்கு முன்னர் முதன்மை உபமின் நிலையம் D இற்கு அதிகாரம் அளிக்கப்பட்டது.

மேற்படி பிரதேசங்களுக்கான மின்சார வழங்கலின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துவதற்காக 650 மில்லியன் ரூபா செலவில் 11 kV, 33 kV சொடுக்கி பல்லிணை மற்றும் துணைப் பொருட்களுடன் 16 MVA மின்மாற்றிகள் 03 இனை நிறுவியதன் மூலம் மேற்படி முதன்மை உபமின் நிலையங்களின் மேம்படுத்தலை கொழும்பு நகர ஊழியர்கள் வெற்றிகரமாக பூரணப்படுத்தியிருந்தனர்.

மேலும், கொழும்புப் பிரதேச மின்சார வழங்கலின் நம்பகத்தன்மையை மேம்படுத்துவதற்காக முதன்மை உபமின் நிலையங்கள் A, I மற்றும் J ஆகியவற்றின் கொள்ளளவை அதிகரிக்கும் நடவடிக்கைகள் ஆண்டின் காலப்பகுதியில் பூர்த்தி செய்யப்பட்டன

#### சேவைத் தரத்தை உயர்த்துவதற்காக புதிய விண்ணப்பப் படிவங்களின் அறிமுகம்

சம்பந்தப்பட்ட CSC களுக்கிடையில் பயனுறுதிமிக்க வகையில் வாடிக்கையாளர் சேவைகளை மேம்படுத்தவும் வாடிக்கையாளர் முறைப்பாடுகளை முகாமை செய்யவும் நாரம்மல பிரதேசத்தினுள் வரிசை முகாமைத்துவ முறைமை (QMS) மற்றும் வாடிக்கையாளர் உறவு முகாமைத்துவ முறைமை (CRMS) என்பன தொடங்கி வைக்கப்பட்டன. ஆவணங்கள் மற்றும் கடிதங்களை பயனுறுதிமிக்க வகையில் முகாமை செய்வதற்காக நாரம்மல பிரதேச அலுவலகம் மற்றும் CSC களினுள் பாய்ச்சல் முகாமைத்துவ முறைமை தொடங்கி வைக்கப்பட்டது.



நாரம்மல பிரதேச அலுவலகத்தில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட முறைமைகளின் தொடங்கிவைப்பு

#### பொறியியல் மீளாய்வு / பாதுகாப்பு மீளாய்வு : தலையீடுகள் இன்றி

மின்சார வழங்கலின் நம்பகத்தன்மை, நிதிசார் ஒழுங்கு, HR செயற்பாடுகள் மற்றும் IT செயற்பாடுகள் போன்றவற்றை மேம்படுத்தும் நோக்கில் கொழும்பு நகர மாகாணத்தின் பிரதிப் பொது முகாமையாளர், பொறியியலாளர்கள் மற்றும் ஏனைய ஊழியர்களின் தனிப்பட்ட ஈடுபாட்டுடன் மீளாய்வுகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டன.

#### அறிவுப் பகிர்வும் விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களும்

- கொழும்பு நகர மாகாணமானது ஊழியர்களின் தொழில்நுட்ப அறிவு, நிதிசார் / IT அறிவு, முகாமைத் திறன்கள் மற்றும் நேர் சிந்தனை மனப்பான்மை போன்றவற்றை உயர்த்துவதற்காக 35 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கு செய்திருந்தது.

# விநியோகப் பிரிவுகள் (தொடர்ச்சி)



கொழும்பு நகரில் வேலைத்தள பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்

- "අනතුරින් තොර වසරක්" என்ற தூரநோக்கை மெய்ப்பிக்கும் பொருட்டு NWP இனுள் 2018 ஆம் ஆண்டில் ஒரு பாதுகாப்புக் குழு தாபிக்கப்பட்டது.

  2019 ஆம் ஆண்டில் பாதுகாப்புக் குழுவினால் ஒவ்வொரு பிரதேச அலுவலகத்திலும் மாதிரிப் பயிற்சித் தளங்களை நிருமாணித்தல், தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு பற்றிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல், 1942 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டத்தின்படி உபகரணங்களை கட்டாயப் பாதுகாப்புச் சோதனைக்கு ஏற்பாடு செய்தல் போன்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

- NWP ஆனது NWP இன் பணித் தொகுதியினருக்காக மனப்பான்மை அபிவிருத்தி, தலைமைத்துவம் மற்றும் அணி அமைத்தல் நிகழ்ச்சித் திட்டம் ஆகியவற்றை நடத்தியிருந்தது

- ஊழியர்களின் வெளியீட்டுத் தரத்தை உறுதிப்படுத்துவதற்காக விநியோகப் பிரிவு 02 இல் கிட்டத்தட்ட 56 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன. இதற்கு மேலதிகமாக, பின்வரும் தலைப்புகளை உள்ளடக்கியதாக பயிற்சிக் கிளை மற்றும் தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு கிளை ஆகியவற்றால் வருடாந்த நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன

  - விநியோகப் புவித் தொடுப்பு மற்றும் முறைமைப் பராமரிப்பு
  - தீ அபாயப் பாதுகாப்பு மற்றும் அவசரகாலத் தயார்நிலை
  - மனித வள அபிவிருத்தியும் இ.மி.ச. இன் லீவு மற்றும் மருத்துவ நடைமுறைகளும்
  - உற்பத்தித்திறன் மேம்பாடு பற்றிய விழிப்புணர்வு
  - உலகளாவிய நிலைப்படுத்தல் முறைமை (GPS) மற்றும் பூகோளத் தகவல் முறைமை (GIS)
  - சக்திப் பாதுகாப்பு மற்றும் சக்தி முகாமை



NWP இலுள்ள மாதிரிப் பயிற்சித் தளம்

- விநியோகப் பிரிவு 02 இன் வர்த்தகம் மற்றும் நிறுவனக் கிளைக்கு இணைக்கப்பட்டுள்ள பணித்தொகுதியினர் நட்சத்திரத் தரமிடலுடன் தொடர்புடைய சுற்றறிக்கைகளால் முன்மொழியப்பட்ட பரிசீலனை மற்றும் கணக்காய்வுச் செயன்முறையை நடத்துவதற்கு பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர். கிளையினால் பிரிவில் உள்ள CSC களில் 84 பரிசீலனைகளை நடத்துவதற்கு முடிந்திருந்ததுடன் 2 ஆவது மட்டத்திற்கு அப்பால் நட்சத்திரங்களைப் பெறுவதற்குத் தேவைப்படும் மேம்படுத்தல்களுக்கான பரப்புகளும் இனங்காணப்பட்டன. பூர்வாங்க பரிசீலனை நிறைவு பெற்றதன் பின்னர், நட்சத்திரம் வழங்கும் செயன்முறை ஆரம்பிக்கப்பட்டதுடன் அது இப்பொழுதும் தொடர்கிறது.

- களப் பணியாளர்களின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு பற்றிய அறிவு, தொழில்நுட்பத் திறன்கள் ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக விநியோகப் பிரிவு 03 இல் உள்ள சப்ரகமுவ மாகாணத்தின் சகல திறனற்ற மற்றும் மின்தடப் பணியாளர் தரத்தைச் சேர்ந்த களப் பணியாளர்களுக்கு பின்வரும் தொழில்நுட்பப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன.

  - மின் மார்க்க நிருமாணமும் பராமரிப்பும்
  - உபமின் நிலையத்தின் நிருமாணமும் பராமரிப்பும்
  - பாதுகாப்பான வேலைச் சூழலை உருவாக்குதல் (தொழில்சார் பாதுகாப்பு)
  - துல்லியமான சுருள்வித்தல் மற்றும் கட்டுதல் நுட்பங்கள்
  - கொங்கிறீற்றுத் தூண்களை நிலைநிறுத்துதல்






உமா ஓயா நீர்மின்வலு செயற்திட்டம்

செயற்பாட்டு மீளாய்வு

# செயற்றிட்டங்கள் பிரிவு

# செயற்றிட்டங்கள் பிரிவு

மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் இல. ரூபா 36 பில்லியன் பெறுமதியான செயற்றிட்டங்கள் கையாளப்பட்டு முன்னெடுக்கப்பட்டிருந்த காரணத்தால் 2019 ஆம் ஆண்டு செயற்றிட்டங்கள் பிரிவுக்கு மற்றுமொரு சவால் மிகுந்த ஆண்டாக இருந்தது.

எதிர்கால மின்வலுப் பிறப்பாக்கச் செயற்றிட்டங்களுக்குக் கிடைக்கக்கூடிய தெரிவுகள் பற்றி பல கூட்டங்களில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டதுடன் புவி வெப்பமடைதல் மற்றும் தொடர்புடைய வேறு பிரச்சினைகள் காரணமாக மின்வலுப் பிறப்பாக்கமானது முன்னெப்போதையும்விட பசுமையானதாக இருக்க வேண்டுமென அங்கு முக்கியமாகத் தெரிவிக்கப்பட்டது. அதற்கிணங்க, இ.மி.ச. முன்னெப்போதையும்விட மிகவும் பசுமையான செயற்றிட்டங்களை எதிர்பார்க்கிறது. முன்னெடுக்கப்படுகின்ற செயற்றிட்ட நடவடிக்கைகள் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளது :

## மன்னார் காற்றாலை மின்வலுச் செயற்றிட்டம் (MWPP)

இலங்கை மின்சார சபையானது (இ.மி.ச.) மன்னார் தீவின் தென்பகுதிக் கரையோரத்தில் இலங்கையின் முதலாவது பெரிய அளவு காற்றாலைப் பண்ணையை அமைப்பதற்கு, உலகப் புகழ்பெற்ற டனிஷ் காற்றாலை விசையாழித் தயாரிப்பாளரான வெஸ்டாஸ் ஆசிய பசிபிக் ஏஎஸ் இற்கு EPC ஒப்பந்தத்தை வழங்கியது. இந்தச் செயற்றிட்டமானது ஒவ்வொன்றும் 3.45 MW என தரப்படுத்தப்பட்ட 30 அதிநவீன காற்றாலை விசையாழிகளை உள்ளடக்கியுள்ளது. இந்தக் காற்றாலைப் பண்ணையில் மொத்தமாக நிறுவப்பட்டுள்ள கொள்ளளவு 103.5 MW ஆகும். இலங்கையின் முக்கியமான பருவநிலை காற்றாலை முறைமைகளை சுரண்டிக்கொண்டு பெரிய அளவில் காற்றாலை மின்வலுவை உருவாக்க இ.மி.ச. இனால் மேற்கொள்ளப்பட்ட ஒரு நீண்ட கால முயற்சியின் உச்ச நிலை இதுவாகும். இந்தச் செயற்றிட்டத்தில், கடந்த நூற்றாண்டில் நீர் மின்வலு ஆற்றலுடன் செய்ததைப் போலவே காற்றிலிருந்து மின்வலுவைப் பெரிய அளவில் அறுவடை செய்வதற்கு இ.மி.ச. விரும்புகிறது.



தளத்தில் வேலை நடைபெறுகிறது - MWPP



நிறுவும் வேலைகள் நடைபெறுகின்றன - MWPP

மன்னார் மற்றும் அநுராதபுரத்தில் இந்தக் காற்றுப் பண்ணை மற்றும் பிற தொடர்புடைய வசதிகளைச் செய்வதற்குத் தேவையான நிதியானது ஆசிய அபிவிருத்தி வங்கியினால் வழங்கப்பட்ட கடன் ஒன்றின் ஊடாக ஒழுங்கு செய்யப்பட்டது. ஆரம்ப மூன்று மாத காலப்பகுதிக்கு டென்மார்க்கின் COWI AS நிறுவனத்துடனான ஆலோசனை சேவை ஒப்பந்தம் ஒன்றுடனும் செயற்பாடுகள் மற்றும் பராமரிப்பு ஒப்பந்தத்துடனும் (WOM ஒப்பந்தம்) இச்செயற்றிட்டம் ஆதரிக்கப்படுகிறது. காற்றுப் பண்ணைக்கான மொத்த முதலீடு அண்ணளவாக 141 மில்லியன் அமெரிக்க டொலர் ஆகும். அதிகாரம் அளிக்கப்பட்டதும், மன்னார் காற்றுப் பண்ணையினால் வருடாந்தம் தேசிய மின்தொகுப்பிற்கு 380 மில்லியன் அலகுகளுக்கும் மேற்பட்ட சுத்தமான மின்சாரத்தை வழங்க முடியும். இந்தச் செயற்றிட்டத்திலிருந்து 5.0 US Cents/ kWhr. இனைவிடக் குறைந்த விலையில் மின்சாரத்தைப் பிறப்பாக்கம் செய்ய முடியும். இந்தச் செயற்றிட்டத்தின் முக்கிய நன்மைகளில் ஒன்று, புதைபடிவ நிலையிலுள்ள எரிபொருளை அடிப்படையாகக் கொண்ட மின்சாரத்தை பெரிய அளவில் மாற்றம் செய்வதற்கான ஆற்றலும் அதன் மூலம் வருடாந்தம் 285,000 மெற்றிக் தொன் காபனீரொட்சைட்டு ($CO_2$) சுற்றுச்சூழலுக்கு வெளிவிடப்படுவதை தவிர்த்தலும் ஆகும்.

மன்னார் காற்றுப் பண்ணையானது, தேசிய மின்தொகுப்பிற்கு காற்றாலை பிறப்பித்த மின்சாரத்தை உத்தமமாக்குவதற்கும் கட்டுப்படுத்துவதற்குமான முன்கூட்டிய காற்று எதிர்வுகூறல் முறைமையுடன் ஆதரிக்கப்பட்ட, பகுதியளவில் அனுப்பக்கூடிய மின்வலு ஆலையொன்றாக இயக்கப்படும். இது பறவை மோதல்கள் ஏதாவது இருப்பின் அதனைத் தவிர்ப்பதற்காக காற்று விசையாழிகளைத் தேர்ந்தெடுத்து அவற்றின் இயக்கத்தை நிறுத்துவதற்கு பறவையைக் கண்டறியும் RADAR முறைமைக்கு கூடுதல் வலுச் சேர்க்கும்.

மன்னார் காற்றுப் பண்ணையானது பெரிய அளவிலான காற்றாலைகளை தொடர்புடைய மின்தொகுப்பு உதவி வசதிகளுடன் தேசிய மின்தொகுப்புடன் ஒருங்கிணைக்கின்ற சாத்தியத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கான ஒரு இலக்குச் செயற்றிட்டமாக நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இச்செயற்றிட்டமானது 2020 ஆம் ஆண்டினுள் 20% மரபுசாரா மீள்புதுப்பிக்கத்தக்க மின்வலுப் பிறப்பாக்கத்தை அடைந்து கொள்கின்ற அரசாங்கத்தின் கொள்கைக்கேற்பத் திட்டமிடப்பட்டுள்ளது.

செயற்றிட்ட வேலைகள் 2019 மார்ச்சில் ஆரம்பிக்கப்பட்டன. சகல பூர்வாங்க தள அபிவிருத்தி வேலைகளும் நிறைவு செய்யப்பட்டுள்ளன. காற்றாலை விசையாழி உபகரண வடிவமைப்பு பூரணப்படுத்தப்பட்டுள்ளதுடன் தளத்திற்கான பொறி மற்றும் உபகரணத்தின் விநியோகம் திருகோணமலை மற்றும் கொழும்புத் துறைமுகங்கள் வழியாக நடைபெறுகின்றன. மேலும், காற்றுப் பண்ணை குடியியல் வேலைகள், புதிய சேவை வீதிகள் மற்றும் செயற்றிட்டப் பகுதியில் தற்போதிருக்கின்ற வீதி வலையமைப்பின் புனரமைப்பு ஆகியனவும் முன்னெடுக்கப்பட்டன. செயற்றிட்டத்தை 2020 நவெம்பர் மாதத்திற்குள் பூரணப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

## விரிநிலங்கள் நீர் மின்வலுச் செயற்றிட்டம் (BHPP)

விரிநிலங்கள் நீர் மின்வலுச் செயற்றிட்டமானது களனி ஆற்றின் மீது கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள நீரோட்ட வகைச் செயற்றிட்டம் ஒன்றாகும். இச்செயற்றிட்டத்தின் பிரதான நோக்கம் தற்போதிருக்கின்ற பொல்பிட்டிய மின்வலு நிலைய நீரோட்டத்திசை நீர் அழுத்தத்தைப் பயன்படுத்துவதாகும். செயற்றிட்டம் 35 MW நிறுவப்பட்ட கொள்ளளவைக் கொண்டிருக்கும். செயற்றிட்டத்தின் பிரதான தளங்கள் கித்துல்கல நகருக்கு அண்மையில், கொழும்பிலிருந்து வட கிழக்காக கிட்டத்தட்ட 90 கிலோமீற்றர் தூரத்தில் அமையப் பெற்றுள்ளன. பிரதான அணை, திசைதிருப்பும் அணை, பிரதான சுரங்கம், திசைதிருப்பும் சுரங்கம், இரண்டு 17.5 MW விசையாழி மின்பிறப்பாக்கி அலகுகளுடன்கூடிய மின்வலு நிலையம், ஆளி முற்றம் மற்றும் மின் பரிமாற்ற மார்க்கம் ஆகியன செயற்றிட்டத்தில் உட்படுத்தப்பட்டுள்ள பிரதான பாகங்களாக இருக்கின்றன. விரிநில ஆலையினால் வருடாந்தம் 126 GWh மின் சக்தியைப் பிறப்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், இலங்கை மின்சார சபை கித்துல்கல பகுதியில் படகுச் சவாரி பிரதேசத்தைப் பாதுகாப்பதற்காக உறுதியான நீர் விடுவிப்பைப் பேணுவதற்குத் தீர்மானித்திருந்தது. இதன் காரணமாக வருடாந்த சக்திப் பிறப்பாக்கத்தில் ஒரு குறைவு ஏற்படும். பிறப்பாக்க இழப்பினைக் குறைக்கும் வகையில் நீர் விடுவிப்பானது ஒரு சிறியளவான நீர் மின்வலு ஆலையூடாகச் செய்யப்படுகிறது.

வெற்றிகரமான ஒப்பந்தகாரர் மூலம், ஒழுங்கு செய்யப்பட்ட நிதியைப் பாதுகாக்கும் நோக்கில் ஒரே ஒப்பந்தகாரரால் வடிவமைப்பும் நிருமாணமும் மேற்கொள்ளப்படும் அடிப்படையில் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான அமைச்சரவை அங்கீகாரமானது 2006 இல் வழங்கப்பட்டது. விலைமனுக்களின்

# செயற்றிட்டங்கள் பிரிவு (தொடர்ச்சி)

வெற்றிகரமான மதிப்பீட்டின் பின்னர் சீன தேசிய மின் உபகரணக் கூட்டுத்தாபனம் (CNEEC) செயற்றிட்டத்தின் பிரதான ஒப்பந்தகாரராகத் தெரிவு செய்யப்பட்டதுடன் ஒப்பந்த உடன்படிக்கையும் 2010 இன் இறுதியில் கைச்சாத்திடப்பட்டது. மொத்தச் செயற்றிட்டச் செலவு 82 மில்லியன் அமெரிக்க டொலர் ஆகும். 85% வீதமான நிதியை சீனாவின் கைத்தொழில் மற்றும் வர்த்தக வங்கி (ICBC) வழங்குவதுடன் மீதித் தொகை ஹற்றன் நஷனல் வங்கியிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டது. இரண்டு வங்கிகளுடனுமான கடன் உடன்படிக்கைகள் 2013 இல் கைச்சாத்திடப்பட்டன. ஒப்பந்தகாரர் தளத்திற்கு திரட்டப்பட்டதுடன் 2013 ஆகஸ்ட்டில் நிருமாண வேலைகள் தொடங்கப்பட்டன.



மின்வலு இல்லம்



பிரதான அணை, பிரதான சுரங்கம், திசைதிருப்பும் சுரங்கம், மின்வலு இல்லம் மற்றும் ஆளி முற்றத் தளம் ஆகியவற்றின் நிருமாண வேலைகள் சமாந்தரமாக நடைபெறுகின்றன. தற்போதைய பௌதிக ரீதியான முன்னேற்றம் 70% ஆக இருப்பதுடன் செயற்றிட்டத்தை 2021 சனவரியில் நிறைவு செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

விரிநில நீர் மின்வலுச் செயற்றிட்டமானது இலங்கையில் CDM பதிவினைப் பெற்றுக் கொண்ட முதலாவது பெரிய அளவிலான நீர் மின்வலுச் செயற்றிட்டமாகும்.

## மொரகொல்ல நீர் மின்வலுச் செயற்றிட்டம் (MHPP)

புதைபடிவ நிலையிலுள்ள எரிபொருள் மூலமான மின்வலுப் பிறப்பாக்கத்தின் வகிபாகத்தைக் குறைப்பதற்காக இலங்கை அரசாங்கத்தினால் (GoSL) அடையாளம் காணப்பட்ட பல்வேறு நீர் மின்வலுச் செயற்றிட்டங்களில் MHPP உம் ஒன்றாகும். இது கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக எளிதில் சுரண்டப்படக்கூடிய இடங்கள் பயன்படுத்தப்படுவதன் காரணமாக நீர் மின்வலுவையும் விட மிஞ்சிச் செல்கிறது. செயற்றிட்ட நிறைவேற்று முகவராக மின்வலு, சக்தி மற்றும் வியாபார அபிவிருத்தி அமைச்சும் (MoPE&BD) நடைமுறைப்படுத்தல் முகவராக இலங்கை மின்சார சபையும் (CEB) இருக்கின்றன. நிதியுதவியை ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) வழங்குகிறது. 30.5 MW நிறுவப்பட்ட கொள்ளளவைக் கொண்ட இச்செயற்றிட்டத்தின் மூலம் வருடாந்தம் 100 GWh சக்தியைப் பிறப்பாக்கம் செய்ய எதிர்பார்க்கப்படுகிறது.

கூடுதல் EIA அறிக்கையானது செயற்றிட்டத்தை அங்கீகரிக்கின்ற அதிகாரசபையான இலங்கை மகாவலி அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட்டது. செயற்றிட்டத்திற்கான ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டதுடன் வடிவமைப்பு மற்றும் மேற்பார்வை வேலைகள் நடைபெறுகின்றன.

துண்டம் A1 – ஆயத்த வேலைகளுக்கான ஒப்பந்தம் வரையறுக்கப்பட்ட வி.வி. கருணாரத்ன அன்ட் கம்பனிக்கு 2018 மார்ச்சில் வழங்கப்பட்டது. அலுவலகக் கட்டடத்தின் நிருமாண வேலைகள் மற்றும் மின்வலு இல்லத்திற்கான பாதைகள் ஆகியவற்றின் முன்னேற்றம் முறையே 47% உம் 73% உம் ஆகும். ஒட்டுமொத்த முன்னேற்றம் ஏறத்தாழ 20% ஆகும்.

துண்டம் A2 – பிரதான குடியியல் வேலைகள் மற்றும் துண்டம் B - இயந்திர மற்றும் மின் வசதிகள் என்பவற்றுக்கான விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளன. துண்டம் A2 இற்கான விலைமனு மூடப்பட்டு, மதிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. துண்டம் B இற்கான விலைமனு 2019 மே மாதம் மூடப்படும்.

செயற்றிட்டத்தால் பாதிப்புக்குள்ளாகும் மக்களுக்கான (PAPs) மீள்குடியேற்ற வீட்டுத் திட்டத்தின் முதலாம் கட்ட நிருமாணப் பணிகள் நிறைவடைந்துள்ளன.



PAPs இற்கான நிறைவு பெற்றுள்ள மீள்குடியேற்றக் கிராமம்



புதிய தொழில்தருநர்களின் அலுவலகக் கட்டடத்தின் நிருமாண வேலை

# செயற்றிட்டங்கள் பிரிவு (தொடர்ச்சி)

## உமா ஓயா நீர்மின்வலுச் செயற்றிட்டம் (UOHPP)

உமா ஓயா பல நோக்கு அபிவிருத்திச் செயற்றிட்டமானது (UOMDP) நீர்பாசன மற்றும் நீர் முகாமைத்துவ அமைச்சினால் (MOIWM) நடைமுறைப்படுத்தப்படுகிறது. இது தற்போதைய மகாவலி, விவசாயம், நீர்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சின் (MMAI&RD) செயல் எல்லையின்கீழ் வருகின்றது. இ.மி.ச. இன் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் இச்செயற்றிட்டத்தின் மின் எந்திரவியல் வேலைகளுக்கான தொழில்நுட்ப ஆலோசனை சேவைகளை வழங்குவதற்காக UOMDP செயற்றிட்ட முகாமைத்துவ அலகிற்கு (PMU) இணைக்கப்பட்டுள்ளனர்.

UOMDP ஆனது உமா ஓயாவுக்குக் குறுக்காகவும் வெலிமடையிலுள்ள துணை நதிக்குக் குறுக்காகவும் இரண்டு அணைகளை நிருமாணித்தல், நீரை இரு பக்கமும் இடமாற்றக்கூடிய (டிரான்ஸ்பேசின்) திசைதிருப்பும் சுரங்கம், 120 MW நிறுவப்பட்ட கொள்ளளவைக் கொண்ட நிலத்தடி நீர் மின்வலு ஆலை, ஹம்பாந்தோட்டை மற்றும் மொணராகலை மாவட்டங்களில் உள்ள அண்ணளவாக 5000 ஹெக்டயர் பரப்புள்ள நிலத்திற்கான நீர்பாசனத்திற்காக 145 MCM நீரை திசைதிருப்புதல் மற்றும் ஏனைய நீர்முழ்த்தத் தேவைகளுக்கான நிருமாணங்கள் ஆகியவற்றை உள்ளடக்குகிறது. இங்கு எதிர்பார்க்கப்படும் வருடாந்த சக்தி உற்பத்தி 290 GWh ஆகும். இந்த மின்வலு ஆலை 22.7 km நீளமுள்ள 132 kV மின் பரிமாற்ற மார்க்கம் வழியாக பதுளை மின்தொகுப்பு உபமின் நிலையத்திற்கு இணைக்கப்படும்.



புகுல்பொல அணையில் நீர் கொட்டுதல்

இலங்கை அரசாங்கத்தின் (GOSL) சார்பில் பெற்றோலியம் மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் மற்றும் ஈரான் இஸ்லாமியக் குடியரசின் எரிசக்தி அமைச்சர் (GIRI) ஆகியோருக்கிடையில் 2007 நவெம்பர் 27 ஆந் திகதி செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி (MOU), பொறியியல், பெறுகை மற்றும் நிருமாண (EPC) ஒப்பந்தமொன்றாக FC மூலம் "உமா ஓயா பலநோக்கு அபிவிருத்திச் செயற்றிட்டத்தை" நடைமுறைப்படுத்துவதற்கு, இலங்கை அரசாங்கத்தின் நடைமுறைப்படுத்தல் முகவரான நீர்பாசன மற்றும் நீர் வளங்கள் அமைச்சு (MOIWM) மற்றும் FC ஆகியவற்றுக்கிடையில் 2008 ஏப்ரல் 28 ஆந் திகதி செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்த உடன்படிக்கையைச் செயற்படுத்த அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதற்கிணங்க, FC ஆனது செயற்றிட்டம் பற்றிய விவரமான சாத்தியவள ஆய்வுகளை மேற்கொண்டு, விவரமான பொறியியல் வடிவமைப்பைத் தயாரித்ததுடன், சகல பொருட்கள், உபகரணங்கள், இயந்திரங்கள் ஆகியவற்றையும் கொள்வனவு செய்துள்ளதுடன் பௌதிக ரீதியான நிருமாணம், நிறுவல்கள், பரிசீலனைகள் மற்றும் செயற்றிட்டத்தின் அதிகாரம் வழங்கல் ஆகியவற்றையும் மேற்கொண்டது. மொத்த ஒப்பந்தத் தொகை 529,059,198 அமெரிக்க டொலராக உள்ளதுடன் ஒப்பந்தமானது 2010 மார்ச் 15 ஆந் திகதி முதல் நடைமுறைக்கு வந்திருந்தது



மின்வலு இல்ல இயந்திர கூடத் தளத்தின் தற்போதைய காட்சி



விசையாழியின் நிறுவல் (அலகு 1)



பிரதான சுரங்க திருப்புமுனை

2010 மார்ச் 15 இல் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்ட போது, செயற்றிட்டத்தை நிறைவு செய்யும் திகதியாக 2015 மார்ச் 15 ஆந் திகதி அட்டவணைப்படுத்தப்பட்டது. தலைப் பகுதிச் சுரங்கப் பாதையில் எதிர்பாராத விதமாக நீர் நுழைந்ததன் காரணமாகவும் அதைத் தொடர்ந்து வந்த சமூகத் தாக்கங்கள் காரணமாகவும் நிறைவு செய்ய எதிர்பார்க்கப்பட்ட திகதி (நிருமாணம் மற்றும் நடைமுறைப்படுத்தல்) 2019 டிசெம்பர் 31 வரையும் செயற்றிட்டக் காலப்பகுதி 2020 டிசெம்பர் 31 வரையும் (குறைபாடு மற்றும் பொறுப்புக் காலப்பகுதியுடன்) நீட்டிக்கப்பட்டது. ஆனால் தற்போதைய நிகழ்ச்சிநிரலின்படி, அதிகாரம் வழங்கும் திகதி 2020 செப்ரெம்பர் என அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டின் இறுதியில் செயற்றிட்டத்தின் முன்னேற்றம் 93.75% ஆகும்.

# செயற்றிட்டங்கள் பிரிவு (தொடர்ச்சி)



நடுக்குடா GSS 220 kV ஆளி முற்றத்தின் நிருமாணப் பணிகள்

### பசுமை மின்வலு அபிவிருத்தி மற்றும் சக்தி வினைத்திறன் மேம்பாட்டு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் (கட்டம் 2)

பசுமை மின்வலு அபிவிருத்தி மற்றும் சக்தி வினைத்திறன் மேம்பாட்டு முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் - கட்டம் 2 இல் மின் பரிமாற்ற உட்கட்டமைப்பு மேம்பாடு, இடைநிலை மின்னழுத்த வலையமைப்பின் கொள்ளளவு மற்றும் சக்தி வினைத்திறன் மேம்பாடு மற்றும், திறன் மின்தொகுப்பு மற்றும் மானியிடல் முன்னோடி உப செயற்றிட்டத்துடன் தொடர்புடைய கேள்விப் பக்க முகாமைத்துவம் (DSM) ஆகியவை அடங்குகின்றன.

2020 இல் நிறைவுபெறும் என முன்மொழியப்பட்ட காற்றாலை மின்வலுச் செயற்றிட்டத்தில் இருந்து பிறப்பிக்கப்படும் சக்தியை வெளியேற்றுவதற்காக மன்னாரில் 220 kV மின் பரிமாற்ற அபிவிருத்தி வேலைகள், 220 kV பொல்பிட்டிய - ஹம்பாந்தோட்டை மின் பரிமாற்ற மார்க்கம் மற்றும் ஹம்பாந்தோட்டையில் 220 kV மின்தொகுப்பு உபமின் நிலையம் ஆகியவற்றின் நிருமாணம், ஹொரணை – பாதுக்கை 132 kV மின் பரிமாற்ற மார்க்கத்தின் நிருமாணம், ஹபரணை – வாழைச்சேனை 132 kV மின் பரிமாற்ற மார்க்கத்தின் இரண்டாம் சுற்று இழுத்துக்கட்டல், 132/33 kV கொழும்பு உபமின் நிலையம் B இன் நிருமாணம், தெஹிவளை, ஹொரணை, பாதுக்கை, கொலன்னாவ, மாதம்பே, கொட்டுகொட மின்தொகுப்பு உபமின் நிலையங்களின் மேம்படுத்தல்கள், பியகம மின்தொகுப்பு உபமின் நிலையத்தில் 220/ 33 kV கொள்ளளவை உயர்த்தல், அநுராதபுர பிரதேசம் மற்றும் குருநாகலில் உள்ள எத்தகல பிரதேசம் ஆகியவற்றில் இடைநிலை மின்னழுத்தத்தை மேம்படுத்தல், கப்பல்துறை தொடக்கம் சீனக்குடா வரையும் எம்பிலிப்பிட்டியில் இருந்து வெனிவலார வரையும் மத்துகம தொடக்கம் பெந்தோட்டை வரையும் 33 kV மின் மார்க்கங்களை நிருமாணித்தல் ஆகியவற்றை இந்தச் செயற்றிட்டத்தின் நோக்கெல்லை உள்ளடக்குகிறது. அத்துடன் ரத்தனப்பிட்டிய முதன்மை உபமின் நிலையத்தின் நிருமாணம், எத்துல் கோட்டே மற்றும் பெலிகல முதன்மை உபமின் நிலையங்களின் மேம்படுத்தல்கள் ஆகியவற்றையும்கூட இது உள்ளடக்குகிறது. கேள்விப் பக்க முகாமைத்துவ (DSM) நடவடிக்கையானது திறன் மானி நிறுவல் வேலைகளுடன் சம்பந்தப்பட்டதாகும்.

ஊவா மாகாணம் தவிர்ந்த இலங்கையில் உள்ள சகல மாகாணங்களும் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் மின் பரிமாற்றம், விநியோகம் மற்றும் கேள்விப் பக்க முகாமைத்துவக் கூறுகளின் நடைமுறைப்படுத்தலினால் நேரடியாக நன்மைகளைப் பெற்றுக் கொள்ளும்.

கட்டம் 2 இன் மொத்த முதலீட்டுச் செலவு 260 மில்லியன் அமெரிக்க டொலர் ஆகும். ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) 150 மில்லியன் அமெரிக்க டொலரை வழங்குவதுடன் AFD ஆனது 30 மில்லியன் அமெரிக்க டொலரை வழங்குகிறது. மீதித் தொகை இலங்கை மின்சார சபையினால் (இ.மி.ச.) இடப்படுகிறது. ADB மற்றும் CEB இற்கிடையிலான கடன் உடன்படிக்கை 2016 டிசெம்பர் 27 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்டதுடன் செயற்றிட்டத்தை 2021 டிசெம்பரில் பூர்த்திசெய்ய எதிர்பார்க்கப்படுகிறது. 2019 ஆம் ஆண்டின் இறுதிக்குள், சகல மின் பரிமாற்ற உட்கட்டமைப்புச் செயற்றிட்டங்களின் கூறுகளும் வழங்கப்பட்டுள்ளதுடன் அவை நிருமாணத்தின் கீழ் உள்ளன.

### தேசிய மின் பரிமாற்ற, விநியோக வலையமைப்பு அபிவிருத்தி மற்றும் வினைத்திறன் மேம்பாட்டுச் செயற்றிட்டம் (NTDND & EIP)

#### செயற்றிட்ட அம்சங்களும் நிதியிடல் மூலமும்

TNTDND & EIP இற்கு கடன் இல. SLP 113 இன் கீழ் யப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மை (JICA) இனால் நிதியுதவி அளிக்கப்பட்டது. இச்செயற்றிட்டம் 4 பொதிகளை உள்ளடக்கியுள்ளது. பொதி 1, 132 kV/220 kV /400 kV மின் பரிமாற்ற மார்க்கங்களை நிருமாணிப்பதற்கானது. பொதி 2 ஆனது 220/132 kV கிரிந்திவெல ஆளியிடல் நிலையம், 132/ 33 kV கிரிந்திவெல மின்தொகுப்பு உபமின் நிலையம், 132/ 33 kV பத்தரமுல்லை உள்ளக உபமின் நிலையம் ஆகியவற்றை நிருமாணிப்பதையும் தற்போதிருக்கின்ற பல்வேறு மின்தொகுப்பு உபமின் நிலையங்களின் மேம்படுத்தலைச் செய்வதையும் உள்ளடக்கியுள்ளது. பொதி 3 ஆனது 132 kV / 220 kV மின் பரிமாற்ற மார்க்கங்கள், கொத்மலை GSS இலிருந்து புதிய பொல்பிட்டிய GSS வரையான 220 kV மின் பரிமாற்ற மார்க்கம் மற்றும் பொல்பிட்டிய GSS இலிருந்து புதிய ஹபரணை GSS வரையான 132 kV மின் பரிமாற்ற மார்க்கம் நிருமாணங்களை உள்ளடக்கியுள்ளது. பொதி 4 ஆனது முதன்மை உபமின் நிலைய நிருமாணம், தெஹிவளை, கல்கிசை மற்றும் பத்தரமுல்லயில் SCADA/ DAS உடன்கூடிய 11 kV கம்பி வடங்களின் நிருமாணம் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

#### தற்போதைய நிலை

பொதிகள் 01, 02, 03 இற்கான ஒப்பந்த உடன்படிக்கைகள் ஏற்கனவே கைச்சாத்திடப்பட்டுள்ளதுடன் 2019 ஆம் ஆண்டின் இறுதியில் பொதிகள் 02, 03 இற்கான பௌதிக முன்னேற்றங்கள் முறையே 14%, 13% ஆகும். செயற்றிட்டத்தின் பொதி 04 இற்கான ஒப்பந்த உடன்படிக்கைக்கு கைச்சாத்திடுதல் நிலுவையில் உள்ளது.

### பாரிய கொழும்பு மின் பரிமாற்றம், விநியோகம் மற்றும் இழப்பைக் குறைக்கும் செயற்றிட்டம் (GCT&DLRP)

#### செயற்றிட்ட அம்சங்களும் நிதியிடல் மூலங்களும்

பாரிய கொழும்பு மின் பரிமாற்றம், விநியோகம் மற்றும் இழப்பைக் குறைக்கும் செயற்றிட்டமானது கொழும்பு நகரில் திட்டமிடப்பட்டுள்ள பாரிய அபிவிருத்தி நடவடிக்கைகள் காரணமாக அதிகரிக்கின்ற மின்சாரத் தேவைகளை நிவர்த்தி செய்வதற்காகவும் மின்சாரத்தின் நம்பகத்தன்மையை மேம்படுத்தி

# செயற்றிட்டங்கள் பிரிவு (தொடர்ச்சி)

முறைமை இழப்புகளைக் குறைப்பதற்காகவும் பாரிய கொழும்புப் பிரதேசத்தில் மின் பரிமாற்றம் மற்றும் விநியோக வலையமைப்பை வலுப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்ட ஒரு செயற்றிட்டமாகும்.



கொழும்பு L மின்தொகுப்பு உபமின் நிலையம்

செயற்றிட்டத்தின் நோக்கெல்லையின் கீழ், பாரிய கொழும்பு மின்வலு வலையமைப்பின் கொள்ளளவானது புதிய 220 kV நிலத்தடி மின் பரிமாற்ற கம்பிவட வலையமைப்பின் மூலம் இரட்டிப்பாகிறது. மேலும், மூன்று புதிய மின்தொகுப்பு உபமின் நிலையங்களை நிருமாணித்தல், தற்போதிருக்கின்ற ஐந்து மின்தொகுப்பு உபமின் நிலையங்களை மேம்படுத்தல், இரண்டு மின்தொகுப்பு உபமின் நிலையங்களை விரிவாக்கம் செய்தல், நிலத்தடி மின் பரிமாற்ற கம்பிவடங்களின் 34 km நீள கம்பிவட வழித்தடத்தை அமைத்தல், நிலத்தடி விநியோக கம்பி வடங்களின் 31 km நீள கம்பிவட வழித்தடத்தை அமைத்தல் மற்றும் 88 புதிய 11 kV விநியோகப் பலகங்களை நிறுவுதல் ஆகியவற்றின் மூலம் செயற்றிட்டமானது தற்போதுள்ள மின்வலு வலையமைப்பை மேம்படுத்தியுள்ளது. இவற்றுக்கு மேலதிகமாக, விநியோக வலையமைப்புகளின் பராமரிப்பு வேலைகளுக்குத் தேவைப்படும் விசேட வாகனங்களையும் செயற்றிட்டம்



களனிதிஸ்ஸ 33 kV GIS உபமின் நிலையம்

வழங்கியுள்ளது.

### தற்போதைய நிலை

சகல மூன்று பொதிகளினது வேலைகளின் நோக்கெல்லையானது பூரணப்படுத்தப்பட்டுள்ளதுடன் தற்போது குறைபாடுகள் பொறுப்புக் காலப்பகுதியாகும். கொடுப்பனவுகளை விடுவித்தல் மற்றும் குறைபாடுகளை நிவர்த்தித்தல் என்பன நடைபெறுகின்றன.

## மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி உறிஞ்சல் மின் பரிமாற்ற அபிவிருத்திச் செயற்றிட்டம் (REATDP)

### செயற்றிட்ட அம்சங்களும் நிதியிடல் மூலங்களும்

அபிவிருத்தி செய்யப்பட வேண்டியுள்ள பல சிறியளவு நீர் மின்வலுச் செயற்றிட்டங்கள் மலிபோட, தெரனியகல, பலாங்கொடை, இரத்தினபுரி, பதியப்பள்ளம, இராகலை, நுவரெலியா மற்றும் கொத்மலைப் பிரதேசங்களில் அமைந்திருக்கின்றன. எவ்வாறாயினும், மேற்படி பிரதேசங்களில் அமைந்துள்ள தற்போதைய மின்தொகுப்பு உபமின் நிலையங்கள், சிறிய நீர் மின்வலுச் செயற்றிட்டங்களின் உறிஞ்சல் கொள்ளளவு ஏற்கனவே மீறிவிட்டது. எனவே, தேசிய மின்தொகுப்பிற்கு புதிய மீள்புதுப்பிக்கத்தக்க சக்தியை உறிஞ்சுவதற்கு வசதியாகவும் மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் அதிகரிக்கின்ற மின்சாரத்திற்கான கேள்விக்கு வழங்கல் செய்வதற்காகவும் மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி உறிஞ்சல் மின் பரிமாற்ற அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் கீழ் மலிபோட, வேவல்வத்தை, நாவலப்பிட்டி மற்றும் இராகலை ஆகிய இடங்களில் புதிய மின்தொகுப்பு உபமின் நிலையங்களையும் தொடர்புடைய மின் பரிமாற்ற மார்க்கங்களையும் நிருமாணிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நான்கு 132/33 kV, 2 □x 31.5 MVA மின்தொகுப்பு உபமின் நிலையங்களின் (மலிபோட, இராகலை, வேவல்வத்தை மற்றும் நாவலப்பிட்டிய) நிருமாணம் மற்றும் கிட்டத்தட்ட 45 km மொத்த நீளம் கொண்ட 132 kV மின் பரிமாற்ற மார்க்கங்களின் நிருமாணம் ஆகியன மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி உறிஞ்சல் மின் பரிமாற்ற அபிவிருத்திச் செயற்றிட்ட வேலையின் நோக்கெல்லையினுள் அடங்குகின்றன. REATD செயற்றிட்டத்திற்கு பிரெஞ்சு அபிவிருத்தி முகவராண்மை (AFD) மற்றும் இலங்கை மின்சார சபை ஆகியவற்றால் நிதியளிக்கப்படுகிறது. இந்தச் செயற்றிட்டத்திற்கான பொருட்கள் மற்றும் வேலைகள் பதினைந்து (15) ஒப்பந்தகாரர்களிடமிருந்து (ஆயத்தத் தயாரிப்பு ஒப்பந்தகாரர்கள் இன்றி) இ.மி.ச. இனால் நேரடியாக வாங்கப்படுகின்றன

### தற்போதைய நிலை

சகல பதினைந்து ஒப்பந்தங்களும் 2018 ஆம் ஆண்டின் இறுதியில் வழங்கப்பட்டுள்ளன. மின்தொகுப்பு உபமின் நிலையங்களின் (GSs) நிருமாண வேலைகள் 2018 சனவரியில் ஆரம்பிக்கப்பட்டதுடன் மின் பரிமாற்ற மார்க்கங்களின் நிருமாண வேலைகள் 2018 ஏப்ரலில் ஆரம்பிக்கப்பட்டன. சகல நான்கு மின்தொகுப்பு உபமின் நிலையங்களினதும் குடியியல் மற்றும் நிலைநிறுத்துதல் வேலைகள் பெரும்பாலும் பூர்த்தியாகியுள்ளதுடன் அதிகாரம் வழங்கும் வேலைகள் 2019 ஆகஸ்ட்டில் ஆரம்பிக்கப்பட்டன. மின் பரிமாற்ற மார்க்கக் கோபுரங்களுக்கான அடித்தளங்களை அமைக்கும் பணிகள் 2019 அக்டோபரில் நிறைவு பெற்றன. கோபுரங்களை எழுப்புதல் மற்றும் கடத்திகளைப் பொருத்துதல் என்பன 2019 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டன. செயற்றிட்டத்தை 2020 ஆம் ஆண்டின் 4 ஆவது காலாண்டில் நிறைவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

## மின்வலு முறைமையின் நம்பகத்தன்மையை வலுப்படுத்தும் செயற்றிட்டம் (PSRSP)

### செயற்றிட்ட அம்சங்களும் நிதியிடல் மூலங்களும்

நாட்டின் அபிவிருத்தியைச் சமாளிப்பதற்கும் நம்பகமான மற்றும் நிலையான மின்வலு முறைமையைப் பேணுவதற்கும் மின் பரிமாற்ற முறைமைக்கு அவசியமான மின்னோட்டத் தேவைகளை மேம்படுத்துவதற்கும் PSRSP செயற்றிட்டத்தின் கீழ் மின்தொகுப்பு உபமின் நிலையங்கள் மற்றும் மின் பரிமாற்ற மார்க்கங்களை நிருமாணிக்க மின் பரிமாற்றத் திட்டமிடல் கிளை முன்மொழிந்துள்ளது. இதற்கு 2021 இல் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் (ADB) நிதியளிக்கப்படும் என்பதுடன் மொத்தக் கடன் தொகை 200 மில்லியன் அமெரிக்க டொலராக இருக்கும். இது பின்வருவனவற்றை உள்ளடக்குகிறது.

1. வாரியப்பொலவில் 220 kV/132 kV ஆளியிடல் நிலையத்தை நிருமாணித்தல், மீரிகமவில் 220 kV ஆளியிடல் நிலையத்தை நிருமாணித்தல், கொட்டதெனியாவ மற்றும் கொட்டுகொடவில் 220 kV/ 33 kV மின்தொகுப்பு உபமின் நிலையங்களை நிருமாணித்தல், திஸ்ஸமகாராம, பத்தேகம, ஹோமாகம, நீர்கொழும்பு, வாரியப்பொல, பேலியகொடை, கலவான ஆகிய இடங்களில் 132 kV/ 33 kV மின்தொகுப்பு உபமின் நிலையங்களை நிருமாணித்தல் மற்றும் கண்டியில் 132 kV/ 11 kV மின்தொகுப்பு உபமின் நிலையத்தை நிருமாணித்தல்.

2. 132 kV/ 33 kV எம்பிலிப்பிட்டிய மற்றும் மாத்தறை உபமின் நிலையங்களை மேம்படுத்தல், புதிய அநுராதபுரம், குருநாகல், மாத்தறை மற்றும் ஹம்பாந்தோட்டை மின்தொகுப்பு உபமின் நிலையங்களில் 132 kV நுழைவழிகளை (bays) நிருமாணித்தல்.

# செயற்றிட்டங்கள் பிரிவு (தொடர்ச்சி)

3. மாத்தறை – ஹம்பாந்தோட்டை, புதிய அநுராதபுரம் – புதிய ஹபரணை, ஹம்பாந்தோட்டை – திஸ்ஸமகாராம, குருநாகல் – வாரியப்பொல தெற்கு, வாரியப்பொல தெற்கு – வாரியப்பொல, வாரியப்பொல தெற்கு – குருநாகல் மற்றும் குக்குளே – கலவான ஆகியவற்றை உள்ளடக்கிய அண்ணளவாக 250 km நீளம் கொண்ட 220 kV மற்றும் 132 kV மின் பரிமாற்ற மார்க்கங்களை நிருமாணித்தல

#### தற்போதைய நிலை
செயற்றிட்டம் 2019 இல் ஆரம்பிக்கப்பட்டதுடன், 2023 இற்குள் நிறைவு செய்ய எதிர்பார்க்கப்படுகிறது. உபமின் நிலையங்களை நிருமாணிப்பதற்கான காணிகள் இனங்காணப்பட்டுள்ளதுடன் காணிக் கொள்வனவு தற்போது நடைபெறுகிறது. மின் மார்க்க அளவை மற்றும் மண் பரிசோதனை என்பன நடைபெறுகின்றன

## மின் பரிமாற்றச் செயற்றிட்டங்கள் கிளை

மின் பரிமாற்றச் செயற்றிட்டங்கள் கிளை 2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் விசேட செயற்றிட்ட நடவடிக்கைகளில் முழுமூச்சுடன் ஈடுபட்டிருந்தது. ஆண்டின் காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஒவ்வொரு செயற்றிட்டமும் பற்றிய சுருக்கமான விவரணம் கீழே தரப்பட்டுள்ளது

### தூய சக்தி மற்றும் வலையமைப்பு வினைத்திறன் மேம்பாட்டுச் செயற்றிட்டம்

#### நிதியிடல் மூலம்
தூய சக்தி மற்றும் வலையமைப்பு வினைத்திறன் மேம்பாட்டுச் செயற்றிட்டத்தின் சகல பொதிகளுக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியளித்துள்ளது. 2019 ஆம் ஆண்டில் தொடரப்பட்ட பொதிகளின் விபரங்கள் பின்வருமாறு:

#### பொதி 1: மன்னார் மின் பரிமாற்ற உட்கட்டமைப்புச் செயற்றிட்டத்தின் நிருமாணம்
மன்னார் மின் பரிமாற்ற உட்கட்டமைப்புச் செயற்றிட்டத்தின் நோக்கெல்லையானது 220 kV / 33 kV மன்னார் மின்தொகுப்பு உபமின் நிலையத்தை நிருமாணித்தல் மற்றும் அதனை மன்னார் – வவுனியா – புதிய அநுராதபுரம் 220 kV நிருமாணிக்கப்பட்ட (220 kV இயக்கப்பட்ட) 70 km + 60 km மின் பரிமாற்ற மார்க்கங்களை நிருமாணிப்பதன் மூலம் தேசிய மின்தொகுப்பிற்கு இணைத்தல் ஆகியவற்றுக்காக மாற்றம் செய்யப்பட்டுள்ளது. 220 kV இன் நிருமாணமானது மன்னார் பகுதியிலுள்ள காற்று மின்வலுவின் முழு ஆற்றலையும் விருத்தி செய்ய உதவும்.

#### தற்போதைய நிலை
சகல நிருமாண நடவடிக்கைகளும் 2019 இல் நிறைவு பெற்றுள்ளன.

#### பொதி 2: 132 kV மின் பரிமாற்ற உட்கட்டமைப்பு நிருமாணச் செயற்றிட்டம்
132 kV மின் பரிமாற்ற உட்கட்டமைப்புச் செயற்றிட்டத்தின் நோக்கெல்லையானது கேகாலையில் 132 / 33 kV மின்தொகுப்பு உபமின் நிலையங்களை நிருமாணித்தல் மற்றும் அதனை 22 km, 132 kV மின் பரிமாற்ற மார்க்கம் ஒன்றின் ஊடாக இணைத்தல் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது. மேலும், இது பொல்பிட்டிய – புதிய பொல்பிட்டிய, அத்துருகிரிய – பாதுக்கை 132 kV மின் பரிமாற்ற மார்க்கங்களை நிருமாணித்தல், அத்துருகிரிய தொடக்கம் கொலன்னாவை வரையான 15 km மின் பரிமாற்ற மார்க்கத்தை மீள நிருமாணித்தல் மற்றும் தற்போதிருக்கின்ற 7 மின்தொகுப்பு உபமின் நிலையங்களில் 160 MVAr கொள்ளளவி வங்கிகளை நிறுவுதல் ஆகியவற்றையும் உள்ளடக்கும்.

#### தற்போதைய நிலை
பொல்பிட்டிய – புதிய பொல்பிட்டிய மின் மார்க்கமானது 2017 நவெம்பரில் வலுவூட்டப்பட்டதுடன் பணிகளுக்காக மின் மார்க்கம் விடுவிக்கப்படாததால் அத்துருகிரிய – கொலன்னாவை மின் மார்க்கத்தின் மீள் நிருமாணப் பணிகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. ஏனைய சகல நிருமாண நடவடிக்கைகளும் 2019 இல் பூர்த்தி செய்யப்பட்டன.

#### பொதி 3: 220 kV மின் பரிமாற்ற உட்கட்டமைப்பு நிருமாணச் செயற்றிட்டம்
220 kV உட்கட்டமைப்புச் செயற்றிட்டத்தின் நோக்கெல்லையானது பொல்பிட்டிய மற்றும் பாதுக்கையில் 220/ 132/ 33 kV புதிய மின்தொகுப்பு உபமின் நிலையங்களை நிருமாணித்தல், 70 km பொல்பிட்டிய – புதிய பொல்பிட்டிய – பாதுக்கை – பன்னிப்பிட்டிய 220 kV மின் பரிமாற்ற மார்க்கத்தை நிருமாணித்தல் ஆகியவற்றை உள்ளடக்குகிறது. மின் பரிமாற்ற முறைமையானது மேல் மாகாண சுமை நிலையங்களுக்கும் லக்ஷபான தொகுதிக்கும் இடையில் மின்வலுவை சுமுகமாக இடமாற்றுவதற்கு உதவும்.

#### தற்போதைய நிலை
பாதுக்கை மற்றும் பன்னிப்பிட்டிய GSS களுக்கிடையிலான மின் பரிமாற்ற மார்க்க இழுத்துக்கட்டல் வேலைகள் தவிர்ந்த ஏனைய சகல நிருமாண நடவடிக்கைகளும் 2019 இல் பூரணப்படுத்தப்பட்டன

### பசுமை மின்வலு அபிவிருத்தி மற்றும் சக்தி வினைத்திறன் மேம்பாட்டு முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் (கட்டம் 1) பகுதி 2 – மின் பரிமாற்றம்

#### செயற்றிட்ட அம்சங்களும் நிதியிடல் மூலமும்

இந்தச் செயற்றிட்டத்திற்கு ADB (23.9 மில்லியன் அமெரிக்க டொலர்) நிதியுதவி வழங்கியிருந்ததுடன் இணை – நிதியுதவியை AFD (30.0 மில்லியன் அமெரிக்க டொலர்) வழங்கியிருந்தது. இந்தச் செயற்றிட்டத்தின் கீழ், திருகோணமலை, கட்டுநாயக்கா, புதிய அநுராதபுரம் ஆகிய இடங்களில் உள்ள 132 / 33 kV மின்தொகுப்பு உபமின் நிலையங்கள் மேம்படுத்தப்படும். கெரவலப்பிட்டியில் உள்ள 220 / 33 kV மின்தொகுப்பு உபமின் நிலைய வேலைகள் ஏற்கனவே நிறைவு பெற்றுள்ளதுடன் வர்த்தக ரீதியான செயற்பாட்டிற்காக இந்த ஆண்டில் வலுவூட்டப்பட்டது. மேலும், கப்பல்துறை, அநுராதபுரம், களுத்துறை மற்றும் கெஸ்பேவ ஆகிய இடங்களில் உள்ள மின்தொகுப்பு உபமின் நிலையங்களுடன் இணைக்கப்பட்ட மின் பரிமாற்ற மார்க்க வேலைகள் நிறைவு பெற்றுள்ளதுடன் இந்த ஆண்டில் வலுவூட்டப்பட்டுள்ளன.

#### தற்போதைய நிலை
அநுராதபுரம், களுத்துறை மற்றும் கெஸ்பேவ ஆகிய இடங்களில் புதிய 132/ 33 kV மின்தொகுப்பு உபமின் நிலையங்கள் மற்றும் கப்பல்துறையில் 220 kV/ 33 kV மின்தொகுப்பு உபமின் நிலையம் ஆகியன நிருமாணிக்கப்படுகின்றன. இந்த மின்தொகுப்பு உபமின் நிலையங்களின் நிருமாணங்களை 2020 ஆம் ஆண்டில் நிறைவு செய்ய எதிர்பார்க்கப்படுகிறது.

## மின் பரிமாற்ற நிருமாணச் செயற்றிட்டங்கள் கிளை

### மின்தொகுப்பு உபமின் நிலைய நிருமாணச் செயற்றிட்டங்கள் அலகு

மின்தொகுப்பு உபமின் நிலைய நிருமாணச் செயற்றிட்டங்களின் கீழ், நிறைவு பெற்ற மற்றும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற செயற்றிட்டங்கள் பற்றிய விபரம் கீழ்வருமாறு:

#### சபுகஸ்கந்த மின்தொகுப்பு உபமின் நிலையத்தில் 33 kV ஊட்டிகளின் நிருமாணம்

#### செயற்றிட்ட அம்சங்கள்

சபுகஸ்கந்த மின்தொகுப்பு உபமின் நிலையத்தில் தூய சக்தி மற்றும் வலையமைப்பு மேம்பாட்டுச் செயற்றிட்டம் - பொதி 02 (CENEIP – P2) இன் மூலம் கொள்ளளவி வங்கிகள் நிறுவப்பட்டதன் வரிசையில், உபமின் நிலையத்தில் இரண்டு (02) 33 kV ஊட்டி நுழைவுவழிககளை (feeder bays) நிருமாணிப்பதற்கான தேவை அடையாளங் காணப்பட்டது.

#### தற்போதைய நிலை
செயற்றிட்டம் 2019 பெப்ரவரியில் நிறைவு பெற்றது.

#### புதிய அநுராதபுரம் மின்தொகுப்பு உபமின் நிலையத்தில் இரண்டு 220 kV மின் மார்க்க நுழைவுவழிகளை நிறுவுதல்

#### செயற்றிட்ட அம்சங்கள்
இயக்கத்தின் நம்பகத்தன்மை மற்றும் நெகிழ்வுத்தன்மையை மேம்படுத்துவதற்காக வவுனியா 220 kV மின்தொகுப்பு உபமின் நிலையம் ஊடாக மன்னார் மின்தொகுப்பு உபமின் நிலையத்திலிருந்து புதிய அநுராதபுரம் மின்தொகுப்பு உபமின் நிலையத்தில் முடிவடைகின்ற 220 kV மின் பரிமாற்ற மார்க்கத்தின் GSCP அலகுடனான நிருமாணம் ஒப்படைக்கப்பட்டது.

# செயற்றிட்டங்கள் பிரிவு (தொடர்ச்சி)

*தற்போதைய நிலை*
செயற்றிட்டம் 2019 இல் நிறைவு பெற்றது.

### பன்னல GSS இன் மேம்படுத்தல்

*செயற்றிட்ட அம்சங்கள்*
சமீபத்தில் பன்னல பிரதேசத்தை அண்டியுள்ள இடங்களில் எதிர்பாராத விதமாக மின்சாரத்திற்கான தேவை அதிகரித்துக் காணப்பட்டது. இது பிரதானமாக கைத்தொழில் பேட்டையில் நிருமாணிக்கப்பட்டுவரும் தொழிற்சாலை மற்றும் அப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற தேசிய அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் ஆகியவற்றுக்குத் தேவையான தொகையளவு வழங்கல் இணைப்புகளுக்காகக் கோரிக்கையிடப்படும் மின்சாரத் தேவையாகக் காணப்படுகின்றன. இந்தத் தேவையினைப் பூர்த்தி செய்வதற்காக இன்னுமொரு 132 / 33 kV, 31.5 MVA மின்மாற்றியை சேர்ப்பதன் மூலம் பன்னல GSS ஐ மேம்படுத்துவதற்கு பன்னல GS முன்மொழிந்திருந்தது. இதற்கான மொத்தச் செலவு 65 மில்லியன் இலங்கை ரூபாயாகும்.

*தற்போதைய நிலை*
செயற்றிட்டம் 2019 நவெம்பரில் நிறைவு பெற்றது.

### புதிய அநுராதபுர GS இல் 100 MVAR உலை (Reactor) மற்றும் மன்னார் GS இல் 50 MVAR உலைகள் ஆகியவற்றை நிறுவுதல்

*செயற்றிட்ட அம்சங்கள்*
மின் பரிமாற்ற மார்க்கத்தில் மின்னேற்றத்தினால் ஏற்படக்கூடிய அதிகப்படியான எதிர்வினை மின்வலு காரணமாக குறிப்பிட்ட மின்னழுத்தத்திற்கு மேல் வரக்கூடிய 220 kV முறைமை மின்னழுத்தத்தைப் உரிய அளவில் பேணுவதற்காக, மின்தொகுப்பு உபமின் நிலைய நிருமாணச் செயற்றிட்டங்கள் அலகின் கீழ் புதிய அநுராதபுர GS இல் 100 MVAr உலையையும் மன்னார் GS இல் 50 MVAr உலைகளையும் நிறுவும் பணி ஆரம்பிக்கப்பட்டது. செயற்றிட்டத்திற்கான மொத்தச் செலவு 1,374.69 மில்லியன் இலங்கை ரூபாயாகும்.

*தற்போதைய நிலை*
இந்தச் செயற்றிட்டம் 2019 ஆகஸ்ட்டின் ஆரம்பிக்கப்பட்டதுடன் 2021 மார்ச்சில் நிறைவு பெறும்.

### வேகவத்தை மின்தொகுப்பு உபமின் நிலையத்தின் நிருமாணம்

*செயற்றிட்ட அம்சங்கள்*
மேல் மாகாணத்தில் அமைந்துள்ள வேகவத்தை மற்றும் மில்லானியா பகுதிகள் பெரிய அளவிலான கைத்தொழில் அபிவிருத்தி செயற்றிட்டங்களுக்கான மூலோபாய இடங்களாக இனங்காணப்பட்டுள்ளன. இலங்கை முதலீட்டு சபை (BOI) வேகவத்தை கைத்தொழில் பேட்டைக்கு 30 MVA மின் வழங்கலைச் செய்யுமாறும் மில்லானியாவில் முன்மொழியப்பட்டுள்ள கைத்தொழில் பேட்டைக்கு 25 MVA மின் வழங்கலைச் செய்யுமாறும் இலங்கை மின்சார சபையிடம் (இ.மி.ச.) கோரிக்கை விடுத்திருந்தது. இந்த இரண்டு கைத்தொழில் பேட்டைகளும் 15 - 20 km இடைத் தூரத்தினுள் அமைந்திருப்பதன் காரணமாக, காணிக் கிடைப்பனவு மற்றும் ஏனைய அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளையும் கருத்திற்கொண்டு வேகவத்தையில் ஒரு புதிய மின்தொகுப்பு உபமின் நிலையத்தை அமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. வேகவத்தையில் புதிய மின்தொகுப்பு உபமின் நிலையத்தை அமைப்பதற்குத் தேவையான நிதியை வழங்குவதற்கு BOI இணங்கியுள்ளது. புதிய வேகவத்தை மின்தொகுப்பு உபமின் நிலையத்தை அமைப்பதற்கான செலவு மதிப்பீடு 1898 மில்லியன் இலங்கை ரூபாயாகும்.

*தற்போதைய நிலை*
இந்தச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்படுவதுடன் இது 2021 டிசெம்பரில் நிறைவு பெறும்.

### புதிய பொல்பிட்டிய ஆளியிடல் நிலையத்தில் இரண்டு 220 kV இரட்டை மின்னேகிச் சட்ட மின் பரிமாற்ற மார்க்க நுழைவுவழியின் நிருமாணம்

*செயற்றிட்ட அம்சங்கள்*
ஹம்பாந்தோட்டை 220 kV இரட்டைச் சுற்று மின் பரிமாற்ற மார்க்கத்தை புதிய பொல்பிட்டிய GS உடன் இணைப்பதற்கான இரண்டு 220 kV இரட்டை மின்னேகிச் சட்ட மின் பரிமாற்ற மார்க்க நுழைவுவழியின் நிருமாணம் தொடங்கப்பட்டுள்ளது.

*தற்போதைய நிலை*
இந்தச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்படுவதுடன் இது 2020 அக்டோபரில் நிறைவு பெறும்.

### இரத்மலானை மின்தொகுப்பு உபமின் நிலையத்தில் இரண்டு (02) 33 kV ஊட்டி நுழைவுவழிகளின் நிருமாணம்

*செயற்றிட்ட அம்சங்கள்*
முன்மொழியப்பட்ட கரடியானா கழிவு மின்வலுச் செயற்றிட்டத்திலிருந்து தேசிய மின்தொகுப்பிற்கு 10 MW மின்வலுவை இணைக்கும் பொருட்டு, இரத்மலானை மின்தொகுப்பு உபமின் நிலையத்தில் தற்போதிருக்கின்ற 33 kV GIS மேலதிகமான இரண்டு (02) நுழைவு வழிகளுடன் விரிவாக்கப்படும். இதற்காக மதிப்பிடப்பட்ட செலவு 147.9 மில்லியன் இலங்கை ரூபாயாகும்.

*தற்போதைய நிலை*
இந்தச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

### களனிதிஸ்ஸ 132 kV GIS இன் விரிவாக்கம்

*செயற்றிட்ட அம்சங்கள்*
களனிதிஸ்ஸ புதிய எரிவாயு விசையாழிச் செயற்றிட்டத்தின் (KNGTP) கீழ், மூன்று (03) எரிவாயு விசையாழிகளை இணைக்கும் பொருட்டு, களனிதிஸ்ஸ 132 kV GIS இன் விரிவாக்கம் முன்னெடுக்கப்பட்டது. இதற்காக மதிப்பிடப்பட்ட செலவு 465 மில்லியன் இலங்கை ரூபாயாகும்.

*தற்போதைய நிலை*
இந்தச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

### மின் பரிமாற்ற மார்க்க நிருமாணச் செயற்றிட்டங்கள் அலகு

மின் பரிமாற்ற மார்க்க நிருமாணச் செயற்றிட்டங்கள் அலகின் கீழ் நிறைவு பெற்ற மற்றும் முன்னெடுக்கப்படுகின்ற செயற்றிட்டங்களின் விபரம் பின்வருமாறு:

### புதிய சிலாபம் - பன்னல 132 kV மின் பரிமாற்ற மார்க்கத்தின் மீள் நிருமாணம்

*செயற்றிட்ட அம்சங்கள்*
போலவத்தை மின்தொகுப்பு உபமின் நிலையத்திலிருந்து புதிய சிலாபம் மின்தொகுப்பு உபமின் நிலையம் வரையான 132 kV இரட்டைச் சுற்று மின் பரிமாற்ற மார்க்கம் 1963 இல் கட்டப்பட்ட Lynx கடத்தியால் ஆனது. மின்னோட்டத்தைக் கொண்டு செல்லும் திறன் மற்றும் மின் மார்க்கத்தின் நம்பகத்தன்மை ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக, புதிய சிலாபம் தொடக்கம் போலவத்தை வரையிலான 22 km, 132 kV மின் பரிமாற்ற மார்க்கப் பகுதியின் கொள்ளளவை இரட்டைச் சுற்று, சீப்ரா மின் பரிமாற்ற மார்க்கத்துடன் அதிகரிப்பதற்கு முன்மொழியப்பட்டது.

*தற்போதைய நிலை*
மேற்படி செயற்றிட்டம் இரண்டு கட்டங்களில் முன்னெடுக்கப்பட்டது. முதலாவது கட்டத்தில், புதிய சிலாபம் GSS இலிருந்து பன்னல GSS வரையான 132 kV மின்மார்க்கம் நிறைவு செய்யப்பட்டதுடன் 2018 மார்ச்சில் அது வலுவூட்டப்பட்டது. இரண்டாவது கட்டத்தில், போலவத்தை GSS இலிருந்து பன்னல GSS வரையான 132 kV மின் பரிமாற்ற மார்க்கம் நிறைவு செய்யப்பட்டு 2019 மார்ச் 18 இல் வலுவூட்டப்பட்டது.

# செயற்றிட்டங்கள் பிரிவு (தொடர்ச்சி)

### பியகம – கொத்மலை 220 kV மின் பரிமாற்ற மார்க்கத்தில் புளத்கொகுப்பிட்டிய பகுதியில் ஏற்படும் நிலச்சரிவுப் பிரச்சினைக்கான தீர்வு

பியகம – கொத்மலை 220 kV இரட்டைச் சுற்று இரட்டைச் சீப்ரா மின் பரிமாற்ற மார்க்கம் 70.5 km நீளமுடையதும் 1985 ஆம் ஆண்டு அதிகாரம் அளிக்கப்பட்டதுமான ஒரு மின் பரிமாற்ற மார்க்கமாகும். 2017 மே மாதத்தில், நாட்டில் உள்ள ஈர வலயங்களில் காணப்படும் பெரும்பாலான பகுதிகள் மற்றைய ஆண்டுகளை விட அதிக மழைப்பொழிவை அனுபவித்திருந்ததுடன் நிலச்சரிவு ஏற்பட்ட சம்பவங்களும் நாட்டின் பல பகுதிகளிலும் பதிவாகியிருந்தன. இதில் புளத்கொகுப்பிட்டிய பகுதியும் ஒன்றாகும். அத்துடன் நிலச்சரிவு ஏற்பட்ட பகுதிக்கு அருகில்



மேற்படி மின் பரிமாற்ற மார்க்கமும் செல்கிறது. எனவே, பாதிக்கப்பட்ட மின் மார்க்கத்தின் பகுதிக்குத் தேவையான மாற்றங்களைச் செய்வதன் மூலம் மின் மார்க்கத்திற்கு ஏற்படும் பாதிப்புகளைக் குறைப்பதற்கான பரிகார நடவடிக்கைகளை எடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது. உடனடித் தீர்வொன்றாக, மின் பரிமாற்றச் செயற்பாடுகள் மற்றும் பராமரிப்பு (O&M) கிளையினால் 75 ஆம் இலக்க மின்கோபுரம் அகற்றப்பட்ட பின்னர் இரண்டு ஒற்றைச் சுற்று தற்காலிக மின்கோபுரங்கள் நாட்டப்பட்டன.

நிரந்தரத் தீர்வாக, TD1+27 மற்றும் TD1+18 மின்கோபுரங்களை நாட்டுதல் மற்றும் பியகம – கொத்மலை 220 kV மின் பரிமாற்ற மார்க்கத்தின் 75 ஆம் இலக்க மின்கோபுரத்திற்கு அருகில் மின் மார்க்கத்தை மாற்றுதல் என்பன TLCP இடம் ஒப்படைக்கப்பட்டது. இது தீவிரமான காலநிலை நிலைமைகளிலும் TLCP ஊழியர்களின் அர்ப்பணிப்பினால் 2019 செப்ரெம்பரில் நிறைவு பெற்றது.



### கொட்டுகொட – கெரவலப்பிட்டிய 220 kV மின் பரிமாற்ற மார்க்கத்தில் சேதத்திற்குள்ளாகியிருந்த 10 ஆம் இலக்க மின்கோபுரத்தை மாற்றீடு செய்தல்

கெரவலப்பிட்டிய – கொட்டுகொட 220 kV மின் பரிமாற்ற மார்க்கமானது 2007 – 2008 காலப்பகுதியில் நிருமாணிக்கப்பட்டதாகும். இந்த மின் மார்க்கம் பிரதானமாக முத்துராஜவெல சதுப்பு நிலத்திற்கு மேலாகக் கடந்து செல்வதுடன் அதிகளவான மின்கோபுரங்கள் அடித்தூண் அடித்தளங்களைக் கொண்டுள்ளன. திண்மக் கழிவு செயன்முறைப்படுத்தல் ஆலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், மண்ணை நிரப்புவதன் மூலம் காணியொன்றை மருத்துவக் கழிவுகளைக் கொட்டும் முற்றமாகவும் திண்மக் கழிவுகளைக் கொட்டும் முற்றம் ஒன்றுடன் இணைந்த செயன்முறைப்படுத்தல் ஆலையாகவும் பயன்படுத்துவதற்காக சதுப்பு நிலப் பிரதேசத்தில் மிகைப்படியான காணி நிரப்பப்பட்டதன் காரணமாக முத்துராஜவெலவில் அமைந்துள்ள 10 ஆம் இலக்க மின்கோபுரத்திற்கு (தொங்கல் கோபுரம்) சேதம் ஏற்பட்டது.

கெரவலப்பிட்டிய – கொட்டுகொட 220 kV மின் பரிமாற்ற மார்க்கத்தில் முத்துராஜவெல என்ற இடத்தில் அமைந்துள்ள 10 ஆம் இலக்க சேதமடைந்த மின்கோபுரத்தை மாற்றீடு செய்வதற்காக ஒரு மின்கோபுரத்தை நாட்டும் பணி TLCP இடம் ஒப்படைக்கப்பட்டது. இந்தப் பணி தீவிரமான காலநிலை நிலைமைகளிலும் TLCP ஊழியர்களின் அர்ப்பணிப்பினால் 2019 அக்டோபரில் நிறைவு செய்யப்பட்டது.



### திரவநிலை இயற்கை எரிவாயு மின்வலுச் செயற்றிட்டங்கள் (LNGPP)

BOOT அடிப்படையில் கெரவலப்பிட்டியில் 300 MW பல எரிபொருள் இணைந்த சுற்று மின்வலு ஆலையொன்றை அபிவிருத்தி செய்வதற்குரிய முன்மொழிவுகளுக்கான கோரிக்கையை (RFP) வழங்குமாறு ஆர்வமுள்ள விலைமனுதாரர்களிடம் அழைப்பு விடுக்கப்பட்டது. ஆரம்பத்தில் டீசல் எரிபொருளில் ஆலையை இயக்குவதற்கும் பின்னர் தள எல்லையில் கிடைக்கும்போது மீள வாயுவாக்கப்பட்ட திரவநிலை இயற்கை எரிவாயுவிலும் (RLNG)

# செயற்றிட்டங்கள் பிரிவு (தொடர்ச்சி)

இயக்குவதற்கான முன்மொழிவுகள் கிடைக்கப்பெற்றன. மின்வலு ஆலையானது வெற்றிகரமான விலைமனுதாரரால் சொந்தமாகக் கட்டப்பட்டு 20 ஆண்டுகள் காலப்பகுதிக்கு இயக்கப்பட்டு, 20 ஆண்டுகளின் முடிவில் இ.மி.ச. இற்கு மாற்றப்படும். ஆலையானது கெரவலப்பிட்டியில் அமைந்துள்ள இ.மி.ச. இற்குச் சொந்தமான நிலத்தில் கட்டப்படும். மின்வலு ஆலை 2021 இல் திறந்த சுற்று வர்த்தகச் செயற்பாடுகளையும் 2022 இல் இணைந்த சுற்று வர்த்தக நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது



### திருகோணமலை நிலக்கரி மின்வலுச் செயற்றிட்டம் (TCPP)

அண்ணளவாக 500 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் சம்பூரில் சொந்தமாகக் கட்டி இயக்குகின்ற (BOO) அடிப்படையில் ஒரு 500 MW மின்வலு நிலையத்தை அமைக்கத் திட்டமிடப்பட்டது. சுற்றுச்சூழல் அதிகாரசபையும் இந்தச் செயற்றிட்டத்திற்கான தனது அங்கீகாரத்தை வழங்கியுள்ளது. எவ்வாறாயினும் இந்தச் செயற்றிட்டம் இடைநிறுத்தப்பட்டது.

அதற்கிணங்க, சம்பூர் மின்தொகுப்பு உபமின் நிலையம் மற்றும் நிலக்கரியை இறக்குகின்ற இறங்குதுறை உள்ளிட்ட சம்பூர் மின்வலு நிலையத்திலிருந்து ஹபரணை வரையான 400 kV மின் பரிமாற்ற மார்க்கம் சம்பூரில் இருந்து கப்பல்துறை வரையான 220 kV மின் பரிமாற்ற மார்க்கம் ஆகிய செயற்றிட்டங்களின் பிரதான புற அபிவிருத்திகளின் பெறுகை நடவடிக்கைகளும் மின்வலு ஆலை இறுதிப்படுத்தப்படும் வரை இவ்வாண்டில் இடைநிறுத்தப்பட்டன.

எவ்வாறாயினும், மின்வலு முறைமையின் மேம்பாட்டிற்குத் தேவையான ஹபரணை, வெயாங்கொடை மின் பரிமாற்ற மார்க்கச் செயற்றிட்டம் (HVTLP) ஆனது JICA இன் உதவியுடன் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

ஹபரணையில் 14 ஏக்கர் நிலத்தில் புதிய 220 kV/132 kV/33 kV மின்தொகுப்பு உபமின் நிலையம் ஒன்றை அமைத்தல் மற்றும் இரண்டு 220 kV நுழைவுவழிகளின் சேர்ப்பனவுடன் வெயாங்கொடை GS ஐ மேம்படுத்தும் வேலை என்பன செயற்றிட்டத்தின் துண்டம் A ஆக வழங்கப்பட்டுள்ளதுடன் இதன் பணி கிட்டத்தட்ட 70% முன்னேற்றத்துடன் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

வெயாங்கொடை GS தொடக்கம் புதிய ஹபரணை GS வரை 148 km நீளமான 220 kV மின் பரிமாற்ற மார்க்கத்தை நிருமாணித்தல் மற்றும் அதனோடிணைந்த மின் மார்க்கத் திசைதிருப்பல்கள் ஆகியவற்றுக்கான ஒப்பந்தம் செயற்றிட்டத்தின் துண்டம் B ஆக வழங்கப்பட்டுள்ளதுடன் இதன் பணி கிட்டத்தட்ட 80% முன்னேற்றத்துடன் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

### மின் பரிமாற்ற வடிவமைப்பு மற்றும் சுற்றுச்சூழல் கிளை

2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பின்வருமாறு :

மின் பரிமாற்ற வடிவமைப்பு அலகானது தேசிய மின் பரிமாற்ற, விநியோக வலையமைப்பு அபிவிருத்தி மற்றும் வினைத்திறன் மேம்பாட்டுச் செயற்றிட்டம் - பொதி I, பொதி II, பொதி III (NT & DND & EIP), பசுமை மின்வலு அபிவிருத்தி மற்றும் சக்தி வினைத்திறன் மேம்பாட்டு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டச் செயற்றிட்டம் (GPD&EEIPP) கட்டம் 2 மற்றும் மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி உறிஞ்சல் மின் பரிமாற்ற அபிவிருத்திச் செயற்றிட்டம் (REATDP) ஆகியவற்றின் நடைமுறைப்படுத்தலுக்காக விலைமனு ஆவணங்களைத் தயாரித்திருந்தது. மேலும், மின் பரிமாற்ற வடிவமைப்பு அலகானது பியகம மின்தொகுப்பு உபமின் நிலையத்தில் நிறுவப்பட வேண்டிய SVC இற்கான தொழினுட்ப விவரக் குறிப்புகள் உள்ளிட்ட விலைமனு ஆவணங்களின் தயாரிப்பு மற்றும் புதிய அநுராதபுரம் மின்தொகுப்பு உபமின் நிலையத்திலும் மன்னார் மின்தொகுப்பு உபமின் நிலையத்திலும் உலைகளை நிறுவுதல் ஆகியன பூர்த்தி செய்யப்பட்டன. கொழும்பு துறைமுக நகர் அபிவிருத்திக்கான ஆலோசகர்களால் தயாரிக்கப்பட்ட தொழில்நுட்ப விவரக் குறிப்புகள் இ.மி.ச. இன் தேவைகளுடன் இணக்கமாவதற்காக மீளாய்வு செய்யப்பட்டன.

ஆண்டின் காலப்பகுதியில் CE&NEIP-P1, P2 & P3, NKBP, GPD&EEIPP- Tranche 1, UOHPP – மின் பரிமாற்ற மார்க்கம், GCT&DLRP, REATDP, HVTP, போலவத்தை புதிய சிலாபம் 132 kV மின் பரிமாற்ற மார்க்கத்தின் மீள் நிருமாணம் ஆகிய செயற்றிட்டங்களில் உள்ளிடப்பட்டுள்ள வடிவமைப்புகள் மீளாய்வு செய்யப்பட்டன.

இ.மி.ச. இன் பெரும்பாலான சுற்றுச்சூழல் நடவடிக்கைகளுக்கான மையப் புள்ளியாக இருப்பது சுற்றுச்சூழல் அலகாகும். சுற்றுச்சூழல் அலகின் பிரதான பொறுப்புகளில் இ.மி.ச. இன் அபிவிருத்திச் செயற்றிட்டங்களுக்கான சுற்றுச்சூழல் அங்கீகாரச் செயன்முறைக்கு வழிகாட்டுதல், தேசிய சுற்றுச்சூழல் சட்டம் (NEA) இன்படி சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆவணங்களைத் தயாரித்தல் அதே போன்று நிதியிடல் முகவராண்மை (தேவை ஏற்படின்) வழிகாட்டல்கள், சம்பந்தப்பட்ட சுற்றுச்சூழல் அங்கீகாரங்களைப் பெறுதல், இ.மி.ச. மற்றும் அதன் நாட்டதாரர்களுக்காக சுற்றுச்சூழல் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல் போன்றவை உள்ளடங்குகின்றன.

### பொறியியல் ஆலோசனைச் சேவைகள் (EAS) கிளை

பொறியியல் ஆலோசனைச் சேவைகள் கிளையானது ஆண்டின் காலப்பகுதியில் மின் - இயந்திரவியல், நீர் - இயந்திரவியல், மின்னியல், இயந்திரவியல் மற்றும் பின்வரும் பிறப்பாக்கல் செயற்றிட்டங்களுக்கான பயன்பாடு, தேசிய மற்றும் சர்வதேச ஆலோசகர்களின் மாற்றீடு ஆகிய துறைகளில் நிபுணத்துவ சேவைகளை வழங்கியுள்ளது :

- மொரகொல்ல நீர் மின்வலுச் செயற்றிட்டத்தின் நிருமாணத்திற்கான செயற்றிட்ட முகாமை மற்றும் மேற்பார்வை உதவி
- சீத்தாவாக்கை கங்கை நீர் மின்வலுச் செயற்றிட்டத்திற்கான சாத்தியவள ஆய்வை நடத்துதல், விபரமான வடிவமைப்பு மற்றும் விலைமனு ஆவணங்களைத் தயாரித்தல் ஆகியவற்றுக்கான ஆலோசனை சேவைகள்

இவற்றுக்கு மேலதிகமாக, EAS கிளையானது ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நியமிக்கப்பட்ட ஆலோசகர்களுடன் இணைந்து இலங்கையில் மின்வலுப் பிறப்பாக்கத்திற்கான LNG உட்கட்டமைப்பை அபிவிருத்தி செய்வதற்கான சாத்தியவள ஆய்வினைத் தயாரித்தது. சாத்தியவள ஆய்வில், கெரவலப்பிட்டியில் இருந்து 5 km தொலைகடலில் அமைந்துள்ள மிதக்கும் களஞ்சியம் மற்றும் மீள்வாயுவாக்கல் அலகைப் (FSRU) பயன்படுத்தி கொழும்பை மையமாகக் கொண்ட மின்வலு ஆலைகளுக்கு மீள வாயுவாக்கப்பட்ட திரவநிலை இயற்கை எரிவாயு (RLNG) வழங்கப்படும். தொலைகடல் மற்றும் கரையோர குழாய் வலையமைப்பு ஒன்றின் ஊடாக கெரவலப்பிட்டிய மற்றும் களனிதிஸ்ஸவில் அமைந்துள்ள மின்வலு ஆலைகளுக்கு RLNG விநியோகிக்கப்படும்.

# செயற்றிட்டங்கள் பிரிவு (தொடர்ச்சி)

(i) FSRU மற்றும் கப்பல் நிறுத்தப்படும் முறைமை ஆகியவற்றின் நிறுவல் (ii) தொலைகடல் மற்றும் கரையோர குழாய்களின் நிறுவல் (iii) LNG இன் மூலாதாரம் என்பவற்றுக்கு சர்வதேசப் போட்டி விலைமனுச் செயன்முறை ஊடாக முன்மொழிவுகளை வரவழைப்பதற்கு முன்மொழிவுகளுக்கான கோரிக்கை (RFP) தயாரிக்கப்பட்டது.

### சீத்தாவாக்கை கங்கை நீர் மின்வலுச் செயற்றிட்டம்

சீத்தாவாக்கை கங்கையின் மின்வலுப் பிறப்பாக்க மின்னழுத்தம் பற்றி "டெக்னோபுரோமெக்ஸ்போட் மொஸ்கோ" இன் உதவியுடன் 1961 ஆம் ஆண்டில் நீர்பாசனத் திணைக்களத்தினால் முதல்முதலாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அதனைத் தொடர்ந்து, 1988 ஆம் ஆண்டு காலப்பகுதியில் "இலங்கையில் மின்சார வழங்கலுக்கான முதன்மைத் திட்டம்" இன் கீழ் தயாரிக்கப்பட்ட SITA – 14 என்ற அறிக்கையில் சீத்தாவாக்கை கங்கையின் மின்வலுப் பிறப்பாக்க மின்னழுத்தம் உறுதிப்படுத்தப்பட்டது.

அதிலிருந்து செயற்றிட்டத்தை அபிவிருத்தி செய்வதற்கான எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்பதுடன் 2009 ஆம் ஆண்டில் இ.மி.ச. இன் ஒரு துணை நிறுவனமான வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கா எனேஜீஸ் (தனி.) நிறுவனம் (SLE) இனால் செயற்றிட்டத்திற்கான முன் சாத்தியவள ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டன. 2013 ஆம் ஆண்டில், அந்தப் பகுதியினுள் கிடைக்கக்கூடிய நீர் மின்னழுத்தத்தை உத்தம மட்டத்தில் அறுவடை செய்வதற்கு செயற்றிட்ட அபிவிருத்தியை இ.மி.ச. கையேற்றுக் கொண்டது. ஆலைக்கு 2022 ஆம் ஆண்டு அதிகாரம் வழங்குவதை இலக்காகக் கொண்டு இச்செயற்றிட்டம் நீண்ட கால பிறப்பாக்க விரிவாக்கல் திட்டம் 2015 – 2034 இல் சேர்க்கப்பட்டது.

சீத்தாவாக்கை கங்கை செயற்றிட்டத்திற்கான செயற்றிட்ட முகாமைத்துவ அலகு 2016 செப்ரெம்பரில் தாபிக்கப்பட்டது. விபரமான சாத்தியவள ஆய்வு 2018 டிசெம்பரில் நிறைவு செய்யப்பட்டது. இது மத்திய பொறியியல் ஆலோசனைப் பணியகம் (CECB) மற்றும் இ.மி.ச. இன் பொறியியல் ஆலோசனைக் கிளை ஆகியவற்றினால் கூட்டாக முன்னெடுக்கப்பட்டிருந்தது. சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆய்வுகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதுடன் இதனை 2020 ஏப்ரலில் நிறைவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. ஆய்வுகளுக்கு இணங்க, செயற்றிட்டம் 24 MW ஆலையாக நடைமுறைப்படுத்தப்படும் என்பதுடன் மதிப்பிடப்பட்ட வருடாந்த சக்திப் பிறப்பாக்கம் 54 GWh ஆகும். செயற்றிட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தச் செலவு 79 மில்லியன் அமெரிக்க டொலர் ஆகும். செயற்றிட்டத்தின் நிருமாணக் காலம் மூன்று (03) ஆண்டுகள் எனத் திட்டமிடப்பட்டுள்ளது. தற்போதைய முன்னேற்றத்திற்கு இணங்க, 2024 ஆம் ஆண்டில் ஆலைக்கு அதிகாரம் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

செயற்றிட்டப் பகுதியானது சப்ரகமுவ மாகாணத்திலுள்ள கேகாலை மாவட்டத்தில் தெஹியோவிட்ட பிரதேச செயலாளர் பிரிவில் பத்தன்கல, அல்கோடா, ஹிங்குராலகந்த கிழக்கு மற்றும் திகல்ல கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் சீத்தாவாக்கை கங்கையை ஒட்டி அமைந்துள்ள மல்தெனிய, தங்கம்பல, ரியூகாசல், ஹிங்குராலகந்த, தன்கொம்புவ, திகல மற்றும் யோகாம கிராமங்களினது வளாகங்களினுள் அமைந்திருக்கும்.

### களனிதிஸ்ஸ புதிய எரிவாயு விசையாழிச் செயற்றிட்டம்

களனிதிஸ்ஸ புதிய எரிவாயு விசையாழிச் செயற்றிட்ட அலகின் நோக்கம் அவசர நிலைமைகளின்போதும் உச்ச நேர மின் வழங்கலின்போதும் கொழும்பு நகருக்கு மின்சார வழங்கலை மீளளிப்பதற்காக புதிய எரிவாயு விசையாழியுடன் தற்போது களனிதிஸ்ஸ மின்வலு நிலையத்திலுள்ள Frame V எரிவாயு விசையாழிகளை மாற்றீடு செய்வதாகும். எவ்வாறாயினும், செயற்றிட்ட முகாமைத்துவ அலகானது மின் பரிமாற்றப் பிரிவின் கீழ் மீள் கட்டமைக்கப்பட்டுள்ளது.

### நிறுவனம் மற்றும் செயற்றிட்டங்கள் ஒருங்கிணைப்புக் (C&PC) கிளை

இந்தக் கிளை பிரிவினுள் செயற்றிட்ட நடவடிக்கைகளின் ஒருங்கிணைப்பைக் கையாளுகின்ற அதே வேளை அதற்கான நிறுவனத் தொழிற்பாடுகளையும் ஆற்றுகிறது.

நிறுவனத் தொழிற்பாடுகளின் கீழ், பாதுகாப்பான மற்றும் உகந்த வேலைச் சூழலுடன்கூடிய உத்தம மட்ட ஊதியத்தில், உயர்மட்ட செயல்திறனில் பணியாற்றுகின்ற மற்றும் எல்லா நேரங்களிலும் முழுமையாகப் பயிற்சி பெற்ற, ஆற்றல் மிகுந்த, பொறுப்புமிக்க முகாமை ஊழியர்களையும் பணியாளர்களையும் செயற்றிட்டப் பிரிவுக்கு வழங்குவது இதன் கடமையாகும். இது, ஒப்பந்த ஊழியர்கள் உள்ளிட்ட பல்வேறு தரங்களையும் சேர்ந்த 191 நிறைவேற்றுத்தர அதிகாரிகள் மற்றும் 571 ஊழியர்கள் என மொத்தமாக 762 பேரை இந்தப் பிரிவுக்கு வழங்கியுள்ளது.

செயற்றிட்ட ஒருங்கிணைப்பின் கீழ், உரிய நேரத்திலேயே இறுதியான பூரணப்படுத்தலை நிறைவு செய்யும் வகையில் நடைமுறைப்படுத்தலின் கீழான சகல செயற்றிட்டங்களினதும் முறையான ஒருங்கிணைப்பில் இது ஈடுபடுவதுடன் முறைமைக் கட்டுப்பாட்டுடன் சகல செயற்றிட்டங்களினதும் செயலிழப்புத் திட்டங்களின் உள்ளக ஒருங்கிணைப்பை உறுதிப்படுத்துவதற்காக உள்ளகத் தொடர்புகளை உரிய நேரத்தில் மேற்கொள்கிறது.




சீத்தாவாக்கை கங்கை நீர்மின்வலுச் செயற்றிட்டடத்திற்கான எதிர்காலத் தளத் திட்டம்



லக்விஜய மின் ஆலை

செயற்பாட்டு மீளாய்வு

# சொத்து முகாமைத்துவப் பிரிவு

# சொத்து முகாமைத்துவப் பிரிவு

சொத்து முகாமைத்துவம் என்பது உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிலை மாற்றத்தின் ஒரு பகுதியாகும். இந்தப் பிரிவு இ.மி.ச. இன் பொருளாதார வளர்ச்சி, சமூக முன்னேற்றம் மற்றும் சுற்றுச்சூழல் அபிவிருத்திக்கான முக்கிய வகிபாகம் ஒன்றை ஆற்றுகிறது.

பிரிவின் பல்வேறு தொழிற்பாடுகளையும் முன்னெடுப்பதற்காக மேலதிகப் பொது முகாமையாளர் (சொத்து முகாமைத்துவம்) இன் கீழ் எட்டு (08) கிளைகள் காணப்படுகின்றன. அவையாவன:

- சொத்து முகாமைத்துவம் மற்றும் நிறுவனக் கிளை
- பயிற்சிக் கிளை
- தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்புக் கிளை
- வேலைப்பட்டறை மற்றும் துணைச் சேவைகள் கிளை
- குடியியல் வேலைகள் மற்றும் கட்டடங்கள் கிளை
- விதுலக்பய செயற்றிட்டம்
- கணக்குகள் அலகு
- பாதுகாப்பு அலகு

### சொத்து முகாமைத்துவம் மற்றும் நிறுவனக் கிளை

மனித வளங்களை உத்தமமான முறையில் பயன்படுத்துவதன் மூலம் சொத்து முகாமைத்துவப் பிரிவின் முறையான தொழிற்பாட்டினை உறுதிப்படுத்துவது இந்தக் கிளையின் பொறுப்பாகும். ஊழியர்களின் நிறுவனத் தொழிற்பாடுகளைத் தவிர, இந்தக் கிளையானது இ.மி.ச. இன் சொத்து முகாமைத்துவத்துடன் தொடர்புடைய தொழிற்பாடுகளையும் கையாள்கிறது. இக்கிளையின் பிரதான தொழிற்பாடுகள் பின்வருமாறு :

- இ.மி.ச. இற்குச் சொந்தமான காணிகள் மற்றும் கட்டடங்கள் பற்றிய சொத்துப் பதிவேட்டைத் தயாரித்தல் மற்றும் இ.மி.ச. காணி மற்றும் கட்டடங்களின் பிரதான திட்டத் தரவுத் தளத்தை நிகழ்நிலைப்படுத்தலும் பராமரித்தலும்.
- இ.மி.ச. இற்காகக் கையகப்படுத்தப்பட்ட, சொந்தமான மற்றும் நேரடியாகக் கொள்வனவு செய்யப்பட்ட காணிகளுக்கான உரித்து ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளல்
- காணிகள் மற்றும் கட்டடங்களுக்கு விலைமதிப்பிடல்
- எந்தவித உரித்துறுதிகளோ அல்லது நில அளவைப் படங்களோ இன்றி, இ.மி.ச. இனால் பயன்படுத்தப்படுகின்ற காணிகளை அடையாளங் காணலும் நில அளவைப் படங்களைத் தயாரித்தலும். அத்துமீறல்கள் காரணமாக எல்லைகளில் பிணக்குகள் காணப்படுகின்ற இ.மி.ச. காணிகளின் எல்லைகளை மீள் வரையறை செய்தல்.
- இ.மி.ச. இன் வாகனத் தரவுத்தளத்தின் அபிவிருத்தியும் பராமரிப்பும்.
- சுற்றுலா மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கைகளான மிதவை விமானங்களின் செயற்பாடுகள் மற்றும் படகுச் சேவைகளின் செயற்பாடுகளுக்காக காசல்றீ நீர்த் தேக்கத்தை குத்தகைக்கு விடுதல்
- சொத்து முகாமைத்துவப் பிரிவினால் மேற்கொள்ளப்படும் விலைமனுக் கோரல், விலைமனு மதிப்பீடு மற்றும் விலைமனுக்களை இணையத்தில் பிரசுரித்தல் போன்றவற்றுக்கு தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல்

### பயிற்சிக் கிளை

புதிதாகத் தாபிக்கப்பட்ட கலவான மற்றும் கிஞ்சிகுண வெளிப்புற பயிற்சி நிலையங்கள் உள்ளடங்கலாக பின்வரும் தொழில்நுட்பப் பயிற்சி நிலையங்களை இந்தப் பயிற்சிக் கிளை கொண்டிருக்கிறது.

- பயிற்சி நிலையம், பிலியந்தலை
- பயிற்சி நிலையம், காசல்றீ
- பயிற்சி நிலையம், கிஞ்சிகுண (புதிய வெளிப்புற நிலையம்)
- பயிற்சி நிலையம், கலவான (புதிய வெளிப்புற நிலையம்

### பயிற்சி நிலையம் - பிலியந்தலை

இந்தப் பயிற்சி நிலையம் பொறியியலாளர்கள், கணக்காளர்கள், நடுத்தர மட்ட தொழில்நுட்ப சேவை உத்தியோகத்தர்கள், எழுதுவினைஞரும் அதனோடிணைந்த சேவை ஊழியர்களும் மற்றும் களச் சேவைப் பணியாளர்கள் ஆகியோருக்கு பயிற்சிகளை வழங்குகிறது. ஆண்டின் காலப்பகுதியில் நடத்தப்பட்ட CPD பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் விபரங்கள் கீழ்வருமாறு :

| | பாடநெறியின் பெயர் | நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | பங்குபற்றியோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | இ.மி.ச. இலுள்ள சிரேட்ட நிறைவேற்றுத் தர அதிகாரிகளுக்கான “தொழிலாளர் சட்டம்” | 2 | 116 |
| 2. | இ.மி.ச. இலுள்ள சிரேட்ட நிறைவேற்றுத் தர அதிகாரிகளுக்கான “மின்சாரத் துறை மற்றும் திட்டமிடல் முன்னோக்குகளின் தற்போதைய நிலையும் எதிர்காலமும்” | 2 | 142 |
| 3. | இ.மி.ச. பொறியியலாளர்களுக் கான “மின்வலு முறைமைப் பாதுகாப்பு” | 1 | 87 |
| 4. | இ.மி.ச. பொறியியலாளர்களுக் கான “இலங்கை மின்வலு முறைமை, விதிப்பனவு அமைப்புகள் மற்றும் ஒழுங்கு முறைக் கட்டமைப்பு ஆகியவை தொடர்பான அறிமுகம்” | 2 | 177 |
| 5. | இ.மி.ச. பொறியியலாளர்கள் மற்றும் கணக்காளர்களுக்கான ”பெறுகை முகாமைத்துவம்” | 2 | 146 |
| 6. | இ.மி.ச. பொறியியலாளர்களுக் கான “நிதி முகாமைத்துவம்” | 1 | 95 |
| 7. | இ.மி.ச. பொறியியலாளர்களுக் கான “விநியோகத் திட்டமிடல்” | 1 | 87 |
| 8. | இ.மி.ச. பொறியியலாளர்களுக் கான “மின் பரிமாற்ற மார்க்க நிருமாணம் மற்றும் பராமரிப்பு” | 1 | 75 |
| 9. | இ.மி.ச. பொறியியலாளர்களுக் கான “மின் பரிமாற்ற மார்க்க நிருமாணம் மற்றும் பராமரிப்பு” | 1 | 50 |
| 10. | இ.மி.ச. இன் நடுத்தரமட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர் களுக்கான “ஒழுக்காற்று முகாமைத்துவம்” | 1 | 91 |
| 11. | MLTS இற்கான “மின்சாரத் துறை மற்றும் திட்டமிடல் முன்னோக்குகளின் தற்போதைய நிலையும் எதிர்காலமும்” | 2 | 175 |
| 12. | இ.மி.ச. இன் நடுத்தர மட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கான “ஒழுக்காற்று முகாமைத்துவம்” | 1 | 87 |

பல்வேறு துறைகளிலுமுள்ள மொத்தம் 3,489 களச் சேவை ஊழியர்களுக்கு 2019 ஆம் ஆண்டில் 100 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன.

# சொத்து முகாமைத்துவப் பிரிவு (தொடர்ச்சி)

### வெளிவாரி நிறுவனங்களில் இ.மி.ச. ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட உள்நாட்டுப் பயிற்சிகள்

பொறியியலாளர்கள், MLTS, எழுதுவினைஞர்களும் அதனோடிணைந்த சேவை வகுதியினரும் மற்றும் களச் சேவைப் பணியாளர்கள் உள்ளடங்கலாக மொத்தம் 436 ஊழியர்களுக்கு வெளிவாரி நிறுவனங்கள் மூலம் நடத்தப்பட்ட அவர்களது கடமைகளுடன் தொடர்புடைய அனுபவப் பயிற்சிகளைப் பெறுவதற்கான சந்தர்ப்பம் பெற்றுக்கொடுக்கப்பட்டது.

### இ.மி.ச. ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட வெளிநாட்டுப் பயிற்சிகள்

குறித்த பரப்புகளில் தங்களுடைய அறிவை மேம்படுத்திக் கொள்வதற்காகவும் உள்நாட்டில் கிடைக்கப்பெறாத விளையாட்டுக்களில் சர்வதேச அனுபவத்தைப் பெற்றுக் கொள்ளவும் பின்வரும் வகைகளின் கீழ் வெளிநாடுகளுக்குப் பயணம் செய்வதற்கான வாய்ப்பு மொத்தமாக 374 ஊழியர்களுக்கு வழங்கப்பட்டது.

| வகை | பங்குபற்றியோர் எண்ணிக்கை |
|---|---|
| புலமைப்பரிசில்கள், பயிற்சிகள் மற்றும் கல்விச் சுற்றுலாக்கள் | 205 |
| வேலைப்பட்டறைகள், செயலமர்வுகள், மாநாடுகள் மற்றும் கூட்டங்கள் | 58 |
| விளையாட்டுச் செயற்பாடுகள் | 58 |

### உள்ளகப் பயிற்சிகள்

இளநிலைப் பட்டதாரி மாணவர்கள், டிப்ளோமா மாணவர்கள், தொழில்நுட்ப மற்றும் தொழில்நுட்பம் சாரா கல்லூரி மாணவர்கள் ஆகியோருக்கு வழங்கப்பட்ட உள்ளகப் பயிற்சிகளின் விபரங்கள் பின்வருமாறு

| பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | பயிற்சி பெற்றவர்களின் மொத்த எண்ணிக்கை |
|---|---|
| **எழுதுவினைஞரும் அதனோடிணைந்த சேவை வகுதியினரும்** | |
| தொழில் அறிமுகப் பயிற்சி | 364 |
| பதவியுயர்வு | 330 |
| திறன் அபிவிருத்தி | 489 |
| | |
| **அலுவலக ஊழியர்கள்** | |
| திறன் அபிவிருத்தி | 58 |
| பதவியுயர்வு | 32 |
| தொழில் அறிமுகப் பயிற்சி | 78 |
| | |
| **உள்நாட்டுப் பயிற்சி** | 432 |
| | |
| **தொழில்துறைப் பயிற்சி** | |
| இளநிலைப் பட்டதாரிகள் | 300 |
| டிப்ளோமா | 120 |
| **மொத்தம்** | **2203** |

### பயிற்சி நிலையம் – காசல்றீ

காசல்றீ பயிற்சி நிலையமானது இ.மி.ச. ஊழியர்கள் தங்களது பதவியுயர்வுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துகிறது. மேலும், இது இ.மி.ச. ஊழியர்கள் அதேபோன்று வெளிவாரி ஆட்கள் ஆகியோருக்கு தொழில் முன்னேற்ற அபிவிருத்திப் பாடநெறிகளையும் நடத்துகிறது.

2019 ஆம் ஆண்டில் களச் சேவைப் பணியாளர்களுக்காக நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் விபரங்கள் கீழ்வருமாறு

| தொ. இல. | நிகழ்ச்சித் திட்டம் | நடத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | பங்குபற்றியோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | பயிற்சி பெறும் கனிஷ்ட தொழில்நுட்ப சகாக்கள் மற்றும் கனிஷ்ட தொழில்நுட்ப சகாக்கள் ஆகியோருக்கான தொழில் அறிமுகப் பயிற்சி | 01 | 26 |
| 2. | மின் பிறப்பாக்கல் பிரிவின் தொழில்நுட்பச் சகாக்கள் | 01 | 33 |
| 3 | மின் பிறப்பாக்கல் பிரிவின் கனிஷ்ட தொழில்நுட்பச் சகாக்கள் | 13 | 408 |
| 4 | மின் பிறப்பாக்கல் பிரிவின் பயிற்சி பெறும் கனிஷ்ட தொழில்நுட்பச் சகாக்கள் | 01 | 20 |
| | **மொத்தம்** | **16** | **487** |

தற்போதுள்ள இ.மி.ச. இன் வேலைப்படை, சேவை வழங்குநர்களின் ஊழியர்கள் மற்றும் வெளிவாரி ஆட்களுக்கான தேவைப்பாடுகளைக் கருத்திற்கொண்டு பின்வரும் CPD நிகழ்ச்சித் திட்டங்கள் விருத்தி செய்யப்பட்டன.

- நீரியல் முறைமைகளின் பராமரிப்பு
- நீரியல் சார்ந்த குறியீடுகளும் சுற்றுக்களும்
- LV ABC மின் மார்க்கத்தின் நிருமாணமும் பராமரிப்பும்
- LV மற்றும் MV மின் மார்க்க நிருமாணக் கோட்பாடும் பயிற்சியும்
- இ.மி.ச. முறைமைகளும் நடைமுறைகளும்
- மனப்பான்மை அபிவிருத்தி, தலைமைத்துவத் திறன்களின் அபிவிருத்தி மற்றும் அணியை கட்டியெழுப்புதல்
- கழிவு முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டம்
- விநியோக உபமின் நிலைய நிருமாணம்
- தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு
- தியானப் பயிற்சி
- நிலத்தடி கம்பி வட முறைமையின் நிறுவலும் பராமரிப்பும்
- மின் அத்தியட்சகர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்
- நீர் மின்வலுப் பிறப்பாக்கம் மீதான அறிவுப் பகிர்வுச் செயலமர்வு
- இலங்கையில் மின்வலுப் பிறப்பாக்கம், மின் பரிமாற்றம் மற்றும் விநியோகம்

ஆண்டின் காலப்பகுதியில் எண்பத்தேழு CPD செயலமர்வுகள் நடத்தப்பட்டதுடன் 2656 ஊழியர்கள் பயிற்சி பெற்றிருந்தனர்.

### வேலைப்பட்டறை மற்றும் துணைச் சேவைகள் கிளை

இந்தக் கிளையானது பல்வேறு வகையான சேவைகளை வழங்குகின்ற நான்கு செயற்பாட்டு அலகுகளைக் கொண்டுள்ளது.

# சொத்து முகாமைத்துவப் பிரிவு (தொடர்ச்சி)

### மின்வலு ஆலை அலகு

அலகின் பிரதான தொழிற்பாடுகள் பின்வருமாறு :

- கொலன்னாவை, மத்துகம மற்றும் துல்ஹிரிய ஆகிய இடங்களில் நிறுவப்பட்டுள்ள 1 MW கொண்ட 50 கொள்கலப்படுத்தப்பட்டு பொதியிடப்பட்ட டீசல் மின்பிறப்பாக்கி அலகுகளைப் பயன்படுத்தி தேசிய மின்தொகுப்பிற்கு அவசககால மின்வலுவை வழங்குதல்.
- நடமாடும் டீசல் மின்பிறப்பாக்கிகளைப் பயன்படுத்தி VVIP தொழிற்பாடுகளுக்கான மின்சாரத்தை வழங்குதல்
- நடமாடும் டீசல் மின்பிறப்பாக்கிகளைப் பயன்படுத்தி அரசாங்கம் மற்றும் வெளிவாரி நிறுவனங்களுக்கு தயார்நிலைக் காத்திருப்பு மற்றும் தொடர்ச்சியான மின்சாரத்தை வழங்குதல்
- இ.மி.ச., VIP நிறுவல்கள், அரசாங்க வைத்தியசாலைகள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்கள் ஆகியவற்றுக்குச் சொந்தமான தயார்நிலைக் காத்திருப்பு மின் பிறப்பாக்கிகளின் பழுதுபார்ப்பும் பராமரிப்பும்
- வெளிவாரி நிறுவனங்களுக்குச் சொந்தமான டீசல் மின் பிறப்பாக்கிகளின் பிரதான முழுமைப் பழுதுபார்ப்புகளும் புனரமைப்புகளும்
- வெளிவாரி நிறுவனங்களுக்கு டீசல் மின் பிறப்பாக்கிகளை வழங்குதல் மற்றும் நிறுவுதல்
- பழைய சுன்னாகம் மின்வலு நிலையத்தில் இருந்து கையேற்கப்பட்ட 6 x 1250 kVA மின்பிறப்பாக்கிகளை மாற்றியமைத்தல்
- அவசரகால நிலைமைகளில் தேசிய மின்தொகுப்பு / தனிமைப்படுத்தப்பட்ட வலையமைப்புக்கு மின்வலுவை வழங்குதல்
- மின்வலு ஆலை வேலைப் பட்டறைகளைப் புனரமைத்தல்

ஆண்டின் காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்ட வேலைகளின் பொழிப்பு கீழே தரப்பட்டுள்ளது :

| தொ. இல | வேலை வகை | வேலைகளின் எண்ணிக்கை | மதிப்பிடப்பட்ட செலவு |
|---|---|---|---|
| 1 | தயார்நிலைக் காத்திருப்பு டீசல் மின் பிறப்பாக்கிகளின் வருடாந்தப் பராமரிப்பு | 70 | 98.0 |
| 2 | டீசல் மின் பிறப்பாக்கிகளின் பழுதுபார்ப்பு / புனரமைப்பு | 39 | 68.8 |
| 3 | இ.மி.ச. தேவைகளுக்கு டீசல் மின் பிறப்பாக்கி வாடகைக்கமர்த்தல் | 42 | 11.4 |
| 4 | டீசல் மின்பிறப்பாக்கி வாடகைக்கமர்தத்ல் – தனியார், சனாதிபதி பாதுகாப்புப் பிரிவு, பிரதம மந்திரி பாதுகாப்புப் பிரிவுத் தேவைகள் | 300 | 83.6 |
| 5 | டீசல் மின் பிறப்பாக்கி நிறுவல்கள் | 01 | 3.4 |
| 6 | ஏனைய வேலைகள் | 09 | 2.4 |


கொலன்னாவை தளம் - 02 இல் 1 MW மின் பிறப்பாக்கிகள்


கொலன்னாவை தளம் - 02 இல் 1 MW மின் பிறப்பாக்கிகள்

### வளிச் சீராக்கல் மற்றும் குளிரூட்டல் அலகு

ஆண்டின் காலப்பகுதியில் செய்யப்பட்ட வேலைகளின் விபரங்கள் கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன

| தொ. இல | வேலை வகை | அரசாங்க வேலை | | இ.மி.ச. வேலை | |
|---|---|---|---|---|---|
| | | வேலைகளின் எண்ணிக்கை | தொகை (மில். இல. ரூபா) | வேலைகளின் எண்ணிக்கை | தொகை (மில். இல. ரூபா) |
| 1 | வருடாந்தப் பராமரிப்பு | 32 | 244.1 | 262 | 52.2 |
| 2 | புதிய நிறுவல் | 1 | 10.1 | 37 | 28.1 |
| 3 | பழுதுபார்ப்பு | 16 | 16.2 | 51 | 9.1 |
| | **மொத்தம்** | 49 | 270.4 | 350 | 89.4 |

### மின் தூக்கி (Lift) அலகு

மின் தூக்கி அலகானது கோரிக்கையின் பேரில், நாடு முழுவதும் அமைந்திருக்கின்ற அரசாங்க வைத்தியசாலைகள், அரச நிறுவனங்கள் மற்றும் இ.மி.ச. செயற்பாட்டு அலகுகள் ஆகியவற்றில் நிறுவப்பட்டுள்ள இழுவை வகை மற்றும் நீரம வகை மின் தூக்கிகளுக்கு பின்வரும் சேவைகளை வழங்குகிறது.

- மின் தூக்கிகளின் வருடாந்தப் பராமரிப்பு
- வடிவமைத்தல், பொறியியல் மதிப்பீடுகள் மற்றும் விவரக் குறிப்புகளைத் தயாரித்தல், வழங்கலுக்கான பெறுகை மற்றும் ஒப்பந்த நிருவாகம், புதிய மின் தூக்கிகளின் நிறுவல்.
- அதிகாரம் வழங்கலுக்கான சோதனைகள் மற்றும் செயற்பாட்டுப் பாதுகாப்புச் சோதனைகளை மேற்கொள்ளுதல்.
- பழைய மின் தூக்கிகளைப் புனரமைத்தல்.
- புதிய மின் தூக்கிகளின் நிறுவல்களுக்கான ஆலோசனை சேவைகளை வழங்குதல்.

# சொத்து முகாமைத்துவப் பிரிவு (தொடர்ச்சி)

ஆண்டின்போது செய்யப்பட்ட வேலைகளின் மதிப்பிடப்பட்ட செலவுகள் கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

| தொ. இல | வேலை வகை | அரசாங்க வேலை | | இ.மி.ச. வேலை | |
|---|---|---|---|---|---|
| | | வேலைகளின் எண்ணிக்கை | தொகை (மில். இல. ரூபா) | வேலைகளின் எண்ணிக்கை | தொகை (மில். இல. ரூபா) |
| 1 | வருடாந்தப் பராமரிப்பு | 22 | 26.3 | 5 | 2.3 |
| 2 | புதிய நிறுவல்கள் | - | - | 1 | 7.1 |
| 3 | பழுதுபார்ப்புகள் | 14 | 2.8 | 3 | 0.8 |
| 4 | ஏனையவை (பரிசோதனை மற்றும் ஆலோசனை) | 02 | 0.06 | 1 | 0.02 |
| | **மொத்தம்** | **38** | **29.16** | **10** | **10.22** |

### மத்திய வேலைப்பட்டறை மற்றும் வாகனகூட அலகு

ஆண்டின் காலப்பகுதியில் இந்த அலகினால் பூரணப்படுத்தப்பட்ட வேலைகள் பற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளது

| தொ. இல | வேலை வகை | வேலை விபரம் | வேலைகளின் எண்ணிக்கை | தொகை |
|---|---|---|---|---|
| 1 | இயந்திரவியல் | மெல்லுருக்கு புனல், சாவிப் பெட்டிகள், உருக்கு ஏணிகள், AC இயந்திரங்களுக்கான கல்வனைசுப்படுத்தப்பட்ட மெல்லுருக்கு தாங்கு சட்டங்கள் ஆகியவற்றின் உருவாக்கம் | 04 | 0.2 |
| 2 | மின்னியல் | சபுகஸ்கந்த மின்வலு நிலையத்தில் குளிர்விக்கும் விசிறி மோட்டர்களின் மீள்சுற்றல் | 15 | 1.8 |
| 3 | உற்பத்தி | விநியோகப் பிரிவுகளுக்கான D– தாங்கு சட்டங்கள், T- இறுக்கிகள் ஆகியவற்றின் தயாரிப்பு | 19 | 10.2 |
| 4 | வாகனப் பழுதுபார்ப்புகள் | இ.மி.ச. வாகனங்களுக்கான பழுதுபார்ப்புகள், தீந்தைப் பூச்சுக்கள் மற்றும் ஓட்டை உடைசல் சரிப்படுத்தல்கள் | 41 | 4.4 |
| 5 | வாகனச் சுத்திகரிப்பு | இ.மி.ச. வாகனங்களின் சுத்திகரிப்புகள் | 68 | 1.3 |
| 6 | எரிபொருள் சோதனைகள் | இ.மி.ச. வாகனங்களின் எரிபொருள் சோதனை | 01 | 0.01 |
| 7 | ஏனையவை | தன்னியக்க தீ பரவல் கட்டுப்பாட்டுப் பலகத்தின் பழுதுபார்ப்பு | 01 | 0.5 |
| | | **மொத்தம்** | | **18.41** |

### குடியியல் வேலைகள் மற்றும் கட்டடங்கள் கிளை

இந்தக் கிளையானது புதிய கட்டடங்களின் நிருமாணம், தற்போதுள்ள கட்டடங்கள் / அலுவலகங்களின் புனரமைப்பு / விரிவாக்கம், இ.மி.ச. தலைமை அலுவலகக் கட்டடம் மற்றும் நாடு பூராகவும் உள்ள சுற்றுலா பங்களாக்களின் பராமரிப்பு ஆகியவற்றை மேற்கொள்கிறது.

CW&B கிளையானது பிந்தைய மென்பொருளைப் பயன்படுத்தி கட்டமைப்பு வடிவமைத்தல்கள் மற்றும் தொடர்புடைய வரைதல்கள் ஆகியவற்றை முன்னெடுக்கும் இயலுமையைக் கொண்டுள்ள தனது சொந்த கட்டமைப்பு வடிவமைத்தல் அலகினைக் கொண்டிருக்கிறது.

தலைமை அலுவலகக் கட்டடம் மற்றும் சுற்றுலா பங்களாக்களின் பராமரிப்பு வேலைகளை முன்னெடுப்பதற்குப் பொறுப்பாகவுள்ள வசதிகள் முகாமைத்துவ அலகானது CW&B கிளையுடன் இணைக்கப்பட்டுள்ளது.

ஆண்டின் காலப்பகுதியில் பூர்த்தி செய்யப்பட்ட வேலைகளின் விபரம் கீழ்வருமாறு

| விபரம் | VAT இன்றி வழங்கப்பட்ட தொகை (மில். இல. ரூபா) | 2019 ஆம் ஆண்டினுள் செய்யப்பட்ட VAT இன்றிய கொடுப்பனவு (மில். இல. ரூபா) |
|---|---|---|
| தலைவர் மற்றும் பொது முகாமையாளர் ஆகியோரின் அலுவலகங்களை இ.மி.ச. தலைமை அலுவலகத்தின் 7 ஆவது மாடிக்கு மாற்றுதல் | 46 | 20.5 |
| இ.மி.ச. தலைமை அலுவலகத்தின் பிரதான நுழைவாயில் மற்றும் தரைத் தள முகப்புப் பகுதி என்பவற்றின் புதுப்பிப்பு | 29 | 20.4 |
| இ.மி.ச. தலைமை அலுவலக சிற்றுண்டிச்சாலைக் கட்டடத்தின் புதுப்பிப்பு | 44 | 6.93 |
| கல்முனை பிரதேச அலுவலகத்திற்காக இரண்டு மாடிக் கட்டட நிருமாணம் | 50.6 | 5.64 |
| மின்னேரியாவில் உள்ள சுற்றுலா பங்களாவின் விரிவாக்கமும் புதுப்பிப்பும் | 35.2 | 5.45 |
| கம்பஹா பிரதேச அலுவலகத்திற்கான மீதி மதிப்பீடு | 12 | 6.8 |
| ஆனியகந்தையில் தானியங்கி வேலைப்பட்டறையில் உள்ள சுவர் மற்றும் தளத்தைத் தக்கவைத்தல், தீந்தைச் சாவடியில் கொங்கிறீற்றிடல் மற்றும் தரை கொங்கிறீற்றிடல் மற்றும் ஈபொக்ஸி மஸ்டிக் தீந்தையிடல் ஆகிய நிருமாணங்கள் | 10.2 | 6.85 |
| இடைமாடித் தரையில் இடைத்தடுப்பிடல் - கொலன்னாவை | 5.32 | 1.8 |
| மின்னேரியாவில் சலவை அறையுடன்கூடிய சாரதி அறை மற்றும் சுற்றுலா உதவியாளர் அறை ஆகியவற்றின் நிருமாணம் | 5.1 | 0.36 |
| இ.மி.ச. இன் தலைமை அலுவலக அடித்தளத்தில் உள்ள இ.மி.ச. பதிவேட்டு அறையை தற்காலிகமாக ஆனியகந்தைக்கு இடமாற்றுதல் | 28.6 | 26.5 |
| இ.மி.ச. தலைமை அலுவலகக் கட்டடத்தில் மேற்கூரை சூரிய மின்சக்திக்கான நிறுவல் | 5.6 | 0.05 |
| DGM (கிழக்கு) அலுவலகத்திற்கான மூன்று மாடிகளைக் கொண்ட கட்டடத்தின் நிருமாணம் | 191 | 20.4 |

# சொத்து முகாமைத்துவப் பிரிவு (தொடர்ச்சி)



தலைமை அலுவலகக் கட்டடத்தின் புதுப்பிப்பு



அநுராதபுரத்தில் DGM(NCP) அலுவலகத்தின் நிருமாணம்

### செயற்றிட்ட முகாமைத்துவ அலகு (விதுலக்பய)

செயற்றிட்ட முகாமைத்துவ அலகானது நாரஹேன்பிட்டியில் இ.மி.ச. இற்காக முன்மொழியப்பட்டுள்ள புதிய அலுவலகக் கட்டடத்தின் நிருமாணத்துடன் இணைந்த மற்றும் தொடர்புடைய செயற்றிட்ட முகாமைத்துவ நடவடிக்கை நோக்கத்திற்காகத் தாபிக்கப்பட்டதாகும். இந்தச் செயற்றிட்டத்திற்கு இ.மி.ச. இனால் நிதியிடப்படுவதுடன் இதற்கான மதிப்பீட்டுச் செலவு ரூபா 3,149 மில்லியன் ஆகும். 400 அடித்தூண்களின் நிருமாணமும் சோதனையும் நிறைவடைந்துள்ளன.

முன்மொழியப்பட்ட கட்டடத்தின் நிருமாணம் பல்வேறு காரணங்களால் தாமதமாகியிருந்ததுடன், இறுதியாக மீளாய்வுக்கான ஆலோசனை சேவைகள் மற்றும் விலைமனு ஆவணங்களின் வடிவமைப்பு, நிருமாணத்தின் நிருவாகம் மற்றும் மேற்பார்வை என்பன இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு (SEC) வழங்கப்பட்டது. வழங்கல் கடிதம் 2019-12.26 ஆந் திகதி SEC இற்கு வழங்கப்பட்டதுடன் அவர்களுடைய பணிகள் 2020-01-01 இலிருந்து ஆரம்பமாகிறது.

### தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்புக் கிளை (OH&S)

இந்தக் கிளையின் பிரதான நோக்கம் விபத்துக்கள் மற்றும் காயம் ஏற்படுவதைக் குறைப்பதற்காக ஊழியர்கள் மத்தியில் சுகாதாரம் மற்றும் பாதுகாப்புப் பற்றி விழிப்புணர்வை உண்டாக்குவதும் பாதுகாப்பான வேலைச் சூழலை உறுதிப்படுத்துவதன் மூலம் நிறுவனத்தினுள் பாதுகாப்புக் கலாசாரத்தை மேம்படுத்துவதாகும். மேலே குறிப்பிடப்பட்ட நோக்கத்தை அடைந்து கொள்வதற்காக சகல பிரிவுகளுக்கிடையிலும் ஓர் உயர் பாதுகாப்பு நியமத்தை / நடைமுறையைப் பின்பற்றுவதுடன் பாதுகாப்பைக் கண்காணித்து வசதியளிப்பதற்காக உள்ளகப் பாதுகாப்பு ஒழுங்குபடுத்துநர் ஒருவராக இந்தக் கிளை செயற்படுகிறது.

தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு தொடர்பில் ஒவ்வொரு பிரிவிலும் நியமிக்கப்பட்டுள்ள ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்கள் ஊடாக அது தொடர்பான ஆதரவுச் சேவைகளையும் இக்கிளை வழங்குகிறது.

### பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்

ஆண்டின் காலப்பகுதியில் நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

| இல. | நிகழ்ச்சித் திட்டம் | பங்குபற்றியோர் வகை | நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | பங்குபற்றியோர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 01 | தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு | களப் பணியாளர்கள் மற்றும் எழுதுவினைஞர்களும் அதனோடிணைந்த சேவை வகுதியினரும் | 123 | 5861 |
| 02 | தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு | மின்வலு நிலைய பணித்தொகுதியினர் | 14 | 609 |
| | | **மொத்தம்** | 137 | 6470 |

### முதன்மை / மின்தொகுப்பு உபமின் நிலையங்களின் பாதுகாப்புப் பரிசீலனை

இந்தக் கிளையானது இ.மி.ச. இன் ஊழியர்களுக்கான பாதுகாப்பான பணியிடத்தை உறுதிப்படுத்துவதற்காக பாதுகாப்புப் பரிசோதனைகளை முன்னெடுத்திருந்ததுடன் மின்வலு நிலையங்கள், மின்தொகுப்பு உபமின் நிலையங்கள் மற்றும் கள வேலைகளைப் பரிசீலிப்பதற்காக பாதுகாப்புப் பரிசோதனைகளை மேலும் விரிவாக்கத் திட்டமிட்டுள்ளது.

ஆண்டின்போது முன்னெடுக்கப்பட்ட பாதுகாப்புப் பரிசோதனைகளின் பொழிப்பு கீழே தரப்பட்டுள்ளது.

| இல. | பிரிவு | முதன்மை உபமின் நிலையங்களின் எண்ணிக்கை | தாங்கு சட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | **விநியோகப் பிரிவு 1** | 15 | 08 |
| 02 | **விநியோகப் பிரிவு 2** | 16 | 15 |
| 03 | **விநியோகப் பிரிவு 3** | 03 | 16 |
| 04 | **விநியோகப் பிரிவு 4** | 17 | 11 |
| | **மொத்தம்** | 51 | 50 |

# சொத்து முகாமைத்துவப் பிரிவு (தொடர்ச்சி)

இ.மி.ச. இல் இடம்பெற்ற உயிர் பறித்த மற்றும் அறிக்கையிடத்தக்க விபத்துகள் (ஒப்பந்தகாரரின் ஊழியர்களுடன்)




இந்தக் கிளையானது புதிய தசாப்தத்தில் விபத்துகளற்ற பாதுகாப்பான வேலை சூழல் ஒன்றையும் சுகாதாரமான வேலைப்படை ஒன்றையும் உருவாக்குவதற்காக இ.மி.ச. இல் பிரதான வகிபாகம் ஒன்றை ஆற்றுகிறது.

### பாதுகாப்புப் பிரிவு

பாதுகாப்புப் பிரிவானது பாதுகாப்பு முகாமையாளரின் கீழ், பிரதிப் பாதுகாப்பு முகாமையாளர், நான்கு சிரேஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் 29 பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் உள்ளடங்கலாக 909 பாதுகாப்பு ஆளணியினரைக் கொண்டுள்ளது. நாடுபூராகவும் மொத்தமாக 122 உப பாதுகாப்பு அலகுகள் செயற்படுகின்றன.

இ.மி.ச. இன் பாதுகாப்பு பிரிவானது, இ.மி.ச. இன் சகல பிரிவுகளிலுமுள்ள உயிர்கள் மற்றும் உடமைகளின் பாதுகாப்புக்குப் பொறுப்பானதாகும்.

நாடு பூராகவும் உள்ள இ.மி.ச. இன் சில வளாகங்களில் ஈடுபடுத்தப்பட்டுள்ள தனியார் பாதுகாப்புச் சேவையினர் மற்றும் குடியியல் காப்பு பாதுகாப்புச் சேவையினர் ஆகியோரின் செயற்பாட்டுக் கடமைகளும் இ.மி.ச. இன் பாதுகாப்பு பிரிவினால் மேற்பார்வை செய்யப்பட்டு கண்காணிக்கப்படுகின்றன.

பாதுகாப்பு பிரிவானது விசேட விழாக்கள், வைபவங்கள் மற்றும் ஏனைய நிகழ்வுகள் நடைபெறும்போது VIP இன் பாதுகாப்புக்காக பாதுகாப்புச் சேவையை வழங்குகிறது.

இ.மி.ச. பாதுகாப்புத் தரப்பினருக்கு அவர்களுடைய அறிவு மற்றும் திறன்களை மேம்படுத்தி, விருத்தி செய்வதற்காக பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள், வேலைப்பட்டறைகள் மற்றும் செயலமர்வுகள் என்பன நடத்தப்பட்டன. இவை அவர்கள் தங்களுடைய கடமைகளை தொழில்சார் வகையில் உயர் உற்பத்தித்திறனுடன் ஆற்றுவதற்கான அவர்களுடைய வினைத்திறன், ஒழுக்காறு, ஊக்கம் ஆகியவற்றை விருத்தி செய்ய உதவும்.

ஆயுதங்களைக் கையாளுதல், துப்பாக்கிச் சூடு நடத்துதல், தீ பாதுகாப்பு, பணத்திற்கான வழிக்காவல் மற்றும் VIP இற்கான மெய்க் காவல் கடமைகள், முதலுதவி, இடரின்போது வெளியேற்றுதல் தொடர்பான பயிற்சி, தலைமைத்துவம் மற்றும் முகாமைத்துவம் ஆகியன பற்றி ஆண்டின் காலப்பகுதியில் பாதுகாப்புத் தரப்பினருக்கு விசேட பயிற்சி வழங்கப்பட்டது.

ஆண்டின் காலப்பகுதியில் நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் பொழிப்பு கீழே காட்டப்பட்டுள்ளது.

| இல. | நிகழ்ச்சித் திட்டம் | பயிற்சி நிலையம் | பங்குபற்றியோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | ஆயுதங்களைக் கையாளும் பயிற்சி | இ.மி.ச. இன் பிலியந்தலை பயிற்சி நிலையம் மற்றும் கொலன்னாவ பாதுகாப்புத் தலைமையகம் | 838 |
| 2 | உயிர் காப்புக்காகக் கையாளப்படும் துப்பாக்கிச் சூட்டுப் பயிற்சி | களுத்துறை பொலிஸ் பயிற்சிப் பாடசாலையில் உள்ள துப்பாக்கி சூட்டப் பயிற்சிப் பிரதேசம் | 404 |
| 3 | காசுப் பாதுகாப்பு பற்றிய வேலைப்பட்டறை | இ.மி.ச. பயிற்சி நிலையம், பிலியந்தலை | 80 |
| 4 | களஞ்சியங்களில் பாதுகாப்புக் கடமை | | 96 |

தேசிய தொழிற் சேவை விளையாட்டுப் போட்டிகள் மற்றும் தேசிய போட்டிகளில் குறிப்பாக தடகள, கரப்பந்து மற்றும் மட்டைப்பந்து போட்டிகளில் இ.மி.ச. இன் பாதுகாப்புத் தரப்பினர் பங்குபற்றியுள்ளனர்.



செயற்பாட்டு மீளாய்வு

# நிறுவன உபாயப் பிரிவு

# நிறுவன உபாயப் பிரிவு

நிறுவன உபாயப் பிரிவு மேலதிகப் பொது முகாமையாளர் (நிறுவன உபாயம்) இனால் தலைமை தாங்கப்படுகிறது. இது வணிகம் மற்றும் செயற்பாட்டு உபாயக் கிளை, நிறுவன உபாயம் மற்றும் ஒழுங்குபடுத்தல் அலுவல்கள் கிளை, தொழிற்பாட்டு உபாயம் மற்றும் செயன்முறை அபிவிருத்திக் கிளை, தகவல் தொழில்நுட்பவியல் (IT) கிளை, ஆய்வு மற்றும் அபிவிருத்திக் கிளை என ஐந்து கிளைகளைக் கொண்டுள்ளது. ஆண்டின் காலப்பகுதியில் பிரதிப் பொது முகாமையாளரால் தலைமை தாங்கப்படுகின்ற ஒவ்வொரு கிளையினதும் செயலாற்றுகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. செயற்றிட்டப் பணிப்பாளர் ஒருவரால் தலைமை தாங்கப்படும் செயற்றிட்டமான நிறுவன வளத் திட்டமிடல் (ERP) உம் மேலதிகப் பொது முகாமையாளர் (நிறுவன உபாயம்) இன் நோக்கெல்லையின் கீழ் தொழிற்படுகிறது.

## நிறுவன உபாயம் மற்றும் ஒழுங்குபடுத்தல் அலுவல்கள் கிளை

நிறுவன உபாயம் மற்றும் ஒழுங்குபடுத்தல் அலுவல்கள் (CS&RA) கிளையானது உரிய உரிமதாரர்கள் மத்தியில் இலங்கை மின்சார சபைக்கு வழங்கப்பட்ட மின் பிறப்பாக்கம், மின் பரிமாற்றம் மற்றும் மின் விநியோக உரிமங்களிலிருந்து எழுகின்றதும் அவை தொடர்பானதுமான விடயங்கள் அதேபோன்று உரிமத் தேவைகள் தொடர்பில் இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு (PUCSL) ஆகியவற்றை ஒருங்கிணைக்கிறது. ஒழுங்குபடுத்தல் அலுவல்களைக் கையாள்வதற்கு மேலதிகமாக, இந்தக் கிளையானது இ.மி.ச. இற்கான நிறுவன உபாய உருவாக்கத்தை ஒருங்கிணைப்பதற்கும் பொறுப்பானதாக இருக்கிறது.

ஆண்டின் காலப்பகுதியில், ஒழுங்குபடுத்தல் அலுவல்கள் அலகானது சகல இ.மி.ச. உரிமதாரர்களினதும் உரிமத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக உரிமதாரர்களுடன் நெருக்கமாகப் பணியாற்றியது போலவே PUCSL உடனும் நெருங்கிச் செயலாற்றியிருந்தது. குறிப்பாக, உரிமதாரர்கள் மூலமான மின்சார (விநியோகம்) செயலாற்றுகை நியமங்கள், மின்சார (பரிமாற்றம்) செயலாற்றுகை நியமங்கள், மின்சார (பாதுகாப்பு, தரம் மற்றும் தொடர்ச்சித்தன்மை) ஒழுங்குபடுத்தல் மற்றும் மின்சார (உந்தப்பட்ட பயன்பாட்டு கேள்விப் பக்க முகாமைத்துவம்) ஒழுங்குபடுத்தல் போன்ற ஒழுங்குபடுத்தல்களின் நடைமுறைப்படுத்தலைக் கவனித்தல், அவற்றை அடைந்து கொள்வதற்காக கடும் முயற்சிகளை எடுத்தல் ஆகியவற்றின் மீது அலகின் கவனம் பொதிந்திருந்தது. மேலுள்ளவற்றிற்கு மேலதிகமாக, ஒழுங்குபடுத்தல் அலுவல்கள் அலகானது, வழித்தட வழிகாட்டல்களை மேம்படுத்துவதற்கும் மின் மானிகளின் பதிவில் காணப்படக்கூடிய சந்தேகத்திற்கிடமான மாற்றங்களைப் புலனாய்வு செய்வதற்கான ஒரு புதிய வழிகாட்டலை உருவாக்குவதற்கும் PUCSL அதேபோன்று இ.மி.ச. உரிமதாரர்களுடன் ஒழுங்குபடுத்தல் அலுவல்கள் அலகு சேர்ந்து பணியாற்றுகிறது.

முன்னைய ஆண்டுகளைப் போலவே, இறுதிப் பயனர் விதிப்பனவுச் சீராக்கம் எதுவும் 2019 ஆம் ஆண்டிலும் செய்யப்படவில்லை. குறைந்த செலவுமிக்க மின்சாரப் பிறப்பாக்கத்தைக் கையகப்படுத்துவதன் மூலம் மின்சாரப் பிறப்பாக்கத்திற்கான செலவை குறைப்பதிலும் விதிப்பனவுகளின் வழிமுறை மூலம் இறுதிப் பாவனை வாடிக்கையாளர்களுக்கு உண்மையான கிரயத்தைக் கடத்துவதிலும் அவதானிக்கப்பட்ட காலதாமதங்கள் மற்றும் சிக்கல்கள் காரணமாக, இ.மி.ச. இற்கு எஞ்சியிருக்கின்ற ஒரே தெரிவு மின்சாரச் செலவு உயர்வாகக் காணப்படுகின்ற நேரங்களில் இருந்து மின்சாரச் செலவு குறைவாக உள்ள நேரங்களுக்கு நுகர்வினை மாற்றுவதே ஆகும். ஏற்கனவே, சகல தொகையளவு நுகர்வோரும் பயன்பாட்டு நேர (ToU) விதிப்பனவுகளில் கட்டாயமாக வைக்கப்பட்டுள்ளனர். ஆனால் மொத்த வாடிக்கையாளர் தளத்தில் 85% இற்கும் மேல் உள்ள வீட்டு மின் நுகர்வோர் உள்ளிட்ட சில்லறை நுகர்வோருக்கு இது போன்ற நிர்ப்பந்தம் இல்லை. 2017 இல், ToU விதிப்பனவானது சகல வீட்டு மின் நுகர்வோருக்கும் ஒரு விருப்பத் தெரிவு விதிப்பனவாக விரிவாக்கப்பட்டது. எவ்வாறாயினும், ToU இற்கு மாறுவதற்கு வீட்டு மின் நுகர்வோரிடம் இருந்து கிடைக்கின்ற பிரதிபலிப்பு மிகவும் சொற்பமானதாகும். வீட்டு மின் நுகர்வோருக்கு ToU விருப்பத்தெரிவு பற்றி அறிவூட்டுவதற்கான ஊடகப் பிரச்சாரமொன்று 2019 ஆம் ஆண்டில் TELECINE தொலைக்காட்சி நிறுவனத்தின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டது.

முற்கொடுப்பனவு அளவீட்டுத் தீர்வொன்றை அறிமுகப்படுத்தும் நோக்கில், ADB நிதியுதவியின் கீழ், இ.மி.ச. இற்கான முற்கொடுப்பனவு அளவீட்டுத் தீர்வொன்றை விருத்தி செய்வது பற்றிய ஆய்வு 2019 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.

நிறுவன உபாயத் தொழிற்பாடுகள் வரிசையில், கிளையானது 2019 - 2023 காலப்பகுதிக்கான இ.மி.ச. இன் நிறுவனத் திட்டம், அதே காலப்பகுதிக்கான நடவடிக்கைத் திட்டம், வருடாந்த அறிக்கை - 2018, புள்ளிவிபரத் திரட்டு - 2018, 2019 ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகையும் 2020 ஆம் ஆண்டிற்கான நிகழ்ச்சித் திட்டங்களும் போன்றவை உள்ளிட்ட இ.மி.ச. இன் நிறுவன ஆவணங்களைத் தொகுத்தல் மற்றும் வெளியிடும் பணிகளைப் பொறுப்பேற்றுள்ளது.

## தொழிற்பாட்டு உபாயம் மற்றும் செயன்முறை அபிவிருத்திக் கிளை

நிறைவேற்றுத்தரம் மற்றும் நிறைவேற்றுத்தரம் அல்லாத இ.மி.ச. ஊழியர்கள் மத்தியில் இருந்து கிடைத்த செயற்பாட்டுக் கையேடு, தொழிற்பாட்டுக் கையேடு மற்றும் ஆளணிக் கையேடு ஆகியவற்றுக்கான தொடர்ச்சியான கோரிக்கையால் உந்தப்பட்ட FS&PD கிளையானது புதிய கையேடுகளைத் தயாரிப்பதற்கும் அதே போன்று ஏற்கனவே பொறுப்பேற்கப்பட்ட கையேடுகளைப் பூரணப்படுத்துவதற்குமான அதன் முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொண்டது. அந்த வகையில், 'செயற்பாட்டுக் கையேடு - DGM (P&D)', 'செயற்பாட்டுக் கையேடு - DGM (C&C)', 'செயற்பாட்டுக் கையேடு - DFM (Dist.)', ஆளணிக் கையேடு - சம்பளங்களும் வேதனங்களும், செயற்பாட்டுக் கையேடு - விடுமுறை தினம், விடுமுறை தினக் கொடுப்பனவு மற்றும் பதில் லீவும் மேலதிக நேரமும்' போன்ற கையேடுகளின் தயாரிப்பு திட்டமிடப்பட்ட காலத்திற்கு முன்னராகவே பூர்த்தி செய்யப்பட்டன. 'ஒழுக்காற்று நடைமுறை விதிகள்' கையேட்டின் சிங்கள மொழிபெயர்ப்பு பூர்த்தி செய்யப்பட்டு, விநியோகத்திற்காக அச்சிடப்பட்டுள்ள அதே வேளை அதன் தமிழ் மொழிபெயர்ப்பானது மொழிபெயர்ப்பாளரால் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் அது இ.மி.ச. அதிகாரிகளைக் கொண்ட குழு ஒன்றினால் மீளாய்வு செய்யப்படுவதற்காக வழங்கப்பட்டுள்ளது.

கையேடுகளைப் பூர்த்தி செய்வதற்கான அதிக தேவை காரணமாக ஒரு முன்னோடிச் செயற்றிட்டமாக மின் பரிமாற்றம் மற்றும் மின் விநியோகப் பிரிவுகளுக்குரிய சில கையேடுகளைத் தயாரிப்பதை வெளிமூலமிடுவதற்குக் (வெளித்தரப்பினர் மூலம்) கிளை தீர்மானித்திருக்கிறது.

நிறுவனத்தின் ஒட்டுமொத்த செயற்பாடுகளையும் மேம்படுத்துவதற்கு காலத்திற்கேற்ற மற்றும் அவசியமானதாகக் கருதப்படுகின்ற ஆளணிக் கிளை மற்றும் பயிற்சிக் கிளை ஆகியவற்றின் மீள்கட்டமைப்பைச் செய்வதற்கான சபைப் பத்திரங்கள், மீள்கட்டமைப்புக்காக அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டன. ஆளணிக் கிளையின் மீள்கட்டமைப்புக்கான சபைப் பத்திரம் சபைக்கு ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ள அதே வேளை பயிற்சிக் கிளைக்கான சபைப் பத்திரத்தின் வரைவு சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் இன்னும் மீளாய்வு செய்யப்படுகிறது.

அதே சமயத்தில், AGM (CS) இனால் தலைமை தாங்கப்படுகின்ற செயலணிக் குழு ஒன்றின் ஊடாக நிறுவனத்தை ஒரு துடிப்பான மற்றும் வினைத்திறனான நிறுவனமாக மாற்றுவதற்கான சட்டம், கட்டமைப்பு மற்றும் நிருவாக ரீதியான மாற்றங்களைச் செய்வதற்கான முன்மொழிவுகளைத் தயாரிப்பதற்கு இ.மி.ச. இன் பல்வேறு பிரிவுகளினதும் ஒருங்கிணைந்த முயற்சியொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. குழுவானது ஆண்டின் இறுதி வரை பல்வேறு கலந்தாய்வுகளையும் வாதப் பிரதிவாதங்களையும் மேற்கொண்டிருந்ததுடன் அது தொடர்பான அறிக்கை ஒன்றை இறுதிப்படுத்துவதற்கான வேலைகள் நடைபெறுகின்றன. இறுதி அறிக்கையானது மேலதிக செழுமைப்படுத்தல்களைச் செய்து சபைக்குச் சமர்ப்பிப்பதற்காக நிறுவன முகாமைத்துவ அணிக்கு (CMT) சமர்ப்பிக்கப்படும்.

கிளையானது பிந்தைய உள்ளடக்கங்களுடன்கூடிய சுற்றறிக்கைகள், கையேடுகள் மற்றும் ஆவணங்கள் முறைமையை (CMDS), அவை வெளியிடப்பட்டு சுற்றோட்டத்திற்கு விடப்படும் போதெல்லாம் தொடர்ச்சியாக பதிவேற்றம் செய்தது. CMDS ஆனது இ.மி.ச. ஊழியர்கள் அணுகக்கூடிய தகவல் மூலம் ஒன்றாக மாறியிருக்கிறது. முறைமையின் செழுமைப்படுத்தல்

# நிறுவன உபாயப் பிரிவு (தொடர்ச்சி)

ஆனது உள்ளடக்கங்களின் தொடர்ச்சியான பதிவேற்றத்துடன் தொடரப்பட்டது. நிறுவனத் திட்டம் 2019 - 2023 இன் தேவைப்பாடுகளுக்கு ஏற்ப, தொடர்ச்சியான மேம்பாட்டுக் கொள்கையின் வரைவு ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும், ஏற்கனவே வெளியிடப்பட்ட சில கையேடுகள் பல்வேறு பிரிவுகளிலுமிருந்து கிடைத்த அதிகரித்த கேள்விக்கு வழங்கப்படுவதற்காக மீளவும் அச்சடிக்கப்பட்டது.

தேர்ந்தெடுக்கப்பட்ட குழுக்கள், பொது நிறுவனங்கள் மீதான குழு (COPE), பாராளுமன்ற உறுப்பினர்கள், மின்வலு மற்றும் சக்தி அமைச்சு, அரச நிறுவனங்கள் போன்றவற்றால் எழுப்பப்படுகின்ற பாராளுமன்ற ஐயவினாக்களுக்கான பதில்களைத் தொகுப்பதற்கு, மாறாத ஒருங்கிணைந்த பதில்களை முகாமை, தலைவர் மற்றும் வரிசை அமைச்சு ஆகியவற்றுக்கு தகுந்த நடவடிக்கைகளுக்காக அனுப்புவதற்காக ஐய வினாக்கள் இலக்கு வைத்த சம்பந்தப்பட்ட பிரிவுகளை இ.மி.ச. இன் முகாமையுடன் ஒருங்கிணைப்பதன் மூலம் இக்கிளை, முகாமைக்குத் தொடர்ந்தும் உதவுகிறது.

### வணிகம் மற்றும் செயற்பாட்டு உபாயக் கிளை

இ.மி.ச. இன் பிரதான வணிக மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கான உபாயங்களை அமைத்தல், உபாய நடைமுறைப்படுத்தலில் நிறுவனச் செயலாற்றுகையைக் கண்காணித்தல் மற்றும் இ.மி.ச. இன் நிறுவன பிம்பம் மற்றும் நிறுவன கலாசாரத்தை மேம்படுத்தல் என்பன வணிகம் மற்றும் செயற்பாட்டு உபாயக் கிளையின் பிரதான நடவடிக்கைகள் ஆகும்.

1969 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்ட இ.மி.ச. தனது பொன் விழாவை 2019.11.01 ஆந் திகதி கொண்டாடியது. இந்த முக்கியமான தருணத்தை நினைவுகூருமுகமாக, இ.மி.ச. 2019 ஆம் ஆண்டின் காலப்பகுதியில் பல நிகழ்வுகளை ஒழுங்கு செய்திருந்தது. B & OS கிளையானது சகல அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களிலும் எமது பொதுமக்கள் விழிப்புணர்வுப் பிரச்சாரத்தை முன்னெடுத்ததன் மூலம் இந்த நடவடிக்கையில் ஒரு முன்னணி வகிபாகத்தை வகித்திருந்தது. 2019 ஆம் ஆண்டில் 100% மின்னூட்டத்தை அடைதல் மற்றும் சக்திப் பாதுகாப்பு என்பன இந்தப் பிரச்சாரத்தின் பின்னணியில் இருந்த பிரதான கருப்பொருட்களாகும். B & OS கிளையின் உதவியுடன், இ.மி.ச. வாடிக்கையாளர்களுக்கு புதிய வாடிக்கையாளர் சேவை கையடக்கத் தொலைபேசிச் செயலி மற்றும் இ.மி.ச. வரலாற்றுப் புத்தகம் என்பன 2019 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டன.

2019 ஆம் ஆண்டில், B & OS கிளை மற்றும் இ.மி.ச. இன் சுற்றுச்சூழல் அலகு என்பன இ.மி.ச. மின்வலு நிலையங்கள் மற்றும் ஏனைய வளாகங்களில் 50,000 மரக் கன்றுகளை நடும் நிகழ்ச்சித் திட்டம் ஒன்றை மேற்கொண்டிருந்தன. இந்த சகல நிகழ்வுகளையும் வெற்றிகரமாக நிறைவு செய்யும் பொருட்டு, B&OS கிளையானது கணிசமான அளவுக்கு தனது சேவையை வழங்கியிருந்தது.

2017, 2018, 2019 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற புத்தாக்கத்திறன் போட்டிகளுக்கான விருது வழங்கும் விழா இ.மி.ச. இன் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு 2019-11-01 ஆந் திகதி நடைபெற்றது.



CSCs இன் செயலாற்றுகைகளை மேம்படுத்தும் பொருட்டு, இ.மி.ச. 2019 ஆம் ஆண்டில் நட்சத்திரத் தரமிடுகின்ற நிகழ்ச்சித் திட்டத்தைத் தொடர்வதற்கும் தீர்மானித்திருந்தது. தென் மாகாணத்தில் உள்ள சகல வாடிக்கையாளர் சேவை நிலையங்களும், சில வட மேல் மாகாணத்தில் உள்ள வாடிக்கையாளர் சேவை நிலையங்களும் சில மேல் மாகாணம் வடக்கில் உள்ள CSCs களும் 2019 ஆம் ஆண்டின் இறுதிக்குள் தமது ஒரு நட்சத்திரத்தை அடைந்து கொண்டன. சகல CSCs களும் ஆகக் குறைந்தது ஒரு நட்சத்திர மட்டத்தையாவது அடைவதற்கு ஊக்கமளிக்கும் பொருட்டு நட்சத்திரத் தரமிடல் நிகழ்ச்சித் திட்டம் பற்றிய பல விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் இக்கிளையினால் நடத்தப்பட்டன.

தமிழ் மற்றும் சிங்கள மொழி மூலமான பாடசாலைகளுக்கிடையிலான இறுதி வினாவிடைப் போட்டியும் விருது வழங்கும் வைபவமும் (2018/2019) இ.மி.ச. இன் பொன் விழா வரிசையில் 2019-10-24 ஆந் திகதி வெற்றிகரமாக நடத்தப்பட்டது. கிட்டத்தட்ட 35 சிங்கள நிகழ்ச்சித் திட்டங்களும் 45 தமிழ் நிகழ்ச்சித் திட்டங்களும் 2019 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டன. இ.மி.ச. இத்தகைய போட்டிகள் ஊடாக மின்சாரப் பாதுகாப்பு மற்றும் சக்தி முகாமைத்துவம் பற்றி பாடசாலைச் சிறார்களுக்கு அறிவூட்டுவதற்கு எதிர்பார்த்தது.

களப் பணியாளர்கள் தமது தனிப்பட்ட சீர்படுத்தல், வணிகம் மற்றும் சமூக இங்கிதங்கள் ஆகியவற்றை மேம்படுத்தும் நோக்குடன் கிட்டத்தட்ட 12 வேலைப் பட்டறைகள் அவர்களுக்கு நடத்தப்பட்டன. நேர்மறையான மனப்பான்மை, சுய ஊக்கம் மற்றும் தலைமைத்துவம் ஆகியன பற்றிய மேலும் 6 நிகழ்ச்சித் திட்டங்கள் இ.மி.ச. ஊழியர்களான எழுதுவினைஞர்கள் மற்றும் அதனோடிணைந்த சேவை வகுதியினருக்காக நடத்தப்பட்டன. வாடிக்கையாளர் தொடர்பு மற்றும் இ.மி.ச. இன் விம்பம் ஆகியவற்றை மேம்படுத்தும் பொருட்டு, வாடிக்கையாளர் ஒருங்கிணைப்பாளர்களுக்காக 8 பொதுசனத் தொடர்பு பற்றிய நிகழ்ச்சித் திட்டங்கள் 2019 இல் நடத்தப்பட்டன.



# நிறுவன உபாயப் பிரிவு (தொடர்ச்சி)

மிகவும் துடிப்புமிக்க நிறுவனம் ஒன்றாக இ.மி.ச. இனை ஆக்குவதற்குத் தேவையான சட்ட, கட்டமைப்பு மற்றும் நிருவாக மாற்றங்கள் பற்றிய இரண்டு உபாயக் கலந்தாய்வுக் கருத்தரங்கங்கள் 2019 ஆம் ஆண்டின் காலப்பகுதியில் நடத்தப்பட்டன. வழமையைப் போன்றே, 2019 ஆம் ஆண்டில் இலங்கை பொறியியலாளர்கள் நிறுவனத்தினால் நடத்தப்பட்ட TECHNO கண்காட்சியில் இ.மி.ச. பங்குபற்றியிருந்தது.

## தகவல் தொழில்நுட்பவியல் (IT) கிளை

வினைத்திறன் மற்றும் வாடிக்கையாளர் திருப்தியைக் கொண்டுவருவதற்காக இ.மி.ச. இன் வணிகச் செயன்முறைகளைப் பொருத்தமான தொழில்நுட்பத்துடன் சீரமைப்பதற்கு தகவல் தொழில்நுட்பவியல் கிளை பொறுப்பாகும்.

பல ஆண்டுகளாக, பல IT தீர்வுகள் விருத்தி செய்யப்பட்டிருப்பதுடன் அவை பயனர்களின் தேவைகளுக்கேற்ப ஒழுங்குமுறையாக நிகழ்நிலைப்படுத்தப்பட்டிருக்கிறது.

இலங்கை மின்சார சபையின் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வெளியிடப்படவுள்ள அதிக பயனர் நேய கையடக்கத் தொலைபேசிச் செயலியொன்றின் மூலம் பிந்தைய மற்றும் வலுவான தகவல்களுடன் வாடிக்கையாளர்களை அடைந்து கொள்வதற்கான பொறிமுறைகளாக, நுகர்வோர் முகாமைத்துவ நிலையங்கள், அவசர அழைப்பு “1987” மற்றும் அழைப்பு நிலையங்கள், நிறுவன வலைத்தளம், குறுந்தகவல் வழிமுறைச் சேவைகள் மற்றும் மேலும் பல சேவை வழங்கல் மற்றும் பராமரிப்புச் சேவைகளுக்கு IT கிளை வசதியளித்துள்ளது.

நிறுவனத்திற்கான டிஜிடல்மயப்படுத்தல் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு IT கிளையானது நான்கு உபாயங்களைப் பயன்படுத்துகிறது. அவையாவன, உள்ளக ரீதியான அபிவிருத்தி, நிறுவனத் தேவைகளுக்காக தனிப்பயனாக்கப்பட்ட உடனடியாகப் பெறக்கூடிய பொருட்கள், IT கிளைக்கு வெளியே இருந்தான அபிவிருத்திகள், புத்தாக்கங்களைப் பின்பற்றுதல் மற்றும் வெளிமூலமிடுதல் என்பனவாகும். “Breakdown Assist” தீர்வு என்பது முக்கிய செயற்றிட்டம் ஒன்றாக இருப்பதுடன் தற்போதிருக்கின்ற நிலைகுலைவு முகாமைத்துவ முறைமையை வெளியேற்றுவதற்காக கிளைக்கு வெளியேயிருந்து IT கிளையினால் 2019 ஆம் ஆண்டில் ஏற்றுப் பின்பற்றப்பட்ட ஒன்றாகும். இந்தத் தீர்வு இ.மி.ச. வாடிக்கையாளர்களுக்கான கையடக்கத் தொலைபேசிச் செயலி, மின்சாரச் சீர்குலைவைச் சரிசெய்யும் அணியினருக்கான ஒரு தத்தல் செயலி (tab application) மற்றும் மேற்பார்வையாளர்கள் மற்றும் முன் வரிசை முகவர்களுக்கான வலைத்தள அடிப்படையிலான ஒரு முறைமை ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது. “BreakdownAssist” தீர்வானது மின்சார விநியோகப் பிரிவுகளில் மின்சார வழங்கல் பற்றிய நுகர்வோரின் முறைப்பாடுகளைக் கையாளல், முறைப்பாடுகளை முகாமை செய்தல், மின்சாரச் சீர்குலைவுகளைக் கையாளுதல், மின்சாரச் சீர்குலைவைச் சீர்படுத்தும் அணியினரை முகாமை செய்தல் ஆகிய நோக்கங்களைக் கொண்டுள்ளது.

தகவல் தொழில்நுட்பவியல் கிளையின் SCADA மற்றும் தன்னியக்க அலகானது 2018 ஆம் ஆண்டின் நடுப் பகுதியில், இ.மி.ச. தேவைப்பாடுகளுக்குப் பொருந்தக்கூடிய விதத்தில் “CEB Assist solution” என்ற உள்ளக நிறுவனப் பயன்பாட்டு மென்பொருள் ஒன்றை விருத்தி செய்தல், நவீன கால டிஜிடல் தொழில்நுட்பங்கள் மற்றும் சாதனங்களைத் தொழிற்படுத்தல் ஆகியவற்றுக்கான ஒரு செயற்றிட்டத்தை மேற்கொண்டிருந்தது. CEB Assist தீர்வுகள், வாடிக்கையாளர்கள் மற்றும் பயன்பாட்டாளர்களின் இலகுவான பயணத்திற்காக CEBCare கையடக்கத் தொலைபேசிச் செயலி, CEBCare வலைத்தளம், குரல் தன்னியக்கி சேவை, IVR, குறுந்தகவல் மற்றும் மின்னஞ்சல் போன்ற ஒரு தொகுதி சுய சேவை வழிமுறைகளை வழங்கியுள்ளது.




இ.மி.ச. ஆனது CEBCare என்ற கையடக்கத் தொலைபேசிச் செயலியை 2019 யூன் மாதம் BMICH இல் நடைபெற்ற வைபவத்தில் வைத்து பொதுமக்களுக்காக அறிமுகஞ் செய்தது. 2019 ஆம் ஆண்டின் இறுதியில், CEBCare iOS மற்றும் அன்ராயிட் செயலி சுமார் 80,000 பதிவிறக்கங்களையும் CEBAssist செயலி சுமார் 3,200 செயல்நிலை உள்ளகப் பயனர்களையும் அடைந்திருந்தது. CEBAssist இன் அபிவிருத்தி என்பது ஒரு தொடர்ச்சியான பயணமாக இருப்பதுடன் இது இ.மி.ச. தேவைகளுக்கு ஏற்றவாறு செதுக்கப்பட்ட தீர்வுகளை வழங்குவதுடன் இ.மி.ச. இன் ICT மாற்றத்தினை முன்கொண்டு செல்லும் ஒரு வகிபாகத்தையும் ஆற்றுகிறது. CEBAssist – BreakdownAssist தொகுதி ஆனது e – சுபாபிமானி டிஜிடல் சமூகத் தாக்க விருதுகள் 2018 இல் பாராட்டைப் பெற்றிருந்தது. மேலதிகமாக, CEBAssist தீர்வானது சிறந்த டிஜிடல் - இயக்கப்பட்ட தயாரிப்புப் பொருள் / சேவை வகை மற்றும் கையடக்கத் தொலைபேசிப் பாவனை வகை ஆகிய இரு வகைகளுக்காகவும் SLT Zero One விருதுகள் 2019 இல் இரண்டு தங்க விருதுகளைச் சுவீகரித்திருந்தது.

IT கிளையானது நிறுவன வலைத்தளத்தைப் புதுப்பித்திருந்ததுடன், அதிக பயனர் நேயத் தகவல் ஒழுங்குகள், வாடிக்கையாளர் நுழைவு மற்றும் பல்வேறு கொடுப்பனவு வழிமுறைகளுடனான கொடுப்பனவுச் சேவைகள் ஆகியவற்றைக் கொண்ட ஒரு புதிய வலைத்தளத்தையும் உருவாகியுள்ளது. மேலும், பயன்பாட்டுக் கட்டணமிடல், கணக்கீடு, கொடுப்பனவுச் சேகரிப்பு, பொருள் முகாமைத்துவம், சேவை இணைப்புகள் மற்றும் மனித வள முகாமைத்துவம் ஆகியவற்றுடன் மட்டுப்படுத்தாமல், IT கிளையானது தற்போதிருக்கின்ற IT சேவைகளையும் ஒருங்கிணைப்பையும் தொடர்ந்தும் மேம்படுத்துகிறது.

வாடிக்கையாளர்களின் கொடுப்பனவுகளை ஏற்றுக் கொள்வதற்காக இ.மி.ச. இற்குச் சொந்தமான விற்பனை மையக் (POS) கருமபீடங்கள், வலைத்தளம் ஊடான கடன் அட்டைக் கொடுப்பனவுகள், மின் வாகன மின்னேற்றல் தீர்வு மற்றும் KIOSK இயந்திரங்கள் என்பன செயற்பாட்டில் உள்ளன. மின் தடங்கல்கள் பற்றி வாடிக்கையாளர்களுக்கு அறிவிப்பதற்காகவும் கட்டணப் பட்டியல் கொடுப்பனவுகள் மற்றும் மின்துண்டிப்பு பற்றிய அறிவிப்புகள் ஆகியவற்றை அனுப்புவதற்காகவும் ஒரு குறுந்தகவல் அறிவிப்பு முறைமை செயற்பாட்டில் இருக்கிறது. மின்சாரச் சீர்குலைவுகள் பற்றி உடனுக்குடன் வாடிக்கையாளர்களுக்கு அறிவிப்பதற்காக, ஒரு திறன் பேசிச் செயலியொன்று அவர்களுக்காக விருத்தி செய்யப்படுகிறது. இந்தச் செயலி தற்போது உச்ச நேரங்களில் அனுபவிக்கப்படுகின்ற அழைப்பு நிலைய நெருக்கடிகளைக் குறிப்பிடத்தக்களவு நிவர்த்தி செய்ய உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தொழில்துறை நியமங்களுக்கு ஏற்ப IT சேவைகளை வழங்குவதற்கு IT இன் அடிப்படை உட்கட்டமைப்பு தயாராக இருக்குமிடத்து அடுத்த தலைமுறைப் பாதுகாப்புத் தீர்வொன்றுடன்கூடிய இ.மி.ச. தனியார் முகில் அமைப்பை அமைப்பது IT கிளையின் ஒரு முக்கிய படியாக இருக்கும். அனர்த்த மீட்பு அமைப்பு மற்றும் தன்னியக்க வணிகத் தொடர்ச்சிச் செயன்முறை ஆகியவற்றுடனான இந்த தொழில்துறை நியமத் தீர்வானது இ.மி.ச. இலுள்ள சகல IT முறைமைகளையும் ஒன்றிணைப்பதுடன் எதிர்கால IT முறைமைகளுக்கு விரைவான உட்கட்டமைப்பை வழங்குவதற்கு வசதியளிக்கிறது. இந்த இலக்கிற்கான பெறுகை மற்றும் நடைமுறைப்படுத்தல் பணிகள் பற்றி கடந்த ஆண்டில் திட்டம் தீட்டப்பட்டிருந்தது.

இ.மி.ச. இன் WAN ஆனது குத்தகைக்குப் பெறப்பட்ட தரவுக் கம்பிகள் மற்றும் எங்களுடைய சொந்த இழைகள் மூலம் இணைக்கப்பட்ட கிட்டத்தட்ட 500 முடிச்சுகளைத் (முனைகள்) தற்போது கொண்டிருக்கிறது. தொலைத்தொடர்புச் சேவை வழங்குநர்களிடையே காணப்படுகின்ற விடாப்பிடியான போட்டி காரணமாக தரவுக் கம்பிகளைக் குத்தகைக்குப் பெற்றுக் கொள்வதில் குறிப்பிடத்தக்களவு செலவுக் குறைப்பை எட்ட முடிந்திருந்தது. IT கிளையானது கையடக்கத் தொலைபேசியைப் பயன்படுத்துபவர்களுக்கு வழங்குவதற்கான வசதிகளுடன் தொழில்துறை நியமங்களுக்கு ஏற்ற வகையில் உள்நாட்டு பிரதேச வலையமைப்புகளை மேம்படுத்த ஆரம்பித்திருக்கிறது. எப்பொழுதும் மாறி வருகின்ற பாதுகாப்புப் பின்னணிக்கு ஈடுகொடுக்கக்கூடிய வகையில் இ.மி.ச. IT வலையமைப்பை பலம் வாய்ந்ததாக ஆக்குவதற்கு மேம்பட்ட கட்டுப்பாட்டுச்

# நிறுவன உபாயப் பிரிவு (தொடர்ச்சி)

சாதனங்களைக் கொண்டு வருவதன் மூலம் இ.மி.ச. IT வலையமைப்பின் பாதுகாப்புக் கட்டுப்பாடுகள் வலுப்படுத்தப்படும்.

IT கிளையானது தனது ஊழியர்களுக்கு தொழில்துறையில் நிரூபிக்கப்பட்ட தொழில்நுட்பங்கள் மூலம் ஆதரவளிக்கப்பட்ட உன்னதமான பணிச் சூழலை வழங்குவதற்கு எதிர்பார்த்துள்ளது. இதன் மூலம் நிறுவனத்தின் செயற்பாட்டு வினைத்திறன் மேம்பாடடையும். அந்த நோக்குடன் இ.மி.ச. இன் IT கிளையானது நடப்பிலுள்ள மின்னஞ்சல் சேவைகளை மேம்படுத்தல், ஒன்றிணைந்த மற்றும் ஒருங்கிணைந்த தொடர்பாடல் உட்கட்டமைப்பொன்றை நடைமுறைப்படுத்தல், கூட்டு ஆவண முகாமைத்துவ வழிமுறை மற்றும் சேவை நாடுநர் சாதன முகாமை ஆகியவற்றுக்கான ஒரு செயற்றிட்டத்தை வடிவமைத்திருக்கிறது.

இ.மி.ச. இன் ஏழு EVCS இன் கடைக்கோடி செயற்பாடுளை நடைமுறைப்படுத்தி முகாமை செய்வதற்காகவும் இ.மி.ச. இன் பயணத்தை டிஜிடல்மயப்படுத்துவதை அடுத்த மட்டத்திற்கு கொண்டு செல்வதற்காகவும் திறன் அளவீடு மற்றும் திறன் மின்தொகுப்பு முன்னோடிச் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு R&D கிளையுடன் IT கிளை இணைந்து பணியாற்றுகிறது.

வழமையான பல செயலிகளைப் பயன்படுத்துவோருக்கான பயிற்சித் தேவைகளை IT கிளை அடையாளங் கண்டிருக்கிறது. இந்த நோக்கத்திற்காக பயிற்சிக் கிளையின் ஊடாக பல பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்படுகின்றன. மேலதிகமாக, ஆதரவளிக்கும் முறைமைகளின் தேவைக்கு ஏற்ப பொருத்தமான தொழில்நுட்பவியல்களில் IT பணியாளர்களுக்கு பயிற்சி அளிப்பதன் முக்கியத்துவமும் அடையாளங் காணப்பட்டுள்ளது. இ.மி.ச. இன் நிறுவன இலக்குகளை அடைந்து கொள்வதற்காக புதிய தொழில்நுட்பங்களைக் கொண்டு வருவதற்கு தன்னம்பிக்கையும் ஊக்கமும் மிக்க IT பணியாளர்கள் எங்களிடம் இருத்தல் வேண்டும்.

### ஆய்வு மற்றும் அபிவிருத்திக் கிளை

ஆய்வு மற்றும் அபிவிருத்திக் கிளையானது கேள்விப் பக்க முகாமைத்துவ அலகு, ஆய்வு மற்றும் அபிவிருத்தி அலகு, ஒளியூட்டலுக்கான பிராந்திய நிலையம் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.

### கேள்விப் பக்க முகாமைத்துவ அலகு

இலங்கை மின்சார முறைமையின் சுமை விபரத்தை நோக்கும்போது அது பிற்பகல் வேளையில் உயர்ந்த உச்சப் பாவனையைக் காட்டுகிறது. முறைமைச் சுமை விபரங்களை முகாமை செய்வது கேள்விப் பக்க முகாமைத்துவ (DSM) அலகின் ஒரு முதன்மை நோக்கமாகும். சுமையை இடமாற்றுதல் மற்றும் பள்ளம் நிரப்புதல் (பிற்பகல் வேளை உச்ச பாவனையை உச்சமற்ற பாவனை நேரத்திற்கு மாற்றுதல்) ஆகிய ToU வீட்டு மின்பாவனை விதிப்பனவுக்கான விருப்பத் தெரிவுகளுக்கு ஊக்குவிப்புச் செய்யப்பட்ட போதிலும், வருடாந்த சுமைக் காரணி தொடர்ச்சியாக ஒரு தெளிவான அதிகரித்த போக்கினையே காட்டுகிறது. விநியோகப் பிரிவுகள் மூலம் அடையாளங் காணப்பட்ட வீட்டு மின் நுகர்வோர் மத்தியில் LED விளக்குகளை விநியோகம் செய்வது, பிற்பகல் வேளை உச்சப் பாவனையைக் குறைப்பதற்காக எடுக்கப்பட்ட மற்றுமொரு DSM நடவடிக்கை ஆகும். கிழக்கு மாகாணத்தில் நடத்தப்பட்ட LRP நிகழ்ச்சித் திட்டங்களிலிருந்து திரட்டப்பட்ட தரவுகளைப் பகுப்பாய்வு செய்ததன் பின்னர் தெரிவு செய்யப்பட்ட மாகாணங்களில் சுமை ஆய்வு நிகழ்ச்சித் திட்டங்களை (LRP) நடத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. மேலும், இ.மி.ச. இன் 50 ஆவது ஆண்டு நிறைவை கொண்டாடுமுகமாக ஆரம்பிக்கப்பட்ட ஒரு நிகழ்ச்சித் திட்டமாக கோரிக்கைகள் மத்தியிலிருந்து தெரிவு செய்யப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு சக்திப் பரிசோதனை ஒத்திகைகளை DSM அலகு நடத்தியது. மேல் மாகாணம் வடக்கில் (WPN) உள்ள தொகையளவு வழங்கல் வாடிக்கையாளர்களுக்காக ஒரு விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் நடத்தப்பட்டதுடன் சக்திப் பரிசோதனைகளில் இருந்து சக்தி வினைத்திறனை மேம்படுத்துவதற்காக அடையாளங் காணப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் பொதுவான கண்டறிதல்கள் என்பன வாடிக்கையாளர் மத்தியில் சக்தி வினைத்திறன் கலாசாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் கலந்தாய்வு செய்யப்பட்டன. தொழில்துறையின் சக்தி வினைத்திறன் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டமும் சீத்தாவாக்கை ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயத்தில் நடத்தப்பட்டது.

R&D கிளையிலிருந்து கிடைத்த முழுமையான வசதிகளுடன், பல முனை கொண்ட திறன் இலத்திரனியல் சக்தி மானியை விருத்தி செய்கின்ற ஆய்வுச் செயற்றிட்டம் ஒன்றில் இ.மி.ச. இன் ஆய்வு அணி சுறுசுறுப்புடன் ஈடுபட்டிருந்தது. அடிப்படை வடிவமைப்பு பூரணப்படுத்தப்பட்டதுடன் மூல முன் மாதிரிகள் நிருமாணிக்கப்பட்டன. நூற்றுக்கணக்கான தனி முனை திறன் இலத்திரனியல் சக்தி மானிகள் தயாரிக்கப்பட்டதுடன் அவற்றுக்கான களச் சோதனைகள் நடைபெறுகின்றன. இ.மி.ச. வலையமைப்பினுள் மானிச் சேவையகத் தொடர்பாடலுக்குப் பொருத்தமான தொடர்பாடல் முறை ஒன்றைக் கண்டறியும் பொருட்டு இ.மி.ச. பொறியியலாளர்களைக் கொண்ட ஒரு அணியினால் "வானொலி அதிர்வெண் நெய்யரி தொடர்பாடல்" பற்றிய ஆய்வு முன்னெடுக்கப்பட்டது.

ADB நிதியுதவி அளித்த திறன் மானி முன்னோடி DSM செயற்றிட்டமானது 2019 யூலையில் அதிகாரம் அளிக்கப்பட்டதுடன் முன்னோடிச் செயற்றிட்டத்தின் கீழ் 1000 திறன் மானிகள் நிறுவப்படும். இந்த மானிகளில் இருந்து கிடைக்கப்பெறும் தரவுகளை DSM அலகு கண்காணிக்கும் என்பதுடன் அதனைப் பகுப்பாய்வுக்கும் உட்படுத்தும். ADB நிதியுதவியின் கீழ் கட்டுநாயக்கா புவியியல் பிரதேசத்தில் இந்தச் செயற்றிட்டம் 10,000 திறன் மானிகளுக்கு விரிவாக்கப்படும்.



முன்னோடிச் செயற்றிட்டத்தின் கீழ் திறன் மானியின் நிறுவல்

### ஆய்வு மற்றும் அபிவிருத்தி அலகு

இ.மி.ச. இல் நடத்தப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு ஊட்டமளிக்கின்ற எதிர்பார்ப்புடன், R&D அலகானது பல்வேறு அடையாளங் காணப்பட்ட ஆய்வுத் தலைப்புகளில் ஆய்வுகளை ஒருங்கிணைக்கிறது. சூரிய ஒளி மூலமான கொள்ளளவுக் கணிப்பீட்டு மாதிரி என்பது "LC வலையமைப்பு மீதான மேற்கூரை சூரிய சக்தியின் தாக்கம்" என்ற ஆய்வுத் தலைப்பின் அத்தகைய வெளியீடு ஒன்றாகும். இது ஆய்வின் ஊடாக விருத்தி செய்யப்பட்டதுடன் இது இ.மி.ச. இன் பிரதேச அலுவலகங்கள் மத்தியில் பகிர்ந்தளிக்கப்பட்டது. மாதிரி இருந்த போதிலும், தரப்பட்ட இடமொன்றில் ஊட்டி ஒன்றின் சூரிய ஒளி மூலமான கொள்ளளவு பற்றிய ஆரம்ப முடிவுகளை எடுப்பதற்கு பிரதேச பொறியியலாளர்களுக்கு வசதியளிக்கப்பட்டுள்ளது. மேலும், "விநியோக வலையமைப்பு மீதான மின்னல் தாக்கங்கள் பற்றிய மதிப்பீடும் அதிகமாக மின்னல் பாதிப்புக்கு உள்ளாகும் பகுதிகளுக்குச் சாத்தியமான தீர்வுகளைக் கண்டறிதலும்" மற்றும் "சூரிய ஒளி PV பற்றிய ஆய்வும் மின்கல கலப்பின முறைமைகளும்" ஆகிய ஆய்வுகள் இந்த ஆண்டில் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டன.

இ.மி.ச. ஊழியர்களால் பட்டப் பின்படிப்பு ஆய்வுப் பணி / ஆய்வறிக்கைகளை முன்வைப்பதற்கான மாதாந்தச் செயலமர்வுகள் ஆய்வு மற்றும் அபிவிருத்திக் கிளையில் நடத்தப்பட்டன. மின் விநியோகம், மின் பரிமாற்றம், மின் பிறப்பாக்கம் மற்றும் நிதி ஆகிய துறைகளில் இருந்து முப்பத்தி ஐந்து ஆய்வு முன்வைப்புகள் அந்தச் செயலமர்வுகளில் பிரஸ்தாபிக்கப்பட்டன. "ஒலிபுகா டீசல் மின்பிறப்பாக்கிக்கான மேற்கவிகை ஒன்றின் வடிவமைப்பு" என்பது மேற்படி செயலமர்வுகளின் ஒரு விளைவாக ஆரம்பிக்கப்பட்ட ஒரு முன்னோடிச் செயற்றிட்டமாக இருந்தது. மொரட்டுவைப் பல்கலைக்கழகத்தின் இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்புகள் துறையினால் துகள் நீச்சல் உத்தமமாக்கல் (particle swam optimization)/** முறையைப் பயன்படுத்தி

# நிறுவன உபாயப் பிரிவு (தொடர்ச்சி)

மாதிரியின் உத்தமமாக்கலின் துல்லியம் உறுதி செய்யப்பட்டது. ஒரு குறிப்பிட்ட மின்பிறப்பாக்கிக்கான உத்தமமாக்கப்பட்ட அளவுருக்களுடனான உறை தயாரிக்கப்பட்டதுடன் ஒலி அழுத்த அளவீடுகளும் உத்தமமாக்கப்பட்ட கணித மாதிரியின் வெளியீட்டுடன் பகுப்பாய்வு செய்யப்பட்டன. எதிர்காலத்தில் மின்பிறப்பாக்கித் தொகுதியைக் பெறுகை செய்யும்போது (கொள்வனவு செய்யும்போது) கவனத்திற் கொள்வதற்காக இதன் இறுதி அறிக்கை DGM (WS&AS) இற்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

R&D கிளையானது விநியோக உபமின் நிலையப் பராமரிப்பு பற்றிய ஆவணப்படக் காணொளி ஒன்றை உருவாக்கியுள்ளது. இந்த ஆவணப்படம் விநியோக உபமின் நிலையங்களின் பராமரிப்பில் சிறந்த நடைமுறை அறிவினைப் பரப்புவதற்காகப் பயன்படுத்தப்படும்.

ஆய்வு மற்றும் அபிவிருத்திக் கிளையின் தலைமைத்துவத்தின் கீழ், இ.மி.ச. பொறியியலாளர்களைக் கொண்ட ஒரு அணி "திட நிலை மின்மாற்றி இடவியல் அடிப்படையில் வர்த்தக மற்றும் வீட்டுப் பாவனை சூரிய மின்வலு முறைமை நிறுவல்களுக்காக ஒரு மின்தொகுப்பு இணைப்பு இன்வேட்டர் ஒன்றின் வடிவமைப்பு" இல் ஈடுபட்டிருந்தது.

வணிகத்தை ஒழுங்குபடுத்துவதற்காகவும் பள்ளம் நிரப்பும் DSM நடவடிக்கை ஒன்றாகவும் மின் வாகன மின்னேற்றல் நிலையங்களைத் (EVCSs) தொடங்குவதற்கு இ.மி.ச. தீர்மானித்திருந்தது. இதற்கிணங்க, இ.மி.ச. ஆனது அநுராதபுரம், கண்டி, அவிசாவளை, நுவரெலியா, பன்னிப்பிட்டிய மற்றும் தெஹிவளை பிரதேசங்களில் ஏழு EVCS களை நிறுவ அதிகாரம் வழங்கியிருந்ததுடன் அவை தற்போது செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. மேலும், 2019 ஆம் ஆண்டில் மேலும் பத்து EVCS களைப் பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.



கண்டியில் உள்ள EVCS




பன்னிப்பிட்டியவில் உள்ள EVCS

## ஒளியூட்டலுக்கான பிராந்திய நிலையம் (RCL)

RCL இன் நோக்கங்கள் பின்வருமாறு :

- ஒளியூட்டலின் மூலம் மின்சாரத்திற்கான கேள்வியைக் குறைப்பதற்காக சக்தி வினைத்திறன், நம்பகத்தன்மை மற்றும் தூய ஒளியூட்டல் தொழில்நுட்பங்கள் மற்றும் அவற்றின் பிரயோகங்கள் பற்றிய விழிப்புணர்வையும் சிக்கனத்தன்மையையும் அதிகரித்தல்.
- பிராந்தியத்தின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக சக்தி வினைத்திறனான ஒளியூட்டல் பொருட்களின் பிராந்தியத் தயாரிப்புகளுக்கு வினையூக்கம் அளித்தல்.
- பல பின்தங்கிய குடிமக்களுக்கு சலுகை அடிப்படையில் மலிவான விலையில் ஒளியூட்டல் தயாரிப்புகளை வழங்குதல்.
- தெற்கு ஆசியாவில் நிலைபேறான ஒளியூட்டலை உருவாக்குவதற்காக பிராந்தியத்தில் தேவையான ஊழியர்களைப் பயிற்றுவித்தலும் அவர்களுக்கு அறிவூட்டுதலும்.

### உற்பத்திப் பொருள் சோதனை

RCL ஆனது முழுமையாகத் தயார்படுத்தப்பட்ட, சான்றளிக்கப்பட்ட ஒளி அளவியல் ஆய்வுகூடம் ஒன்றைக் கொண்டிருக்கிறது. இது 1 m மற்றும் 2 m விட்டங்களைக் கொண்ட இரண்டு ஒருங்கிணைந்த கோளங்களையும் ஒரு கோணமானியையும் பிரதான உபகரணங்களாகக் கொண்டிருக்கிறது. இதுவே இலங்கையில் நிறுவப்பட்ட முதலாவது கோணமானியாக இருப்பதுடன் இது ஒளிப் பரம்பலில் உள்ள ஒளிச் செறிவினை பிடிக்கக்கூடிய வல்லமையையும் கொண்டிருக்கிறது.

RCL ஆனது மரபுசார்ந்த ஒளியூட்டல் பொருட்களினதும் திட நிலை ஒளியூட்டல் (SSL) பொருட்களினதும் ஒளி அளவியல் மற்றும் மின் அளவுருக்கள் ஆகியவற்றின் சோதனைகளை மேற்கொண்டிருந்தது. தற்போது, இறக்குமதி செய்யப்படும் சகல CFL விளக்குகள் மீதும் இலங்கை நியமங்கள் நிறுவனத்தினால் அடையாள முத்திரையிடும் நிகழ்ச்சித் திட்டமொன்று செயற்படுத்தப்படுகிறது. சகல CFL களும் SLS 1231 மற்றும் SLS 1225 ஆகிய நியமங்களின் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். RCL ஆனது மேலே குறிப்பிடப்பட்ட SLS நியமங்களுடன் இறக்குமதி செய்யப்பட்ட CFL மாதிரிகள் ஒத்திசைவாக உள்ளனவா என்பதைப் பரிசோதிக்கின்றது. மேலும் RCL ஆனது, IEC 62612 நியமத்தின்படி LED உற்பத்திப் பொருட்களின் சோதனையை நடத்துவதுடன், SLS 1530:2016 அத்துடன் பொது ஒளியூட்டல் சேவைகளுக்கான சுய நிலைப்படுத்தப்பட்ட LED விளக்குகளுக்கான இலங்கை நியமமான குறைந்தபட்ச சக்தி செயலாற்றுகை நியமம் (MEPS) ஆகியவற்றின்படி, LED மாதிரிகள் ஒத்திசைவாக உள்ளனவா என்பதையும் பரிசோதிக்கிறது.

### ஆலோசனை சேவைகள்

R&D கிளையானது சக்திச் சோதனைகள் உள்ளிட்ட DSM தொடர்புடைய பணிகள், ஒளியூட்டல் வடிவமைப்பு உள்ளிட்ட ஒளியூட்டலுடன் தொடர்புடைய பணிகள் பற்றிய ஆலோசனை சேவைகளை வழங்குகிறது.

## நிறுவன வளத் திட்டமிடல்

இ.மி.ச. இன் நிறுவன வளத் திட்டமிடல் (ERP) முறைமை ஆனது முழு நிறுவனத்திலும் தகவல்களை ஒருங்கிணைப்பதை நோக்காகக் கொண்ட ஒரு தன்னியக்க வணிகச் செயன்முறை ஆகும். இதன் மூலம் முன்னர் வெவ்வேறு முறைமைகளில் துண்டு துண்டாகக் காணப்பட்ட தகவல்கள் நிறுவனம் முழுவதும் தடையின்றிப் பாய்வதால் வாடிக்கையாளர் தொடர்பு முகாமைத்துவம், நிதியிடல், பெறுகை, மனித வள முகாமைத்துவம், சொத்து முகாமைத்துவம், பராமரிப்பு முகாமைத்துவம் போன்ற பல்வேறு வணிகச் செயன்முறைகளால் தகவல்கள் பகிரப்படலாம். மின் பிறப்பாக்கம், மின் பரிமாற்றம், மின் விநியோகம் மற்றும் ஒருமுகப்படுத்தப்பட்ட சேவை என்பவற்றிலிருந்தான தனித்துவமான வணிகச் செயன்முறைகள் ஒருங்கிணைக்கப்படும். இதனால் நிறுவனம் முழுவதும் சகல மட்டங்களிலும் தகவலானது பாயும்.

இ.மி.ச. இன் ERP செயற்றிட்டம் 2019 ஆம் ஆண்டில் சிறப்பாக முன்னேறியுள்ளது. இந்தச் செயற்றிட்டத்தின் நடைமுறைப்படுத்தலுக்காக ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து சலுகைக் கடன் நிதியுதவியாக 10 மில்லியன் அமெரிக்க டொலரை இ.மி.ச. பெற்றுக் கொண்டிருந்தது. ADB தேவைப்பாடுகளுக்குப் பொருந்தக் கூடியவாறு விலைமனு ஆவணங்களில் தேவையான மாற்றங்களைச் செய்ததன் பின்னர், ERP செயற்றிட்ட விலைமனு 2019 நவெம்பர் 07 ஆந் திகதி விளம்பரப்படுத்தப்பட்டது. கிடைக்கப்பெற்ற விலைமனுக்களை மதிப்பீடு செய்யும் பணி தற்போது நடைபெறுகிறது. செயற்றிட்டத்தின் கட்டம் 01 இனை 02 வருடங்களிலும் செயற்றிட்டத்தின் கட்டம் 02 இனை அடுத்த 01 வருடத்திலும் நிறைவு செய்ய எதிர்பார்க்கப்படுகிறது.




செயற்பாட்டு மீளாய்வு

# ஆளணிக் கிளை

# உள்ளகக் கணக்காய்வுக் கிளை

# சட்ட அலகு

# விசேட புலனாய்வு அலகு

# பிற நிகழ்வுகள்

# ஆளணிக் கிளை

இ.மி.ச. இன் ஆளணிக் கிளையானது நிறுவனத்தின் பல்வேறு முக்கிய தொழிற்பாடுகளுக்கு உதவுவதற்காக உத்தம மட்டத்தில் மனித வளங்களை ஆட்சேர்ப்புச் செய்து, பயிற்சியளித்து, தக்கவைத்துக் கொள்வதற்கு உறுதிபூண்டுள்ளது. இந்த இலக்கை அடைந்து கொள்வதற்காக, ஆளணிக் கிளையானது மனித வளத் திட்டமிடல், ஆட்சேர்ப்பு, இடப்படுத்தல், பதவியுயர்வுகள் மற்றும் இடமாற்றங்கள், பல்வேறு பணித்தொகுதியினருக்குமான கொள்கைகளை வகுத்தல், வெகுமதி முகாமைத்துவம் மற்றும் ஒழுக்காற்று விடயங்களைக் கையாளுதல் போன்ற பல்வேறு மனித வளத் தொழிற்பாடுகளை முன்னெடுத்து வருகிறது.

2019 ஆம் ஆண்டில், நிறுவனத்திற்கான மொத்த ஆட்சேர்ப்புகளின் எண்ணிக்கை 718 ஆகும். மேலும், 523 ஊழியர்கள் இந்தக் காலப்பகுதியினுள் சேவையிலிருந்து ஓய்வு பெற்றிருப்பதுடன் 82 ஊழியர்கள் இராஜினாமா, இறப்பு மற்றும் தொழில் முடிவுறுத்தல் போன்ற பல்வேறு காரணங்களால் நிறுவனத்தை விட்டு விலகியிருந்தனர்.

ஆண்டின் இறுதியில் நிறுவனத்தின் ஆளணிப் பலம் கீழே தரப்பட்டுள்ளது :

| ஊழியர் வகை | எண்ணிக்கை |
|---|---|
| நிரந்தர | 20,512 |
| அமய | 2,406 |
| ஒப்பந்த | 218 |
| 4 ஆண்டு கால பயிலுநர் பயிற்சியின் கீழான பயிற்சி பெறுநர்கள் | 2,978 |
| மொத்தம் | 26,114 |




உரு 01

மேற்படி ஊழியர்கள் 18 வயது முதல் 60 வயதிற்கு இடைப்பட்ட பல்வேறு வயதுப் பிரிவுகளினுள் இருக்கின்றனர். 2019 ஆம் ஆண்டின் இறுதியில் இ.மி.ச. ஊழியர்களின் வயதுப் பகுப்பாய்வு உரு 01 இல் தரப்பட்டுள்ளது.

பல்வகை வேலைப்படை காரணமாக, இ.மி.ச. ஆனது 3 ஆண்டுகளுக்கும் குறைவான சேவைக் காலம் தொடக்கம் 30 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட சேவைக் காலம் வரையான ஊழியர்களைக் கொண்டிருக்கிறது. அடுத்துவரும் விளக்கப்படமானது இ.மி.ச. ஊழியர்களின் சேவை அனுபவங்கள் எதிர் அவர்கள் நிறுவனத்தில் சேவையாற்றிய ஆண்டுகளின் எண்ணிக்கையைக் குறிக்கிறது. (உரு 02).

**இ.மி.ச. ஊழியர்களின் சேவைப் பகுப்பாய்வு**




உரு 02

இ.மி.ச. இன் ஒட்டுமொத்த வேலைப்படையையும் நிறைவேற்றுத் தரத்தினர், நடுத்தர மட்ட தொழில்நுட்ப சேவையினர், திறன்மிக்க தொழில்நுட்ப சேவையினர், கனிஷ்ட மற்றும் திறனற்ற தொழில்நுட்ப சேவையினர், எழுதுவினைஞர் மற்றும் அதனோடிணைந்த சேவை வகுதியினர் மற்றும் ஏனைய தொழில்நுட்பமற்ற பணித்தொகுதி சேவைத் தரத்தினர் என பல்வேறு தரங்களில் மேலும் வகைப்படுத்த முடியும். ஊழியர் சேவை வகைகளுக்கேற்ப, அவர்களின் பகுப்பாய்வு உரு 03 இல் தரப்பட்டுள்ளது




உரு 03

## சேமநலன் அலகு

இ.மி.ச. ஊழியர்களின் நல்வாழ்வுக்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் நோக்கில் சேமநலன் அலகு தாபிக்கப்பட்டது. இந்த நோக்கத்தை நிறைவேற்றும் பொருட்டு, இந்த அலகானது கீழே தரப்பட்டுள்ளது போன்ற பல்வேறு பணிகளை ஆற்றுகிறது :

- இ.மி.ச. சுற்றுலா பங்களாக்களின் பராமரிப்பும் நிருவாகமும்
- இ.மி.ச. தலைமை அலுவலகக் கட்டடச் சிற்றுண்டிச்சாலையின் பராமரிப்பும் நிருவாகமும்
- சமனல அரன, சமன் தேவாலய, வெசாக், பொசன் மற்றும் நத்தார் கொண்டாட்டங்கள் போன்ற நிகழ்வுகளை ஒழுங்கு செய்தல்.

நாடு பூராகவும் இ.மி.ச. இன் சேமநல அலகினால் பராமரிக்கப்படுகின்ற இ.மி.ச. இற்குச் சொந்தமான 32 சுற்றுலா பங்களாக்கள் காணப்படுகின்றன. இந்த இடங்களுக்கு வருகை தருகின்ற ஊழியர்களுக்கு மறக்க முடியாத அனுபவத்தை வழங்குவதற்காக விருந்தோம்பல் தொழில்துறை நியமங்களுக்கு இணக்கமான வகையில் வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக இந்த பங்களாக்களில் தொடர்ச்சியான மேம்படுத்தல்கள் சேமநல அலகினால் செய்யப்படுகின்றன.

ஊழியர்களுக்கு சேமநல வசதிகளை விரிவாக்குவதற்காக, இ.மி.ச. ஆனது கஷ்டப் பிரதேசங்களில் அமைந்திருக்கின்ற சகல மின்வலு நிலையங்களிலும் தனது சொந்த நிதியைக் கொண்டு பாலர் பாடசாலைகளைப் பராமரிக்கிறது.

# உள்ளகக் கணக்காய்வுக் கிளை

## உள்ளகக் கணக்காய்வுக் கிளையின் செயலாற்றுகை – 2019

ள்ளகக் கணக்காய்வுக் கிளையானது பிரதம உள்ளகக் கணக்காய்வாளரால் தலைமை தாங்கப்படுகிறது. இது தனது நிறுவன ஆளுகை பொறுப்புக்கூறலை நிறைவேற்றுவதில் சபை மற்றும் முகாமைக்கு உதவுவதற்காக 85 உதவி அலுவலர்களைக் கொண்டிருக்கின்ற அதே வேளை நிறுவனத்தினுள் பயனுறுதி மற்றும் வினைத்திறன் வாய்ந்த வணிக மற்றும் செயற்பாட்டுச் செயன்முறைகளை மேம்படுத்தி, ஊக்குவிக்கிறது.

செயன்முறைகள் நோக்கம் கொண்டவையாகத் தொழிற்படுகின்றனவா எனவும் நிறுவனத்தின் நோக்கங்கள் மற்றும் அடையப்பட வேண்டிய இலக்குகளைப் பூர்த்தி செய்ய உதவுமா என்பதையும் சுயாதீனமாக மதிப்பீடு செய்யும் பொருட்டு, ஒரு நிறுவனத்தின் தற்போதைய இடர் முகாமைத்துவம், கட்டுப்பாடுகள் மற்றும் ஆளுகைச் செயன்முறைகள் ஆகியவற்றின் போதுமான தன்மை மற்றும் பயனுறுதித் தன்மை ஆகியவற்றை மதிப்பீடு செய்வதே உள்ளகக் கணக்காய்வின் நோக்கம் ஆகும்.

சகல அலகுகள் மற்றும் கிளைகளில் கணக்காய்வுகள் மேற்கொள்ளப்பட்டதுடன் இவற்றின் எண்ணிக்கையை மதிப்பீடு செய்யப்பட்ட இடர் மட்டம் மற்றும் ஊழியர் கிடைப்பனவு ஆகியன தீர்மானிக்கின்றன. 2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில், பின்வரும் கணக்காய்வுகள் உள்ளகக் கணக்காய்வுக் கிளையினால் மேற்கொள்ளப்பட்டன.

| | |
|---|---|
| வழக்கமான கணக்காய்வுகள் | 14 |
| வருவாய்க் கணக்காய்வுகள் | 19 |
| முறைமைக் கணக்காய்வுகள் | 39 |
| விசேட புலனாய்வுகள் | 17 |
| கணக்காய்வுக் குழு அறிக்கைகள் | 22 |
| மொத்தம் | 111 |

2019 ஆம் ஆண்டின் காலப்பகுதியில், இ.மி.ச. இல் அறிமுகப்படுத்தப்பட்ட குறித்த முறைமைகள் செயற்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக முறைமைக் கணக்காய்வுகளுக்கு அதிக கவனம் செலுத்தப்பட்டதுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் அவை பயனுறுதிமிக்க வகையில் செயற்படுத்தப்பட்டன.

## கணக்காய்வுக் குழு

ஆளுகை நிறுவனத்தின் ஒரு உப குழுவான கணக்காய்வுக் குழுவானது நிறுவனத்தின் ஆளுகை மற்றும் இடர் முகாமைத்துவ முறைமைகள், கண்காணிப்பு உள்ளகக் கட்டுப்பாட்டுச் செயன்முறை மற்றும் உள்ளகக் கணக்காய்வு மற்றும் வெளிவாரிக் கணக்காய்வின் தொழிற்பாடுகள் பற்றிய கண்ணோட்டம் ஆகியவற்றை மீளாய்வு செய்வதற்கான ஒட்டுமொத்தப் பொறுப்பையும் கொண்டிருக்கிறது.
இது நிதி, கணக்காய்வு மற்றும் தொடர்புடைய பரப்புகளில் ஆழ்ந்த அறிவும் பரந்த அனுபவமும் கொண்ட நான்கு சுயாதீனப் பணிப்பாளர்களைக் கொண்டிருக்கிறது. பொது முகாமையாளர் பிரதம நிறைவேற்று அதிகாரியாகவும் உள்ளகக் கணக்காய்வின் தலைவர் குழுவின் தலைவராகவும் செயற்படுகின்ற அதே வேளை, நிதி முகாமையாளர், கணக்காய்வாளர் அதிபதித் திணைக்களத்தின் பிரதிநிதி மற்றும் மின்வலு, மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சின் பிரதிநிதி ஆகியோர் அழைப்பின் பேரில் கூட்டங்களில் கலந்து கொள்கின்றனர். .

கணக்காய்வுக் குழுவின் 2019 ஆம் ஆண்டிற்கான கூட்டமைவு பின்வருமாறு :

| | |
|---|---|
| திருமதி திலகா ஜயசுந்தர | - தலைவர் |
| திரு. எஸ்.கே. கன்னங்கர | - அங்கத்தவர் |
| திரு. கே.டி.என். ரஞ்சித் அசோக | - அங்கத்தவர் |
| திரு. ருவான் விக்கிரமாராய்ச்சி | - அங்கத்தவர் |

செயற்பாடு மற்றும் நிதிசார் மீளாய்வுப் பரப்புகளில் முன்னெடுக்கப்பட்ட கணக்காய்வுகள் பற்றி உள்ளகக் கணக்காய்வு மற்றும் வெளிவாரிக் கணக்காய்வு அலகுகளால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளை தமது விரிவான அனுபவம் மற்றும் நிபுணத்துவத்தைப் பயன்படுத்தி கணக்காய்வுக் குழு மீளாய்வு செய்து கலந்துரையாடுவதுடன் நிறுவனத்தினால் எதிர்நோக்கப்படுகின்ற மோசடி மற்றும் வழுக்கள், செயற்பாட்டு மற்றும் நிதிசார் இடர்கள் ஆகியவற்றின் தாக்கம் மற்றும் அது நிகழும் சாத்தியத்தைக் குறைப்பதற்காக, தற்போதிருக்கின்ற உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளை வலுப்படுத்த வேண்டியிருப்பின், மேலதிக கட்டுப்பாடுகள் மற்றும் இடர் தணிப்பு உபாயங்கள் ஆகியவற்றையும் பரிந்துரைக்கிறது.

# சட்ட அலகு

நிறுவனத்தின் சகல சட்ட வேலைகளும் வழக்காடல் விடயங்களும் சட்ட அலகினால் கையாளப்படுகின்றன. இந்த அலகு பிரதான சட்ட அதிகாரியினால் தலைமை தாங்கப்படுவதுடன் அவருக்கு உதவியாக ஐந்து சட்ட அதிகாரிகளும் ஏனைய பணித்தொகுதியினரும் காணப்படுகின்றனர்.

இரண்டு பிரதான சட்ட வகைகள் இந்த அலகினுள் உள்ளடக்கப்பட்டுள்ளன :

உள்ளடக்கப்பட்டுள்ள முதலாவது வகை :

- மானிக் குறைபாடுகள்/மானியில் மோசடியாக திருத்தம் செய்தல் ஆகியவற்றின் விளைவாக மேற்கொள்ளப்படும் மின்சாரப் பட்டியல் திருத்தங்கள் / மின் துண்டிப்புகளை அடுத்து ஏற்படுகின்ற நிலுவைத் தொகைகளை வசூலித்தல்
- உடன்படிக்கை / ஒப்பந்த மீறுகையால் எழுகின்ற பிரச்சினைகள்
- இ.மி.ச. ஆதனங்கள்/வாகனங்களுக்கு ஏற்படும் சேதங்களுக்கான மீட்பு நடவடிக்கைகள்
- இ.மி.ச. தங்குவிடுதிகள்/காணி விடயங்களின் உடமை மீட்பு

உள்ளடக்கப்படும் இரண்டாவது வகை:

- மின் துண்டிப்புகள் மற்றும் மின்சாரக் கட்டணப் பட்டியல்களுக்கு எதிரான நிறுவனமயப்படுத்தப்பட்ட நடவடிக்கைகள்
- மூன்றாம் தரப்பினரின் ஆதனங்களுக்கு மேலாக மின்சார மார்க்கங்களை கொண்டு செல்வதற்கு எதிரான தடை உத்தரவுகள்/இடைநிறுத்தல் கட்டளைகள்/கூறப்பட்ட ஆதனங்கள், காணிகள், மரங்கள்/பயிர்ச் செய்கை போன்றவற்றிற்கு ஏற்படும் சேதங்களுக்கான உரிமைக் கோரிக்கைகள் விலைமனுக்கள்/ஒப்பந்த விடயங்களை மீறுதல், நடைமுறையை மீறுதல், சேதங்களுக்கு உரிமைக் கோரிக்கை செய்தல்.
- அடிப்படை உரிமைப் பிரயோகங்கள், தொழிலை முடிவுறுத்தல், தொழில் தருநர் எதிர் ஊழியர் பிரச்சினைகள் போன்றவற்றுடன் தொடர்புடைய தொழில் நியாயசபை/கைத்தொழில் நீதிமன்றம்/ தொழில் திணைக்கள விடயங்கள்

2019 ஆம் ஆண்டில், பின்வரும் நீதிமன்றப் பணிகள் சட்ட அலகினால் கையாளப்பட்டன.

| நீதிமன்றத்தின் பெயர் | வழக்குகளின் எண்ணிக்கை |
|---|---|
| உச்ச நீதிமன்றம் | 31 |
| மேன்முறையீட்டு நீதிமன்றம் | 41 |
| சிவில் மேன்முறையீட்டு உயர் நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றம் | 17 |
| மாவட்ட நீதிமன்றம் | 161 |
| தொழில் நியாயசபை மற்றும் கைத்தொழில் நீதிமன்றம் | 32 |
| நீதிவான் நீதிமன்றம் | 10 |

மேலதிகமாக, சபைக்கும் ஊழியர்களுக்கும் இடையிலான பிணக்குகள், தொழிலை முடிவுறுத்தல் தொடர்பான ஊழியர் விடயங்கள், தொழிலை விட்டு தாமாகவே நீங்கியமை பற்றிய அறிவித்தல்கள் மற்றும் மனக்குறைகள் என்பன நடைமுறையிலுள்ள சட்டங்களின்படி பின்வரும் தீர்ப்பாயங்களில் கையாளப்படுகின்றன :

- தொழில் நியாயசபை
- தொழில் திணைக்களம்
- மனித உரிமை ஆணைக்குழு
- கைத்தொழில் நீதிமன்றம்

சட்ட அலகானது குற்றச்சாட்டுப் பத்திரங்களை நுணுகி ஆராய்வதற்கும் பொறுப்பாகச் செயற்படுகிறது அதாவது, நிரந்தர ஒப்பந்தங்களின் அடிப்படையிலான நியமனக் கடிதங்கள் போன்றவையும் அவற்றைப் பெறுபவர்களுக்கு அதிகாரபூர்வமாக வழங்குவதற்கு முன்னர் தொழிலாளர் விடயங்களுடன் தொடர்புடைய ஆவணங்கள் போன்றவை.

சகல நிதிசார் உடன்படிக்கைகள், வர்த்தக உடன்படிக்கைகள் மற்றும் மின்வலுக் கொள்வனவு உடன்படிக்கைகள் ஆகியவை உள்ளிட்ட வெளித் தரப்பினருடன் இ.மி.ச. செய்து கொள்ளும் உடன்படிக்கைகள் / ஒப்பந்தங்களின் சட்ட வலிதாந்தன்மையை உறுதிப்படுத்துவதற்கும் இந்த அலகு பொறுப்பானதாகும்.

# விசேட புலனாய்வு அலகு

விசேட புலனாய்வு அலகானது 1995 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டதுடன், இது சட்டவிரோதமாக மின்சாரத்தைப் பெறுதல் (கொழுவல்) மற்றும் மின்மானியில் மோசடியாக திருத்தம் செய்தல் ஆகியன பற்றிய புலனாய்வுகளைத் துரிதப்படுத்துவதற்கு புலனாய்வு முகாமையாளரால் தலைமை தாங்கப்படுகிறது. பதினெட்டு பறப்புப் படையணி அணிகள் இவ்வாறான புலனாய்வுகளை முன்னெடுப்பதற்காக நாடு பூராகவும் நிலைநிறுத்தப்பட்டுள்ளன.

2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் விசேட புலனாய்வு அலகினால் கையாளப்பட்ட வழக்குகளின் முன்னேற்றம் பற்றிய விபரங்கள் பின்வருமாறு :

| வழக்குகள் | வெற்றி பெற்ற வழக்குகள | நீதிமன்றத் தண்டப்பணம் (ரூபா மில்.) | இ.மி.ச. இழப்பு (ரூபா மில்.) | மொத்தம் (ரூபா மில்.) |
|---|---|---|---|---|
| மின்மானி வழக்குகள் | 1825 | 5.550 | 102.96 | 108.52 |
| கொழுவல் வழக்குகள் | 112 | 0.425 | 2.05 | 2.47 |
| **மொத்தம்** | 1937 | 5.975 | 105.01 | 110.99 |




மேற்படி நடவடிக்கைகளுக்குப் புறம்பாக, பல விசாரணைகள் SIU இனால் நடத்தப்பட்டிருந்ததுடன் குற்றம் செயத அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன.

# ஏனைய நிகழ்வுகள் 2019

## சனவரி




**விநியோகப் பிரிவு 2 இன் தலைமையகம் ஒரு புதிய கட்டடத்திற்கு மாற்றப்பட்டது**

விநியோகப் பிரிவு 2 இனது மேலதிகப் பொது முகாமையாளர் அலுவலகம் 2019 சனவரி 10 ஆந் திகதி கடவத்தையில் அமைந்துள்ள ஒரு புதிய கட்டடத்திற்கு மாற்றப்பட்டது. புனரமைப்பு வேலைகளுக்கு வசதியளிக்குமுகமாக, இ.மி.ச. இன் தலைமையகக் கட்டடத்தின் 1 ஆவது தளத்தை காலி செய்யம் பொருட்டு, விநியோகப் பிரிவு 2 இன் பிரதிப் பொது முகாமையாளர் (திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி), பிரதிப் பொது முகாமையாளர் (வர்த்தகம் மற்றும் நிறுவனம்) மற்றும் மேலதிக நிதி முகாமையாளர் ஆகியோரின் அலுவலகங்களும் மேற்படி அதே கட்டடத்திற்கு மாற்றப்பட்டன



**கராப்பிட்டிய வைத்தியசாலையின் புற்றுநோய் விடுதியில் உள்ள நோயாளர்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது**

இந்த நிகழ்வு விநியோகப் பிரிவு 2 இன் ஊழியர்களால் 2019 சனவரி 10 ஆந் திகதி ஒழுங்கு செய்யப்பட்டது.

## மார்ச்





**கிழக்கு மாகாணத்தில் நடத்தப்பட்ட தொகையளவு வழங்கல் நுகர்வோர் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம்**

இ.மி.ச. இனால் திட்டமிடப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் பற்றி அறிவூட்டம் செய்வதற்காகவும் இ.மி.ச. இனால் வழங்கப்படும் சேவைகளில் மேலும் மேம்பாட்டைக் காண்பதில் நுகர்வோரின் பின்னூட்டத்தைப் பெற்றுக் கொள்வதற்காகவும் கிழக்கு மாகாண தொகையளவு வழங்கல் நுகர்வோருக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன. இந்த நிகழ்வை பிரதிப் பொது முகாமையாளர் (வர்த்தகம் மற்றும் நிறுவனம்) மற்றும் பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு மாகாணம்) ஆகிய கிளைகள் கூட்டாக ஒழுங்கு செய்திருந்தன. இதன் முதலாவது நிகழ்ச்சித் திட்டம் 2019 மார்ச் 29 ஆந் திகதி திருகோணமலையில் நடைபெற்றது. இந்நிகழ்வு சிறப்பாக அமைந்திருந்ததுடன் இ.மி.ச. இனால் அதன் நுகர்வோருடன் சிறந்த உறவினைக் கட்டியெழுப்பக்கூடியதாகவும் அமைந்திருந்தது. பங்குபற்றியவர்கள் இ.மி.ச. இன் இந்த முயற்சியை வெகுவாகப் பாராட்டியதுடன் இத்தகைய நிகழ்ச்சித் திட்டங்களை எதிர்காலத்திலும் தொடர்வதற்கு இ.மி.ச. ஐக் கேட்டுக் கொண்டனர்.

# ஏனைய நிகழ்வுகள் 2019

## மே



கந்தகெட்டிய CSC ஆனது 2019 மே 16 ஆந் திகதி திறந்து வைக்கப்பட்டது



கொல்தோட்ட CSC ஆனது 2019 மே 23 ஆந் திகதி திறந்து வைக்கப்பட்டது.

**ஊவா மாகாணம் மற்றும் சப்ரகமுவ மாகாணம் ஆகியவற்றில் புதிய நுகர்வோர் சேவை நிலையங்கள் (CSC) தாபிக்கப்பட்டன.**

## யூலை



**WPN இல் தொகையளவு நுகர்வோருக்கான நுகர்வோர் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் நடத்தப்பட்டது.**

WPN இலுள்ள பிளாட்டினம் நுகர்வோருக்கான நுகர்வோர் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் நெய்வெல என்ற இடத்தில் அமைந்துள்ள சில்செஸ்டர் கிராண்ட் ஹோட்டலில் 2019 யூலை 24 ஆந் திகதி மாகாணத்தின் வர்த்தக அலகினால் ஒழுங்கு செய்யப்பட்டது. இந்த நிகழ்ச்சித் திட்டம் பிரதானமாக கேள்விப் பக்க முகாமைத்துவம், தரமான மின்வலு வழங்கலின் முக்கியத்துவம், தொகையளவு மின் வழங்கலைப் பெறும் வாடிக்கையாளர்களுக்கான IT வசதிகள் மற்றும் சுய மின் பிறப்பாக்கத் திட்டங்கள் போன்றவற்றில் அவதானத்தைச் செலுத்தி இருந்தது







**கதிர்காம உற்சவம் நடைபெறும் வீதியில் தெரு விளக்கு அமைக்கும் செயற்றிட்டம் பூரணப்படுத்தப்பட்டது**

தென் மாகாண நிருமாண அலகினால் கதிர்காம உற்சவம் நடைபெறும் வீதியில் தெரு விளக்குகளைப் பொருத்துகின்ற செயற்றிட்டம் நிறைவு செய்யப்பட்டது. 7 நாட்களினுள் இந்தச் செயற்றிட்டத்தின் கீழ், அண்ணளவாக 1,556 m LV UG மின் மார்க்கம் மற்றும் 150 m 3P -LV ABC மின் மார்க்கங்கள் என்பன நிருமாணிக்கப்பட்டதுடன் 122 தெரு விளக்குகளும் பொருத்தப்பட்டன

# ஏனைய நிகழ்வுகள் 2019

## ஆகஸ்ட்





**வட மாகாணத்தில் நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டி**

இ.மி.ச. இன் வட மாகாண ஊழியர் சேமநலல் மற்றும் விளையாட்டுகள் சங்கமானது ஆகஸ்ட் மாதத்தில் விளையாட்டுப் போட்டியை ஒழுங்கு செய்திருந்தது. இ.மி.ச. பொன் விழாவைச் சிறப்பிக்குமுகமாகவும் அது நடத்தப்பட்டிருந்தது.



**விநியோகப் பிரிவு 4 இன் தலைமையகத்தில் நடைபெற்ற பிரித் பாராயண நிகழ்வு**

விநியோகப் பிரிவு 4 இன் தலைமையகத் திறப்பு விழாவை முன்னிட்டு ஒரு பிரித் பாராயண நிகழ்வு 2019 ஆகஸ்ட் 09 ஆந் திகதி நடைபெற்றது.



**தெஹிவளையில் புதிய DD4 தலைமையகக் கட்டடத்தின் நிருமாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன.**

DD4 தலைமையகத்தின் நிருமாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டதுடன் அதன் செயற்பாடுகள் 2019 ஆகஸ்ட் 30 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டன. புதிய WPS1 அலுவலகமும் தெஹிவளை பிரதேச அலுவலகமும் ஒரே கூரையின் கீழ் அமைக்கப்பட்டுள்ளன.

**ஐந்து புதிய POS கருமபீடங்கள் தாபிக்கப்பட்டன.**

வாடிக்கையாளர்களை மகிழ்ச்சியடைய வைப்பதற்காக களுபோவில, தெஹிவளை DD4 கட்டடத் தொகுதி, கெஸ்பேவ, பாணந்துறை மற்றும் மத்துகமவில் ஐந்து புதிய POS கருமபீடங்கள் நிருமாணிக்கப்பட்டு, திறந்து வைக்கப்பட்டன.



**DD4 தலைமையகக் கட்டடத் தொகுதியில் புதிய வாகன மின்னேற்றல் நிலையம் தாபிக்கப்பட்டது**

DD4 தலைமையகக் கட்டடத் தொகுதியில் புதிதாக நிருமாணிக்கப்பட்ட வாகன மின்னேற்றல் நிலையத்தின் செயற்பாடுகள் 2019 ஆகஸ்ட் 30 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டன.



**ஊவா மாகாணத்தில் விளையாட்டு விழா நடத்தப்பட்டது**

ஊவா மாகாண விளையாட்டு விழா 2020 ஆகஸ்ட் 31 ஆந் திகதி நடத்தப்பட்டது.

# ஏனைய நிகழ்வுகள் 2019

## செப்ரெம்பர்

### “விமலசுரேந்திர தினம்” கொண்டாடப்பட்டது

பொறியியலாளர் டி.ஜே. விமலசுரேந்திர அவர்களின் 145 ஆவது பிறந்த தினத்தை நினைவு கூருமுகமாக 2019 செப்ரெம்பர் 17 ஆந் திகதி சேமநலன் அலகினால் “விமலசுரேந்திர தினம்” ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.





### கொலன்னாவையில் இருந்த மின் மானிகளை சோதனை செய்யும் ஆய்வகமானது மாலபேயில் உள்ள புதிய கட்டடத்திற்கு மாற்றப்பட்டது

விநியோகப் பிரிவு 03 இன் மானிச் சோதனை ஆய்வகமானது 2019 செப்ரெம்பர் 04 ஆந் திகதி மாலபேயில் உள்ள புதிய கட்டடத்திற்கு மாற்றப்பட்டது.



### அஹுங்கமவில் இருந்த ஏழைக் குடும்பம் ஒன்றிற்கு நன்கொடை அளிக்கப்பட்டது

தென் மாகாண EM அலகினால் அஹுங்கமவில் இருந்த ஒரு ஏழைக் குடும்பத்திற்கு மின்சாரத்தைப் பெற்றுக் கொள்ளவும் மருத்துவ உதவிகள் போன்றவற்றுக்காகவும் 2019 செப்ரெம்பர் 05 ஆந் திகதி நன்கொடை அளிக்கப்பட்டது.

### பூகொட பிரதேசத்தில் புதிய நுகர்வோர் சேவை நிலையம் தாபிக்கப்பட்டது

பூகொட பிரதேசத்தில் புதிய நுகர்வோர் சேவை நிலையம் 2019 செப்ரெம்பர் 16 ஆந் திகதி தாபிக்கப்பட்டது.

# ஏனைய நிகழ்வுகள் 2019

## அக்டோபர்





### பாணந்துறை நுகர்வோர் சேவை நிலையம் மற்றும் E – சிற்றி என்பன ஒரு புதிய கட்டடத்திற்கு மாற்றப்பட்டது

பாணந்துறை நுகர்வோர் சேவை நிலையம் மற்றும் E – சிற்றி ஆகியவற்றைத் தாபிப்பதற்காக ஒரு புதிய கட்டடம் நிருமாணிக்கப்பட்டது. இதன் செயற்பாடுகள் 2019 அக்டோபர் 04 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டன.



### விநியோகப் பிரிவு 04 இல் ஐந்து புதிய POS கருமபீடங்கள் தாபிக்கப்பட்டன

வாடிக்கையாளர்களை மகிழ்ச்சியடைய வைப்பதற்காக களுபோவில, தெஹிவளை DD4 கட்டடத் தொகுதி, கெஸ்பேவ, பாணந்துறை மற்றும் மத்துகமவில் ஐந்து புதிய POS கருமபீடங்கள் நிருமாணிக்கப்பட்டு, திறந்து வைக்கப்பட்டன.





### மத்துகமவில் புதிய பிரதேச அலுவலகம் திறக்கப்பட்டது.

சிறந்த வாடிக்கையாளர் சேவையை வழங்குவதற்காக 2020 அக்டோபர் 11 ஆந் திகதி மத்துகமவில் ஒரு புதிய பிரதேச அலுவலகம் திறக்கப்பட்டது



### பத்துரலிய CSC இற்காக ஒரு புதிய கட்டடம் நிருமாணிக்கப்பட்டது.

புதிதாகத் தாபிக்கப்பட்ட பத்துரலிய நுகர்வோர் சேவை நிலையம் மற்றும் மத்துகம பிரதேச பராமரிப்பு அலகு என்பவற்றிற்காக ஒரு புதிய கட்டடம் நிருமாணிக்கப்பட்டது. இதன் திறப்பு விழா 2020 அக்டோபர் 18 ஆந் திகதி நடைபெற்றது.

### தொகையளவு வழங்கலைப் பெற்றுக் கொள்ளும் நுகர்வோருக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் கிழக்கு மாகாணத்தில் நடத்தப்பட்டது

கிழக்கு மாகாணத்தில் தொகையளவு வழங்கலைப் பெற்றுக் கொள்கின்ற நுகர்வோருக்கு இ.மி.ச. இனால் திட்டமிடப்பட்டுள்ள அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பில் அறிவூட்டுவதற்காகவும் இ.மி.ச. இனால் வழங்கப்படும் சேவைகளில் மேலும் மேம்பாட்டைக் காண்பதில் நுகர்வோரின் பின்னூட்டத்தைப் பெற்றுக் கொள்வதற்காகவும் அவர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன.

2019 அக்டோபர் 21 ஆந் திகதி அம்பாறையில் நடைபெற்ற நிகழ்ச்சித் திட்டம்







2019 அக்டோபர் 21 ஆந் திகதி மட்டக்களப்பில் நடைபெற்ற நிகழ்ச்சித் திட்டம்





இந்த நிகழ்ச்சித் திட்டங்கள் சிறப்பாக அமைந்திருந்ததுடன் இ.மி.ச. இனால் அதன் நுகர்வோருடன் சிறந்த உறவினைக் கட்டியெழுப்பக்கூடியதாகவும் அமைந்திருந்தது. பங்குபற்றியவர்கள் இ.மி.ச. இன் இந்த முயற்சியை வெகுவாகப் பாராட்டியதுடன் இத்தகைய நிகழ்ச்சித் திட்டங்களை எதிர்காலத்திலும் தொடருமாறு இ.மி.ச. ஐக் கேட்டுக் கொண்டனர்.

# ஏனைய நிகழ்வுகள் 2019



**மாவனான கனிஷ்ட வித்தியாலயத்தில் ஒரு மருத்துவ முகாம் நடத்தப்பட்டது**

குறைந்த வருமானம் பெறும் கிராமப்பகுதி மக்களுக்காக இ.மி.ச. இன் பொன் விழா கொண்டாட்டங்களை முன்னிட்டு மாவனான கனிஷ்ட வித்தியாலயத்தில் 2019 அக்டோபர் 25 ஆந் திகதி ஒரு மருத்துவ முகாம் நடத்தப்பட்டது.



**இரத்மலானை செயற்பாட்டு மற்றும் பராமரிப்பு அலகு புதுப்பிக்கப்பட்டது**

2019 அக்டோபர் 29 ஆந் திகதி கெஸ்பேவ பிரதேச இரத்மலானை செயற்பாட்டு மற்றும் பராமரிப்பு நிலையம் புதுப்பிக்கப்பட்டதுடன் கெஸ்பேவ E – சிற்றியும் தாபிக்கப்பட்டது.



**இரத்த தான முகாம் ஒழுங்கு செய்யப்பட்டது**

மேல் மாகாணம் தெற்கு – 1 மற்றும் தென் மாகாண சேமநலச் சங்கங்களால் இரண்டு இரத்த தான முகாம்கள் ஒழுங்கு செய்யப்பட்டன. மேல் மாகாண தெற்கு – 1 இன் இரத்ததான முகாம் 2019 அக்டோபர் 29 ஆந் திகதி நடைபெற்றதுடன் தென் மாகாண முகாம் 2019 அக்டோபர் 31 ஆந் திகதி நடைபெற்றது.

## நவெம்பர்



**அயகம CSC ஆனது 2019 நவெம்பர் 01 ஆந் திகதி திறந்து வைக்கப்பட்டது**

**கந்தகெட்டிய, கொல்தோட்ட மற்றும் அயகம பிரதேசங்களில் புதிய நுகர்வோர் சேவை நிலையங்கள் தாபிக்கப்பட்டன**

ஊவா மாகாணத்தின் கந்தகெட்டிய பிரதேசத்திலும், சப்ரகமுவ மாகாணத்தில் அயகம மற்றும் கொல்தோட்ட பிரதேசங்களிலும் புதிய நுகர்வோர் சேவை நிலையங்கள் தாபிக்கப்பட்டன.



**கொழும்பு நகர அலுவலகத்தினால் மர நடுகை நிகழ்ச்சித் திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது**

இ.மி.ச. இன் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கொழும்பு நகர DGM அலுவலகத்தினால் மர நடுகை நிகழ்ச்சித் திட்டமொன்று 2019 நவெம்பர் 01 ஆந் திகதி ஏற்பாடு செய்யப்பட்டது.

# ஏனைய நிகழ்வுகள் 2019



**மாலம்பே மானிச் சோதனை ஆய்வகத்தில் பிரித் பாராயண நிகழ்வு இடம்பெற்றது**

இ.மி.ச. இன் பொன் விழாக் கொண்டாட்டங்கள் வரிசையில் புதிதாகத் திறந்து வைக்கப்பட்ட மாலம்பே DD3 அலுவலகத்தில் 2019 நவெம்பர் 01 ஆந் திகதி பிரித் பாராயண நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.



**இ.மி.ச. தலைமையகத்தில் நடத்தப்பட்ட பிரித் பாராயண நிகழ்வும் இரத்த தான நிகழ்வும்**

இ.மி.ச. இன் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு 2019 நவெம்பர் 01 ஆந் திகதி இ.மி.ச. தலைமையகக் கட்டடத்தில் பிரித் பாராயண நிகழ்வும் இரத்த தான முகாமும் இ.மி.ச. இன் சேமநல அலகினால் ஒழுங்கு செய்யப்பட்டன.



**இரத்தான நிகழ்ச்சித் திட்டம் ஒழுங்கு செய்யப்பட்டது**

இ.மி.ச. இன் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வட மாகாண அலுவலக ஊழியர் சேமநலன் மற்றும் விளையாட்டுகள் சங்கம் மற்றும் கொழும்பு நகர பிரதம பொறியியலாளர் (பராமரிப்பு) அலகு ஆகியவற்றால் இரத்த தான நிகழ்ச்சித் திட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டன.

கொழும்பு நகர இரத்த தான நிகழ்ச்சித் திட்டம் 2019 நவெம்பர் 01 ஆந் திகதியும் வட மாகாண இரத்த தான நிகழ்ச்சித் திட்டம் 2019 நவெம்பர் 05 ஆந் திகதியும் நடத்தப்பட்டன

**புத்தாக்கத்திறன் போட்டி விருது வழங்கும் விழா BMICH இல் நடைபெற்றது.**

2017, 2018, 2019 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற புத்தாக்கத்திறன் போட்டிகளுக்கான விருது வழங்கும் விழா இ.மி.ச. இன் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, 2019 நவெம்பர் 01 ஆந் திகதி நடைபெற்றது. இந்த நிகழ்வு வணிகம் மற்றும் செயற்பாட்டு உபாயக் கிளையினால் ஒழுங்கு செய்யப்பட்டது.

**நாரம்மல பிரதேச அலுவலகத்தில் POS கருமபீடங்கள் தாபிக்கப்பட்டன.**

இ.மி.ச. இன் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு 2019 நவெம்பர் 07 ஆந் திகதி நாரம்மல பிரதேச அலுவலகத்தில் POS கருமபீடம் தாபிக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்குச் சமாந்தரமாக குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு நுகர்வுப் பொருட்களும் நன்கொடையாக வழங்கி வைக்கப்பட்டன.



## டிசெம்பர்

**தொம்பேயில் புதிய நுகர்வோர் சேவை நிலையம் திறந்து வைக்கப்பட்டது**

2019 டிசெம்பர் 05 ஆந் திகதி தொம்பேயில் ஒரு புதிய நுகர்வோர் சேவை நிலையம் தாபிக்கப்பட்டது.



**மேல் மாகாணம் வடக்கு (WPN) இல் நுகர்வோருக்கான, நுகர்வோர் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் ஒழுங்கு செய்யப்பட்டது.**

2019 டிசெம்பர் 17 ஆந் திகதி மேல் மாகாணம் வடக்கில் உள்ள பொன் மற்றும் பிளாட்டினம் நுகர்வோருக்காக இந்த மாகாணத்தின் வர்த்தக அலகும் இ.மி.ச. இன் ஆய்வு மற்றும் அபிவிருத்திக் கிளையும் கூட்டாகச் சேர்ந்து நெய்வலவில் உள்ள சில்செஸ்டர் கிராண்ட் ஹோட்டலில் இந்த நிகழ்வை ஒழுங்கு செய்திருந்தன. இந்த நிகழ்ச்சித் திட்டம் பிரதானமாக இ.மி.ச. இன் 50 ஆண்டுகள் நிறைவை முன்னிட்டும் தொழில்துறையின் திறன் (SMART) தெரிவுகள், தற்போதைய மின்வலு நிலைமை மற்றும் சக்தி வினைத்திறன் ஆகியவற்றில் தனது கவனத்தைச் செலுத்தியிருந்தது.



**மின் பரிமாற்றப் பிரிவின் தொடர்பாடல் கிளையினால் ஒழுங்கு செய்யப்பட்ட பாடசாலை உபகரணங்கள் அன்பளிப்புச் செய்யும் நிகழ்ச்சித் திட்டம்**

2019 ஆம் ஆண்டிற்கான வருடாந்த சமூக நலத் திட்டமொன்றாக 2020 டிசெம்பர் 28 ஆந் திகதி புளத்சிங்கள பிரதேசத்தில் உள்ள கஸ்டப் பிரதேசமான நிக்கஹா என்ற இடத்தில் அமைந்துள்ள ஆரம்பப் பாடசாலை ஒன்றின் மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் அன்பளிப்புச் செய்யும் நிகழ்வு தொடர்பாடல் கிளையினால் ஒழுங்கு செய்யப்பட்டது.




செயற்பாட்டு மீளாய்வு

# நிதிப் பிரிவு மற்றும் நிதித் தகவல்கள்

# நிதிப் பிரிவு மற்றும் நிதித் தகவல்கள்

## நிதிப் பிரிவு

இ.மி.ச. இன் நிதிப் பிரிவானது தீவு முழுவதிலும் உள்ள ஒன்பது ஒன்பது மேலதிக நிதிக் கிளைகள் மூலம் பண முகாமைத்தும், நிதித் திட்டமிடல், திறைசேரி முகாமைத்துவம், நிதிசார் மற்றும் முகாமைத்துவ அறிக்கையிடல், நியதிச்சட்ட உறவுகள், பாதீடு, வரிவிதிப்பு மற்றும் வணிகச் செயற்பாடுகளின் வளர்ச்சிக்கு உதவுவதற்கான கூட்டிணைந்த மற்றும் செயற்திட்ட நிதியிடல் போன்ற நிதி முகாமைத்துவ தொழிற்பாடுகளை மேற்கொள்கின்றது. இ.மி.ச. இன் அனைத்து மட்டங்களிலும் கிரய வினைத்திறனுக்கு பங்களிப்புச் செய்யக்கூடிய மிகச்சிறந்த அளவுகோல்களின் அடிப்படையில் நிதித் தீர்மானங்கள் எடுக்கப்படுவதனை உறுதி செய்வதே இத்தொழிற்பாடுகளின் பிரதான பொறுப்பாகக் காணப்படுகின்றது.

## நிதிச் செயலாற்றல்

இ.மி.ச. ஆரம்பிக்கப்பட்டது முதல் மிகக்கூடிய நட்டத் தொகையான ரூபா 85.42 பில்லியன் தேறிய நட்டத்தை 2019 ஆம் ஆண்டில் இ.மி.ச. பதிவு செய்திருந்தமையால் அந்த ஆண்டு அதற்கு நெருக்கடிமிக்க ஆண்டாகக் காணப்பட்டது. எதிர்பார்க்கப்பட்ட பருவப்பெயர்ச்சி மழைவீழ்ச்சி போதியளவில் கிடைக்காமையால் பிரதான நீர்மின் ஆலைகளிலிருந்தான மொத்த மின்வலுப் பிறப்பாக்கம் 24 சதவீதத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தமை காரணமாக இச்செயற்பாட்டு நட்டங்கள் ஆண்டு முழுவதும் தொடர்ச்சியாக ஏற்பட்டிருந்தன. மோசமான நிதிச் செயலாற்றுகையானது நிறுத்திவைக்கப்பட்ட வருவாயை எதிர்மறை நிலைக்கு பின்னடைவு காணச்செய்திருந்தது. ரூபா 85.4 பில்லியன் தேறிய நட்டமானது 2018 ஆம் ஆண்டிற்கான ரூபா 31.9 பில்லியன் தேறிய நட்டத்துடன் ஒப்பிடுகையில் 167% பின்னடைவாகும்.




உரு 01: நிதிச் செயலாற்றல் 2018-2019

## எரிசக்தி விற்பனையின் மூலம் வருமானம்

இ.மி.ச. இற்கு 2019 ஆம் ஆண்டின் இறுதியின் போது 99% மின்மயமாக்கல் அளவை அடைய முடிந்திருந்ததுடன் மின்சார அலகு விற்பனையின் வளர்ச்சி விகிதம் முன்னைய ஆண்டிற்கு எதிராக 4% இற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. இதன் ரூபாய் மதிப்பு 6% அதிகரிப்பாக இருந்தது. அரசாங்க கொள்கைத் தீர்மானம் காரணமாக 2014 ஆம் ஆண்டிலிருந்து கட்டணங்கள் தேக்க நிலையில் இருந்தமையால் கேள்வி விரிவாக்கத்தால் ஏற்பட்ட வருமான அதிகரிப்பு மட்டுமே இதற்கான காரணமாக அமைந்திருந்தது




உரு 04: விற்பனை வருமானம் மற்றும் அலகுகள்




கிரயக் கட்டமைப்பு

நேரடி மின்பிறப்பாக்கக் கிரய அதிகரிப்பானது 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 32% ஆக இருந்ததுடன் இது 4% மின்பிறப்பாக்க அதிகரிப்புக்கு பங்களித்திருந்தது. மோசமான நீர்மட்ட நிலை காரணமாக எண்ணெய் எரிக்கப்பட்ட ஐபிபி அனல்மின் ஆலைகளிலிருந்தான மின்பிறப்பாக்கம் அதிகரிக்கப்பட்டதுடன் பொருட்களின் விலைகள் அதிகரித்ததன் விளைவாக நிதி செயலாற்றல் மோசமடைந்தது.

இந்த செலவு அதிகரிப்பு மின்பிறப்பாக்க செலவை பாதகமாக பாதித்ததுடன் அதன்காரணமாக 2019 ஆம் ஆண்டில் அலகொன்றுக்கான மின்பிறப்பாக்கக் கிரயம் ரூபா 15.74 / மஙா ஆகக் காணப்பட்டதுடன் 2018 இல் இது ரூபா 12.75 / மஙா ஆகும். 2019 ஆம் ஆண்டிற்கான இ.மி.ச. இன் இறுதி நுகர்வோருக்கான அலகொன்றின் விற்பனைக் கிரயம் ரூபா 23.29 / kWh 2019 ஆகக் காணப்பட்டதுடன் 2018 ஆம் ஆண்டில் அது ரூபா 19.12 / kWh ஆகும். அதன்படி விற்பனை விலையில் உள்ளடங்கியிருந்த விற்பனைக் கிரயம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 22% அதிகரித்துள்ளது.




உரு 04: அலகுக்கான கிரயம்

## கடன்பெறுதல் மற்றும் நிதி செலவு

மின்சார உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான இ.மி.ச. செயற்திட்டங்களுக்கு நிதியளிப்பதற்காக சுய பேச்சுவார்த்தை மூலமான கடன்பெறுகைகளுடன் கூடிய தொழிற்படு மூலதன தேவைகளுக்கு நிதியளிப்பதற்கான கடன் பெறுவனவுகளின் அதிகரிப்பு காரணமாக 2019 ஆம் ஆண்டில் நிதி செலவு கணிசமாக அளவில் காணப்பட்டது. மேலும், பணப் பற்றாக்குறை நிலை, பிரதான வழங்குனர்களான இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (சிபிசி) மற்றும் சுயாதீன மின்வலு ஆலைகள் (ஐபிபி) ஆகியவற்றிற்கான கொடுப்பனவுகளை தாமதப்படுத்த வழிவகுத்தது, இது இ.மி.ச. இற்கு குறிப்பிடத்தக்க தாமத வட்டிச் செலவுக்கு வழிவகுத்துள்ளது.

## நிதி நிலைமை

எரிசக்தி துறையில் முன்னோடியாக இருப்பதால், இ.மி.ச. ரூபா 914 பில்லியன் மதிப்புள்ள சொத்துக்களை வைத்திருக்கின்றது. அதில் சுமார் 85% ஆனவை நிலையான சொத்துக்களாகும். மேலும் இ.மி.ச. ஐந்தொகைத் திகதியான 2019 ஆம் ஆண்டின் முடிவில் ரூபா 48 பில்லியன் சரக்கிருப்பினை பேணியிருந்ததுடன் அரசாங்கத்திடமிருந்தான மூலதன உள்ளீர்த்தல் உரிமைத்துவத்தில் குறிப்பிடத்தக்களவில் காணப்பட்டது.

நிதி ரீதியாக சிக்கலான ஆண்டாக இவ்வாண்டு இருப்பதனால், இ.மி.ச. இன் திரவத்தன்மை ரூபா 9 பில்லியன் வரையான மேலதிகப்பற்று நிலைக்கு உயர்ந்திருந்ததுடன் வட்டி தாங்கும் கடன்கள் மற்றும் கடன்பெறுகைகள் கணிசமாக அதிகரித்துமிருந்தது.

# நிதிப் பிரிவு மற்றும் நிதித் தகவல்கள் (தொடர்ச்சி)

## சொத்துக்கள்




உரு 05: நடைமுறையல்லாத சொத்துக்களின் கூறுகள்




உரு 06: நடைமுறைச் சொத்துக்களின் கூறுகள்

## பொறுப்புக்கள்




உரு 05: மொத்த பொறுப்புக்கள் மற்றும் உரிமைத்துவத்தின் கூறுகள்

# நிதிப் பிரிவு மற்றும் நிதித் தகவல்கள் (தொடர்ச்சி)

## நிதிசார் விகிதங்கள்

| விகிதம் | 2019 | 2018 |
|---|---|---|
| சொத்துக்கள் மீதான திரும்பல் | -9% | -4% |
| உரிமைத்துவம் மீதான திரும்பல் | -31% | -10% |
| உரிமைத்துவத்துவத்திற்கு கடன் | 123% | 88% |
| சொத்துகளிற்கு கடன் | 37% | 34% |
| நடப்பு விகிதம் | 50% | 72% |
| கடன் சேவை பாதுகாப்பு விகிதம் | -1.13 | 0.29 |

## நிரந்த இறுதிப்பாவனையாளர் கட்டணத்தின் மீதான அரசாங்கக் கொள்கையின் தாக்கம்

பொது நோக்க மற்றும் அதிகமாக நுகரும் உள்நாட்டு நுகர்வோரைத் தவிர்த்து ஏனைய பெரும்பாலான கட்டண வகைகளுக்கு, அரசாங்கக் கொள்கைக்கு ஏற்ப விற்பனைக் கிரயத்திலும் குறைவான விலையுடைய மின்கட்டணத்தில் இ.மி.ச. மின்சாரத்தை வழங்குகின்றது.

அதன்படி, அரசாங்கக் கொள்கைக்கு அமைய, குறைந்த மின் கட்டணத்தை நிர்ணயிப்பதன் காரணமாக இ.மி.ச. இன் நிதிக்கூற்றுக்களில் பின்வருமாறு தேறிய நட்ட நிலை காணப்படுகின்றது:

| | 2019 ரூபா மில்லியன் | 2018 ரூபா மில்லியன் |
|---|---|---|
| அரசாங்க கொள்கை நட்டம் | (104,271) | (60,431) |
| விதிக்கப்பட்ட மிக அறிவீடு | 6,867 | 20,601 |
| தேறிய நட்டம் | (97,404) | (39,830) |
| ஏனைய வருமானம் | 11,994 | 9,375 |
| | (85,411) | (30,458) |
| நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் (நட்டம்) | (85,411) | (30,458) |

## திறைசேரி முகாமைத்துவம்

கொடுப்பனவுகள், பெறுவனவுகள் மற்றும் நிதிசார் இடர்களை வினைத்திறனாக முகாமைத்துவம் செய்து, வணிகத்திற்கு அதன் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு போதுமான திரவத்தன்மை காணப்படுவதனை உறுதி செய்வதில் எந்தவொரு நிறுவனத்திலும் திறைசேரித் தொழிற்பாடு எப்போதுமே முக்கியமானதாக உள்ளது.

2016 ஆம் ஆண்டில் இலங்கை மின்சார சபை (இ.மி.ச.) இன் பணிப்பாளர் சபை அதன் நிதிகளை திறம்பட நிர்வகிப்பதற்காக ஒரு தனி திறைசேரி முகாமைத்துவ கிளையை (டிஎம்பி) நிறுவ முடிவு செய்தது. 2017 இல் இ.மி.ச. ஃபிட்ச் தரப்படுத்தல் லங்கா (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்திடமிருந்து யுயுயு தரப்படுத்தலைப் பெற்றதுடன், அதிலிருந்து ஒரு நிறுவனம் அடையக்கூடிய சிறந்த தர மதிப்பீட்டு நிலையை இ.மி.ச. பராமரிக்கின்றது.

கடந்த 2 ஆண்டுகளில் இ.மி.ச. அதற்கு ஒட்டுமொத்தமாக சாதகமாகக் காணப்படுகின்ற கடன் கருவிகளை (விசேடமாக வங்கிகளிடமிருந்து தவணைக் கடன்கள்) கோரக்கூடிய பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருகின்றது.

2019 ஆம் ஆண்டில், மக்கள் வங்கியின் முன்மொழிவை பரிசீலித்த பின்னர் அந்த வங்கியைத் தேர்ந்தெடுத்து ரூபா 20 பில்லியன் தொகுதிக்கடன் பத்திரத்தை வெளியிட்டது. இது இ.மி.ச. இற்கு மாத்திரமன்றி, ஒட்டுமொத்தமாக அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளிற்கு (SOE) ஒரு மைல்கல்லாக இருந்தது.

சேமலாப நிதியத்தின் முக்கிய நடவடிக்கைகளை நிர்வகிப்பதற்காக தனிப்பட்ட முகாமைத்துவ தகவல் முறைமை (எம்ஐஎஸ்) இனை செயற்படுத்தும் பணியில் இ.மி.ச. இன் திறைசேரி முகாமைத்து கிளை ஈடுபட்டுவருகின்றது.

## சேகரிப்பு முகாமைத்துவம்

மின்சார கட்டணத்தை செலுத்துவது தொடர்பில் நுகர்வோருக்கு வசதியளிக்கும் விதத்தில் பின்வரும் முயற்சிகள் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டன

- 2019 மார்ச் முதல் பட்டியல் கருமபீடங்களில் விசா அட்டைகளை ஏற்றுக்கொள்ளல்.
- ஏற்கனவே உள்ள சேகரிப்பு முகவர்களின் வாயிலாக மின்சார பட்டியல் கொடுப்பனவுகள் ஒன்லைனில் நாளதுவரையாக்குதலை அமுல்படுத்தியமை: தேசிய அபிவிருத்தி வங்கி பிஎல்சி, சம்பத் வங்கி பிஎல்சி, எச்டிஎ்ஃப்சி வங்கி, கொமர்ஷல் வங்கி ஆஃப் சிலோன் பிஎல்சி.
- கம்பனி நுகர்வோருக்கு புதிய முதன்மை விலைப்பட்டியல் வசதி அமுல்படுத்தப்பட்டமை.
- டயலொக் ஜினீ எப், என்டிபி ஃப்ரிமி எப் வாயிலாக மின்சார பட்டியல் கொடுப்பனவு விரிவுபடுத்தப்பட்டமை.
- சம்பத் வங்கி மற்றும் கொமர்ஷல் வங்கி வழியாக நிலையக் கட்டளை மின்சார கட்டணம் செலுத்துதல் அமுல்படுத்தப்பட்டஅை.

## இ.மி.ச. சேமலாப நிதியம்

1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் கீழ் ஒரு தனியார் சேமலாப நிதியமாக இ.மி.ச. இன் சேமலாபம் நிதியம் செயல்படுகின்றது. இது ஏழு உறுப்பினர்களைக் கொண்ட நிர்வாகக் குழுவால் நிர்வகிக்கப்படுகின்றது.

குழுவின் தலைவர் இ.மி.ச. இன் பதவிவழித் தலைவராகவும், பிரதித் தலைவர் இ.மி.ச. இன் பதவிவழி பொது முகாமையாளராகவும் உள்ளார். நிதி முகாமையாளர் மற்றும் பிரதிப் பொது முகாமையாளர் (ஆளணி) ஆகியோர் ஏனைய பதவிவழி உறுப்பினர்கள் ஆவதுடன் ஏனைய மூன்று உறுப்பினர்கள் இ.மி.ச. இன் பணிப்பாளர் சபையினால் பரிந்துரைக்கப்படுகின்றனர். நிதியத்தின் செயலாளர் மற்றும் கணக்காளர் ஆகியோர் பணிப்பாளர் சபையால் நியமிக்கப்படுவதுடன் அவர்கள் அன்றாட நிர்வாகத்திற்கு பொறுப்பாளராகவும் நிதியத்தின் பொருளாளராகவும் இருப்பர்.

2019 ஆம் ஆண்டில் இந்த நிதியத்திற்கான மொத்த பங்களிப்பு ரூபா 4,889 மில்லியன் ஆனதுடன், அதில் ரூபா 1,956 மில்லியன் சபையின் ஊழியர்களால் பங்களிப்பு செய்யப்பட்டிருந்தது.

2019 ஆம் ஆண்டின் இறுதியில் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 25,262 ஆகக் காணப்பட்டதுடன் 692 பேர் புதிய உறுப்பினர்களாக இணைந்துகொண்டனர். ஆண்டின் போது 714 உறுப்பினர்கள் ஓய்வுபெறல், இராஜினாமா, பணிநீக்கம் மற்றும் இறப்பு காரணமாக நிதியிலிருந்து விலகிக்கொண்டனர்.

2019 திசெம்பர் 31 நிலவரப்படி மொத்தமாக திரட்டப்பட்ட நிதி ரூபா 61,103 மில்லியன் ஆனதுடன் இது முன்னைய ஆண்டைக் காட்டிலும் 9.19% அதிகரித்துள்ளது.

# நிதிப் பிரிவு மற்றும் நிதித் தகவல்கள் (தொடர்ச்சி)

ஆண்டின் முக்கிய வருமானம் நிலையான வைப்பு மற்றும் உறுப்பினர்களுக்கு வழங்கிய கடன்களின் வட்டி வருமானமாகும். நிதியம் அதன் முதலீடுகள் மற்றும் 10% பங்கிலாபக் கிடைப்பனவுகளிலிருந்து 2019 ஆம் ஆண்டில் ரூபா 6,822 மில்லியன் வருமானத்தை ஈட்டியிருந்தது. 2019 ஆம் ஆண்டில் நிதியத்தின் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட மொத்த கடன் தொகை ரூபா 2,896 மில்லியனாவதுடன் பணிநீக்கம் செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு மொத்தமாக திருப்பிச் செலுத்தப்பட்ட தொகை ரூபா 4,471 மில்லியன் ஆகும்.

2018/2019 மதிப்பீட்டு ஆண்டிற்கான நிதியத்தின் இலாபத்தின் மீது ரூபா 500 மில்லியன் வருமான வரி செலுத்தப்பட்டுள்ளது.

நிதியத்திற்கும் உறுப்பினர்களிற்கும் இடையிலான தகவல் தொடர்பாடலை மேம்படுத்தும் நோக்குடன் இந்த ஆண்டில், சேமலாப நிதியத்தின் முறைமைக்குள் பிரவேசிப்பதற்கு அவர்களிற்கு வாய்ப்பளிக்கப்பட்டது. ஊழியர்கள் இப்போது அவர்களது மாதாந்த பங்களிப்புகள், அவர்களது கடன்களிற்கு கிடைக்கும் மொத்த மீதி மற்றும் காணப்படும் கடன் மீதி போன்ற மட்டுப்படுத்திய தகவல்களை நேரடியாக நிதியத்தின் இந்த தரவுத்தளத்திற்கு பிரவேசிப்பதன் மூலம் பார்வையிடலாம். மேலும், ஐ.வி.ஆர் வசதியுடன் கூடிய (இன்டராக்டிவ் வாய்ஸ் ரெஸ்பான்ஸ்) ஒரு பிஏபிஎக்ஸ் முறைமை தாபிக்கப்பட்டதுடன், இது ஒரே நேரத்தில் 5 உறுப்பினர்களின் அழைப்புகளைக் கையாளும் திறன் கொண்டது. மேலும், தற்போதுள்ள பதிவு அறையை டிஜிட்டல் வடிவமாக மாற்றுவதற்கான ஒரு திட்டம் செயல்படுத்தப்படுவதுடன் கிடைக்கக்கூடிய அலுவலக இடத்தை மேம்படுத்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.




உரு 08: ஆண்டின்போது உறுப்பினர்களின் மாற்றம்

**இ.மி.ச. ஓய்வூதிய நிதியம்**

1969 இன் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை சட்டத்தின் பிரிவு 12 (ஜே) இன் விதிகளின் கீழ் 1994 சனவரி 01 ஆந் திகதி ஓய்வூதிய நிதியம் தாபிக்கப்பட்டதுடன் எட்டு உறுப்பினர்களை உள்ளடக்கிய குழுவால் இந்நிதியம் நிர்வகிக்கப்படுகின்றது. இவர்களில் இ.மி.ச. இன் தலைவரும் பொது முகாமையாளரும் முறையே நிதியத்தின் தலைவர் மற்றும் துணைத் தலைவராக உள்ளனர். நிதி முகாமையாளர் மற்றும் பிரதிப் பொது முகாமையாளர் (ஆளணி) ஆகியோர் ஏனைய பதவிவழி உறுப்பினர்கள் ஆவதுடன் ஏனைய நான்கு உறுப்பினர்கள் இ.மி.ச. இன் பணிப்பாளர் சபையினால் இ.மி.ச. இன் நிரந்தர ஊழியர்களிலிருந்து பரிந்துரைக்கப்படுகின்றனர். நிதியத்தின் செயலாளர் மற்றும் கணக்காளர் ஆகியோர் பணிப்பாளர் சபையால் நியமிக்கப்படுவதுடன் அவர்கள் அன்றாட நிர்வாகத்திற்கு பொறுப்பாளராகவும் நிதியத்தின் பொருளாளராகவும் இருப்பர்.

2019 ஆம் ஆண்டின் இறுதியில் செயலில் உள்ள ஓய்வூதியதாரர்களின் எண்ணிக்கை 7533 ஆனதுடன் கடந்த ஐந்து ஆண்டுகளில் ஓய்வூதியதாரர்களின் அதிகரிப்பு கீழே சித்தரிக்கப்பட்டுள்ளது.

| ஆண்டு | ஓய்வூதியதாரர் எண்ணிக்கை | ஓய்வூதியதாரர் அதிகரிப்பு | |
|---|---|---|---|
| | | எண்ணிக்கை | % |
| 2015 | 5721 | - | - |
| 2016 | 6194 | 473 | 8.3% |
| 2017 | 6622 | 428 | 6.9% |
| 2018 | 7061 | 439 | 6.6% |
| 2019 | 7533 | 472 | 6.7% |

ஓய்வூதிய நிதியத்தின் பிரதான வருமான மூலங்கள், செயற்பாட்டிலுள்ள ஊழியர்கள் சார்பாக இ.மி.ச. இன் பங்களிப்பும் முதலீடுகளின் மீதான திரும்பலுமாகும். கடந்த ஐந்து ஆண்டுகளில், ஓய்வூதிய கொடுப்பனவு 50% அதிகரித்தமை மற்றும் புதிய ஓய்வூதியதாரர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு என்பன காரணமாக ஓய்வூதிய கொடுப்பனவுகளுக்கான நிதிகளில் குறுகிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

| ஆண்டு | இ.மி.ச. பங்களிப்பு | வட்டி வருமானம் | வருடாந்த ஓய்வூதிய கொடுப்பனவு | வளர்ச்சி |
|---|---|---|---|---|
| (%) | 921 | 20 | 941 | |
| 2016 | 974 | 158 | 1132 | 20.30% |
| 2017 | 1029 | 364 | 1393 | 23.06% |
| 2018 | 1420 | 480 | 1900 | 36.40% |
| 2019 | 1405 | 499 | 1904 | 0.21% |

| ஆண்டு | தேறிய சொத்து (ரூபா மில்.) | பெறுமதி அதிகரிப்பு (ரூபா மில்.) | அதிகரிப்பு % |
|---|---|---|---|
| 2015 | 16,962 | | |
| 2016 | 18,211 | 1,249 | 7% |
| 2017 | 19,863 | 1,652 | 9% |
| 2018 | 21,384 | 1,521 | 7.6% |
| 2019 | 22,695 | 1,311 | 6% |

# நிதிப் பிரிவு மற்றும் நிதித் தகவல்கள் (தொடர்ச்சி)

**பத்து ஆண்டுகால பொழிப்பு**

இலங்கை மின்சார சபையின் கடந்த பத்து ஆண்டுகளிற்கான செயற்பாட்டு விளைவுகள் மற்றும் சொத்துக்களின் நிலைமை கீழே தரப்பட்டுள்ளன.

| திசெம்பர் 31 இல் உள்ளவாறு | 2019 ரூபா மில்லியன் | 2018 (திருத்திய) ரூபா மில்லியன் | 2017 (திருத்திய) ரூபா மில்லியன் | 2016 (திருத்திய) ரூபா மில்லியன் | 2015 (திருத்திய) ரூபா மில்லியன் | 2014 (திருத்திய) ரூபா மில்லியன் | 2013 (திருத்திய) ரூபா மில்லியன் | 2012 (திருத்திய) ரூபா மில்லியன் | 2011 (திருத்திய) ரூபா மில்லியன் | 2010 (திருத்திய) ரூபா மில்லியன் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **செயற்பாட்டு விளைவு** | | | | | | | | | | |
| வருமானம் | 242,950 | 229,571 | 218,450 | 206,811 | 188,684 | 202,645 | 194,147 | 163,512 | 132,460 | 121,226 |
| விற்பனைக் கிரயம் | (310,511) | (251,964) | (260,273) | (222,097) | (168,781) | (213,646) | (165,509) | (222,419) | (151,448) | (116,168) |
| மொத்த இலாபம் / (நட்டம்) | (67,561) | (22,393) | (41,823) | (15,286) | 19,903 | (11,001) | 28,638 | (58,907) | (18,988) | 5,058 |
| ஏனைய வருமானம் மற்றும் நயம் | 10,307 | 9,450 | 8,143 | 10,323 | 8,292 | 5,871 | 5,107 | 4,225 | 3,810 | 3,672 |
| நிர்வாக செலவினம் | (7,280) | (5,832) | (5,110) | (4,965) | (4,086) | (3,146) | (2,556) | (2,997) | (1,636) | (1,851) |
| நிதி வருமானம் | 1,751 | 1,466 | 1,194 | 1,049 | 434 | 304 | 1,677 | 2,429 | 416 | 558 |
| நிதிக் கிரயம் | (22,526) | (13,036) | (8,415) | (4,312) | (5,134) | (7,030) | (10,601) | (6,198) | (3,787) | (2,605) |
| வருமான வரிக்கு முன் தேறிய இலாபம்/ (நட்டம்) | (85,309) | (30,345) | (46,011) | (13,191) | 19,409 | (15,002) | 22,265 | (61,448) | (20,185) | 4,832 |
| வருமான வரிச் செலவினம் | (40) | (51) | (231) | (263) | (61) | (95) | - | - | - | (4,500) |
| பிற்போட்ட வரி (கட்டணம்)/மீளறவிடல் | - | - | - | - | - | 996 | (1,325) | (16,198) | (830) | - |
| விரிவான வருமானம் | (85,412) | (31,936) | (47,581) | (14,457) | 20,300 | (17,285) | 20,900 | (77,770) | (21,323) | 332 |

| திசெம்பர் 31 இல் உள்ளவாறு | 2019 ரூபா மில்லியன் | 2018 (திருத்திய) ரூபா மில்லியன் | 2017 (திருத்திய) ரூபா மில்லியன் | 2016 (திருத்திய) ரூபா மில்லியன் | 2015 (திருத்திய) ரூபா மில்லியன் | 2014 (திருத்திய) ரூபா மில்லியன் | 2013 (திருத்திய) ரூபா மில்லியன் | 2012 (திருத்திய) ரூபா மில்லியன் | 2011 (திருத்திய) ரூபா மில்லியன் | 2010 (திருத்திய) ரூபா மில்லியன் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | | | | | | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 781,977 | 747,144 | 724,068 | 704,695 | 694,415 | 681,471 | 648,130 | 621,088 | 493,050 | 491,600 |
| துணைக் கம்பனிகளில் முதலீடு | 912 | 912 | 912 | 912 | 912 | 785 | 785 | 762 | 737 | 737 |
| கூட்டு முயற்சிகளில் முதலீடு | 329 | 329 | 329 | 329 | 329 | 150 | 150 | 150 | - | - |
| காப்புறுதி ஒதுக்க நிதியத்தில் முதலீடு | 8,997 | 8,070 | 7,246 | 6,496 | 6,036 | 5,653 | 5,250 | 4,433 | 3,710 | 3,710 |
| ஏனைய நிதிச் சொத்துக்கள் | 9,956 | 10,204 | 8,912 | 8,983 | 3,848 | 2,291 | - | - | - | - |
| ஏனைய நடைமுறையல்லா சொத்துக்கள் | 1,484 | 1,242 | 961 | 949 | 896 | - | - | - | - | - |
| விற்பனைக்காக உள்ள நடைமுறையல்லா சொத்துக்கள் | 0 | 0 | 1 | 1,022 | 1,025 | 1,023 | 1,021 | - | - | - |
| நடைமுறைச் சொத்துக்கள் | 110,346 | 102,337 | 89,065 | 80,968 | 69,391 | 72,662 | 91,423 | 101,295 | 109,173 | 109,319 |
| **மொத்தச் சொத்துக்கள்** | **914,001** | **870,238** | **831,494** | **804,354** | **776,852** | **764,035** | **746,759** | **727,728** | **606,671** | **605,366** |

# நிதிப் பிரிவு மற்றும் நிதித் தகவல்கள் (தொடர்ச்சி)

| திசெம்பர் 31 இல் உள்ளவாறு | 2019 ரூபா மில்லியன் | 2018 (திருத்திய) ரூபா மில்லியன் | 2017 (திருத்திய) ரூபா மில்லியன் | 2016 (திருத்திய) ரூபா மில்லியன் | 2015 (திருத்திய) ரூபா மில்லியன் | 2014 (திருத்திய) ரூபா மில்லியன் | 2013 (திருத்திய) ரூபா மில்லியன் | 2012 (திருத்திய) ரூபா மில்லியன் | 2011 (திருத்திய) ரூபா மில்லியன் | 2010 (திருத்திய) ரூபா மில்லியன் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **பொறுப்புக்கள்** | | | | | | | | | | |
| வட்டிக் கடன்கள் மற்றும் கடன் பெறுவனவுகள் | 334,672 | 296,630 | 236,129 | 220,476 | 214,299 | 221,735 | 355,043 | 345,700 | 184,243 | 184,243 |
| பாவனையாளர் வைப்புக்கள் | 15,014 | 14,311 | 13,557 | 12,753 | 11,484 | 10,458 | 9,722 | 8,899 | 7,544 | 7,543 |
| ஏற்பாடு மற்றும் ஏனைய பிற்போட்ட பொறுப்புக்கள் | 10,482 | 10,038 | 8,622 | 7,262 | 6,116 | 6,572 | 3,236 | 3,593 | 2,930 | 2,930 |
| அரசாங்க மானியங்கள் | 213 | 228 | 243 | 211 | - | - | - | - | - | - |
| பிற்போட்ட வருமானம் | | | | | 71,696 | 66,292 | 60,343 | 55,208 | 44,390 | 44,390 |
| ஒப்பந்த பொறுப்புக்கள் | 89,746 | 86,335 | 82,564 | 77,628 | - | - | - | | | |
| பிற்போட்ட வரி | | | | | | | 22,182 | 20,857 | 17,142 | |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 191,999 | 126,974 | 123,682 | 72,661 | 43,630 | 64,147 | 69,134 | 96,171 | 84,945 | 84,945 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | 642,126 | 534,517 | 464,797 | 390,991 | 347,225 | 369,204 | 519,660 | 530,428 | 341,194 | 324,051 |
| | | | | | | | | | | |
| **உரிமைத்துவம்** | | | | | | | | | | |
| பங்களித்த மூலதனம் | 323,194 | 302,695 | 302,695 | 302,695 | 302,228 | 289,038 | 121,708 | 110,862 | 83,311 | 83,311 |
| ஒதுக்கங்கள் | 37,110 | 34,881 | 32,783 | 30,283 | 28,463 | 27,434 | 25,999 | 24,460 | 23,436 | 316,799 |
| நிறுத்திவைத்த உழைப்புக்கள் | (88,429) | (1,855) | 31,219 | 80,385 | 98,936 | 78,359 | 79,392 | 61,978 | 158,730 | (118,795) |
| **மொத்த உரிமைத்துவம்** | 271,875 | 335,721 | 366,697 | 413,363 | 429,627 | 394,831 | 227,099 | 197,300 | 265,477 | 281,315 |
| **மொத்த உரிமைத்துவமும் பொறுப்புக்களும்** | 914,001 | 870,238 | 831,494 | 804,354 | 776,852 | 764,035 | 746,759 | 727,728 | 606,671 | 605,366 |

# நிதிப் பிரிவு மற்றும் நிதித் தகவல்கள் (தொடர்ச்சி)

### பெறுமதி சேர்க்கப்பட்ட அறிக்கை

இ.மி.ச. இன் பெறுமதி உருவாக்கம் மற்றும் பிரதான பங்குகள் குழுமத்திற்கு மத்தியில் பெறுமதி ஒதுக்கீட்டு பகுப்பாய்வு கீழே தரப்படுகின்றது.

| | 2019 ரூபா ('000) | 2018 ரூபா ('000) |
|---|---|---|
| **பெறுமதி சேர்த்தல்** | | |
| வருவாய் | 242,950,327 | 229,571,083 |
| விற்பனை செலவு | (310,511,109) | (251,964,213) |
| **மின்சாரம் வழங்குவதன் மூலம் சேர்க்கப்பட்ட பெறுமதி** | (67,560,782) | (22,393,130) |
| பிற வருவானம் மற்றும் ஆதாயம் | 12,057,760 | 10,916,551 |
| **பெறுமதி சேர்ப்பு** | (55,503,022) | (10,403,630) |

| | 2019 ரூபா ('000) | 2018 ரூபா ('000) |
|---|---|---|
| **பெறுமதி ஒதுக்கீடு** | | |
| **ஊழியர்களுக்கு** | | |
| சம்பளம், ஊதியம் மற்றும் பிற நலங்கள் | 39,708,449 | 38,090,711 |
| | | |
| **அரசாங்கத்திற்கு** | | |
| இலங்கை அரசுக்கு செலுத்திய பங்கிலாபம் | - | - |
| வருமான வரி | 39,529 | 50,641 |
| நிலக்கரி கொள்வனவு மீதான உள்ளீட்டு வற் | 6,111 | 5,987 |
| ஏனைய வருமானத்தில் செலுத்தப்பட்ட வெளியீட்டு வற் | 229 | 287 |
| இ.மி.ச. ஆல் பெறப்பட்ட மின்சார வழங்கல் மீதான NBT | 4,414 | 4,520 |
| ESC செலுத்தியது | 1,610 | 1,845 |
| சுங்கத் தீர்வை மற்றும் பிற வரி | 29,446,978 | 25,476,986 |
| | | |
| **வெளி வாரி நிதி வழங்குநர்களுக்கு** | | |
| கடன் மீதான வட்டி | 22,525,621 | 13,036,115 |
| | | |
| **விரிவாக்கம் மற்றும் வளர்ச்சிக்கு** | | |
| நிறுத்தி வைத்த இலாபம் | (88,428,833) | (1,854,593) |
| தேய்மானம் மற்றும் காலத் தேய்வு | 30,953,776 | 30,388,480 |

### சிறப்பம்சங்கள்

| | (ரூபாய் பில்லியன்) | |
|---|---|---|
| **வருவாய்** | **குழுமம்** | **இ.மி.ச.** |
| 2019 | 267 | 243 |
| 2018 | 254 | 230 |
| அதிகரிப்பு | 13 | 13 |
| **விற்பனை செலவு** | **குழுமம்** | **இ.மி.ச.** |
| 2019 | 324 | 310 |
| 2018 | 267 | 252 |
| அதிகரிப்பு | 57 | 58 |
| **மொத்த விரிவான வருமானம்** | **குழுமம்** | **இ.மி.ச.** |
| 2019 | (75) | (85) |
| 2018 | (24) | (32) |
| அதிகரிப்பு | 51 | (53) |
| **நிதி செலவு** | **குழுமம்** | **இ.மி.ச.** |
| 2019 | (24) | (22) |
| 2018 | (14) | (13) |
| அதிகரிப்பு | 10 | 9 |
| **கடன் மற்றும் கடன்** | **குழுமம்** | **இ.மி.ச.** |
| 2019 | 348 | 335 |
| 2018 | 311 | 297 |
| அதிகரிப்பு | 37 | 38 |




பணிப்பாளர் அறிக்கை

கணக்காய்வு செய்யப்பட்ட ஒன்றித்த நிதிக் கூற்றுக்கள்

# பணிப்பாளரின் அறிக்கை

1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபைச் சட்டத்தின் 49 ஆம் பிரிவின் படி, இலங்கை மின்சார சபையின் பணிப்பாளர் சபை (சபை) 2019 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் கணக்காய்வு செய்யப்பட்ட ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களை முன்வைப்பதில் மகிழ்ச்சி அடைகின்றது.

## பிரதான செயற்பாடுகள்

மின் பிறப்பாக்கம், கொள்முதல், பரிமாற்றம்,வினைத்திறனான விநியோகம் மற்றும் மின்சார விற்பனை ஆகியவை சபையின் பிரதான செயற்பாடுகளாகும். நாட்டின் சட்டங்களுக்கும் விதிமுறைகளுக்கும் முரணான எந்தவொரு செயற்பாட்டிலும் சபை ஈடுபட்டிருக்கவில்லை.

## துணைக் கம்பனிகள் மற்றும் கூட்டுத்தொழில் முயற்சிகள்

துணைக் கம்பனிகள் மற்றும் கூட்டுத்தொழில் முயற்சிகளின் பிரதான செயற்பாடுகள் என்பன நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்களின் கீழுள்ள 108 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளன. மீளாய்வாண்டில் சபை மற்றும் குழுமத்தின் பிரதான செயற்பாடுகளின் தன்மையில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் எதுவும் இருக்கவில்லை.

## குழுமத்தின் கட்டமைப்பு மாற்றங்கள்

இந்த ஆண்டின் போதான குழுமத்தின் கட்டமைப்பில் ஏற்பட்ட மாற்றங்கள் இந்த அறிக்கையின் 132 முதல் 134 வரையான பக்கங்களிலுள்ள நிதிக்கூற்றுக்களிற்கான 10 மற்றும் 11 ஆம் குறிப்புகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

## ஆண்டின் செயலாற்றல் மீளாய்வு

சபை/ குழுமத்தின் ஆண்டிற்கான செயலாற்றல் கருத்துரை 12 முதல் 15 வரையான பக்கங்களிலுள்ள தலைவரின் செய்தியில் விபரிக்கப்பட்டுள்ளது. மீளாய்வாண்டின் போதான சபையின் இயக்கச் செயற்பாடுகள் குறித்த விரிவான விளக்கத்தை 16 முதல் 18 வரையான பக்கங்களிலுள்ள பொது முகாமையாளரின் மீளாய்வு வழங்குகின்றது. 90 முதல் 96 வரையானபக்கங்களிலுள்ள நிதிப் பிரிவு என்ற தலைப்பு, சபையின் நிதி செயலாற்றல் மற்றும் நிதி நிலைமை குறித்த விரிவான பகுப்பாய்வை வழங்குகின்றது. வருடாந்த அறிக்கையின் ஒருங்கிணைந்த பகுதியாக காணப்படுகின்ற இந்த அறிக்கைகள் சபையின் விவகாரங்கள் குறித்த நியாயமான மீளாய்வை வழங்குகின்றன.

## நிதிக் கூற்றுக்களிற்கான பணிப்பாளர் சபையின் பொறுப்பு

விவகாரங்களின் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையினை பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு பணிப்பாளர்கள் பொறுப்புடையவர்களாவர். இந்த நிதிக் கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் 1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபைச் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன என்று பணிப்பாளர்கள் கருதுகின்றனர். துணைக் கம்பனிகளைப் பொறுத்தவரை, 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளிற்கமைய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகின்றன.

## கணக்காய்வாளரின் அறிக்கை

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் 154 ஆவது உறுப்புரை மற்றும் 1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை சட்டத்தின் பிரிவு 51 இன் படி,கணக்காய்வாளர் தலைமை அதிபதி இலங்கை மின்சார சபையின் கணக்காய்வாளராக உள்ளார். 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் சபையினதும் அதன் துணைக் கம்பனிகளினதும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை இந்த அறிக்கையின் முறையே 178 முதல் 184 மற்றும் 163 முதல் 169 வரையான பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

## கணக்கீட்டுக் கொள்கைகள்

குழுமம் மற்றும் சபை என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (எல்.கே.ஏ.எஸ்) மற்றும் இலங்கை நிதி அறிக்கையில் நியமங்கள் (எஸ்.எல்.எ.்.ப்.ஆர்.எஸ்) ஆகியவற்றின் படி தங்கள் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்துள்ளன. நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதில் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் 108 முதல் 121 வரையான பக்கங்களில் வழங்கப்பட்டுள்ளன. சபையால் மீளாய்வாண்டில் சேர்த்துக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளில் பொருண்மையான மாற்றங்கள் எதுவும் காணப்படவில்லை.

## சபையுடனான ஒப்பந்தங்களில் பணிப்பாளர் சபை உறுப்பினர்களின் ஆர்வம்

திரு. ஆர். ஜெயவர்தன 2019 ஜனவரி 30 ஆம் திகதி இ.மி.ச. இன் தலைவராக நியமிக்கப்பட்டார், மேலும் அவர் 2019 நவம்பர் 21, வரை இ.மி.ச. இல் பணியாற்றிய காலத்தில் இ.மி.ச. இன் துணை கம்பனிகளானலங்கா மின்சார கம்பனி (பிரைவட்) லிமிடட், எல்டிஎல் ஹோல்டிங்ஸ் (பிரைவட்) லிமிடட், மற்றும் இலங்கை எனர்ஜீஸ் (பிரைவட்) லிமிடட் ஆகியவற்றின் பணிப்பாளர் சபை உறுப்பினராகவும் பணியாற்றியிருந்தார். இ.மி.ச. இல் பணிபுரிந்த காலத்தில்,இ.மி.ச. மற்றும் NTPC- இந்தியா இற்கு இடையிலான ஒரு கூட்டுத்தொழில் முயற்சியான திருகோணமலை பவர் கம்பனி லிமிடட் (டிபிசிஎல்) இல்தலைவராகவும் பணியாற்றினார்.

திரு. ஆர். செல்வராஜா,2019 ஜனவரி 30 அன்று இ.மி.ச. இன் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டு அவர் 2019நவம்பர் 22 வரை இ.மி.ச. இல் பணியாற்றினார். திரு. செல்வராஜா இலங்கை எனர்ஜீஸ் (பிரைவட்) லிமிடெட் மற்றும் திருகோணமலை பவர் கம்பனிலிமிடெட் (டிபிசிஎல்) இன் பணிப்பாளராகவும் இக்காலத்தில் நியமிக்கப்பட்டிருந்தார்.

திரு. கே.கே.டி. ஜினதாச 2019 ஜனவரி 30 ஆம் திகதி இ.மி.ச. இன் சபை உறுப்பினர் /தொழிற்பாட்டுப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். மேலும் அவர் 2019 நவம்பர் 25 வரை இ.மி.ச. இல் பணியாற்றினார்.

கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் செயலாளர் திரு. கே.டி.என்.ரஞ்சித் அசோகவுக்கு பதிலாக,கைத்தொழில் மற்றும் வர்த்தகம், இடம்பெயர்ந்த ஆட்களை மீளக் குடியமர்த்தல், கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் தொழிற் பயிற்சி திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் திரு. எம். தேவசுந்தர அவர்கள் 2019 செப்டம்பர் 09 அன்று சபையின் உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் மேலதிக செயலாளர் திரு. ஆர். சேமசிங்கவுக்கு பதிலாக,பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமான திருமதி ஜே.எம். திலக் ஜெயசுந்தர அவர்கள்சபையின் உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

உள்நாட்டு அலுவல்கள்,மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் மேலதிக செயலாளர் திரு. எஸ்.கே.கண்ணங்கர அவர்கள், 2019 ஜனவரி 30 ஆம் திகதி சபையின் உறுப்பினராக நியமிக்கப்பட்டதுடன் அவர் 2019 ஆம் ஆண்டில் இ.மி.ச. இல் பணியாற்றினார்.

திரு. ரூபன் விக்ரமராச்சி 2019 ஜனவரி 30 ஆம் திகதி சபையின் உறுப்பினராக நியமிக்கப்பட்டதுடன் அவர் 2019 ஆம் ஆண்டில் இ.மி.ச. இல் பணியாற்றினார்.

நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்பு 37 இல் வெளிப்படுத்தப் பட்டுள்ளதைத் தவிர, 2019 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான எந்தவொரு ஒப்பந்தத்திலும் அல்லது சபையின் முன்மொழியப்பட்ட ஒப்பந்தத்திலும் பணிப்பாளர்களிற்கு நேரடியான அல்லது மறைமுகமான ஆர்வம் காணப்படவில்லை.

# பணிப்பாளரின் அறிக்கை (தொடர்ச்சி)

## 2019 ஆம் ஆண்டிற்கான சபையினதும் உப குழுக்களினதும் கூட்டங்களில் பணிப்பாளர்களின் பங்குபற்றுதல்

| பணிப்பாளரின் பெயர் | சபை | ஏ.எம்.சி | ஈ.ஜி.சி | டி.ஏ.பி |
|---|---|---|---|---|
| திரு ஆர் ஜெயவர்தன | 21 | | | |
| திரு ஆர் செல்வராஜா | 20 | | 2 | 4 |
| திரு கே கே டி ஜினதாச | 18 | | 2 | 5 |
| திரு. எம்.ருபன் | 04 | | | |
| திரு கே டி என் ரஞ்சித் அசோக, | 12 | 2 | | |
| திருமதி ஜே எம் திலக ஜெயசுந்தர | 10 | 3 | | |
| திரு. ஆர். சேமசிங்க | 05 | 1 | | |
| திரு எஸ்.கே கண்ணங்கரா | 16 | 3 | | 5 |
| திரு. விக்ரமராச்சி | 20 | 3 | | |

### சபையின் உப குழுக்கள்

பின்வரும் துணைக்குழுக்கள் சபையால் 2019 பெப்ரவரி 08 அன்று நியமிக்கப்பட்டன.

- ஊழியர்களின் குறைகேள் குழு (ஈ.ஜி.சி)
- ஒழுக்காற்று மேன்முறையீட்டு சபை (டி.ஏ.பி)
- கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு (ஏ.எம்.சி)

### 1.0 ஊழியர்கள் குறைகேள் குழு

ஊழியர்களின் குறைகேள் குழு (ஈ.ஜி.சி) என்பது இ.மி.ச. இன் ஊழியர்கள் / முன்னாள் ஊழியர்களின் தனிப்பட்ட குறைகளைக் கையாள்வதற்காகசபையால் நியமிக்கப்பட்ட துணைக் குழு ஆகும். குறைகேள் குழுவில் 02 சபை உறுப்பினர்கள் மற்றும் இ.மி.ச. இன் பல மூத்த நிறைவேற்று நிர்வாகிகள் உள்ளடங்கியுள்ளனர்.

இந்த குழு 2019 ஆம் ஆண்டில் முறையாக 02 முறைகள் கூடியிருந்ததுடன்,இ.மி.ச இன் ஊழியர்கள் / முன்னாள் ஊழியர்களின் 14 தனிப்பட்ட குறைகளை 14 கருத்திற்கொண்டுமீளாய்வுக்கு உட்படுத்தியது.

குழுக் கூட்டங்களின் அறிக்கைகள் அங்கீகாரத்திற்காக பணிப்பாளர் சபைக் கூட்டங்களில் தாக்கல் செய்யப்பட்டதுடன், பொது முகாமையாளர்/இ.மி.ச. அந்த தீர்மானங்களை அதற்கேற்ப செயல்படுத்த நடவடிக்கை எடுத்தது.

2019 ஆம் ஆண்டிற்கான குழுவின் சபை உறுப்பினர் உள்ளடக்கம் (2019 பெப்ரவரி 08 முதல்) கீழே தரப்பட்டுள்ளது.

i. குழுவின் தலைவராக இ.மி.ச. இன் பணிப்பாளர் திரு டி.ஜினதாச
ii. குழுவின் உறுப்பினராக இ.மி.ச. இன் உப தலைவர் திரு. ராஜீவ் செல்வராஜா

சபையின் செயலாளர் இந்த துணைக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் ஆவார்.

### 2.0 ஒழுக்காற்று மேன்முறையீட்டு சபை

ஒழுக்காற்று மேன்முறையீட்டு சபையானது சபையின் ஒரு துணைக்குழு ஆகும். இ.மி.ச. இன் ஊழியர்களின் ஒழுக்காற்று விடயங்களை கையாள்வதற்காக இந்த குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்த குழு 2019 நிதியாண்டில் முறையாக 05 முறை கூடியிருந்ததுடன் 11 வழக்குகளை கையாண்டிருந்தது.

குழுக் கூட்டங்களின் அறிக்கைகள் அங்கீகாரத்திற்காக பணிப்பாளர் சபைக் கூட்டங்களில் தாக்கல் செய்யப்பட்டதுடன், இ.மி.ச. இன் பொது முகாமையாளர் அந்த தீர்மானங்களை அதற்கேற்ப செயல்படுத்த நடவடிக்கை எடுத்திருந்தார்.

2019 ஆம் ஆண்டிற்கான குழுவின் கட்டமைப்பு (2019 பெப்ரவரி 08 முதல்) பின்வருமாறு.

i. தலைவராக திரு ஜி.எஸ்.கே. கண்ணங்கர, உறுப்பினர், இ.மி.ச.
ii. உறுப்பினராக திரு. டி.ஜினதாச, தொழிற்பாட்டு பணிப்பாளர் இ.மி.ச.
iii. உறுப்பினராக திரு.ஜே ஜி எல் எஸ் ஜெயவர்தன, மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சின் பணிப்பாளர்.
iv. உறுப்பினராக திரு பி எஸ் பதிரத்ன, ஓய்வுபெற்ற மேலதிக தொழில் ஆணையாளர் நாயகம்

சபையின் செயலாளர் இந்த துணைக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் ஆவார்.

### 3.0 கணக்காய்வுக் குழு

ஆளுகைக் சபையின் துணைக் குழுவானகணக்காய்வுக் குழுவிற்கு நிறுவனத்தின் ஆளுகை மற்றும் இடர் முகாமைத்துவ முறைமைகளை மீளாய்வு செய்தல், உள்ளகக் கட்டுப்பாட்டு செயல்முறையை கண்காணித்தல் மற்றும் உள்ளக கணக்கய்வு மற்றும் வெளியகக் கணக்காய்வுத் தொழிற்பாடுகளை மேற்பார்வை செய்தல் ஆகியவற்றின் ஒட்டுமொத்த பொறுப்பு உள்ளது.

#### உள்ளடக்கம்

கணக்காய்வுக் குழுவில் நிதி,கணக்காய்வு மற்றும் தொடர்புடைய துறையில் சிறந்த திறன்கள் மற்றும் விரிவான அனுபவம் கொண்ட நான்கு சுயாதீன பணிப்பாளர்கள் உள்ளடங்குவதுடன் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் தலைவர் குழுவுக்கு ஒருங்கிணைப்பாளராக பணியாற்றுகின்றார். பிரதான நிறைவேற்று அதிகாரியான பொது முகாமையாளர்,நிதி முகாமையாளர் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தினதும் மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சினதும் பிரதிநிதிகள் அழைப்பின் பேரில் இக்குழுவின் கூட்டங்களில் கலந்து கொண்டனர்.

# பணிப்பாளரின் அறிக்கை (தொடர்ச்சி)

2019 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வுக் குழுவின் கட்டமைப்பு பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| செல்வி திலகா ஜெயசுந்தர | - | தலைவர் |
| திரு எஸ்.கே. கண்ணங்கர | - | உறுப்பினர் |
| திரு கே.டி.என். ரஞ்சித் அசோக | - | உறுப்பினர் |
| திரு. ரூபன் விக்ரமராச்சி | - | உறுப்பினர் |

செயற்பாட்டு மற்றும் நிதி மீளாய்வுப் பரப்புகளில் மேற்கொள்ளப்பட்ட உள்ளகக் கணக்காய்வு மற்றும் வெளியகக் கணக்காய்வுகளால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளை கணக்காய்வுக் குழு மீளாய்வு செய்து விவாதிக்கின்றது. கணக்காய்வுக் குழு இந்த அறிக்கைகளை அதன் விரிவான அனுபவம் மற்றும் நிபுணத்துவத்தைப் பயன்படுத்தி மீளாய்வு செய்வதுடன் தற்போதுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளை வலுப்படுத்துவதற்காக செயற்படுத்தக்கூடிய மேலதிக கட்டுப்பாடுகள் மற்றும் இடர் குறைப்பு உத்திகளைப் அது பரிந்துரைக்கின்றது. மோசடிகள் மற்றும் தவறுகள்,நிறுவனத்தால் எதிர்கொள்ளப்படுகின்ற செயற்பாட்டு மற்றும் நிதி அபாயங்கள் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகளையும் அதன் தாக்கங்களையும் இதன்மூலம் குறைத்துக்கொள்ள முடிகின்றது. இந்த குழு 2019 ஆம் ஆண்டில் முறையாக மூன்று முறை கூடியது.

### சட்டங்கள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்குதல்

பணிப்பாளர்கள், அவர்களின் அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரை, குழுமம் சட்டங்கள் மற்றும் பிரமாணங்களுக்கு முரணான எந்தவொரு செயற்பாட்டிலும் ஈடுபடவில்லை என்பதை உறுதிப்படுத்துகின்றர்.

### நிலுவையிலுள்ள வழக்குகள்

பணிப்பாளர்கள் /சபை உறுப்பினர்களின் கருத்திலும் சபையின் வழக்கறிஞர்களால் உறுதிப்படுத்தப்பட்டதற்கு அமையவும்,சபைக்கு எதிராக தற்போது நிலுவையில் உள்ள வழக்குகள், அறிக்கையிடப்பட்ட நிதி விளைவுகள் அல்லது சபையின் எதிர்கால செயற்பாடுகளில் பொருண்மையான தாக்கத்தை ஏற்படுத்த மாட்டாது.

### நியதிச்சட்ட கொடுப்பனவுகள்

அரசு மற்றும் ஊழியர்கள் தொடர்பான அனைத்து சட்டரீதியான கொடுப்பனவுகளும் சரியான நேரத்தில் செய்யப்பட்டுள்ளன என்பதை சபை உறுதிப்படுத்துகிறது.

### அறிக்கையிடல் திகதிக்கு பிந்திய நிகழ்வுகள்

சீராக்கல்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் தேவைப்படுகின்ற எந்தவொரு பொருண்மையான நிகழ்வுகளும் நிதியாண்டு முடிவிற்கும் இந்த அறிக்கையின் திகதிக்கும் இடையிலான கால இடைவெளியில் இடம்பெறவில்லை என்பது பணிப்பாளர்களின் கருத்தாகும்.

### தொடர்ந்தியங்குதல் எண்ணக்கரு

சபையின் செயற்பாடுகளைத் தொடர்வதற்கு அதன் வளங்கள் போதுமானவை என்று இயக்குநர்கள் நம்புகின்றனர். எனவே, நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதில் தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு அடிப்படை பிரயோகிக்கப்பட்டுள்ளது.

# இலாபம் அல்லது நட்டக் கூற்று

**2019 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கு**

(சகல தொகைகளும் இலங்கை ரூபா ஆயிரத்தில்)

| தொடரும் செயற்பாடுகள் | குறிப்பு | குழுமம் 2019 | குழுமம் 2018 மீளமைக்கப்பட்டது | சபை 2019 | சபை 2018 மீளமைக்கப்பட்டது |
|---|---|---|---|---|---|
| வருமானம் | 3 | 267,041,265 | 254,351,728 | 242,950,327 | 229,571,083 |
| விற்பனைக் கிரயம் | | (324,453,251) | (268,342,080) | (310,511,109) | (251,964,213) |
| **மொத்த இலாபம்/(நட்டம்)** | | (57,411,986) | (13,990,352) | (67,560,782) | (22,393,130) |
| ஏனைய செயற்பாட்டு வருமானமும் ஆதாயமும் | 4 | 17,021,754 | 12,334,628 | 10,306,591 | 9,450,386 |
| விநியோகக் கிரயம் | | (392,610) | (186,449) | - | - |
| ஏனைய செலவினம் | | (355,200) | (193,061) | - | - |
| நிர்வாக செலவினம் | | (11,967,382) | (9,345,674) | (7,280,014) | (5,831,793) |
| **செயற்பாட்டு இலாபம்/(நட்டம்)** | | (53,105,424) | (11,380,908) | (64,534,205) | (18,774,537) |
| நிதி வருமானம் | 5.1 | 3,848,623 | 3,354,819 | 1,751,170 | 1,466,165 |
| நிதிச் செலவினம் | 5.2 | (24,103,239) | (14,364,697) | (22,525,622) | (13,036,115) |
| நிதிக் கிரயம் -தேறியது | | (20,254,616) | (11,009,878) | (20,774,452) | (11,569,950) |
| கூட்டுத் தொழில்முயற்சி நட்டப் பங்கு | 11 | (6,850) | (4,096) | - | - |
| **வருமான வரிக்கு முந்திய இலாபம்/(நட்டம்)** | 6 | (73,366,890) | (22,394,882) | (85,308,657) | (30,344,487) |
| வருமான வரிச் செலவினம் | 7.1 | (1,901,477) | (1,902,119) | (39,529) | (50,641) |
| பிற்போட்ட வரி (அறவீடு)/மீளமைத்தல் | 7.2 | (522,385) | 441,478 | - | - |
| **தொடரும் செயற்பாடுகளிலிருந்து ஆண்டிற்கான இலாபம்/(நட்டம்)** | | (75,790,752) | (23,855,523) | (85,348,186) | (30,395,128) |
| கட்டுப்பாடற்ற வட்டி | | (6,059,416) | (4,402,431) | - | - |
| **ஆண்டிற்கான இலாபம்/(நட்டம்)** | | (81,850,168) | (28,257,954) | (85,348,186) | (30,395,128) |

பக்கங்கள் 108 முதல் 162 வரையிலுள்ள குறிப்புக்கள் நிதிக் கூற்றுக்களுடன் இணைந்த பகுதியாகும்.

# முற்றுமடங்கிய வருமானக் கூற்று

திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கு

(சகல தொகைகளும் இலங்கை ரூபா ஆயிரத்தில்)

| | குழுமம் | | சபை | |
|---|---|---|---|---|
| | 2019<br>மீளமைக்கப்பட்டது | 2018 | 2019<br>மீளமைக்கப்பட்டது | 2018 |
| தொடரும் செயற்பாடுகளிலிருந்து ஆண்டிற்கான இலாபம்/(நட்டம்) | (75,790,752) | (23,855,523) | (85,348,186) | (30,395,128) |
| ஏனைய முற்றுமடங்கிய வருமானம் | | | | |
| பிந்திய தொழில் நலக் கடப்பாடுகள் மீதான உள்ளபடியான நட்டம் | (65,714) | (1,567,727) | (63,710) | (1,541,726) |
| காணி மற்றும் கட்டிடங்களின் மீள் மதிப்பீடு | 562 | 7,280 | - | - |
| வெளிநாட்டு மானிய செயற்பாட்டு மாற்றல்கள் மீதான பரிமாற்று வேறுபாடுகள் | (115,468) | 1,255,184 | - | - |
| விற்பனைக்காக உள்ள நிதிச் சொத்துக்கள் மீதான நியாயப் பெறுமதி ஆதாயம் | 466,166 | (518,358) | - | - |
| உள்ளபடியான ஆதாயம்/நட்டம் மீதான பிற்போட்ட வரித் தாக்கம் | (75,505,206) | (24,679,144) | (85,411,896) | (31,936,854) |
| | | | | |
| கீழ்வருமாறு பகிரப்படுகின்றது: | | | | |
| தாய்க் கம்பனியின் பங்குதாரர்களுக்கு | (81,702,906) | (29,603,755) | | |
| கட்டுப்பாடற்ற வட்டி | 6,197,700 | 4,924,611 | | |
| | (75,505,206) | (24,679,144) | | |

பக்கங்கள் 108 முதல் 162 வரையிலுள்ள குறிப்புக்கள் நிதிக் கூற்றுக்களுடன் இணைந்த பகுதியாகும்.

# நிதி நிலைமைக் கூற்று

2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான

(சகல தொகைகளும் இலங்கை ரூபா ஆயிரத்தில்)

| | குறிப்பு | குழுமம் 2019 | குழுமம் 2018 மீளமைக்கப்பட்டது | குழுமம் 2017 மீளமைக்கப்பட்டது | சபை 2019 | சபை 2018 மீளமைக்கப்பட்டது | சபை 2017 மீளமைக்கப்பட்டது |
|---|---|---|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | | | | |
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | | | | | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 8 | 799,576,467 | 763,195,966 | 738,983,298 | 781,869,266 | 747,016,348 | 723,922,861 |
| குத்தகைக்காணிக்கு செலுத்திய வட்டம் | | 235,577 | 229,040 | 210,250 | - | - | - |
| அருவச் சொத்துக்கள் | 9 | 499,056 | 532,736 | 527,930 | 107,719 | 127,227 | 145,211 |
| உபகம்பனிகளில் முதலீடுகள் | 10 | - | - | - | 911,813 | 911,813 | 911,813 |
| கூட்டுத் தொழில்முயற்சியில் முதலீடு | 11 | 36,900 | 43,750 | 47,846 | 328,606 | 328,606 | 328,606 |
| பெறவேண்டிய நிதிக் குத்தகை | 12 | 19,899,441 | 9,775,319 | 8,362,533 | - | - | - |
| பிறநடைமுறையல்லா நிதிச்சொத்துககள் | 13 | 25,348,198 | 36,461,582 | 25,494,853 | 9,956,341 | 10,204,445 | 8,911,612 |
| ஏனைய நடைமுறையல்லாச் சொத்துக்கள் | 14 | 2,596,310 | 2,303,439 | 1,989,365 | 1,484,474 | 1,241,868 | 961,113 |
| காப்புறுதி ஒதுக்கத்தில் முதலீடு | 15 | 8,996,893 | 8,070,253 | 7,246,251 | 8,996,893 | 8,070,253 | 7,246,251 |
| மொத்த நடைமுறையல்லா சொத்துக்கள் | | 857,188,842 | 820,612,085 | 782,862,326 | 803,655,112 | 767,900,560 | 742,427,467 |
| விற்பனைக்கான நடைமுறையல்லா சொத்துக்கள் | 16 | 76 | 76 | 655 | 76 | 76 | 655 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | | | | |
| இருப்புக்கள் | 17 | 55,622,767 | 48,309,728 | 42,488,366 | 48,023,386 | 42,712,420 | 37,504,855 |
| வியாபார மற்றும் ஏனைய வருமதிகள் | 18 | 56,491,420 | 57,740,010 | 48,619,063 | 49,126,300 | 48,362,510 | 41,122,073 |
| தொடர்புடைய தரப்பிலிருந்து வருமதி | 19 | - | - | - | 5,984,849 | 5,139,714 | 4,986,694 |
| பெறவேண்டிய உப குத்தகை | | 21,110 | - | - | - | - | - |
| பெறவேண்டிய நிதிக் குத்தகை | 12 | 910,171 | 569,718 | 418,140 | - | - | - |
| ஏனைய நமைுறை நிதிச்சொத்துக்கள் | 13 | 27,080,350 | 19,565,483 | 23,216,050 | 3,485,735 | 3,872,290 | 3,935,551 |
| காசும் வங்கி மீதிகளும் | 30 | 7,282,167 | 5,503,939 | 5,575,442 | 3,725,333 | 2,250,515 | 1,516,230 |
| மொத்த நடைமுறைச் சொத்துக்கள் | | 147,407,985 | 131,688,878 | 120,317,061 | 110,345,603 | 102,337,449 | 89,065,403 |
| மொத்தச் சொத்துக்கள் | | 1,004,596,903 | 952,301,039 | 903,180,042 | 914,000,791 | 870,238,085 | 831,493,525 |
| **உரிமையாண்மையும் பொறுப்புக்களும்** | | | | | | | |
| **மூலதனம் மற்றும் உரிமையாண்மை** | | | | | | | |
| பங்களிக்கப்பட்ட மூலதனம் | 20 | 323,194,038 | 302,694,797 | 302,694,797 | 323,194,038 | 302,694,797 | 302,694,797 |
| ஒதுக்கங்கள் | 21 | 50,082,923 | 44,511,162 | 41,687,158 | 37,109,569 | 34,881,040 | 32,783,235 |
| நிறுத்திவைத்த இலாபம் / (நட்டம்) | | (72,806,745) | 13,398,703 | 44,865,475 | (88,428,832) | (1,854,589) | 31,219,080 |
| **தாய்க் கம்பனி உரிமையாளர்களிற்கு பகிரத்தக்க உரிமையாண்மை** | | 300,470,216 | 360,604,662 | 389,247,430 | 271,874,775 | 335,721,248 | 366,697,112 |
| கட்டுப்பாடற்ற நட்டம் | | 31,655,307 | 25,758,561 | 23,572,412 | - | - | - |
| **மொத்த உரிமையாண்மை** | | 332,125,523 | 386,363,223 | 412,819,842 | 271,874,775 | 335,721,248 | 366,697,112 |
| **நடைமுறையல்லா பொறுப்புக்களும் பிற்போட்ட வருமானமும்** | | | | | | | |
| வட்டிக் கடன்கள், கடன்படுகைகள் | 22 | 312,115,497 | 288,351,654 | 222,562,928 | 306,259,692 | 281,262,195 | 214,564,098 |
| நுகர்வோர் வைப்புக்கள் | 23 | 15,013,791 | 14,311,008 | 13,556,567 | 15,013,791 | 14,311,008 | 13,556,567 |
| ஏற்பாடுகள், பிற பிற்போட்ட பொறுப்புக்கள் | 24 | 11,788,540 | 11,257,054 | 9,682,493 | 10,482,144 | 10,038,368 | 8,622,012 |
| அரசாங்க மானியம் | 25 | 297,697 | 318,228 | 338,759 | 213,303 | 228,022 | 242,740 |
| ஒப்பந்தப் பொறுப்புக்கள் | 26 | 94,421,389 | 90,809,989 | 86,774,090 | 89,746,084 | 86,335,217 | 82,564,453 |
| பிற்போட்ட வரியீடு | 27 | 753,562 | 276,157 | 687,441 | - | - | - |
| **மொத்த நடைமுறையல்லா பொறுப்பு மற்றும் பிற்போட்ட வருமானம்** | | 434,390,476 | 405,324,090 | 333,602,278 | 421,715,014 | 392,174,810 | 319,549,870 |
| **நடைமுறைப் பரிப்புக்கள்** | | | | | | | |
| வியாபார மற்றும் ஏனைய சென்மதிகள் | 28 | 197,069,252 | 133,023,927 | 124,816,656 | 187,773,340 | 121,179,242 | 118,459,459 |
| செலுத்தவேண்டிய பங்கிலாபம் | | 2,303,807 | 2,258,669 | 2,650,768 | - | - | - |
| தொடர்புடைய தரப்பினருக்கு சென்மதி | 29 | - | - | - | 2,955,352 | 4,524,276 | 3,557,973 |
| வட்டிக் கடன்கன், கடன்படுகைகள் | 22 | 36,492,272 | 22,995,032 | 26,352,748 | 28,411,544 | 15,367,744 | 21,564,431 |
| செலுத்தவேண்டிய வருமானவரி | | 2,215,573 | 2,336,098 | 2,937,750 | 1,270,766 | 1,270,765 | 1,664,680 |
| **மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள்** | | 238,080,904 | 160,613,726 | 156,757,922 | 220,411,002 | 142,342,027 | 145,246,543 |
| **மொத்த உரிமையாண்மையும் பொறுப்புக்களும்** | | 1,004,596,903 | 952,301,039 | 903,180,042 | 914,000,791 | 870,238,085 | 831,493,525 |

பக்கங்கள் 108 முதல் 162 வரையிலுள்ள குறிப்புக்கள் நிதிக் கூற்றுக்களுடன் இணைந்த பகுதியாகும்.

பணிப்பாளர் சபையும் முகாமைத்துவமும் இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரித்து சமர்ப்பிப்பதற்கு பொறுப்பாக உள்ளன.

| | | | |
|---|---|---|---|
| ………………… | ………………… | ………………… | ………………… |
| தலைவர் | உப தலைவர் | பொது முகாமையாளர் | நிதி முகாமையாளர் |

கொழும்பு
2020-09-22

# உரிமைத்துவ மாற்றங்கள் கூற்று - குழுமம்

**2019 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கு**

(சகல தொகைகளும் இலங்கை ரூபா ஆயிரத்தில்)

| குழுமம் | பங்களித்த மூலதனம் | மூலதன ஒதுக்கம் | தேய்மான ஒதுக்கம் | சொத்து மீள்வைப்பு ஒதுக்கம் |
|---|---|---|---|---|
| **2018 சனவரி 01 இல் மீதி (மீளமைத்த)** | 302,694,797 | 18,639,244 | 23,000 | 273,357 |
| ஆண்டிற்கான இலாப/(நட்டம்) | - | - | - | - |
| ஓய்வூதிய நலனாளிகள் மீதான உள்ளபடியான ஆதாயம்/(இழப்பு) | - | - | - | - |
| ஏ.வி.வ. ஊடான முதலீடுகளின் நியாயப் பெறுமதி மீதான நயம்/நட்டம் | - | - | - | - |
| பரிமாற்று சமப்படுத்தல் ஒதுக்கம் | - | 463,042 | - | - |
| மொத்த முற்றுமடங்கிய வருமானம் | 302,694,797 | 19,102,286 | 23,000 | 273,357 |
| காப்புறுதி ஒதுக்க நிதியத்திலிருந்தான வட்டி வருமானம் | - | - | - | - |
| சுய காப்புறுதி ஒதுக்கத்திற்கு மாற்றியது | - | - | - | - |
| ஆர்எச்சீபி செயற்திட்டம் | - | 77,188 | - | - |
| முதலீட்டு ஒதுக்கம் | - | - | - | - |
| சொத்துக்கள் மீளவைத்தல் ஒதுக்கம் | - | - | - | 21,573 |
| அபிவிருத்தி ஒதுக்கம் | - | - | - | - |
| பங்கிலாப கொடுப்பனவு - எல்ரீஎல் | - | - | - | - |
| பங்கிலாப கொடுப்பனவு - லெகோ | - | - | - | - |
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 302,694,797 | 19,179,474 | 23,000 | 294,930 |
| **காலப்பகுதியில் மேற்கொண்ட முன்னைய ஆண்டுச் சீராக்கம்** | | | | |
| **2019 சனவரி 01 இல் உள்ளவாறு மீதி (மீளமைக்கப்பட்டது)** | 302,694,797 | 19,179,474 | 23,000 | 294,930 |
| காலப்பகுதிக்கு இலாப/(நட்டம்) | - | - | - | - |
| ஓய்வூதிய நலனாளிகள் மீதான உள்ளபடியான ஆதாயம்/(இழப்பு) | - | - | - | - |
| ஏ.வி.வ. ஊடான முதலீடுகளின் நியாயப் பெறுமதி மீதான நயம்/நட்டம் | - | - | - | - |
| பரிமாற்று சமப்படுத்தல் ஒதுக்கம் | - | (39,667) | - | - |
| மொத்த முற்றுமடங்கிய வருமானம் | 302,694,797 | 19,139,807 | 23,000 | 294,930 |
| பரிமாற்று சமப்படுத்தல் ஒதுக்கம் | 16,942,799 | - | - | - |
| புத்தளம் நிலக்கரி மின்வலு செயற்திட்டம் | 3,556,442 | - | - | - |
| சொத்துக்கள் மீளவைத்தல் ஒதுக்கம் | - | - | - | - |
| சுய காப்புறுதி ஒதுக்கத்திற்கு மாற்றியது | - | - | - | - |
| பெறுமானத்தேய்வு ஒதுக்கத்திற்கு மாற்றியது | - | - | 1,000 | - |
| ஆர்எச்சீபி செயற்திட்டம் | - | 58,045 | - | - |
| முதலீட்டு ஒதுக்கம் | - | - | - | - |
| சொத்துக்கள் மீளவைத்தல் ஒதுக்கம் | - | - | - | 17,564 |
| அபிவிருத்தி ஒதுக்கம் | - | - | - | - |
| கட்டுப்பாட்டு அதிகாரத்தில் மாற்றமின்றி உரிமையினை மாற்றுதல் துணைக் கம்பனிகளின் பங்கு வழங்கல் | - | - | - | - |
| துணைக் கம்பனிகளின் பங்கு வழங்கல் | - | - | - | - |
| இறுதிப்பங்கிலாபம் - LTL | - | - | - | - |
| பங்கிலாபம் வழங்கள் லெகோ | - | - | - | - |
| **2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** | 323,194,038 | 19,197,852 | 24,000 | 312,494 |

பக்கங்கள் 108 முதல் 162 வரையிலுள்ள குறிப்புக்கள் நிதிக் கூற்றுக்களுடன் இணைந்த பகுதியாகும்.

# உரிமைத்துவ மாற்றங்கள் கூற்று

**2019 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கு**

| முதலீட்டு ஒதுக்கம் | சுய காப்புறுதி ஒதுக்கம் | நியாயப் பெறுமதி ஒதுக்கம் | அபிவிருத்தி ஒதுக்கம் | நிறுத்திவைத்த வைப்புக்கள் | கட்டுப்பாடற்ற வட்டி | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 2,334,391 | 14,350,273 | 6,066,892 | - | 45,360,277 | 23,572,412 | 413,314,643 |
| - | - | - | - | (28,257,954) | 4,402,431 | (23,855,523) |
| - | - | - | - | (1,552,651) | (7,795) | (1,560,446) |
| - | - | (256,192) | - | - | (262,165) | (518,357) |
| - | - | - | - | - | 792,142 | 1,255,184 |
| 2,334,391 | 14,350,273 | 5,810,700 | - | 15,549,672 | 28,497,025 | 388,635,501 |
| - | 883,800 | - | - | | - | 883,800 |
| - | 1,136,815 | - | - | (1,136,815) | - | - |
| - | - | - | - | - | - | 77,188 |
| 486,754 | - | - | - | (486,754) | - | - |
| - | - | - | - | (21,573) | - | - |
| - | - | - | 11,025 | (11,025) | - | - |
| - | - | - | - | - | (2,420,897) | (2,420,897) |
| - | - | - | - | - | (317,567) | (317,567) |
| 2,821,145 | 16,370,888 | 5,810,700 | 11,025 | 13,893,505 | 25,758,561 | 386,858,025 |
| | | | | (494,802) | | (494,802) |
| 2,821,145 | 16,370,888 | 5,810,700 | 11,025 | 13,398,703 | 25,758,561 | 386,363,223 |
| - | - | - | - | (81,850,168) | 6,059,415 | (75,790,753) |
| - | - | - | - | (62,901) | (2,252) | (65,153) |
| - | - | 249,829 | - | - | 216,338 | 466,167 |
| - | - | - | - | - | (75,801) | (115,468) |
| 2,821,145 | 16,370,888 | 6,060,529 | 11,025 | (68,514,366) | 31,956,261 | 310,858,015 |
| - | - | - | - | - | - | 16,942,799 |
| - | - | - | - | - | - | 3,556,442 |
| - | 1,008,138 | - | - | - | - | 1,008,138 |
| - | 1,161,346 | - | - | (1,161,346) | - | - |
| - | - | - | - | (1,000) | - | - |
| - | - | - | - | - | - | 58,045 |
| 3,109,206 | - | - | - | (3,109,206) | - | - |
| - | - | - | - | (17,564) | - | - |
| - | - | - | 6,300 | (6,300) | - | - |
| - | - | - | - | 3,037 | (20,022) | (16,985) |
| - | - | - | - | - | 2,550,207 | 2,550,207 |
| - | - | - | - | - | (2,223,548) | (2,223,548) |
| - | - | - | - | - | (607,591) | (607,591) |
| 5,930,351 | 18,540,372 | 6,060,529 | 17,325 | (72,806,745) | 31,655,307 | 332,125,523 |

# உரிமைத்துவ மாற்றங்கள் கூற்று - சபை

**2019 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கு**

(சகல தொகைகளும் இலங்கை ரூபா ஆயிரத்தில்)

| சபை | பங்களிப்பு மூலதனம் | மூலதன ஒதுக்கம் | மூலதனக் குறைப்பு ஒதுக்கம் | தேய்வு ஒதுக்கம் | சுய காப்புறுதி ஒதுக்கம் | நிறுத்திவைத்த உழைப்புக்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| **2018 திசெம்பர் 31 இல் மீதி (மீளமைத்த)** | 302,694,797 | 18,260,468 | 165,446 | 23,000 | 14,334,323 | 31,713,882 | 367,191,916 |
| ஆண்டிற்கான இலாப/ (நட்டம்) | - | - | - | - | - | (31,936,854) | (31,936,854) |
| காப்புறுதி ஒதுக்க நிதியத்திலிருந்தான வட்டி வருமானம் | - | - | - | - | 883,800 | - | 883,800 |
| சுய காப்புறுதி ஒதுக்கத்திற்கு மாற்றியது | - | - | - | - | 1,136,815 | (1,136,815) | - |
| ஆர்எச்சீபி செயற்திட்டம் | - | 77,188 | - | - | - | - | 77,188 |
| 2018 திசெம்பர் 31 இல் மீதி | 302,694,797 | 18,337,656 | 165,446 | 23,000 | 16,354,938 | (1,359,787) | 336,216,050 |
| காலப்பகுதியில் மேற்கொண்ட முன்னைய ஆண்டுச் சீராக்கம் | | | | | | (494,802) | (494,802) |
| **2019 சனவரி 01 இல் மீதி (மீளமைத்த)** | 302,694,797 | 18,337,656 | 165,446 | 23,000 | 16,354,938 | (1,854,589) | 335,721,248 |
| காலப்பகுதிக்கு இலாப/(நட்டம்) | - | - | - | - | - | (85,411,897) | (85,411,897) |
| காப்புறுதி ஒதுக்க நிதியத்திலிருந்தான வட்டி வருமானம் | - | - | - | - | 1,008,138 | - | 1,008,138 |
| உரிமைத்துவத்திற்கு கடன்களை மாற்றுதல் | 16,942,799 | - | - | - | - | - | 16,942,799 |
| புத்தளம் நிலக்கரிச் செயற்திட்டம் | 3,556,442 | - | - | - | - | - | 3,556,442 |
| பெறுமானத்தேய்வு ஒதுக்கத்திற்கு மாற்றியது | - | - | - | 1,000 | - | (1,000) | - |
| சுய காப்புறுதி ஒதுக்கத்திற்கு மாற்றியது | - | - | - | - | 1,161,346 | (1,161,346) | - |
| ஆர்எச்சீபி செயற்திட்டம் | - | 58,045 | - | - | - | - | 58,045 |
| **2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** | 323,194,038 | 18,395,701 | 165,446 | 24,000 | 18,524,422 | (88,428,832) | 271,874,775 |

பக்கங்கள் 108 முதல் 162 வரையிலுள்ள குறிப்புக்கள் நிதிக் கூற்றுக்களுடன் இணைந்த பகுதியாகும்.

# காசுப் பாய்ச்சல் கூற்று

**2019 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கு**

(சகல தொகைகளும் இலங்கை ரூபா ஆயிரத்தில்)

| | குழுமம் 2019 | குழுமம் 2018 | சபை 2019 | சபை 2018 |
|---|---|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து /(பயன்படுத்திய) காசுப் பாய்ச்சல்** | | | | |
| வரிக்கு முன்னர் இலாபம்/(நட்டம்) | (73,366,890) | (22,394,882) | (85,308,657) | (30,344,487) |
| **சீராக்கம்:** | | | | |
| ஆண்டிற்கான பெறுமானத்தேய்வு | 32,564,416 | 31,720,823 | 30,933,953 | 30,388,490 |
| பாவனையாளர் பங்களிப்பின் காலத்தேய்மானம் | (3,975,636) | (3,761,916) | (3,594,603) | (3,399,660) |
| அரசாங்க மானியம் மீதான காலத்தேய்மானம் | (20,531) | (20,531) | (14,718) | (14,718) |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் விற்பனை இலாபம்/(நட்டம்) | 13,234 | 205,730 | (3,131) | 194,929 |
| நிதிக் கிரயம் | 15,758,216 | 9,094,576 | 14,177,340 | 7,804,132 |
| பழுதடைந்த மற்றும் பயன்படுத்த முடியாத இருப்பு ஏற்பாடு | (12,887) | 144,035 | 61,228 | 94,137 |
| விலை முரண் ஏற்பாடு | (958,460) | (1,306,224) | (958,460) | (1,306,224) |
| கடன்பட்டோர் நட்டக்கடன் ஏற்பாடு | 1,657,181 | 506,140 | 938,432 | 484,293 |
| பதிவழித்த ஐயக் கடன் | 11,165 | 34,637 | 11,165 | 34,637 |
| மின்சார வாகன உயிர்ப்பித்தல் வருமானம் | (3,782) | - | (3,782) | - |
| கூட்டுத்தொழில் முயற்சி இலாப/(நட்டப்) பங்கு | 6,850 | 4,097 | - | - |
| கற்புலனாகச் சொத்துக்களின் காலத்தேய்மானம் | 39,722 | 22,140 | 19,823 | - |
| நிதி வருமானம் | (3,848,624) | (3,354,599) | (1,751,170) | (1,465,945) |
| பங்கிலாப வருமானம் | (8,609,571) | (2,590,424) | (2,746,968) | (2,273,532) |
| அந்நியச் செலாவணி இலாபம்/(நட்டம்) | 650,805 | (1,674,033) | - | - |
| பெறவேண்டிய நிதிக் குத்தகை மீதான வருமானச் சீராக்கம் | 887,365 | 1,143,933 | - | - |
| குறித்துரைத்த நலத் திட்டங்கள் | 1,299,692 | 1,216,239 | 1,106,619 | 1,038,358 |
| ஓய்வூதிய நிதியம் மீதான தனியாள் கிரயம் | 212,058 | (339,757) | 212,058 | (339,757) |
| முற்செலுத்திய பதவியினர் கிரயம் | 982,972 | - | 982,972 | 687,485 |
| **தொழிற்படு மூலதன மாற்றத்திற்கு முன்னர் செயற்பாட்டு இலாபம் இலாபம்/(நட்டம்)** | (36,712,705) | 8,649,984 | (45,937,899) | 1,582,138 |
| இருப்புக்களில் (அதிகரிப்பு)/குறைவு | (5,373,657) | (4,347,583) | (3,391,351) | (3,679,994) |
| வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவைகளின் (அதிகரிப்பு)/குறைவு | 611,495 | (9,173,846) | (1,798,544) | (8,503,837) |
| வியாபார மற்றும் ஏனைய செலுத்தவேண்டியவைகளின் (அதிகரிப்பு)/குறைவு | 63,078,675 | 6,582,480 | 64,076,630 | 2,034,688 |
| **செயற்பாடுகளிலிருந்து உருவான காசு** | 21,603,808 | 1,711,035 | 12,948,836 | (8,567,005) |
| செலுத்திய நிதிக் கிரயம் | (12,190,937) | (9,082,145) | (10,610,061) | (7,791,701) |
| ஓய்வூதிய நிதியக் கடப்பாடுகள் | (1,045,981) | (869,620) | (938,612) | (823,970) |
| செலுத்திய வருமான வரி | (2,543,303) | (2,059,527) | (39,529) | - |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து /(பயன்படுத்திய) தேறிய காசுப் பாய்ச்சல்** | 5,823,587 | (10,300,257) | 1,360,634 | (17,182,676) |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து /(பயன்படுத்திய) காசுப் பாய்ச்சல்** | | | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கொள்வனவும் மூலதன முடிவுறா வேலைகளும் | (69,395,632) | (57,333,643) | (66,868,244) | (55,028,051) |
| துணைக் கம்பனியொன்றிடமிருந்து பெறவேண்டிய நிதிக் குத்தகை கையேற்பு | (13,449,665) | (44,390) | - | - |
| கற்புலனாகாச் சொத்துக்களின் கையேற்றல் | (20) | (90,708) | - | - |
| காப்புறுதி ஒதுக்க நிதியத்தில் மீள் முதலீடு | (926,640) | (824,002) | (926,640) | (824,002) |
| காப்புறுதி ஒதுக்க நிதியத்திலிருந்து பெற்ற வட்டி | 1,008,138 | 832,939 | 1,008,138 | 832,939 |
| நிதிச் சொத்துக்களில் முதலீடு | 3,289,048 | (6,591,168) | - | - |
| கட்டுப்பாடற்ற வட்டியின் கையேற்பு | 2,569,179 | - | - | - |
| வெளிநாட்டு முதலீட்டு வருமானம் | (5,218) | - | - | - |
| பெற்ற பங்கிலாபம் | 8,609,571 | 2,590,423 | 2,636,334 | 1,978,872 |
| பெற்ற வட்டி | 2,864,461 | 2,666,167 | 767,007 | 777,041 |
| நிலையான சொத்து கைதவிர்த்தல் காசு சேகரிப்பு | 7,541 | 46,419 | 3,131 | 37,404 |
| செலுத்திய பங்கிலாபம் | (2,825,529) | (3,184,309) | - | - |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து /(பயன்படுத்திய) தேறிய காசுப் பாய்ச்சல்** | (68,254,766) | (61,932,272) | (63,380,274) | (52,225,797) |
| **நிதியீட்டல் நடவடிக்கைகளிலிருந்து /(பயன்படுத்திய) காசுப் பாய்ச்சல்** | | | | |
| பங்களித்தல் மூலதனப் பெறுவனவு | 8,534,901 | 9,449,113 | 7,953,334 | 8,821,722 |
| மின்சார வாகன ஈ-அட்டை கொடுப்பனவுகள் | 4,458 | 429 | 4,457 | 428 |
| ஆர்எச்சீபி செயற்திட்டத்திற்காக கிடைத்த நிதி | 58,045 | 77,188 | 58,044 | 77,188 |
| பாவனையாளர் வைப்பு - மீளளிக்கத்தக்க | (205,990) | (238,049) | (205,990) | (238,049) |
| பெற்ற பாவனையாளர் வைப்புக்கள் | 908,773 | 992,490 | 908,772 | 992,490 |
| குத்தகைக் கடன்கொடுத்தோர்/(குத்தகைக் கொடுப்பனவு) தேறிய அசைவு | (16,917) | (61,904) | (107,645) | (61,904) |
| வட்டிக் கடன்கள் மற்றும் ஏனைய பெறுகைகள் | 124,553,253 | 87,375,002 | 111,822,169 | 83,767,342 |
| வட்டிக் கடன்கள் மற்றும் ஏனைய பெறுகைகளை மீளளித்தல் | (74,819,796) | (23,188,489) | (62,299,277) | (19,970,497) |
| முன்னுரிமைப் பங்கு வழங்கலால் கிடைத்த காசு | - | 2,991,520 | - | - |
| முன்னுரிமைப் பங்குகளை மீட்புச் செய்தல் | (679,297) | (3,195,407) | - | - |
| **நிதியீட்டல் நடவடிக்கைகளிலிருந்து/(பயன்படுத்திய) தேறிய காசுப் பாய்ச்சல்** | 58,337,430 | 74,201,893 | 58,133,864 | 73,388,720 |
| **காசினதும் காசுக்கு சமமானவற்றினதும் தேறிய அதிகரிப்பு/(குறைவு)** | (4,093,749) | 1,969,364 | (3,885,776) | 3,980,247 |
| **ஆண்டின் ஆரம்பத்தில் உள்ளவாறு காசும் காசுக்கு சமமானவைகளும்** | (3,961,167) | (5,930,531) | (5,426,611) | (9,406,858) |
| **ஆண்டின் இறுதியில் உள்ளவாறு காசும் காசுக்கு சமமானவைகளும்** | (8,054,916) | (3,961,167) | (9,312,387) | (5,426,611) |

பக்கங்கள் 108 முதல் 162 வரையிலுள்ள குறிப்புக்கள் நிதிக் கூற்றுக்களுடன் இணைந்த பகுதியாகும்.

# நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள்

2019 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கு

## 1.0 கூட்டிணைப்புத் தகவல்கள்

### 1.1 பொதுவானது

இலங்கை மின்சார சபையானது 1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டது. சபையின் தலைமை பணிமனை இல 50. சேர் சிற்றம்பலம் காடினர் மாவத்தை, கொழும்பு 02 இல் அமைந்துள்ளது.

### 1.2 பிரதான செயற்பாடுகளும் தொழிற்பாடுகளின் தன்மையும்

சபை

மின்சாரத்தின் பிறப்பாக்கம், கொள்வனவு,மின்பரிமாற்றம், விளைவுதிறனான விநியோகம் மற்றும் விற்பனை போன்றன இந்த ஆண்டின்போது சபையின் பிரதான செயற்பாடுகளாக காணப்பட்டன.

சபையின் துணைக் கம்பனிகளினதும் கூட்டுத்தொழில் முயற்சியினதும் பிரதான செயற்பாடுகள் கீழ்வருமாறு:

#### 1.2.1 துணைக் கம்பனிகள்

அ) வரையறுக்கப்பட்ட லங்கா மின்சார (தனி) கம்பனி

இலங்கை மின்சார சபையிலிருந்து மின்சாரத்தை கொள்வனவு செய்து காலி, களுத்துறை, மொறட்டுவை, களனி, நுகேகொடை, கோட்டே மற்றும் நீர்கொழும்பில் அமைந்துள்ள கம்பனியின் கிளைகள் ஊடாக, வீட்டு மற்றும் கைத்தொழில் வாடிக்கையாளருக்கு சில்லறையாக விற்பனை செய்வதே இந்த ஆண்டில் கம்பனியின் பிரதான செயற்பாடுகளாக காணப்பட்டன.

ஆ) வரையறுக்கப்பட்ட LTL ஹோல்டிங்ஸ் (தனி) கம்பனி

மின் மாற்றிகளின் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி மற்றும் கூட்டிணைவு வியாபார இலக்குகளைஅடைந்துகொள்ளும் பொருட்டு குழும கம்பனிகளில் முதலீட்டுச் செயற்பாடுகளில் ஈடுபடல் என்பன இந்த ஆண்டில் கம்பனியின் பிரதான செயற்பாடுகளாக காணப்பட்டன.

இ) வரையறுக்கப்பட்ட லங்கா நிலக்கரி (தனி) கம்பனி

புத்தளம் மாவட்டத்திலுள்ள லக்விஜய நிலக்கரி மின்வலு ஆலையில் மின்வலு பிறப்பாக்கத்திற்காக உயர்தரமான, குறைந்த கந்தக நிலக்கரியினை வழங்குதல்.

ஈ) வரையறுக்கப்பட்ட சிறீலங்கா எனர்ஜீஸ் (தனி) கம்பனி

மின்சார பரிமாற்ற வழிகள் மற்றும் கட்டக நிலையங்களை (grid stations) நிருமானித்தல், புதுப்பிக்கக்கூடிய மின்திட்டங்கள் மற்றும் மின்சக்தி பிறப்பாக்கத்திற்கு அவசியமான வேலைகளின் நிருமானம், பராமரிப்பு மற்றும் தொழிற்பாடு, அத்துடன் புதுப்பிக்கக் கூடிய மின் அபிவிருத்திக்கு அவசியமான செயற்பாடுகளில் ஈடுபடுதல் ஆகியவைகம்பனியின் பிரதான செயற்பாடுகள் ஆகும்.

#### 1.2.2. கூட்டுத்தொழில் முயற்சி

வரையறுக்கப்பட்ட திருகோணமலை மின்வலு கம்பனி

இலங்கை மின்சார சபையின் தேசிய கட்டகத்திற்கு மின் சக்தியை பிறப்பித்து விற்பனை செய்தலே கம்பனியின் பிரதான செயற்பாடாகும்.

### 1.3 தாய்க் கம்பனி மற்றும் சபையின் இறுதியான தாய்க் கம்பனி

சபையானது மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சின் கீழ் இயங்குகின்றது. பணிப்பாளர்களின் அபிப்பிராயத்தின் படி, சபையின் இறுதியான தாய்க் கம்பனியும் கட்டுப்பாட்டு அதிகாரியுமாக இலங்கை அரசாங்கம் காணப்படுகின்றது.

### 1.4 வெளியிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட திகதி

2019 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலங்கை மின்சார சபையின் நிதிக் கூற்றுக்களை, பணிப்பாளர் சபையின் தீர்மானத்திற்கு அமைவாக 2020.09.22 ஆந் திகதி வழங்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்டது.

## 2.0 தயாரிப்பு அடிப்படையும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளும்

### 2.1 தயாரிப்பின் அடிப்படை

குழுமத்தின் ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தால் வழங்கப்பட்ட, SLFRS/LKAS (இதனகத்துப் பின்னர் "SLFRS") இனை உள்ளடக்கியதாக இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய தயாரிக்கப்பட்டுள்ளது.

நிதிக்கூற்றுக்கள் அட்டுறு அடிப்படையில் வரலாற்றுக் கிரய எண்ணக்கருவின்படி தயாரிக்கப்பட்டுள்ளது.

SLFRS /LKAS க்கு அமைவாக நிதிக்கூற்றுக்களை தயாரிக்கையில் சில கடினமான கணக்கீட்டு மதிப்பீடுகள் உபயோகிக்கப்படுவதனை தேவைப்படுத்துகின்றது. அத்துடன், கணக்கீட்டுக் கொள்கைகளை பிரயோகிக்கையில் முகாமை அதன் சுயதீர்ப்புக்களை மேற்கொள்வதனையும் தேவைப்படுத்துகின்றது. உயர்ந்த மட்ட சுயதீர்ப்பு சம்பந்தப்பட்ட அல்லது சிக்கலான விடயங்கள் அல்லது எடுகோள்களும் மதிப்பீடுகளும் நிதிக்கூற்றுக்களுக்கு கணிசமானதாக அமையும் விடயங்கள் வெளிக்காட்டப்படுகின்றன.

#### 2.1.1 இணக்கப்பாட்டு அறிக்கை

இலாபம் அல்லது நட்டக்கூற்று, முற்றுமடங்கிய வருமானக் கூற்று, நிதி நிலைமைக் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் கணக்கீட்டுக் கொள்கைகளுடனும் குறிப்புக்களுடனும் கூடிய குழுமத்தின் ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் ("நிதிக்கூற்றுக்கள்") இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு (SLFRS/LKAS) இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன.

#### 2.1.2 ஒப்பீட்டுத் தகவல்கள்

கணக்கீட்டுக் கொள்கைகள் LKAS 01 - நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல் என்பதற்கு இணங்க மாறாத்தன்மையில் குழுமத்தினால் பிரயோகிக்கப்பட்டுள்ளன. அத்தகைய கணக்கீட்டுக் கொள்கைகள் முன்னைய ஆண்டுகளில் பிரயோகிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளை ஒத்தனவாகும்.நடப்பாண்டுடன் ஒப்பிடக்கூடிய விதத்தில் சிறந்த சமர்ப்பித்தலை உறுதிப்படுத்துவதற்காக தேவையான இடங்களில் முன்னைய காலப்பகுதியின் தொகைகளும் குறிப்புக்களும் மீளமைக்கப்பட்டு வகைப்படுத்தப்பட்டுள்ளன.

#### 2.1.3 ஒன்றித்தலின் அடிப்படை

இலங்கை மின்சார சபையினதும் (இ.மி.ச) அதன் துணைக் கம்பனிகளினதும் ("குழுமம்") 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை குழுமத்தின் நிதிக்கூற்றுக்கள் உள்ளடக்குகின்றன. துணைக் கம்பனிகளின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

# நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் (தொடர்ச்சி)

**2019 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கு**

| துணைக் கம்பனியின் பெயர் | கூட்டிணைக்கப்பட்ட நாடு | பிடிப்பு விகிதாசாரம் |
|---|---|---|
| வரையறுக்கப்பட்ட LTL ஹோல்டிங்ஸ் (தனி) கம்பனி | இலங்கை | 63% |
| வரையறுக்கப்பட்டலங்கா மின்சார (தனி) கம்பனி (LECO) | இலங்கை | 55.2% |
| வரையறுக்கப்பட்டலங்கா நிலக்கரி (தனி) கம்பனி (LCC) | இலங்கை | 60% |
| வரையறுக்கப்பட்டசிறீ லங்கா எனர்ஜீஸ் (தனி) கம்பனி | இலங்கை | 100% |
| **துணைக் கம்பனியின் பெயர்** | **கூட்டிணைக்கப்பட்ட நாடு** | **பிடிப்பு விகிதாசாரம்** |
| திருகோணமலை மின்வலு கம்பனி லிமிடட் (TPCL) | இலங்கை | 50% |

வரை. ஏல்ரீஎல் ஹோல்டிங் (தனியார்) கம்பனியின் பின்வரும் உப துணைக் கம்பனிகள் இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டுள்ளன.

| துணைக் கம்பனியின் பெயர் | கூட்டிணைக்கப்பட்ட நாடு |
|---|---|
| பிரைட் இன்டர்நெஷனல் பிரைவட் லிமிடட் | சிங்கப்பூர் |
| ராஜ் லங்கா பவர் கொம்பனி லிமிடட் | வங்காலதேசம் |
| லக்தனவி பங்லா பவர் கம்பனி லிமிடட் | வங்காலதேசம் |
| மகரிகாட் ஹைட்ரோபவர் பிரைவட் லிமிடட் | நேபாளம் |
| ஆசியாரிக் இலக்ரிகல் ருசுவிட்ச்கியர் பிரைவட் லிமிடட் | இந்தியா |
| ∴பர்னிலங்கா பவர் லிமிடட் | வங்காலதேசம் |

இலங்கை மின்சார சபை, LECO, வரையறுக்கப்பட்ட லங்கா நிலக்கரி (தனி) கம்பனி மற்றும் வரையறுக்கப்பட்ட இலங்கை எனர்ஜீஸ் (தனி) கம்பனி ஆகியவை 31 டிசம்பரில் முடிவடையும் ஆண்டை பொதுவான நிதியாண்டாகவும், வரையறுக்கப்பட்ட LTL ஹோல்டிங்ஸ் (தனி) கம்பனி மார்ச் 31 இல் முடிவடையும் ஆண்டை பொதுவான நிதியாண்டாகவும் கொண்டுள்ளன. எனினும், குறிப்பிட்ட கம்பனிகளின் கணக்காய்வாளர்கள் சான்றுபடுத்திய நிதிக்கூற்றுக்கள் குழுமத்தின் ஒன்றித்த நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு ஏதுவாக தயாரிக்கப்பட்டுள்ளன.

துணைக்கம்பனிகளின் மொத்த இலாப, நட்டம் ஒன்றித்த வருமானக் கூற்றில் உட்படுத்தப்பட்டு உள்ளதுடன், வெளிவாரி பங்குதாரர்களுக்கு உரிய வரிக்குப் பிந்திய இலாப, நட்டமானது இலங்கை மின்சார சபையின் பங்குதாரர்களுக்கு உரிய இலாப, நட்டத்தை கணித்தலில் “சிறுபான்மையினர் ஆர்வம்” என்ற தலைப்பின் கீழ் செம்மையாக்கம் செய்யப்பட்டுள்ளது.

சபை மற்றும் அதன் உபகம்பனிகளின் சகல சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஒன்றித்த நிதி நிலைமைக் கூற்றில் உட்படுத்தப்பட்டுள்ளன. உப கம்பனிகளின் நிகரச் சொத்துக்களில் வெளிவாரி பங்குதாரர்களின் நாட்டம் ஒன்றித்த நிதி நிலைமைக் கூற்றில் கட்டுப்படுத்தப்படாத வரி என்ற தலைப்பின் கீழ் வேறாக காட்டுப்பட்டுள்ளது. ஒன்றித்த நிதிக்கூற்றுக்களை தயாரித்தலில் குழுமக் கம்பனிகளுக்கு இடையிலான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் மீதிகளும் குழுமக் கம்பனிகளுக்கு இடையேயான கொடுக்கல் வாங்கல்களின் விளைவும் தேறாத இலாபங்களும் நீக்கப்பட்டுள்ளன.

கட்டுப்பாட்டை இழக்காது, துணைக் கம்பனியொன்றில் உரிமைநாட்ட மாற்றம், ஒரு உரிமையாண்மை கொடுக்கல் வாங்கலாக கொள்ளப்பட்டு கணக்கில் பதிவு செய்யப்பட்டுள்ளது. குழுமம் துணைக் கம்பனிமீதான கட்டுப்பாட்டை இழக்கும்பட்சத்தில் அது:

- துணைக் கம்பனியின் சொத்துக்கள் (நன்மதிப்பு உட்பட) மற்றும் பொறுப்புக்களை அங்கீகரிக்காதிருக்கும்.
- கட்டுப்பாடற்ற ஆர்வம் ஏதுமிருப்பின் அதன் முன்கொணரற் தொகையை அங்கீகரிக்காதிருக்கும்.
- உரிமையாண்மையில் பதிவு செய்யப்பட்ட திரண்ட நாணயமாற்று வித்தியாசங்களை அங்கீகரிக்காதிருக்கும்.
- சந்தைப் பெறுமதிகளை கவனத்திற் கொண்டு பெறப்பட்ட சந்தைப் பெறுமதியை அங்கீகரிக்கும்.
- தொடர்ந்து வைத்திருக்கும் முதலீடு ஏதுமிருப்பின், அதன் சந்தைப்பெறுமதியை அங்கீகரிக்கும்.
- மிகை அல்லது பற்றாக்குறை ஏதுமிருப்பின் அதனை இலாப, நட்டத்தில் அங்கீகரிக்கும்.
- முன்னர் ஏனைய முற்றுமடங்கிய வருமானத்தில் அங்கீகரித்த கூறுகளின் மேன்னிலை உரிமத்தின் பங்கினை பொருத்தமான வகையில் இலாப, நட்டத்தில் அல்லது நிறுத்திவைக்கப்பட்ட உழைப்புக்களில் மீள்வகைப்படுத்தும்.

ஒன்றிணைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் குழுமத்தினதும் அதன் துணைக் கம்பனிகளினதும் 2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களை உள்ளடக்கும். முதலீடு செய்யப்பட்டவர்களுடனான ஈடுபாடுகளிலிருந்து பல்வேறு திரும்பல்களை தொகுதி வெளிப்படுத்துகின்ற போதும் அல்லது உரிமையைக் கொண்டுள்ள போதும் முதலீடு செய்யப்பட்டவர்களின் மீது அதன் வலுவின் ஊடாக அத் திரும்பல்கள் மீது தாக்கம் செலுத்துவதற்கு ஆற்றல் உள்ளபோதும் கட்டுப்பாடு அடையப்படுகின்றது. விசேடமாக, குழுமக் கட்டுப்பாடுகள் மற்றும் முதலீடு செய்யப்பட்டவர்கள் இருப்பின்,குழுமம்:

- முதலீடு செய்யப்பட்டவர்கள்மீது வலுவைக் கொண்டிருக்கும். (அதாவது: முதலீடு செய்யப்பட்டவர்களின் தொடர்புடைய செயற்பாடுகளை நெறிப்படுத்துவதற்கு நடைமுறை ஆற்றலை தற்போதுள்ள உரிமைகள் வழங்கும்)
- முதலீடு செய்யப்பட்டவர்களுடனான அதன் ஈடுபாட்டிற்கு பல்வேறு திரும்பல்களிற்கான வெளிப்படுத்தல் அல்லது உரிமைகள்.
- முதலீடு செய்யப்பட்டவர் மீது அவர்களது திரும்பல்கள் மீது தாக்கம் செலுத்துவதற்கான இயலுமை அல்லது அதன் அதிகாரங்கள்

பொதுவாக கட்டுப்பாட்டின் விளைவாகவே வாக்களித்தல் உரிமைகளில் அதிகமானவை தோன்றுகின்றது. இந்த தோன்றலுக்கு உதவுவதற்காகவும் குழுமம் வாக்களித்தலில் பெரும்பான்மைக்கு குறைவாக கொண்டிருக்கின்ற அல்லது முதலீடு செய்யப்பட்டவர்களின் ஒத்த உரிமை காணப்படுகின்ற போதும் அதற்கு முதலீடு செய்யப்பட்டவர்கள் மீது அதிகாரம் உள்ளதா என்பதனை மதிப்பிடுவதற்காக பின்வருவன உள்ளடங்கலாக அந்த சகல தொடர்புடைய விடயங்களையும் நிலமைகளையும் குழுமம் கருத்திற்கொள்கின்றது.

- முதலீடு செய்யப்பட்டவர்களின் ஏனைய வாக்குரிமை கொண்டுள்ளவர்களுடன் ஒப்பந்த ரீதியான ஏற்பாடுகள்
- ஏனைய ஒப்பந்தரீதியான ஏற்பாடுகளிலிருந்து எழுகின்ற உரிமைகள்
- குழுமத்தின் வாக்களித்தல் உரிமைகள் மற்றும் எதிர்கால வாக்களித்தல் உரிமைகள்

# நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் (தொடர்ச்சி)

**2019 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கு**

மூன்று கட்டுப்பாட்டுக் கூறுகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவற்றில்மாற்றங்களைக் காட்டுகின்ற நிலைமைகள் காணப்படுமாயின் உண்மையில் முதலீடு செய்யப்பட்டவர்கள் மற்றும் கட்டுப்பாடுகள் உள்ளனவா அல்லது இல்லையா என்பதனை குழுமம் மீள்மதிப்பீடு செய்யும். துணைக் கம்பனிகள் மீது கட்டுப்பாட்டினை குழுமம் பெறுகின்றபோதே துணைக் கம்பனிகளின் ஒன்றிணைத்தல் இடம் பெறுவதுடன் துணைக் கம்பனியின் மீதான கட்டுப்பாட்டை குழுமம் இழக்கின்ற போது அது கைவிடப்படுகின்றது. ஆண்டின் போது துணைக் கம்பனியொன்றின் ஈட்டுதல் அல்லது கைதவிர்த்தலின் சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினம் என்பன துணைக் கம்பனியின் கட்டுப்பாட்டை குழுமம் ஈட்டிய திகதியிலிருந்து குழுமம் கட்டுப்பாட்டை இழக்கும் வரை ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படுகின்றது.

இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய முற்றுமடங்கிய வருமானத்தின் (ஓசீஐ) ஒவ்வொரு கூறும் இதன் விளைவாக கட்டுப்பாடற்ற ஆர்வத்தில் பற்றாக்குறை மீதி ஏற்படினும் குழுமத்தின் தாய்க் கம்பனியின் உரிமை பங்குதாரர்களுக்கும் கட்டுப்பாடற்ற ஆர்வமுள்ளவர்களிற்கும் பகிர்ந்தளிக்கப்படுகின்றது. கூட்டிணைப்பின் நிமித்தம் குழுமம் முற்றாக இல்லாதொழிகையில் அங்கத்தவர்களிடையிலான கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்புடைய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், உரிமைத்துவம், வருமானம், செலவினம் மற்றும் காசுப்பாய்ச்சல்கள் அவசியமானவிடத்து நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்படுகின்றது. கட்டுப்பாடொன்றின் இழப்பில்லாத துணைக் கம்பனியின் உரிமைத்துவ ஆர்வத்திலான மாற்றம் உரிமைத்துவக் கொடுக்கல் வாங்கலொன்றாக பதிவுசெய்யப்படுகின்றது.

துணைக்கம்பனி ஒன்றின் மீதான கட்டுப்பாட்டை குழுமம் இழக்குமாயின் தொடர்புடைய சொத்துக்கள் (நன்மதிப்பு உள்ளடங்கலாக), பொறுப்புக்கள், கட்டுப்பாடற்ற ஆர்வம் மற்றும் உரிமைத்துவத்தின் ஏனைய கூறுகள் அங்கீகரிக்கப்படுவதுடன் இலாப நட்ட விளைவுகள் ஏதுமிருப்பின் இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது. தொடர்ந்தும் காணப்படுகின்ற எவையேனும் முதலீடுகள் சந்தை பெறுமதியில் அங்கீகரிக்கப்படுகின்றன

### 2.1.4 தொடர்ந்தியங்கும்எண்ணக்கரு

தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவின்படி குழுமத்தின் தொடர்ந்தியங்கு நிலை மதிப்பீடொன்றை பணிப்பாளர்கள் மேற்கொண்டதுடன் பின்வருன தவிர்த்து வியாபாரத்தை கலைப்பதற்கு அல்லது இடைநிறுத்துவதற்கான எதிர்பார்ப்பை அவர்கள் கொண்டிருக்கவில்லை.

**தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு - வரையறுக்கப்பட்ட ஹெலதனவி கம்பனி**

ஹெலதனவி கம்பனிக்கும் இலங்கை மின்சார சபைக்கும் இடையே 2009 மே 09 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்டுள்ள மின்சார கொள்வனவு உடன்படிக்கை 2014 டிசம்பர் 08 ஆம் திகதி காலாவதியாகின்றது. உடன்படிக்கை காலாவதியானதன் பின்னர் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமை தொடர்பில் நிறுவனத்தின் பார்வையில் பொருண்மையான நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றது.

அறிக்கை திகதியில் உள்ளவாறான தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவின் படியான நிறுவனததின் தொடர்ந்தியங்கும் ஆற்றல் பணிப்பாளர்கள் அவர்கள் தீர்மானித்தார்கள் தொடர்ந்தியங்கம் எண்ணக்கருவிற்கு அமைய நிறுவனத்தின் தொடர்ந்தியங்கம் இயலுமை மீது குறிப்பிடத்தக்க அளவு சந்தேகம் காணப்பட்டுவதனை அவர்கள் தீர்மானித்தார்கள். ஆகையாயுல் தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு வரையறுக்கப்பட்ட ஹெலதனவியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதில் பொருத்தமானதாக காணப்படவில்லை.

**தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு - லங்கா இன்டஸ்ட்ரியல் புரடக்கஸன் இன்ஜினியரிங் தனியார் கம்பனி**

2015 நவம்பர், 01 ஆம் திகதியில் இருந்து செயல்வலுப்பெறும் வண்ணம் அதன் இயக்கப்பாட்டை முடிவுருத்துவதற்கு பணிப்பாளர்கள் தீர்மானித்தார்கள் அத்துடன் அதன் இயக்கப்பாட்டை எல்.ரி.எல் ட்ரான்ஸ்போர்மஸ் தனியார் கம்பனிக்கு மாற்றுவதற்கு தீர்மானித்தார்கள் ஆகவே, தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவானது லங்கா இன்டஸ்ட்ரியல் புரடக்சன் இன்ஜினியரிங் பிரைவட் லிமிடட்டினது நிதிக்கூற்றுக்களை தயாரிக்கையில் பொருந்தவில்லை

## 2.2 முக்கியத்துவம்வாய்ந்த கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு

### 2.2.1 கூட்டுக் கட்டுப்பாட்டு நிறுவகம்

கூட்டுத்தொழில் முயற்சி என்பது கூட்டாக ஒழுங்குபடுத்தும் கட்டுப்பாட்டினைக் கொண்டுள்ள தரப்பினர்களின் கூட்டுத்தொழில் முயற்சிக்கான தேறிய சொத்துக்களை வைத்துள்ள ஒரு கூட்டு ஒழுங்குமுறையாகும். கூட்டுக் கட்டுப்பாடென்பது ஏற்பாடொன்றின் கட்டுப்பாட்டினை பங்கிடுவதற்கான ஒப்பந்தரீதியான இணக்கப்படாகும். தொடர்புடைய செயற்பாட்டுகளின் தீர்மானத்தின் போது கட்டுப்பாட்டினை பங்கிடும் தரப்பினர்களின் கருத்து தேவையாயிருப்பின் மாத்திரம் இவ்விணக்கப்பாடு காணப்படும். திருகோணமலை பவர் கம்பனி லிமிடட் ஆனது இலங்கை மின்சார சபைக்கும் வேீஊ லிமிடட் இற்கும் இடையே கூட்டாக கட்டுப்படுத்தப்படுகின்றதோர் நிறுவகமாகும். கூட்டுக் கட்டுப்பாட்டினை நிச்சயிப்பதில் மேற்கொள்ளப்பட்ட கருதுகோள்கள் துணைக் கம்பனிகளின் மீதான கட்டுப்பாட்டினை நிச்சயிப்பதற்கு தேவையானவற்றை ஒத்திருந்தன.

அதன் கூட்டுத்தொழில்முயற்சி மீதான சபையினது முதலீடு, உரிமைத்துவ முறையினைப் பயன்படுத்தி கணக்கீடு செய்யப்படுகின்றது. உரிமைத்துவ முறையின் கீழ், கூட்டுத்தொழில் முயற்சி ஒன்றின் மீதான முதலீடு, ஆரம்பத்தில் கிரயத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது. முதலீட்டின் முன்கொண்டுசெல் தொகை,கையேற்கப்பட்ட திகதியிருந்து கூட்டுத்தொழில்முயற்சியினது தேறிய சொத்துக்களில் சபையின் பங்கில் மாற்றங்களை அங்கீகரிப்பதற்காக சீராக்கப்படுகின்றது. கூட்டுத்தொழில் முயற்சியுடன் தொடர்புடைய நன்மதிப்பு, முதலீட்டின் முன்கொண்டு சென்ற தொகையில் உள்ளடக்கப்படுவதுடன் அது தனிப்பட்ட ரீதியில் காலத்தேய்மானத்திற்காக சோதிக்கப்படுவதில்லை. இலாபம் அல்லது நட்டக் கூற்று, கூட்டுத் தொழில் முயற்சியினது செயற்பாட்டு விளைவுகளின் சபையின் பங்கைப் பிரதிபலிக்கின்றது. முதலீடு மேற்கொள்ளப்படவரின் OIC இலான ஏதேனும் மாற்றம் சபையினது OIC இன் பகுதியாக முன்னிலைப்படுத்தப்படுகின்றது.

அத்துடன், மாற்றமொன்று நேரடியாக கூட்டுத்தொழில் முயற்சியினது உரிமைத்துவத்தில் அங்கீகரிக்கப்பட்டிருக்கையில், அது பிரயோகிக்கத் தக்கதாக இருப்பின் எந்தவொரு மாற்றத்தினையும் உரிமைத்துவ மாற்றக் கூற்றிலுள்ள அதனது பங்கில் சபை அங்கீகரிக்கின்றது. சபைக்கும் கூட்டுத் தொழில் முயற்ச்சிக்கும் இடையிலான கொடுக்கல் வாங்கல்களிலிருந்தான தேறப்படாத ஆதாயங்கள் மற்றும் நட்டங்கள், கூட்டுத்தொழில் முயற்சியின் ஆர்வத்திலிருந்து நீக்கப்படுகின்றது. கூட்டுத்தொழில் முயற்சியொன்றின் இலாபம் அல்லது நட்டத்தில் சபைக்குரிய மொத்தப் பங்கானது இலாபம் அல்லது நட்டக் கூற்றின் முகப்பில் செயற்பாட்டு இலாபமல்லாது காண்பிக்கப்படுவதுடன் வரிக்குப் பிந்திய இலாபம் அல்லது நட்டத்திலும் கூட்டுத்தொழில் முயற்சியின் மீதான கட்டுப்பாடற்ற ஆர்வங்களிலும் பிரிதிபலிக்கின்றது.

# நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் (தொடர்ச்சி)

**2019 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கு**

### 2.2.2. அந்நியச் செலாவணி கொடுக்கல் வாங்கல்கள்

அ) தொழிற்பாட்டு மற்றும் சமர்ப்பித்தல் நாணயம்

நிதிக்கூற்றுக்களில் உட்படுத்தப்பட்ட உருப்படிகள் நிறுவனத்தின் தொழிற்படும் முதன்மைப் பொருளியற் சூழலின் நாணயத்தை (தொழிற்பாட்டு நாணயம்) உபயோகித்து அளவிடப்பட்டுள்ளது. நிதிக்கூற்றுக்கள் நிறுவனத் தொழிற்பாட்டு சமர்ப்பித்தல் நாணயமான இலங்கை ரூபாவில் முன்னிலைப்படுத்தப்பட்டன.

**ஆ) கொடுக்கல் வாங்கல்களும் மீதிகளும்**

அந்நியச் செலாவணி கொடுக்கல் வாங்கல்களை ஆரம்பத்தில் கொடுக்கல் வாங்கல் திகதியில் நிலவும் நாணயமாற்று விகிதங்களை உபயோகித்து சபை பதிவு செய்யும். அத்தகைய கொடுக்கல் வாங்கல்களின் தீர்ப்பனவினால் மற்றும் அந்நியச் செலாவணியில்குறிப்பிட்ட சொத்துக்கள்,பொறுப்புக்களை ஆண்டு இறுதி நாணயமாற்று விகிதங்களில் நாணயமாற்றம் செய்வதனால் விளையும் இலாபங்கள் அல்லது நட்டங்கள் முற்றுமடங்கிய வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

1969 ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க இலங்கை மின்சார சபை சட்டத்தின் 42 ஆம் பிரிவின் 6 ஆம் உபபிரிவுக்கு அமைவாக அந்நியச் செலாவணிக் கடன் மற்றும் வட்டி தொடர்பில் நாணயமாற்று ஏற்றத் தாழ்வுகளினால் ஏற்படும் இலாபங்கள் அல்லது நட்டங்கள் இலங்கை அரசாங்கத்திற்கு உரியதாகையினால் இலங்கை மின்சார சபை அவற்றை கருத்திற் கொள்வதில்லை. சென்மதியாகவுள்ள கடன் நிலுவைகள் ஊடூடீ யினால் கடன் பெறப்பட்டபோது இணங்கப்பட்ட நாணயமாற்று விகிதத்தில் மதிப்பிடப்பட்டுள்ளன.

**இ) வெளிநாட்டு தொழிற்பாடுகள்**

வெளிநாட்டு தொழிற்பாடான வெளிநாட்டிலுள்ள உபகம்பனியின் நிதிநிலைமைக் கூற்று மற்றும் முற்றுமடங்கிய வருமானக் கூற்று ஆகியன குழுமத்தின் சமர்ப்பித்தல் நாணயத்திற்கு கீழே கூறப்பட்டவாறு நாணயமாற்றம் செய்யப்படும்: சொத்துக்களும் பொறுப்புக்களும் ஐந்தொகைத் திகதி அன்று உள்ளவாறு நிலவிய நாணய மாற்று விகிதத்தில்

- அந்நியச் செலாவணியில் அளவிடப்படும் பணம்சாரா உருப்படிகளின் சந்தைப் பெறுமதி நிர்ணயிக்கப்பட்ட தினத்தில் நிலவிய நாணயமாற்று விகிதத்தினை பயன்படுத்தி சந்தைப் பெறுமதிக்கு நாணயமாற்றம் செய்யப்படும்.
- வருமானமும் செலவுகளும் அக்காலப்பகுதியின் சராசரி நாணய மாற்று விகிதத்தில். இந்தச் சராசரி விகிதம் கொடுக்கல் வாங்கல் நடந்த திகதியில் நிலவிய விகிதத்திற்கு நியாயமான அண்ணளவாக்கமாக இல்லாதவிடத்து, வருமானமும் செலவுகளும் கொடுக்கல் வாங்கல் திகதியில் நிலவிய நாணயமாற்று விகிதத்தில்.
- நாணயமாற்றத்தின் காரணமாக ஏற்படும் நாணயமாற்று வித்தியாசம் ஒன்றித்தலுக்காக ஏனைய முற்றுமடங்கிய வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படும்.

### 2.2.3 வரியீடு

**அ நடப்பு வரிகள்**

இக்காலப்பகுதிக்கான வரிச் செலவுகள் நடப்பு மற்றும் பிற்போடப்பட்ட வரிகளை கொண்டுள்ளன. மீளாய்வுகளுள் மற்றும் முன்னய காலப்பகுதிக்கான தற்போதைய வருமானவரிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திடமிருந்து அறவிட அல்லது அவருக்கு செலுத்தவேண்டிய தொகைகளில் மதிப்பிடப்பட்டுள்ளது. தொகைகளை கணிக்க உபயோகித்த வரி விகிதங்களும் வரிச் சட்டங்களும் கம்பனி தொழிற்பாட்டு வரிவிதி வருமானத்தை பிறப்பிக்கும் நாட்டில் அறிக்கையிடற் திகதியில் சட்டமாக்கியுள்ள அல்லது கிட்டத்தட்ட சட்டமாக்கிய சட்டங்களின் அடிப்படையில் அமைந்தவையாகும்.

பிற முற்றுமடங்கிய வருமானமாக அங்கீகரித்த வருமான அல்லது செலவு உருப்படியொன்று தொடர்புபட்ட மாற்றங்கள் நேரடியாக பிற முற்றுமடங்கிய வருமானக் கூற்றில் அங்கீகரிப்புச் செய்யப்படுவதைத் தவிர, வரிகள் முற்றுமடங்கிய வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படும். உரிமைத்துவத்தில் நேரடியாக அங்கீகரிக்கப்பட்ட விடயங்களுடன் தொடர்படைய நடப்பு வருமான வரி உரிமைத்துவத்தில் அங்கிகரிக்கப்படுகின்றதேயன்றி வருமானக் கூற்றுக்களில் அல்லை.

வருமான வரி ஏற்பாடானது நிதிக்கூற்றுக்களில் அறிக்கையிடப்பட்ட வருமான மற்றும் செலவின மூலகங்களின் அடிப்படையில் 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம் மற்றும் அதன் திருத்தங்களுக்கு அமைய கணிப்பிடப்பட்டுள்ளது.

**ஆ) பிற்போடப்பட்ட வருமான வரி**

பிற்போட்ட வருமான வரி சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் வரி அடிப்படைகளுக்கும் நிதிக் கூற்றுக்களில் அவற்றின் முன் கொண்டு செல்லப்படும் தொகைகளுக்கும் இடையில் ஏற்படும் சகல தற்காலிக வித்தியாசங்கள் மீது பொறுப்பு முறையை உபயோகித்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பிற்போடப்பட்ட வருமானவரிப் பொறுப்புக்கள்,வனிக இணைப்பாக அமையாத கொடுக்கல் வாங்கலொன்றில் அது கணக்கீட்டு இலாபத்தை அல்லது வரிவிதி இலாப நட்டத்தை பாதிக்காதபோது, சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களின் ஆரம்ப அங்கீகரிப்பின் போது ஏற்படும் பிற்போட்ட வருமான வரிப் பொறுப்பு நீங்கலாக சகல தற்காலிக வரிவிதி வித்தியாசங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

வனிக இணைப்பாக இல்லாததும் அது கணக்கீட்டு இலாபத்தை அல்லது வரிவிதி இலாப நட்டத்தை பாதிக்காததுமான கொடுக்கல் வாங்கலில் சொத்து அல்லது பொறுப்பின் ஆரம்ப அங்கீகாரத்திலிருந்து ஏற்படாத வரை, பயன்படுத்தாத வரிச் சொத்துகள் மற்றும் பயன்படுத்தாத வரி நட்டங்களின் முன்கொணரற் தொகைகளுக்கு, கழிக்கக்கூடிய தற்காலிக வித்தியாசங்கள், பயன்படுத்தாத வரிச் சொத்துகள் மற்றும் பயன்படுத்தாத வரி நட்டங்களின் முன்கொணரற் தொகைகளை பயன்படுத்த வரி விதி இலாபம் கிடைப்பது சாத்தியமான அளவுக்கு, சகல கழிக்கக்கூடிய தற்காலிக வித்தியாசங்கள், பயன்படுத்தாத வரிச் சொத்துகள் மற்றும் பயன்படுத்தாத வரி நட்டங்களின் முன்கொணரற் தொகைகளுக்கு பிற்போட்ட வருமானவரிச் சொத்து அங்கீகரிக்கப்படும்.

ஒவ்வொரு அறிக்கையிடற் திகதியிலும் பிற்போடப்பட்ட வருமான வரிச் சொத்துகளின் முன்கொணரற் தொகைகள் மீளாய்வு செய்யப்படுவதுடன், பிற்போட்ட வருமான வரிச் சொத்துக்களை முழுமையாக அல்லது பகுதியாக பயன்படுத்துவதற்கு போதிய வரிவிதி இலாபம் தொடர்ந்து கிடைக்காது போகும் அளவுக்கு அவை குறைக்கப்படும்.

துணைக் கம்பனிகளில், கூட்டுக் கம்பனிகளில் முதலீடுகள் மற்றும் கூட்டுத் தொழில்முயற்சிகளில் நாட்டங்கள் தொடர்புபட்ட வரிவிதிப்புக்கு உள்ளாகும் தற்காலிக வித்தியாசங்களைப் பொறுத்தமட்டில், தற்காலிக வித்தியாசத்தின் எதிர்ப்பதிவுக்கான கால அட்டவணையினை கட்டுப்படுத்தக்கூடியவை தவிர்ந்து, மற்றும் அது சாத்தியமானபோது, தற்காலிக

# நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் (தொடர்ச்சி)

2019 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கு

வித்தியாசங்கள் எதிர்வுகூறக்கூடிய எதிர்காலத்தில் எதிர்ப்பதிவு செய்யப்படமாட்டாது.

ஒவ்வொரு அறிக்கையிடற் திகதியிலும் அங்கீகரிக்கப்படாத பிற்போடப்பட்ட வருமான வரிச் சொத்துகள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டு, பிற்போட்ட வருமான வரிச் சொத்துக்களை மீட்பதற்கு போதிய வரிவிதி இலாபம் கிடைக்கும் அளவுக்கு அவை அங்கீகரிக்கப்படும்.

துணைக் கம்பனிகளில், கூட்டுக் கம்பனிகளில் முதலீடுகள் மற்றும் கூட்டுத் தொழில்முயற்சிகளில் நாட்டங்கள் தொடர்புபட்ட கழிக்கக்கூடிய தற்காலிக வித்தியாசங்களைப் பொறுத்தமட்டில் பிற்போடப்பட்ட வரிச்சொத்துக்கள், தற்காலிக வித்தியாசங்களை பயன்படுத்துவதற்கு வரிவிதி இலாபங்கள் கிடைத்து, எதிர்வுகூறக்கூடிய எதிர்காலத்தில் அது எதிர்ப்பதிவு செய்யக்கூடிய அளவுக்கு மாத்திரம் அங்கீகரிக்கப்படும்.

பிற்போட்ட வருமானவரிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் அறிக்கைத் திகதியில் உள்ளவாறு சட்டமாக்கப்பட்டு அல்லது கணிசமாக சட்டமாக்கப்பட்டு இருந்த வரி விகிதங்களின் (மற்றும் வரிச் சட்டங்களின்) அடிப்படையில் சொத்து தேறப்பட்ட அல்லது பரிப்பு தீர்க்கப்பட்ட ஆண்டில் பிரயோகிக்கவென எதிர்பார்க்கும் வரிவிகிதங்களில் அளவிடப்படும். கொடுக்கல் வாங்கல் தொடர்பாக அங்கீகரிக்கப்படும் உருப்படிகளின் பிற்போடப்பட்ட வரி பிற முற்றுமடங்கிய வருமானத்தில் அல்லது உரிமையாண்மையில் நேரடியாக அங்கீகரிக்கப்படும். நடப்புக்கால வரிச் சொத்துக்களை நடப்பு வரிப் பொறுப்புக்களுக்கு எதிராக எதிரீடு செய்ய சட்டரீதியாக நடைமுறைப்படுத்தும் உரிமை இருந்து பிற்போடப்படும் வரிகள் ஒரே வரிவிதி நிறுவகத்திற்கும் ஒரே வரியீட்டு அதிகார அமைப்பிற்கும் தொடர்புபட்டதாக இருப்பின், பிற்போட்ட வரிச் சொத்துக்களும் பிற்போட்ட வரிப் பொறுப்புகளும் எதிரீடு செய்யப்படும்.

### 2.2.4 கடன்பெறுகை கிரயங்கள்

கடன்பெறுகை கிரயங்கள் நிதி பெறுவது தொடர்பில் சபை செலுத்தும் வட்டி மற்றும் கிரயங்களை கொண்டிருக்கும். எதிர்பார்க்கப்பட்ட உபயோகம் அல்லது விற்பனைக்கு தயாராக்க கணிசமான காலம் தேவைப்படும் சொத்துக்களான தகைமை பெறும் சொத்துக்களின் கொள்வனவு, நிருமானம் அல்லது உற்பத்தியுடன் தொடர்புபட்ட பொதுவான மற்றும் குறிப்பான கடன்படுகைக் கிரயங்கள் அந்தச் சொத்துக்களில் எதிர்பார்க்கப்பட்ட உபயோகம் அல்லது விற்பனைக்காக கணிசமான அளவில் தயார்படுத்தப்படும் வரையில் அந்தச் சொத்துக்களின் கிரயத்துடன் கூட்டப்படும். ஏனைய சகல கடன்படுகைக் கிரயங்களும் செலுத்தப்படும் காலத்திலேயே செலவாகக் கொள்ளப்படும்.

### 2.2.5 இருப்புக்கள்

இருப்புக்கள் வழக்கிழந்த மற்றும் குறைவாக அசைவுருகின்ற விடயங்களுக்கு ஏற்பாடாகவுள்ள கொடுப்பனவுகளின் பின்னர் இருப்புக்காக உரிய கிரயம் மற்றும் நிகர தேறுகைப் பெறுமதியில் குறைந்த பெறுமதியில் அளவிடப்படும். நிகர தேறுகைப் பெறுமதி வழமையான வியாபாரத்தின்போது விற்கக்கூடிய பெறுமதியிலிருந்து பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கும் கிரயம் மற்றும் விற்பனை செய்வதற்கு அவசியமான கிரயங்களை கழிக்க வரும் தொகையாகும். இருப்புக்கள் தற்போதைய அமைவிடம் மற்றும் நிலைக்கு கொண்டுவருவதற்கு இறுக்கப்படும் கிரயங்களில் கீழ்வருமாறு கணக்கிடப்படும்.

| வரையறுக்கப்பட்ட இலங்கை மின்சாரக் கம்பனி | |
|---|---|
| தொழிற்பாட்டு மற்றும் பராமரிப்புப் பொருட்கள் | நிறையளித்த சராசரி அடிப்படையின் மீது உண்மைக் கிரயத்தில் |
| வழிச்சரக்குகளும் ஏனையவையும் | உண்மைக் கிரயத்தில் |

| வரையறுக்கப்பட்ட LTL ஹோல்டிங்ஸ் (தனி) கம்பனி | |
|---|---|
| மூலப் பொருட்கள் | முதல்-உள்-முதல் வெளி அடிப்படையில் உண்மைக் கிரயத்தில்.<br><br>முடிவுப் பொருட்களும் |
| முடிவுறா வேலையும் | நேர் பொருள், நேர் கூலி மற்றும் நிலையான உற்பத்தி மேந்தலையின் பொருத்தமான பகிர்வின் அடிப்படையில். நுகர்வுப் பொருட்களும் |
| உதிரிப் பாகங்களும் | முதல்-உள்-முதல் வெளி அடிப்படையில் உண்மைக் கிரயத்தில் |
| வழிச்சரக்குகள் | உண்மைக் கிரயத்தில |

#### இலங்கை மின்சார சபை

அனேகமாக உபயோகிக்கப்படுகின்ற மற்றும் வருடாந்த விலைப் பட்டியலில் நிரற்படுத்தப்படும் தொக்குகள் நியம விலைகளிலும் நுகர்வுப்பண்டம் மற்றும் உதிரிப் பாகங்கள் போன்ற ஏனைய தொக்குகள் கிரயம் மற்றும் நிகர தேறுகைப் பெறுமதியில் குறைந்த பெறுமதியிலும் அளவிடப்படும்.

எனினும், CEB நியம விலைகளில் மதிப்பிடப்பட்ட தொக்குகளை கிரயப் பெறுமதிக்கு குறைப்பதற்கு ஏதுவாக தேறாத இலாபங்களுக்கு ஏற்பாடு செய்துள்ளது.

### 2.2.6 காசும் காசுக்குச் சமமானவைகளும்

காசும் காசுக்குச் சமமானவைகளும் காசுக் கையிருப்பு, கேள்வி வைப்புக்கள் மற்றும் பெறுமதி மாற்றத்திற்கு கணிசமான இடரை கொண்டிராததும் தெரிந்த காசுப் பெறுமதிக்கு தயார் நிலையில் மாற்றக் கூடியதுமான உயர்ந்த திரவ நிலையை கொண்ட குறுங்கால முதலீடுகள் என வரைவிலக்கணம் செய்யப்பட்டுள்ளது. குழுமத்தின் காசுப்பாய்வுத் தேவைகளுக்காக காசும் காசுப்பாய்வுகளும், காசுக்கையிருப்பு மற்றும் நிலுவையிலுள்ள வங்கி மேலதிகப்பற்றை கழித்த வங்கி கேள்வி வைப்புகள் ஆகியவற்றை கொண்டுள்ளன. குறுகிய முதிர்வு காலத்தை கொண்ட அதாவது, 3 மாதம் அல்லது அதற்கு குறைவான முதலீடுகளும் காசுக்குச் சமமானவைகளாக கொள்ளப்பட்டுள்ளன.

### 2.2.7. ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

#### (அ) கிரயமும் மதிப்பீடும்:

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் கிரயத்திலிருந்து திரண்ட பெறுமானத் தேய்மானம் மற்றும் திரண்ட சேத இழப்பு ஏதுமிருப்பின் அவற்றை கழித்த தொகையில் காட்டப்பட்டுள்ளன. அத்தகைய கிரயம் பிரதியீட்டுக் கூறுகளின் கிரயம், ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் உதிரிப் பாகங்களின் கிரயம் மற்றும் தேர்வு நிபந்தனைகள் திருப்தி செய்யப்படும் பட்சத்தில், நீண்டகால நிர்மான செயற்திட்டங்களின் கடன் படுகைக் கிரயம் ஆகியவற்றை உள்ளடக்கும். குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு தடவை ஆதனம், பொறி மற்றும் உபகரண கணிசமான பகுதிகள் பிரதியீடு செய்ய வேண்டியிருப்பின், குழுமம் பிரதியீடு செய்யும் பகுதியின் நிகர ஏட்டுப் பெறுமதியை அங்கீகரிக்காதிருப்பதுடன், புதிய பகுதியை அதன் தொடர்புடைய பயன்தரு ஆயுட்காலம் மற்றும் பெறுமானத் தேய்மானம் ஆகியவற்றின் அடிப்படையில் அங்கீகரிக்கும். அவ்வாறே, பாரிய பரீட்சிப்பு மேற்கொள்ளப்படும் போது அதன் கிரயம், அங்கீகரிப்பு நிபந்தனைகளை திருப்தி செய்தால் ஆதனம், பொறி மற்றும் உபகரண முன்கொணரற் தொகையில் அங்கீகரிக்கப்படும்.

# நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் (தொடர்ச்சி)

**2019 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கு**

ஆதனம், பொறி மற்றும் உபகரண உருப்படிகள் பின்னர் மீள் மதிப்பீடு செய்யப்படும் போது ஏற்படும் மீள் மதிப்பீட்டு மிகை, அந்தச் சொத்துக்கள் முன்னர் வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்பட்ட வீழ்ச்சியை எதிர்ப்பதிவு செய்யும் அளவு நீங்கலாக பிற முற்றுமடங்கிய வருமானம் மற்றும் திரண்ட உரிமையாண்மையில் மீள் மதிப்பீட்டு ஒதுக்கத்தில் அங்கீகரிக்கப்படுவதுடன், அச் சந்தர்ப்பத்தில், அந்த அதிகரிப்பானது வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படும். மீள் மதிப்பீட்டு வீழ்ச்சியானது, அதே சொத்திற்காக மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்தில் உள்ள மிகையினை எதிரீடு செய்யும் அளவு நீங்கலாக வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படும்.

மீள்மதிப்பீட்டுத் திகதியில் திரண்ட பெறுமானத் தேய்மானம் சொத்தின் மொத்த முன்கொணரற் தொகைக்கு எதிராக நீக்கப்படுவதுடன், நிகரத் தொகை சொத்தின் மீள் மதிப்பீட்டுத் தொகையாக திருத்திக் கூறப்படும். விற்பனை செய்யப்படும் போது, குறித்த சொத்துடன் தொடர்புபட்ட மீள்மதிப்பு ஒதுக்கம் எதுவுமிருப்பின், அது நிறுத்தி வைத்த இலாபத்திற்கு மாற்றப்படும்.

### ஆ) மூலதன முடிவுறா வேலை

மூலதன முடிவுறா வேலை கிரயத்தில் குறிப்பிடப்படுகின்றது. இவை நீண்டகால மூலதனச் செயற்திட்டங்களின் நிர்மாண வேலைகளில் நேரடியாக உள்ளடங்குகின்ற ஓர் மூலதனப் பண்புடைய செலவினமாகும். மூலதனத் தன்மைகொண்ட செலவினம், செயற்திட்டங்கள் பூரணப்படுத்தப்படும் வரை மூலதன முடிவுறா வேலையான கணக்கீடு செய்யப்படுவதுடன் தொடர்புடைய சொத்துக்கள் பாவனைக்காக காணப்படுகின்றன.

### இ) அங்கீகரிக்காமை

ஆதனம், பொறி மற்றும் உபகரணமொன்றின் முன்கொண்டுசெல் தொகையானது, கைதவிர்த்தல் அல்லது அதனைப் பயன்படுத்துகையில் எதிர்காலப் பொருளாதார நலன்கள் இல்லாதிருக்கையில் அங்கீகரிக்கப்படுவதில்லை. ஆதனம், பொறி மற்றும் உபகரணமொன்ளை அங்கீகரிக்காமையால் எழுகின்ற ஆதாயம் அல்லது நட்டங்கள் குறித்த சொத்து விடயம் அங்கீகரிக்காதிருக்கையில் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் உள்ளடக்கப்படுகின்றது.

ஆதனம், பொறி மற்றும் உபகரணமொன்றின் முன்கொண்டுசெல் தொகையில் மீளவைத்தல் கிரயங்கள் அங்கீகரிக்கப்படுகையில், மீளவைக்கப்பட்ட பாகங்களின் எஞ்சிய முன்கொண்டுசெல் தொகையானதுஅங்கீகரிக்கப்படு வதில்லை. பிரதான களப்பரிசோதனைக் கிரயங்கள் மூலதனமாக்கப்படுகின்றன. அந்த ஒவ்வொரு முலதமாக்கலின் போதும், களப்பரிசோதனைகளின் முன்னைய கிரயங்களின் எஞ்சிய முன்கொண்டுசெல் தொகை அங்கீகரிக்கப்படுவதில்லை.

### ஈ) விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள நடைமுறையல்லாச் சொத்துக்கள்

தொடர்ச்சியான பாவனையின் ஊடாக அன்றிஅடிப்படை ரீதியாக விற்பனை செய்யப்படுவதன் மூலம் முன்கொண்டுசெல் தொகை அறவிடப்படுமாயின் குழுமம் அந்த நடைமுறையல்லாச் சொத்துக்களை விற்பனைக்காக வைத்திருக்கப்படுபவை என வகைப்படுத்துகின்றது. அவ்வாறு விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ளவையாக வகைப்படுத்திய நடைமுறையல்லாச் சொத்துக்கள், அவற்றின் முன்கொண்டுசெல் தொகை மற்றும் சந்தைப் பெறுமதியிலிருந்து விற்பனைக்கான கிரயம் கழிக்கப்பட்டுவரும் தொகை ஆகியவற்றில் குறைந்த பெறுமதியில் அளவிடப்படுகின்றது.

முகாமைத்துவத்தால் (பணிப்பாளர் சபை) வழங்கப்பட்ட அங்கீகாரத்தின் மீது விற்பனை மிகவும் சாத்தியமானதாக இருக்கையில் மாத்திரமே விற்பனைக்காக வைத்திருக்கப்படுதலின் வகைப்படுத்தலிற்கான அளவுகோள்கள் கருத்திற்கொள்ளப்படுகின்றன. வகைப்படுத்தப்பட்ட திகதியிலிருந்து ஆறு மாதங்களிற்குள் எதிர்பார்க்கப்பட்ட விற்பனையினை மேற்கொள்ள வேண்டிய கட்டாயப் பொறுப்பு முகாமைத்துவத்திற்கு உள்ளது.

ஆதனம், பொறி மற்றும் உாபரணங்கள் விற்பனைக்காக வைத்திருக்கப்படுபவையாக வகைப்படுத்தப்பட்ட பின்னர் அவற்றிற்கான பெறுமானத்தேய்வு செய்தல் நிறுத்தப்படுகின்றது.

விற்பனைக்காக வைத்திருக்கப்படுபவையாக வகைப்படுத்திய சொத்துக்களும் பொறுப்புக்களும் நிதி நிலைமைக் கூற்றில் புறம்பான நடைமுறை விடயங்களாக முன்வைக்கப்படுகின்றன.

அவ்வாறனதோர் சொத்து விற்பனைக்காக வைத்திருக்கப்பட்டுள்ள நடைமுறையல்லாச் சொத்தாக இனங்காணப்படுமாயின், சபை தீர்மானத் திகதியிலிருந்து 06 மாதங்களிற்குள் கைதவிர்க்கப்படுதல் வேண்டும். அவ்வாறு கைதவிர்க்கப்படாதிருப்பின், அது அக்காலத்திற்கு இடைநிறுத்தப்பட்டிருந்த பெறுமானத்தேய்வுடன் சேர்த்து ஆதனம், பொறி மற்றும் உபகரணமாக மீள வகைப்படுத்தப்படுதல் வேண்டும

### உ) மீளவைத்தல் கிரயம்

ஆரம்பத்தில் மதிப்பிடப்பட்ட செயலாற்றல் நியமத்திலிருந்துஎதிர்கால் பொருளாதார நலன்களிற்காக மீளவைப்பதற்கு அல்லது பேணுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை திருத்துவதற்கு அல்லது பேணுவதற்கு ஏற்பட்ட செலவினம், அது ஏற்படும் வேளையில் செலவினமாக அங்கீகரிக்கப்படுகின்றது.

### ஊ) பெறுமானத் தேய்வு

இறையிலி காணி தவிர, சொத்து பயன்பாட்டிற்கு கிடைக்கும் போது சொத்தின் ஆயுட்காலம் முழுவதற்கும் நேர்கோட்டு முறையில் பெறுமானத்தேய்வு கணிக்கப்படும். குத்தகைக் காணியில் கட்டப்பட்ட கட்டடங்கள் அதன் மதிப்பிடப்பட்ட ஆயுட்காலம் மற்றும் குத்தகைக் காலம் இரண்டிலும் குறைந்த காலம் முழுவதற்கும்பெறுமானத்தேய்வு செய்யப்படும்.

சொத்துக்களின் ஆயுட்காலம் கீழ்வருமாறு மதிப்பிடப்படுகின்றன.

#### இலங்கை மின்சார சபை

| | |
|---|---|
| இறையிலி கட்டடம் மற்றும் குத்தகைக் காணி மற்றும் கட்டடங்கள் | 40 ஆண்டுகள் |
| சிவில் வேலைகள்: | |
| வழிந்தோடும் கான்கள் மற்றும் அணைக்கட்டுகள் | 100 ஆண்டுகள் |
| உருக்கு நீர்க்குழாய்கள் மற்றும் அது சார்ந்த தொக்குகள் | 40 ஆண்டுகள் |
| உபநிலையமும் ஆளித்தொகுதியும் | 35 ஆண்டுகள் |
| மின் பிறப்பாக்க பொறிகள்: | |
| பொறிஉட்பட்டசக்திவலு நிலையங்கள் (நீர் மின்) | 35 ஆண்டுகள் |
| பொறி உட்பட்ட மின் நிலையங்கள் (அனல் மின்) | 25 ஆண்டுகள் |
| பொறி உட்பட்ட மின் நிலையங்கள் (டீசல்) | 15 ஆண்டுகள் |
| பொறி உட்பட்ட மின் நிலையங்கள் (வாயு அமுக்கி) | 12 ஆண்டுகள் |
| பொறி உட்பட்ட மின் நிலையங்கள் (நிலக்கறி) | 30 ஆண்டுகள் |
| பொறி உட்பட்ட மின் நிலையங்கள்(காற்று) | 15 ஆண்டுகள் |
| மின்கடத்தி கம்பி வழிகள்: | |
| 220kv, 132kv மற்றும் 66kv | 35 ஆண்டுகள் |
| வினியோகக் கம்பி வழிகள்: | |
| HT நிலக்கீழ் - 33 kv | 50 ஆண்டுகள் |
| HT நிலக்கீழ் - 132 kv | 50 ஆண்டுகள் |
| HT நிலக்கீழ் - 11 kv | 40 ஆண்டுகள் |
| HT தலைக்கு மேலாகவுள்ள வழிகள் | 35 ஆண்டுகள் |

# நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் (தொடர்ச்சி)

**2019 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கு**

| | |
|---|---|
| LT நிலக்கீழ் | 40 ஆண்டுகள் |
| LT தலைக்கு மேலாகவுள்ள வழிகள் | 35 ஆண்டுகள் |
| LT ஊட்டும் தூண்கள் | 35 ஆண்டுகள் |
| நுகர்வோர் உபமின் நிலையம் | 35 ஆண்டுகள் |
| HT ஆளித்தொகுதி | 35 ஆண்டுகள் |
| முதன்மை, கட்டக உபமின் நிலையம் | 35 ஆண்டுகள் |
| பிரதான சேவை வழி | 35 ஆண்டுகள் |
| சேவை வழி - நிலக்கீழ் | 40 ஆண்டுகள் |
| SCADA மத்திய நிலையம் மற்றும் தொடர்பாடல் உபகரணம் | 15 ஆண்டுகள் |
| வாகனங்கள் | 07 ஆண்டுகள் |
| மோட்டார் படகுகள் | 07 ஆண்டுகள் |
| இயந்திரங்களும் ஆயுதங்களும் | 05 ஆண்டுகள் |
| அலுவலக உபகரணங்கள் | 05 ஆண்டுகள் |
| தளபாட பொருத்துக்கள் | 05 ஆண்டுகள் |

**வரையறுக்கப்பட்ட டுவுடு ஹோல்டிங்ஸ் (தனி) கம்பனி**

| | |
|---|---|
| கட்டடங்கள் | 25இற்கு மேல் 50 ஆண்டுகள் |
| பொறி மற்றும் இயந்திரம் | 08இற்கு மேல் 15 ஆண்டுகள் |
| மின்சாரப் பொறி | 10இற்கு மேல் 15 ஆண்டுகள் |
| தொழிற்சாலை உபகரணம் | 10 ஆண்டுகள் |
| அகத் தொடர்பாடல் உபகரணம் | 10 ஆண்டுகள் |
| தீயணைப்பு உபகரணம் | 10 ஆண்டுகள் |
| அலுவலக உபகரணம் | 03இற்கு மேல் 10 ஆண்டுகள் |
| தளபாடமும் பொருத்துக்களும் | 03இற்கு மேல் 10 ஆண்டுகள் |
| மோட்டார் வாகனங்கள் | 04 ஆண்டுகளிற்கு மேல் |
| தொழிற்பாட்டு, பராமரிப்பு உதிரிப்பாகங்கள் | உள்ளபடியான பாவனை |
| சூரிய மின்சாரPV பொறி | 15 ஆண்டுகளிற்கு மேல் |

**வரையறுக்கப்பட்ட லங்கா மின்சார (தனி) கம்பனி**

| | |
|---|---|
| கட்டடங்கள் | 40 ஆண்டுகள் |
| குத்தகைக் காணி | குத்தகைக் காலம் வரை |

**உட்கட்டமைப்பு வழங்குதல்:**

| | |
|---|---|
| உள்ளூராட்சி அதிகார சபைகள் மற்றும் CEB இடமிருந்துபெற்றுக்கொண்ட உப மின் நிலையங்கள், தலைக்கு மேலான கம்பி வழிகள் மற்றும் சேவைக் கம்பி வழிகள் | 10 ஆண்டுகள் |
| டுநுஊழு நிருமானித்த உப மின் நிலையங்கள், தலைக்கு மேலான கம்பி வழிகள் மற்றும் சேவைக் கம்பி வழிகள் | 20-25 ஆண்டுகள் |
| மோட்டார் வாகனங்கள் | 05 - 07 ஆண்டுகள் |
| கணனிகள் | 03 - 05 ஆண்டுகள் |
| அலுவலக உபகரணம் | 03 - 07 ஆண்டுகள் |
| பொறியும் இயந்திரமும் | 03 - 04 ஆண்டுகள் |

**வரையறுக்கப்பட்ட லங்கா நிலக்கரி (தனி) கம்பனி**

| | |
|---|---|
| தளபாட, இணைப்புக்கள் | 05 ஆண்டுகள் |
| உபகரணங்கள் | 04 ஆண்டுகள் |
| மோட்டார் வாகனங்கள் | 04 ஆண்டுகள் |
| கணனிகள் | 04 ஆண்டுகள் |
| குத்தகையிலுள்ள மேம்படுத்தல்கள் | 02 ஆண்டுகள் |

**வரையறுக்கப்பட்ட திருகோணமலை பவர் கம்பனி**

| | |
|---|---|
| தளபாட, இணைப்புக்கள் | 05 ஆண்டுகள் |
| உபகரணம் | 05 ஆண்டுகள் |
| மடி கணனி மற்றும் கணனிகள் | 03 ஆண்டுகள் |

ரூபா 15,000 இற்கு மேற்பட்ட சொத்துக்கள் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டன

### 2.2.8 குத்தகைகள்

**2019 சனவரி 01 முதல் பிரயோகிக்கத்தக்ககொள்கை**

ஒருஒப்பந்தத்தின் தொடக்கத்தில், அந்தஒப்பந்தத்தில் அல்லது உள்ளடக்கத்தில் ஒருகுத்தகை உள்ளதா என்பதை சபைமதிப்பிடுகிறது. அடையாளம் காணப்பட்ட சொத்தின் பயன்பாட்டைக் கட்டுப்படுத்துவதற்கான உரிமையை ஒரு ஒப்பந்தம் உள்ளடக்கி இருப்பின், அந்த ஒப்பந்தம் என்பது ஒருகுத்தகைஆகும். அடையாளம் காணப்பட்டசொத்தின் பயன்பாட்டைக் கட்டுப்படுத்தும் உரிமையை ஒரு ஒப்பந்தம் தெரிவிக்கிறதா என்பதை மதிப்பிடுவதற்கு, சபை SLFRS 16 இல் உள்ள குத்தகைக்கான வரைவிலக்கணத்தை பயன்படுத்துகிறது.

இந்த கொள்கை 2019 ஜனவரி 1 ஆம் திகதி அல்லது அதற்குப் பிறகு கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்களுக்கு பொருந்தும்.

**2.2.8.1 குத்தகைதாரராக குழுமம்**

ஒரு ஒப்பந்தத்தின் தொடக்கத்தில், அந்த ஒப்பந்தத்தில் அல்லது உள்ளடக்கத்தில் ஒருகுத்தகை உள்ளதாள என்பதை இ.மி.ச. மதிப்பிடுகிறது. ஒருகுறிப்பிட்ட சொத்தைப் பொறுத்தவரை, அந்தசொத்தின் பயன்பாட்டிலிருந்து அனைத்து பொருளாதார நன்மைகளையும் கணிசமாகபெறுகிறதா, மற்றும் சொத்தின் பயன்பாட்டை நெறிப்படுத்துவதற்கு இ.மி.ச இற்கு உரிமை உள்ளதாள என்பதுபற்றியதீர்ப்பைஇந்தமதிப்பீடுஉள்ளடக்கியது.

12 மாதங்கள் அல்லது அதற்கும் குறைவான குறுகியகால குத்தகைகளைத் தவிர, குத்தகை காலத்தின் அடிப்படையில் ஒரு நேர்கோட்டு முறையின் கீழ் வருமான கூற்றில் செலவிடப்படும் குத்தகையின் தொடக்க திகதியில் பயன்பாட்டு உரிமை (ROU) சொத்துக்கள் மற்றும் குத்தகை பொறுப்பை இ.மி.ச.அங்கீகரிக்கிறது.

குத்தகை பொறுப்பானது ஆரம்பத்தில் தொடக்கத் திகதியில் செலுத்தப்படாத குத்தகைக் கொடுப்பனவுகளின் தற்போதைய பெறுமதியில் அளவிடப்பட்டு, குத்தகையின் உள்ளார்ந்த வட்டி விகிதத்தைப் பயன்படுத்தி கழிவுநீக்கம் செய்யப்படுகிறது. இந்தவிகிதத்தை உடனடியாக தீர்மானிக்க முடியாவிட்டால்,இ.மி.ச. அதிகரிக்கும் கடன் விகிதத்தைப் பயன்படுத்துகிறது. இ.மி.ச. நடைமுறைப்படுத்துவதற்கு நியாயமானதாக இருந்தால், நிலையானகொடுப்பனவுகள், தொடக்க திகதியில் அறியப்பட்டகுறியீட்டு அல்லது வீதத்தைப் பொறுத்துமாறுபடும் கொடுப்பனவுகள்; மற்றும் நீடிப்பு விருப்பத் தேர்வு கொடுப்பனவுகள் அல்லது கொள்முதல் விருப்பங்கள் என்பனகுத்தகைக் கொடுப்பனவுகளில் அடங்கும். குத்தகை பொறுப்பு பின்னர் பயனுள்ள வட்டி வீதமுறையைப் பயன்படுத்தி காலத் தேய்மானக் கிரயத்தில் அளவிடப்படுவதுடன் மறு பேச்சுவார்த்தை, குறியீட்டு அல்லது வீதத்தின் மாற்றங்கள் அல்லது விருப்பங்களை மறு மதிப்பீடு செய்யும் விடயம் போன்ற சந்தர்ப்பங்களில் (பயன்படுத்துவதற்கு உரித்துள்ள∴ சுழுரு சொத்துக்களுடன் தொடர்புடைய நேரொத்த சீராக்கங்களுடன்) மீள அளவிடப்படுகின்றது.

**2.2.8.2குத்தகை தருனராக குழுமம் - LTL**

**செயற்பாட்டுக் குத்தகை**

குழுமம் சொத்துக்களின் உரிமை சம்பந்தமான கிட்டத்தட்ட முழுமையான இடர் மற்றும் பயன்களை மாற்றாத நீரமின், காற்றாலை மின் மற்றும் அனல் மின் ஆகியவற்றைப் பொறுத்தமட்டில், சொத்துக்கள் செயற்பாட்டுக் குத்தகையாக வகைப்படுத்தப்படும். சகல மின்வலுப் பொறிகளிலும் இருந்து குத்தகை வருமானமானது, குத்தகைச் சொத்துக்களிலிருந்து பெறப்படும் பயன்களின் கால அட்டவணை தீர்மானிக்கப்படும் மிகப் பொருத்தமான மின்வலு உற்பத்தி அடிப்படையில், அங்கீகரிக்கப்படும். குத்தகை வருமானத்தை உழைப்பதில் ஏற்படும் தேய்மானம் உள்ளிட்ட கிரயங்கள் செலவுகளாக அங்கீகரிக்கப்படும். தேய்மானம் செய்யக்கூடிய குத்தகைச் சொத்துக்களுக்கான தேய்மானக் கொள்கை, ஒத்த சொத்துக்களுக்கு குழுமத்தின் தேய்மானக் கொள்கையாகவே இருக்கும

**நிதி குத்தகை**

ராஜ் லங்கா பவர் கம்பெனி லிமிடெட் மற்றும் பங்களாதேஷ் பவர்டெவலப்மென்ட் சபை மற்றும் லக்தனவி பங்களாபவர்லிமிடெட் மற்றும் பங்களாதேஷ் பவர் டெவலப்மென்ட் சபை ஆகியவற்றுக்கு இடையிலான உடன்படிக்கை ஏற்பாடுகளின் கீழ் “இ/ப்ரிக் 4 - இன் படி குத்தகை ஏற்பாடு ஒன்று உள்ளதா என்பதைத் தீர்மானித்தல்” பின்வரும் அளவு கோல்களின் திருப்திப்படுதல் காரணமாக “SLFRS-16- குத்தகைகள்” இன் கீழ் குத்தகைக்கு கணக்கீடு செய்யப்படுதல் வேண்டுமென குழுமம் கருதுகின்றது;

# நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் (தொடர்ச்சி)

**2019 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கு**

- மின்வலுக் கொள்வனவு உடன்படிக்கைகளிலுள்ள நிபந்தனைகளை நிறைவேற்றுவது என்பது பங்களாதேஷில் அமைந்துள்ள குழுமத்தின் குறிப்பிட்ட மின்நிலையத்தின் பிரத்தியேக பயன்பாட்டைப் பொறுத்தது.
- மின் நிலையத்தை இயக்குவதற்கு பங்களாதேஷ் மின்சாரச பைக்கு உரிமை உண்டு அல்லது மின் உற்பத்தி நிலையத்தை இயக்க மற்றவர்களை அச்சபை வழிநடத்தும்.
- பங்களாதேஷ் மின் அபிவிருத்தி சபையைத் தவிர வேறுஎ ந்தக் கட்சியும் நிறுவனத்தின் மின் உற்பத்தி நிலையத்தால் உற்பத்தி செய்யப்படும் எந்தவொரு உற்பத்தியையும் எடுப்பதற்கு முடியாதுள்ளதுடன பங்களாதேஷ் மின் மேம்பாட்டுசபைசெலுத்தும் ஒருயூனிட்டிற்கானதிறன் கட்டணம் வெளியீட்டை அடிப்படையாகக் கொண்டதல்ல.

குத்தகை பொறுப்பானது ஆரம்பத்தில் தொடக்கத் திகதியில் செலுத்தப்படாத குத்தகைக் கொடுப்பனவுகளின் தற்போதைய பெறுமதியில் அளவிடப்பட்டு, குத்தகையின் உள்ளார்ந்த வட்டி விகிதத்தைப் பயன்படுத்தி கழிவு நீக்கம் செய்யப்படுகிறது. இந்தவிகிதத்தை உடனடியாக தீர்மானிக்க முடியாவிட்டால், இ.மி.ச. அதிகரிக்கும் கடன் விகிதத்தைப் பயன்படுத்துகிறது. இ.மி.ச. நடைமுறைப்படுத்துவதற்கு நியாயமானதாக இருந்தால், நிலையான கொடுப்பனவுகள், தொடக்க திகதியில் அறியப்பட்ட குறியீட்டு அல்லது வீதத்தைப் பொறுத்துமாறுபடும் கொடுப்பனவுகள்; மற்றும் நீடிப்பு விருப்பத் தேர்வு கொடுப்பனவுகள் அல்லது கொள்முதல் விருப்பங்கள் என்பனகுத்தகைக் கொடுப்பனவுகளில் அடங்கும். குத்தகை பொறுப்பு பின்னர் பயனுள்ள வட்டி வீதமுறையைப் பயன்படுத்தி காலத் தேய்மானக் கிரயத்தில் அளவிடப்படுவதுடன் மறு பேச்சுவார்த்தை, குறியீட்டு அல்லது வீதத்தின் மாற்றங்கள்

இந்த ஏற்பாடு "எஸ்.எல்.எ.ப்.ஆர்.எஸ் 16" இன் கீழ் "நிதி குத்தகை" என்று கணக்கீடு செய்யப்படுவதுடன் அதில் ராஜ் லங்காகம்பெனி லிமிடெட் மற்றும் லக்தனவி பங்களாபவர் லிமிடெட் குத்தகைதாரராகவும், பங்களாதேஷ் பவர் டெவலப்மென்ட் சபை குத்தகைதாரராகவும் உள்ளன. குழுமத்தின் மின்வலு ஆலை பங்களாதேஷ் மின் மேம்பாட்டு சபைக்கு மாற்றப்படுகிறது.

**2019 ஜனவரி 01 இற்குமுன்னர் பிரயோகிக்கத்தக்க கொள்கை**

குத்தகைக்கு விடப்பட்ட ஆதனத்தின் உரிமையாளருக்கு நிகழும் அனைத்து அபாயங்கள் மற்றும் நன்மைகளை கணிசமாக சபைக்கு மாற்றும் ஏற்பாடுகளானவை, குத்தகையின் ஆரம்பத்தில் குத்தகைக்கு விடப்பட்டசொத்தின் நியாயமான பெறுமதியில் மூலதனமாக்கப்படுகின்றன அல்லது குறைவாக இருந்தால், குறைந்தபட்சத்தின் தற்போதைய பெறுமதியிலான குத்தகை கொடுப்பனவுகள் மூலதனமாக்கப்படுகின்றன.குத்தகைக் கொடுப்பனவுகள், நிதிகுத்தகைக் கட்டணங்களுக்கும் குத்தகைக்கு எடுக்கப்பட்ட பொறுப்பைக் குறைப்பதற்கும் இடையில் பிரிக்கப்படுகின்றன. இதனால் மீதமுள்ளகடன் நிலுவையில் நிலையான வட்டிவிகிதத்தை அடையமுடியும். நிதிக் கட்டணங்கள் வசூலிக்கப்பட்டு வருமான கூற்றில் பிரதிபலிக்கப்படுகின்றன.

குத்தகைகாலத்தின் முடிவில் சபை உரிமையைப் பெறும் என்பதில் நியாயமான உறுதி இல்லை என்றால், மூலதனக் குத்தகைக்கு விடப்பட்டசொத்துகள் சொத்தின் மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுள் மற்றும் குத்தகைகாலத்தின் மீது பெறுமானத் தேய்மானம் செய்யப்படுகின்றன. பெறுமானத் தேய்விடத்தக்க குத்தகைக்கு விடப்பட்ட சொத்துகளுக்கான தேய்மானக் கொள்கை விவரிக்கப்பட்டுள்ளபடி உரித்துடைய பெறுமானத்தேய்விடப்பட்ட சொத்துக்கு ஒத்துப்போகிறது.

செயற்பாட்டு குத்தகைக் கொடுப்பனவுகள் குத்தகைக் காலத்தின் மீது ஒரு நேரடியான அடிப்படையில் விரிவான வருமான கூற்றில் செயற்பாட்டுச் செலவாக அங்கீகரிக்கப்படுகின்றன.

### 2.2.9. அருவச் சொத்துக்கள்:

தனியாக கொள்வனவு செய்யப்படும் அருவச் சொத்துக்கள் ஆரம்ப அங்கீகரிப்பின் போது கிரயத்தில் அளவிடப்படும். வியாபார இணைப்பு ஒன்றின் போது கொள்வனவு செய்யப்படும் அருவச் சொத்துக்களின் கிரயம் கொள்வனவுத் திகதியில் உள்ள அவற்றின் சந்தைப் பெறுமதியாகும். ஆரம்ப அங்கீகரிப்பைத் தொடர்ந்து அருவச் சொத்துக்கள் அவற்றின் கிரயத்திலிருந்து திரண்ட காலத் தேய்மானம் மற்றும் திரண்ட சேத இழப்பு நட்டங்களை கழித்த தொகையில் முன் கொணரப்படும். அகத்தே உருவாக்கப்படும், மூலதனப்படுத்திய அபிவிருத்திச் செலவுகள் தவிர்ந்த, அருவச் சொத்துக்கள் மூலதனப்படுத்தப்படாது ஏற்பட்ட ஆண்டில் செலவாகக் கொள்ளப்படும். அருவச் சொத்துக்களின் பயன்தரு ஆயுட் காலம் முடிவுள்ளதாகவோ அல்லது முடிவற்றதாகவோ மதிப்பிடப்படும்.

முடிவுள்ள ஆயுட்காலத்தை கொண்ட அருவச் சொத்துக்கள் அவற்றின் பயன்தரு பொருளியல் ஆயுட்காலம் முழுவதற்கும் காலத் தேய்மானம் செய்யப்படுவதுடன் அவை சேத இழப்பிற்கு ஆளாகியமைக்கான குறிகாட்டிகள் இருக்கும் சகல சந்தர்ப்பங்களிலும் சேத இழப்பிற்காக மதிப்பிடப்படும். அருவச் சொத்து ஒன்றிற்கான காலத் தேய்மானக் காலமும், முறையும் குறைந்தது ஒவ்வொரு அறிக்கையிடற்கால முடிவிலும் மீளாய்வு செய்யப்படும். எதிர்பார்க்கப்படும் பயன்தரு ஆயுட்காலத்தில் அல்லது சொத்தில் அடங்கிய எதிர்கால பொருளியற் பயன்களின் எதிர்பார்க்கும் நுகர்வு முறையில் மாற்றங்கள், ஏற்றவாறு காலத் தேய்மானக் காலம் அல்லது முறையை மாற்றி கணக்கில் கொள்ளப்படுவதுடன், அவை கணக்கீட்டு மதிப்பீட்டு மாற்றமாகக் கொள்ளப்படும். முடிவுக் காலத்தை கொண்ட அருவச் சொத்துக்களின் காலத் தேய்மான செலவுகள் அருவச் சொத்துகளின் தொழிற்பாட்டுக்கு இசைய வருமானக் கூற்றில் செலவாக வகைப்படுத்தப்படும்.

முடிவற்ற பயன்தரு ஆயுட்காலத்தைக் கொண்ட அருவச் சொத்துக்கள் காலத் தேய்மானம் செய்யப்படுவதில்லை. அவை தனியாகவோ அல்லது காசு பிறப்பாக்க அலகு மட்டத்திலோ ஆண்டு தோறும் சேத இழப்புச் சோதனைக்கு ஆளாகும். முடிவற்ற ஆயுட்கால மதிப்பீடு முடிவற்ற ஆயுட்காலம் தொடர்ந்தும் ஏற்றுக் கொள்ளக்கூடியதா என்பதனை உறுதி செய்து கொள்வதற்கு ஆண்டு தோறும் மீளாய்வு செய்யப்படும். அவ்வாறு உறுதி செய்ய முடியாத போது, பயன்தரு ஆயுட் காலத்தின் முடிவற்ற காலத்திலிருந்து முடிவுள்ள காலத்திற்கான மாற்றம் பொருத்தமான அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

அருவச் சொத்தொன்றின் அங்கீகரிப்பின்மையால் ஏற்படும் பெறுகை அல்லது இழப்பு அதன் நிகர விற்பனைப் பெறுவனவுக்கும் சொத்தின் முன்கொணரற் தொகைக்கும் இடையிலான வித்தியாசமாக கணித்து சொத்து அங்கீகரிக்காதிருக்கையில் வருமானக்கூற்றில் அங்கீகரிக்கப்படும்.

### 2.2.10 நிதிக் கருவிகள் - ஆரம்ப அங்கீகரித்தலும் பிந்திய அளவீடும்

#### 2.2.10.1 நிதிச் சொத்துக்கள்

**(அ) ஆரம்ப அங்கீகப்பும் அளவீடும்**

ஆரம்ப அங்கீகரிப்பின் போது, நிதிச்சொத்தொன்றின் காலக்கழிவுக் கழிவுக் கிரயமானது நியாயப் பெறுமதியில் ஏனைய முற்றுமடங்கிய வருமானத்தின் (FVOCI) ஊடாகவும்: கடன் முதலீடு - நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்டு ஏனைய முற்றுமடங்கிய வருமானத்திதன் (FVOCI) ஊடாகவும்: உரிமைத்துவ முதலீடு - நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்டு இலாபம் அல்லது நட்டத்தின் (FVTPL) ஊடாகவும் அளவிடப்பட்டு வகைப்படுத்தப்படுகின்றது.

# நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் (தொடர்ச்சி)

**2019 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கு**

நிதிச் சொத்துக்களை முகாமைத்துவம் செய்வதற்காக குழுமம் அதனது வணிக முறைமையினை மாற்றாதவிடத்து, நிதிச் சொத்துக்கள் அவற்றின் ஆரம்ப அங்கீகரித்தலின் பின்னர் மீள வகைப்படுத்தப்படுவதில்லை. அவ்வாறான மாற்றம் இடம்பெறுமாயின் தாக்கத்திற்குட்பட்ட சகல நிதிச் சொத்துக்களும் வணிக முறையின் மாற்றத்தினைத் தொடர்ந்துவருகின்ற முதலாவது அறிக்கையிடல் காலத்தின் முதலாம் நாளில் மீள வகைப்படுத்தப்படுகின்றன.

பின்வரும் இரண்டு நிபந்தனைகளும் பூர்த்தி செய்யப்படுமாயின் நிதிச்சொத்தொன்று காலக்கழிவுக் கிரயத்தில் அளவிடப்படுவதுடன் அது குஏவீடு இல் இனங்காணப்படுவதில்லை.

- ஒப்பந்தரீதியிலான காசுப் பாய்ச்சலை சேகரிப்பதற்கான குறிக்கோளுடன் வைத்திருக்கப்பட்டுள்ள சொத்துக்கள் வணிக முறையில் காணப்படுதல்: மற்றும்,
- நிலுவையிலுள்ள கடன் தொகையின் மீதான வட்டியினையும் கடனையும் செலுத்துவதற்கான காசுப் பாய்ச்சலை குறித்த திகதிகளில் பெற்றுக்கொள்வதற்கான ஒப்பந்தரீதியான விதிகள் காணப்படுதல்.

காலக்கழிவுக் கிரயத்தில் வகைப்படுத்தி அளவிடப்பட்ட நிதிச் சொத்துக்களானவை வியாபாரக் கடன்பட்டோர், பதவியணியினருக்கும் வாடிக்கையாளருக்குமுரிய கடன்கள், தொடர்புடைய தரப்பு பெறவேண்டியவை, குறுங்கால முதலீடுகள் மற்றும் காசும் காசுக்கு சமமானவைகளிற்கும் மட்டுப்படுத்தப்படுகின்றன.

பின்வரும் இரண்டு நிபந்தனைகளும் பூர்த்தி செய்யப்படுமாயின் கடன் முதலீடொன்று FVOCI இல் அளவிடப்படுவதுடன் அது FVTPL இல் இனங்காணப்படுவதில்லை.

- ஒப்பந்த ரீதியிலான காசுப் பாய்ச்சலை சேகரித்தல் மற்றும் நிதிச் சொத்துக்கள் விற்கப்படுதல் ஆகிய இரண்டு குறிக்கோளுடன் வணிக முறையில் காணப்பட்டு வைத்திருக்கப்பட்டுள்ள சொத்துக்களாக இருத்தல்: மற்றும்,
- நிலுவையிலுள்ள கடன் தொகையின் மீதான வட்டியினையும் கடனையும் செலுத்துவதற்கான காசுப் பாய்ச்சலை குறித்த திகதிகளில் பெற்றுக்கொள்வதற்கான ஒப்பந்தரீதியான விதிகள் காணப்படுதல்.

வியாபாரத்திற்காக வைத்திருக்கப்படாத உரிமைத்துவ முதலீடொன்றின் ஆரம்ப அங்கீகரித்தலின் அடிப்படையில், OCI இல் முதலீட்டின் சந்தைப் பெறுமதியில் நிகழும் தொடர்ந்துவரும் மாற்றங்களை முன்னிலைப்படுத்துவதற்காக குழுமம் மாற்றமுடியாமையை தேர்ந்தெடுக்கலாம். இந்த தேர்ந்தெடுத்தல் முதலீட்டிற்கு முதலீடு என்ற அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது.

காலக்கழிவுக் கிரயத்தில் அல்லது மேலே விபரிக்கப்பட்டவாறு FVOCI இல் வகைப்படுத்தி அளவிடப்படாத சகல நிதிச் சொத்துக்களும் FVTPL இல் அளவிடப்படுகின்றன. இதில் அனைத்து வியாபார நிதிச் சொத்துக்களும் உள்ளடங்குகின்றன. ஆரம்ப அங்கீகரிப்பின் அடிப்படையில், அவ்வாறு செய்வதால் நீக்குகின்ற அல்லது வேறுவழியில் எழும் குறிப்பிடத்தக்களவில் குறைக்கின்ற கணக்கீடொன்றின் பொருந்தாமை காக்கழிவுக் கிரயத்தில் அல்லது குஏவீடு இல் உள்ளவாறு FVOCI இல் அளவிடப்பட தேவைப்பாடுகளை நிறைவேற்றினாலன்றி அவ்வாறான நிதிச்சொத்தொன்றை குழுமம் அகற்றாது இனங்காணலாம்.

உரிமைத்துவ முதலீடுகளிலுள்ள குழுமத்தின் முதலீடு, OCI இன் ஊடாக சந்தைப் பெறுமதியில் வகைப்படுத்தப்படுகின்றன.

**நிதிச் சொத்துக்கள் - வணிக முறை மதிப்பீடு**

வணிகம் முகாமைத்துவம் செய்கின்ற சிறந்த முறையினை இது பிரபலிக்கின்றமையால் தொகுதி மட்டமொன்றில் வைத்திருக்கப்பட்டுள்ள நிதிச் சொத்தொன்றின் வணிக முறையிலமைந்த நோக்க மதிப்பீடொன்றை குழுமம் மேற்கொண்டு முகாமைத்துவத்திற்கு தகவல்களை வழங்குகின்றது. கருத்திற்கொள்ளப்பட்ட தகவல்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன.

- குறிப்பிடப்பட்ட கொள்கைகளும் குறிக்கோள்களும் மற்றும் அக்கொள்கைகளை நடைமுறைரீதியாக செயற்படுத்தலும். ஒப்பந்தரீதியான வட்டி வருமானத்தை ஈட்டுதல், குறிப்பிட்ட வட்டி வீதத் தொகுதியொன்றை பேணுதல், ஏதேனும் தொடர்புடைய பொறுப்பொன்றின் காலத்திற்கு நிதிச்சொத்தொன்றின் பொருந்துதல் காலம் அல்லது எதிர்பார்க்கப்பட்ட காசு வெளிப்பாய்ச்சல் அல்லது சொத்துக்களை விற்பனை செய்வதன் மூலம் தேறக்கூடிய காசுப் பாய்ச்சல்கள் போன்றவற்றை முகாமைத்துவத்தின் தந்துரோபாயங்கள் எதிர்வுகூறியுள்ளதா என்பது:
- முதலீட்டுத் தொகுதியின் செயலாற்றல் எவ்வாறு மதிப்பிடப்பட்டு கம்பனியின்/குழுமத்தின் முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்படுகின்றது என்பது:
- வணிக முறையின் செயலாற்றலில் தாக்கம் செலுத்தும் ஆபத்துக்கள் (மற்றும் வணிக முறையில் வைத்திருக்கப்பட்டுள்ள நிதிச் சொத்துக்கள்) மற்றும் அந்த ஆபத்துக்கள் எவ்வாறு முகாமைத்துவம் செய்யப்படுகின்றன என்பது:
- வணிகத்தின் முகாமையாளர்கள் எவ்வாறு இழப்பீட்டிற்கு உட்படுகின்றனர் என்பது - உதாரணமாக நிர்வகிக்கப்பட்ட சொத்துக்களின் சந்தைப் பெறுமதியின் அடிப்படையில் இழப்பீடு காணப்படுகின்றதா அல்லது சேகரிக்கப்பட்ட ஒப்பந்த காசுப் பாய்ச்சில்ன் அடிப்படையில் காணப்படுகின்றதா என்பது: மற்றும்
- இதற்கு முன்னைய காலங்களில் நிதிச் சொத்துக்களின் விற்பனை இடம்பெற்ற தடவைகள், அளவு மற்றும் காலம் அத்துடன் அவ்வாறான விற்பனைக்கான காரணங்கள் மற்றும் எதிர்கால விற்பனைச் செயற்பாடுகள் தொடர்பான எதிர்பார்ப்புகள்.

அங்கீகரிக்கப்படாமைக்கான தகைமையற்ற கொடுக்கல் வாங்கல்களிலுள்ள மூன்றாம் தரப்பினருக்கான நிதிச் சொத்துக்களின் பரிமாற்றங்கள், இந்த நோக்கத்திற்கு விற்பனைக்காக கருதப்படாது குழுமத்தின் தொடர்ச்சியான சொத்துக்களின் அங்கீகாரமாக கருதப்படுகின்றது.

விற்பனைக்காக வைத்திருக்கப்படுகின்ற அல்லது நிர்வகிக்கப்படுகின்ற நிதிச் சொத்துக்கள் மற்றும் சந்தைப் பெறுமதியின் அடிப்படையில் செயலாற்றல் மதிப்பிடப்படுகின்ற சொத்துக்கள் FVTPL இல் அளவிடப்படுகின்றன.

நிதிச் சொத்துக்கள் - ஒப்பந்தரீதியான காசுப் பாய்ச்சல்கள், கடனையும் வட்டியினையும் செலுத்துவதற்காக மாத்திரம் உள்ளதா என்பதனை மதிப்பிடுதல்.

ஆரம்ப அங்கீகரிப்பின் அடிப்படையில் நிதிச் சொத்துக்களின் சந்தைப் பெறுமதியாக கடன்தொகையினை வரைவிலக்கணம் செய்தலே இந்த மதிப்பீட்டின் குறிக்கோளாகும். வட்டியானது பணத்தின் காலப்பெறுமதிக்கும், குறித்த காலப்பகுதியில் நிலுவையாகவுள்ள கடன் தொகையுடன் சம்பந்தப்பட்டுள்ள கடன் ஆபத்துக்காகவும் ஏனைய அடிப்படையலமைந்த கடன்வழங்கல் ஆபத்துக்கள் மற்றும் கிரயங்கள் (உதாரணமாக: திரவத்தன்மை ஆபத்து மற்றும் நிர்வாகக் கிரயங்கள்) அவ்வாறே இலாப எல்லைக்காகவும் கருத்திற் கொள்ளப்படுவதாக வரைவிலக்கணம் செய்யப்படுகின்றது.

ஒப்பந்தரீதியான காசுப் பாய்ச்சல்கள், கடனையும் வட்டியினையும் செலுத்துவதற்காக மாத்திரம்

# நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் (தொடர்ச்சி)

**2019 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கு**

உள்ளதா என்பதனை மதிப்பிடுகையில்,நிதிக்கருவியின் ஒப்பந்தரீதியான விதிகளை கம்பனி / குழுமம் கருத்திற் கொள்கின்றது. நிதிச்சொத்தொன்று உள்ளடக்கியுள்ள ஒப்பந்தரீதியான விதிகள், அவற்றின் நேரத்தை அல்லது ஒப்பந்த ரீதியான காசுப் பாய்ச்சலை மாற்றக்கூடியதா அதாவது இந்த நிபந்தனையை அது பூரணப்படுத்துமா என்பதனை இது உள்ளடக்ககின்றது. இந்த மதிப்பீட்டை மேற்கொள்கையில் கம்பனி / குழுமம் பின்வருவனவற்றை கருத்திற்கொள்கின்றது.

- காசுப் பாய்ச்சல் தொகையினை அல்லது நேரத்தை மாற்றக்கூடிய நிகழத்தக்க நிகழ்வுகள்:
- மாறும் வீதத் தன்மைகள் உள்ளடங்லாக ஒப்பந்தரீதியான கூப்பன் வீதத்தை சீராக்கக்கூடிய விதிகள்:
- முற்செலுத்துகைகளும் விரிவாக்கப் பண்புகளும்: அத்துடன்,
- குறித்துரைத்த சொத்துக்களிலிருந்தான காசுப் பாய்ச்சல்களை மட்டுப்படுத்தும் கம்பனியின்/ குழுமத்தின் நிபந்தனைகள் (உதாரணமாக: மீளவகைப்படுத்தாத பண்புகள்)

நிலுவையிலுள்ள கடனையும் அக்கடன் தொகையின் மீதான வட்டியினையும் முற்கொடுப்பனவுத் தொகை யதார்த்தமாக பிரதிநிதித்துவப்படுத்துமாயின், ஒரு முற்கொடுப்பனவின் பண்பானது கடன் தொகை மற்றும் வட்டிக் கொடுப்பனவுடன் முழுமையாக ஒத்துப்போகின்றது. அதில், ஒப்பந்தம் முன்கூட்டியே முடிவிற்கு கொண்டுவரப்பட்டமைக்குரிய நியாயமான மேலதிக இழப்பீடும் உள்ளடங்குகின்றது. அத்துடன், அதன் ஒப்பந்தரீதியான முகப் பெறுமதிக்கு கழிவு அல்லது வட்டத்தில் நிதிச் சொத்தொன்றை கொள்வனவு செய்தமைக்காக, ஆரம்ப அங்கீகாரத்தில் முன்கூட்டியே செலுத்தும் அம்சம் முக்கியமற்றதாக இருப்பின், ஒப்பந்தரீதியான சமமான தொகையுடன் சேர்ந்த (ஆனால் செலுத்தப்படாத) அட்டுறு ஒப்பந்த வட்டியினை (முன்கூட்டியே முடிவிற்கு கொண்டுவரப்பட்டமைக்குரிய நியாயமான மேலதிக இழப்பீடும் அதில் உள்ளடங்குகின்றது.) கணிசமாக பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு தொகையை முன்கூட்டியே செலுத்துவதற்கு அனுமதிக்கும் அல்லது தேவைப்படும் ஒரு அம்சம் இதனுடன் ஒத்துப்போகின்றது.

**(ஆ) பிந்திய அளவீடு**

நிதிச் சொத்துக்களின் பிந்திய அளவீடு, பின்வருமாறு அவற்றின் வகைப்படுத்தலில் தங்கியுள்ளன.

**(இ) இனங்காணாதிருத்தல்**

நிதிசார்ந்த ஒரு சொத்து (அல்லது, நிதிசார்ந்த ஒரு சொத்தின் ஒருபாகம் அல்லது அது போன்ற நிதிசார்ந்த சொத்துக்களின் ஒரு தொகுதி பொருத்தமானவிடத்து)

i) காலாவதியாகிய சொத்துக்களிலிருந்து காசுப் பாய்ச்சல்களைப் பெறுவதற்கான உரிமைகள் இருக்கின்ற போதும்

ii) குழு, அத்தகைய சொத்திலிருந்து வரும் காசுப்பாய்ச்சல்களைப் பெறுவதற்கான தனது உரிமைகளை மாற்றிக்கொடுத்துள்ளது அல்லது ஹஒரு பாரப்படுத்தலுடனான' ஏற்பாட்டின் கீழ், ஒரு மூன்றாந்தரப்புக்கு பொருண்மையான தாமதமின்றி, தனக்குக் கிடைத்த காசுப்பாய்ச்சல்களை முழுமையாக செலுத்துவதற் கான ஒரு கடப்பாட்டைப் பொறுப்பேற்றுள்ளது எனும் போதும், இல்லையெனில் பின்வரும் இரண்டிலொரு விதத்தில்

அ. குழு, சொத்தின் சகல விதமான பொறுப்புக்களையும் மற்றும் சொத்துக்கள் வழங்கல்களையும் கணிசமானளவில் மாற்றிக் கொடுத்துள்ள

குழு, ஒரு சொத்திலிருந்து வரும் காசுப் பாய்ச்சல்களைப் பெறுவதற்கான தனது உரிமைகளை மாற்றிக் கொடுத்துள்ளது அல்லது பாரப்படுத்தலூடான ஒரு ஏற்பாட்டை மேற்கொண்டுள்ளது எனும் போதும், மற்றும் சொத்தின் சகல விதமான பொறுப்புகளையும் மற்றும் சொத்துக்கள் வழங்கல்களையும் கணிசமானளவில் மாற்றிக்கொடுக்கவோ அல்லது பித்துவைக்கவோ அல்லது தனது கட்டுப்பாட்டை மாற்றிக் கையளிக்கவோ இல்லை எனும் போதும், அந்த சொத்து கம்பனிக்கு அந்த சொத்தின் மீதுள்ள ஈடுபாட்டின் அளவுக்கு இணங்காணமல் விட்டுவிடப்படும். அத்தகைய சந்தர்ப்பத்தில், குழு அதனை தொடர்புடைய ஒரு பொறுப்பாக வும் இனங்காணும். மாற்றிக்கொடுக்கப்பட்ட சொத்துக்களும் மற்றும் தொடர்புடைய பொறுப்புக்களும் அந்தக் குழுவிடமுள்ள உரிமைகள் மற்றும் கடப்பாடுகள் என்பவற்றைப் பிரதிபலிக்கும் ஒரு அடிப்படையில் அளவிடப்படுகின்றன.

| | |
|---|---|
| காலக்கழிவுக் கிரயத்தில் காணப்படும் நிதிச் சொத்துக்கள் | இந்தச் சொத்துக்கள் பின்னர், தாக்கமுள்ள வட்டிவீத முறையினைப் பயன்படுத்தி காலக்கழிவுக் கிரயத்தில் அளவிடப்படுகின்றன. காலக்கழிவுக் கிரயமானது சாத்தியமான நட்டங்களால் குறைவடைகின்றது. வட்டி வருமானம், அந்நியச் செலாவணி ஆதாயமும் நட்டமும் மற்றும் சாத்தியநட்டம் என்பன இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன. ஆங்கீகரிக்கப்படாமை மீதான ஏதேனும் ஆதாயம் அல்லது நட்டம் காணப்படின் அது இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது. |
| FVOCI பெறுமதியிலுள்ள உரிமைத்துவ முதலீடுகள் | இந்தச் சொத்துக்கள் அதன்பின்னர், சந்தைப் பெறுமதியில் அளவிடப்படுகின்றன. முதலீட்டுக் கிரயத்தின் பகுதி அறவீடொன்றை பங்கிலாபம் தெளிவாக பிரதிநிதித்துவம் செய்யாதிருப்பின், அப்பங்கிலாபங்கள் வருமானமாக இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன ஏனைய தேறிய ஆதாயங்கள் மற்றும் நட்டங்கள் முஊஜ இல் அங்கீகரிக்கப்படுவதுடன் இலாபம் அல்லது நட்டத்திற்கு ஒருபோதும் மீளவகைப்படுத்தப்படுவதில்லை. |

மாற்றிக் கொடுக்கப்பட்ட அந்த சொத்தின் மீதான ஒரு பிணையுத்தரவாத வடிவத்தைப் பெறுகின்ற தொடர் ஈடுபாடானது அந்த சொத்தின் உண்மையான கொணரப்படும் குறைந்த தொகையிலும் மற்றும் குழு மீளச்செலுத்துவதற்குத் தேவைப்படுத்தக் கூடும் எனும் ஆகக் கூடிய தொகையிலும் அளவிடப்படுகின்றது.

**2.2.10.1.1 நிதி சார்ந்த சொத்துக்களின் நட்டம்**

நிதிசார்ந்த ஒரு சொத்துக்கு அல்லது நிதி சார்ந்த சொத்துக்கள் தொகுதிற்கு நட்டம் ஏற்பட்டிருக்கின்றதா என்பதற்கு தெளிவான ஏதாவதொரு சான்று காணப்படுகின்றதா என நிர்ணயித்துக்கொள்ளும் பொருட்டு அறிக்கையிடப்படும் ஒவ்வொரு திகதியிலும் குழுஅத்தகைய சொத்தை மதிப்பிடும். நிதிசார்ந்த ஒரு சொத்துக்கு அல்லது நிதிசார்ந்த சொத்துக்களின் தொகுதிற்கு நட்டம் ஏற்பட்டிருக்கின்றது என ஊகிக்கப்படும், மற்றும் சொத்தின் ஆரம்ப இனங்காணலின் பின்னர் நிகழ்ந்த (ஒன்று அல்லது அதற்கு அதிகமான) நிகழ்வுகளின் விளைவாக நட்டம் ஏற்பட்டுள்ளது என்பதற்கான தெளிவான ஒரு சான்று காணப்படும் பட்சத்தில் மாத்திரம், அந்த நிதி சார்ந்த சொத்துக்களின் அல்லது நிதிசார்ந்த சொத்துக்கள் தொகுதியின் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல்கள் மீது ஒரு தாக்கத்தைக் கொண்டுள்ள அந்த நட்டத்தை நம்பத்தகுந்தளவில் மதிப்பிடலாம். கணிசமானளவு

# நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் (தொடர்ச்சி)

2019 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கு

நிதிசார்ந்த பிரச்சினை, கடன் செலுத்துவதில் தவறுகை அல்லது வட்டி அல்லது அடிப்படைக் கட்டணங்கள் செலுத்துவதில் தவறுகை, அத்தகைய பற்றுக்களும் பற்றுத்தொகுதிகளும் திவால் நிலைக்கு அல்லது ஏனைய நிதிசார்ந்த மீளொழுங்கமைப்புக்கு உள்ளாகுதல் முதலிய அம்சங்களை கடன் பற்றுக்கள் அல்லது கடன் பற்றுத் தொகுதிகள் கொண்டுள்ளன. என்பதை சுட்டிக்காட்டுகின்ற சுட்டிகளும், மற்றும் அந்த தவறுகையுடன் தொடர்புடைய பொருளாதார ரீதியான நிலைமைகள் அல்லது நிலுவைகளிலுள்ள மாற்றங்கள் போன்ற மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல்களில் அளவிடக்கூடிய ஒரு குறைப்பு இருக்கின்றது என்பதை சுட்டிக்காட்டுகின்ற அவதானிக்கக்கூடிய தரவுகள் என்பன நட்டம் தொடர்பான சான்று விடயத்தில் உள்ளடங்கியிருக்கலாம்.

### 2.2.10.2 நிதிசார்ந்த பொறுப்புக்கள்

#### அ) ஆரம்ப இனங்காணலும் அளவீடும்

நிதிசார்ந்த பொறுப்புக்கள் ஆரம்ப இனங்காணலும் அளவீடும் LKAS 39 என்ற கணக்கீட்டு நியமத்தின் நோக்கெல்லையினுள் வருகின்ற நிதி சார்ந்த பொறுப்புக்கள் பொருத்தமானவாறு இலாபம் அல்லது நட்டம், கடன்கள் மற்றும் கடன் பெறுகைகள், ஏனைய நிதிசார்ந்த பொறுப்புக்கள் அல்லது பயனுள்ள ஒரு தளத்தில் தள சாதனங்களாக குறித்தொதுக்கப்பட்ட பாராதீனப்படுத்த முடியாதவை என்பவற்றினூடாக நியாய விலைப் பெறுமானத்தில் நிதிசார்ந்த பொறுப்புக்களாக வகைப்படுத்தப்படு கின்றன. குழு தனது நிதிசார்ந்த பொறுப்புக்களின் வகுதியை ஆரம்ப இனங்காணலின் போது தீர்மானிக்கின்றது.நிதிசார்ந்த சகல பொறுப்புக்களும் அடிப்படை ரீதியில் நியாய விலைப் பெறுமானத்தில் இனங் காணப்படுகின்றன. கடன்கள் மற்றும் கடன் பெறுகைகள், ஏனைய நிதிசார்ந்த பொறுப்புக்கள் என்பவற்றை பொறுத்த வரையில் கழிக்கப்பட்ட ஆகுசெலவில் இனங்காணப்படுகின்றன நேரடியாக சேரக்கூடிய கொடுக்கல்வாங்கல் கிரயத்தில் இதில் உள்ளடங்குகின்றன.வியாபார மற்றும் ஏனைய கொடுமதிகள், வங்கிமேலதிகப் பற்றுக்கள் என்பன அறிக்கையிடப்படும் திகதிற்கான குழுவின் நிதிசார்ந்த பொறுப்பில் உள்ளடங்கும்.

#### ஆ) தொடர்ந்து வரும் அளவீடு

நிதி சார்ந்த பொறுப்புக்களின் அளவீடு பின்வருமாறு அவற்றின் வகுதியில் தங்கியிருக்கும்.

##### கடன்கள் மற்றும் கடன் பெறுகைகள்

ஆரம்ப இனங்காணலின் பின்னர், வட்டியை சுமந்து வருகின்ற கடன்கள் மற்றும் கடன் பெறுகைகள் என்பன அதனைத் தொடர்ந்து செயல்வலுப் பெற்றிருக்கின்ற வட்டி வீத முறையியலைப் பிரயோகித்து கழிவுநட்டக் கிரயத்தில் அளவிடப்படுகின்ற இலாபங்கள் மற்றும் நட்டங்கள் என்பன வருமானக்கூற்றில் இனங்காணப்படுகின்ற அதே நேரம் பொறுப்புக்கள் செயல் வலுப்பெற்றிருக்கின்ற வட்டி வீத முறையியல் (EIR) கழித்தல் படிமுறையினூடாக இனங்காணப்படுகின்றன. கழிவுநட்டக் கிரயம் நுIR முறையின் இன்றியமை யாத பாகமாக விளங்ககின்ற ஏதாவது கழிவீட்டு அல்லது கொள்வனவு மீதான தவணைக்கட்டணம் மற்றும் கட்டணங்கள் அல்லது கிரயங்கள் என்பவற்றைக்கருத்திற் கொள்வதன் மூலம் கணிப்பிடப்படுகின்றது. EIR கழித்தல் முறை நிதிக் கூற்றிலுள்ள நிதிசார்ந்த ஆகசெலவில் உள்ளடக்கப்படுகின்றது.

#### இ) இனங்காணாது விட்டுவிடுதல்

கடப்பாடு விடுவிக்கப்படும் அல்லது நீக்கப்படும் அல்லது காலாவதியாகும் போது நிதிசார்ந்த ஒரு பொறுப்பு இனங்காணாமல் விட்டுவிடப்படுகின்றது. ஏற்கெனவேயிருக்கின்ற நிதிசார்ந்த ஒரு பொறுப்பு கணிசமான வித்தியாசமான அளவுகளில் அதே கடன் கொடுத்த தரப்பிடமிருந்து மற்றொரு தரப்பினால் அல்லது ஏற்கெனவேயிருக்கின்ற ஒரு பொறுப்பின் அளவுகளில் பிரதியிடப்படுகின்ற போது அத்தகையவைகள் மாற்றத்திற்கு உட்படுத்தப்படு கின்றன. அத்தகைய ஒரு மாற்றம் அல்லது திருத்தம் ஆரம்ப பொறுப்பில் இனங்காணாது விட்டுவிடப்படும் ஒரு செயலாக கருதப்படும். புதிய ஒரு பொறுப்பின் இனங்காணல் மற்றும் அந்தந்த கொணரப்படும் தொகைகளிலுள்ள வித்தியாசம் என்பன வருமானக் கூற்றில் இனங்காணாது விட்டுவிடப்படுகின்றன.

### 2.2.10.3 நிதிசார்ந்த கருவிகளை எதிரீடுசெய்தல்

இனங்காணாது விட்டுவிடப்பட்ட தொகைளை சமப்படுத்தும் பொருட்டு தற்போது நடைமுறைப்படுத்தக்கூடிய சட்டமுறையான உரிமை அல்லது அதே சமயத்தில் சொத்துக்களையும் மற்றும் பொறுப்புக்களையும் ஒரு நிகர அடிப்படையில் தீர்ப்பனவு செய்வதற்கான அல்லது உணரச்செய்வதற்கான ஒரு எண்ணம் இருந்தால் அல்லது இருக்கின்ற நேரத்தில் மாத்திரம் நிதிசார்ந்த சொத்துக்களும் மற்றும் நிதிசார்ந்த பொறுப்புக்களும் சமப்படுத்தப்பட்டு நிதி நிலைக் கூற்றில் பதியப்படுகின்றன.

### 2.2.10.4 நிதிசார்ந்த கருவிகளின் நியாயப் பெறுமதி

அறிக்கையிடப்படுகின்ற ஒவ்வொரு திகதியிலும் துல்லியமான சந்தையில், வர்த்தகத்தில் ஈடுபடுத்தப்படுகின்ற நிதிசார்ந்த சொத்துக்களின் நியாய விலைப் பெறுமானம் கொடுக்கல்வாங்கல் ஆகுசெலவுகளுக்கான எந்தவித தள்ளுபடியுமின்றி குறித்தனுப்பிய சந்தை விலைகளுக்கான அல்லது வியாபார விலைகள் குறித்தனுப்பல்களுக்கான (நீண்ட நிலைக்கான கேள்வி விலை மற்றும் குறுகிய நிலைகளுக்கான கேள்வி விலை) குறிப்பினால் நிர்ணயிக்கப்படுகின்றன.துல்லியமான ஒரு சந்தையில், வர்த்தகத்தில் ஈடுபடுத்தப்படாத நிதிசார்ந்த சொத்துக்கள் தொடர்பான நியாயவிலைப் பெறுமானம் பொருத்தமான விலைமதிப்பீட்டு நுட்பங்களைப் பிரயோகித்து நிர்ணயிக்கப்படுகின்றது. அண்மைகால குறுகிய கொடுக்கல்வாங்கல்கள், பொருண்மையான ரீதியில் அதே மாதிரியான மற்றொரு சொத்தின் நடைமுறை நியாய விலைப் பெறுமானத்திற்கான குறிப்பு, தள்ளுபடிசெய்யப்பட்ட ஒரு காசுப்பாய்ச்சல் பகுப்பாய்வு அல்லது ஏனைய விலைமதிப்பீட்டு மாதிரிகள் என்பவற்றின் பிரயோகம் அத்தகைய நுட்பங்களில் அடங்கலாம்.

### 2.2.10.5. நிதிசாராத சொத்துக்களின் கழிவுநட்டம்

ஒரு சொத்துக்கு நட்டம் ஏற்படலாம் என்பதற்கான ஒரு அறிகுறிதென்படுகின்றதா என்பதை அறிந்துகொள்ளும் பொருட்டு, குழு அறிக்கையிடப்படும் ஒவ்வொரு திகதியிலும் மதிப்பீடு செய்யும். ஏதாவதொரு அறிகுறிதென்படுகின்றது அல்லது ஒரு சொத்துக்கான வருடாந்த நட்டப் பரிசீலனை அவசியப்படுகின்றது எனில், குழு அத்தகைய சொத்தின் மீளறவடக்கூடிய தொகையை மதிப்பீடு செய்யும். சொத்தின் ஆகக்கூடிய தொகை அல்லது விற்பனை செய்வதற்கான காசு ஈட்டும் அலகின் (CGU) குறைந்த நியாயவிலைப் பெறுமான ஆகுசெலவுகள் மற்றும் பிரயோகத்திலுள்ள அதன் பெறுமானம் என்பன ஒரு சொத்தின் மீளறவிடக்கூடிய தொகையில் அடங்குகின்றன. அத்தகைய தொகையானது அத்தகைய சொத்து ஏனைய சொத்துக்களிலிருந்து அல்லது சொத்துக்கள் வகுதியிலிருந்து வரும் பாரியளவில் சுயாதீனமாகவிருக்கின்ற காசுப் பாய்ச்சல்களை ஈட்டாத வரையில் தனிப்பட்டவொரு சொத்தாக நிர்ணயிக்கப்படுவதில்லை. ஒரு சொத்தின் கொணரப்படும் தொகை அல்லது CGU அதன் மீளறவிடக்கூடிய தொகையை விஞ்சுகின்றவிடத்து, அத்தகைய சொத்து நட்டம் ஏற்பட்ட சொத்தாக கருதப்பட்டு, அதன் மீளறவிடக்கூடிய தொகை பதிவழிக்கப்படுகின்றது. பிரயோகத்திலுள்ள பெறுமானத்தை மதிப்பிடுகையில், மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல்கள் அத்தகைய சொத்துக்கான குறித்த பொறுப்புக்கள் மற்றும் பணத்தின் காலப் பெறுமானம் என்பவற்றின் நடைமுறை சந்தை மதிப்பீடுகளைப் பிரதிபலிக்கின்ற ஒரு முன்கூட்டிய வரித்தள்ளுபடி வீதத்தைப் பிரயோகித்து தற்போதைய

# நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் (தொடர்ச்சி)

**2019 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கு**

பெறுமானத்திற்கு தள்ளுபடி செய்யப்படுகின்றன. கிடைக்கக்கூடியதாகவுள்ளது எனில் விற்பனைக்கான, அண்மைகால சந்தைக் கொடுக்கல்வாங்கல்களுக்கான குறைந்த நியாய விலைப் பெறுமான கிரயங்கள் கருத்திற்கொள்ளப்படுகின்றன அத்தகைய கொடுக் கல் வாங்கல்களை இனங்காண முடியாது எனில், பொருத்தமான விலைமதிப்பீட்டு மாதிரி பிரயோகிக்கப்படும்.இத்தகைய கணிப்பீடுகள் விலைமதிப்பீட்டுப் பெருக்கிகள், வெளிப்படையாக வர்த்தகத்தில் ஈடுபடுகின்ற துணை நிறுவனங்களுக்கான குறிப்பீடு செய்யப்பட்ட பங்கு விலைகள் அல்லது ஏனைய கிடைக்கக்கூடிய நியாய விலைப் பெறுமான சுட்டிகள் என்பவற்றினால் உறுதி செய்யப்படுகின்றன.

பொருள் இருப்புக்களின் மீதான நட்டங்கள் அடங்கலாக தொடர்ந்து நிகழும் இயக்கச் செயற்பாடுகளின் பாதிப்பு நட்டங்கள், ஏனைய முழுமையான வருமானத்திற்கு கொண்டுவரப்பட்ட மீள்விலை மதிப்பீடு காணப்படுகின்றவிடத்து முன்னர் மீள்விலை மதிக்கப்பட்ட ஒரு சொத்து தவிர, நட்டம் ஏற்பட்ட சொத்தின் தொழிற்பாட்டிற்கு இணங்க அந்த செலவின வகுதிகளிலுள்ள வருமானக்கூற்றில் இனங் காணப்படுகின்றன. இத்தகையவொரு சந்தர்ப்பத்தில் நட்டமும் கூட ஏதாவதொரு முன்னைய மீள்விலைமதிப்பீட்டுத் தொகை வரை ஏனைய முழுமையான வருமானக் கூற்றில் இனங்காணப்படும்.

முன்னர் இனங்காணப்பட்ட பாதிப்பு நட்டம் மேலும் நீடித்திருக்குமா அல்லது அந்த நட்டம் குறைந்திருக்குமா என்பதை நிர்ணயித்துக்கொள்ளும் பொருட்டு நல்லெண்ணத் தொகை தவிர, சொத்துக்கள் தொடர்பில், அறிக்கையிடப்படும் ஒவ்வொரு திகதியிலும் ஒரு மதிப்பீடு மேற்கொள்ளப்படுகின்றது. அத்தகைய அறிகுறி காணப்பட்டால், குழு சொத்தின் அல்லது காசூட்டும் அலகின் மீளறவிடப்பட வேண்டிய தொகையை மதிப்பிடும். கடந்த பாதிப்பு நட்டம் இனங்காணப் பட்டதால், சொத்தின் மீளறவிடப்பட வேண்டிய தொகையை நிர்ணயிக்கும் பொருட்டு பிரயோகிக்கப்பட்ட எடுகோள்களில் ஒரு மாற்றம் இருந்துள்ளதாயின் மாத்திரம், முன்னர் இனங்காணப்பட்ட பாதிப்பு நட்டம் ஒதுக்கிவைக்கப்படும். அத்தகைய ஒதுக்கிவைத்தல் மட்டுப்பட்டிருக்கும்.

ஆகையால், சொத்தின் கொணரப்படும் தொகை அதன் மீளறவிடப்பட வேண்டிய தொகையை விஞ்சாது அல்லது நிர்ணயிக்கப்பட்டிருக்கக்கூடும் என்ற அந்தக் கொணரப்படும் தொகையையும் விஞ்சாது. தேறிய தேய்மானமும், பாதிப்பு நட்டமும் முன்னைய ஆண்டுகளிலுள்ள சொத்துக்கள் தொடர்பில் இனங் காணப்பட்டிருக்கவில்லை. அத்தகைய ஒதுக்கிவைத்தலானது, சொத்து அந்த ஒதுக்கல் ஒரு மீள்விலைமதிப்பீட்டு அதிகரிப்பாகக் கருதப்படுகின்ற ஒரு மீள்விலை மதிக்கப்பட்ட தொகையில் கணிப்பிடப்படாத வரையில் வருமானக் கூற்றில் இனங்காணப்படுவதில்லை.

### 2.2.11 ஏற்பாடுகள்

பொறுப்புத் தொகையை மேற்கொள்ளக்கூடிய நம்பத்தகுந்த ஒரு மதிப்பீடு மற்றும் பொறுப்பு என்பவற்றைத் தீர்ப்பனவு செய்வதற்கு அவசியப்படுத்தப்படும் பொருளாதார நன்மைகள் பொதிந்துள்ள வளங்களின் வெளிப்பாய்ச்சல் அநேகமாக இருக்கலாம் என்ற கடந்த கால ஒரு விளைவின் பயனாக குழு தற்பொழுது ஒரு கடப்பாட்டை (சட்டமுறையாக அல்லது ஆக்கபூர்வ) கொண்டுள்ளது எனும் போது ஏற்பாடுகள் இனங் காணப்படுகின்றன. மீளளிக்கப்பட வேண்டும் என்ற அதே அளவான ஒரு ஏற்பாட்டை அல்லது அத்தகைய எல்லா ஏற்பாடுகளையும் குழு எதிர்பார்க்கின்றவிடத்து, உதாரணமாக, ஒரு காப்புறுதி ஒப்பந்தத்தின் கீழ்,மீளளிப்புச் செய்ய வேண்டிய தொகை தனியான ஒரு சொத்தாக இனங்காணப்படும். ஆனால், மீளளிப்புச் செய்ய வேண்டிய தொகை உண்மையான தாக இருக்கும் பட்சத்தில் மாத்திரம் இவ்வாறு செய்யப்படும். ஏதாவ ஒரு ஏற்பாடு தொடர்பான செலவு ஏதாவதொரு மீளளிப்பின் தேறிய வருமானக் கூற்றில் எடுத்துரைக்கப்படும்.பணத்தினது காலப் பெறுமானத்தின் பயன்தகுதன்மை தெளிவாக இருக்குமாயின், பொருத்தமானவிடத்து பொறுப்புக்கான விஷேட கடப்பாடுகளைப் பிரதிபலிக்கின்ற நடைமுறையிலுள்ள ஒருவரிக்கு முற்பட்ட வீதத்தைப் பிரயோகித்து ஏற்பாடுகள் தள்ளுபடி செய்யப்படும். இவ்வாறு தள்ளுபடி பிரயோகிக்கப் படுகின்றவிடத்து, கால அளவின் காரணமாக ஏற்பாட்டிலுள்ள அதிகரிப்பு ஒரு நிதிசார்ந்த கிரயமாக இனங்காணப்படும்.

### 2.2.12. ஓய்வூதிய நலக் கடப்பாடுகள்

#### அ) விபரிக்கப்பட்ட நலத் திட்டம் - பணிக்கொடை

விபரிக்கப்பட்ட நலத் திட்டம் - பணிக்கொடை, ஓய்வின்போது ஊழியர் ஒருவர் பெறும் பயன் தொகையை வரையறுக்கின்றது. இது வழக்கமாக சேவைக்காலம், ஊதியம் போன்ற ஒன்று அல்லது மேற்பட்ட காரணிகளில் தங்கியிருக்கும். விபரிக்கப்பட்ட நலத் திட்டம் 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க சட்டத்தில் ஏற்பாடுசெய்துள்ள பணிக்கொடையை கொண்டுள்ளது.

குழுமம், விபரிக்கப்பட்ட நலத்திட்டமான பணிக்கொடையின் உத்தரவாதம் அளிக்கப்பட்ட ஓய்வுப் பயன்களின் இற்றைப் பெறுமதியை எதிர்வு கூறப்பட்ட அலகுக் கிடைப்பனவு (PUC) முறையின் அடிப்படையில் அமைந்த ஆயுட் காலமுறை மதிப்பீட்டினை உபயோகித்து அளவிடும். ஆயுட்காலமுறை கணிப்பீடு சார்ந்த நயங்களும் இழப்புக்களும் முற்றிலுமாக அவை நிகழும் காலத்திலேயே வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படும். பணிக்கொடைப் பொறுப்புக்காக வெளியில் முதலீட்டு நிதியம் ஆக்கப்படவில்லை. இந்த உருப்படி ஐந்தொகையில் ஏனைய விபரிக்கப்பட்ட நலத் திட்டப் பொறுப்பின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

#### ஆ) விபரிக்கப்பட்ட நலத் திட்டம் - ஓய்வூதிய கடப்பாடு

விபரிக்கப்பட்ட நலத் திட்டம் ஓய்வின்போது ஊழியர் ஒருவர் பெறும் ஓய்வூதிய நலத் தொகையை வரையறுக்கின்றது. இது வழக்கமாக சேவைக்காலம், ஊதியம் போன்ற காரணிகளில் தங்கியிருக்கும்.

விபரிக்கப்பட்ட நலஓய்வூதியத் திட்டம் தொடர்பாக நிதிநிலைமைக் கூற்றில் அங்கீகரிக்கப்படும்பொறுப்பு, அறிக்கையிடற் கால இறுதியில் விபரிக்கப்பட்ட நலக்கடப்பாட்டின் இற்றைப் பெறுமதியிலிருந்து திட்டச் சொத்துக்களின் நியாயப் பெறுமதியை கழிக்க வரும் தொகையினை அங்கீகரிக்காத கடந்தகால சேவைக் கிரயங்களுக்காக செம்மையாக்கம் செய்ய வரும் தொகையாகும். விபரிக்கப்பட்ட நலக்கடப்பாடு எதிர்வு கூறப்பட்ட அலகுக் கிடைப்பனவினை உபயோகித்து சுயாதீன ஆயுள்முறை கணிப்பீட்டாளர்களினால் ஆண்டுதோறும் கணிக்கப்படும். விபரிக்கப்பட்ட நலக்கடப்பாட்டின் இற்றைப் பெறுமதியானது மதிப்பிடப்பட்ட எதிர்கால காசு வெளிப்பாய்வுகளை, இலங்கையில் உயர்ந்த தரத்திலான பாரிய கூட்டிணைவுப் பிணைமுறிச் சந்தை இல்லாத காரணத்தால், அரச பிணை முறிகளின் வட்டி விகிதத்தை உபயோகித்து கழிவீடு செய்வதன்மூலம் தீர்மானிக்கப்படும். அரச பிணைமுறிகள் பயன்கள் செலுத்தப்படவுள்ள நாணயத்தில் இருப்பதுடன், அதன் முதிர்வுகாலம் தொடர்புபட்ட ஓய்வூதிய கடப்பாட்டுக் காலத்தை அண்மித்ததாக இருக்கும்.

அனுபவ சீராக்கலின் மூலம் உருவாகும் உண்மையான பெறுகைகள் மற்றும் இழப்புக்கள் மற்றும் ஆயுட்காலமுறை எடுகோள்களின் அறவீடுகள் அவை ஏற்படும் காலத்தில் பிற முற்றுமடங்கியவருமானத்தில் தாக்கல் செய்யப்படும் அல்லது செலவுப்பதிவு செய்யப்படும்.

ஓய்வூதியத் திட்டத்தில் மாற்றங்கள் - ஊழியர் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு (ஒப்படைக் காலம்) சேவையில் இருக்கவேண்டும் என்ற நிபந்தனையை கொண்டிருந்தாலன்றி, கடந்தகால சேவைக்கிரயமானது உடனடியாக முற்றுமடங்கிய வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படும். இந்தச் சந்தர்ப்பத்தில் கடந்தகால

# நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் (தொடர்ச்சி)

**2019 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கு**

சேவைக் கிரயம் ஒப்படைக் காலம் முழுவதற்கும் நேர்கோட்டு அடிப்படையில் காலத்தேய்மானம் செய்யப்படும்.

**இ) விபரிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள் - ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம்**

ஊழியர்கள் ஊழியர் சேமலாப நிதிக்கும் ஊழியர் நம்பிக்கை நிதிக்கும் உரிய சட்டவாக்கங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக உரிமை உடையவராவர். குழுமம் ஊழியர் சேமலாப நிதிக்கும் ஊழியர் நம்பிக்கை நிதிக்கும் மொத்த ஊதியத்தில் முறையே 12% மற்றும் 3% பங்களிப்பு செய்கின்றபோதிலும், இலங்கை மின்சார சபையானது ஊழியரின் மொத்த ஊதியத்தில் 15% இலங்கை மின்சார சபையின் சேமலாப நிதிக்கு பங்களிப்பு செய்கின்றது.

### 22.2.13 சுய காப்புறுதி ஒதுக்கம்

இலங்கை மின்சார சபையானது ஆண்டின் இறுதியில் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட நிலையான சொத்துக்களின் மொத்த பெறுமதியின் 0.1% இனை ஒவ்வொரு ஆண்டிலும் சுய காப்புறுதி ஒதுக்கத்திற்கு மாற்றுகின்றது. இலங்கை மின்சார சபையின் ஆதனம், பொறி மற்றும் உபகரணத்திற்கு ஏற்படும் இழப்புகளும் சேதங்களும் இந்த காப்புறுதி ஒதுக்கத்திற்கு தாக்கல் செய்யப்படும். இந்தத் தேவைகளுக்கான நிதியம் வேறான வங்கிக் கணக்கொன்றில் முதலீடு செய்யப்பட்டுள்ள பணத்திலிருந்து பெறப்படும்.

### 2.2.14 அரசாங்க மானியம்

அரசாங்க மானியங்கள் ஆரம்பத்தில் நியாயமான பெறுமதியில் அங்கீகரிக்கப்படுகின்றன. அவை பெறப்படும் என்ற நியாயமான உத்தரவாதம் காணப்படுகையில், குழுமம் மானியத்துடன் தொடர்புடைய நிபந்தனைகளிற்கு இணங்குகின்றது. செலவினங்களை ஈடுசெய்வதற்கான குழுமத்திற்குரிய மானியங்கள் இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய முற்றுமடங்கிய வருமானக் கூற்றில் செலவினம் அங்கீகரிக்கப்பட்ட அதே காலகட்டங்களில் முறையான அடிப்படையில் ஏனைய வருமானமாக அங்கீகரிக்கப்படுகின்றன. குழுமத்தின் சொத்தொன்றின் கிரயத்தை ஈடுசெய்வதற்கான மானியம்கள், சொத்தொன்றின் பயனுள்ள ஆயுட்காலம் முழுவதற்கும் முறையான அடிப்படையில் இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன.

### 2.2.15 வாடிக்கையாளருடனான ஒப்பந்தங்களிலிருந்தான வருமானம்

பொருட்கள் அல்லது சேவைகளை வாடிக்கையாளருக்கு மாற்றுவதற்கு ஈடாக குழுமம் எதிர்பார்க்கின்ற அளவிற்கு வாடிக்கையாளருக்கு வாக்குறுதியளிக்கப்பட்ட அத்தகைய பொருள் அல்லது சேவையினை வாடிக்கையாளருக்கு மாற்றுவதன் மூலம் குறித்த பணியினை பூர்த்தி செய்கையில் குழுமம் அந்த வருவாயை அங்கீகரிக்கின்றது. அதற்கமைய, பின்வருமாறு குழுமம் வருமானங்களை அங்கீகரிக்கின்றது.

**அ) மின்சாரம் / பொருட்கள் மற்றும் சேவைகளின் விற்பனை**

வழங்கப்பட்ட சேவை இணைப்புக்களின் மூலம் வாடிக்கையாளர்கள் மின்சாரத்தைப் பயன்படுத்துகையில், மின்சார விற்பனையிலிருந்தான வருமானத்தை குழுமம் அங்கீகரிக்கின்றது. வருமானத்தை அங்கீகரிக்கின்ற கட்டணமானது இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவினால் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டண விகிதங்களின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும்.

**ஆ) நுகர்வோர் பங்களிப்பு**

உரிய நேரத்தில் மின்சாரத்தை வழங்குவதற்கு வசதியாக சொத்தை உருவாக்குவதற்கு வாடிக்கையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பெறுவனவுகள் காலம் முழுவதற்கும் வருமானமாக அங்கீகரிக்கப்படுகின்றது. ஏனெனில், குழுமத்தினால் வழங்கப்பட்ட சொத்துக்களின் நலனை மின்சாரத்தை நுகர்கின்ற வாடிக்கையாளர்கள் காலம் முழுவதும் கூட்டாக அனுபவிப்பதனாலாகும். எனவே, பெற்றுக் கொள்ளப்பட்ட தொகைகள் சொத்தின் பயனுள்ள ஆயுட்காலம் முழுவதற்கும் வருமானமாக அங்கீகரிக்கப்படுகின்றது.

**இ) மின்சார வாகனங்களை உயிர்ப்பித்தல் (Charging) வருமானம்**

சபையால் நிறுவப்பட்ட மின்சார வாகன சார்ஜிங் நிலையங்களில் தங்களது மின்சார வாகனங்களிற்கு வாடிக்கையாளர்களால் நுகரப்படும் மின்சாரம், அதற்காக வழங்கப்பட்டுள்ள முன்கூட்டியே செலுத்தும் அட்டைகளைப் (Prepaid Cards) பயன்படுத்துவதன் மூலம் உரிய மின்சாரக் கட்டணங்கள் வசூலிக்கப்பட்டவுடன் வருமானமாக அங்கீகரிக்கப்படுகின்றது.

**ஈ) ஒப்பந்தப் பொறுப்புக்கள்**

ஒரு ஒப்பந்தப் பொறுப்பென்பது குழுமம் ஏற்கனவே பரிசீலித்த வாடிக்கையாளருக்கு சேவைகளை மாற்றுவதற்காக கடமையாகும். எனவே மின்சார வாகனங்களை உயிர்ப்பிப்பதற்கான இலத்திரனியல் அட்டைகளில் எஞ்சியுள்ள முன்கூட்டியே செலுத்திய தொகை மற்றும் சேவை இணைப்புகளிற்காக நுகர்வோர் பங்களிப்பிலுள்ள பதிவழிக்காத தொகை என்பன குழுமத்தின் ஒப்பந்தப் பொறுப்புக்களாக கருதப்படுகின்றன.

**உ) ஏனைய வருமானங்கள் மற்றும் ஆதாயங்கள்**

**வட்டி**

அறவிடுவதற்கான ஐயப்பாடு காணப்படாத பட்சத்தில் வட்டி வருமானம் அட்டுறு வட்டியாக அங்கீகரிக்கப்படுகின்றது. காலக்கழிவுக் கிரயத்தில் அளவிடப்பட்ட அனைத்து நிதிக் கருவிகளிற்குமான வட்டி வருமானமும் கிரயமும்,பொருத்தமான இடங்களில், நிதிச் சொத்து அல்லது பொறுப்பின் தேறிய முன்கொண்டுசெல் தொகைக்கு நிதிக் கருவியின் எதிர்பார்க்கப்பட்ட ஆயுள் அல்லது குறுகிய காலத்தின் ஊடாக மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுக் கொடுப்பனவுகள் அல்லது பெறுவனவுகளை கழிவுநீக்கம் செய்யும் வீதமான தாக்கமுள்ள வட்டி வீதத்தைப் பயன்படுத்தி (EIR) பதிவு செய்யப்படுகின்றது. வட்டி வருமானமானது விரிவான வருமானக் கூற்றிலுள்ள நிதிசார் வருமானத்தில் உள்ளடக்கப்படுகின்றது.

**பங்கிலாபம்**

உருவாக்கப்படுகின்ற கொடுப்பனவை பெற்றுக்கொள்வதற்கு பங்குதாரர்களிற்கு உரிமை காணப்படுகையில், பங்கிலாப வருமானம் அங்கீகரிக்கப்படுகின்றது.

**ஏனையவை**

ஏனைய வருமானம் அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றது. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மற்றும் முதலீடுகள் உள்ளிட்ட ஏனைய நடைமுறையல்லாத சொத்துக்களை கைதவிர்ப்பதன் மீதான வருமானப் பண்புடைய தேறிய ஆதாயம் மற்றும் நட்டங்கள்,கைதவிர்ப்பதன் மூலம் கிடைக்கின்ற வருமானத்திலிருந்து சொத்துக்களை முன்கொண்டுசெல் தொகை மற்றும் தொடர்புடைய விற்பனைச் செலவுகள்கழிக்கப்பட்டு இலாப நட்டக் கூற்றில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளன. தற்செயலான நடவடிக்கைகளிலிருந்து பிரதான வருமானமீட்டல் நடவடிக்கைகளும் குழுமத்தின் அதனையொத்த பொருண்மையற்ற கொடுக்கல் வாங்கல்களிலிருந்து எழுகின்றவைகளும் திரட்சியாக்கப்பட்டு தேறிய அடிப்படையில் அறிவிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படுகின்றன.

# நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் (தொடர்ச்சி)

**2019 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கு**

## 2.3. முக்கியமான கணக்கீட்டு எடுகோள்கள், தீர்ப்புக்கள் மற்றும் மதிப்பீடுகள்

குழும கணக்கீட்டுக் கொள்கைகளை பிரயோகிக்கும்போது, மதிப்பீடுகளுடன் தொடர்பு பட்டவைகளிற்கு மேலாக,தீர்ப்புக்கள் மேற்கொள்ள முகாமை தேவைப்படுத்தப்பட்டுள்ளதுடன், இவை நிதிக்கூற்றுக்களில் அங்கீகரிக்கப்பட்ட தொகைகளில் மிகவும் கணிசமான தாக்கத்தை கொண்டிருக்கும். மேலும், எதிர்காலம் பற்றிய பிரதான எடுகோள்கள் மற்றும் மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மையின் ஏனைய பிரதான மூலங்கள் ஆகியவற்றை ஐந்தொகைத் திகதியில் கவனத்திற் கொள்ளவும் முகாமை தேவைப்படுத்தப்பட்டுள்ளது. இவை அடுத்த நிதியாண்டினுள் சொத்துக்கள் மற்றும் பரிப்புக்களின் முன் கொணரற் தொகைக்கு மேற்கொள்ளவுள்ள பொருண்மையான செம்மையாக்கம் தொடர்பில் கணிசமான இடரை கொண்டிருப்பதுடன், அவை கீழே ஆராயப்பட்டுள்ளன. சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் தொடர்புபட்ட முன் கொணரற் தொகைகள் நிதிக்கூற்றுக்களின் உரிய குறிப்பில் தரப்பட்டுள்ளன. அவ்வாறான பிரதான உருப்படிகள்பற்றி கீழே தரப்பட்டுள்ளன:

### குத்தகைகள்

ஏற்பாடொன்று ஒரு குத்தகையா அல்லது குத்தகையை கொண்டுள்ளதா என்பதனை தீர்மானிப்பது ஆரம்பத் திகதியில் ஏற்பாட்டின் உள்ளடக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது. ஏற்பாட்டை நிறைவு செய்தல் குறிப்பிட்ட சொத்து அல்லது சொத்துக்களின் உபயோகத்தில் தங்கியுள்ளதா அல்லது ஏற்பாட்டில் வெளிப்படையாக குறிப்பிடாவிடினும், சொத்தினை உபயோகிப்பதற்கு உரிமையை அளிக்கின்றதா என்பதனை பொறுத்ததாகும். அதன்படி, சொத்தின் உரிமை தொடர்புபட்ட கிட்டத்தட்ட சகல இடர் மற்றும் பயன்களை குழுமம் மாற்றாத அனல் மின் பிறப்பாக்க பொறிகள் தொழிற்பாட்டு குத்தகைகளாக வகைப்படுத்தப்பட்டன. ஒரு குத்தகை நிதிக்குத்தகையா அல்லது செயற்பாட்டுக் குத்தகையா என வகைப்படுத்துவதற்கு தனியான அல்லது இணைந்த தேர்வு நிபந்தனைகளை தீர்மானித்தலில் குழுமம் கணிசமான சுயதீர்ப்பை பிரயோகித்துள்ளது.

### நிதிக் கருவிகளின் சந்தைப் பெறுமதி

நிதிக்கூற்றில் பதிவுசெய்யும் நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பொறுப்புக்களின் சந்தைப் பெறுமதியினை செயற்திறனான சந்தையிலிருந்து பெறமுடியாதபோது, அவற்றின் சந்தைப் பெறுமதிகாசுப்பாய்வு கழிவீட்டு முறை அடங்கலான மதிப்பீட்டு நுட்பங்களை பாவித்து தீர்மானிக்கப்படும். இம் முறைகளுக்கான உள்ளீடுகள் சாத்தியமானவிடத்து அவதானிக்கக்கூடிய சந்தைகளிலிருந்து பெறப்படுவதுடன் அவ்வாறு பெறுதல் சாத்தியமற்ற இடத்து சந்தைப் பெறுமதியை நிர்ணயித்தலில் ஓரளவு சுயதீர்ப்பு தேவைப்படும். இந்த சுயதீர்ப்பு திரவத்தன்மை இடர் மற்றும் மாறுபடற்தக்க உள்ளீடுகளின் கவனத்திற் கொள்ளலை அடக்கும். இக் காரணிகள் பற்றிய எடுகோள்களில் மாற்றங்கள் நிதிக்கூற்றுக்களில் அறிக்கையிடப்படும் சந்தைப் பெறுமதியில் தாக்கங்களை ஏற்படுத்தும்.

### நிதிசாராத சொத்துக்களின் சேதஇழப்பு நட்டங்களின் மீளாய்வு

சேத இழப்பு மீளாய்வின் மூலம் சொத்துக்கள் சேத இழப்புக்கு ஆளாகியுள்ளனவா என்பதனை குழுமம் தீர்மானிக்கும். இது காசு பிறப்பாக்க அலகுகளின் ‘உபயோகப் பெறுமதியினை மதிப்பிடுதலை தேவைப்படுத்தும். உபயோகப் பெறுமதியை மதிப்பிடுவதற்கு காசு பிறப்பாக்க அலகிலிருந்து எதிர்பார்க்கப்படும் எதிர்காலக் காசுப்பாய்வுகளை முகாமை மதிப்பிடுவதுடன், அக் காசுப் பாய்வுகளின் இற்றைப் பெறுமதியை கணிப்பதற்கு பொருத்தமான கழிவுவிகிதத்தை தேர்ந்தெடுக்கவும் வேண்டும். இந்த மதிப்பீட்டிற்காக எதிர்பார்க்கும் எதிர்கால காசுப்பாய்வுகள் மற்றும் கழிவீட்டு விகிதங்களை குழுமம் மதிப்பிடவேண்டி உள்ளதனால், இவை நிச்சயமற்ற தன்மைக்கு ஆளாகின்றன.

### வியாபார மற்றும் ஏனைய வருமதிகளின் சேதஇழப்பு நட்டங்கள்

தனியாக மதிப்பிடப்பட்டு சேதஇழப்பு அடையாததாக காணப்படும் வியாபார மற்றும் ஏனைய வருமதிகளை பொறுத்தமட்டில், தனியாக கணிசமற்றதான வருமதிகள் எல்லாம் நேரடியான சான்றுகள் இருந்து ஆனால் அவற்றின் தாக்கம் இன்னும் சரியாக தெளிவில்லாதபோது ஏற்பட்ட இழப்பு நிகழ்வு தொடர்பில் ஏற்பாடு செய்யவேண்டுமா எனத் தீர்மானிப்பதற்காக ஒத்த இடர் இயல்புகளைக் கொண்ட சொத்துக்களின் கூட்டமாகச் சேர்க்கப்பட்டு பின்னர் மதிப்பிடப்படும். கூட்டமான மதிப்பீடு, வருமதித் தொகுதியிலுள்ள தரவுகள் (நிலுவைக் காலங்கள், கடன் பயன்பாடு ஆகியன) மற்றும் இடர்சார்ந்த மற்றும் பெருளியற் தரவுகளில் (வேலையற்றோர் மட்டம், விலைச் சுட்டிகள் நாடுசார்ந்த இடர் மற்றும் வேறுபட்ட தனியார் குழுமங்களின் செயற்பாடு ஆகியன அடங்கலாக) அதிக அக்கறை கொள்வதன் தாக்கம் பற்றிய சுயதீர்ப்புக்கள் ஆகியவற்றை கணக்கிற் கொள்ளும்.

### வரிகள்

குழுமம் வருமானவரி மற்றும் VAT அடங்கலாக ஏனைய வரிகளுக்கும் ஆளாகின்றது. நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மற்றும் வரிவிதிப்பதற்கு வரிவிதி வருமானத்தை தீர்மானித்தல் ஆகியவற்றிற்கு ளுடுகுசுளு இனை கடைப்பிடிப்பது தொடர்பாக வரி வழிகாட்டிகள் இன்னும் கிடைக்காமையினால் நடப்பு, பிற் போட்ட மற்றும் ஏனைய வரிகளுக்கான மொத்த ஏற்பாட்டை தீர்மானிப்பதில் கணிசமான சுயதீர்மானம் தேவைப்படுகின்றது. இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் தறுவாயில் வரிச் சட்டங்களின் பிரயோக விளக்கம் தொடர்பாக நிச்சயமற்ற நிலை காணப்படுகின்றது. நடப்பு, பிற்போட்ட மற்றும் ஏனைய வரிகளுக்காக சொத்துக்கள் மற்றும் பொறுப்புபுக்களை குழுமம் மதிப்பீட்டின் அடிப்படையில் மேற்கொண்டுள்ளது. இந்த விடயங்களின் காரணமாக இறுதி வரிப் பொறுப்புக்கள் ஆரம்பத்தில் பதிவு செய்த தொகைகளிலிருந்து வேறுபடுவதனால், அது வருமானம், பிற்போட்ட வரி மற்றும் ஏனைய வரிகளில் அந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்ட காலங்களில் தாக்கத்தினை கொண்டிருக்கும்.

### ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பயன்தரு ஆயுட்காலம்

குழுமம் ஒவ்வொரு அறிக்கையிடற் திகதியிலும் சொத்துக்களின் ஈற்றுப் பெறுமதி, பயன்தரு ஆயுட்காலம் மற்றும் தேய்மான முறைகளை மீளாய்வு செய்யும். இந்தப் பெறுமதிகள், வீதங்கள் மற்றும் முறைகளை மதிப்பிடுதலில் முகாமையால் சுயதீர்மானம் மேற்கொள்ளப்படும்.

### விபரிக்கப்பட்ட நலத் திட்டங்கள் - பணிக்கொடை

வாடிக்கையாளர்களின் குறைந்த செலவிடல் வருமானம் காரணமாக மின் பட்டியல்களைத் தீர்ப்பதற்கான சலுகை காலத்தை வழங்குவதற்கான அரசாங்கத்தின் தீர்மானம் மற்றும் பட்டியல்களைச் செலுத்தாதுள்ள வாடிக்கையாளர்களின் மின்சாரம் துண்டிக்கப்படுவதைத் தள்ளிவைப்பது போன்றன சபையின் ஏற்கனவே தடைபட்டிருந்த காசோட்டத்தை மேலும் பாதித்திருந்தது. காசோட்டம் தொடர்பான சவால்களைத் தணிக்கும் பொருட்டு, மூலதனப் பண்புடைய செலவினங்களை அத்தியாவசியத் தேவைகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தவும், வழங்குனர்களிற்கான கொடுப்பனவை தாமதப்படுத்தவும் பணிப்பாளர் சபை முடிவு செய்தது. எனவே, தடையற்ற மின்சாரத்தை பராமரிப்பதற்காக மின்சார சபை நிதியை கடனாகப் பெற வேண்டியிருந்தது.

**குழுமம்**

அண்மையில் சொந்த நாட்டு அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட கோவிட் 19 இன் மீதான நடவடிக்கைகள், எல்.டி.எல் குழுமத்தின் நிறுவனங்கள் மற்றும் அவற்றின் வாடிக்கையாளர்களின் வணிக நடவடிக்கைகளுக்கு தற்காலிக இடையூறுகளை ஏற்படுத்தியிருந்ததுடன் இச்சீர்குலைவு முக்கியமாக உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற துணைக் கம்பனிகளின் வணிகத்தை பாதித்திருந்தது. குழுமத்தின் இந்திய உற்பத்தி நிறுவனமும் இதேபோன்ற சூழ்நிலையை எதிர்கொண்டது. எவ்வாறாயினும், மின் பிறப்பாக்க வணிகத்திற்கு உதவியாக செயற்பாட்டு பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற எல்.டி.எல் குழுமத்திலுள்ள கம்பனிகள், அவற்றின் கடன்களை மீட்டெடுப்பதில் தாமதம் இருந்தபோதிலும், ஒரு அத்தியாவசிய சேவையாக தங்கள் செயற்பாடுகளைத் தொடர்ந்து மேற்கொள்கின்றன.

மேற்கூறியவற்றுக்கு மேலதிகமாக, மேற்படி செயற்பாடுகள் மற்றும் சூழ்நிலைகளின் விளைவுகள் 2020 இன் முதலாம் காலாண்டு முதல் குழுமத்தின் நிதி விளைவுகளில் அவற்றால் உணரப்படக்கூடியளவில் எதிர்மறையான விளைவை ஏற்படுத்தியிருந்ததுடன் அது முதல் கணிசமான காலத்திற்கு இந்நிலை தொடரக்கூடும்.

2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிச் சொத்தின் ஏனைய விரிவான வருமானத்தின் ஊடான (வெஸ்ட் கோஸ்ட் பவர் பிரைவேட் லிமிடெட் முதலீடு) நியாயப் பெறுமதியானது மூலதனத்தின் நிறையளித்த சராசரி கிரயம், பணவீக்க விகிதம் மற்றும் நாணயப் பரிமாற்று வீதங்கள் போன்ற பொருளாதார நிலைமைகளின் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்டது. கோவிட்-19 இன் தாக்கம் இன்னும் இடம்பெற்று வருவதனால், அத்தகைய அனுமானங்களின் தகுதியையும் அதற்கான எந்தவொரு தாக்கத்தையும் நியாயமான முறையில் தீர்மானிக்க முடியாதுள்ளது.

எந்தவொரு சாத்தியமான தாக்கத்தையும் குறைப்பதற்காக குழுமத்திலுள்ள கம்பனிகள் தொடர்ந்து தகுந்த நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதுடன் தகுந்த நிலைமை உருவாகும்போது அவற்றின் நிகழத்தக்க மற்றும் இடர் முகாமைத்துவ நடவடிக்கைகளை மீளாய்வு செய்யவுள்ளன. இந்த நிகழ்வுகள் அடுத்தடுத்த நிகழ்வுகளை சீராக்கியிருக்கவில்லை என்று குழுமம் தீர்மானித்துள்ளது. அதன்படி, 2019 திசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி நிலைமை மற்றும் செயற்பாட்டு விளைவுகள் அவற்றின் தாக்கத்தை பிரதிபலிக்கும் வகையில் சீராக்கப்படவில்லை. கொரோனா வைரஸின் நிலைமைகள் மற்றும் பரவல் இன்னும் உருவாகி வருவதால், குழுமத்தின் நிதி பெறுபேறுகளுக்கான தாக்கத்தை இந்த நிதிக்கூற்றுக்களை அங்கீகரித்த திகயில் நியாயமான முறையில் மதிப்பிட முடியாதிருந்தது.

# நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் (தொடர்ச்சி)

திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கு

(சகல தொகைகளும் இலங்கை ரூபா ஆயிரத்தில்)

## 35 நிகழத்தக்கவைகள்

### 35.1 சபை

31.12.2019 இல் உள்ளவாறு மேன்முறையீட்டு நீதிமன்றம், உயர் நீதிமன்றம் உட்பட தொழில் நியாய சபையாலும் வேறு நீதிமன்றங்களினாலும் முடிவுறாதிருக்கும் வழக்காடல் விடயங்கள் தொடர்பில் எழும் உறுமுரிமைப் பொறுப்பில் இ.மி.ச. எதிராளி எதிர்வாதியாகும். இந்த எல்லா வழக்குகளும் பாதகமாக தீர்மானிக்கப்படும் பட்சத்தில் உறுமுரிமைப் பரிப்பு ரூபா 4,340 மில்லியன் என மதிப்பிடப்பட்டிருக்கின்றது.

### 35.2 LTL ஹோல்டிங் (பிரைவட்) லிமிடட்

#### நிகழத்தக்க சட்டரீதியான கோரிக்கைகள்

**ஹெலதனவி லிமிடட்**

HC (Civil) ARB /185/2014- ஹெலதனவி லிமிடட் எதிர் இலங்கை மின்சார சபை

ஹெலதானவி லிமிடெட் எதிர் இலங்கை மின்சார சபை விடயத்தில் மாண்புமிகு நடுவர் தீர்ப்பாயத்தால் கம்பனிக்கு ஆதரவாக வழங்கப்பட்ட ஒரு நடுவர் தீர்ப்பை 2013 அக்டோபர் 29 அன்று அமுல்படுத்தக் கோரி கம்பனி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளது. 2017 நவம்பர் 10 அன்று, துணைக் கம்பனிக்கு ஆதரவாக அமுலாக்க மனுவை உயர் நீதிமன்றம் வழங்கியது

**HC (Civil) ARB /268/2013- ஹெலதனவி லிமிடட் எதிர் இலங்கை மின்சார சபை**

29 அக்டோபர் 2013 தேதியிட்ட ஹெலதானவி லிமிடெட் ஏள சிலோன் மின்சார வாரியத்தின் விஷயத்தில் மேலே குறிப்பிடப்பட்ட நடுவர் விருதை ஒதுக்கி வைப்பதற்கான உத்தரவுக்காக இலங்கை மின்சார வாரியம் இந்த விண்ணப்பத்தை முன்வைக்கிறது. 10 நவம்பர் 2017 அன்று, உயர் நீதிமன்றம் அமலாக்க விண்ணப்பத்தை வழங்கியது துணை நிறுவனத்திற்கு ஆதரவாக

**மியுயர் நீதிமன்ற மேன்முறையீட்டு இல. SC/HC/LA மேன்முறையீடு 142/2017 - ஹெலதனவி கம்பனிக்கு சார்பாக வழங்கப்பட்ட தீர்ப்பு அமுல்படுத்தப்படுவதனை எதிர்த்து இ.ம.ச. இனால் மேற்கொள்ளப்பட்ட இறுதி மேன்முறையீடு**

ஹெலடனவிக்கு ஆதரவாக வழங்கப்பட்ட தீர்ப்பை எதிர்த்து நேரடியாக மேல்முறையீடு செய்ய CEB க்கு உரிமை இல்லை; எவ்வாறாயினும், எஸ்.சி.யின் அனுமதியுடன் முதலில் மேல்முறையீடு செய்ய சிறப்பு விடுப்பு மூலம் உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ய அனுமதிக்கப்படுகிறது. CEB எழுப்பிய சில ஆட்சேபனைகள் பரிசீலிக்கப்படவில்லை என்ற உண்மையை கருத்தில் கொண்டு தீர்ப்பை மீண்டும் எழுதுமாறு 2019 மே 14 அன்று மானிய விடுப்பு தொடரலாமா இல்லையா என்று விசாரித்த உச்சநீதிமன்றம், இரண்டு வழக்குகளையும் ஒரே வணிக உயர் நீதிமன்ற நீதிபதிக்கு திருப்பி அனுப்ப உத்தரவிட்டது. கொடுக்கப்பட்ட தீர்ப்பில். இதன் விளைவாக, இரண்டு வழக்குகளும் உயர்நீதிமன்ற நீதிபதி முன் அழைக்கப்பட்டன, மேலும் இரு தரப்பினரும் கூடுதல் / மேலதிக சமர்ப்பிப்புகளை வழங்கினர். இது ஜனவரி 22, 2020 அன்று முடிவுக்கு வந்தது. இரு வழக்குகளும் 2020 ஏப்ரல் 3 ஆம் தேதி தீர்ப்பிற்காக நிர்ணயிக்கப்பட்டன. இருப்பினும், கோவிட் -19 தொற்றுநோயால் ஏற்பட்ட வரம்புகளைக் கருத்தில் கொண்டு, நாட்டின் நிலைமை இயல்பு நிலைக்கு வரும் வரை தீர்ப்பு தேதி வேறுபடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**ஏனைய நிகழத்தக்கவைகள**

எல்ரீஎல் ஹோல்டிங்ஸ் (பிரைவேட்) லிமிடெட் இன் துணை கம்பனிகள் 2016/17, 2017/18 மற்றும் 2018/19 ஆகிய ஆண்டுக்கான வெற், என்ப.டி மற்றும் ஈஎஸ்சி மீதான ரூபா 1,158 மில்லியன் வரி மதிப்பீடுகளை ரூபா 479 மில்லியன் மிகைஅறவிடு உள்ளடங்கலாக பெற்றுக்கொண்டிருந்தன. இந்த வரி மதிப்பீடுகளுக்கு எதிராக அந்தந்த கம்பனிகள் செல்லுபடியாகும் முறையீட்டை தாக்கல் செய்துள்ளன. சுயாதீன வரி ஆலோசகர்களுடன் கலந்துரையாடி, கிடைத்த தகவல்களின் அடிப்படையில், 2019 திசெம்பர் 31 நிலவரப்படி துணை கம்பனிகளின் பணிப்பாளர்கள் எதிர்காலத்தில் எந்தவொரு பொறுப்பும் ஏற்படாது என்ற நிலைப்பாட்டில் உள்ளனர்.

### 35.3 லங்கா கோல் கம்பனி (பிரைவட்) லிமிடட்

லிபர்டி கொம்மோடிரீஸ் இனால் மேலதிகமாக எடுக்கப்பட்டிருந்த தொகைக்கு எதிராக கம்பனி வழக்கொன்றை தொடர்ந்துள்ளது. வழக்குத் தீர்ப்பு இன்னும் வழங்கப்படவில்லை. வழக்கு நடுவர் தீர்ப்பிற்கு விடப்பட்டுள்ளது. ஐந்தொகைத் திகதியில் உள்ளவாறு கோரிக்கையின் முன்கொண்டு செல் பெறுமதி ரூபா 236 மில்லியன் ஆகும்.

## 36 மூலதனக் கடப்பாடுகள்

### 36.1 சபை

சபைக்கு 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு (2018 - இல்லை) சாதாரண வர்த்தக நடவடிக்கைகளின் போது ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கைள கொள்வனவு செய்தமை காரணமாக பொருண்மையான கடப்பாடுகள் காணப்படவில்லை.

### 36.2 லங்கா மின்சார (தனி) கம்பனி லிமிடட்

கம்பனிக்கு 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு (2018 - இல்லை) சாதாரண வர்த்தக நடவடிக்கைகளின் போது ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கைள கொள்வனவு செய்தமை காரணமாக பொருண்மையான கடப்பாடுகள் காணப்படவில்லை.

# நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் (தொடர்ச்சி)

திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கு

(சகல தொகைகளும் இலங்கை ரூபா ஆயிரத்தில்)

## 36.3 எல்ரீஎல் ஹோல்டிங் (பிரைவட்) லிமிடட்

### குத்தகைகள்

குத்ததைப் பெறுனராக குழுமத்தின் நிதிக் குத்தகை கடப்பாடுகள் குறிப்பு 22.5 இல் வெளிப்படுத்தப்படுகின்றது. குழுமம் ஒரு குத்தகை வழங்குனராக பெறவேண்டிய நிதிக் குத்தகை குறிப்பு 12 இல் வெளிப்படுத்தப்படுகின்றது.

### நாணயக் கடிதம்

| வங்கி | 2019 | 2018 |
|---|---|---|
| ஹட்டன் நெஷனல் வங்கி PLC | 44,572 | 17,465 |
| ஸ்டேன்டா்ட் சார்டட் வங்கி | 556,333 | 254,244 |
| | 600,905 | 271,709 |

### உத்தரவாதம்

| வங்கி | 2019 | 2018 |
|---|---|---|
| ஹட்டன் நெஷனல் வங்கி PLC | 386,439 | 264,600 |
| கனாரா வங்கி - இந்தியா | 1,058 | 1,689 |
| ஸ்டேன்டா்ட் சார்டட் வங்கி | 331,622 | 172,450 |
| ஹபீப் வங்கி | 73,289 | 62,708 |
| | 792,408 | 501,447 |

### இறக்குமதி உண்டியல்கள்

| வங்கி | 2019 | 2018 |
|---|---|---|
| ஹட்டன் நெஷனல் வங்கி PLC | 23,629 | 3,652 |
| ஸ்டேன்டா்ட் சார்டட் வங்கி | 25,077 | 30,553 |
| | 48,706 | 34,205 |

LTL ஹோல்டிங் (பிரைவட்) லிமிடட் அதன் துணைக் கம்பனிகளால் பெறப்பட்ட வங்கிக் கடன் ஒன்றிற்காக ரூபா 2,557,481,904 கூட்டுத்தொகையான கம்பனி ஒத்தரவாதத்தை வழங்கியிருந்தது. (2018: ரூபா 2,567,168,704/-)

எல்.டி.எல் ஹோல்டிங்ஸ் லிமிடெட் இன் துணை கம்பனியான லக்தனவி லிமிடெட் பல்வேறு வங்கிகளுக்கு மொத்தம் ரூபா 11.8 பில்லியன் மற்றும் அமெரிக்க டாலர் இல்லை (2018: ரூபா 5.3 பில்லியன் மற்றும் அமெரிக்க டாலர் 25,000) செயலாற்றல் உத்தரவாதங்களை அளித்துள்ளது.

மேலும், புதிய துணை கம்பனியாக பங்களாதேஷில் குழுமத்தில் சேர்க்கப்பட்டுள்ள/பெனி லங்கா பவர் லிமிடெட் மின் உற்பத்தி நிலையத்தை நிர்மாணிப்பது குறித்து பங்களாதேஷ் மின்வலு மேம்பாட்டு சபைக்கான செயலாற்றல் உத்தரவாதமாக என்டிபி வங்கி பி.எல்.சி.க்கு கம்பனி உறுதியளித்துள்ளது (2018: 4,104,000 டாலர்)

கம்பனி பல்வேறு வங்கிகளுக்கு மொத்தமாக ரூ. 350 மில்லியன் மற்றும் யூஎஸ்டொலர் 731,700 (2018: ரூபா 350 மில்லியன் மற்றும் யூஎஸ்டொலர் இல்லை) கேள்விமனு உத்தரவாதங்களை அளித்துள்ளது.

### ஏனைய கடப்பாடுகள்

#### லக்தனிவி லிமிடட்

கெரவலபிடிய மனிவலுச் செயற்திட்ட நிர்மாணத்தில் ஏதேனும் தொழில்நுட்பத் தவறுகள் அல்லது கெரவலபிடிய மின்வலுச் செயற்திட்டத்திற்கான கடன் தொகையினை மீளளிப்பதில் வெஸ்ட்கோஸ் பவர் (பிரைவட்) லிமிடட் இனால் ஏதேனும் கடன் ஏய்ப்புச் செய்யப்படுதல் காணப்படுமாயின், வெஸ்ட்கோஸ் பவர் (பிரைவட்) லிமிடட் இடமிருந்து பெறப்பட்ட பங்கிலாபத்திற்கு சமமான தொகைக்கு கம்பனி இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கு பொறுப்புக் கூறுதல் வேண்டும

#### லக்தனவி பங்கலா பவர் லிமிடட்

மின்வலு கொள்வனவு உடன் படிக்கையின் பிரகாரம், கம்பனி பிபிடீபி இற்கு பங்களாதேசில் உள்ள ஒரு பட்டியலிடப்பட்ட வங்கியால் இரண்டு மாத திறன் இயலளவுடைய TK 117,844,860 இற்குச் சமமான ஈடுசெய்ய முடியாத மற்றும் நிபந்தனையற்ற வங்கி உத்தரவாதத்தை வழங்குதல் வேண்டும். இது மின்வலு கொள்வனவு உடன்படிக்கையின் பிரகாரம் கம்பனியின் செயலாற்றல் கடப்பாட்டிற்கு இணங்கிய பாதுகாப்பாக இருக்கும். அதற்கமைய, கம்பனி, தி. சிட்டி பேங் லிமிடட் இடமிருந்து TK 117,844,860 இற்குச் சமமான மேற்படி உத்தரவாதத்தைப் பெற்று வழங்கியுள்ளது. தாமதச் சேதங்கள் அல்லது ஏனைய சேதங்கள், வட்டி அல்லது கம்பனி பிபிடீபி இற்குச் செலுத்த வேண்டிய ஏனைய தொகைகள் காணப்பட்டால், இந்த வங்கி உத்தரவாதத் தொகையை தேவைக்கேற்ப செலுத்த வேண்டிய பொறுப்பு கம்பனிக்கு உள்ளது.

# நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் (தொடர்ச்சி)

திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கு

(சகல தொகைகளும் இலங்கை ரூபா ஆயிரத்தில்)

**ராஜ் லங்கா பவர் கம்பனி லிமிட்**

மின்வலு கொள்வனவு உடன் படிக்கையின் பிரகாரம், கம்பனி பிபிடீபி இற்கு பங்களாதேசில் உள்ள ஒரு பட்டியலிடப்பட்ட வங்கியால் இரண்டு மாத திறன் இயலளவிற்குச் சமமான ஈடுசெய்ய முடியாத மற்றும் நிபந்தனையற்ற வங்கி உத்தரவாதத்தை வழங்குதல் வேண்டும். இது மின்வலு கொள்வனவு உடன்படிக்கையின் பிரகாரம் கம்பனியின் செயலாற்றல் கடப்பாட்டிற்கு இணங்கிய பாதுகாப்பாக இருக்கும். அதற்கமைய, கம்பனி, தி. சிட்டி பேங் லிமிட் இடமிருந்து வுழு 110,163,300 இற்குச் சமமான மேற்படி உத்தரவாதத்தைப் பெற்று வழங்கியுள்ளது. தாமதச் சேதங்கள் அல்லது ஏனைய சேதங்கள், வட்டி அல்லது கம்பனி பிபிடீபி இற்குச் செலுத்த வேண்டிய ஏனைய தொகைகள் காணப்பட்டால், இந்த வங்கி உத்தரவாதத் தொகையை தேவைக்கேற்ப செலுத்த வேண்டிய பொறுப்பு கம்பனிக்கு உள்ளது.

**ஃபெனி லங்கா பவர் லிமிடட**

மின்வலு கொள்வனவு உடன்படிக்கை (பிபிஏ) படி, குறிப்பிடப்பட்ட தொகைக்கு, நிறுவனத்தின் செயலாற்றல் இணங்குவதற்கான பாதுகாப்பாக பிபிஏ கடப்பாட்டின் படியான இரண்டு மாத திறன் கொடுப்பனவாக பங்களாதேஷில் ஒரு பட்டியலிடப்பட்ட வங்கியால் ஈடுசெய்ய முடியாத மற்றும் நிபந்தனையற்ற வங்கி உத்தரவாதத்தை கம்பனி பங்களாதேஷ் மின்வலு மேம்பாட்டு சபைக்கு (பிபிடிபி) வழங்க வேண்டும். அதன்படி, நிறுவனம் மேற்கண்ட உத்தரவாதத்தை பங்களாதேஷின் ஈஸ்டர்ன் பேங்க் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து 2,427,378.39 அமெரிக்க டாலருக்கு சமமாக வழங்கியுள்ளது. திரவச் சேதம் அல்லது பிற சேதங்கள், வட்டி அல்லது கம்பனி பிபிடிபிக்கு செலுத்த வேண்டிய பிற தொகைகள் தேவைப்பட்டால் இந்த வங்கி உத்தரவாதத் தொகையை தேவைக்கேற்ப பிபிடிபிக்கு செலுத்த கம்பனி கடமைப்பட்டுள்ளது.

**இன்ப்ரா என்ட் இன்ஜினியரிங் (பிரைவட்) லிமிடட்**

கம்பனி எச்என்பி இற்கு ரூபா 289,393,902 (2018: இல்லை) தொகையினை நாணயக் கடிதத்திற்காக வழங்குதல் வேண்டும். மேலும், எல்ரீஎல் குழுமத்தில் உள்ள பிற தொடர்புடைய கம்பனிகளான நிவிடு (பிரைவேட்) லிமிடெட், நிவிடு அசுபினியேல்லா (பிரைவேட்) லிமிடெட் மற்றும் பவன் தனவி (பிரைவேட்) லிமிடெட் ஆகியவற்றிற்கு செயல்பாட்டு மற்றும் பராமரிப்பு சேவைகளை வழங்க கம்பனி நிலையான விலை ஒப்பந்தங்களை கொண்டுள்ளது.

## 37 தொடர்புடைய தரப்பு வெளிப்படுத்தல்கள்

### 37.1. இலங்கை அரசாங்கம் மற்றும் அதனுடன் தொடர்புடைய நிறுவனங்களுடனான கொடுக்கல் வாங்கல்கள்

இலங்கை அரசாங்கம் இ.மி.ச. இனை நேரடியாகக் கட்டுப்படுத்துகின்றமையால், குழுமம் இலங்கை அரசாங்கத்தினுடையது எனக் கருதப்படுவதுடன் கட்டுப்படுத்துகின்ற, கூட்டாகக் கட்டுப்படுத்துகின்ற அல்லது அரசாங்கத்தினால் குறிப்பிடத்தக்க அளவில் செல்வாக்குச் செலுத்துகின்ற ஏனைய தொடர்புடைய அரசாங்க நிறுவனங்கள் LKAS 24 "தொடர்புடைய தரப்பு வெளிப்படுத்தல்கள்" இற்கு அமைய தொடர்புடைய நிறுவனங்களாகும்.

குழுமமும் சபையும் இலங்கை அரசாங்கத்துடனும் அதனுடன் தொடர்புடைய நிறுவனங்களுடனும் கொடுக்கல்வாங்கல்கள், ஒழுங்குபடுத்தல்கள் மற்றும் உடன்படிக்கைகளில் ஈடுபடுவதுடன் அறிவிக்கப்பட்ட குறிப்பிடத்தக்க கொடுக்கல் வாங்கல்கள் கீழே தரப்படுகின்றன.

| | கொடுக்கல் வாங்கலின் தன்மை | குழுமம் 2019 | குழுமம் 2018 | சபை 2019 | சபை 2018 |
|---|---|---|---|---|---|
| இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் | எரிபொருள் கொள்வனவு | 53,399,860 | 46,276,991 | 53,399,860 | 46,276,991 |
| பொது முயற்சிகள் திணைக்களம் | செயற்திட்டக் கடன் பெறுதல் | 18,026,484 | 15,379,717 | 18,026,484 | 15,379,717 |
| மக்கள் வங்கி | வங்கிக் கடன் பெறுதல் | 83,363,945 | 63,568,932 | 83,363,945 | 62,168,932 |
| மக்கள் வங்கி | முதலீடுகள் | 7,620,302 | 13,423,183 | - | - |
| தேசிய சேமிப்பு வங்கி | வங்கிக் கடன் பெறுதல் | 16,014,000 | - | 10,000,000 | - |
| இலங்கை வங்கி | வங்கிக் கடன் பெறுதல் | 17,404,077 | 260,264 | 15,000,000 | - |
| அரசாங்க முதலீட்டு அடைமான வங்கி | முதலீடுகள் | 57,442 | 950,646 | - | |
| எச்டீஎப்சி வங்கி | முதலீடுகள் | 1,061,638 | - | - | - |

அத்துடன், கீழே விபரிக்கப்பட்டுள்ள சாதாரண வியாபார செயற்பாடுகளுடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்கள், இலங்கை அரசாங்கத்துடனும் அதனுடன் தொடர்புடைய நிறுவனங்களுடனும் இடம்பெறுகின்றன.

இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கியுடன் வங்கிக் கணக்குகளைப் பேணுதல் மற்றும் வங்கிக் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுதல்

நியதிச்சட்ட இறைகளையும் வரிகளையும் செலுத்துதல்

ஊழியர் ஓய்வூதிய நலன்களைச் செலுத்துதல் - EPF & ETF

தொலைபேசி, மின்சாரம் மற்றும் நீர்க்கட்டணங்களைச் செலுத்துதல்

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு மோட்டார் வாகன காப்புறுதிக் கட்டணங்களைச் செலுத்துதல்

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு தவணைக் கட்டணங்களைச் செலுத்துதல்

அரங்கத்திற்குச் சொந்தமான வங்கிகளுடன் முதலீடுகள், நடைமுறைக் கணக்குகள் மற்றும் கடன் பெறுதல்களில் ஈடுபடுதல். (HNB, NDB, கொமர்ஷல் வங்கி மற்றும் DFCC வங்கி)

# நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் (தொடர்ச்சி)

திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கு

(சகல தொகைகளும் இலங்கை ரூபா ஆயிரத்தில்)

## 37.2 இ.மி.ச. இன் உறவுமுறைத் தரப்புக் கொடுக்கல் வாங்கல்களும் உறவுமுறைத் தரப்புக் கம்பனிகளும்

சாதாரண வணிகச் செயற்பாடுகளில் இ.மி.ச. இனால் உறவுமுறைத் தரப்பினர்களுடன் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் பட்டியலொன்று கீழே தரப்படுகின்றது.

| | உறவுமுறை | கொடுக்கல் வாங்கலின் பெயர் | 2019 | 2018 |
|---|---|---|---|---|
| லங்கா மின்சாரக் கம்பனி | துணைக் கம்பனி | மின்சார விற்பனை | (27,737,578) | 25,478,362 |
| | | மின்சார விற்பனைக்காக காசு கிடைத்தல் | 36,799,539 | 25,117,887 |
| | | பங்கிலாப வருமானம் | 542,409 | 383,909 |
| | | பங்கிலாப பெறுவனவு | (542,409) | (383,909) |
| | | கடன் தீர்ப்பனவு | 2,403 | 2,196 |
| LTL ஹோல்டிங் (பிரைவட்) லிமிடட் | துணைக் கம்பனி | பங்கிலாப வருமானம் | 2,204,559 | 1,889,622 |
| | | பங்கிலாப கிடைப்பனவு | (2,636,334) | (1,594,965) |
| லங்கா கோல் கம்பனி (பிரைவட்) லிமிடட் | துணைக் கம்பனி | நிலக்கரி கொள்வனவு | 42,414,954 | 41,410,859 |
| | | தேறிய செலவினத்தை மீளளித்தல் | 55,206 | 59,312 |
| LTL டிரான்ஸ்போமர் லிமிடட் | உப துணைக் கம்பனி | பொருள் கொள்வனவு | 2,284,068 | 2,284,068 |
| LTL கல்வனைஸ் (பிரைவட்) லிமிடட் | உப துணைக் கம்பனி | சேவைகள் பெறுவனவு | 219,736 | 219,736 |
| நிவிது (பிரைவட்) லிமிடட் | உப துணைக் கம்பனி | மின்சாரக் கொள்வனவு | 56,037 | 56,037 |
| நிவிது எசிபினல்ல (பிரைவட்) லிமிடட் | உப துணைக் கம்பனி | மின்சாரக் கொள்வனவு | 190,808 | 190,808 |
| பவன் தனவி லிமிடட் | உப துணைக் கம்பனி | மின்சாரக் கொள்வனவு | 597,840 | 597,840 |
| என்டி லெகோ மீற்றிங் கம்பனி (பிரைவட்) லிமிடட் | உப துணைக் கம்பனி | பொருள் கொள்வனவு | 1,076,347 | 806 |
| லங்கா எனர்ஜீஸ் HR (பிரைவட்) லிமிடட் | உப துணைக் கம்பனி | சேவைகள் பெறுவனவு | 20,269 | 7,602 |
| கும்பலங்கமுவ மினிஹைட்ரோ (பிரைவட்) லிமிடட் | உப துணைக் கம்பனி | மின்சாரக் கொள்வனவு | 106,274 | 95,130 |

## 37.3 குழுமத்திலுள்ள கம்பனிகளிடையிலான உறவுமுறைத் தரப்புக் கொடுக்கல் வாங்கல்கள்

| கொடுக்கல் வாங்கலின் தன்மை | LTL ஹோல்டிங் மற்றும் துணைக் கம்பனிகள் | லங்கா மின்சாரக் கம்பனி மற்றும் துணைக் கம்பனிகள் | 2019 மொத்தம் | 2018 மொத்தம் |
|---|---|---|---|---|
| பொருட்கள் சேவைகளின் விற்பனை | 221,215 | - | 221,215 | 494,964 |
| பங்கிலாபம் | 1,333,784 | - | 1,333,784 | 1,337,229 |
| ஏனைய சேவைகள் | - | 4,273 | 4,273 | 5,457 |
| செயற்பாட்டு மற்றும் பொறியியல் சேவைகள் | 316,534 | - | 316,534 | 316,534 |

# நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் (தொடர்ச்சி)

திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கு

(சகல தொகைகளும் இலங்கை ரூபா ஆயிரத்தில்)

## 37.4 குழுமத்திலுள்ள பிரதான முகாமைத்துவத் தரப்பினருடனான கொடுக்கல் வாங்கல்கள்

சபையின் செயற்பாடுகளை திட்டமிட்டு, நெறிப்படுத்தி கட்டுப்படுத்தக் கூடிய அதிகாரமுள்ள தரப்பினரே சபையின் பிரதான முகாமைத்துவத் தரப்பினர்களாவர். சபையின் அவ்வாறான பிரதான முகாமைத்துவத் தரப்பினர்களாக அதன் பணிப்பாளர் சபையினரும் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரும் காணப்படுகின்றனர்.

துணைக் கம்பனிகள், கூட்டுத்தொழில் முயற்சி மற்றும் தாய்க் கம்பனி என்ற வகையில் இமி.ச. ஆகியவற்றின் பணிப்பாளர் சபையினர், குழுமத்தின் பிரதான முகாமையாளர்களாக கருதப்படுகின்றனர்.

பிரதான முகாமைத்துவத் தரப்பினர்கள் மற்றும் அவர்களது நெருங்கிய குடும்ப அங்கத்தவர்களுடன் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் ஏதுமிருப்பின் அவைகளும் பின்வரும் வெளிப்படுத்தலிற்காக கருத்திற்கொள்ளப்பட்டது.

### (அ) பிரதான முகாமைத்துவத் தரப்பினரின் உள்ளடக்கம்

| | குழுமம் | | சபை | |
|---|---|---|---|---|
| | 2019 | 2018 | 2019 | 2018 |
| குறுங்கால ஊழியர் நலன்கள் | 162,957 | 88,961 | 4,149 | 5,326 |
| தொழிலின் பின்னரான நலன்கள் | 13,842 | 9,668 | - | - |
| | 176,799 | 98,629 | 4,149 | 5,326 |

மேற்படி வேதனங்களிற்கு மேலதிகமாக, பிரதான முகாமைத்துவத் தரப்பினர்களுடன் கைச்சாத்திட்டுள்ள தொழில் ஒப்பந்தங்களிற்கமைய காசற்ற நலன்களையும் கம்பனி அவர்களிற்கு வழங்குகின்றது.

## 38 நிதிசார் இடர் முகாமைத்துவ குறிக்கோள்கள் மற்றும் கொள்கைகள்

## 38.1 கண்ணோட்டம்

குழுமம் அதன் நிதிசார் கருவிகளின் பயன்பாட்டிலிருந்து பின்வரும் இடர்களை கண்டறிந்துள்ளது.

கடன் இடர்

திரவத்தன்மை இடர்

சந்தை இடர்

இடரை அளவிட்டு முகாமைத்துவம் செய்தல் மற்றும் குழுமத்தின் மூலதன முகாமைத்துவத்திற்காக மேற்படி ஒவ்வொரு இடர், குழுமத்தின் குறிக்கோள்கள், நடைமுறைகள் மற்றும் செயன்முறைகள் தொடர்பில் குழுமத்தின் கண்டறிதல் தகவல்களை இக் குறிப்பு வழங்குகின்றது..

## 38.2 இடர் முகாமைத்துவ செயன்முறை

குழுமத்தின் இடர் முகாமைத்தவ செயன்முறையினை தாபித்து பயனுள்ள விதத்தில் கண்காணிப்பதற்கு பணிப்பாளர் சபைக்கு ஒட்டுமொத்த பொறுப்புள்ளது. குழுமத்தினால் எதிர்கொள்ளப்படுகின்ற இடர்களை இனங்கண்டு பகுப்பாய்வு செய்தல், பொருத்தமான இடர் எல்லைகளை உருவாக்கி கட்டுப்படுத்துதல் மற்றும் எல்லைகளுடன் இணங்குதல் என்பவற்றிற்காக குழுமத்தின் இடர் முகாமைத்துவ நடைமுறைகள் தாபிக்கப்படுகின்றன.

குழுமத்தின் இடர் முகாமைத்துவ நடைமுறைகளுடன் இணங்கியொழுகுதலை எவ்வாறு முகாமைத்துவம் கண்காணிக்கின்றது என்பதனை பணிப்பாளர் சபை மேற்பார்வை செய்து குழுமத்தினால் எதிர்கொள்ளப்படுகின்ற இடர்கள் தொடர்பில் இடர் முகாமைத்துவ செயன்முறையின் போதுமான தன்மையினை மீளாய்வு செய்கின்றது. மேற்பார்வை செய்வதற்காக உயர்மட்ட முகாமையினால் குழுமத்தின் பணிப்பாளரிற்கு உதவப்படுகின்றது

# நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் (தொடர்ச்சி)

திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கு

(சகல தொகைகளும் இலங்கை ரூபா ஆயிரத்தில்)

## 38.3 கடன் இடர்

கடப்பாட்டினை நிறைவேற்றத் தவறுகின்றமையால் நிதிக் கருவிகளிற்காக ஒருதரப்பு இன்னொரு தரப்பிற்காக நிதி நட்டத்தினை ஏற்படுத்துவதே கடன் இடராகும்.

**சபையினதும் வரை. லங்கா மின்சார (தனியார்) கம்பனியினதும் கடன் கொள்கை வருமாறு.**

மொத்தமாக நுகர்வோருக்கு பட்டியல்களைத் தீர்ப்பதற்காக 15 நாட்கள் கடன் தவணைக்காலம் அனுமதிக்கப்படுவதுடன் அதன்பின்னர், மின்துண்டித்தல் அறிவித்தல் வழங்கப்பட்டு அறிவித்தல் வழங்கப்பட்ட திகதியிலிருந்து 10 நாட்கள் கால அவகாசம் வழங்கப்படுகின்றது. அதற்கமைய செயற்படத்தவறும் பட்சத்தில் மின்சாரம் துண்டிக்கப்படும்.

சாதாரண வாடிக்கையாளருக்கு பட்டியல்களைத் தீர்ப்பதற்காக 15 நாட்கள் கடன் தவணைக்காலம் அனுமதிக்கப்படுவதுடன் அதன்பின்னர், சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டு அறிவித்தல் வழங்கப்பட்ட திகதியிலிருந்து 10 நாட்கள் கால அவகாசம் வழங்கப்படுகின்றது. அதற்கமைய செயற்படத்தவறும் பட்சத்தில் மொத்தமாக 40 நாட்களின் பின்னர் மின்சாரத்தை துண்டிப்பதற்கான அறிவித்தல் வழங்கப்படும்.

கடன் வசதியினை வழங்குவதற்கு முன்னர் கடன் தீர்ப்பினை பகுப்பாய்வு செய்வதன் மூலம் ஒவ்வொரு வாடிக்கையாளரதும் தனிப்பட்ட பண்புகள் கருத்திற் கொள்ளப்படுகின்றது. பயனுள்ள கட்டுப்பாடு மற்றும் உரிய நேரத்தில் சேகரித்தலிற்காக நிலுவை கடன்படுனர்களிற்கு காலப்பகுப்பாய்வினை மேற்கொள்வதன் மூலம் குழுமம் தாக்கமுள்ள கடன் கட்டுப்பாட்டு செயன்முறையினை அமுல்படுத்தியது.

## 38.4 திரவத்தன்மை இடர்

போதுமற்ற திரவத்தன்மை வளங்கள் குழுமத்தின் செயற்பாடுகளில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்துகின்ற அதேவேளை முதலீட்டாளர், வாடிக்கையாளர் மற்றும் வழங்குனரின் நம்பகத் தன்மையினை தேய்வடையச் செய்து போட்டி நிலைமையினை நலிவாக்குகின்றது.

அனைத்து துறைகளிற்குமாக உபாய தொழிற்படு மூலதன முகாமைத்துவ திட்டமொன்றை குழுமம் அமுல்படுத்தியிருந்தமையால் பெறவேண்டியவைகள் நெருக்கமாக கண்காணிக்கப்பட்டு கடன்படுனர் காலம் குறைக்கப்படுகின்றது. அவதானமான வியாபார மதிப்பீடுகள் மற்றும் கொள்வனவு உபாயங்கள் என்பன உள்ளீடுகளிற்கு சரியான தொகை செலுத்தப்படுவதனை உறுதிப்படுத்துவதுடன் தொழிற்படு மூலதன சுழற்சியினை உத்தமப்படுத்துவதற்காக கடன் காலம் கலந்தாலோசிக்கப்படுகின்றது.

செயற்பாட்டு மற்றும் ஏனைய நிதியீட்டத் தேவைகளிற்கு உதவுவதற்காக குறுங்கால மற்றும் நடுத்தரகால நிதிக் கருவிகளில் முதலீடு செய்வதன் மூலம் திரவத்தன்மை பேணப்படுகின்றது என்பதனை குழுமம் உறுதிப்படுத்துகின்றது. சகாய வட்டி வீதத்தில் மேலதிகப்பற்று எல்லைகளை அதிகரிப்பதற்கு வங்கியுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதன் மூலம் குறுங்கால திரவத்தன்மை சிக்கல்கள் குறைத்துக் கொள்ளப்படுகின்றன.

## 38.5 சந்தை இடர்

சந்தை விலைகளில் ஏற்படுகின்ற மாற்றங்கள் காரணமாக நிதிக் கருவிகளின் எதிர்கால காசுப் பாய்ச்சல்களின் சந்தைப் பெறுமதி தளம்பலடைவதற்கான இடரே சந்தை இடராகும். சந்தை இடரானது செலாவணி இடர் மற்றும் வட்டி வீத இடர் என்பவற்றை உள்ளடக்குகின்றது. சந்தை இடரினால் தாக்கமுற்ற நிதிக் கருவிகளில் கடன்களும் பெறுகைகளும் உள்ளடங்குகின்றன.

### 38.5.1 அந்நியச் செலாவணி இடர்

குழுமத்திலுள்ள கம்பனிகளின் குறித்துரைத்த தொழிற்பாட்டு நாணயமல்லாத நாணயத்தில் இடம்பெறுகின்ற விற்பனைகள் / கொள்வனவுகள் மீதான செலாவணி இடரை குழுமம் கண்டறிகின்றது. இந்தக் கொடுக்கல் வாங்கல்கள் ஆரம்பத்தில் யூஎஸ்டொலர் அல்லது யூரோ நாணயத்தில் இடம்பெறுகின்றன. எந்தவொரு பரிமாற்றுக் கொடுக்கல் வாங்கல்களிற்கும் எதிரான உள்ளக இடர்குறைத்தல் மூலம் குழுவினால் செலாவணி இடர் இழிவுபடுத்தப்படுகின்றது. எதிர்கால கொடுப்பனவுகளிற்குச் சமமான தொகை பொருத்தமான நாணயங்களில் குறுங்கால வருமானமீட்டல் கருவிகளில் வைக்கப்பட்டு அவ்வாறானவை எப்பொழுது ஏற்படுகின்றதோ அப்போது கொடுப்பனவுகளிற்காக பயன்படுத்தப்படுகின்றது.

### 38.5.2 வட்டி வீத இடர்

வட்டி வீதத்தில் ஏற்படுகின்ற மாற்றங்கள் காரணமாக நிதிக் கருவிகளின் எதிர்கால காசுப் பாய்ச்சல்களின் சந்தைப் பெறுமதி தளம்பலடைவதற்கான இடரே வட்டி வீத இடராகும். மிதக்கும் வட்டி வீதங்களுடன் குழுமத்தின் நீண்டகால கடன் கடப்பாடுகளிற்காக ஆரம்பத்தில் தொடர்புபடுகின்ற சந்தை வட்டி வீதங்களின் மாற்றங்களின் இடரை குழுமம் கண்டறிகின்றது. சந்தை தளம்பல்களை ஈடுசெய்யக்கூடிய நிலையான கலப்பு வீதம் மற்றும் மிதக்கும் வீத வசதிகளைப் பேணுதல் அவ்வாறே வைப்புக்களைப் பேணுதல் ஆகியவற்றின் மூலம் குழுமம் அதன் பெறுகைகள் மீதான வட்டி வீத இடரை முகாமைத்துவம் செய்கின்றது. இலங்கை மின்சார சபை அரசாங்க நிறுவனமொன்றாக இருப்பதனால் வட்டி வீதங்களை கண்டறிந்து குறைப்பதற்குச் சாதகமான வட்டி வீதங்களிற்காக வங்கிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுகின்றது.

# நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் (தொடர்ச்சி)

**திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கு**

(சகல தொகைகளும் இலங்கை ரூபா ஆயிரத்தில்)

## 39 நியாயப் பெறுமதி

நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் நியாயப் பெறுமதியானது பலவந்தப்படுத்தப்பட்ட அல்லது கலைத்தல் விற்பனை தவிர்ந்த எதிர்பார்க்கப்பட்ட விலைகளிடையே தற்போதைய கொடுக்கல் வாங்கல்களின் போது பரிமாற்றத்தக்க நிதிக் கருவிகளின் பெறுமதியை உள்ளடக்குகின்றது

நியாயப் பெறுமதியை மதிப்பிடுவதற்காக பின்வரும் முறைகளும் எடுகோல்களும் பயன்படுத்தப்பட்டன.

அ) குறைந்த முதிர்ச்சிக் காலத்தை கொண்டுள்ளமையால் காசும் காசுக்கு சமமானவைகளும், வியாபாரப் பெறவேண்டியவை, வங்கி மேலதிகப் பற்றுக்கள் மற்றும் ஏனைய நடைமுறைப் பொறுப்புக்களை பெரும்பாலும் அண்ணளவாக அவற்றின் முக்கொண்டுசெல் தொகைகளில் முகாமைத்துவம் மதிப்பிடுகின்றது.

ஆ) நீண்டகால நிலையான வீதங்கள் மற்றும் பெறவேண்டியவைகளின் மாறும் வீதங்கள் என்பன வட்டி வீதங்கள், குறித்துரைத்த இடர் காரணிகள், வாடிக்கையாளரின் தனிப்பட்ட கடன் மதிப்பு மற்றும் நிதியளிக்கப்பட்ட செயற்திட்டத்தின் இடர் பண்புகள் போன்ற அளவுகோல்களின் அடிப்படையில் மதிப்பிடப்படுகின்றன. இந்த மதிப்பீட்டின் அடிப்படையில், இந்த பெறவேண்டியவைகளின் எதிர்பார்த்த இழப்புக்களிற்கான கொடுப்பனவுகள் கருத்திலெடுக்கப்படுகின்றன. 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு, அவ்வாறான பெறவேண்டியவைகளின் முன்கொண்டுசெல் தொகைகள், கொடுப்பனவுகளின் தேறியவை என்பன அவற்றின் கணிக்கப்பட்ட நியாயப் பெறுமதிகளிலிருந்து பொருண்மையாக வேறுபட்டிருக்கவில்லை.

### 39.1 நியாயப் பெறுமதியில் முன்கொணரப்பட்ட நிதிக் கருவிகள்

குழுமம் நியாயப் பெறுமதியில் முன்கொணரப்பட்ட பின்வரும் நிதிக் கருவிகளை வைத்துள்ளது.
நிதிச் சொத்துக்கள

| | |
|---|---|
| ஏ.வி.வ. இன் ஊடான நியாயப் பெறுமதி | (குறிப்பு 13) |
| இலாபம் அல்லது நட்டத்தின் ஊடான நியாயப் பெறுமதி | (குறிப்பு 13) |

### 39.2 நியாயப் பெறுமதியில் முன்கொணரப்படாத நிதிக் கருவிகள்

நியாயபூர்வமான நியாயப் பெறுமதிகளின் அண்ணளவான முன்கொண்டுசெல் தொகைகளில் உள்ளவை தவிர்ந்த, நிதிக்கூற்றுக்களில் நியாயப் பெறுமதியில் முன்கொணரப்படாதுள்ள குழுமத்தின் நிதிக் கருவிகளினது முன்கொண்டு கொண்டுசெல் தொகைகளும் நியாயப் பெறுமதிகளும் வகைப்படுத்தப்பட்டு, கீழேயுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| | முன்கொண்டுசெல் பெறுமதி | | நியாயப் பெறுமதி | |
|---|---|---|---|---|
| | 2019 | 2018 | 2019 | 2018 |
| மீளப்பெறும் வைப்புக்கள் | 40,738 | 44,029 | 40,738 | 44,029 |
| நிலையான வைப்புக்களின் முதலீடு | 20,586,150 | 25,156,979 | 20,586,150 | 25,156,979 |
| மீள் கொள்வனவு உடன்படிக்கையின் முதலீடு | 303,278 | 422,376 | 303,278 | 422,376 |
| ஏனைய வைப்புகளின் முதலீடுகள் | 2,413,602 | 1,211,287 | 2,413,602 | 1,211,287 |
| கம்பணி உத்தியோகத்தர்களுக்கான கடன் | 10,719,041 | 10,068,073 | 10,719,041 | 10,068,073 |
| வாடிக்கையாளர் கடன்கள் | 4,195,879 | 5,389,639 | 4,195,879 | 5,389,639 |
| தொகுதிக்கடன்களில் முதலீடுகள் | 202,063 | 203,479 | 193,170 | 196,769 |
| | 38,460,751 | 42,495,862 | 38,451,858 | 42,489,152 |

### 39.3 நியாயப் பெறுமதி உயர்வரிசை

கூறப்பட்ட விலைகள் அல்லது முறைகளிற்கான அவதானிக்கப்படத்தக்க விலையிடல் உள்ளீடுகள், சுயாதீன விலை நிர்ணயம் அல்லது பெற்றுக்கொள்கின்ற ஏற்றுக்கொள்ளல் ஆகியவைகளை ஆராய்ந்து அனைத்து நிதிக் கருவிகளினதும் நியாயப் பெறுமதிகள் நிச்சயிக்கப்படுகின்றன. செயற்படு சந்தையொன்றில் விற்பனை விலையொன்றை நேரடியாக அவதானித்தல் சாத்தியமற்றதாகும். அவ்வாறான நிலைமைகளில், நிதிக் கருவிகளின் நியாய விலைப் பெறுமதியினை நிச்சயிப்பதற்காக மிகவும் தொடர்புடையதும் நம்பகரமானதும் எனக் கருதப்படுகின்ற தகவல்களிற்கு உயர்மட்ட நிறையினை வழங்கி குழுமம் மாற்றுவழி சந்தைத் தகவல்களை பயன்படுத்துகின்றது.

பின்வரும் உயர்வரிசைக்கமைய நியாயப் பெறுமதி நிச்சயிக்கப்படுகின்றது.

மட்டம் 1: இனங்காண முடியுமான சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களிற்காக செயற்படு சந்தையிலுள்ள கூறப்பட்ட (சீராக்கப்படாத) சந்தை விலைகள்.

மட்டம் 2: பதிவுசெய்யப்பட்ட நியாயப் பெறுமதியில் குறிப்பிடத்தக்க தாக்கத்தைக் கொண்டுள்ள நேரடியாக அல்லது மறைமுகமாக அவதானிக்கக்கூடிய அனைத்து உள்ளீடுகளினதும் ஏனைய பெறுமதியிடல் நுட்பங்கள்.

மட்டம் 3: பதிவுசெய்யப்பட்ட நியாயப் பெறுமதியில் குறிப்பிடத்தக்க தாக்கத்தைக் கொண்டுள்ள உள்ளீடுகளாகப் பயன்படுத்தப்படுகின்ற அவதானிக்கப்படத்தக்க சந்தை தரவுகளின் அடிப்படையில் இல்லாத மதிப்பிடுதல் நுட்பங்கள்.

# நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் (தொடர்ச்சி)

திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கு

(சகல தொகைகளும் இலங்கை ரூபா ஆயிரத்தில்)

2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு, நிதிநிலைமைக் கூற்றில் முன்னெடுத்துவரப்பட்ட நியாயப் பெறுமதியிலுள்ள பின்வரும் நிதி மற்றும் நிதசாராத சொத்துக்களை குழுமம் வைத்திருந்தது.

நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்ட சொத்துக்கள் மதிப்பீட்டுத் திகதி

| | | 2019 | மட்டம் 1 | மட்டம் 2 | மட்டம் 3 |
|---|---|---|---|---|---|
| **ஏ.வி.வ. இன் ஊடாக நியாயப் பெறுமதிலுள்ள நிதிச் சொத்துக்கள்** | | | | | |
| விலைகூறாத உரிமைத்துவப் பங்குகள் | 31-திசெ-19 | 13,719,210 | - | - | 13,719,210 |
| **இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாயப் பெறுமதியிலுள்ள நிதிச் சொத்துக்கள்** | | | | | |
| உரிமைத்துவப் பிணையங்களில் முதலீடு | 31-திசெ-19 | 248,587 | 248,587 | - | - |
| **காலத்தேய்மானக் கிரயம் - நிதிச் சொத்துக்கள்** | | | | | |
| ஏனைய நிதிக் கருவிகளில் முதலீடு | 31-திசெ-19 | 23,343,768 | - | - | 23,343,768 |
| பாவனையாளர் மற்றும் பதவியினருக்கான கடன்கள் | 31-திசெ-19 | 14,914,920 | - | - | 14,914,920 |
| **நியாயப் பெறுமதி வெளிப்படுத்தப்படுகின்ற சொத்துக்கள்** | | | | | |
| தொகுதிக்கடன்களில் முதலீடு | 31-திசெ-19 | 193,170 | 193,170 | - | - |

**எ.ப்வீஓசீஐ இன் மதிப்பீட்டிற்காக குறிப்பிடத்தக்களவில் அவதானிக்கப்பட இயலாத உள்ளீடுகள் - நிதிச் சொத்துக்கள்**

**லங்கா மின்சாரக் கம்பனி (பிரைவட்) லிமிட்**

விலைகூறப்படாத உரிமைத்துவ முதலீடுகளின் நியாயப் பெறுமதி சந்தைப் பெருக்கி முறையினை (Market Multiple Methodology) பயன்படுத்தி மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த அணுகுமுறையின் கீழான பெறுமதியானது வணிகமொன்றிற்கான எதிர்கால உழைப்புக்களின் (பேணத்தக்க ஒழைப்புக்கள்) பொருத்தமான மட்டங்களின் அடிப்படையில் மதிப்பிடப்படுவதுடன் இந்த உழைப்புக்களிற்கு பொருத்தமான பெருக்கியொன்றைப் பிரயோகித்து, வணிகத்திற்கான பெறுமதியொன்றில் மூலதனமாக்கப்படுகின்றது. கம்பனி வரிக்கு முன்னரான உழைப்புக்களை (EBIT) அதன் உழைப்பு அடிப்படையாக பிரயோகிக்கின்றது. வெஸ்ட் கோஸ்ட் பவர் (பிரைவட்) லிமிட் இன் நியாயப் பெறுமதியினை மீளாய்வு செய்கையில் பயன்படுத்துவதற்கு ஒரு பொருத்தமான முறையினை இனங்காண்பதற்காக, ஆசிய வலயத்தில் பொசில் எண்ணெய் இனைப் பயன்படுத்தி மின்சார விநியோகத் தொழிலில் ஈடுபட்டுள்ள பட்டியலிடப்பட்ட கம்பனிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டன. நிறுவனத்தின் செயற்பாட்டுத் தன்மை மற்றும் அவற்றின் பருமண் என்பவற்றின் வேறுபாடுகளின் அடிப்படையில் விலகல்கள் மதிப்பிடப்பட்டன.

வெஸ்ட் கோஸ்ட் பவர் (பிரைவட்) லிமிட் இன் சிறுபாண்மை தரப்பு காரணமாக, நேரடியான முகாமைத்துவத்தினை பிரயோகிக்க மற்றும் உள்ளகத் தகவல்களை பெறமுடியாத நிலையில் முகாமைத்துவம் உள்ளது. இருப்பினும், தொழிலின் தன்மை மற்றும் மின்வலு கொள்வனவு உடன்படிக்கையிலுள்ள பொதுவான பண்புகளைக் கருத்திற்கொண்டு, சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் சந்தைப் பெறுமதிகள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதிவு செய்யப்பட்டுள்ள முன்கொண்டுசெல் பெறுமதிகளை ஒத்தவையாகவே காணப்பட்டன.

**எல்ரீஎல் ஹோல்டிங் (பிரைவட்) லிமிட்**

விலைகூறப்படாத சாதாரண பங்குகளின் நியாயப் பெறுமதியானது கழிவிடப்பட்ட காசுப் பாய்ச்சல் (டீசீஎ.ப்) முறையினைப் பயன்படுத்தி மதிப்பிடப்பட்டுள்ளது. எதிர்வுகூறப்பட்ட காசுப் பாய்ச்சல்கள் மற்றும் கழிவீட்டு வீதங்கள் உள்ளிட்ட இந்த முறைக்கான உள்ளீடுகளுடன் சம்பந்தப்பட்ட சில எடுகோல்களை முகாமைத்துவம் மேற்கொள்ள வேண்டுமென மதிப்பீடுகள் தேவைப்படுத்துகின்றன. வீச்சுக்குட்பட்ட பல்வேறு மதிப்பீடுகளின் சாத்தியங்களை, விலைகூறப்படாத உரிமைத்துவ முதலீட்டிற்கான நியாயப் பெறுமதியின் முகாமைத்துவ மதிப்பீட்டின் போது நியாயபூர்வமாக மதிப்பீடுசெய்து பயன்படுத்த முடியும்.

# ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. } பிஓஈ/ச/சீஈபீ/சீஎவ்ஏ/1/19/18 මබේ අංකය / உமது இல. / Your No. } දිනය / திகதி / Date } 2020 திசெம்பர்

தலைவர்
இலங்கை மின்சார சபை

**இலங்கை மின்சார சபை மற்றும் அதன் துணைக் கம்பனிகளினது 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் மீது 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

### 1. ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை மின்சார சபையினதும் (சீஈபீ) அதன் துணைக் கம்பனிகளினதும் “தொகுதி” 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினது பொழிப்புக்களை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் ஆகியவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. தேசிய கணக்காய்வுச் அதிகார சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரமான எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும். எல்ரீஎல் ஹோல்டிங் (தனியார்) லிமிட்ட் இன் நிதிக்கூற்றுக்கள், அந்த துணைக் கம்பனியின் பணிப்பாளர் சபையால் நியமிக்கப்பட்ட பொதுத் தொழிலிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்றால் கணக்காய்வு செய்யப்பட்டன.

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து குழுமத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றினது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

### 1.2.1 ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

**1.2.1.1 வரையறுக்கப்பட்ட திருகோணமலை மின்வலுக் கம்பனியின் (ரீபிசீஎல்) நிதிக்கூற்றுக்கள் மீது பின்வரும் கருத்திலெடுக்க வேண்டிய விடயங்களை அதன் கணக்காய்வாளர் சுட்டிக் காண்பித்திருந்தார்.**

சம்பூரில் 500 மெகா வாற்ஸ் நிலக்கரி மின்வலுப் பொறியை அபிவிருத்தி செய்யும் ஒரே நோக்கில் செயற்பட்ட இக்கம்பனி, அதன் மின்வலுப் பொறியினை அபிவிருத்திநடவடிக்கைகளை கைவிட்டிருந்ததுடன் முன்னர் மூலதனமாக்கப்பட்ட செலவினங்கள் 2018 ஆம் ஆண்டின் போது பதிவழிக்கப்பட்டிருந்தன. அதற்குப் பதிலாக, சம்பூரில் நிலக்கரி மின்வலுப் பொறியை நிர்மாணிப்பதற்காக வழங்கப்பட்ட அதே காணியில் ரீபிசீஎல் ஆல் 50 மெகா வாற்ஸ் சூரிய மின்வலுப் பொறியை அமைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. மேலும் கரவலப்பிட்டியவில் 500 மெகா வாற்ஸ் எல்என்ஜீ மின்வலுப் பொறியை அபிவிருத்தி செய்வதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. இருப்பினும், மேற்படி மின்வலுப் பொறிகளின் அபிவிருத்திச் செயற்பாடுகளில் எவ்வித முன்னேற்றமும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க, தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான கம்பனிக்குள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றமையை இது சுட்டிக்காட்டுகின்றது.

**1.2.1.2** 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பின்வரும் கம்பனிகளின் நிதிக்கூற்றுக்கள் மீது கீழே தரப்பட்டுள்ள அவதானிப்புக்கள் காரணமாக என்னால் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ag@auditorgeneral.gov.lk www.naosl.gov.lk

# ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை (தொடர்ச்சி)

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

**(அ) லங்கா கோல் கம்பனி (தனியார்) லிமிட்**

(i) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் (எல்கேஏஎஸ் 16) பற்றிய இலங்கை கணக்கீட்டு நியமத்தின் 51 வது பந்தியின் படி, ஒவ்வொரு நிதி ஆண்டு முடிவிலும் சொத்தின் பயனுள்ள வாழ்க்கை காலம் மதிப்பாய்வு செய்யப்பட்டு அதற்கமைய, முன்னைய மதிப்பீடுகளிலிருந்தான எதிர்பார்ப்புகளில் மாற்றமேற்பட்டிருந்தால், அந்த மாற்றங்கள் எல்கேஏஎஸ் 08 இற்கு இணங்க கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். இருப்பினும், இன்னும் பயன்பாட்டில் உள்ள முழுமையாக தேய்விடப்பட்ட மோட்டார் வாகனங்களின் பயனுள்ள வாழ்க்கை காலம் மதிப்பாய்வு செய்யப்பட்டு அதற்கேற்ப கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) வருமான வரி தொடர்பான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் (எல்கேஏஎஸ் 12) 88 ஆவது பந்தியின் படி, 2017/2018 மதிப்பீட்டு ஆண்டிற்கான சிக்கன சேவை கட்டணம் (இஎஸ்சி) தொடர்பான ரூபா 159,549,619 மதிப்பீடு மற்றும் ரூபா 75,461,644 அபராதங்கள் குறித்த எந்த தகவலும் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும்,மீளாய்வாண்டின் ஆண்டின் இறுதியில் செலுத்த வேண்டிய மொத்த இஎஸ்சி ரூபா 579,179,232 ஆகும். முழுமையாகத் திருத்தப்பட்ட 2006 இன் 13 ஆம் இலக்க பொருளாதார சேவை கட்டணச் சட்டத்தின் 6 ஆவது பிரிவின்படி, காலாண்டு முடிவடைந்த பின்னர் அடுத்த மாதத்தின் இருபதாம் நாளில் அல்லது அதற்கு முன்னர் இஎஸ்சி வரிப்பொறுப்பு செலுத்தப்பட வேண்டும். இருப்பினும், இந்த அறிக்கையின் திகதி வரை கம்பனி செலுத்த வேண்டிய இஎஸ்சி இனை செலுத்தியிருக்கவில்லை.

(iii) வருமானம் மீதான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் (எல்கேஏஎஸ் 18) 14 ஆம் பந்தியின் படி, பொருட்களின் விற்பனையிலிருந்தான வருமானம் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. நிலக்கரியை இறக்குமதி செய்யும் போது, சுங்கத்தின் நோக்கத்திற்கான பெறுமதியை மதிப்பிடுகையில், ஒரு கற்பனையான சீராக்கமாக சுங்கத்தின் வரி எல்லையில் 10 சதவீதம் சேர்க்கப்பட்டுள்ளது. இருப்பினும், கம்பனி வருவாயில் ரூபா 3,804,035,310 என்ற 10 சதவீத இலாப எல்லையினை சேர்த்துள்ளதுடன் பின்னர் கம்பனி கடன்பட்டோருக்கான கழிவாக அத்தொகையை வழங்கி அதனை விற்பனை கிரயத்துக்கு சாட்டுதல் செய்துள்ளது. இதன் விளைவாக, விற்பனை கிரயம் மற்றும் வருவாய் என்பன ஒத்த தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்ததுடன் அதன் மீது மேலதிக இஎஸ்சி இனை செலுத்தவேண்டியுள்ளது.

(iv) 2016 செப்தெம்பர் 19 முதல் 2018 ஏப்ரல் 09 வரையிலான கால கட்டத்தில் நிலக்கரி இறக்குமதியின் சரியான கொடுக்கல் வாங்கல் பெறுமதியை அறிவிக்காதது குறித்து இலங்கை சுங்கத்தால் ரூபா 205,000,000 தொகை தண்டமாக கம்பனிக்கு விதிக்கப்பட்டிருந்ததுடன், இயக்குநர்கள் நிதிக்கூற்றுக்களில் கைச்சாத்திடுவதற்கு முன்னர் 2018 திசெம்பர் 12 ஆந் திகதி இத் தண்டப்பணம் தீர்மானிக்கப்பட்டிருந்தது. கம்பனி இந்த தண்டத் தொகையில் ரூபா 155,426,118 இனை இலங்கை சுங்கத்தின் வெற் கணக்கிற்கும்,ரூபா 39,970,418 இனை வெற் கட்டுப்பாட்டுக் கணக்கிற்கும் ரூபா 9,603,464 இனை சீஎஸ்சீஎல் பொறுப்புக் கணக்கிற்கும் தவறுதலாக வரவு வைத்திருந்தது. அதன் விளைவாக, செலவினம் ரூபா 205,000,000 ஆல் குறைத்தும் சொத்துக்கள் ரூபா 195,396,536 ஆல் அதிகரித்தும் பொறுப்புக்கள் ரூபா 9,603,464 ஆல் குறைத்தும் காண்பிக்கப்பட்டுள்ளன. மேலும், பேரேட்டிலுள்ள வெற் தொடர்பில் கம்பனி ரூபா 126,956,898 தொகையினை சீசுபீ இடமிருந்து பெறவேண்டியதாகவும் சுங்க வெற் இற்கு செலுத்த வேண்டியதாகவும் பதிவுசெய்திருந்தது. இருப்பினும், இந்தப் பெறுமதிகளை மெய்மையாய்வு செய்வதற்குத் தேவையான ஆதாரப்படுத்தல் ஆவணங்கள் மற்றும் தெளிவான காரணங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(v) பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாது கப்பல் பட்டியல்களைத் தீர்ப்பதற்கும் மேலே வை இல் குறிப்பிடப்பட்டுள்ள அபராதத்தை செலுத்துவதற்கும் இலங்கை மின்சார சபையிடமிருந்து (சீசுபீ) பெறப்பட்ட நிதியை கம்பனி பயன்படுத்தியிருந்ததுடன் இழப்புகளுக்கு பொறுப்பு வாய்ந்த நபர்களை அடையாளம் காண்பதற்காக முறையான விசாரணை செய்யப்பட்டிருக்கவில்லை.

(vi) நிலக்கரியினை குறைத்து வழங்கியிருந்தமை தொடர்பில் தௌரியன் அயா்ன் என்ட் ஸ்ரீல் கம்பனி லிமிடட் (TISCL) இடமிருந்து பெறப்பட வேண்டிய ரூபா 539,192,079 தொகையினை இணங்கப்பட்ட முறையில் இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்தின் (CECL) ஊடாக அறவிடுவதற்கு கம்பனி தேவையான நடவடிக்கைகளை எடுக்காதிருந்ததுடன் TISCL/CECL இந்த மீதியினை உறுதிப்படுத்தியிருக்கவில்லை. அத்துடன், ஏழு ஆண்டுகள் கடந்திருந்த போதிலும், நட்டக் கடனிற்கான ஏற்பாடும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(vii) முன்னைய ஆண்டின் கணக்காய்வில் மெய்மையாய்வு செய்வதற்கு முடியாது காணப்பட்டு முன்கொண்டு வரப்பட்டிருந்த ரூபா 894,151 கூட்டுத்தொகையான பெறவேண்டிய பொருளாதாரச் சேவைக் கட்டணம் (ESC), ரூபா 77,719 தொகையான நிறுத்திவைத்தல் வரி (WHT), ரூபா 65,474,540 தொகையான செலுத்த வேண்டிய வருமான வரி,ரூபா 3,371,326 தொகையான தேசத்தைக் கட்டியெழுப்புதல் வரி (தேவு) மற்றும் ரூபா 12,758,801 ஆன பெறுமதிசேர் வரி (VAT) என்ப முன்னைய ஆண்டிற்கான சீராக்கமாக 2018 இன் நிறுத்திவைத்த உழைப்புக்களிற்கு எதிராக சாட்டப்பட்டிருந்தன. இருப்பினும், இந்த சீராக்கங்களைத் திருத்துவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கம்பனி தவறியிருந்தது.

(viii) இலகுக்கட்டண வெற் (lightering VAT கப்பலேற்றல் இலக்கம் 151 முதல் 154) தொடர்பில் இலங்கை மின்சார சபையால் செலுத்தப்பட்டு இலங்கை கப்பற் கூட்டுத்தாபனக் கம்பனிக்குச் (CSCL) செலுத்தப்பட வேண்டிய ரூபா

# ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை (தொடர்ச்சி)

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

15,870,104 தொகை CSCL இற்குச் செலுத்தப்பட்டோ அல்லது இ.மி.ச. இடமிருந்து கிடைத்த முற்பணமாகவோ காட்டப்பட்டிருக்கவில்லை. அத்துடன், மேற்படி இலகுக் கட்டணத்தை தீர்ப்பதற்காக சீஈபீ இடமிருந்து தேவையான நிதியினை கம்பனி பெற்றுக்கொண்டிருந்த போதிலும், CSCLஇற்குச் செலுத்த வேண்டிய தொகையாக அதனை கம்பனி கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ix) ரூபா 1,109,063 தொகையான செலுத்த வேண்டிய கணக்குகள்,ரூபா 180,416,885 தொகையான சீஈபீ இடமிருந்து பெறவேண்டிய இறுதி வாட் மற்றும் ஏனைய பெறவேண்டிய கணக்குகள், சீஈபீ இடமிருந்து பெறவேண்டிய ரூபா 578,678,686 தொகையான ஈ.எஸ்.சி, சீஈபீ இற்குச் செலுத்த வேண்டிய ரூபா 6,813,692, இலங்கை கப்பற் கூட்டுத்தாபன லிமிடெட் - பழைய கட்டணம் ரூ. 28,347,444, ரூபா 18,075,801 தொகையான சில்லறைக் கடனாளிகள், சீஈபீ இடமிருந்து பெறத்தக்க ரூபா 4,677,509, ரூபா 7,750,000 தொகைான நீராவி நிலக்கரி வியாபாரக் கடன்பட்டோர் (சீஈபீ),ரூபா 1,760,500 தொகையான சீஈபீ இலிருந்து பெறத்தக்க ஏனையவைகள், நோபல் ரிசோர்சஸ் இன்டர்நேஷனல் பிரைவேட் லிமிடெட் இடமிருந்து பெறத்தக்க ரூபா 1,115,987 மற்றும் வியாபாரக் கடன் கொடுத்தோர் - நோபல் ரிசோர்சஸ் இன்டர்நேஷனல் பிரைவேட் லிமிடெட் ரூபா 85,887,776 என்பவற்றை மெய்மையாய்வு செய்வதற்குத் தேவையான மீதி உறுதிப்படுத்தல்கள் மற்றும் தொடர்புடைய சான்றுகள் கணக்காய்விற்கு கிடைக்கப்பெறவில்லை.

(x) மீளளிக்கப்பட வேண்டிய செலவினம் மீதான ரூபா 8,280,994 தொகையான செலுத்த வேண்டிய வற் ஆனது வற் கட்டுப்பாட்டு கணக்கில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, வற் பொறுப்பு ஒத்த தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டது.

(xi) குறித்த வழங்குனருக்கு அல்லது **CSCL** இற்கு செலுத்த வேண்மேன்ற ஒரு கணக்கு பேரேட்டில் இல்லாத போதிலும்,CSCLஇன் ஊடாக அந்த வழங்குனருக்கு ரூபா 4,000,000 தொகையை கம்பனி செலுத்தியிருந்தது. இருப்பினும், கம்பனி இந்த தொகையை CSCL இற்குச் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையிலிருந்து தவறாகக் கழித்திருந்தது. எனவே,பொறுப்புக்கள் இதனையொத்த தொகையால் குறைத்துக் கூறப்பட்டுள்ளன.

(xii) சுங்கத் திணைக்களத்தின் படி உண்மையான வெற் ரூபா 106,969,404 ஆன போதிலும்,கப்பலேற்றல் இலக்கம் 123 இற்கான சுங்க வெற் ஆக கம்பனி ரூபா 136,236,370 தொகையை செலுத்தியிருந்தது. எனவே,மேலதிகமாகச் செலுத்திய வற் தொகை ரூபா 29,266,965 ஆனதுடன் நிதிக் கூற்றுக்களில் இத்தொகை ரூபா 26,507,084 பெறத்தக்க வற் என காண்பிக்கப்பட்டிருந்தது. எனவே, கணக்காய்வில் இந்த இரண்டு மீதிகளிற்கும் இடையே ரூபா 2,759,882 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(xiii) கம்பனி CSCL இற்குச் செலுத்த வேண்டிய கணக்கில் ரூபா 5,218,271 தொகையினை வரவு வைத்திருந்தது. இருப்பினும், இந்த தொகையை மெய்மையாய்வு செய்வதற்கான ஆதாரப்படுத்தும் ஆவணங்கள் மற்றும் காரணங்கள் வழங்கப்படவில்லை. மேலும், லங்கா கோல் கம்பனி (பிரைவட்) லிமிடெட் மற்றும் CSCL தள்ளுபடி கணக்கு ஆகியவற்றின் மீதிகளுக்கு இடையே காணப்பட்ட ரூபா 31,916,562 வேறுபாட்டை கம்பனி கணக்கிணக்கம் செய்திருக்கவில்லை.

(xiv) வரி செலுத்தாமை காரணமாக ரூபா 500,546 பொருளாதார சேவை கட்டணம் (இஎஸ்சி), ரூபா 10,134,113 தேசத்தை கட்டியெழுப்பல் வரி (என்பிடி) மற்றும் ரூபா 1,900,938 பெறுமதிான பெறுமதிசேர்வரி (வற்) ஆகிய அபராதத் தொகைகளை 2018 ஜனவரி 04 திகதிய கடிதத்தின் மூலம் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் விதித்திருந்ததுடன் இதனை செலுத்த வேண்டிய அபராதத் தொகையாக காண்பிக்காது செலுத்த வேண்டிய வரியின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### (ஆ) ஸ்ரீலங்கா எனர்ஜீஸ் (பிறைவேட்) லிமிட்டட்

i. பின்வரும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

- எஸ்.எல்.எப்.ஆர்.எஸ் 07 பந்திகள் 08,31,33
- எஸ்.எல்.எப்.ஆர்.எஸ் 15 பந்தி 01
- எல்.கே.ஏ.எஸ் 01 பந்திகள் 79,113,117
- எல்.கே.ஏ.எஸ் 02 பந்தி 37
- எல்.கே.ஏ.எஸ் 07 பந்தி 20
- எல்.கே.ஏ.எஸ் 12 பந்தி 80 (அ)
- எல்.கே.ஏ.எஸ் 19 பந்திகள் 57,140,141
- எல்.கே.ஏ.எஸ் 24 பந்தி 17
- எல்.கே.ஏ.எஸ் 38 பந்தி 118 (அ,ஆ)

ii. 2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க சிக்கன சேவை கட்டணச் சட்டத்தின் பிரிவு 2 (2) (திருத்தப்பட்ட) படி, ஒரு நிறுவனத்தின் விற்பனை காலாண்டில் ரூபா 12.5 மில்லியனைத் தாண்டியிருப்பின் (காலாண்டுக்கான எல்லை) சிக்கன சேவை கட்டணத்திற்கு கடப்பாடுடையது. கம்பனியின் விற்பனைப் புரள்வு ரூபா 396 மில்லியன் (மொத்த விற்பனை) ஆகும். இருப்பினும், கம்பனி 2019 ஆம் ஆண்டிற்கான சிக்கன சேவை கட்டணத்தை செலுத்தியிருக்கவில்லை, எனவே ESC பொறுப்பு ரூபா 1,983,064 ஆல் குறைத்துக் கூறப்பட்டுள்ளது.

iii. முகாமைத்துவக் கட்டணம் எதனையும் விதிக்காது கம்பனியின் பதவியணியினர் அதன் துணைக் கம்பனிகளின் நிர்வாகச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்திருந்தனர். ஆகையால், ரூபா 24,847,325 தொகையான குழுமத்தின் பதவியணியினர் செலவினம் தவறாக கம்பனியின் செலவினமாக கருதப்பட்டிருந்தது.

# ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை (தொடர்ச்சி)

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

### 1.2.2 இ. மி. ச. இன் நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (SLAS/SLFRS) மற்றும் கணக்கீட்டுக் கொள்கைகளுடன் இணங்குதல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) எல்கேஏஎஸ் 1-நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

(i) தபால் அலுவலக (பிஓஎஸ்) கருமபீடக் கட்டணம் மற்றும் தபால் அலுவலக தரகு தொடர்பான கடன்கொடுத்தோருக்கு எதிராக ரூபா 30,609,836 கடன்பட்டோரை சபை எதிரீடு செய்திருந்தது. இதன் விளைவாக, சில்லறைக் கடன்பட்டோரும் கடன்கொடுத்தோரும் அதே தொகையால் குறைத்துக் கூறப்பட்டிருந்தன.

(ii) பசுமை மின்வலு அபிவிருத்தி மற்றும் எரிசக்தி திறன் மேம்பாட்டு செயற்திட்டத்திற்கு வழங்கிய ரூபா 1,262,503,405 கடன் தொகை, குறிப்பு இல. 24.2.1 இல் காற்றலை மின்வலு செயற்திட்டத்திற்கு வழங்கிய கடனாகக் காட்டப்பட்டுள்ளது.

(iii) ரூபா 83 பில்லியன் பெறப்பட்ட கடன்களுக்காக செலுத்திய ரூபா 25 மில்லியன் கடன் செயன்முறைப்படுத்தல் கட்டணத்தை, நிதிச் செலவாக காண்பிப்பதற்குப் பதிலாக நிர்வாக செலவினங்களின் கீழ் ஏனைய செலவாக காண்பிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) எல்கேஏஎஸ் 2 - இருப்புக்கள் மற்றும் எல்கேஏஎஸ் 16 - ஆதனம், பொறி மற்றும் உபகரணம்**

சீஈபீயானது அதனுடைய மூலதன மற்றும் பராமரிப்பு வேலைகளிற்காக ஏற்பட்ட ஊழியர்இ மூலப்பொருள் மற்றும் மேந்தலைக் கிரயங்களை பெறுமதியிடுவதற்காக மேற்படி நியமங்களிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் உண்மைக் கிரயங்களை பிரயோகிப்பதற்குப் பதிலாக நியமக் கிரய முறையை பிரயோகிக்கின்றது. இதன் விளைவாக, அவற்றின் மீது ஏற்பட்ட ரூபா 6,409,494,526 கூட்டுத்தொகையான சாதகமான மூலப்பொருள் விலை முரணும் ஊழியர் மற்றும் மேந்தலை விகித முரண்களும் மற்றும் ரூபா 2,428,128,229 தொகையான சாதகமற்ற களஞ்சிய விலை முரணும் நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்டிருந்தன.

இதன் விளைவாக, சீஈபீயின் செயற்பாட்டு விளைவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் உரிமை மூலதனம் என்பன அந்த மூலதன வேலைகள் தொடர்பில் உயர் நிதிசார் ஈடுபடுத்தல் காரணமாக குறிப்பிடத்தக்களவு பாதிக்கப்பட்டிருந்தன. எனினும் அம்மூலதன வேலைகள் தொடர்பில் தேவையான தகவல்கள் காணப்படாததன் காரணமாக அது தொடர்பான நிதிக்கூற்றுக்களிற்கான தாக்கத்தை கணக்காய்வின் போது மதிப்பிட முடியாதிருந்தது.

**(இ) எல்கேஏஎஸ் 8 - கணக்கீட்டுக் கொள்கைள், கணக்கீட்டு மதிப்பீடுகளிலுள்ள மாற்றங்கள்மற்றும்தவறுகள்**

சீஈபீயால் தொடர்ச்சியாக பயன்படுத்தப்படுகின்ற முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட நடைமுறையல்லாச் சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் கணக்கீட்டுக் கொள்கைகளில் குறிப்பிடப்பட்டவாறு மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. உதாரணச் சந்தர்ப்பமொன்றாக, ரூபா 32,241,176,427 மற்றும் ரூபா 3,918,235,311 கிரயமான முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட முறையே நான்கு மின்வலு நிலையங்கள் மற்றும் 1,683 மோட்டார் வாகனங்கள் என்பன அவற்றின் உள்ளபடியான ஆயுட்காலம் மீள்மதிப்பீடு செய்யப்படாமல் தற்போதும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

**(ஈ) LKAS 16 - ஆதனம், பொறி மற்றும் உபகரணம்**

பரிமாற்றல் பிரிவிலுள்ள ரூபா 172,019,335,924 தொகையான நிலையான சொத்துக்கள் மீளாய்வாண்டில் பௌதீக ரீதியாக மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

#### 1.2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) ரூபா 3,535,799,151 வரவு மீதி (இருப்பு பற்றாக்குறை) மற்றும் ரூபா 90,343,073 செலவு மீதி (இருப்பு மிகை) என்பன தீர்வு செய்யப்படாமல் ஒரு ஆண்டிற்கு மேலாக இருப்பு சீராக்கல் கணக்கில் காணப்பட்டது.

(ஆ) அமைச்சரவையின் 10/2434/423/034 ஆம் இலக்க தீர்மானத்தின் பிரகாரம் லக்விஜயா மின்வலு ஆலையினை நிர்மாணத்திற்காக பெறப்பட்ட ரூபா 159,184,187,965 கடன் தொகை மற்றும் அதன் மீதான வட்டியை பொதுத் திறைசேரிக்கு சீஈபீ மீளச் செலுத்த வேண்டும். எனினும் பொதுத் திறைசேரியின் வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் அக் கடனிற்கான வட்டியாக 2018 திசெம்பர் 31 வரைரூபா 25,247,801,891 தொகையைகடனளிக்கும் வங்கிக்கு செலுத்தியிருந்த போதிலும் சீஈபீ அதன் கணக்குகளில் மேற்படி கொடுப்பனவை செலுத்தியோ அல்லது அதற்காக ஏற்பாடுகளை மேற்கொண்டோ இருக்கவில்லை. அதன்விளைவாக, 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிறுத்தி வைக்கப்பட்ட உழைப்புக்கள் ரூபா 25,247,801,891 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

# ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை (தொடர்ச்சி)

(இ) பொதுத் திறைசேரியின் PED / 1 / CEB / 2/11 (i)ஆம் இலக்க கடிதத்தின் கோரிக்கைக்கு அமைய, 2019 ஒக்தோபர் 17 ஆந் திகதி உரிமைத்துவத்திற்கு பதிவுசெய்யப்பட்டிருந்த ரூபா 3,556,442,931 தொகை மீளாய்வாண்டில் வட்டி செலவாக வருமானக் கூற்றில் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. மேலும், இந்த தொகை சீஈபீ ஆல் செலவிடப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவாக,சபையின் நட்டம் அந்தத் தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) சீஈபீயால் பேணப்படுகின்ற ஊழியர் சேமலாப நிதியத்தின் சார்பில் சீஈபீ இனால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 41,816,475 தொகையான செலவினங்கள் மீள அறவிடப்படாமல் சீஈபீயின் செலவினங்களாக கருதப்பட்டிருந்ததால் மீளாய்வாண்டிற்கான நட்டம் அதே தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(உ) 2013 ஆம் ஆண்டிற்கு முன்னர் அரசாங்க நிறுவனங்களின் மின் பிறப்பாக்கிகள், மின்தூக்கிகள் மற்றும் வளிப் பதனாக்கிகளின் வழங்கல், பராமரிப்பு மற்றும் திருத்தத்திற்காக சீஈபீயால் மேற்கொள்ளப்பட்ட வேலைகள் அவற்றின் விலைச்சிட்டுப் பெறுமதிகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீடு செய்வதற்குப் பதிலாக கிரயத்தில் பெறுமதியிடப்பட்டு அதற்கிணங்க அவை கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. இதன் விளைவாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பெறவேண்டியவைகள் மற்றும் நிறுத்தி வைக்கப்பட்ட உழைப்புக்கள் என்பன ரூபா 66,987,761 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

(ஊ) 2016 ஆம் ஆண்டில் பொதுத் திறைசேரிக்கு தீர்வையாகச் செலுத்திய ரூபா 5 பில்லியனில் ரூபா 500 மில்லியன் மீளாய்ண்டில் முகாமைத்துவக் கட்டணம் செலுத்துதல் என வகைப்படுத்திவருமானக் கூற்றுக்கு மாற்றப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டுச் சீராக்கமாக ரூபா 1 பில்லியன் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மீதமுள்ள ரூபா 3.5 பில்லியன் தொகையினை உரிமைத்துவத்திற்கு மாற்றுவதற்குப் பதிலாக நிதிக் கூற்றுக்களிலுள்ள ஏனைய கடன்பட்டோராகக் காட்டப்பட்டுள்ளது. இருப்பினும், பொது பொதுத் திறைசேரியிடமிருந்து சீஈபீ ஆல் எந்த முகாமைத்துவச் சேவைகளும் பெறப்பட்டிருக்கவில்லை. எனவே இந்த ஆண்டிற்கான நட்டம்ரூபா 500 மில்லியனால் அதிகமாக காட்டப்பட்டிருந்தது.

(எ) துணைக் கடன் உடன்படிக்கைகளிலுள்ள நிபந்தனைகளின் படி பொது திறைசேரிக்குச் செலுத்த வேண்டிய ரூபா 2,495,574,443 வட்டித் தொகையினை சீஈபீ செலுத்தவுமில்லை அல்லது அதற்காக ஏற்பாடு செய்யவுமில்லை .

(ஏ) திறைசேரியிடமிருந்தான 10 சதவீத பங்கிலாப வரி என பெயரிடப்பட்ட ரூபா 4,200,000 தொகை தலைமையக புத்தகங்களில் அடையாளம் காணப்படாத பிற கடன்பட்டோரில் உள்ளது. இந்த தொகைக்காக கணக்குகளில் எந்த ஏற்பாடும் செய்யப்படவில்லை.

(ஐ) இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 31,119,302 தாமத வட்டி கணக்கு புத்தகங்களிலிருந்து தவறவிடப்பட்டுள்ளது. எனவே மீளாய்வாண்டிற்கான நட்டம் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது.

(ஒ) விநியோக பிரிவில் 1 இலுள்ள சொத்துகளுக்கு மாற்றப்படாமல் ரூபா 734,574,801 மதிப்புள்ள பூரணப்படுத்திய வேலைகள் நடைபெற்றுவரும் வேலைகள் கணக்கில் வைக்கப்பட்டுள்ளன. அந்த சொத்துக்கள் தொடர்பான தேய்மானம் வருமான கூற்றில் சாட்டப்பட்டிருக்கவில்லை.

(ஓ) மொரகஹகந்த மின்வலு நிலையத்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட மின்சாரத்திற்காகச் செலுத்த வேண்டிய ரூபா 128,264,040 தொகை மீளாய்வாண்டில் கணக்கு புத்தகங்களிலிருந்து விடுபட்டுள்ளது. எனவே ஆண்டுக்கான நட்டம் ஒத்த தொகையால் குறைத்தக் காட்டப்பட்டுள்ளது.

(ஔ) 2012 இல் நிறைவடைந்த மேல் கொத்மலை நீர் மின்வலு செயற்திட்டம் தொடர்பான ரூபா 944,030,864 முடிவடையாதிருந்த வேலைகள் நிலையான சொத்துக்களுக்கு மாற்றப்பட்டிருக்கவில்லை. ஆகவே மீளாய்வாண்டுக்கான தேய்மானம் மற்றும் நிறுத்திவைத்த வருவாய் என்பன முறையே ரூபா 26,972,310 மற்றும் ரூபா 161,833,862 ஆல் குறைத்துக் காட்டப்பட்டுள்ளன.

(ஃ) 2014 இல் நிறைவடைந்த புத்தளம் நிலக்கரி மின்வலுச் செயற்திட்டம் தொடர்பான ரூபா 603,573,159 முடிவடையாதிருந்த வேலைகள் நிலையான சொத்துக்களுக்கு மாற்றப்பட்டிருக்கவில்லை. ஆகவே மீளாய்வாண்டுக்கான தேய்மானம் மற்றும் நிறுத்திவைத்த வருவாய் என்பன முறையேரூபா 20,119,105 மற்றும் ரூபா 100,595,526 ஆல் குறைத்துக் காட்டப்பட்டுள்ளன.

(க) ரூபா 367,390,040 தொகையான செலவு மீதியொன்று பிரிவுகளிற்கிடையிலான மீதிகளிற்கு எதிரீடு செய்யப்படாது 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிரிவுகளிற்கிடையிலான நடைமுறைக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது.

(கா) மீளாய்வாண்டில் அனுப்பிவைக்கப்பட்ட ரூபா 999.03 மில்லியன் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. எனவே பொறுப்புக்களும்நடைபெற்றுவரும் வேலைகளும் ஒத்த தொகையால் குறைத்துக் காட்டப்பட்டுள்ளன.

### 1.2.2.3 இணக்கம் செய்யப்படாத வேறுபாடுகள்

அ) 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சீஈபீயின் நிதிக்கூற்றுக்களில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்த வேண்டியதாக காட்டப்பட்ட மீதிக்கும் அத் திகதியிலுள்ளவாறு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களில் பெறவேண்டியதாக காட்டப்பட்ட நேரொத்த மீதிக்கும் இடையில் ரூபா 764,717,080 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

# ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை (தொடர்ச்சி)

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

எனினும், இது கணக்காய்வு அறிக்கைகளில் 2013 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டிருந்த போதிலும் 2019 திசெம்பர் 31 வரையிலும் அச் சிக்கல் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை .

(ஆ) விலைப்பட்டியலிடல் முறைமையிலும் அதே போல் நிதிக்கூற்றுக்களிலும் சில மீதிகள் தவறவிடப்பட்டதன் காரணமாக விநியோகப் பிரிவு 1, 2, 3 மற்றும் 4 இன் விலைப்பட்டியலிடல் முறைமையில் காட்டப்பட்ட 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த வியாபாரக் கடன்பட்டோர் மீதிகளிற்கும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட நேரொத்த தொகைக்கும் இடையில் ரூபா 31,813,455 கூட்டுமொத்தமான இணக்கம் செய்யப்படாத வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. மேலும்,ரூபா 423,764,624 தொகை 2012 ஆம் ஆண்டு முதல் இனங்காணப்படாது வைத்திருக்கப்பட்டுள்ளது.

(இ) 2019 டிசம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறு சேகரிப்பு கட்டுப்பாட்டு பேரேட்டுக் கணக்கிலுள்ள ரூபா 4,073,824,173 மற்றும் ரூபா 129,863,150 வரவு மற்றும் செலவு மீதிகளிற்கான கணக்கிணக்கம், 2005 யூலை 05 ஆந் திகதிய AFM (DD1) கடிதத்தினால் வழங்கிய அறிவுறுத்தலின் செய்யப்பட்டிராததுடன் அத்தகைய நிலுவைகளுக்கான காரணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. எனவே சேகரிப்புக் கட்டுப்பாட்டு கணக்கிலுள்ள மீதிகளின் சரியான தன்மையினை உறுதிப்படுத்த முடிந்திருக்கவில்லை.

(ஈ) தொங்கல் மீதியுடன்தொடர்புடைய மொத்தம் ரூபா 79,512,030 பெறுமதியான 66 சதவீதத்திற்கு வயது பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்படாததுடன் ரூபா 70,306,494 தொகை ஒரு வருடத்திற்கு மேல் தீர்க்கப்படாமல் இருந்தது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன.எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்

### 1.3 ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் மீதானமுகாமைத்துவத்தினதும் ஆளுகைத் தரப்பினரதும் பொறுப்புக்கள்

இந்த ஒன்றித்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்குஇணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட ஒன்றித்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

ஒன்றித்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, குழுமத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினைமதிப்பீடு செய்தல்,தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது குழுமத்தைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

குழுமத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை மீதான பொறுப்பை ஆளுகைத் தரப்பு கொண்டுள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு குழுமம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பிலான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 ஒன்றித்த நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த ஒன்றித்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

# ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை (தொடர்ச்சி)

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

- மோசடி அல்லது தவறு காரணமாக ஒன்றித்த நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி குழுமத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு குழுமத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பிலும் குறிப்பிடத்தக்கஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில்,ஒன்றித்த நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் குழுமத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக ஒன்றித்த நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் காண்புகள், உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள பிரதான பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் ஆளுகைத் தரப்பினர் அறிவுறுத்தப்பட்டனர்.

## 2. ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகள் தொடர்பில் விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

- முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(அ) பிரிவிலுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம், கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு குழுமம் முறையான நிதி அறிக்கைகளை பேணியிருந்தது.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவிலுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம், சமர்ப்பிக்கப்பட்ட ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடக்கூடியனவாகும்.

- இந்த அறிக்கையின் 1.2.1,1.2.2.1 (ஆ), (இ), (ஈ), 1.2.2.2 (அ), (ஆ), (ஈ), (உ), (ஊ),(எ),1.2.2.3 (அ), (ஆ)ஆம் பந்திகளிலுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம், சமர்ப்பிக்கப்பட்ட ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் உள்ளடக்குகின்றன.

ஒப்பம்: டபிள்யூ.பி.சீ. விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள்

**இலங்கை மின்சார சபை மற்றும் சபையினதும் அதன் துணைக் கம்பனிகளினதும் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் மீது 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள்**

## 1. ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தகவல் பந்தி

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

தகவல் பந்தி

### 1.2.1 ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

**1.2.1.1 வரையறுக்கப்பட்ட திருகோணமலை மின்வலுக் கம்பனியின் (டிபிசிஎல்) கணக்காய்வாளர் அதன் நிதிக்கூற்றுக்கள் மீது பின்வரும் கருத்திலெடுக்க வேண்டிய விடயங்களை சுட்டிக் காண்பித்திருந்தார்.**

கம்பனியின் தொடந்தியங்கும் இயலுமை எண்ணக்கரு தொடர்பில் குறிப்பிடத்தக்க பொருண்மையான நிச்சயமற்றதன்மை நிலவுகின்றமை

50 மெகாவாட் சூரிய சக்தி மற்றும் 500 மெகாவாட் எல்.என்.ஜி மின் உற்பத்தி நிலையங்களை உருவாக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தமையால்,50 மெகாவாட் சூரியசக்தி மின்வலுச் செயற்திட்டத்திற்காக சாம்பூர் இல் ஒதுக்கப்பட்ட இடத்தைப் பயன்படுத்துவதற்கு டிபிசிஎல் தீர்மானித்தது. கடந்த காலங்களில் நடைபெற்ற டிபிசிஎல் இன் பணிப்பாளர் சபைக் கூட்டங்களில் இந்த விடயம் தொடர்ந்து விவாதிக்கப்பட்டதுடன் தற்போது டிபிசிஎல் இல் சூரியசக்தி திட்டத்தை செயற்படுத்தும் பொருட்டு டிபிசிஎல் இன் அமைப்பு அகவிதியை திருத்துவதற்கு பணிப்பாளர் சபை முடிவு செய்துள்ளது. சூரிய சக்தி திட்டத்தை தொடங்குவதற்காக இ.மி.ச. இற்கும் இந்தியாவின் நெஷனல் தெர்மல் பவர் கம்பெனி லிமிடெட் (என்.டி.பி.சி) இற்கும் இடையே கூட்டு முயற்சியில் கையெழுத்திட தேவையான நடவடிக்கைகளை 2020 இல் டிபிசிஎல் இன் பணிப்பாளர் சபை மேற்கொள்ளவிருந்தது. எவ்வாறாயினும், கூட்டு முயற்சி உடன்படிக்கையில் கையெழுத்திடுவதற்கு முன்பு சட்டமா அதிபரிடமிருந்து தேவையான சட்ட விளக்கங்கள் பெறப்படுதல் வேண்டும்.

இ.மி.ச. இற்கும் என்டிபிசி இற்கும் இடையிலான தொடர்ச்சியான கலந்துரையாடல்களுக்குப் பின்னர், இரு கட்சிகளும் 2019 அக்டோபர் 25 ஆம் தேதி கெரவலப்பிட்டியில் உள்ள எல்என்ஜி மின்நிலையத்தை மேம்படுத்துவதற்காக கூட்டு முயற்சியில் கையெழுத்திட்டன.

கொவிட் 19 இன் தாக்கம் காரணமாக கலந்துரையாடல்களின் செயல்முன்னேற்றம் தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளது. இருப்பினும்,எதிர்காலத்தில் முன்மொழியப்பட்ட திட்டங்களை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று டிபிசிஎல் இன் பணிப்பாளர் சபை கருதுகிறது .

**1.2.1.2 பின்வரும் அவதானிப்புக்களை அடிப்படையாயகக் கொண்டு 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கீழ்வரும் கம்பனிகளின் நிதிக்கூற்றுக்கள் மீது முனைப்பழியுள்ள அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது.**

**அ) லங்கா கோல் கம்பனி (பிரைவட்) லிமிடட் (எல்சீசீ)**

i. **ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் (எல்கேஏஎஸ் 16) பற்றிய இலங்கை கணக்கீட்டு நியமத்தின் 51 வது பந்தியின் படி, ஒவ்வொரு நிதி ஆண்டு முடிவிலும் சொத்தின் பயனுள்ள வாழ்க்கை காலம் மதிப்பாய்வு செய்யப்பட்டு அதற்கமைய, முன்னையய மதிப்பீடுகளிலிருந்தான எதிர்பார்ப்புகளில் மாற்றமேற்பட்டிருந்தால், அந்த மாற்றங்கள் எல்கேஏஎஸ் 08 இற்கு இணங்க கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும்.**

எல்சீசீ இன் கீழுள்ள முழுமையாகத் தேய்விடப்பட்ட 3 வாகனங்களிற்குமாக ஒரு மீள்மதிப்பீட்டுச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளப்பட்டு தேவையான சீராக்கங்கள் 2020 ஆம் நிதியாண்டில் மேற்கொள்ளப்படும்.

ii. **வருமான வரி தொடர்பான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் (எல்கேஏஎஸ் 12) 88 ஆவது பந்தியின் படி, 2017:2018 மதிப்பீட்டு ஆண்டிற்கான பொருளாதார சேவை கட்டணம் (இஎஸ்சி) தொடர்பான ரூபா 159,549,619 மதிப்பீடு மற்றும் ரூபா 75,461,644 அபராதங்கள் குறித்த எந்த தகவலும் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.**

நுளுஊ இன் தீர்ப்பனவுக் காலத்தை நீடிக்கக் கோரி உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு ஒரு கடிதம் அனுப்பப்பட்டதுடன் இது தொடர்பாக ஒரு இணக்கப்பாடு ஏற்படும் வரை நுளுஊ இன் தீர்ப்பனவு தொடர்பில் கம்பனிக்கு எதிராக எந்தவொரு அறவீட்டு நடவடிக்கையையும் அல்லது எந்தவொரு வரியையும் விதிக்க வேண்டாம் எனவும் கோரப்பட்டுள்ளது.

iii. **இலங்கை கணக்கீட்டு நியமத்தின் (எல்கேஏஎஸ் 18) 14 ஆம் பந்தியின் படி, பொருட்களின் விற்பனையிலிருந்தான வருமானம் அங்கீகரிக்கப்பட் டிருக்கவில்லை.**

இ.மி.ச. இற்கு விலைப்பட்டியல்களை வழங்குகையில் சுங்கத் தீர்வையினை கிரயத்துடன் சேர்ப்பதற்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களம் எல்சீசீ இற்கு அறிவுறுத்தல் வழங்கியிருந்தது. உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் உத்தியோகத்தர் ஒருவரின் பங்குபற்றலுடன் 2018 ஜூன் 28 அன்று அமைச்சில் நடைபெற்ற கூட்டத்தைத் தொடர்ந்து இந்த விலை நிர்ணய முறை பின்பற்றப்பட்டது. இ.மி.ச. இற்கான விலைப்பட்டியலிலுள்ள வெற் வரிக்கான எல்சிசி இன்

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் (தொடர்ச்சி)

பெறுமதி அடிப்படையானது சுங்க நோக்கங்களுக்கான பெறுமதியை விட குறைவாக இருக்கக்கூடாது என்று உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் உத்தியோகத்தரால் கூறப்பட்டமை பதிவுசெய்து வைக்கப்பட்டுள்ளது. ஆகையால், 10% தொகை உள்நாட்டு இறைவரி உத்தியோகத்தரின் உத்தரவின் பேரிலேயே சேர்க்கப்படுகின்றது. அன்றுமுதல்,இ.மி.ச. இந்த உத்தரவை சவால் செய்து, 2018-09-07 திகதிய அதனது கடிதத்தின் மூலம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அறிவித்திருந்த போதிலும், அதற்கான பதில் இன்னும் கிடைக்கவில்லை. அதுவரையிலும் நாங்கள் விலைப்பட்டியலில் 10% சுங்க தீர்வையைச் சேர்த்துள்ளோம். ஆனால் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் தீர்ப்புக்காக காத்திருக்கப்பட்டுள்ளமையால் மேலதிக வெளியீட்டு வெற் தொகை அனுப்பப்படவில்லை. எனவே வருமானம் அதிகரித்துக் கூறப்பட்டமைக்கு இதுவே காரணமாகும்.

iv. **2016 செப்தெம்பர் 19 முதல் 2018 ஏப்ரல் 09 வரையிலான கால கட்டத்தில் நிலக்கரி இறக்குமதியின் சரியான கொடுக்கல் வாங்கல் பெறுமதியை அறிவிக்காதது குறித்து இலங்கை சுங்கத்தால் ரூபா 205,000,000 தொகை தண்டமாக கம்பனிக்கு விதிக்கப்பட்டிருந்ததுடன், இயக்குநர்கள் நிதிக்கூற்றுக்களில் கைச்சாத்திடுவதற்கு முன்னர் 2018 திசெம்பர் 12 ஆந் திகதி இத் தண்டப்பணம் தீர்மானிக்கப்பட்டிருந்தது.**

இலங்கை சுங்கம் நடத்திய விசாரணையின்படி, 2016.09.19 முதல் 2018.04.09 வரையிலான காலகட்டத்தில் இறக்குமதி செய்யப்பட்ட நிலக்கரியின் சரியான கொடுக்கல் வாங்கல் பெறுமதிகளை லங்கா கோல் கம்பனி அறிவித்திருக்கவில்லை. அக்காலத்தில்அனைத்து சுங்க விடயங்களையும் சிலோன் ஷிப்பிங் கார்ப்பரேஷன் (சி.எஸ்.சி) கையாண்டிருந்ததுடன் அதற்காக ஒரு கப்பலேற்றலுக்கு ரூபா 1,000,000 கட்டணம் வசூலித்திருந்தது. மேற்படி தவறான வெளிப்படுத்தலுக்காக இலங்கைச் சுங்கம் எல்சிசி இற்கு ரூபா 205,000,000 அபராதம் விதித்ததுடன் இலங்கைச் சுங்கத்தின் விசாரணை அதிகாரிகள் எல்சிசி அதிகாரிகளுக்கு இந்த கட்டணத்திற்குப் பிறகு இறுதி வெற் கட்டணம் எதனையும் செலுத்தத் தேவையில்லை என்று தெரிவித்திருந்தனர்.

எல்சிசி ஏற்கனவே சம்பந்தப்பட்ட ஏற்றுமதிகளுக்காக ரூபா 37,594,744 தொகையான வற் இனை செலுத்தியுள்ளதுடன்நிலக்கரி இறக்குமதிகளை விடுவிப்பதற்குசுங்கம் அனுமதிக்காமையால் இ.மி.ச. வழங்கிய நிதியைப் பயன்படுத்தி ரூபா 205 மில்லியன் தொகையினை இலங்கை சுங்கத்திற்கு செலுத்த வேண்டிய நிலைக்கு அது தள்ளப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும், எல்சிசி இந்த விடயத்தை வரிசை அமைச்சின் ஊடாக நிதியமைச்சருக்கு தெரிவித்திருந்ததுடன் ஏற்கனவே நிராகரிக்கப்பட்ட தண்டப்பணச் செலுத்துகையினை தள்ளுபடி செய்யுமாறு கோரியுள்ளது. ஆனால் இந்த விவகாரம் இ.மி.ச. மற்றும் சிஎஸ்சி உடன் சம்பந்தப்பட்ட அமைச்சுகளின் இரண்டு செயலாளர்களால் நியமிக்கப்பட்ட சிறப்புக் குழுவினால் (நெம்மவட்ட கமிட்டி) விசாரணை செய்யப்பட்டு வருவதுடன் நிதி அறிக்கைகளில் சரியான விளக்கத்தை தருவதற்காக அவர்களின் அறிக்கைக்காக காத்திருக்கப்படுன்கிறது.

v. **கப்பல் பட்டியல்களைத் தீர்ப்பதற்கும் மேலே ஸை இல் குறிப்பிடப்பட்டுள்ள அபராதத்தை செலுத்துவதற்கும் இலங்கை மின்சார சபையிடமிருந்து (சீஈபீ) பெறப்பட்ட நிதியை கம்பனி பயன்படுத்தியிருந்தது.**

நிலக்கரி இறக்குமதிகளை விடுவிப்பதற்குசுங்கம் அனுமதிக்காமையால் இ.மி.ச. வழங்கிய நிதியைப் பயன்படுத்தி எல்சிசி இக்கொடுப்பனவை மேற்கொண்டுள்ளது. இந்த விவகாரம் இ.மி.ச. மற்றும் சிஎஸ்சி உடன் சம்பந்தப்பட்ட அமைச்சுகளின் இரண்டு செயலாளர்களால் நியமிக்கப்பட்ட சிறப்புக் குழுவினால் (நெம்மவட்ட கமிட்டி) விசாரணை செய்யப்பட்டு வருவதுடன் நிதி அறிக்கைகளில் சரியான விளக்கத்தை தருவதற்காக அவர்களின் அறிக்கைக்காக காத்திருக்கப்படுன்கிறது.

vi. **நிலக்கரியினை குறைத்து வழங்கியிருந்தமை தொடர்பில் தௌரியன் அயர்ன் என்ட் ஸ்ரீல் கம்பனி லிமிடட் (TISCL) இடமிருந்து பெறப்பட வேண்டிய ரூபா 539,192,079 தொகையினை இணங்கப்பட்ட முறையில் இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்தின் (CECL) ஊடாக அறவிடுவதற்கு கம்பனி தேவையான நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை.**

தூரியன் அயர்ன் என்ட் ஸ்ரீல் ஒரு உயர் மட்டக் குழுவால் கையாளப்பட்டது. இக்கடனை ஐயக்கடன் என்று குழு கருத்து தெரிவிக்காததுடன் நிலக்கரியை வழங்குவதன் மூலம் நிலுவைத் தொகையை தீர்ப்பதற்கு கொள்வனவாளர் கூட ஒப்புக் கொண்டுள்ளார். எங்கள் வசம் உள்ள தகவல்களின்படி, அமைச்சரவையால் தீர்மானிப்பதற்காக தீர்வுத்திட்ட முன்மொழிவொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. சிலோன் ஷிப்பிங் கார்ப்பரேஷன் இடமிருந்து (தூரியன் அயர்ன் என்ட் ஸ்ரீல் கம்பனி லிமிடெட்) பெற வேண்டிய நிலுவைத் தொகையின் தற்போதைய நிலை அமைச்சரவைக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதுடன்தூரியன் அயர்ன் என்ட் ஸ்ரீல் கம்பனியுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காகதிறைசேரி (தலைவர்), சிலோன் ஷிப்பிங் கார்ப்பரேஷன், லக்விஜய மின் உற்பத்தி நிலையம் மற்றும் லங்கா கோல் கம்பனி ஆகியவற்றின் நான்கு உறுப்பினர்களை அமைச்சரவை நியமித்திருந்தது. மேலும், குழுவின் பரிந்துரைகளை துறைமுகங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து அமைச்சு மூலம் மீண்டும் அமைச்சரவையில் சமர்ப்பிக்க அமைச்சரவை அறிவுறுத்தியுள்ளது.

vii. **முன்னைய ஆண்டின் கணக்காய்வில் மெய்மையாய்வு செய்வதற்கு முடியாது காணப்பட்டு முன்கொண்டு வரப்பட்டிருந்த ரூபா 894,151 கூட்டுத்தொகையான பெறவேண்டிய பொருளாதாரச் சேவைக் கட்டணம் (ESC),ரூபா 77,719 தொகையான நிறுத்திவைத்தல் வரி (WHT),ரூபா 65,474,540 தொகையான செலுத்த வேண்டிய வருமான வரி, ரூபா 3,371,326 தொகையான தேசத்தைக் கட்டியெழுப்புதல் வரி (NBT) மற்றும் ரூபா 12,758,801 ஆன பெறுமதிசேர் வரி (VAT) என்ப முன்னைய ஆண்டிற்கான சீராக்கமாக 2018 இன் நிறுத்திவைத்த உழைப்புக்களிற்கு எதிராக சாட்டப்பட்டிருந்தன. இருப்பினும், இந்த சீராக்கங்களைத் திருத்துவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கம்பனி தவறியிருந்தது.**

பொ.சே.க/பிடித்துவைத்தல் வரி

நீண்டகாலமாக நிலுவையிலுள்ள யதார்த்தமற்ற வரி மீதிகளை பதிவழிப்பதற்காக பணிப்பாளர் சபையிடமிருந்து கிடைத்த அங்கீகாரத்தின் ஒரு பகுதியாக மொத்தம் ரூபா 971,868 தொகையான அறவிடப்பட முடியாத பொ.சே.க. மற்றும் பிடித்து வைத்தல் வரிஉருவாகியுள்ளன

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் (தொடர்ச்சி)

வருமான வரி
14/15 மற்றும் 13/14 ஆண்டுகளிற்காக நிலுவையாகக் காணப்படும் வருமான வரி முறையே ரூபா 2,049,484 மற்றும் ரூபா 3,590,678 மாத்திரமே என உள்நாட்டு இறைவரித் திணைக்களம் எழுத்துப்பூர்வமாக உறுதிப்படுத்தியுள்ளது. எனவே, 2018.07.26 அன்று நடைபெற்ற கூட்டத்தில் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் இனிமேல் செலுத்துவதற்குத் தேவையற்றதாகவுள்ள ரூபா 11,703,151 வரி சீராக்கப்பட்டது.

வருமான வரிக்கு மேலும் ரூபா 65,474,540 ஆன மேலதிக வரி ஏற்பாடு காணப்படுகின்றது. மேலே குறிப்பிடப்பட்ட உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் எழுத்துப்பூர்வமான உறுதிப்படுத்தலின் படி, இந்த வரியும் இனிமேல் தேவையற்றதாகவுள்ளது. ஆகையால்,உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் எழுத்துப்பூர்வமான உறுதிப்படுத்தலின்படி செலுத்த வேண்டிய வரியிலிருந்து மேலதிக ஏற்பாடு கழிக்கப்பட்டுள்ளது.

தே.க.வ.
கடந்த காலத்தில் கம்பனி செலுத்திய தே.க.வரி பெறத்தக்கதாகக் கணக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன், 2017 ஆம் ஆண்டின் இறுதியில் அது ரூபா 3,371,326 ஆக இருந்தது. எல்சிசி ஒரு இறக்குமதியாளராகவும் நிலக்கரி வர்த்தகராகவும் இருப்பதால் தே.க.வ. இற்கு செலுத்தப்பட்ட பணத்தை மீளப்பெறும் உரிமை அதற்கு இல்லை. எனவே, மேற்குறிப்பிட்ட நிலுவைத் தொகையை ஐந்தொகையில் சீராக்குவதற்கு2018.07.26 இல் நடைபெற்ற கூட்டத்தில் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டது.

வெற் வரி
2017 ஆம் ஆண்டின் இறுதியில் பெறத்தக்கதாக கணக்கீடு செய்யப்பட்ட ரூபா 12,758,801 உள்ளீட்டு வெற் வரியானது சரியான நிலையை பிரதிபலிக்கும் வகையில் சீராக்கப்பட்டது. உள்ளீட்டு வெற் பணத்தைத் திரும்பப் பெறுவதற்கான சாத்தியத்தை விசாரித்து உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு நாங்கள் கடிதம் எழுதியுள்ளோம். உள்நாட்டு இறைவரித் திணைக்களம் அதன் 2018.06.14 ஆந்திகதிய கடிதத்தின் மூலம் 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க வெற் சட்டத்தின் பிரிவு 22 (5) இன் படி நிறுவனம் செலுத்திய உள்ளீட்டு வெற் இனை திரும்பப் பெறப்பட முடியாது என விளக்கமளித்துள்ளது. அதன்படி,2018.07.26 அன்று நடைபெற்ற கூட்டத்தில் பணிப்பாளர் சபையின் அனுமதியைப் பெற்ற பின்னர் மேற்குறித்த பெறத்தக்க தொகை சீராக்கப்பட்டது.

viii. **இலகுக்கட்டண வெற் (lightering VAT கப்பலேற்றல் இலக்கம் 151 முதல் 154) தொடர்பில் இலங்கை மின்சார சபையால் செலுத்தப்பட்டு இலங்கை கப்பற் கூட்டுத்தாபனக் கம்பனிக்குச் (CSCL) செலுத்தப்பட வேண்டிய ரூபா 15இ870இ104 தொகை CSCL இற்குச் செலுத்தப்பட்டோ அல்லது இ.மி.ச. இடமிருந்து கிடைத்த முற்பணமாகவோ காட்டப்பட்டிருக்கவில்லை.**

உள்நாட்டு இறைவரித் திணைக்களம் இலகுக் கட்டணத்திற்காக 0% வெற் வரியினை நிர்ணயித்திருந்தமையால் இல. 151 முதல் 154 வரையானகப்பலேற்றலுக்குரிய ரூபா 15,870,104.32 இலகுக் கட்டணத்தின் மீதான வெற் இனை எல்சிசி சிஎஸ்சி இற்குச் செலுத்தவில்லை. கிடைத்திருந்த இத்தொகை 124 முதல் 142 வரையிலான 11 கப்பலேற்றலுக்குரிய இறுதி வெற் மதிப்பீட்டைத் தீர்ப்பதற்கு பயன்படுத்தப்பட்டது. இது தொடர்பாக 2020 ஆம் ஆண்டில் செலவுத் தாள் ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

ix. **கணக்குகளை மெய்மையாய்வு செய்வதற்குத் தேவையான மீதி உறுதிப்படுத்தல்கள் மற்றும் தொடர்புடைய சான்றுகள் கிடைக்கப்பெறாமை.**

**செலுத்த வேண்டிய கணக்குகள் ரூபா 1,109,063**

நிலுவைத் தொகை 2020 ஆம் ஆண்டில் சரிசெய்யப்படும்

**இ.மி.ச. இடமிருந்து பெறவேண்டிய ஏனையவை மற்றும் இறுதி வெற்: ரூபா 180,416,885**

123 முதல் 155 வரையிலான கப்பலேற்றல்களின் இறுதி வெற் மற்றும் பரிமாற்ற இழப்புக்கான பெறத்தக்க தொகை இதுவாவதுடன் இது இலங்கை சுங்கத்திற்கு செய்யப்பட்ட ரூபா 205 மில்லியன் கட்டணத்துடன் தொடர்புடையது. இந்த விவகாரம் இ.மி.ச. மற்றும் சிஎஸ்சி உடன் சம்பந்தப்பட்ட அமைச்சுகளின் இரண்டு செயலாளர்களால் நியமிக்கப்பட்ட சிறப்புக் குழுவினால் விசாரணை செய்யப்பட்டு வருவதுடன் அவர்களின் அறிக்கைக்காக காத்திருக்கப்படுன்கிறது. மேற்குறித்த அறிக்கைக்கு அமைய பதிவுகள் மேற்கொள்ளப்படும்.

**இ.மி.ச. இடமிருந்து பெறவேண்டியபொ.சே.க. : ரூபா 578,678,686**

பொ.சே.க. இனை தீர்ப்பதற்கான காலநீடிப்பைக் கோரி உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு ஒரு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

**இ.மி.ச. க்கு செலுத்த வேண்டியது: ரூபா 6,813,692**

நடுவர் மாதிரி சான்றிதழ்களின் முரண்பாடு காரணமாக டிரா/பிகுரா கப்பலேற்றல்கள் மீதான தொடர்புடைய செலவுகள் மற்றும் விலைக் குறைப்பைக் கழித்த பின்னர்டிரா/பிகுரா இடமிருந்து கோரப்பட்ட தாமதக் கட்டணத் தொகையே இந்த மீதியாகும்.

**சிலோன் ஷிப்பிங் கார்ப்பரேஷன் லிமிடெட் - பழைய கட்டணம் ரூபா 28,347,444**

இந்த மீதி சிலோன் ஷிப்பிங் கார்ப்பரேஷன் லிமிடெட் (சிஎஸ்சி) இனால் உறுதிப்படுத்தப்பட்டதுடன் எல்.சி.சி ஏற்கனவே இருப்புக் காப்புறுதிக் கொடுப்பனவுகளின் விலைப்பட்டியல் மற்றும் பற்றுச்சீட்டுக்களை சமர்ப்பித்திருப்பதால் திருத்தும் பதிவுகளை சிஎஸ்சி மேற்கொள்தல் வேண்டும்.

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் (தொடர்ச்சி)

**நானாவிதக் கடன்பட்டோர் ரூபா 18,075,802**

ஆரம்ப விசாரணையில் இந்த தொகை சுங்கத்திற்கு மேலதிகமாகச் செலுத்திய கட்டணம் என்பது தெரியவந்தது. இருப்பினும், சரியான பெறத்தக்க மீதியினை இனங்காண்பதற்காக மேலதிக பகுப்பாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

**இ.மி.ச. இடமிருந்து பெறவேண்டியவை ரூபா 4,674,041**

மீதியின் தன்மை விசாரிக்கப்பட்டு அதற்கேற்ப சரி செய்யப்படும்.

**வர்த்தகக் கடன்பட்டோர் (இ.மி.ச.) நீராவி நிலக்கரி ரூபா 7,750,000**

இந்த மீதிமோ்கடா் நிறுவனத்திற்குச் செலுத்தப்பட்ட கட்டணத்தைக் உள்ளடக்குகின்றது. இந்த விவகாரம் இ.மி.ச. மற்றும் சிஎஸ்சி உடன் சம்பந்தப்பட்ட அமைச்சுகளின் இரண்டு செயலாளர்களால் நியமிக்கப்பட்ட சிறப்புக் குழுவினால்(நெம்மவட்ட குழு)விசாரணை செய்யப்பட்டு வருவதுடன் அவர்களின் அறிக்கைக்காக காத்திருக்கப்படுன்கிறது.

**இ.மி.ச. இடமிருந்து பெறவேண்டிய ஏனையவை - ரூபா 1,760,500**

மீதியின் தன்மை எதிர்காலத்தில் ஆராயப்பட்டு அதற்கேற்ப சரிசெய்யப்படும்

**வியாபாரக் கடன்கொடுத்தோர் - நொபல் ரிசோர்ஸஸ் ரூபா 85,887,776**

நாணயக் கடிதத்தின் செல்லுபடியாகும் காலம் முடிவடைந்திருந்தமையால் நொபல் ரிசோர்ஸஸ் இன்டர்நெஷனல் பிரைவட் லிமிடட் இனால் குறைவாகப் பற்றிய தொகையினை பிரதானமாக இந்தி மீதி கொண்டுள்ளது.

**நொபல் ரிசோர்ஸஸ் இடமிருந்து பெறவேண்டியவை - ரூபா 1,115,987**

நொபல் ரிசோர்ஸஸ் இன்டர்நெஷனல் பிரைவட் லிமிடட் இன் ரூபா 85,887,776 கடன்கொடுத்தோருக்கு எதிராக இந்த மீதி எதிரீடு செய்யப்படும்.

x. **மீளளிக்கப்பட வேண்டிய செலவினம் மீதான ரூபா 8,280,994 தொகையான செலுத்த வேண்டிய வெற் ஆனது வெற் கட்டுப்பாட்டு கணக்கில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, வெற் பொறுப்பு ஒத்த தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டது.**

கணக்காய்வு ஐயவினாவின் படி, இவை எல்சிசி இன் பட்டியல்களிற்காக மீளளிக்கப்பட வேண்டிய தொகையாகும். எங்கள் சேவைகளுக்கு எந்த எல்லையும் சேர்க்கப்படவில்லை. எங்கள் வரி ஆலோசகரின் ஆலோசனையின் படி, செலவினங்களை மீளளிப்பது வெற் வரிக்கு பொறுப்புடையதாகாது.

xi. **குறித்த வழங்குனருக்கு அல்லது ஊளுஊடு இற்கு செலுத்த வேண்மேன்ற ஒரு கணக்கு பேரேட்டில் இல்லாத போதிலும், CSCL இன் ஊடாக அந்த வழங்குனருக்கு ரூபா 4,000,000 தொகையை கம்பனி செலுத்தியிருந்தது.**

மீதியின் தன்மை எதிர்காலத்தில் ஆராயப்பட்டு அதற்கேற்ப சரிசெய்யப்படும்

xii. **சுங்கத் திணைக்களத்தின் படி உண்மையான வெற் ரூபா 106,969,404 ஆன போதிலும், கப்பலேற்றல் இலக்கம் 123 இற்கான சுங்க வெற் ஆக கம்பனி ரூபா 136,236,370 தொகையை செலுத்தியிருந்தது.**

மீதியானது 2020 ஆம் ஆண்டில் சரிசெய்யப்பட்டுள்ளது.

xiii. **கம்பனி CSCL இற்குச் செலுத்த வேண்டிய கணக்கில் ரூபா 5,218,271 தொகையினை வரவு வைத்திருந்தது. இருப்பினும், இந்த தொகையை மெய்மையாய்வு செய்வதற்கான ஆதாரப்படுத்தும் ஆவணங்கள் மற்றும் காரணங்கள் வழங்கப்படவில்லை.**

தேவையான பதிவுகள் 2020 ஆம் நிதியாண்டில் மேற்கொள்ளப்படும்.

xiv. ரூபா 500,546 பொருளாதார சேவை கட்டணம் (இஎஸ்சி), ரூபா 10,134,113 தேசத்தை கட்டியெழுப்பல் வரி (என்பிடி) மற்றும் ரூபா 1,900,938 பெறுமதிசேர் வரி (வெற்) ஆகிய அபராதத் தொகைகளை உள்நாட்டு இறைவரித் திணைக்களம் விதித்திருந்தமை

தண்டப்பணத்தை அகற்றிக் கொள்வதற்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டுள்ளதுடன் 2020 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் தேவையான வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்படும்.

(ஆ) ஸ்ரீலங்கா எனர்ஜீஸ் (பிறைவேட்) லிமிட்டட்

i. **இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.**

இந்த இலங்கை கணக்கீட்டு நியமங்களிலுள்ள சிறந்த நடைமுறைகளைப் பின்பற்றுவதற்கு 2020 ஆம் ஆண்டு முதல் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

ii. **2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க பொருளாதார சேவை கட்டணச் சட்டத்தின் பிரிவு 2 (2) (திருத்தப்பட்ட) படி, ஒரு நிறுவனத்தின் விற்பனை காலாண்டில் ரூபா 12.5 மில்லியனைத் தாண்டியிருப்பின் (காலாண்டுக்கான எல்லை) பொருளாதார சேவை கட்டணத்திற்கு கடப்பாடுடையது.**

ஸ்ரீலங்கா எனர்ஜீஸ் (பிறைவேட்) லிமிட்டட் எதிர்காலத்தில் இதனை பின்பற்றும்

iii. **முகாமைத்துவக் கட்டணம் எதனையும் விதிக்காது கம்பனியின் பதவியணியினர் அதன் துணைக் கம்பனிகளின் நிர்வாகச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்திருந்தனர். ஆகையால்,ரூபா 24,847,325 தொகையான குழுமத்தின் பதவியணியினர் செலவினம் தவறாக கம்பனியின் செலவினமாக கருதப்பட்டிருந்தது.**

துணைக் கம்பனிகள் நடப்பாண்டில் போதியளவு மிகையினை உருவாக்கியிருக்காமையால், முகாமைத்துவக் கட்டணத்தை சாட்டுவதற்கான நிலைமை காணப்படவில்லை என்பதுடன் 2020 ஆம் நிதியாண்டிலிருந்து இது பின்பற்றப்படும்.

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் (தொடர்ச்சி)

1.2.2 **இ.மி.ச. இன் நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (SLAS/SLFRS) மற்றும் கணக்கீட்டுக் கொள்கைகளுடன் இணங்குதல்.**

**(அ) எல்கேஏஎஸ் 1-நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

i. **கடன்கொடுத்தோருக்கு எதிராக ரூபா 30,609,836 கடன்பட்டோரை சபை எதிரீடு செய்திருந்தது.**

தவறுதலாக மேற்கொள்ளப்பட்ட பதிவு 2020 இல் திருத்தப்பட்டது.

ii **பசுமை மின்வலு அபிவிருத்தி மற்றும் எரிசக்தி திறன் மேம்பாட்டு செயற்திட்டத்திற்கு வழங்கிய ரூபா 1,262,503,405 கடன் தொகை.**

தவறுதலாக மேற்கொள்ளப்பட்ட பதிவு 2020 இல் திருத்தப்பட்டது.

iii **ரூபா 83 பில்லியன் பெறப்பட்ட கடன்களுக்காக செலுத்திய ரூபா 25 மில்லியன் கடன் செயன்முறைப்படுத்தல் கட்டணத்தை, நிதிச் செலவாக காண்பிப்பதற்குப் பதிலாக நிர்வாக செலவினங்களின் கீழ் ஏனைய செலவாக காண்பிக்கப்பட்டிருந்தது.**

செலவின வகைப்படுத்தல் திருத்தம் பாதிக்கப்பட்டுள்ளது.

**(ஆ) LKAS 2 - இருப்புக்கள் மற்றும் LKAS 16 - ஆதனம், பொறி மற்றும் உபகரணம்**

இ.மி.சபை அதனது மூலதன மற்றும் பராமரிப்பு தொழில்களிற்கான ஊழியம், பொருள் மற்றும் மேந்தலைக் கிரயங்களிற்கு நியமக் கிரயத்தினை பிரயோகிக்கின்றமை

எல்கேஏஎஸ் - 2 இன் 21 ஆம் பந்தியின் இன் படி இருப்பினை அளவிடுவதற்காக நியமக் கிரய முறை பரிந்துரைக்கப்படுகின்றது. அதன்படி, உண்மையான கிரயத்தினைப் பயன்படுத்துவதற்கான நடைமுறை சிரமம் காரணமாக இருப்புக்கள்,முடிவுறாவேலை மற்றும் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை மதிப்பிடுவதற்கு நியம விலைகளை இ.மி.ச. பயன்படுத்துகிறது. இருப்புக்களின் நியம விலைகளைத் தீர்மானிக்க அமைக்கப்பட்ட குழு,உண்மையான் உண்மையான விலைகளுக்கு மிக அண்மித்த, துல்லியமான மற்றும் நியாயமான மதிப்பீட்டைக் கண்டறிவதற்கு கடுமையாக செயற்படுகிறது. இருப்பினும் தொழில்நுட்பத்தின் சிக்கலான தன்மை மற்றும் பாரியளவு இருப்பு காரணமாக, உண்மையான மற்றும் நியம விலைகளுக்கு இடையில் இடைவெளி உள்ளது. ஒருங்கிணைந்த கணக்கீட்டு முறை அறிமுகப்படுத்தப்பட்டவுடன் இந்த விடயம் தீர்க்கப்படும்.

நியம விலைகளிற்கும் உண்மையான விலைகளுக்கும் இடையிலான இந்த இடைவெளியைக் குறைப்பதற்கு இ.மி.ச. பின்வரும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

- DD 4 மற்றும் DD 3 இன் ஊழிய வீத முரண் 2019 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களிலிருந்து நீக்கப்பட்டது. ஏனைய இரண்டு பிரிவுகளிலும் 2020 ஆம் ஆண்டில் இதனைச் செய்ய முடியும்.
- நியமிக்கப்பட்ட குழுவால் பரிந்துரைக்கப்பட்ட இருப்பு மதிப்பீட்டிற்கான நிறையளித்த சராசரி முறையைத் பின்பற்றுவதன் மூலம், நிதிக் கூற்றுக்களிற்கான பொருள் விலை முரண்களின் தாக்கத்தை அகற்ற முடியும். இது தற்போது செயற்படுத்தப்பட்டு வருகின்ற ஈஆர்பி முறைமையில் உள்ளடக்கப்பட்டுள்ளமையால், ஈஆர்பி முறைமை நடைமுறைக்கு வந்தவுடன் இந்த பிரச்சினை தீர்க்கப்பட்டு விடும்.
- முடிவுறா வேலையிலிருந்து மாற்றப்படுகின்ற விநியோக சொத்துக்களைத் தவிர மற்ற அனைத்து ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் (நிலம், கட்டிடம், மோட்டார் வாகனம், இயந்திரங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள்) எல்கேஏஎஸ் பரிந்துரைகளுக்கு இணங்க நியமக் கிரயத்தில் மதிப்பிடப்படுகின்றன.

**(இ) எல்கேஏஎஸ் 8 - கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளிலுள்ள மாற்றங்கள்மற்றும் வழுக்கள்**

இ.மி.ச. இனால் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வருகின்றமுழுமையாகத்தேய்விடப்பட்டுள்ளநடைமுறையல்லாத சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம்.

i. **ரூபா 3,918,235,311 கிரயமான முழுமையாகத் தேய்விடப்பட்ட 1,683 மோட்டார் வாகனங்கள்**

மோட்டார் வாகனங்களின் பயனுள்ள ஆயுட்காலம் குறித்து பிரிவுகளிலிருந்து தரவுகள் சேகரிக்கப்பட்டு பகுப்பாய்வு இடம்பெற்று வருகின்றது. திருத்தப்பட்ட பயனுள்ள ஆயுட்காலத்தை 2020 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் பதிவு செய்வதற்கு பரிந்துரைக்கப்படக் கூடியதாக இருக்கும்.

ii. **ரூபா 32,241,176,427 கிரயமான முழுமையாகத் தேய்விடப்பட்ட நான்கு மின் நிலையங்கள்**

பிறப்பாக்கப் பிரிவின் மின்வலு ஆலைகள் தனித்துவமானவையும் சிக்கலானவையுமாகும். மின்பிறப்பாக்கிகளின் பொருளாதார ஆயுட்காலம் மூல உற்பத்தியாளரின் பரிந்துரையின் அடிப்படையில் பெறப்பட்டுள்ளது. மின் உற்பத்தி நிலையங்களின் பொருளாதார ஆயுட்காலம் குறித்து மறுபரிசீலனை செய்ய ஒரு குழு நியமிக்கப்படும். இ.மி.ச. இன் சிறந்த பராமரிப்பின் காரணமாக,மின் உற்பத்தி நிலையங்கள் மற்றும் மின்பிறப்பாக்கிகள் என்பன மூல உற்பத்தியாளரின் (OEM) எதிர்பார்க்கப்படும் ஆயுட்காலத்தையும் தாண்டி இயங்குகின்றன.

**(ஈ) LKAS 16 - ஆதனம், பொறி மற்றும் உபகரணம்**

பரிமாற்றல் பிரிவிலுள்ள ரூபா 172,019,335,924 தொகைக்குரிய நிலையான சொத்துக்கள்பௌதீக ரீதியாக மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

பரிமாற்றல் பிரிவிலுள்ள நிலையான சொத்துக்களை பௌதீக ரீதியில் மெய்மையாய்வு செய்வதற்கு தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் (தொடர்ச்சி)

**கணக்கீட்டுக் குறைபாடுகள்**

**(அ) ரூபா 3,535,799,151 வரவு மீதி (இருப்பு பற்றாக்குறை) மற்றும் ரூபா 90,343,073 செலவு மீதி (இருப்பு மிகை) என்பன தீர்வு செய்யப்படாமல் ஒரு ஆண்டிற்கு மேலாக இருப்பு சீராக்கல் கணக்கில் காணப்படுகின்றன.**

சாத்தியமான இருப்புச் சீராக்கல் கணக்குகளை 2020 இல் அகற்றுவதற்கு குறித்த பிரிவுகள் நடவடிக்கை எடுத்துள்ளதுடன் ஏனைய பற்றாக்குறை மீதிகள் சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட பின்னர் அகற்றப்படும்.

**(ஆ) அமைச்சரவையின் 10/2434/423/034 ஆம் இலக்க தீர்மானத்தின் பிரகாரம் லக்விஜயா மின்வலு ஆலையினை நிர்மாணத்திற்காக பெறப்பட்ட ரூபா 159,184,187,965 கடன் தொகை மற்றும் அதன் மீதான வட்டியை பொதுத் திறைசேரிக்கு இ.மி.ச. மீளச் செலுத்த வேண்டும்.**

பிரதானமாக இ.மி.ச. இன் திரவத்தன்மை நிலையினைக் கருத்திற்கொண்டு 2018 ஆம் ஆண்டு வரையான மீளளித்தல்கள் பொதுத் திறைசேரியினால் உள்வாங்கப்பட்டது. இருப்பினும், பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அவர்களது வழிகாட்டுதலின்படி, 2019 ஆம் ஆண்டிற்காக திறைசேரியினால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 3,556,442,931.30 தொகையான வட்டிக் கொடுப்பனவு இ.மி.ச. இன் புத்தகங்களில் சீராக்கப்பட்டது. மேலும், பொது முயற்சிகள் திணைக்களத்தின் வழிகாட்டுதலுக்கு உட்பட்டு 2020 ஆம் ஆண்டு முதல் சீராக்கல்களை செய்வதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது.

**(இ) பொதுத் திறைசேரியின் PED/1/CEB/2/11 (i) ஆம் இலக்க கடிதத்தின் கோரிக்கைக்கு அமைய, திறைசேரியினால் உரிமைத்துவத்திற்கு மாற்றப்பட்டிருந்த தொகைக்காக கிடைத்திருந்த ரூபா 3,556,442,931 தொகை வட்டி செலவாக வருமானக் கூற்றில் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.**

எல்கேஏஎஸ் 23 (கடன் எடுத்தல் கிரயம்) இன் படி, சொத்துக்களை வணிகமயமாக்கிய பின்னர் ஏற்பட்டுள்ள ரூபா 3,556,442,931.30 ஐ மூலதனமாக்க முடியாது. அதன்படி, 2019 ஆம் ஆண்டுக்காக திறைசேரியினால் செலுத்தப்பட்ட வட்டி வருமானக் கூற்றுக்கு சாட்டப்பட்டது. எனவே கணக்கீட்டு நியமத்தின் படி, சபையின் நட்டம் அதிகரித்துக் காட்டப்படவில்லை.

**(ஈ) இ.மி.ச. இனால் பேணப்படுகின்ற ஊழியர் சேமலாப நிதியத்தின் சார்பில் ஏற்பட்ட ரூபா 41,816,475 தொகையான செலவினங்கள் பெறவேண்டியவையாக கருதப்படாமல் இ.மி.ச. இன் செலவினங்களாக கருதப்பட்டிருந்தது.**

2003.12.31 ஆந் திகதிய 1321/18 ஆம்இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட சேமலாப விதிகளின் 20(i) ஆம் விதியின் பிரகாரம்,சபையால் காலத்திற்குக் காலம் முடிவு செய்யப்படும் சந்தர்ப்பங்களை தவிர்த்து, முதலீடுகளை கொள்வனவு செய்வதற்கும் விற்பனை செய்வதற்கும் நேரடியாக தொடர்புபடுகின்ற செலவினங்கள் உட்பட ஊழியர் சேமலாப நிதியத்தின் நிர்வாக மற்றும் முகாமைத்துவச் செலவினம் நிதியத்தின் செலவினமாக சாட்டப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆகையால்,ஊழியர் சேமலாப நிதியத்தின் ரூபா 41,816,475 செலவினத்தை இ.மி.ச. இன் நிதிக் கூற்றுக்களில் காட்டுவது மேலே கூறப்பட்ட இ.மி.ச. சேமலாப நிதியத்தின் விதிகளுக்கு அமைவாகவே உள்ளது. ஆனபடியால், இ.மி.ச. இன் நிதிக் கூற்றுக்களில் அந்த செலவினத்தை பெற வேண்டியவைகளாக காட்டுவது அவசியமற்றது.

**(உ) 2013 ஆம் ஆண்டிற்கு முன்னர் அரசாங்க நிறுவனங்களின் மின் பிறப்பாக்கிகள், மின்தூக்கிகள் மற்றும் வளிப் பதனாக்கிகளின் வழங்கல், பராமரிப்பு மற்றும் திருத்தத்திற்காக சீஈபியால் மேற்கொள்ளப்பட்ட வேலைகள் அவற்றின் விலைச்சீட்டைப் பெறுமதிகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீடு செய்வதற்குப் பதிலாக கிரயத்தில் பெறுமதியிடப்பட்டுக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தமை.**

2013 க்கு முன்னர் கடன்பட்டோர் சாசு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டு வேலைக்கான உண்மையான செலவு வாடிக்கையாளரிடமிருந்து பெறத்தக்கவையாகக் காட்டப்பட்டது. 2013 க்கு முந்தைய நிதிக்கூற்றுக்களில் பிரதிபலித்த பெரும்பாலான பெறத்தக்கவைகளை அறவிட முடியாதுள்ளது. மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சின் பெறத்தக்கவைகள், மருத்துவமனைகளிலிருந்து பெறத்தக்கவை மற்றும் இ.மி.ச. இன் தலைவரிடமிருந்து கிடைத்த அறிவுறுத்தல்களின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட வேலைகளிற்காக பெறத்தக்கவை போன்றன அவ்வாறு அறவிட முடியாத நிலுவைகளாக உள்ளன.

மதிப்பிடப்பட்ட பெறுமதியின் அடிப்படையில் அறவிட முடியாத நிலுவைத் தொகைக்கு விலைப்பட்டியல் செய்வதும் அதற்கு வெற் வரி செலுத்துவதும் இ.மி.ச. இற்கு தேவையற்ற இழப்பை ஏற்படுத்துவதுடன் அது விவேகமான செயற்பாடுமல்ல. எனவே, உண்மையான கிரயமே அறவிடப்பட வேண்டிய தொகையாகக் காட்டப்படுகிறது.

இந்த பிரச்சினை பல முறை கணக்காய்விற்குத் தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும் அதே பிரச்சினை மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்படுகின்றது. அறவிட முடியாத பெறத்தக்கவைகளுக்கான முழு ஏற்பாட்டையும் இ.மி.ச. செய்துள்ளது. உண்மையான கிரயத்திற்கும் மதிப்பிடப்பட்ட பெறுமதிக்கும் இடையிலான தற்போதைய விலகல் (30 ஜுன் 2020 நிலவரப்படி) 2013 க்கு முன்னர் காணப்பட்ட ரூபா 53,052,302.10 ஆகும்.

குறிப்பு: - கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை ரூபா 66,978,761 இற்கு பதிலாக ரூபா 53,052,302.10 என திருத்திக்கொள்ள வேண்டும்.

**(ஊ) 2016 ஆம் ஆண்டில் பொதுத் திறைசேரிக்கு தீர்வையாகச் செலுத்திய ரூபா 5 பில்லியனில் ரூபா 500 மில்லியன் மீளாய்ண்டில் முகாமைத்துவக் கட்டணம் செலுத்துதல் என வகைப்படுத்தி வருமானக் கூற்றுக்கு மாற்றப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டுச் சீராக்கமாக ரூபா 1 பில்லியன் மேற்கொள்ளப்பட்டிருந்தது.**

2019.10.16 ஆந் திகதிய PDE/I/CEB/2/11/(iii) ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் கடிதத்தின் படி, 2019 ஆம் ஆண்டில் திறைசேரிக்குச் செலுத்திய "முகாமைத்துவக் கட்டணம்" என இக்கொடுப்பனவு கருதப்பட்டுள்ளதுடன் 2017 ஆம் ஆண்டு தொடங்கி 10 ஆண்டுகளிற்கு காலத்தேய்மானம் செய்யப்பட்டுள்ளது.

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் (தொடர்ச்சி)

இ.மி.ச. இன் வழக்கமான செயல்பாட்டிற்கான நிதியினை ஏற்பாடுசெய்து கொள்வதற்கு திறைசேரி இ.மி.ச. இற்கு வசதிகளை வழங்குகின்றது.

**(எ) துணைக் கடன் உடன்படிக்கைகளிலுள்ள நிபந்தனைகளின் படி பொது திறைசேரிக்குச் செலுத்த வேண்டிய ரூபா 2,495,574,443 வட்டித் தொகையினை சீஈபீ செலுத்தவுமில்லை அல்லது அதற்காக ஏற்பாடு செய்யவுமில்லை.**

துணைக் கடன் உடன்படிக்கைகளில் வட்டிக்கு எந்தவொரு ஏற்பாட்டையும் செய்யுமாறு இ.மி.ச. இனை பொது முயற்சிகள் திணைக்களம் அறிவுறுத்தியிருக்கவோ அல்லது நெறிப்படுத்தியோ இருக்கவில்லை. எனவே இது தொடர்பாக இ.மி.ச. எந்தவொரு ஏற்பாட்டையும் செய்யவில்லை.

**(ஏ) திறைசேரியிடமிருந்தான 10 சதவீத பங்கிலாப வரி என பெயரிடப்பட்ட ரூபா 4,200,000 தொகை தலைமையக புத்தகங்களில் அடையாளம் காணப்படாத பிற கடன்பட்டோரில் உள்ளது. இந்த தொகைக்காக கணக்குகளில் எந்த ஏற்பாடும் செய்யப்படவில்லை.**

2005/2006 ஆம் ஆண்டிற்காக ரூபா 42,000,000 மொத்த பங்கிலாபத்தை செலுத்துகையில் லங்கா டிரான்ஸ்போமர் லிமிடட் இனால் கழிக்கப்பட்டிருந்த 10 சதவீத பங்கிலாப வரியினை இது பிரதிநிதித்துவம் செய்கின்றது. இது 2020 இல் திருத்தப்பட்டது.

**(ஐ) இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 31,119,302 தாமத வட்டி கணக்கு புத்தகங்களிலிருந்து தவறவிடப்பட்டுள்ளது.**

2020 திசெம்பர் 31 இல் முடிவடையும் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் தாமத வட்டியினை பதிவுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**(ஒ) விநியோக பிரிவில் 1 இலுள்ள சொத்துகளுக்கு மாற்றப்படாமல் ரூபா 734,574,801 மதிப்புள்ள பூரணப்படுத்திய வேலைகள் நடைபெற்றுவரும் வேலைகள் கணக்கில் வைக்கப்பட்டுள்ளன.**

வட மத்திய மாகாணத்திலுள்ள இருப்பு கணக்காய்வு ஐயவினாவில் காட்டப்பட்டுள்ள தொகையை விட ரூபா 714 மில்லியன் அதிகமாக உள்ளதால் மேற்கண்ட நிலுவைத் தொகை ரூபா 1,448 மில்லியன் என சரிசெய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும், மேற்கூறிய நீண்டகால முடிவுறா வேலைகளின் நிலுவைகளில் 25% ஆனவை ஏற்கனவே 2020 நிதியாண்டில் ஆதனம், பொறி மற்றும் உபகரணத்திற்கு மாற்றப்பட்டுள்ளதுடன் கிடைக்கக்கூடிய பூரணப்படுத்தல் அறிக்கைகளின் அடிப்படையில் 2020 ஆம் ஆண்டில் முடிவுறா வேலைகளின் நிலுவைகளை ஆதனம், பொறி மற்றும் உபகரணத்திற்கு மாற்றுவதற்கு வட மாகாணத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. முடிவுறாவேலை மீதிகள் தொடர்பில் அனைத்து மாகாணங்களாலும் பொதுவான கால இடைவெளியில் மீளாய்வும் கண்காணிப்பும் மேற்கொள்ளப்படுவதுடன் வேலைகளை பூரணப்படுத்துகையில் அவை மாற்றப்படும்.

**(ஓ) மொரகஹகந்த மின்வலு நிலையத்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட மின்சாரத்திற்காகச் செலுத்த வேண்டிய ரூபா 128,264,040 தொகை கணக்கு புத்தகங்களிலிருந்து விடுபட்டுள்ளது.**

2020.07.31 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான கணக்குப் புத்தகங்களில் மொரகஹகந்த மின்வலு நிலையத்துடன் தொடர்புடைய அனைத்து நிலுவையான பட்டியல்களையும் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அனைத்துப் பட்டியல்களையும் உரியவாறு பதிவுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**(ஔ) 2012 இல் நிறைவடைந்த மேல் கொத்மலை நீர் மின்வலு செயற்திட்டம் தொடர்பான ரூபா 944,030,864 முடிவடையாதிருந்த வேலைகள் நிலையான சொத்துக்களுக்கு மாற்றப்பட்டிருக்கவில்லை.**

இந்த செயற்திட்டம் 2012 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு ஆரம்ப சொத்துக்களின் பரிமாற்றம் 2014 ஆம் ஆண்டில் அந்தந்த பிரிவுகளுக்கு செயற்படுத்தப்பட்டது. இருப்பினும், 2019.12.31 நிலவரப்படி ஆரம்ப சொத்துப் பரிமாற்றத்திற்குப் பின்னர் ரூபா 944,030,864 செலவினம் முடிவுறா வேலைக் கணக்கில் திரண்டுள்ளன. இந்த தொகை பிரதானமாக பணியாளர்களின் செலவுகள், நடுவருக்கான சட்ட கட்டணம் மற்றும் நிலம் கையகப்படுத்தும் செலவு ஆகியவற்றைக் கொண்டுள்ளது. நடப்பு ஆண்டிற்குள் மீதமுள்ள செலவை அந்தந்த பிரிவுகளுக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

**(ஃ) 2014 இல் நிறைவடைந்த புத்தளம் நிலக்கரி மின்வலுச் செயற்திட்டம் தொடர்பான ரூபா 603,573,159 முடிவடையாதிருந்த வேலைகள் நிலையான சொத்துக்களுக்கு மாற்றப்பட்டிருக்கவில்லை.**

இந்த செயற்திட்டம் 2014 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு ஆரம்ப சொத்துக்களின் பரிமாற்றம் 2015 ஆம் ஆண்டில் அந்தந்த பிரிவுகளுக்கு செயற்படுத்தப்பட்டது. இருப்பினும், 2019.12.31 நிலவரப்படி ஆரம்ப சொத்துப் பரிமாற்றத்திற்குப் பின்னர் ரூபா 603,573,159 செலவினம் முடிவுறா வேலைக் கணக்கில் திரண்டுள்ளன. நடப்பு ஆண்டிற்குள் மீதமுள்ள செலவை அந்தந்த பிரிவுகளுக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

**(க) ரூபா 367,390,040 தொகையான செலவு மீதியொன்று பிரிவுகளிற்கிடையிலான மீதிகளிற்கு எதிரீடு செய்யப்படாது 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிரிவுகளிற்கிடையிலான நடைமுறைக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது.**

மொத்தத் தொகையிலிருந்து ரூபா 352 மில்லியன்2020 ஆம் நிதியாண்டில் திருத்தப்பட்டுள்ளது.

**(கா) மீளாய்வாண்டில் அனுப்பிவைக்கப்பட்ட ரூபா 999.03 மில்லியன் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. எனவே பொறுப்புக்களும் நடைபெற்றுவரும் வேலைகளும் ஒத்த தொகையால் குறைத்துக் காட்டப்பட்டுள்ளன.**

மேலே குறிப்பிடப்பட்டுள்ள வேறுபாடுகள் 3146 மற்றும் 3147 ஆம் இலக்க கடன்களுடன் தொடர்புடையதாகும். கடன் இலக்கம் 3146 ஆனது பசுமை மின்வலு அபிவிருத்தி எரிசக்தி வினைத்திறன் முன்னேற்றச் செயற்திட்டம் - கூறு 1

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் (தொடர்ச்சி)

இன் பல பகுதிகளால் பயன்படுத்தப்படுகின்றது. மேலேயுள்ள பதிவுசெய்யப்படாத கொடுப்பனவுகளின் பெரும் பகுதி மொரகொல்ல நீர்மின்வலு செயற்திட்டத்துடன் தொடர்புடையதாகும். இ.மி.ச. இன் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் இந்தக் கொடுப்பனவுகளுடன் இணைந்ததாக ஈஆர்டி அறிக்கை நாளதுவரையாக்கப்பட்டிருக்காமையால் நிதிக்கூற்றுக்கள் மேற்படி தொகையினை உள்ளடக்கி நாளதுவரையாக்கப்படவில்லை. ஆகையால், இது 2020 இன் பேரேட்டில் நாளதுவரையாக்கப்படுகின்றது.

**1.2.2.3 இணக்கம் செய்யப்படாத வேறுபாடுகள்**

**(அ) 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சீஈபீயின் நிதிக்கூற்றுக்களில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்த வேண்டியதாக காட்டப்பட்ட மீதிக்கும் அத் திகதியிலுள்ளவாறு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களில் பெறவேண்டியதாக காட்டப்பட்ட நேரொத்த மீதிக்கும் இடையில் ரூபா 764,717,080வேறுபாடு அவதானிக்கப்பட்டது.**

இதனை கணக்கிணக்கம் செய்வதற்கும் 2020 இன் நிதிக்கூற்றுக்களில் தாமத வட்டிக் கட்டணத்தை பதிவுசெய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**(ஆ) விலைப்பட்டியலிடல் முறைமையிலும் அதே போல் நிதிக்கூற்றுக்களிலும் சில மீதிகள் தவறவிடப்பட்டதன் காரணமாக விநியோகப் பிரிவு 1, 2, 3 மற்றும் 4 இன் விலைப்பட்டியலிடல் முறைமையில் காட்டப்பட்ட 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த வியாபாரக் கடன்பட்டோர் மீதிக்கும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட நேரொத்த தொகைக்கும் இடையில் ரூபா 423,764,624 கூட்டுமொத்தமான இணக்கம் செய்யப்படாத வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.**

சபையின் பட்டியலிடல் முறைமையில் பட்டியலிடல் கொடுக்கல் வாங்கலை பதிவுசெய்கின்ற செயன்முறையும் பொதுப் பேரேட்டில் நிதிக் கொடுக்கல் வாங்கல்களை பதிவுசெய்தலும் எந்தவொரு நேரத்திலும் இணங்குவதில்லை. அவ்வாறான வேறுபாடுகளிற்கான காரணத்தை நிச்சயிப்பதற்காக விநியோகப் பிரிவு கணக்கிணக்கமொன்றை மேற்கொள்கின்றது.

உயர் வழங்கல் கடன்பட்டோர் பேரேட்டு மீதி செயற்பாட்டுக் கடன்பட்டோரையும் இறுதியாக்கப்பட்ட கடன்பட்டோரையும் உள்ளடக்குகின்றது. இருப்பினும், ஐரீ கிளையிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட பட்டியல் அறிக்கை செயற்பாட்டுக் கடன்பட்டோர் மீதியினை மாத்திரம் உள்ளடக்குகின்றது. ஆகையால், ஐரீ கிளையிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட பட்டியல் அறிக்கை மீதிக்கும் பேரேட்டு மீதிக்கும் இடையிலான வேறுபாட்டிற்கு பிரதான காரணம் இறுதியாக்கப்பட்ட கடன்பட்டோர் மீதியாகும். இருப்பினும், கடன்பட்டோர் கணக்கிணக்கக் கூற்று நிதிக்கூற்றில் தரப்பட்டுள்ளது.

**(இ) சேகரிப்பு கட்டுப்பாட்டு பேரேட்டுக் கணக்கில் ரூபா 4,073,824,173 மற்றும் ரூபா 129,863,150 வரவு மற்றும் செலவு மீதிகள் தொடர்ந்து காணப்படுவதுடன் அத்தகைய நிலுவைகளுக்கான காரணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.**

சாதாரண விநியோக பட்டியலிடல் சுழற்சி இறுதித் திகதியானது நிதிக் கணக்குகளின் இறுதித் திகதியிலிருந்து வேறுபட்டுள்ளதால் இந்த வேறுபாடுகள் எழுகின்றன. எனவே, சாதாரண விநியோக பட்டியலிடல் சுழற்சி இறுதித் திகதியினை நிதி ஆண்டு இறுதித் திகதியை ஒத்ததாக மாற்றுவதற்கு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**(ஈ) தொங்கல் மீதியுடன் தொடர்புடைய மொத்தம் ரூபா 79,512,030 பெறுமதியான 66 சதவீதத்திற்கு வயது பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்படாததுடன் ரூபா 70,306,494 தொகை ஒரு வருடத்திற்கு மேல் தீர்க்கப்படாமல் இருந்தது.**

அங்கீகரிக்கப்பட்ட அடையாளம் தெரியாத வாடிக்கையாளர் கொடுப்பனவுகளை அந்தந்த நுகர்வோர் கணக்குகளுக்கு செலவு வைப்பதற்கு தொடர்ச்சியான முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. நுகர்வோரிடமிருந்து முறைப்பாடுகள் கிடைக்கும் வரை மேலே தோன்றிய பெரும்பாலான நிலுவைகள் இ.மி.ச. ஆல் அங்கீகரிக்கப்படவில்லை. இந்த மீதியானது கடுமையான கண்காணிப்பு மற்றும் மீளாய்வின் கீழ் உள்ளது.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தினதும் ஆளுகைத் தரப்பினரதும் பொறுப்புக்கள்**

தகவல்பந்தி

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு மீதான கணக்காய்வாளரின் பொறுப்பு**

தகவல்பந்தி

**2. சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை**

தகவல்பந்தி

**பொறியியலாளர் விஜித ஹேரத்**
தலைவர்
இலங்கை மின்சார சபை

**பொறியியலாளர் டி.டி.கே. கருணாரத்ன**
பொது முகாமையாளர்
இலங்கை மின்சார சபை

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. } பிஓஏ/சீ/சீஈபீ/1/19/14    ඔබේ අංකය / உமது இல. / Your No. }    දිනය / திகதி / Date } 2020 ஒக்தோபர் 08

தலைவர்

இலங்கை மின்சார சபை

**இலங்கை மின்சார சபையின் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள்மீது 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை மின்சார சபையின (சீஈபீ) 2019 திசெம்பர் 31 இல்உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினது பொழிப்புக்களை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும். 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் ஆகியவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம ் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரமான எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும்.

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (எஸ்எல்ஏஎஸ்/எஸ்எல்எவ்ஆர்எஸ்) மற்றும் கணக்கீட்டுக் கொள்கைகளுடன் இணங்குதல்

**(அ) எல்கேஏஎஸ் 1-நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

(i) தபால் அலுவலக (பிஓஎஸ்) கருமபீடக் கட்டணம் மற்றும் தபால் அலுவலக தரகு தொடர்பான கடன்கொடுத்தோருக்கு எதிராக ரூபா 30,609,836 சில்லறைக் கடன்பட்டோரை சபை எதிரீடு செய்திருந்தது. இதன் விளைவாக, சில்லறைக் கடன்பட்டோரும் கடன்கொடுத்தோரும் அதே தொகையால் குறைத்துக் கூறப்பட்டிருந்தன.

(ii) பசுமை மின்வலு அபிவிருத்தி மற்றும் எரிசக்தி திறன் மேம்பாட்டு செயற்திட்டத்திற்கு வழங்கிய ரூபா 1,262,503,405 கடன் தொகை, குறிப்பு இல. 24.2.1 இல் காற்றாலை மின்வலு செயற்திட்டத்திற்கு வழங்கிய கைதவிர்ப்பாக தவறுதலாக காட்டப்பட்டுள்ளது.

(iii) ரூபா 83 பில்லியன் பெறப்பட்ட கடன்களுக்காக செலுத்திய ரூபா 25 மில்லியன் கடன் செயன்முறைப்படுத்தல் கட்டணத்தை, நிதிச் செலவாக காண்பிப்பதற்குப் பதிலாக நிர்வாக செலவினங்களின் கீழ் ஏனைய செலவாக காண்பிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) எல்கேஏஎஸ் 2 - பொருளிருப்புக்கள் மற்றும் எல்கேஏஎஸ் 16 - ஆதனம், பொறி மற்றும் உபகரணம்**

இலங்கை மின்சார சபையானது அதனுடைய மூலதன மற்றும் பராமரிப்பு வேலைகளிற்காக ஏற்பட்ட ஊழியர்இ மூலப்பொருள் மற்றும் மேந்தலைக் கிரயங்களை பெறுமதியிடுவதற்காக மேற்படி நியமங்களிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் உண்மைக் கிரயங்களை பிரயோகிப்பதற்குப் பதிலாக நியமக் கிரய முறையை பிரயோகிக்கின்றது. இதன் விளைவாக, அவற்றின் மீது ஏற்பட்ட ரூபா 6,409,494,526 கூட்டுத்தொகையான சாதகமான மூலப்பொருள் விலை முரணும் ஊழியர் மற்றும் மேந்தலை விகித முரண்களும் மற்றும் ரூபா 2,428,128,229 தொகையான சாதகமற்ற களஞ்சிய விலை முரணும் நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்டிருந்தன.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව   இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.   No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34   +94 11 2 88 72 23   ag@auditorgeneral.gov.lk   www.naosl.gov.lk

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை (தொடர்சி)

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

இதன் விளைவாக, இ.மி.ச.யின் செயற்பாட்டு விளைவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் உரிமை மூலதனம் என்பன அந்த மூலதன வேலைகள் தொடர்பில் உயர் நிதிசார் ஈடுபடுத்தல் காரணமாக குறிப்பிடத்தக்களவு பாதிக்கப்பட்டிருந்தன. எனினும் அம்மூலதன வேலைகள் தொடர்பில் தேவையான தகவல்கள் காணப்படாததன் காரணமாக அது தொடர்பான நிதிக்கூற்றுக்களிற்கான தாக்கத்தை கணக்காய்வின் போது மதிப்பிட முடியாதிருந்தது.

(இ) எல்கேஏஎஸ் 8 - கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளிலுள்ள மாற்றங்கள' மற்றும் தவறுகள்

இ.மி.சபையால் தொடர்ச்சியாக பயன்படுத்தப்படுகின்ற முழுமையாக பெறுமானத் தேய்விடப்பட்ட நடைமுறையல்லாச் சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் கணக்கீட்டுக் கொள்கைகளில் குறிப்பிடப்பட்டவாறு மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. உதாரணச் சந்தர்ப்பமொன்றாக,ரூபா 32,241,176,427 மற்றும் ரூபா 3,918,235,311 கிரயமான முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட முறையே நான்கு மின்வலு நிலையங்கள் மற்றும் 1,683 மோட்டார் வாகனங்கள் என்பன அவற்றின் உள்ளபடியான ஆயுட்காலம் மீள்மதிப்பீடு செய்யப்படாமல் தற்போதும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

(ஈ) LKAS 16 - ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

பரிமாற்றல் பிரிவிலுள்ள ரூபா 172,019,335,924 தொகையான நிலையான சொத்துக்கள் மீளாய்வாண்டில் பௌதீக ரீதியாக மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) எல்கேஏஎஸ் 27-ஏற்பாடுகள், நிகழத்தக்க பொறுப்புக்கள் மற்றும் நிகழத்தக்க சொத்துக்கள்

சபையின் ஊழியர் சேமலாப நிதியத்தால் (ஈபிஎவ்) நிதிக் கருவிகளில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 2,312,756,993 இன் அறவீட்டுத்தன்மை அந் நிதிக் கருவிகள் காணப்படாததன் காரணமாக ஐயத்திற்கிடமாக உள்ளது. ஊழியர் சேமலாப நிதியத்தின் பாதுகாவலராக இ.மி.ச. உள்ளதால் நிகழத்தக்கவற்றிற்கான (ஏதாவது இருந்தால்) இறுதிப் பொறுப்பு சபைக்குரியதாக காணப்படுகின்றது. எனினும் இவ் நிகழத்தக்கவை தொடர்பாக சபையின் நிதிக்கூற்றுக்களில் எந்தவொரு ஏற்பாடோ அல்லது வெளிப்படுத்தலோ மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) ரூபா 3,535,799,151 வரவு மீதி (இருப்பு பற்றாக்குறை) மற்றும் ரூபா 90,343,073 செலவு மீதி (இருப்பு மிகை) என்பன தீர்வு செய்யப்படாமல் ஒரு ஆண்டிற்கு மேலாக இருப்பு சீராக்கல் கணக்கில் காணப்பட்டது.

(ஆ) அமைச்சரவையின் 10/2434/423/034 ஆம் இலக்க தீர்மானத்தின் பிரகாரம் லக்விஜயா மின்பொறி ஆலையினை நிர்மாணத்திற்காக பெறப்பட்ட ரூபா 159,184,187,965 கடன் தொகை மற்றும் அதன் மீதான வட்டியை பொதுத் திறைசேரிக்கு இ.மி.ச. மீளச் செலுத்த வேண்டும். எனினும் பொதுத் திறைசேரியின் வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் அக் கடனிற்கான வட்டியாக 2018 திசெம்பர் 31 வரை ரூபா 25,247,801,891 தொகையை கடனளிக்கும் வங்கிக்கு செலுத்தியிருந்த போதிலும் இ.மி.ச. அதன் கணக்குகளில் மேற்படி கொடுப்பனவை செலுத்தியோ அல்லது அதற்காக ஏற்பாடுகளை மேற்கொண்டோ இருக்கவில்லை.

அதன் விளைவாக, 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிறுத்தி வைக்கப்பட்ட உழைப்புக்கள் ரூபா 25,247,801,891 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

(இ) பொதுத் திறைசேரியின் PED/1/CEB/2/11 (i)ஆம் இலக்க கடிதத்தின் கோரிக்கைக்கு அமைய, 2019 ஒக்தோபர் 17 ஆந் திகதி உரிமைத்துவத்திற்கு பதிவு செய்யப்பட்டிருந்த ரூபா 3,556,442,931 தொகை மீளாய்வாண்டில் வட்டி செலவாக வருமானக் கூற்றில் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. மேலும், இந்த தொகை இ.மி.ச. ஆல் செலவிடப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவாக,சபையின் நட்டம் அந்தத் தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) சீஈபீயால் பேணப்படுகின்ற ஊழியர் சேமலாப நிதியத்தின் சார்பில் இ.மி.ச. இனால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 41,816,475 தொகையான செலவினங்கள் மீள அறவிடப்படாமல் இ.மி.சபையின் செலவினங்களாக கருதப்பட்டிருந்ததால் மீளாய்வாண்டிற்கான நட்டம் அதே தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(உ) 2013 ஆம் ஆண்டிற்கு முன்னர் அரசாங்க நிறுவனங்களின் மின் பிறப்பாக்கிகள், மின்தூக்கிகள் மற்றும் இ.மி.ச. யின் குளிரூட்டிகள் வழங்கல், பராமரிப்பு மற்றும் திருத்தத்திற்காக இ.மி.சபையால் மேற்கொள்ளப்பட்ட வேலைகள் அவற்றின் விலைச்சிட்டுப் பெறுமதிகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீடு செய்வதற்குப் பதிலாக கிரயத்தில் பெறுமதியிடப்பட்டு அதற்கிணங்க அவை கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. இதன் விளைவாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பெறவேண்டியவைகள் மற்றும் நிறுத்தி வைக்கப்பட்ட உழைப்புக்கள் என்பன ரூபா 66,987,761 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

(ஊ) 2016 ஆம் ஆண்டில் பொதுத் திறைசேரிக்கு தீர்வையாகச் செலுத்திய ரூபா 5 பில்லியனில் ரூபா 500 மில்லியன் மீளாய்ண்டில் முகாமைத்துவக் கட்டணம் செலுத்துதல் என வகைப்படுத்தி வருமானக் கூற்றுக்கு மாற்றப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டுச் சீராக்கமாக ரூபா 1 பில்லியன் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மீதமுள்ள ரூபா 3.5 பில்லியன் தொகையினை உரிமைத்துவத்திற்கு மாற்றுவதற்குப் பதிலாக நிதிக் கூற்றுக்களிலுள்ள ஏனைய கடன்பட்டோராகக் காட்டப்பட்டுள்ளது. இருப்பினும், பொது பொதுத் திறைசேரியிடமிருந்து இ.மி.ச. ஆல் எந்த முகாமைத்துவச் சேவைகளும் பெறப்பட்டிருக்கவில்லை. எனவே இந்த ஆண்டிற்கான நட்டம்ரூபா 500 மில்லியனால் அதிகமாக காட்டப்பட்டிருந்தது.

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை (தொடர்சி)

NAOSL
ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

(எ) துணைக் கடன் உடன்படிக்கைகளிலுள்ள நிபந்தனைகளின் படி பொது திறைசேரிக்குச் செலுத்த வேண்டிய ரூபா 2,495,574,443 வட்டித் தொகையினை இ.மி.ச. செலுத்தவுமில்லை அல்லது அதற்காக ஏற்பாடு செய்யவுமில்லை.

(ஏ) திறைசேரியிடமிருந்தான 10 சதவீத பங்கிலாப வரி என பெயரிடப்பட்ட ரூபா 4,200,000 தொகை தலைமையக புத்தகங்களில் அடையாளம் காணப்படாத பிற கடன்பட்டோரில் உள்ளது. இந்த தொகைக்காக கணக்குகளில் எந்த ஏற்பாடும் செய்யப்படவில்லை.

(ஐ) இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 31,119,302 தாமத வட்டி கணக்கு புத்தகங்களிலிருந்து தவறவிடப்பட்டுள்ளது. எனவே மீளாய்ண்டிற்கான நட்டம் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது.

(ஒ) விநியோக பிரிவில் 1 இலுள்ள சொத்துகளுக்கு மாற்றப்படாமல் ரூபா 734,574,801 மதிப்புள்ள பூரணப்படுத்திய வேலைகள் நடைபெற்றுவரும் வேலைகள் கணக்கில் வைக்கப்பட்டுள்ளன. அந்த சொத்துக்கள் தொடர்பான தேய்மானம் வருமான கூற்றில் சாட்டப்பட்டிருக்கவில்லை.

(ஓ) மொரகஹகந்த மின்வலு நிலையத்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட மின்சாரத்திற்காகச் செலுத்த வேண்டிய ரூபா 128,264,040 தொகை மீளாய்வாண்டில் கணக்கு புத்தகங்களிலிருந்து விடுபட்டுள்ளது. எனவே ஆண்டுக்கான நட்டம் ஒத்த தொகையால் குறைத்தக் காட்டப்பட்டுள்ளது.

(ஔ) 2012 இல் நிறைவடைந்த மேல் கொத்மலை நீர் மின்வலு செயற்திட்டம் தொடர்பான ரூபா 944,030,864 நடைபெறும் வேலைகள் நிலையான சொத்துக்களுக்கு மாற்றப்பட்டிருக்கவில்லை. ஆகவே மீளாய்வாண்டுக்கான தேய்மானம் மற்றும் நிறுத்திவைத்த வருவாய் என்பன முறையே ரூபா 26,972,310 மற்றும் ரூபா 161,833,862 ஆல் குறைத்துக் காட்டப்பட்டுள்ளன.

(ஃ) 2014 இல் நிறைவடைந்த புத்தளம் நிலக்கரி மின்வலுச் செயற்திட்டம் தொடர்பான ரூபா 603,573,159 நடைபெறும் வேலைகள் நிலையான சொத்துக்களுக்கு மாற்றப்பட்டிருக்கவில்லை. ஆகவே மீளாய்வாண்டுக்கான தேய்மானம் மற்றும் நிறுத்திவைத்த வருவாய் என்பன முறையே ரூபா 20,119,105 மற்றும் ரூபா 100,595,526 ஆல் குறைத்துக் காட்டப்பட்டுள்ளன.

(க) ரூபா 367,390,040 தொகையான செலவு மீதியொன்று உள்ளக பிரிவுகளிற்கிடையிலான மீதிகளிற்கு எதிரீடு செய்யப்படாது 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்ளக பிரிவுகளிற்கிடையிலான நடைமுறைக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது.

### 1.2.3 இணக்கம் செய்யப்படாத வேறுபாடுகள்

(அ) 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இ.மி.ச.யின் நிதிக்கூற்றுக்களில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்த வேண்டியதாக காட்டப்பட்ட மீதிக்கும் அத் திகதியிலுள்ளவாறு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களில் பெறவேண்டியதாக காட்டப்பட்ட நேரொத்த மீதிக்கும் இடையில் ரூபா 764,717,080 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

இது தொடர்பில் சீஈபீயின் தலைவர் பின்வருமாறு கூறியிருந்தார்.

*“2013 செப்தெம்பர் 30 இல் திறைசேரிச் செயலாளரால் நடாத்தப்பட்ட கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம், 2013 ஏப்ரல் 20 இலிருந்து அமுலுக்கு வரும் வகையில் தாமதமான பற்றுச்சீட்டுப் பெறுமதியின் (கடன் காலத்திற்கு அப்பால்) மீதான வட்டியைச் செலுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும்இரூபா 753,610,829 தாமத வட்டிக் கொடுப்பனவு இ.மி.ச.யால் 2013 ஏப்ரல் 20 இற்கு முன்னரான எரிபொருள் கொள்வனவுடன் தொடர்புபட்டிருந்தது. ஆகையால், இதற்கு இ.மி.ச. பொறுப்பில்லாததால் இந்த வேறுபாடு இணக்கம் செய்யப்பட வேண்டியதில்லை.”*

எனினும், இது கணக்காய்வு அறிக்கைகளில் 2013 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டிருந்த போதிலும் 2019 திசெம்பர் 31 வரையிலும் இத்தகராறு தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) விலைப்பட்டியலிடல் முறைமையிலும் அதே போல் நிதிக்கூற்றுக்களிலும் சில மீதிகள் தவறவிடப்பட்டதன் காரணமாக விநியோகப் பிரிவு 01, 02, 03 மற்றும் 04 இன் விலைப்பட்டியலிடல் முறைமையில் காட்டப்பட்ட 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த வியாபாரக் கடன்பட்டோர் மீதிகளிற்கும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட நேரொத்த தொகைக்கும் இடையில் ரூபா 31,813,455 கூட்டுமொத்தமான இணக்கம் செய்யப்படாத வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. மேலும், ரூபா 423,764,624 தொகை 2012 ஆம் ஆண்டு முதல் இனங்காணப்படாது வைத்திருக்கப்பட்டுள்ளது.

(இ) 2019 திசம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறு சேகரிப்பு கட்டுப்பாட்டு பேரேட்டுக் கணக்கிலுள்ள ரூபா 4,073,824,173 மற்றும் ரூபா 129,863,150 வரவு மற்றும் செலவு மீதிகளிற்கான கணக்கிணக்கம், 2005 யூலை 26 ஆந் திகதிய AFM (DD1) கடிதத்தினால் வழங்கிய அறிவுறுத்தலின் செய்யப்பட்டிராததுடன் அத்தகைய நிலுவைகளுக்கான காரணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. எனவே சேகரிப்புக் கட்டுப்பாட்டு கணக்கிலுள்ள மீதிகளின் சரியான தன்மையினை உறுதிப்படுத்த முடிந்திருக்கவில்லை.

(ஈ) தொங்கல் மீதியுடன் தொடர்புடைய மொத்தம் ரூபா 79,512,030 பெறுமதியான 66 சதவீதத்திற்கு காலப் பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்படாததுடன் ரூபா 70,306,494 தொகை ஒரு வருடத்திற்கு மேல் தீர்க்கப்படாமல் இருந்தது

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயுஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை (தொடர்சி)

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான முகாமைத்துவத்தினதும் ஆளுகைத் தரப்பினரதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையினைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை மீதான பொறுப்பை ஆளுகைத் தரப்பு கொண்டுள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பிலான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவாஎன்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின்உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு சபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பிலும் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் காண்புகள், உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள பிரதான பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் ஆளுகைத் தரப்பினர் அறிவுறுத்தப்பட்டனர்.

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை (தொடர்சி)

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

## 2. ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகள் தொடர்பில் விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

- முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12(அ) பிரிவிலுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம், கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு ஆணைக்குழு முறையான நிதி அறிக்கைகளை பேணியிருந்தது.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவிலுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடக்கூடியனவாகும்.

- இந்த அறிக்கையின் 1.2.1 (ஆ), (இ), (ஈ), (உ),1.2.2 (அ), (ஆ), (ஈ), (உ), (ஊ), (எ),1.2.3 (அ), (ஆ) ஆம் பந்திகளிலுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் உள்ளடக்குகின்றன.

  பின்பற்றப்பட்ட நடைமுறைகள், பெறப்பட்ட சான்றுகள் மற்றும் பொருண்மையான விடயங்களின் வரையறைகளிற்கு உட்பட்டு, பின்வரும் கூற்றுக்களை தெரிவிக்கக் கூடிய அளவிற்கு வேறு எதுவும் எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஈ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம், சபையினது ஆளுகைச் சபையிலுள்ள உறுப்பினர்களில் எவரேனுமொருவருக்கு சபையின் தொடர்புடைய ஏதேனும் ஒப்பந்தம் ஒன்றுடன் நேரடியான அல்லது மறைமுகமான விதத்தில் சாதாரண வணிக நிலைமையிலிருந்து விலகியதான தொடர்பு காணப்பட்டது என்றும்,

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12(எ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பின்வருவனவற்றைத் தவிர்த்து, சபையின் அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் கடமைகளிற்கு இணங்காத விதத்தில் செயற்பட்டிருந்தது என்றும்,

(அ) வழக்கு இல. CA/WRIT/193/2015 இன் கீழ் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்புக்கு அமைய சட்டவிரோதமான சம்பளக் கொடுப்பனவை 2014 நவம்பர் 27 ஆந் திகதிய 2014/GM/46/Pers ஆம் இலக்க சுற்றறிக்கையின் படி சபை தொடர்ந்து மேற்கொண்டு வந்திருந்தது.

(ஆ) 2007 நவம்பர் 14 இல் அமைச்சரவையால் எடுக்கப்பட்ட தீர்மானம் மற்றும் 2009 மே 26 இன் 39 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகள் என்பவற்றிற்கு முரணாக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் மீது இ.மி.சபையின் பதவியணியினரிற்கு காலத்திற்குக் காலம் பல்வேறு பதவியணியினர் படிகள் செலுத்தப்பட்டிருந்தன. 2019 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 1,712 மில்லியன் மற்றும் ரூபா 1,873 மில்லியன் கூட்டுமொத்தமான அத்தகைய படிகள் செலுத்தப்பட்டிருந்தமை கணக்காய்வு தெரிவுச் செவ்வைகளின் போது வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

(இ) உழைக்கும் போதே செலுத்தும் (பிஏவைஈ) வரிப்பொறுப்பை ஊழியர்களுக்கு மாற்றுவதற்காக 2015 மே 20 இல் கூட்டு உடன்படிக்கையை கருத்தில் கொள்ளும் போதும் 2007 திசெம்பர் 13 இல் சம்பள மீளாய்வின் போதும் அமைச்சரவை தீர்மானங்களை எடுத்திருந்தது. எனினும் அமைச்சரவையால் எடுக்கப்பட்ட மேற்படி தீர்மானங்களுக்கும் 3∴2016 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கைக்கும் முரணாக 2010 தொடக்கம் 2019 வரையான காலப்பகுதியின் போது உரிய ஊழியர்களின் சம்பளங்களிலிருந்து ரூபா 4,919,156,644 உழைக்கும் போதே செலுத்தும் வரியை கழிக்காமல் சீஈபீ அதன் சொந்த நிதியிலிருந்து அத்தொகையை செலுத்தியிருந்தது. மீளாய்வாண்டின் போது அவ்வாறு செலுத்தப்பட்ட தொகை ரூபா 709,110,273 ஆகும்.

(ஈ) 2001 மே 20 ஆம் திகதிய 1706/18 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தால் குறித்துரைக்கப்பட்ட காசற்ற நலன்களின் பெறுமதி ஒவ்வொரு ஊழியரினதும் உழைக்கும் போதே செலுத்தும் வரிக் கணிப்பீட்டின் போது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். எனினும் இ.மி.சபையானது தனிப் பாவனைக்கான விடுதிகள், குடியிருப்புக்கள் மற்றும் மோட்டார் வாகனங்கள் போன்ற காசற்ற நலன்களை இந் நோக்கத்திற்காக கணக்கிற்கு எடுத்திருக்கவில்லை.

(உ) 1998 மார்ச் 08 ஆம் திகதிய 130 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் 10 சதவீதம் முதல் 14 சதவீதம் வரையான வட்டி வீதத்தில் வாகனக் கடன்களை வழங்குவதற்குப் பதிலாக சீஈபீ 4.2 சதவீத வட்டி வீதத்தில் அத்தகைய கடன்களை வழங்கியிருந்தது. மேலும்இ இ.மி.ச. பல திரவ பிரச்சனைகளை எதிர்கொள்ளுகின்ற போதிலும் கட்டுப்பாடுகள் எதுவுமின்றி பதவியணியினர் கடன்கள் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(C) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பின்வருவனவற்றைத் தவிர்த்து, ஏதேனும் எழுத்துருவிலான சட்டம் அல்லது சபையின் ஆளுகைச் சபையினால் வெளியிடப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட ஏற்பாடுகளிற்கு இணக்கமற்ற விதத்தில் செற்பட்டிருந்தது என்றும்.

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை (தொடர்சி)

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

| விதிகள்/வழிகாட்டல்களுக்கான தொடர்பு | விபரம் |
|---|---|
| (அ) 2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரசபை அதிகாரச் சட்டத்தின் 28(3) ஆம் பிரிவு | இ.மி.சபையானது அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறு நுகர்வோர் வைப்பபுக்களிற்கான வட்டியை செலுத்தியிருக்காததுடன் 2019 ஆம் ஆண்டிற்காக இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவினால் அறிக்கையிடப்பட்ட விலைவீதத்தை அடிப்படையாகக் கொண்டு கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடுகளின் பிரகாரம்அவற்றின் மீது செலுத்தப்பட வேண்டிய வட்டி ரூபா 1,592 மில்லியனாக இருந்ததுடன் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்தப்படாத திரண்ட வட்டி ரூபா 5,118 மில்லியனாக இருந்தது. |
| (ஆ) 2013 இன் 31 ஆம் இலக்க இலங்கை மின்சார (திருத்திய) சட்டத்தின் 43 ஆம் பிரிவின் 4 இ (ii) | சட்டத்திலுள்ள தேவைப்படுகளின்படி, கேள்வி கோரல் நடைமுறையினைப் பிரயோகிக்காது 2016 ஏப்ரல் முதல் 2019 திசெம்பர் வரையான காலப்பகுதியில் இ.மி.ச. (ரூபா 59.4 பில்லியன் பெறுமதியான 2,165.51 GWh) அவசர மின்வலுக் கொள்வனவினை செய்திருந்தது. மேலும் அந்த மின்வலு ஆலைகள் ஒழுங்கமைப்பாளரிடமிருந்து பிறப்பாக்க அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளாது செயற்பட்டிருந்தன. |
| (இ) 1969 இன் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை அதிகாரச்சட்டம்<br>1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் II ஆம் பகுதியின் 46 ஆம் பிரிவு மற்றும் 11(அ) மற்றும் (ஆ) பிரிவுகள | 1989 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் உள்ளவாறான மொத்த நிலையான சொத்துக்களின் மொத்தப் பெறுமதியில் 0.1 சதவீதப் பங்களிப்பு காப்புறுதி பாதுகாப்பு நிதியத்திற்கு மாற்றப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தபோதிலும் அந் நிதியத்தில் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 8,996 மில்லியன் தொகையை மாத்திரம் இ.மி.ச. முதலீடு செய்திருந்தது. |
| (ஈ) பொது முயற்சிகள் திணைக் களத்தினால் வழங்கப்பட்ட PED 12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 9.4 ஆம் பிரிவு | PED 12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 9.4 ஆம் பிரிவுக்கு முரணாக, 2008 முதல் அவ்வப்போது வரிசை அமைச்சுக்கு விடுவிக்கப்பட்டிருந்த 26 ஊழியர்களிற்காக ரூபா 49,138,383 தொகையினை ஆண்டிற்கான சம்பளமாகவும் ஏனைய கொடுப்பனவுகளாகவும் சபை செலுத்தியிருந்தது. |

### 3. ஏனைய கணக்காய்வு அவதானிப்புக்கள்

(அ) 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 21,080 மில்லியன் வியாபாரக் கடன்பட்டோர் மீதியில் சாதாரண மற்றும் மொத்த வழங்கல்கள் இரண்டுடனும் தொடர்புடைய ரூபா 3,322.2 மில்லியன் மீதி ஒரு ஆண்டிற்கு மேலாக நிலுவையாக இருந்ததுடன் அதில் ரூபா 1,840 மில்லியன் தொகை ஐந்து ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்படாதிருந்தது.

(ஆ) ரூபா 2,635,007,475 கூட்டுத்தொகையான பின்வரும் சில்லறைக் கடன்பட்டோர் மீதிகள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஐந்து ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்படாதிருந்தன.

| கடன்பட்டோர் பெயர் | தொகை<br>ரூபா | விபரம் |
|---|---|---|
| பொதுத் திறைசேரி | 225,000,000 | வீதி வெளிச்சமிடல் மற்றும் பராமரிப்புக் கிரயத்தை அறவீடு செய்தல். |
| அரசாங்க நிறுவனங்கள் | 120,653,322 | |
| மூலதனமாக்கப்படாத நடைபெறும் வேலைகள் | 8,601,341 | |
| வூட் குறூப் காஸ் ரேபைன் லிமிடட் | 8,264,352 | மேற்குக் கரையோர மின்வலு ஆலைக்கு உள்ளக வீதியொன்றை நிர்மாணிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள். |
| மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சு | 6,142,277 | கெரவலப்பிட்டிய இணைந்த மின்வலுப் பொறியின் திறப்பு விழாவிற்காக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள். |
| இலங்கை நிலைபெறுதகு எரிசக்தி அதிகாரசபை | 897,025,999 | சிற்றளவு நீர்மின்சார அபிவிருத்தியாளர்களிற்கு இ.மி.ச. இனால் செலுத்தப்பட்ட கட்டணச் சீராக்கல |
| ஏசஎஸ் கெலனிதிஸ்ஸ (தனியார்) லிமிட்டட் | 1,368,961,445 | விலை வேறுபாடுகளின் கொடுப்பனவு மீது அறவிடப்பட வேண்டிய தொகை. |
| நொதர்ன் பவர் (தனியார்) லிமிடட் | 358,739 | 2011 ஆம் ஆண்டில் இ.மி.ச. இனால் பூரணப்படுத்திய விரிவாக்கல் வேலைக்காக பெறப்பட வேண்டிய மீதியாகும். |
| மொத்தம் | 2,635,007,475 | |

(இ) நிலக்கரி பற்றாக்குறை தொடர்பில் ஐந்து வருடங்களுக்கு மேலாக லங்கா கோல் கம்பனியிடமிருந்து அறவிடப்படாதுள்ள ரூபா 714,965,435 நீண்டகால நிலுவை மீதியினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை (தொடர்ச்சி)

(ஈ) பின்வரும் ரூபா 4,947,283,160 கூட்டுத்தொகையான கடன்கொடுநர் மீதிகள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீண்டகாலமாக தீர்க்கப்படாதிருந்தன.

| கடன்கொடுத்தோர் பெயர் | தொகை ரூபா |
|---|---|
| சுங்கம் | 1,065,828 |
| சீன இயந்திர பொறியியல் கூட்டுத்தாபனம் | 3,596,324,467 |
| செலுத்தவேண்டிய பிடித்துவைத்த பங்கிலாப வரி | 1,270,766,413 |
| மூலதனச் செலவினம் | 10,928,756 |
| புத்தளம் நிலக்கரி மின்வலு ஆலையின் அட்டுறு செலவினம் உள்ளிட்ட சில்லறைக் கடன்கொடுநர் | 68,197,696 |
| மொத்தம் | 4,947,283,160 |

(உ) சொத்து முகாமைத்துவப் பிரிவின் ஏனைய பெறவேண்டியவைகளின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 151,421,219 தொகை ஐந்து ஆண்டுகளிற்கும் மேலாக அறவிடப்பட்டிருக்கவில்லை. அதில் ரூபா 142,477,285 தொகை அரசாங்க நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட வேண்டுமென்பதுடன் ஆரம்பத்திலிருந்தே இத்தொகைகளை அறிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) பரிமாற்றல் பிரிவிலுள்ள வியாபாரக் கடன்கொடுத்தோராகக் காட்டப்பட்டுள்ள ரூபா 3,371,599,434 தொகை ஒரு ஆண்டுக்கும் மேலாக தீர்க்கப்படாமலுள்ளது.

(எ) 2019 ஒக்தோபர் 05 இல் உள்ளவாறு ரூபா 95,211,376 பெறுமதியுடைய 4,952.85 மெற்றிக் தொன் நிலக்கரி இருப்பு பற்றாக்குறையாக இருக்கின்றமை இனங்காணப்பட்டுள்ள போதிலும், பொருள் மெய்மையாய்வுக் குழுவொன்றினால் பௌதீக இருப்பு எடுத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இருப்பினும், ரூபா 456,197,162 பெறுமதியுடைய 28,006.66 மெற்றிக் தொன் மிகை நிலக்கரி இருப்பு 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வருமானக் கூற்றிற்கு சீராக்கப்பட்டுள்ளது. ஆகையால், 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலக்கரி இருப்பு மீதியின் சரியான தன்மையினை மெய்மையாய்வு செய்ய முடிந்திருக்கவில்லை.

(ஏ) இ.மி.சபையானது பல வருடங்களாக மின்சாரத்தை எல்ஈசீஎ (LECO) இற்கு விற்பனை செய்வதுடன் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடமிருந்து எரிபொருளை கொள்வனவு செய்கின்ற போதிலும் இவ் இரண்டு நிறுவனங்களிற்கிடையே சுமூகமான செயற்பாடுகளை உறுதிப்படுத்துவதற்காக இவ் இரண்டு தரப்பினர்களுடன் கைச்சாத்திடப்பட்ட விற்பனை மற்றும் கொள்வனவு உடன்படிக்கைகள் காணப்படவில்லை.

(ஐ) இ.மி.சபையுடன் வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக வழங்கப்பட்ட நிதிகள் காலரீதியாக பயன்படுத்தப்படாததன் காரணமாக வழங்கப்பட்ட கடன்களிலிருந்து 2019 ஆம் ஆண்டில் கடனளிக்கும் முகவரால் கடப்பாட்டுக் கட்டணங்களாக ரூபா 134,447,792 தொகை கழிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், கணிப்பீடுகள் இன்மை காரணமாக கடப்பாட்டுக் கட்டணங்களின் சரியான தன்மையினை மெய்மையாய்வு செய்ய முடிந்திருக்கவில்லை.

(ஒ) நீண்ட கால மின் உற்பத்தி விரிவாக்கத் திட்டம் 2018 – 2037 இன் படி, 370 MW அனல் மின்வலு மற்றும் 287 MW புதுப்பிக்கத்தக்க எரிசக்தி இனை உள்ளடக்கிய 657 MW புதிய தேசிய மின்சார முறைமைக்குச் சேர்க்கப்படுதல் வேண்டும். இருப்பினும், மேற்படி திட்டத்தில் உள்ளடங்கியிருக்காத 222 MW அனல் மின்வலு மற்றும் 25.25 MW புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மீளாய்வாண்டில் முறைமைக்குச் சேர்க்கப்பட்டிருந்தது. அதன் விளைவாக, ரூபா 22.2 பில்லியன் பெறுமதியான 735 Ghw எரிசக்தி அவசரக் கொள்வனவாக மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(ஓ) ஏப்ரல் உதுறு வசந்தய செயற்திட்டத்தின் கீழ் 2014 இல் இனங்காணப்பட்ட ரூபா 39,551,696 இருப்பு பற்றாக்குறை தொடர்பாக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவால் விசேட புலனாய்வு மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் இந்த அறிக்கைத் திகதி வரையிலும் ரூபா 39,551,696 தொகையில் ரூபா 2,510,056 பற்றாக்குறைக்குப் பொறுப்பான உத்தியோகத்தருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், இது தொடர்பில் 2015 இல் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் மற்றொரு உத்தியோகத்தருக்கு எதிராக திருகோணமலை நீதவான் நீதிமன்றத்தில் நீதிமன்ற வழக்கொன்று (வழக்கு இல. பீ/1164/15) தொடரப்பட்டிருந்தது. மேலும் நீதிமன்ற வழக்கின் தற்போதைய நிலைமை தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

(ஔ) 2006 நவம்பர் 20 தொடக்கம் 2012 பெப்ரவரி 20 வரையான காலப்பகுதியின் போது சொத்து முகாமைத்துவப் பிரிவில் (மின்வலுப் பொறி) ஏற்பட்டிருந்த ரூபா 3,674,861 இருப்பு பற்றாக்குறைக்குப் பொறுப்பான நபர் தொடர்பாக முறையான புலனாய்வு முடிவடைந்திருந்த போதிலும் அந்த நபருக்கு எதிராக 2018 ஆகஸ்ட் 16 வரை சபையால் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் அதே ஊழியர் இன்னொரு அலுவலகத்தில் மோசடியொன்றில் ஈடுபட்டிருந்ததுடன் மோசடிப் பெறுமதியாக ரூபா 99,155 அறவிடப்பட்ட பின்னர் அவரது வேலை முடிவுறுத்தப்பட்டிருந்தது.

(ஃ) புலனாய்விற்காக நியமனம் செய்யப்பட்ட குழுவால் பரிந்துரைக்கப்பட்டவாறு நட்டம் அறவிடப்படாமல் ரூபா 3,789,893 இருப்பு பற்றாக்குறைக்குப் பொறுப்பான உத்தியோகத்தர் ஒருவர் 2011 ஒக்டோபர் 15 இல் ஓய்வு பெறுவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தார். மேலும் மேற்படி பொருண்மையான தொகையினை சீராக்குவதற்கு நடவடிக்கை எதுவும் எடுக்கப்படாமல் கணக்குப் புத்தகங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இந்த உத்தியோகத்தரை ஓய்வு பெறுவதற்கு அனுமதித்திருந்த உத்தியோகத்தருக்கு எதிராக எவ்வித நடவடிக்கையினையும் எடுக்காது இந்தத் தொகையினை பதிவழிக்கும் செயற்பாட்டில் சபை ஈடுபட்டுள்ளது.



**ஒப்பம்: டபிள்யு.பி.சீ. விக்ரமரத்ன**
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள்

**இலங்கை மின்சார சபையின் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 2019 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள்.**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

தகவல்பந்தி

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

**1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (SLAS/SLFRS) மற்றும் கணக்கீட்டுக் கொள்கைகளுடன் இணங்குதல்.**

**(அ) எல்கேஏஎஸ் 1-நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

(i) **கடன்கொடுத்தோருக்கு எதிராக ரூபா 30,609,836 கடன்பட்டோரை சபை எதிரீடு செய்திருந்தது.**

தவறுதலாக மேற்கொள்ளப்பட்ட பதிவு 2020 இல் திருத்தப்பட்டது.

(ii) **பசுமை மின்வலு அபிவிருத்தி மற்றும் எரிசக்தி திறன் மேம்பாட்டு செயற்திட்டத்திற்கு வழங்கிய ரூபா 1,262,503,405 கடன் தொகை.**

தவறுதலாக மேற்கொள்ளப்பட்ட பதிவு 2020 இல் திருத்தப்பட்டது.

(iii) **ரூபா 83 பில்லியன் பெறப்பட்ட கடன்களுக்காக செலுத்திய ரூபா 25 மில்லியன் கடன் செயன்முறைப்படுத்தல் கட்டணத்தை, நிதிச் செலவாக காண்பிப்பதற்குப் பதிலாக நிர்வாக செலவினங்களின் கீழ் ஏனைய செலவாக காண்பிக்கப்பட்டிருந்தது.**

செலவின வகைப்படுத்தல் திருத்தம் பாதிக்கப்பட்டுள்ளது.

**(ஆ) LKAS2 - இருப்புக்கள் மற்றும் LKAS 16 - ஆதனம், பொறி மற்றும் உபகரணம்**

**இ.மி.சபை அதனது மூலதன மற்றும் பராமரிப்பு தொழில்களிற்கான ஊழியம், பொருள் மற்றும் மேந்தலைக் கிரயங்களிற்கு நியமக் கிரயத்தினை பிரயோகிக்கின்றமை**

எல்கேஏஎஸ் - 2 இன் 21 ஆம் பந்தியின் இன் படி இருப்பினை அளவிடுவதற்காக நியமக் கிரய முறை பரிந்துரைக்கப்படுகின்றது. அதன்படி, உண்மையான கிரயத்தினைப் பயன்படுத்துவதற்கான நடைமுறை சிரமம் காரணமாக இருப்புக்கள், முடிவுறாவேலை மற்றும் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை மதிப்பிடுவதற்கு நியம விலைகளை இ.மி.ச. பயன்படுத்துகிறது. இருப்புக்களின் நியம விலைகளைத் தீர்மானிக்க அமைக்கப்பட்ட குழு,உண்மையான் உண்மையான விலைகளுக்கு மிக அண்மித்த, துல்லியமான மற்றும் நியாயமான மதிப்பீட்டைக் கண்டறிவதற்கு கடுமையாக செயற்படுகிறது. இருப்பினும் தொழில்நுட்பத்தின் சிக்கலான தன்மை மற்றும் பாரியளவு இருப்பு காரணமாக, உண்மையான மற்றும் நியம விலைகளுக்கு இடையில் இடைவெளி உள்ளது. ஒருங்கிணைந்த கணக்கீட்டு முறை அறிமுகப்படுத்தப்பட்டவுடன் இந்த விடயம் தீர்க்கப்படும்.

நியம விலைகளிற்கும் உண்மையான விலைகளுக்கும் இடையிலான இந்த இடைவெளியைக் குறைப்பதற்கு இ.மி.ச. பின்வரும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

- DD 4 மற்றும் DD 3 இன் ஊழிய வீத முரண் 2019 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களிலிருந்து நீக்கப்பட்டது. ஏனைய இரண்டு பிரிவுகளிலும் 2020 ஆம் ஆண்டில் இதனைச் செய்ய முடியும்.
- நியமிக்கப்பட்ட குழுவால் பரிந்துரைக்கப்பட்ட இருப்பு மதிப்பீட்டிற்கான நிறையளித்த சராசரி முறையைத் பின்பற்றுவதன் மூலம், நிதிக் கூற்றுக்களிற்கான பொருள் விலை முரண்களின் தாக்கத்தை அகற்ற முடியும். இது தற்போது செயற்படுத்தப்பட்டு வருகின்ற ஈஆர்பி முறைமையில் உள்ளடக்கப்பட்டுள்ளமையால், ஈஆர்பி முறைமை நடைமுறைக்கு வந்தவுடன் இந்த பிரச்சினை தீர்க்கப்பட்டு விடும்.
- முடிவுறா வேலையிலிருந்து மாற்றப்படுகின்ற விநியோக சொத்துக்களைத் தவிர மற்ற அனைத்து ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் (நிலம், கட்டிடம், மோட்டார் வாகனம், இயந்திரங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள்) எல்கேஏஎஸ் பரிந்துரைகளுக்கு இணங்க நியமக் கிரயத்தில் மதிப்பிடப்படுகின்றன.

**(இ) எல்கேஏஎஸ் 8- கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளிலுள்ள மாற்றங்கள்மற்றும் வழுக்கள்**

**இ.மி.ச. இனால் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வருகின்றமுழுமையாகத்தேய்விடப்பட்டுள்ளநடைமுறையல்லாத சொத்துக்களின் பயனுள்ள ஆயட்காலம்.**

(i) **ரூபா 3,918,235,311 கிரயமான முழுமையாகத் தேய்விடப்பட்ட 1,683 மோட்டார் வாகனங்கள்**

மோட்டார் வாகனங்களின் பயனுள்ள ஆயுட்காலம் குறித்து பிரிவுகளிலிருந்து தரவுகள் சேகரிக்கப்பட்டு பகுப்பாய்வு இடம்பெற்று வருகின்றது. திருத்தப்பட்ட பயனுள்ள ஆயுட்காலத்தை 2020 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் பதிவு செய்வதற்கு பரிந்துரைக்கப்படக் கூடியதாக இருக்கும்.

(ii) **ரூபா 32,241,176,427 கிரயமான முழுமையாகத் தேய்விடப்பட்ட நான்கு மின் நிலையங்கள்**

பிறப்பாக்கப் பிரிவின் மின்வலு ஆலைகள் தனித்துவமானவையும் சிக்கலானவையுமாகும். மின்பிறப்பாக்கிகளின் பொருளாதார ஆயுட்காலம் மூல உற்பத்தியாளரின் பரிந்துரையின் அடிப்படையில் பெறப்பட்டுள்ளது. மின் உற்பத்தி நிலையங்களின் பொருளாதார ஆயுட்காலம் குறித்து மறுபரிசீலனை செய்ய ஒரு குழு நியமிக்கப்படும். இ.மி.ச. இன் சிறந்த பராமரிப்பின் காரணமாக,மின் உற்பத்தி நிலையங்கள் மற்றும் மின்பிறப்பாக்கிகள் என்பன மூல உற்பத்தியாளரின் (OEM) எதிர்பார்க்கப்படும் ஆயுட்காலத்தையும் தாண்டி இயங்குகின்றன.

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் (தொடர்ச்சி)

**(ஈ) LKAS 16 - ஆதனம், பொறி மற்றும் உபகரணம்**

**பரிமாற்றல் பிரிவிலுள்ள ரூபா 172,019,335,924 தொகைக்குரியநிலையான சொத்துக்கள்பௌதீக ரீதியாக மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.**

பரிமாற்றல் பிரிவிலுள்ள நிலையான சொத்துக்களை பௌதீக ரீதியில் மெய்மையாய்வு செய்வதற்கு தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

**(உ) LKAS 27 - ஏற்பாடுகள், நிகழத்தக்க பொறுப்புக்கள் மற்றும் நிகழத்தக்க சொத்துக்கள்**

**சபையின் ஊழியர் சேமலாப நிதியத்தால் (ஈபிஎவ்) நிதிக் கருவிகளில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 2,312,756,993 இன் அறவிட்டுத்தன்மை அந் நிதிக் கருவிகள் காணப்படாததன் காரணமாக ஐயத்திற்கிடமாக உள்ளது.**

அறிக்கையிடல் நிறுவக எண்ணக்கருச் சட்டகத்தின் 3.10 ஆம் பந்தியின் பிரகாரம், அறிக்கையிடல் நிறுவகமென்பது நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்காக வேண்டப்படுகின்ற அல்லது தெரிவுசெய்யப்படுகின்ற நிறுவகமாகும். அதற்கமைய, இ.மி.ச. இன் சேமலாப நிதியமானது சேமலாப நிதிய விதிகளின் (வர்த்தமானி அறிவித்தல் இல. 1321/18 - 2003 -12-31) பிரகாரம் முகாமைத்துவம் செய்யப்படுகின்ற தனிப்பட்ட நிறுவகமாகும். சேமலாப நிதியத்தின் விதிகள், தனிப்பட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்குமாறு நிதியத்தை வேண்டுகின்றது.

மேலும், சேமலாப நிதிய விதிகளின் 21(ii) ஆவது நிபந்தனையின் பிரகாரம், "சபையின் ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் குழு நிதியத்தின் கணக்குகளைத் தயாரித்து அவற்றை சபைக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு நிதியத்தின் கணக்குளைத் தயாரிக்கையில், நிதியத்தின் கணக்காய்வாளரது அறிவுரையின் பிரகாரம், குழு அது பொருத்தமெனக் கருதும் அவ்வாறான ஒதுக்கங்களை உருவாக்கலாம் என்பதுடன் ஏற்பாடுகளையும் மேற்கொள்ளலாம்.

ஆகையால், நிகழத்தக்கவைகளிற்கான (ஏதுமிருப்பின்) இறுதிப் பொறுப்பு நிதியத்திடமே காணப்படுகின்றது. அதற்கமைய, நிகழத்தக்கவை தொடர்பான தேவைப்படுத்தப்பட்ட வெளிப்படுத்தல்கள் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

**(அ) ரூபா 3,535,799,151 வரவு மீதி (இருப்பு பற்றாக்குறை) மற்றும் ரூபா 90,343,073 செலவு மீதி (இருப்பு மிகை) என்பன தீர்வு செய்யப்படாமல் ஒரு ஆண்டிற்கு மேலாக இருப்பு சீராக்கல் கணக்கில் காணப்படுகின்றன.**

சாத்தியமான இருப்புச் சீராக்கல் கணக்குகளை 2020 இல் அகற்றுவதற்கு குறித்த பிரிவுகள் நடவடிக்கை எடுத்துள்ளதுடன் ஏனைய பற்றாக்குறை மீதிகள் சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட பின்னர் அகற்றப்படும்.

**(ஆ) அமைச்சரவையின் 10/2434/423/034 ஆம் இலக்க தீர்மானத்தின் பிரகாரம் லக்விஜயா மின்வலு ஆலையினை நிர்மாணத்திற்காக பெறப்பட்ட ரூபா 159,184,187,965 கடன் தொகை மற்றும் அதன் மீதான வட்டியை பொதுத் திறைசேரிக்கு இ.மி.ச. மீளச் செலுத்த வேண்டும்.**

பிரதானமாக இ.மி.ச. இன் திரவத்தன்மை நிலையினைக் கருத்திற்கொண்டு 2018 ஆம் ஆண்டு வரையான மீளளித்தல்கள் பொதுத் திறைசேரியினால் உள்வாங்கப்பட்டது. இருப்பினும்,பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அவர்களது வழிகாட்டுதலின்படி, 2019 ஆம் ஆண்டிற்காக திறைசேரியினால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 3,556,442,931.30 தொகையான வட்டிக் கொடுப்பனவு இ.மி.ச. இன் புத்தகங்களில் சீராக்கப்பட்டது. மேலும், பொது முயற்சிகள் திணைக்களத்தின் வழிகாட்டுதலுக்கு உட்பட்டு 2020 ஆம் ஆண்டு முதல் சீராக்கல்களை செய்வதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது.

**(இ) திறைசேரியினால் உரிமைத்துவத்திற்கு மாற்றப்பட்டிருந்த தொகைக்காக கிடைத்திருந்த ரூபா 3,556,442,931 தொகை வட்டி செலவாக வருமானக் கூற்றில் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.**

எல்கேஏஎஸ் 23 (கடன் எடுத்தல் கிரயம்) இன் படி, சொத்துக்களை வணிகமயமாக்கிய பின்னர் ஏற்பட்டுள்ள ரூபா 3,556,442,931.30 ஐ மூலதனமாக்க முடியாது. அதன்படி, 2019 ஆம் ஆண்டுக்காக திறைசேரியினால் செலுத்தப்பட்ட வட்டி வருமானக் கூற்றுக்கு சாட்டப்பட்டது. எனவே கணக்கீட்டு நியமத்தின் படி, சபையின் நட்டம் அதிகரித்துக் காட்டப்படவில்லை.

**(ஈ) இ.மி.ச. இனால் பேணப்படுகின்ற ஊழியர் சேமலாப நிதியத்தின் சார்பில் ஏற்பட்ட ரூபா 41,816,475 தொகையான செலவினங்கள் பெறவேண்டியவையாக கருதப்படாமல் இ.மி.ச. இன் செலவினங்களாக கருதப்பட்டிருந்தது.**

2003.12.31 ஆந் திகதிய 1321/18 ஆம்இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட சேமலாப விதிகளின் 20(/) ஆம் விதியின் பிரகாரம்,சபையால் காலத்திற்குக் காலம் முடிவு செய்யப்படும் சந்தர்ப்பங்களை தவிர்த்து, முதலீடுகளை கொள்வனவு செய்வதற்கும் விற்பனை செய்வதற்கும் நேரடியாக தொடர்புபடுகின்ற செலவினங்கள் உட்பட ஊழியர் சேமலாப நிதியத்தின் நிர்வாக மற்றும் முகாமைத்துவச் செலவினம் நிதியத்தின் செலவினமாக சாட்டப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆகையால், ஊழியர் சேமலாப நிதியத்தின் ரூபா 41,816,475 செலவினத்தை இ.மி.ச. இன் நிதிக் கூற்றுக்களில் காட்டுவது மேலே கூறப்பட்ட இ.மி.ச. சேமலாப நிதியத்தின் விதிகளுக்கு அமைவாகவே உள்ளது. ஆனபடியால், இ.மி.ச. இன் நிதிக் கூற்றுக்களில் அந்த செலவினத்தை பெற வேண்டியவைகளாக காட்டுவது அவசியமற்றது.

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் (தொடர்ச்சி)

**(உ) 2013 ஆம் ஆண்டிற்கு முன்னர் அரசாங்க நிறுவனங்களின் மின் பிறப்பாக்கிகள், மின்தூக்கிகள் மற்றும் வளிப் பதனாக்கிகளின் வழங்கல், பராமரிப்பு மற்றும் திருத்தத்திற்காக சீஈபியால் மேற்கொள்ளப்பட்ட வேலைகள் அவற்றின் விலைச்சீட்டைப் பெறுமதிகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீடு செய்வதற்குப் பதிலாக கிரயத்தில் பெறுமதியிடப்பட்டுக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தமை.**

2013 க்கு முன்னர் கடன்பட்டோர் சாசு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டு வேலைக்கான உண்மையான செலவு வாடிக்கையாளரிடமிருந்து பெறத்தக்கவையாகக் காட்டப்பட்டது. 2013 க்கு முந்தைய நிதிக்கூற்றுக்களில் பிரதிபலித்த பெரும்பாலான பெறத்தக்கவைகளை அறவிட முடியாதுள்ளது. மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சின் பெறத்தக்கவைகள், மருத்துவமனைகளிலிருந்து பெறத்தக்கவை மற்றும் இ.மி.ச. இன் தலைவரிடமிருந்து கிடைத்த அறிவுறுத்தல்களின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட வேலைகளிற்காக பெறத்தக்கவை போன்றன அவ்வாறு அறவிட முடியாத நிலுவைகளாக உள்ளன.

மதிப்பிடப்பட்ட பெறுமதியின் அடிப்படையில் அறவிட முடியாத நிலுவைத் தொகைக்கு விலைப்பட்டியல் செய்வதும் அதற்கு வெற் வரி செலுத்துவதும் இ.மி.ச. இற்கு தேவையற்ற இழப்பை ஏற்படுத்துவதுடன் அது விவேகமான செயற்பாடுமல்ல. எனவே, உண்மையான கிரயமே அறவிடப்பட வேண்டிய தொகையாகக் காட்டப்படுகிறது.

இந்த பிரச்சினை பல முறை கணக்காய்விற்குத் தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும் அதே பிரச்சினை மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்படுகின்றது. அறவிட முடியாத பெறத்தக்கவைகளுக்கான முழு ஏற்பாட்டையும் இ.மி.ச. செய்துள்ளது. உண்மையான கிரயத்திற்கும் மதிப்பிடப்பட்ட பெறுமதிக்கும் இடையிலானதற்போதைய விலகல் (30 ஜூன் 2020 நிலவரப்படி) 2013 க்கு முன்னர் காணப்பட்ட ரூபா 53,052,302.10 ஆகும்.

குறிப்பு: - கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை ரூபா 66,978,761 இற்கு பதிலாக ரூபா 53,052,302.10 என திருத்திக்கொள்ள வேண்டும்.

**(ஊ) 2016 ஆம் ஆண்டில் பொதுத் திறைசேரிக்கு தீர்வையாகச் செலுத்திய ரூபா 5 பில்லியனில் ரூபா 500 மில்லியன் மீளாய்ண்டில் முகாமைத்துவக் கட்டணம் செலுத்துதல் என வகைப்படுத்தி வருமானக் கூற்றுக்கு மாற்றப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டுச் சீராக்கமாக ரூபா 1 பில்லியன் மேற்கொள்ளப்பட்டிருந்தது.**

2019-10-16 திகதிய PDE/I/CEB/2/11/(iii) ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் கடிதத்தின் படி, 2019 ஆம் ஆண்டில் திறைசேரிக்குச் செலுத்திய "முகாமைத்துவக் கட்டணம்" என இக்கொடுப்பனவு கருதப்பட்டுள்ளதுடன் 2017 ஆம் ஆண்டு தொடங்கி 10 ஆண்டுகளிற்கு காலத்தேய்மானம் செய்யப்பட்டுள்ளது.

இ.மி.ச. இன் வழக்கமான செயல்பாட்டிற்கான நிதியினை ஏற்பாடுசெய்து கொள்வதற்கு திறைசேரி இ.மி.ச. இற்கு வசதிகளை வழங்குகின்றது.

**(எ) துணைக் கடன் உடன்படிக்கைகளிலுள்ள நிபந்தனைகளின் படி பொது திறைசேரிக்குச் செலுத்த வேண்டிய ரூபா 2,495,574,443 வட்டித் தொகையினை சீஈபீ செலுத்தவுமில்லை அல்லது அதற்காக ஏற்பாடு செய்யவுமில்லை.**

துணைக் கடன் உடன்படிக்கைகளில் வட்டிக்கு எந்தவொரு ஏற்பாட்டையும் செய்யுமாறு இ.மி.ச. இனை பொது முயற்சிகள் திணைக்களம் அறிவுறுத்தியிருக்கவோ அல்லது நெறிப்படுத்தியோ இருக்கவில்லை. எனவே இது தொடர்பாக இ.மி.ச. எந்தவொரு ஏற்பாட்டையும் செய்யவில்லை

**(ஏ) திறைசேரியிடமிருந்தான 10 சதவீத பங்கிலாப வரி என பெயரிடப்பட்ட ரூபா 4,200,000 தொகை தலைமையக புத்தகங்களில் அடையாளம் காணப்படாத பிற கடன்பட்டோரில் உள்ளது. இந்த தொகைக்காக கணக்குகளில் எந்த ஏற்பாடும் செய்யப்படவில்லை.**

2005.'.2006 ஆம் ஆண்டிற்காக ரூபா 42,000,000 மொத்த பங்கிலாபத்தை செலுத்துகையில் லங்கா டிரான்ஸ்போமர் லிமிடட் இனால் கழிக்கப்பட்டிருந்த 10 சதவீத பங்கிலாப வரியினை இது பிரதிநிதித்துவம் செய்கின்றது. இது 2020 இல் திருத்தப்பட்டது .

**(ஐ) இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 31,119,302 தாமத வட்டி கணக்கு புத்தகங்களிலிருந்து தவறவிடப்பட்டுள்ளது.**

2020 திசெம்பர் 31 இல் முடிவடையும் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் தாமத வட்டியினை பதிவுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**(ஒ) விநியோக பிரிவில் 1 இலுள்ள சொத்துகளுக்கு மாற்றப்படாமல் ரூபா 734,574,801 மதிப்புள்ள பூரணப்படுத்திய வேலைகள் நடைபெற்றுவரும் வேலைகள் கணக்கில் வைக்கப்பட்டுள்ளன.**

வட மத்திய மாகாணத்திலுள்ள இருப்பு கணக்காய்வு ஐயவினாவில் காட்டப்பட்டுள்ள தொகையை விட ரூபா 714 மில்லியன் அதிகமாக உள்ளதால் மேற்கண்ட நிலுவைத் தொகை ரூபா 1,448 மில்லியன் என சரிசெய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும், மேற்கூறிய நீண்டகால முடிவுறா வேலைகளின் நிலுவைகளில் 25% ஆனவை ஏற்கனவே 2020 நிதியாண்டில் ஆதனம், பொறி மற்றும் உபகரணத்திற்கு மாற்றப்பட்டுள்ளதுடன் கிடைக்கக்கூடிய பூரணப்படுத்தல் அறிக்கைகளின் அடிப்படையில் 2020 ஆம் ஆண்டில் முடிவுறா வேலைகளின் நிலுவைகளை ஆதனம், பொறி மற்றும் உபகரணத்திற்கு மாற்றுவதற்கு வட மாகாணத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. முடிவுறாவேலை மீதிகள் தொடர்பில் அனைத்து மாகாணங்களாலும் பொதுவான கால இடைவெளியில் மீளாய்வும் கண்காணிப்பும் மேற்கொள்ளப்படுவதுடன் வேலைகளை பூரணப்படுத்துகையில் அவை மாற்றப்படும்.

**(ஓ) மொரகஹகந்த மின்வலு நிலையத்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட மின்சாரத்திற்காகச் செலுத்த வேண்டிய ரூபா 128,264,040 தொகை கணக்கு புத்தகங்களிலிருந்து விடுபட்டுள்ளது.**

2020.07.31 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான கணக்குப் புத்தகங்களில் மொரகஹகந்த மின்வலு நிலையத்துடன் தொடர்புடைய அனைத்து நிலுவையான பட்டியல்களையும் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அனைத்துப் பட்டியல்களையும் உரியவாறு பதிவுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் (தொடர்ச்சி)

**(ஔ) 2012 இல் நிறைவடைந்த மேல் கொத்மலை நீர் மின்வலு செயற்திட்டம் தொடர்பான ரூபா 944,030,864 முடிவடையாதிருந்த வேலைகள் நிலையான சொத்துக்களுக்கு மாற்றப்பட்டிருக்கவில்லை.**

இந்த செயற்திட்டம் 2012 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு ஆரம்ப சொத்துக்களின் பரிமாற்றம் 2014 ஆம் ஆண்டில் அந்தந்த பிரிவுகளுக்கு செயற்படுத்தப்பட்டது. இருப்பினும், 2019.12.31 நிலவரப்படி ஆரம்ப சொத்துப் பரிமாற்றத்திற்குப் பின்னர் ரூபா 944,030,864 செலவினம் முடிவுறா வேலைக் கணக்கில் திரண்டுள்ளன. இந்த தொகை பிரதானமாக பணியாளர்களின் செலவுகள், நடுவருக்கான சட்ட கட்டணம் மற்றும் நிலம் கையகப்படுத்தும் செலவு ஆகியவற்றைக் கொண்டுள்ளது. நடப்பு ஆண்டிற்குள் மீதமுள்ள செலவை அந்தந்த பிரிவுகளுக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

**(ஃ) 2014 இல் நிறைவடைந்த புத்தளம் நிலக்கரி மின்வலுச் செயற்திட்டம் தொடர்பான ரூபா 603,573,159 முடிவடையாதிருந்த வேலைகள் நிலையான சொத்துக்களுக்கு மாற்றப்பட்டிருக்கவில்லை.**

இந்த செயற்திட்டம் 2014 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு ஆரம்ப சொத்துக்களின் பரிமாற்றம் 2015 ஆம் ஆண்டில் அந்தந்த பிரிவுகளுக்கு செயற்படுத்தப்பட்டது. இருப்பினும், 2019.12.31 நிலவரப்படி ஆரம்ப சொத்துப் பரிமாற்றத்திற்குப் பின்னர் ரூபா 603,573,159 செலவினம் முடிவுறா வேலைக் கணக்கில் திரண்டுள்ளன. நடப்பு ஆண்டிற்குள் மீதமுள்ள செலவை அந்தந்த பிரிவுகளுக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

**(க) ரூபா 367,390,040 தொகையான செலவு மீதியொன்று பிரிவுகளிற்கிடையிலான மீதிகளிற்கு எதிரீடு செய்யப்படாது 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிரிவுகளிற்கிடையிலான நடைமுறைக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது.**

இது நடப்பு நிதியாண்டில் திருத்தப்பட்டுள்ளது.

### 1.2.3 இணக்கம் செய்யப்படாத வேறுபாடுகள்

**(அ) 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சீஈபியின் நிதிக்கூற்றுக்களில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்த வேண்டியதாக காட்டப்பட்ட மீதிக்கும் அத் திகதியிலுள்ளவாறு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களில் பெறவேண்டியதாக காட்டப்பட்ட நேரொத்த மீதிக்கும் இடையில் ரூபா 764,717,080வேறுபாடு அவதானிக்கப்பட்டது.**

இதனை கணக்கிணக்கம் செய்வதற்கும் 2020 இன் நிதிக்கூற்றுக்களில் தாமத வட்டிக் கட்டணத்தை பதிவு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**(ஆ) விலைப்பட்டியலிடல் முறைமையிலும் அதே போல் நிதிக்கூற்றுக்களிலும் சில மீதிகள் தவறவிடப்பட்டதன் காரணமாக விநியோகப் பிரிவு 1, 2, 3 மற்றும் 4 இன் விலைப்பட்டியலிடல் முறைமையில் காட்டப்பட்ட 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த வியாபாரக் கடன்பட்டோர் மீதிக்கும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட நேரொத்த தொகைக்கும் இடையில் ரூபா 423,764,624கூட்டுமொத்தமான இணக்கம் செய்யப்படாத வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.**

சபையின் பட்டியலிடல் முறைமையில் பட்டியலிடல் கொடுக்கல் வாங்கலை பதிவுசெய்கின்ற செயன்முறையும் பொதுப் பேரேட்டில் நிதிக் கொடுக்கல் வாங்கல்களை பதிவுசெய்தலும் எந்தவொரு நேரத்திலும் இணங்குவதில்லை. அவ்வாறான வேறுபாடுகளிற்கான காரணத்தை நிச்சயிப்பதற்காக விநியோகப் பிரிவு கணக்கிணக்கமொன்றை மேற்கொள்கின்றது.

உயர் வழங்கல் கடன்பட்டோர் பேரேட்டு மீதி செயற்பாட்டுக் கடன்பட்டோரையும் இறுதியாக்கப்பட்ட கடன்பட்டோரையும் உள்ளடக்குகின்றது. இருப்பினும், ஐரீ கிளையிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட பட்டியல் அறிக்கை செயற்பாட்டுக் கடன்பட்டோர் மீதியினை மாத்திரம் உள்ளடக்குகின்றது. ஆகையால், ஐரீ கிளையிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட பட்டியல் அறிக்கை மீதிக்கும் பேரேட்டு மீதிக்கும் இடையிலான வேறுபாட்டிற்கு பிரதான காரணம் இறுதியாக்கப்பட்ட கடன்பட்டோர் மீதியாகும். இருப்பினும், கடன்பட்டோர் கணக்கிணக்கக் கூற்று நிதிக்கூற்றில் தரப்பட்டுள்ளது.

**(இ) சேகரிப்பு கட்டுப்பாட்டு பேரேட்டுக் கணக்கில் ரூபா 4,073,824,173 மற்றும் ரூபா 129,863,150 வரவு மற்றும் செலவு மீதிகள் தொடர்ந்து காணப்படுவதுடன் அத்தகைய நிலுவைகளுக்கான காரணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.**

சாதாரண விநியோக பட்டியலிடல் சுழற்சி இறுதித் திகதியானது நிதிக் கணக்குகளின் இறுதித் திகதியிலிருந்து வேறுபட்டுள்ளதால் இந்த வேறுபாடுகள் எழுகின்றன. எனவே, சாதாரண விநியோக பட்டியலிடல் சுழற்சி இறுதித் திகதியினை நிதி ஆண்டு இறுதித் திகதியை ஒத்ததாக மாற்றுவதற்கு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**(ஈ) தொங்கல் மீதியுடன் தொடர்புடைய மொத்தம் ரூபா 79,512,030 பெறுமதியான 66 சதவீதத்திற்கு வயது பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்படாததுடன் ரூபா 70,306,494 தொகை ஒரு வருடத்திற்கு மேல் தீர்க்கப்படாமல் இருந்தது.**

அங்கீகரிக்கப்பட்ட அடையாளம் தெரியாத வாடிக்கையாளர் கொடுப்பனவுகளை அந்தந்த நுகர்வோர் கணக்குகளுக்கு செலவு வைப்பதற்கு தொடர்ச்சியான முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. நுகர்வோரிடமிருந்து முறைப்பாடுகள் கிடைக்கும் வரை மேலே தோன்றிய பெரும்பாலான நிலுவைகள் இ.மி.ச. ஆல் அங்கீகரிக்கப்படவில்லை. இந்த மீதியானது கடுமையான கண்காணிப்பு மற்றும் மீளாய்வின் கீழ் உள்ளது.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தினதும் ஆளுகைத் தரப்பினரதும் பொறுப்புக்கள்

தகவல்பந்தி

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு மீதான கணக்காய்வாளரின் பொறுப்பு

தகவல்பந்தி

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் (தொடர்ச்சி)

**2. சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை**

- **சபையின் அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் கடமைகளிற்கு இணங்க செயற்பட்டிருந்தது என்றும்,**

**(அ) வழக்கு இல. CA/WRIT/193/2015 இன் கீழ் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்புக்கு அமைய சட்டவிரோதமான சம்பளக் கொடுப்பனவை 2014 நவம்பர் 27 ஆந் திகதிய 2014/GM/46/Pers ஆம் இலக்க சுற்றறிக்கையின் படி சபை தொடர்ந்து மேற்கொண்ட வந்திருந்தது.**

நீதிமன்ற தீர்ப்புடன் எவ்வாறு இணங்கியொழுகுதல் வேண்டுமென கௌரவ சட்டமா அதிபர் அபிப்பிராயம் தெரிவித்துள்ளார். இ.மி.ச. சட்டமா அதிபரினால் வழங்கப்பட்ட அபிப்பிராயத்தை பின்பற்றுகின்றது.

**(ஆ) 2007 நவம்பர் 14 இல் அமைச்சரவையால் எடுக்கப்பட்ட தீர்மானம் மற்றும் 2009 மே 26 இன் 39 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகள் என்பவற்றிற்கு முரணாக சபையின் அங்கீகாரம் மீது சீஈபீயின் பதவியணியினரிற்கு காலத்திற்குக் காலம் பல்வேறு பதவியணியினர் படிகள் செலுத்தப்பட்டிருந்தன.**

1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை சட்டத்தின்படி,சபையின் அதிகாரங்கள் 12 ஆம் பிரிவின் கீழ் பட்டியலிடப்பட்டுள்ளன.

*பிரிவு 12 (எம்): சபையின் விவகாரங்களின் நிர்வாகம் தொடர்பாக விதிகளை உருவாக்குதல*

*பிரிவு 12 (என்): சபையின் கருத்தில் அதன் வியாபாரத்தை முறையாக நடத்துவதற்கு வசதியளிப்பதற்குத் தேவையான ஏனைய எல்லாவற்றையும் செய்வதற்கு*

அதன்படி, குறிப்பிடப்பட்டுள்ள கண்டுபிடிப்புகள் சபையினால் அதன் ஊழியர்களுக்கு நிறுவனத்தின் மேம்பாட்டிற்காக பணியாற்றுவதற்கான மன உறுதியை உயர்த்துவதற்காக வழங்கப்படும் நன்மைகளுடன் தொடர்புடையவை. மேலும்,சபையின் விவகாரங்களின் நிர்வாகத்தைப் பொறுத்தவரை விதிகளை உருவாக்குவதற்கான அதிகாரத்தை இந்தச் சட்டம் வழங்குகிறது.

**(இ) உழைக்கும் போதே செலுத்தும் (பிஏவைஈ) வரிப்பொறுப்பை ஊழியர்களுக்கு மாற்றுவதற்காக 2015 மே 20 இல் கூட்டு உடன்படிக்கையை கருத்தில் கொள்ளும் போதும் 2007 திசெம்பர் 13 இல் சம்பள மீளாய்வின் போதும் அமைச்சரவை தீர்மானங்களை எடுத்திருந்தது.**

இ.மி.சபையின் ஊழியர்கள் உழைக்கும் போதே செலுத்தும் வரி பொறுப்புக்கு உட்படுகின்றமையால் அவர்களது உழைக்கும் போதே செலுத்தும் வரிப் பொறுப்பை இ.மி.சபை பொறுப்பேற்றிருந்தது. இது தொடர்பில் மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சுக்கும் சம்பளங்கள் மற்றும் பதவியணியினர் ஆணைக்குழுவிற்கும் பல சந்தர்ப்பங்களில் அறிவிக்கப்பட்டதுடன் தொழிற்சங்கங்களுடன் சில சுற்று பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன. இருப்பினும், இணக்கப்பாடு ஏற்பட்டிருக்கவில்லை. 2018.01.04 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்ட கூட்டு உடன்படிக்கை 2018.04.23 ஆந் திகதிய 2068/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. ஆகையால், இணங்கப்பட்ட சம்பளத்தினை மாற்றுதல் கூட்ட உடன்படிக்கையினை மீறுவதாக உள்ளதுடன் சட்டரீதியான சிக்கல்களையும் அது தோற்றுவிக்கும்.

**(ஈ) 2001 மே 20 ஆம் திகதிய 1706/18 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தால் குறித்துரைக்கப்பட்ட காசற்ற நலன்களின் பெறுமதி ஒவ்வொரு ஊழியரினதும் உழைக்கும் போதே செலுத்தும் வரிக் கணிப்பீட்டின் போது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.**

உழைக்கும் போதே செலுத்தும் வரி (PAYE) கணக்கீட்டிற்காக குடியிருப்புகள் மற்றும் தனியார் பயன்பாட்டிற்கான மோட்டார் வாகனம் போன்ற பணமற்ற சலுகைகளை கருத்திலெடுப்பதற்காக 2018/GM/39/FM ஆம் இலக்க 526 ஆவது கணக்கு சுற்றறிக்கையின் மூலம் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. 2018 ஆம் ஆண்டில் புதிய உள்நாட்டு வருவாய் சட்டத்தை அமலப்படுத்துவதன் மூலம் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதால் இ.மி.ச இன் அனைத்து பிரிவுகளும் இதற்கு இணங்கிச் செயற்படுவதற்கு நியாயமான காலம் எடுக்கும்.

**(உ) 1998 மார்ச் 08 ஆம் திகதிய 130 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் 10 சதவீதம் முதல் 14 சதவீதம் வரையான வட்டி வீதத்தில் வாகனக் கடன்களை வழங்குவதற்குப் பதிலாக இ.மி.ச. 4.2 சதவீத வட்டி வீதத்தில் அத்தகைய கடன்களை வழங்கியிருந்தது.**

1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை சட்டத்தின்படி,சபையின் அதிகாரங்கள் 12 ஆம் பிரிவின் கீழ் பட்டியலிடப்பட்டுள்ளன.

*பிரிவு 12 (எம்): சபையின் விவகாரங்களின் நிர்வாகம் தொடர்பாக விதிகளை உருவாக்குதல்*

*பிரிவு 12(என்): சபையின் கருத்தில் அதன் வியாபாரத்தை முறையாக நடத்துவதற்கு வசதியளிப்பதற்குத் தேவையான ஏனைய எல்லாவற்றையும் செய்வதற்கு*

அதன்படி, குறிப்பிடப்பட்டுள்ள கண்டுபிடிப்புகள் சபையினால் அதன் ஊழியர்களுக்கு நிறுவனத்தின் மேம்பாட்டிற்காக பணியாற்றுவதற்கான மன உறுதியை உயர்த்துவதற்காக வழங்கப்படும் நன்மைகளுடன் தொடர்புடையவை. மேலும், சபையின் விவகாரங்களின் நிர்வாகத்தைப் பொறுத்தவரை விதிகளை உருவாக்குவதற்கான அதிகாரத்தை இந்தச் சட்டம் வழங்குகிறது.

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் (தொடர்ச்சி)

- **எழுத்துருவிலான சட்டம் அல்லது சபையின் ஆளுகைச் சபையினால் வெளியிடப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட ஏற்பாடுகளிற்கு இணக்கமற்ற விதத்தில் செற்பட்டிருந்தமை**

**(அ) 2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை அதிகாரச்சட்டத்தின் 28(3) ஆம் பிரிவு**

**சட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறு நுகர்வோர் வைப்புகளிற்கான வட்டியை இ.மி.ச. செலுத்தியிருக்காமை.**

1. 2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை அதிகாரச்சட்டத்தின் 3(ஈ) ஆம் பிரிவின் பிரகாரம், மின்சார கட்டணங்கள் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவினால் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். இருப்பினும், தற்போதைய மின்சார கட்டணமானது இ.மி.ச. இன் வணிகத்தை மேற்கொள்வதற்காக போதியளவு காசினை உருவாக்குவதில்லை. சட்டத்திலுள்ள தொடர்புடைய விதிகள் வருமாறு

*3(1) இலங்கையிலுள்ள மின்சாரத் தொழிலிற்கான சிக்கன, தொழில்நுட்ப மற்றும் பாதுகாப்பு பிரமாணங்கள் என்ற வகையில் செயற்படுதல் ஆணைக்குவின் தொழிற்பாடாகுமென்பதுடன்,*

*(ஈ) பாவனையாளர்களிற்கு சாத்தியமான உச்ச சிக்கன மற்றும் வினைத்திறனான சேவை வழங்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக, அனுமதிப்பத்திர தாரர்கள் மற்றும் ஏனைய மின்சார பொறுப்பாளர்களால் விதிக்கப்படுகின்ற தீர்வைகள் மற்றும் ஏனைய கட்டணங்களை ஒழுங்கமைத்தல்.*

*30(1) இப்பிரிவினை பின்வருவனவற்றிற்கு பிரயோகித்தல் வேண்டும்.*

*(அ) மின்சார பரிமாற்றம் மற்றும் மொத்த விற்பனைக்காக பரிமாற்றல் அனுமதிப்பத்திர தாரர்களால் விதிக்கப்பட்ட தீர்வைகள் அல்லது கட்டணங்கள் (இதனகத்துப் பின்னர் "பரிமாற்றல் மற்றும் மொத்த விற்பனைத் தீர்வைகள் என அழைக்கப்படும்) மற்றும்*

*(ஆ) மின்சார விநியோகம் மற்றும் வழங்களிற்காக விநியோக அனுமதிப்பத்திர தாரர்களால் விதிக்கப்பட்ட தீர்வைகள் அல்லது கட்டணங்கள் (இதனகத்துப் பின்னர் "விநியோக மற்றும் வழங்கல் தீர்வைகள்" என அழைக்கப்படும்) மற்றும்*

*சூழ்நிலைக்கேற்ப பரிமாற்றல் மற்றும் மொத்த விற்பனைத் தீர்வைகளும் விநியோக மற்றும் வழங்கல் தீர்வைகளும் தொடர்புடைய அனுமதிப்பத்திரங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளிற்கு அமைவாக இருத்தல் வேண்டும்.*

*(அ) அது ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கிரயத்தை வெளிக்காட்டும் முறைக்கு அமைவாக குறித்த அனுமதிப்பத்திர தாரர்களால் ஏற்படுத்தப்பட்டதாக:*

*(ஆ) வினைத்திறனான அடிப்படையொன்றின் மீது அதற்குரிய அனுமதிப்பத்திரத்தின் மூலம் அதிகாரமளிக்கப்பட்ட செயற்பாடுகளை மேற்கொள்கையில் உறப்பட்ட நியாயமான அனைத்துக் கிரயங்களையும் அறவிடுவதற்கு தொடர்புடைய அனுமதிப்பத்திர தாரரை அனுமதிப்பதாக:*

*(இ) பிரிவு 5 இன் கீழ் அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கை வழிகாட்டலிற்கு அமைவாக ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவையாக காணப்படுகின்ற: மற்றும்*

*(ஈ) பொதுமக்களை அறிவுறுத்துவதற்காக சபையால் தேவைப்படுத்தப்பட்டவாறு உரிய முறையில் வெளியிடப்பட்டும், இருத்தல் வேண்டும்.*

2. 2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை அதிகாரச்சட்டத்தின் 28(3) ஆம் பிரிவின் பிரகாரம், ஒவ்வொரு விநியோக அனுமதிப்பத்திர தாரரும் (DL) அவற்றினது பாவனையாளர்களின் பாதுகாப்பு வைப்புக்களிற்காக வட்டியினை செலுத்துதல் வேண்டும். அதிகாரச்சட்டத்தில் இக்கூற்று பின்வருமாறு காணப்படுகின்றது.

   பிரிவு 28(3) -"இந்தப் பிரிவிற்கு அமைவாக பிணைப்பணம் என்ற வகையில் விநியோக அனுமதிப்பத்திர தாரருக்கு வழங்கப்பட்டு அனுமதிப்பத்திர தாரரின் கைவசம் வைத்திருக்கப்படும் எந்தவொரு பணத் தொகையுமாகும். ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் அனுமதிப்பத்திர தாரரால் அவ்வப்போது திர்மானிக்கப்படுகின்ற அவ்வாறான வீதமொன்றில் அந்த பிணைப்பணம் மீது அனுமதிப்பத்திர தாரரின் கைவசம் வைத்திருக்கப்படுகின்ற அவ்வாறான காலப்பகுதிக்கு வட்டியினை செலுத்துதல் வேண்டும்".

3. தற்போது இ.மி.ச. அதனது வணிகத்தை நடாத்திச் செல்வதற்கு போதியளவு பணத்தை சேகரிக்காமையின் விளைவாக அதனது பாவனையாளர்களின் பிணைவைப்புக்களை தொழிற்படு மூலதனத் தேவையின் ஒரு பகுதியாக பயன்படுத்துவதுடன எஞ்சிய தொழிற்படு மூலதனத் தேவையினை மேலதிகப்பற்றுக்கள், குறுங்காலக் கடன்கள் என்ற வகையில் வங்கி வங்கிகளிடமிருந்து பெற்றுக்கொள்கின்றது.

4. இ.மி.ச. இனால் அதனது தொழிற்படு மூலதனத்தின் ஒரு பகுதியாக அதனது பாவனையாளர்களின் பிணை வைப்புக்களை பயன்படுத்துவதன் மூலம், வங்கி மேலதிகப்பற்றுக்குச் செலுத்த வேண்டிய வட்டியினைச் சேமித்து அதனது பாவனையாளர்களிற்குப் பகிரப்படுகின்றமையால் கட்டணத்தை குறைக்கக்கூடியதாக உள்ளது. அதாவது, 2019 ஆம் ஆண்டில் இ.மி.ச அதனது அனைத்து பாவனையாளர்கள் மத்தியிலும் ரூபா 1,592 மில்லியன் தொகையினை பகிர்ந்திருந்தது. இந்த பிணைவைப்பினை வங்கியொன்றில் வைப்புச் செய்திருப்பின் வட்டியினை உழைத்திருக்க முடியும் என்பதாக வரைபு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த பெறுமதியே இதுவாகும்.

5. இந்த பிரிவின் பிரகாரம் பிணை வைப்புக்கள் மீது DL வட்டியினை செலுத்தியிருப்பின் அது னுடு இற்கான நிதிச் சுமையாக சேர்ந்து தொழிலிற்கு மேலதிகக் கிரயத்தை தோற்றுவித்திருக்கும்.

6. ஆகையால், 2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை அதிகாரச்சட்டத்தின் 28(3) ஆம் பிரிவை முழுமையாக நீக்குவதற்கு நாம் அமைச்சிற்கு பரிந்துரைத்துள்ளதுடன் இது தொடர்பில் மேலதிக நடவடிக்கையினை எடுக்குமாறு அமைச்சினை கோரியுள்ளோம்.

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் (தொடர்ச்சி)

**(ஆ) 2013 இன் 31 ஆம் இலக்க இலங்கை மின்சார (திருத்திய) சட்டத்தின் 43 ஆம் பிரிவின் 4 இ (ii) சட்டத்திலுள்ள தேவைப்படுகளின் படி, கேள்வி கோரல் நடைமுறையினைப் பிரயோகிக்காது 2016 ஏப்ரல் முதல் 2019 திசெம்பர் வரையான காலப்பகுதியில் இ.மி.ச. (ரூபா 59.4 பில்லியன் பெறுமதியான 2,165.51 GWh) அவசர மின்வலுக் கொள்வனவினை செய்திருந்தது. ே மலும் அந்த மின்வலு ஆலைகள் ஒழுங்கமைப்பாளரிடமிருந்து பிறப்பாக்க அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளாது செயற்பட்டிருந்தன.**

இ.மி.ச. 2016 ஏப்ரல் முதல் 2019 டிசம்பர் வரையிலான காலகட்டத்தில் அனல் மின் உற்பத்தியின் ஆலைகளை பின்வரும் இரண்டு வகைகளன் கீழ் சேர்த்துக் கொண்டது.

1. சர்வதேச போட்டி கேள்வி மனு (ஐசிபி) செயல் முறையை பின்பற்றி குறுகியகால அடிப்படையில் குறைநிரப்பு மின்வலுவை கொள்வனவு செய்தல்.
2. தற்போதைய ஐபிபி அனல் மின் ஆலைகளின் மின் கொள்வனவு உடன்படிக்கைகளின் (பிபிஏ) காலத்தை நீடித்தல்.

மேற்குறிப்பிட்ட காலகட்டத்தில் கொள்வனவு செய்யப்பட்ட மொத்த அலகுகள் வருமாறு.

| ஆண்டு | கொள்வனவு செய்த அலகுகள் (GWh) | மொத்த கிரயம் (ரூபா பில்.) |
|---|---|---|
| 2016 | 442.26 | 11.93 |
| 2017 | 859.43 | 23.57 |
| 2018 | 474.79 | 13.85 |
| 2019 | 734.99 | 22.20 |
| **மொத்தம்** | **2,511.47** | **71.56** |

1. குறுகிய கால அடிப்படையில் குறைநிரப்பு மின்வலுக் கொள்வனவு.

   இந்த வகையின் கீழ், பின்வரும் சர்வதேச போட்டி கேள்விமனு (ஐசிபி) நடைமுறைகளைப் பின்பற்றி கேள்வி கோரல்கள் மேற்கொள்ளப்பட்டன.

i. கேள்விகோரல் இல.(EPT)/EmPwr/2016/02 (குறுகியகால அடிப்படையில் 60 மெகாவாட் மின்சாரம் வழங்கல்) சேர்க்கப்பட்ட இயலளவு - ஆறு மாதங்களுக்கு 60 மெகாவாட்

ii. கேள்விகோரல் இல. DGM(EPT)/EmPwr/2017/01 (குறுகியகால அடிப்படையில் இ.மி.ச. இற்கு குறைநிரப்பு மின்சக்தி வழங்கல்) சேர்க்கப்பட்ட இயலளவு - ஆறு மாதங்களுக்கு 56 மெகாவாட்

iii. கேள்விகோரல் இல. DGM(EPT)/EmPwr/2019/01 (குறுகியகால அடிப்படையில் மொத்தமாக 100 மெகாவாட் குறைநிரப்பு மின்சாரம் வழங்கல்) சேர்க்கப்பட்ட இயலளவு - ஆறு மாதங்களுக்கு 100 மெகாவாட்

இந்த கொள்வனவுகள் அனைத்தும் 2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார (திருத்திய சட்டத்தின் பிரிவு 43 இற்கு இணங்க மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மீளாய்வுக்குரிய காலகட்டத்தில் கொள்வனவு செய்த மொத்த அலகுகள் மற்றும் கிரயங்கள் பின்வருமாறு.

| ஆண்டு | கொள்வனவு செய்த அலகுகள் (GWh) | மொத்த கிரயம் (ரூபா பில்.) |
|---|---|---|
| 2016 | - | - |
| 2017 | 167.03 | 5.39 |
| 2018 | 36.80 | 1.96 |
| 2019 | 142.13 | 5.06 |
| **மொத்தம்** | **345.96** | **12.41** |

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் (தொடர்ச்சி)

2. காலாவதியான ஐபிபி அனல்மின் நிலையங்களின் மின்கொள்வனவு ஒப்பந்தங்களின் (பிபிஏ) காலநீடிப்பு.

இந்த வகையின் கீழ், காலாவதியான ஐபிபி அனல்மின் நிலையங்களின் மின் கொள்வனவு ஒப்பந்தங்கள் (பிபிஏ) பின்வருமாறு நீடிக்கப்பட்டுள்ளன.

முன்னைய காலாவதியான மின் கொள்வனவு ஒப்பந்தங்களின் நீடிப்பாக 2009 இன் 09 ஆம் இலக்க இலங்கை மின்சாரம் (திருத்திய) சட்டத்தின் பிரிவு 43 இலிருந்து எந்தவொரு சட்ட ரீதியான தடையையும் நாங்கள் அடையாளம் காணவில்லை.

i. ஏஸ்பவர் எம்பிலிபிட்டி (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தின் 100 மெகாவாட் மின் உற்பத்தி நிலையம்.
   - அ. 2016-04-06 முதல் ஒரு வருடம்
   - ஆ. 2017-04-06 முதல் ஒரு வருடம்
   - இ. 2018-04-06 முதல் மூன்று ஆண்டுகள்

ii. ஏஸ் மின் உற்பத்தி மாத்தறை (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தின் 20 மெகாவாட் மின் உற்பத்தி நிலையம்.
   - அ. 2017-03-25 முதல் ஒரு வருடம்
   - ஆ. 2019-04-08 முதல் இரண்டு ஆண்டுகள்

iii. ஆசியா பவர் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தின் 50 மெகாவாட் மின் உற்பத்தி நிலையம்.
   - அ. 2019.04.12 முதல் இரண்டு ஆண்டுகள்

ஏஸ்பவர் எம்பிலிபிட்டியா ஆலை தொடர்பாக மதிப்பாய்வு செய்யப்பட்ட காலகட்டத்தில் வாங்கிய மொத்த அலகுகள் மற்றும் கிரயங்கள் பின்வருமாறு.

| ஆண்டு | கொள்வனவு செய்த அலகுகள் (GWh) | மொத்த கிரயம் (ரூபா பில்.) |
|---|---|---|
| 2016 | 358.74 | 8.48 |
| 2017 | 513.34 | 11.84 |
| 2018 | 362.84 | 9.16 |
| 2019 | 460.92 | 12.70 |
| **மொத்தம்** | **1,695.85** | **42.18** |

ஏஸ்பவர் மின் உற்பத்தி மாத்தறை ஆலை தொடர்பாக மதிப்பாய்வு செய்யப்பட்ட காலகட்டத்தில் கொள்வனவு செய்த மொத்த அலகுகள் மற்றும் கிரயங்கள் பின்வருமாறு.

| ஆண்டு | கொள்வனவு செய்த அலகுகள் (GWh) | மொத்த கிரயம் (ரூபா பில்.) |
|---|---|---|
| 2016 | - | - |
| 2017 | 62.29 | 1.64 |
| 2018 | 19.55 | 0.51 |
| 2019 | 53.20 | 1.74 |
| **மொத்தம்** | **135.05** | **3.89** |

ஆசிய மின் உற்பத்தி ஆலை தொடர்பாக மதிப்பாய்வுக் காலத்தில் கொள்வனவு செய்த மொத்த அலகுகள் மற்றும் கிரயங்கள் பின்வருமாறு.

| ஆண்டு | கொள்வனவு செய்த அலகுகள் (GWh) | மொத்த கிரயம் (ரூபா பில்.) |
|---|---|---|
| 2016 | 83.52 | 3.45 |
| 2017 | 116.76 | 4.69 |
| 2018 | 55.59 | 2.22 |
| 2019 | 78.73 | 2.70 |
| **மொத்தம்** | **334.61** | **13.07** |

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் (தொடர்ச்சி)

**(இ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் II ஆம் பகுதியின் 46 ஆம் பிரிவு மற்றும் 11 (அ) மற்றும் (ஆ) பிரிவுகள் - சீஈபி 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 8,996 மில்லியன் தொகையினை மாத்திரம் காப்புறுதி பாதுகாப்பு நிதியத்தில் முதலீடு செய்திருந்தது.**

இ.மி.ச. பல ஆண்டுகளாக மோசமான திரவத்தன்மை சூழ்நிலையை சந்தித்துள்ளமையால் காப்பீட்டு முதலீட்டு எஸ்க்ரோ கணக்கில் முதலீடு செய்யாததால் இந்த வேறுபாடு முக்கியமாக எழுந்துள்ளது. இருப்பினும், இ.மி.ச. இன் நிதி நிலைமை மற்றும் திரவ நிலைமை மேம்படுத்தப்பட்டவுடன் காப்பீட்டு நிதிய முதலீட்டு கணக்கில் மொத்த நிலையான சொத்துகளில் 1% க்கு சமமான முதலீட்டை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்

**(ஈ) பொது முயற்சிகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட PED 12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 9.4 ஆம் பிரிவு**

ஊழியர்களை விடுவிக்குமாறு வரிசை அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைகளை இ.மி.ச. இற்கு நிராகரிக்க முடியாதுள்ளமையால், ஏற்பட்டுள்ள செலவினத்தை இ.மி.ச. இனால் கட்டுப்படுத்த முடியாதுள்ளது

**3. ஏனைய கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**(அ) 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 21இ080 மல்லியன் வியாபாரக் கடன்பட்டோர் மீதியில் சாதாரண மற்றும் மொத்த வழங்கல்கள் இரண்டுடனும் தொடர்புடைய ரூபா 3,322.2 மில்லியன் மீதி ஒரு ஆண்டிற்கு மேலாக நிலுவையாக இருந்ததுடன் அதில் ரூபா 1,840 மில்லியன் தொகை ஐந்து ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்படாதிருந்தது.**

மேலே உள்ள நிலுவைத் தொகையில் ரூபா 2,649,155,825 என்பது முடிவாக்கப்பட்ட கடன்பட்டோரை பிரதிநிதித்துவம் செய்வதுடன் அவற்றிற்கு சட்டரீதியான அல்லது பதிவழித்தல் நடைமுறைகள் உருவாக்கப்படுதல் வேண்டும். ஆனால், அதற்கு சிறிது காலம் எடுக்கும். மீதமுள்ள நிலுவையில் ரூபா 1,051 மில்லியன் சர்ச்சைக்குரிய விடயங்களை பிரதிநிதித்துவப்படுத்துவதுடன் இது தொடர்பில் பரிந்துரைகளைப் பெறுவதற்கு குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. மற்றொரு தொகையானரூ. 30 மில்லியனை பதிவழிப்பதற்கு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதன்படி, நிலுவையில் உள்ள கடன்பட்டோர் மீதிகளை கண்காணிக்கவும் அறவிடுவதற்கும் இ.மி.ச. இடம் பொருத்தமான முறைமைகள் காணப்படுகின்றன.

**(ஆ) ரூபா 2,635,007,475 கூட்டுத்தொகையான பின்வரும் சில்லறைக் கடன்பட்டோர் மீதிகள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஐந்து ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்படாதிருந்தன.**

அறவிடப்படாதுள்ள சில்லறைக் கடன்பட்டோர் மீதிகள்

| கடன்பட்டோர் பெயர் | தொகை) ரூபா | விபரம் |
|---|---|---|
| பொதுத் திறைசேரி | 225,000,000 | இத்தொகை திறைசேரிக்குச் செலுத்தப்பட வேண்டிய உப கடன்களின் மீள்கொடுப்பனவிற்கு எதிராக எதிரீடு செய்யப்படுதல் வேண்டுமென்பதனால், நிதி அமைச்சின் திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்டிருந்த பணிப்புரைக்கு அமைய 2015 முதல் இ.மி.ச. இன் புத்தகங்களிலிருந்து பெறப்பட வேண்டிய ரூபா 225 மில்லியன் தொகையினை அகற்றுவதற்கு முடியாதுள்ளது. |
| அரசாங்க நிறுவனங்கள் - பாரந்தூக்கி, காற்றுச் சீராக்கிகள் மற்றும் மின்வலு பிறப்பாக்கிகள் | 120,653,322 | மின் பிறப்பாக்கிகளை வழங்கியமைக்காக சனாதிபதி மாளிகையில் இருந்து பெறப்பட வேண்டிய வருவாயின் பெறுமதி இதுவாகும். திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் (TOD) மீளளிக்கப்பட வேண்டிய திறைசேரிக் கடன்களிற்கு எதிராக இத்தொகையினை சாட்டுதல் செய்யுமாறு வுழுனஇ.மி.ச. இனை கோரியுள்ளது. அதற்கமைய, இதனை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. |
| மூலதனமாக்கப்படாத முடிவுறா வேலைகள் | 8,601,341 | அரசாங்க பொருத்துதல் வேலைகளிற்காக பெறவேண்டிய தொகையினை இது பிரதிநிதித்துவம் செய்வதுடன் இந்த நீண்டகால நிலுவையினை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| வூட் குறுாப் காஸ் ரேபைன் லிமிடட | 8,264,352 | மேற்கொண்டு எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. |
| மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சு | 6,142,277 | மேற்கொண்டு எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. |
| இலங்கை நிலைபெறுதகு எரிசக்தி அதிகாரசபை | 897,025,999 | நிலைபெறுதகு எரிசக்தி அதிகாரசபையிடமிருந்து பெறத்தக்க ரூபா 897,025,999 தொகையை பதிவழிப்பதற்கு எஏ.ஃப்எம் (பரிமாற்றல்) ஒரு சபை விஞ்ஞாபனத்தை உருவாக்கியுள்ளார். மேலும், இந்த பிரச்சினைக்காக ஒரு விசாரணைக் குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது. (இணைப்பு 09) |
| ஏசஎஸ் கெலனிதிஸ்ஸ (பிறைவேட்) லிமிட்டட் | 1,368,964,445 | மேற்கொண்டு எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. |
| நொதர்ன் பவர் (பிரைவட்) லிமிடட் | 358,739 | மேற்கொண்டு எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. |

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் (தொடர்ச்சி)

**(இ) நிலக்கரி பற்றாக்குறை தொடர்பில் ஐந்து வருடங்களுக்கு மேலாக லங்கா கோல் கம்பனியிடமிருந்து அறவிடப்படாதுள்ள ரூபா 714,965,435 நீண்டகால நிலுவை மீதியினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.**

இந்த மீதியானதுதூரியன் ஐயன் என்ட் ஸ்ரீல் கம்பனியின் ரூபா 478,179,795.00 மற்றும் லிப்ர்டி கொமோடிரீஸ் லிமிடட் இன் ரூபா 236,785,639.43 தொகைகளை உள்ளடக்குகின்றது. தூரியன் ஐயன் என்ட் ஸ்ரீல் கம்பனியின் நிலுவை தொடர்பில் ஒரு அமைச்சரவைக் குழு நியமிக்கப்பட்டு இறுதி அறிக்கை துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

லிப்ர்டி கொமோடிரீஸ் லிமிடட் விடயத்தில் லங்கா கோல் கம்பனி ஒரு நடுவர்தீர்ப்பு செயல்முறையைத் தொடங்கியுள்ளது. லங்கா கோல் கம்பனியினால் லிப்ர்டி கொமோடிரீஸ் லிமிடட் நிறுவனத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட பின்னர் இந்த மீதி நீக்கப்படும்.

**(ஈ) பின்வரும் ரூபா 4,947,283,160 கூட்டுத்தொகையான கடன்கொடுநர் மீதிகள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீண்டகாலமாக தீர்க்கப்படாதிருந்தன.**

ரூபா 4,947,283,160 தொகையிலுள்ள ரூபா 1,065,828 ஆனது 2017/2018 நிலக்கரி பருவ காலத்திற்காக லங்கா கோல் கம்பனிக்குசெலுத்த வேண்டிய நட்டஈடாவதுடன் 2020 ஆம் ஆண்டில் செலுத்த வேண்டிய தொகையை தீர்ப்பதற்கு லக்விஜய மின்வலு ஆலையினால்அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

சீனா மெஷினரி இன்ஜினியரிங் கார்ப்பரேஷனுக்கு (CMEC) செலுத்த வேண்டிய ரூபா 3,596,324,467 மேற்குறித்த நிலுவையில் உள்ளடங்கியுள்ளது. CMEC இற்கான 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டிற்குரிய நிலுவைத் தொகை தீர்க்கப்பட்டது. 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்கான கொடுப்பனவுகள் நிலுவையில் உள்ளன. தற்போதைய மோசமான நிதி நிலைமை காரணமாக இ.மி.ச. மாதத்திற்கு 2 மில்லியன் அமெரிக்க டாலர்களை மட்டுமே விடுவிக்கின்றது.

2013/2014 க்கான "கணக்கீட்டு இலாபம்" இன் அடிப்படையில் பொறுப்பு நிச்சயிக்கப்பட்டிருந்தமையால் இ.மி.ச. இனால் ஏய்ப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா 1,270,766,413 பிடித்துவைக்கப்பட்ட செலுத்த வேண்டிய பங்கிலாப வரி தொடர்பில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் கலந்துரையாடப்பட்டது. இந்த விவகாரம் இன்னும் தீர்க்கப்படாததால், இ.மி.ச. தலைவரின் FM (AFM (HQ) / DFM (வரி) /பிடித்துவைத்த பங்கிலாப வரி ஆம் இலக்க 2020.07.08 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் இந்த சிக்கலைத் தீர்ப்பதற்கு பொதுத் திறைசேரியின் செயலாளரின் தலையீடு கோரப்பட்டுள்ளது.

ரூபா 10,928,756 என்பது வட மாகாணத்தின் டிஜிஎம் அலுவலக வளாகத்திற்கு செலுத்த வேண்டிய இறுதிக் கட்டணமாகும். அமைச்சரவை வீதக் குழுவின் ஒப்புதல் கிடைக்காததால் இந்த கட்டணம் நிலுவையில் உள்ளது.

ரூபா 4,947,283,160 நிலுவையிலுள்ள ரூபா 68,197,696 என்பது புத்தளம் நிலக்கரி மின்வலுசெயற்திட்டத்தின் அட்டுறு செலவாகும். நடப்பு ஆண்டில் கணக்கு புத்தகங்களில் இந்த தொகையை சீராக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**(உ) சொத்து முகாமைத்துவப் பிரிவின் ஏனைய பெறவேண்டியவைகளின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 151,421,219 தொகை ஐந்து ஆண்டுகளிற்கும் மேலாக அறவிடப்பட்டிருக்கவில்லை. அதில் ரூபா 142இ477இ285 தொகை அரசாங்க நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட வேண்டுமென்பதுடன் ஆரம்பத்திலிருந்தே இத்தொகைகளை அறிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.**

இந்த வேலைகள் அனைத்தும் சூழ்நிலைகளின் ஈர்ப்பைப் பொறுத்து அமைச்சு அல்லது இ.மி.ச. இன் உயர் அதிகாரிகள் வழங்கிய அறிவுறுத்தல்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன. நிலுவைத் தொகையை கோரி சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு ஏற்கனவே நினைவூட்டல் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதுடன் அந்தந்த பிரிவுகளின் தலைவர்கள் மற்றும் கணக்காளர் (டபிள்யூ அண்ட் ஏஎஸ்) நிலுவைத் தொகைகளை அறிவிடுவதற்கு பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளனர். மீதமுள்ளவை மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சு மற்றும் அரச மருத்துவமனைகளிலிருந்து பெற வேண்டியவையாகும்.

தற்போது,வேலைகளை மேற்கொள்வதற்கு முன்னர் மேலதிகப் பொது முகாமையாளர்(சொத்து முகாமைத்துவம்) வழங்கிய வழிகாட்டுதலின் படி இ.மி.ச. ஒரு கட்டுப்படுத்தப்பட்ட நடைமுறையைப் பின்பற்றுவதுடன் நிலுவையில் உள்ள கொடுப்பனவுகள் வழக்கமான அடிப்படையில் கண்காணிக்கப்படுகின்றது.

**(ஊ) பரிமாற்றல் பிரிவிலுள்ள வியாபாரக் கடன்கொடுத்தோராகக் காட்டப்பட்டுள்ள ரூபா 3,371,599,434 தொகைஒரு ஆண்டுக்கும் மேலாக தீர்க்கப்படாமலுள்ளது.**

பதிவேடுகளின் படி ரூபா 3.3 பில்லியன் தொகையில் ரூபா 3.1 பில்லியன் சுயாதீன மின் கொள்வனவு தொடர்பான சர்ச்சைக்குரிய விலைப்பட்டியல் தொகைகளை குறிக்கின்றது. பொருத்தமான கணக்கீட்டுப் பரிகாரத்தை மதிப்பீடு செய்வதற்கும் கண்டுபிடிப்பதற்கும் இந்த விலைப்பட்டியல் ஆய்வு செய்யப்படுகின்றது.

**(எ) 2019 ஒக்தோபர் 05 இல் உள்ளவாறு ரூபா 95இ211இ376 பெறுமதியுடைய 4,952.85 மெற்றிக் தொன் நிலக்கரி இருப்பு பற்றாக்குறையாக இருக்கின்றமை இனங்காணப்பட்டுள்ள போதிலும், பொருள் மெய்மையாய்வுக் குழுவொன்றினால் பௌதீக இருப்பு எடுத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இருப்பினும்,ரூபா 456,197,162 பெறுமதியுடைய 28,006.66 மெற்றிக் தொன் மிகை நிலக்கரி இருப்பு 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வருமானக் கூற்றிற்கு சீராக்கப்பட்டுள்ளது. ஆகையால், 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலக்கரி இருப்பு மீதியின் சரியான தன்மையினை மெய்மையாய்வு செய்ய முடிந்திருக்கவில்லை.**

தற்போது நிலக்கரி மெய்மையாய்வு நடைமுறை பரிசீலிக்கப்பட்டு வருகின்றது. மேலே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விடயங்களும் 2020 இற்கான பௌதீக மெய்மையாய்வின் போது கருத்திலெடுக்கப்படும்.

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் (தொடர்ச்சி)

**(ஏ) சீஈபீயானது பல வருடங்களாக மின்சாரத்தை எல்ஈசீஓ (LECO) இற்கு விற்பனை செய்வதுடன் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடமிருந்து எரிபொருளை கொள்வனவு செய்கின்ற போதிலும் இவ் இரண்டு நிறுவனங்களிற்கிடையே சுமுகமான செயற்பாடுகளை உறுதிப்படுத்துவதற்காக இவ் இரண்டு தரப்பினர்களுடன் கைச்சாத்திடப்பட்ட விற்பனை மற்றும் கொள்வனவு உடன்படிக்கைகள் காணப்படவில்லை.**

சட்டத் தீர்வுகளுடன் இரண்டு தரப்பினர்களினதும் உயர்மட்ட உத்தியோகத்தர்களின் பங்குபற்றுதலுடன் இ.மி.ச. இற்கும் லெகோ இற்கும் இடையே மின்சார விற்பனை உடன்படிக்கையினைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இருப்பினும், இதுவரையில் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் உடன்படிக்கை செய்ய முடியவில்லை. இது தொடர்பாக 2018 ஜூலை 24 அன்று வெளியிடப்பட்ட கடிதத்தின் மூலம் பி.யு.சி.எஸ்.எல் இடமிருந்து சில நடவடிக்கைகளை லெகோ கோரியுள்ளது.

இ.மி.ச. மற்றும் சீபீசீ இற்கு இடையில் எரிபொருள் வழங்கல் உடன்படிக்கையை (FSA) ஆய்வு செய்து வகுப்பதற்கு ஒரு குழுவை இ.மி.ச. இன் உயர் நிர்வாகம் நியமித்துள்ளது. அதன்படி,குளுயு இனை பூரணப்படுத்துவதற்கு சீபீசீ மற்றும் இ.மி.ச. இற்கு இடையே பல பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டுள்ளன. இறுதியாக வரைவு செய்யப்பட்ட FSA இ.மி.ச. இன் பொது முகாமையாளர் ஊடாக அதன் தலைவருக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**(ஐ) சீஈபீயின் வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக வழங்கப்பட்ட நிதிகள் காலரீதியாக பயன்படுத்தப்படாததன் காரணமாக வழங்கப்பட்ட கடன்களிலிருந்து 2019 ஆம் ஆண்டில் கடனளிக்கும் முகவரால் கடப்பாட்டுக் கட்டணங்களாக ரூபா 134,447,792 தொகை கழிக்கப்பட்டிருந்தது.**

கடப்பாட்டுக் கட்டணங்கள் அனைத்துச் செயற்திட்டங்களிற்கும் பொதுவானவையாக காணப்படுவதுடன், கடன் உடன்படிக்கைகளிலுள்ள இறுக்கமான நிபந்தனைகள் காரணமாக செயற்திட்டம் பட்டியலிடப்பட்டுள்ளவாறு காணப்பட்ட போதிலும் அதனை தவிர்க்க முடியாதுள்ளது.

**(ஒ) நீண்ட கால மின்பிறப்பாக்க விரிவாக்கத் திட்டம் 2018 - 2037 இன் படி, 370 ஆறு அனல் மின்வலு மற்றும் 287 ஆறு புதுப்பிக்கத்தக்க எரிசக்தி இனை உள்ளடக்கிய 657 ஆறு புதிய மின்பிறப்பாக்கம் தேசிய மின்சார முறைமைக்குச் சேர்க்கப்படுதல் வேண்டும்.**

கீழேகுறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் காரணமாக முன்மொழியப்பட்டிருந்த மின் உற்பத்தி நிலையங்கள் தாமதமாகிவிட்டன.

- மேற்கு பிராந்தியஎல்.என்.ஜி ஒருங்கிணைந்த சுழற்சி மின் நிலையம்.

  முதலில், நீதிமன்ற வழக்கு காரணமாக தாமதமானது.

  2020 பெப்ரவரியில் அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டதுடன்டுழுஐ ஒன்றை வழங்குவதற்கும் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் லக்தனவி லிமிடெட் உடன் மின்வலு கொள்வனவு உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கும் இ.மி.ச.இற்கு அனுமதி வழங்கப்பட்டது. திட்டக் குழு, லக்தனவி லிமிடெட் உடன் கலந்துரையாடி அதன் அறிக்கையை மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சுக்கும்ʼ சி.ஏ.என்.சி. இற்கும் சமர்ப்பித்தது. இந்த ஆவணம் அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட சிறப்புக் குழுவால் மீளாய்வு செய்யப்பட்டு, குழுவின் அறிக்கை மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

- எரிவாயு விசையாழிகள்

  கேள்விகோரல் மேற்கொள்ளப்பட்டது. தொழில்நுட்ப மதிப்பீட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. தொழில்நுட்ப மதிப்பீட்டு அறிக்கையை பரிசீலித்த பின்னர் நிதியைப் பாதுகாக்குமாறு SCAPC, இ.மி.ச. இனை (22.04.2020 அன்று) கேட்டுக்கொண்டதுடன் அதற்கமைய கொள்வனவு குறித்து முடிவெடுக்குமாறு கோரப்பட்டுள்ளது.

- உமா ஓயா எச்பிபி

  கட்டுமானத்தின் போது ஏற்பட்ட சிக்கல்கள் (அழுத்தம் சுரங்கப்பாதையில் நீர் நுழைதல்) மற்றும் சமூக பிரச்சினைகள் காரணமாக திட்டம் தாமதமானது. இந்த திட்டம் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் கீழ் வருகின்றது. தற்போதைய மதிப்பீடுகளின்படி, 2021 ஆம் ஆண்டில் மின் உற்பத்தி நிலையம் தொடங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

- காற்றாலை மின் நிலையங்கள்

  கேள்விகோரம் மற்றும் கேள்வி கையளித்தல் தாமதம் காரணமாக கட்டுமானம் தாமதமடைந்துள்ளது.

  மின் பற்றாக்குறையை பூர்த்தி செய்வதற்காக, கீழே விபரிக்கப்பட்டுள்ளபடி பின்வரும் மின் உற்பத்தி நிலையங்கள் குறித்துரைத்த அங்கீகாரங்களுடன் இயங்குகின்றன.

- பாரிய மின் உற்பத்தி நிலையங்கள் செயல்படுத்தப்படும் வரை உலை எண்ணெய் எரி மின் உற்பத்தி நிலையங்கள்.

  2019 ஆம் ஆண்டின் மின்சார தேவை தேவையை பூர்த்தி செய்ய குறுகிய கால குறைநிரப்புமின்வலுவாக100 மெகாவாட் இயலளவு கொள்வனவு செய்யப்பட்டது. அமைச்சரவை விஞ்ஞாபனம் இல. 19/0173/113/001 இற்கு அமைய 2019-01-14 அன்று அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டது. இந்த மின் உற்பத்தி நிலையங்கள் 2019 ஆம் ஆண்டில் ரூபா 5.06 பில்லியன் கிரயத்தில் 142.13 புறுாமின்வலுவை உற்பத்தி செய்தன.

- மின்சாரத் தேவையை பூர்த்திசெய்வதற்காக ஏசிஇ பவர் மாத்தறை, ஏசிஇ எம்பிலிபிடிய மற்றும் ஏசியா பவர் என்பவற்றுடனான காலாவதியான மின்வலு கொள்வனவு உடன்படிக்கைகள் 2021 ஆம் ஆண்டு வரை காலநீடிப்புச் செய்யப்பட்டன. அமைச்சரவை விஞ்ஞாபனம் இல. 18/0525/727/014 / TBR இன் படி 2018-03-27 அன்று அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டது. இந்த மூன்று மின் உற்பத்தி நிலையங்களும் 2019 ஆம் ஆண்டில் ரூபா 17.15 பில்லியன் கிரயத்தில் 592.86 GWh மின்வலுவை உற்பத்தி செய்தன.

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் (தொடர்ச்சி)

**(ஓ) 2017 ஏப்ரல் உதுறுவசந்தய செயற்திட்டத்தின் கீழ் 2014 இல் இனங்காணப்பட்ட ரூபா 39,551,696 இருப்பு பற்றாக்குறை தொடர்பாக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவால் விசேட புலனாய்வு மேற்கொள்ளப்பட்டிருந்தது.**

மேற்கூறிய ரூபா 39,551,696 தொகையில் முறையே இருப்புப் பற்றாக்குறைகளான - ரூபா 2,510,056 மற்றும் ரூபா 37,041,640 ஆகிய இரு மீதிகள் உள்ளடங்கியுள்ளன.

***இருப்புப் பற்றாக்குறை ரூபா 2,510,056***

டிஜிஎம் (வட மாகாணம்) அவரது 2017.05.04 ஆந் திகதிய NP/DGM/HRO/விசாரணை ஆம் இலக்க கடிதத்தின் மூலம் குழுவொன்றை நியமித்திருந்ததுடன் அக்குழுவின் அறிக்கை 2019.10.03 ஆந் திகதி டிஜிஎம் (வட மாகாணம்) இற்குச் சமர்ப்பிக்கப்பட்டது. அதற்கமைய, களஞ்சியக் காப்பாளரான திரு. ஜே.எம்.அசங்க ஜெயகொடி (பி.எ.'.ப். இலக்கம் 37432) இடமிருந்து இருப்புப் பற்றாக்குறையான ரூபா 2,510,056.88 (சபைக் கட்டணம் உள்ளடங்கலாக) இனை அறவிடுமாறு டிஜிஎம் (வட மாகாணம்) அவரது 2019.10.09 ஆந் திகதிய NP/DGM/HRO/ விசாரணை ஆம் இலக்க கடிதத்தின் மூலம் அறிவுறுத்தியிருந்தார். களஞ்சியக் காப்பாளர் 2019 அக்டோபரில் டிஜிஎம் (என்சிபி) க்கு இடமாற்றப்பட்டிருந்ததுடன் அவரிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டிய மீதி (ரூபா 2.5 மில்லியன்) ஏனைய பெறத்தக்கவைகளின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஏஜிஎம் (டிடி 1) தனது 2019-11-28 ஆந் திகதிய DGM/(C&C)/DD1/HRO/ADMN/10 ஆம் இலக்ககடிதத்தின் மூலம் இந்த தொகையை ஊழியரிடமிருந்து வசூலிக்க அறிவுறுத்தியிருந்தார். ஆயினும், திரு ஜெயகொடி அவரது 2020-01-06 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் முறையான விசாரணையை நடத்துமாறு கோரியிருந்ததுடன் அதன்படி குற்றப்பத்திரிகை வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன்,முறையான விசாரணை முடிவுக்கு அமைய 180 தவணைகளில் இதனை அறிவிடுமாறு ஏஜிஎம் (டிடி1) தனது 2010.09.03 ஆந் திகதிய AGM(DD1)/DGM/(C&C)/D1/162 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் இந்த தொகையை ஊழியரிடமிருந்து வசூலிக்க அறிவுறுத்தியிருந்தார்.

***இருப்புப் பற்றாக்குறை ரூபா 37,041,640***

பொருட்களை வழங்காது மோசடி செய்தமைக்காக 25 சதவீத சபைக் கட்டணம் உட்பட ரூபா 22,584,800 இனை ரிச்சர்ட்சன் ப்ராஜெக்ட்ஸ் (பிரைவேட்) லிமிடெட் இடமிருந்து அறவிடுவதற்காக அக்கம்பனிக்கு இ.மி.ச. இன் சட்ட உத்தியோகத்தர் கோரிக்கையொன்றை அனுப்பியுள்ளார். அத்துடன், இருப்புப் பொருட்களின் இழப்புச் சீராக்கத்திற்கான எந்தவொரு மாற்றத்தையும் இனங்காண்பதற்காக மேலதிக இருப்பு மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டது. அதன்படி,சில சீராக்கங்களை செய்தபின்னர் இழப்பின் அளவு ரூபா 8.3 மில்லியனாக குறைக்கப்பட்டுள்ளது. தற்போது,உள்ளக விசாரணை பூரணப்படுத்தப்பட்டுள்ளதுடன் அதன்படி களஞ்சியக் காப்பாளரான திரு உ.பி. உதரா குணரத்ன (பிஎ.'.ப் இல. 37475) மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், திருகோணமலை மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் B/1164/15 ஆம் இலக்க நீதிமன்ற வழக்கு நிலுவையில் உள்ளது.

**(ஔ) 2006 நவம்பர் 20 தொடக்கம் 2012 பெப்ரவரி 20 வரையான காலப்பகுதியின் போது சொத்து முகாமைத்துவப் பிரிவில் (மின்வலுப் பொறி) ஏற்பட்டிருந்த ரூபா 3,674,861 இருப்பு பற்றாக்குறைக்குப் பொறுப்பான நபர் தொடர்பாக முறையான புலனாய்வு முடிவடைந்திருந்த போதிலும் அந்த நபருக்கு எதிராக 2018 ஆகஸ்ட் 16 வரை சபையால் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.**

இருப்புப் பற்றாக்குறை விடயத்தை புலனாய்வு செய்வதற்காக மேலதிகப் பொது முகாமையாளர் (சொத்து முகாமைத்துவம்) இனால் ஒரு புதிய குழு நியமிக்கப்பட்டுள்ளதுடன் அதன் அறிக்கைக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும்.

**(ஃ) புலனாய்விற்காக நியமனம் செய்யப்பட்ட குழுவால் பரிந்துரைக்கப்பட்டவாறு நட்டம் அறவிடப்படாமல் ரூபா 3,789,893 இருப்பு பற்றாக்குறைக்குப் பொறுப்பான உத்தியோகத்தர் ஒருவர் 2011 ஒக்டோபர் 15 இல் ஓய்வு பெறுவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தார்.**

இருப்புப் பற்றாக்குறை விடயத்தை புலனாய்வு செய்வதற்காக மேலதிகப் பொது முகாமையாளர் (சொத்து முகாமைத்துவம்) இனால் ஒரு புதிய குழு நியமிக்கப்பட்டுள்ளதுடன் அதன் அறிக்கைக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும்.



**தலைவர்**
இலங்கை மின்சார சபை

# சுருக்கக் குறியீடுகள்

| | |
|---|---|
| ABB ELK | ஏசேயா புறவுண் போவேறி இலாஸ்ரிக் சேர்ஜ், லொக்ஸ்ராஸ் என்ட் கிபானா |
| ABC | வான்வழி கற்றைக் கடத்தி |
| ADB | ஆசிய அபிவிருத்தி வங்கி |
| யுகுனு | அபிவிருத்திக்கான பிரெஞ்சு முகவராண்மை |
| AGM | மேலதிகப் பொது முகாமையாளர் |
| AMC | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு |
| AMHM | சொத்து முகாமைத்துவ அனல் இயந்திரவியல் |
| AVR | தன்னியக்க மின்னழுத்த ஒழுங்குபடுத்தி |
| B&OS | வணிகம் மற்றும் செயற்பாட்டு உபாயம் |
| BCD | இருமக் குறிமுறை பதின்ம எண்முறை |
| BHPP | விரிநில நீர் மின்வலுச் செயற்றிட்டம் |
| BOI | முதலீட்டு சபை |
| BOO | சொந்தமாகக் கட்டப்பட்டு, இயக்கப்படுதல் |
| BST | தொகையளவு வழங்கல் விதிப்பனவு |
| BSTA | தொகையளவு வழங்கல் பரிமாற்றக் கணக்கு |
| C&C | வர்த்தகம் மற்றும் நிறுவனம் |
| CCPP-GT | இணைந்த சுற்று மின்வலு ஆலை - எரிவாயு விசையாழி |
| CCPP-ST | இணைந்த சுற்று மின்வலு ஆலை - நீராவி விசையாழி |
| CDM | நிருமாணம் (வடிவமைப்பும் முகாமையும்) |
| CE | பிரதம பொறியியலாளர் |
| CEB | இலங்கை மின்சார சபை |
| CECB | மத்திய பொறியியல் ஆலோசனைப் பணியகம் |
| CENEIP - P2 | தூய சக்தி மற்றும் வலையமைப்பு வினைத்திறன் மேம்பாட்டுச் செயற்றிட்டம் - பொதி 02 |
| CFL | திடமான புளொரொளிர்வு விளக்கு |
| CMDS | சுற்றறிக்கைக் கையேடுகள் மற்றும் ஆவண முறைமை |
| CMMS | கணினிமயப்படுத்தப்பட்ட பராமரிப்பு முகாமைத்துவ முறைமை |
| CMT | நிறுவன முகாமைத்துவ அணி |
| CNEEC | சீனத் தேசிய மின் உபகரணக் கூட்டுத்தாபனம் |
| COPE | பொது நிறுவனங்கள் பற்றிய குழு |
| CP | மத்திய மாகாணம் |
| CPC | இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் |
| CPD | Page 2 of 9 (Asset Management) |
| CRMS | வாடிக்கையாளர் தொடர்பு முகாமைத்துவ முறைமை |
| CS&RA | நிறுவன உபாயம் மற்றும் ஒழுங்குபடுத்தல் அலுவல்கள் |
| CS | நிறுவன உபாயம் |
| CSC | நுகர்வோர் சேவை நிலையம் |
| CT | மின்னோட்ட மின்மாற்றி |
| CW&B | குடியியல் வேலைகள் மற்றும் கட்டடங்கள் |
| DAB | ஒழுக்காற்று மேன்முறையீட்டுச் சபை |
| DAS | பரப்பப்பட்ட அன்டெனா முறைமை |
| DC | நேர் மின்னோட்டம் |
| DD1 | விநியோகப் பிரிவு 1 |
| DD2 | விநியோகப் பிரிவு 2 |
| DD3 | விநியோகப் பிரிவு 3 |
| DD4 | விநியோகப் பிரிவு 4 |
| DFM | பிரதி நிதி முகாமையாளர் |
| DGA | கரைந்த வாயுப் பகுப்பாய்வு |
| DGM | பிரதிப் பொது முகாமையாளர் |
| DL | விநியோக உரிமதாரர் |
| GOSL | இலங்கை அரசாங்கம் |
| DSE&CSM | அணைக்கட்டுப் பாதுகாப்பு, சுற்றுச்சூழல் மற்றும் குடியியல் கட்டமைப்புப் பராமரிப்பு |
| DSM | கேள்விப் பக்க முகாமைத்துவம் |
| EAS | பொறியியல் ஆலோசனைச் சேவைகள் |
| EGC | ஊழியர்கள் மனக்குறைக் குழு |
| EIA | சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீடு |
| EIRI | ஈரான் இஸ்லாமியக் குடியரசின் சக்தி |
| EMS | சக்தி முகாமைத்துவ முறைமை |
| EP | கிழக்கு மாகாணம் |
| EPC | பொறியியல், பெறுகை மற்றும் நிருமாணம் |
| ERP | நிறுவன வளத் திட்டமிடல் |
| EVCS | மின் வாகன மின்னேற்றல் நிலையங்கள் |
| FS&PD | தொழிற்பாட்டு உபாயம் மற்றும் செயன்முறை அபிவிருத்தி |
| FSUR | மிதப்புக் களஞ்சியம் மற்றும் மீள்வாயுவாக்கல் அலகு |
| GCT&DLRP | பாரிய கொழும்பு மின் பரிமாற்றம் மற்றும் விநியோக இழப்பைக் குறைக்கும் செயற்றிட்டம் |
| GIS | வாயு மின்காப்பிடப்பட்ட சொடுக்கி பல்லிணை |
| GIS | புவியியல் தகவல் முறைமை |
| GL | பிறப்பாக்கல் உரிமதாரர் |
| GOSL | இலங்கை அரசாங்கம் |
| GPD&EEIPP | பசுமை மின்வலு அபிவிருத்தி மற்றும் சக்தி வினைத்திறன் மேம்பாட்டு முதலீட்டு நிகழ்ச்சித் திட்டச் செயற்றிட்டம் |
| GPS | பூகோள நிலைப்படுத்தல் முறைமை |
| GSCS | மின்தொகுப்பு உபமின் நிலைய நிருமாணச் செயற்றிட்டம் |
| GSS | மின்தொகுப்பு உபமின் நிலையம் |
| GT | எரிவாயு விசையாழி |
| GTT | தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம் |
| HI | சுகாதாரச் சுட்டெண் |
| HR | மனித வளம் |
| HV | உயர் மின்னழுத்தம் |
| HVDC | உயர் மின்னழுத்த நேர் மின்னோட்டம் |
| HVTLP | ஹபரணை - வெயாங்கொடை மின் பரிமாற்ற மார்க்கச் செயற்றிட்டம் |
| IAEA | சர்வதேச அணு சக்தி முகவராண்மை |
| ICBC | சீனாவின் கைத்தொழில் மற்றும் வர்த்தக வங்கி |
| ICT | தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம் |
| IEC | சர்வதேச மின் தொழில்நுட்ப ஆணைக்குழு |
| IED | நுண்ணறிவு இலத்திரனியல் சாதனம் |
| IPB | மின்காப்பு முனை மின்னேகி |
| IPP | சுயாதீன மின்வலு உற்பத்தியாளர்கள் |
| IT | தகவல் தொழில்நுட்பவியல் |
| IVR | ClhL குரல் பதிவு |
| JICA | யப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மை |
| KNGTP | களனிதிஸ்ஸ புதிய எரிவாயு விசையாழிச் செயற்றிட்டம் |
| KPS | களனிதிஸ்ஸ மின்வலு நிலையம் |
| LCC | உள்நாட்டுக் கட்டுப்பாட்டுத் தனியறை |
| LECO | வரையறுக்கப்பட்ட லங்கா (தனி.) மின்சாரக் கம்பனி |
| LED | ஒளி உமிழ் இருமுனையம் |
| LKR | இலங்கை ரூபா |
| LKAS | இலங்கை கணக்கீட்டு நியமம் |
| LNG | திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு |

# சுருக்கக் குறியீடுகள் (தொடர்ச்சி)

| | |
|---|---|
| LNGPP | திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு மின்வலுச் செயற்றிட்டங்கள் |
| LOI | நோக்கக் கடிதம் |
| LRP | சுமை ஆய்வு நிகழ்ச்சித் திட்டம் |
| LRT | இலகு தொடருந்துப் போக்குவரத்து |
| LTGEP | நீண்ட கால பிறப்பாக்கல் விரிவாக்கத் திட்டம் |
| LTL | லங்கா டிரான்ஸ்போமர்ஸ் லிமிட்டெட் |
| LTTDP | நீண்ட கால மின் பரிமாற்ற அபிவிருத்தித் திட்டம் |
| LV | தாழ் மின்னழுத்தம் |
| LVPP | லக்விஜய மின்வலு ஆலை |
| MEPS | குறைந்தபட்ச சக்திச் செயலாற்றுகை நியமம் |
| MHPP | மொரகொல்ல நீர் மின்வலுச் செயற்றிட்டம் |
| MIS | முகாமைத்துவ தகவல் முறைமை |
| MIV | பிரதான நுழைவழி வால்வு |
| MLKR | மில்லியன் இலங்கை ரூபாய் |
| MLTS | நடுத்தர மட்டத் தொழில்நுட்ப பணித்தொகுதியினர் |
| MMAI&RD | மகாவலி, விவசாயம், நீர்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு |
| MMT | மில்லியன் மெட்ரிக் தொன் |
| MOIWM | நீர்பாசன மற்றும் நீர் முகாமைத்துவ அமைச்சு |
| MOPE&BD | மின்வலு, சக்தி மற்றும் வணிக அபிவிருத்தி அமைச்சு |
| MOU | புரிந்துணர்வு ஒப்பந்தம் |
| MV | இடைநிலை மின்னழுத்தம் |
| MVA | மெகா வோல்ட் அம்பியர் |
| MWPP | மன்னார் காற்றாலை மின்வலுச் செயற்றிட்டம் |
| NCP | வட மத்திய மாகாணம் |
| NCRE | மரபுசாரா மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி |
| NEA | தேசிய சுற்றுச்சூழல் சட்டம் |
| NKBP | புதிய களனிப்பாலச் செயற்றிட்டம் |
| NTB | நேஷன் ரஸ்ட் வங்கி |
| NTDND&EIP | தேசிய மின் பரிமாற்றம், விநியோக வலையமைப்பு அபிவிருத்தி மற்றும் வினைத்திறன் மேம்பாட்டுச் செயற்றிட்டம் |
| NTPC | வரையறுக்கப்பட்ட தேசிய அனல் மின்வலு கூட்டுத்தாபனம் |
| NWP | வட மேல் மாகாணம் |
| O&M | செயற்பாடு மற்றும் பராமரிப்பு |
| OEM | மூல உபகரணத் தயாரிப்பு |
| OH&S | தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு |
| OLPS | பழைய லக்ஷபான மின்வலு நிலையம் |
| OLTC | மின்னோட்டம் பாயும்போது மாற்றக்கூடிய மடை மாற்றி |
| ONAN | இயற்கை எண்ணெய் இயற்கை வாயு |
| P&D | திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி |
| PAP | செயற்றிட்டத்தால் பாதிப்புக்குள்ளாகும் நபர் |
| PD | பாதுகாப்பு அபிவிருத்தி |
| PHM | செயற்றிட்டங்கள் மற்றும் கனரக பராமரிப்பு |
| PICS | பொலிஸ் தகவல் மற்றம் தொடர்பாடல் முறைமை |
| PLC | மின் கம்பி மூலமான |
| PLTS | தொகுப்புத் தொடர் தொலைபேசி முறைமை |
| PMU | செயற்றிட்ட முகாமைத்துவ அலகு |
| POS | விற்பனை மையம் |
| PPA | மின்வலுக் கொள்வனவு உடன்படிக்கை |
| PS | மின்வலு நிலையம் |
| PS | பாதுகாப்பு முறைமை |
| PSRSP | மின்வலு முறைமையின் நம்பகத்தன்மையை வலுப்படுத்தும் செயற்றிட்டம் |
| PUCSL | இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு |
| PV | ஒளி மின்னழுத்தம் |
| QMS | வரிசை முகாமைத்துவ முறைமை |
| R&D | ஆய்வு மற்றும் அபிவிருத்தி |
| RCL | ஒளியூட்டலுக்கான பிராந்திய நிலையம் |
| REATDP | மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி உறிஞ்சல் பரிமாற்ற அபிவிருத்திச் செயற்றிட்டம் |
| REP | முன்மொழிவுகளுக்கான கோரிக்கை |
| RLNG | மீள வாயுவாக்கப்பட்ட திரவநிலை இயற்கை எரிவாயு |
| SAIDI | முறைமைச் சராசரி குறுக்கீட்டுக் காலச் சுட்டெண் |
| SAIFI | முறைமைச் சராசரி குறுக்கீட்டு அதிர்வெண் சுட்டெண் |
| SAS | உபமின் நிலைய தன்னியக்க முறைமைகள் |
| SCADA | மேற்பார்வைக் கட்டுப்பாடும் தரவு கையகப்படுத்தலும் |
| SEC | அரச பொறியியல் கூட்டுத்தாபனம் |
| SEPA | சொசைட்டா எலக்ரோனிக்கா பே ஆட்டோ மெஷி போனா |
| SFRA | ஸ்வீப் அதிர்வெண் துலங்கல் பகுப்பாய்வு |
| SLE | ஸ்ரீ லங்கா எனேஜீஸ் (பிரை.) லிமிட். |
| SLFRS | இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் |
| SLS | இலங்கை நியமங்கள் நிறுவனம் |
| SLT | ஸ்ரீ லங்கா ரெலிக்கொம் |
| SMS | குறுந் தகவல் சேவை |
| SOE | அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள் |
| SP | தென் மாகாணம் |
| SPPA | நியமப்படுத்தப்பட்ட மின்வலுக் கொள்வனவு உடன்படிக்கைகள் |
| SSL | திட நிலை ஒளியூட்டல் |
| TCPP | திருகோணமலை நிலக்கரி மின்வலுச் செயற்றிட்டம் |
| TDI | மின் கோபுர இரட்டைச் சுற்று |
| TL | மின் பரிமாற்ற உரிமதாரர் |
| TLCP | மின் பரிமாற்ற மார்க்க நிருமாணச் செயற்றிட்டம் |
| TMB | திறைசேரி முகாமைத்துவக் கிளை |
| TPCL | திருகோணமலை மின்வலுக் கம்பனி லிமிட்டெட் |
| UG | நிலத்தடி |
| UHF | மீ உயர் மீடிறன் |
| UOHPP | உமா ஓயா நீர் மின்வலுச் செயற்றிட்டம் |
| UOMDP | உமா ஓயா பல நோக்கு அபிவிருத்திச் செயற்றிட்டம் |
| USD | அமெரிக்க டொலர் |
| VHF | மிகு உயர் மீடிறன் |
| VIP | மிக முக்கிய பகுதிச் சேவை |
| VVIP | மிக முக்கிய பகுதிச் சேவை |
| WAN | அகன்ற பிரதேச வலையமைப்பு |
| WOM | உத்தரவாதச் செயற்பாடுகள் மற்றும் பராமரிப்பு |
| WPN | மேல் மாகாணம் வடக்கு |
| WPS | மேல் மாகாணம் தெற்கு |
| WS&AS | வேலைப் பட்டறை மற்றும் துணைச் சேவைகள் |

Designed & Printing by **Ceylon Printers PLC**